



அய்யன் திருவள்ளுவர் சிலை

வெள்ளி விழா மலர் 2025



கன்னியாகுமரி

அய்யன் திருவள்ளுவர் சிலை

வெள்ளி விழா மலர் 2025

அனைவரும் சமம்.
அய்யன் திருவள்ளுவரே தெய்வம்...



மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

18.12.2024

வானுயர் வள்ளுவர்க்குச் சிறப்புயர் மலர்

முத்தமிழுக்கு மும்மூன்று சிறப்புகளாய் தொகுத்து எழுதினார் முத்தமிழறிஞர் கலைஞர். முத்தமிழறிஞர் கலைஞருக்கும் பற்பல சிறப்புண்டு. அவர் தொட்டது அனைத்தும் துலங்கும். கை பட்டது அனைத்தும் காலத்தால் அழியாச் சின்னமாகத் திகழும். தலைநகர் சென்னையில் வள்ளுவர் கோட்டம் விரிந்து பரந்துள்ளது. கடல்நகர் குமரியில் வள்ளுவர் சிலை நிமிர்ந்து நிற்கிறது.

'கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுகத் தரித்த குறள்' என்பார்கள்.

பாறைமேல் எழுந்து எத்தகைய ஆழிப் பேரலையையும் எதிர்கொள்ளும் வண்ணம் 133 அடியில் சிலை அமைத்துத் தந்தார் சொற்சிற்பியாம் கலைஞர். தமிழின் – தமிழினத்தின் – தமிழ்நாட்டின் கருத்துக் காப்பரண் வள்ளுவர். மக்களாட்சிக் காலத்தில் அரசியல் காப்பரண் கலைஞர். இவர்கள் இருவரது சிறப்பின் அடையாளமாக நிமிர்ந்து நிற்கும் தென்குமரி வள்ளுவர் சிலையானது வெள்ளி விழா காண்கிறது. இன்னும் பலகாலம் இருந்து பன்னூறு விழாக்கள் காண இருக்கிறது.

வள்ளுவ வரலாற்றில் எனக்கும் ஒரு பங்குண்டு என்பதன் அடையாளமாகவே திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டதன் 25–ஆவது ஆண்டு வெள்ளிவிழாவை அறிவுத் திருவிழாவாகக் கொண்டாட விரும்பினேன். 2024–ஆம் ஆண்டின் டிசம்பர் 30, 31 கன்னியாகுமரியில் வெள்ளி விழா நடைபெறுகிறது. இதன் முத்தாய்ப்பாக வெள்ளிவிழா மலர் வெளியிடப்படுகிறது.

இரண்டே அடிகளில் எழுதிப் போனார் வள்ளுவப் பேராசான். ஈராயிரம் ஆண்டுகளாய் பொழிப்புரைகள் சொல்லி வருகிறோம். காலம் மாறிக் கொண்டே இருக்கிறது. ஆனால் குறளாசானின் கருத்து கல்வெட்டாக அப்படியே இருக்கிறது. இத்தகைய சிறப்பு எந்த நூலுக்கும் இல்லை. இத்தகைய நூல் எந்த மொழியிலும் இல்லை. அத்தகைய வானுயர் வள்ளுவருக்குச் சிறப்புயர் மலராக இது தயாராகி இருப்பதை அறிந்து மகிழ்கிறேன்.

இலக்கியம் – இலக்கணம் – வரலாறு – அரசியல் – பண்பாடு ஆகிய பல்வேறு பார்வைகளில் இக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. குறளும் – குறள் உருவாக்கிய வள்ளுவரும் – சிலையும் சிலை அமைத்த கலைஞரும் – சிலை செதுக்கிய மதிப்புமிகு கணபதி ஸ்தபதி அவர்களும் – இம்மலர் முழுக்க மணம் வீசுகிறார்கள்.

இம்மலர் உருவாகக் காரணமான மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் வே.ராஜாராமன் அவர்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் இரா.வைத்திநாதன் அவர்கள் ஆகியோரைப் பாராட்டுகிறேன். மலர்க் குழுவில் பங்கெடுத்து சிறப்பான தனது பங்களிப்பை ஆற்றிய தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அருள், செய்தித்துறை கூடுதல் இயக்குநர் அன்புச் சோழன், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், தமிழ்நாடு இணையக் கல்விக் கழக இணை இயக்குநர் கோமகன், ஊடகவியலாளர் ப.திருமாவேலன், புலவர் முத்துவாவாசி, பொ.தங்கப்பாண்டியன், சித்தானை, பேராசிரியர் இளமாறன், பேராசிரியர் கூர்விழி ஆகியோருக்கும் எனது மனம் நிறைந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மலரைச் சிறப்பாக உருவாக்கி இருக்கும் செய்தி மக்கள் தொடர்பு இணை இயக்குநர் இரா.அண்ணா உள்ளிட்ட 'தமிழரசு' இதழ் ஆசிரியர் குழுவினர் அனைவர்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குமரியில் நின்று வழிகாட்டிக் கொண்டிருக்கிறார் வள்ளுவர். அவர்தம் வள்ளுவம் வாழ்வியல் நெறியாக மலரட்டும்!

அன்புடன்,

(மு.க.ஸ்டாலின்)

உதயநிதி ஸ்டாலின்
தமிழ்நாடு துணை முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

நாள் 20.12.2024

அன்புடையீர் வணக்கம்!

கற்றறிந்தப் புலவர்களிடம் மட்டும் இருந்த திருக்குறளின் புகழைப் பாமர மக்களிடமும் கொண்டு போய்ச் சேர்த்தப் பெருமை பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுக்கு உண்டு. திருக்குறள் பற்றிய பிரச்சாரத்தை தந்தை பெரியார் அவர்கள் 1920–களில் தொடங்கி தீவிரமாகச் செய்தார். திருக்குறள் மாநாடு நடத்தினார். சமுதாயத்தில் சமத்துவ உணர்வு எழுந்தோங்க திருக்குறள் நெறி வழிவகுக்கும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

தமிழ்நாட்டு அரசியலையும் சங்கத்தமிழ் இலக்கியங்களையும் ஜனநாயகப்படுத்திய அறிஞர் அண்ணா அவர்கள், திருக்குறளை அரசியல் பொதுக்கூட்டங்களில், கட்டுரைகளில் மேற்கோள்காட்டி பேசவும் எழுதவும் செய்தார். குறளின் செழுமையைச் செந்தமிழ் மாந்தர்களுக்குத் தேனில் குழைத்து அளித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆதிக்கத்துக்கு எதிரான சமத்துவக் குறியீடாகத் திருக்குறளை ஏந்தினார். பழமைவாதச் சிந்தனைகளுக்கு எதிரானத் தடுப்பூசியாக 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற குறளின் கருத்தைச் சமூகத்தில் செலுத்தினார்.

வான்புகழ் வள்ளுவப் பெருந்தகைக்கு தலைநகர் சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைத்தார். இலக்கிய நயமிக்க குறளோவியம் வடித்தார். இன்றைய தலைமுறைக்குப் புரியும் வண்ணமும், புரிந்து உளங்கொள்ளும் வண்ணமும் திருக்குறளுக்கு விளக்கவுரை எழுதினார். குறளின் உயர்ச்சிந்தனைகள் மக்களைச் சென்று சேர்ந்திட அரசுப் பேருந்துகளிலும் திருக்குறளை எழுத உத்தரவிட்டார்.

அனைத்துக்கும் சிகரமாய், புதிய நூற்றாண்டின் தொடக்கத்தில் முக்கடல் சங்கமிக்கும் குமரி அலைகடலின் நடுவே அய்யன் திருவள்ளுவர் அவர்களின் 133 அடி உயர திருவுருவச் சிலையினை 01.01.2000 அன்று முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிறுவி. "எல்லா காலத்திற்கும் மனித வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு" என்று கூறி திருக்குறளுக்குப் பெருமைச் சேர்த்தார்கள். தற்போது அச்சிலை நிறுவப்பட்டதன் வெள்ளி விழா ஆண்டு!

திருக்குறளைத் திக்கெட்டும் பரப்பும் மகத்தான பணியினைத் தன் கடமையாகக் கருதி செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கன்னியாகுமரியில் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் அய்யன் திருவள்ளுவர் அவர்களின் திருவுருவச்சிலையை Statue Of Wisdom என்று அறிவித்துள்ளார்கள். Statue Of Wisdom இனி, தமிழ்நாட்டின் அடையாளமாக மட்டுமல்ல, இந்திய ஒன்றியத்தின் அடையாளமாகவும் திகழவிருக்கிறது.

இந்த சூழலில் தான், அய்யன் திருவள்ளுவரின் பெருமைமிகு சிலை நிறுவிய 25–ஆம் ஆண்டினைச் சிறப்பாகக் கொண்டாட நம் முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

தமிழின் தொன்மையையும், திருக்குறளின் சிறப்பையும், அறநெறியில் சிறந்த தமிழரின் வாழ்வையும் ஒருங்கே கொண்டாடும் ஒப்பற்ற விழா இது!

இந்த வெள்ளிவிழாவை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை 'திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா மலர் – 2025' என்ற சிறப்பு மலர் கொண்டு வருவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இம்மலரினை தமிழர் ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெற்றுப் பெருமிதம் அடைய இதயப்பூர்வமாக வாழ்த்தி மகிழ்கிறேன்.

நன்றி! வணக்கம் !

அன்புடன்,

(உதயநிதி ஸ்டாலின்)

மு.பெ. சாமிநாதன்
தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

நாள் 9/2/24

நுழைவாயில்

நம் நெறி, குறள் நெறி,
நம் மதம், குறள் மதம்!

– என்றார் **தந்தை பெரியார்** அவர்கள்

குறள் வகுப்பறையில் மட்டுமல்லாமல்
உங்கள் இல்லங்களில் மட்டுமல்லாமல்
உலகத்தார் உள்ளங்களில் எல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

– என்றார் **பேரறிஞர் அண்ணா** அவர்கள்

ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும்
நிலை நாட்ட வேண்டும் என்றால் அதற்கு
வள்ளுவம் தான் பயன்பட வேண்டும்.

– என்றார் **முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்கள்

உலகப் பொதுமறையாம் திருக்குறளை மக்களின் வாழ்வியலுக்காகத் தந்தவர் தமிழ்க்கடவுள் திருவள்ளுவர். எத்தனை யுகங்கள் மாறினாலும் என்றென்றும் அழிக்க முடியாத ஒரு காலப்பெட்டகமாகத் திகழ்கிறது திருக்குறள். திருவள்ளுவருடைய பெருமைகளை சொல்லவும், திருக்குறளின் தத்துவங்களையெல்லாம் உலகெங்கும் எடுத்துச் செல்லும் விதமாக 1942–ஆம் ஆண்டு சென்னையிலே "திருக்குறள் மாநாடு" ஒன்றை தந்தை பெரியார் அவர்கள் நடத்திய பின்புதான், திருக்குறள் எல்லோராலும் போற்றப்பட்டிருக்கிறது, பல்வேறு சமய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலகளவில் வளர்ந்திருக்கிறது.

மு.பெ. சாமிநாதன்
தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

நாள் 9/12/24

அத்தகைய திருக்குறளை இந்த உலகிற்கு பதிவு செய்து விட்டுச்சென்ற திருவள்ளுவர் அவர்களின் அறிவுத் திருவிளக்கை, எட்டுத்திசைக்கும் பரப்புகின்ற பணியை தன்னுடைய பெருங்கடமையாகக் கருதி முக்கடல் சங்கமிக்கும் தமிழ்நாட்டின் கன்னியாகுமரி அலைகடலின் நடுவே 133 அடி உயரமுள்ள வான் புகழ் வள்ளுவனின் முழு உருவச் சிலையினை கடந்த 2000-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாள் தனது திருக்கரங்களால் திறந்து வைத்து பெருமை சேர்த்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

கம்பீரத்தோடு காட்சியளிக்கும் இச்சிலை அமைக்கப்பட்டு கால்நூற்றாண்டு கடந்ததை நினைவுகூறும் வகையில் திராவிட மாடல் ஆட்சியின் சிற்பி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவள்ளுவர் சிலைக்கு வெள்ளி விழா - 2025 கொண்டாடப்படும் என்பதை அறிவித்தார்கள்.

அவ்வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல் அறிவிப்பினை சிறப்பிக்கும் விதமாக, செய்தி மக்கள் தொடர்புத் துறை **"தமிழரசு"** அச்சகத்தின் வாயிலாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் **"திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா-2025 சிறப்பு மலர்"** உலகெங்கும் வாழும் அனைவரின் கரங்களிலும் தவழ்ந்து பயன் பெறட்டும் என வாழ்த்தி மகிழ்கிறேன்.

நன்றி! வணக்கம்!

அன்புடன்

9/12/24.

(மு.பெ.சாமிநாதன்)

நா. முருகானந்தம்
தலைமைச் செயலாளர்

தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

நாள்: 06.12.2024

வாழ்த்துச் செய்தி

அய்யன் திருவள்ளுவர் அவர்கள் திருக்குறள் என்னும் உலகப் பொதுமறையை உருவாக்கி, சாதி, மத, பேதங்களைக் கடந்து மாந்தர் இனம் ஒற்றுமையுடன் வாழ வழிவகுத்துள்ளார்கள்.

" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் "

என்பதை அனைவர் உள்ளங்களிலும் வாழ்வியலாகப் பதிய வைப்பது திருக்குறள். திருக்குறள் எனும் அறிவுத் திருவிளக்கின் பேரொளியைத் திக்கெட்டும் பரவச் செய்திடும் திருப்பணியைத் தம் தலையாய வாழ்நாள் கடமையாகக் கொண்டு வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முக்கடல்கள் கூடும் குமரிமுனையில் அலைகளின் நடுவே அய்யன் திருவள்ளுவர் அவர்களுக்கு 133 அடி உயரமுள்ள பிரம்மாண்டமான கற்சிலையை நிறுவி புத்தாயிரம் 2000 தொடங்கிய திருநாளில் திறந்துவைத்துப் பெருமிதம் கொண்டார்கள்.

"இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு"

என்னும் அய்யன் திருவள்ளுவரின் அருங்குறளுக்கேற்ப முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் வாக்கில் இனிமையையும், மக்களைக் காக்கும் நெறியில் உறுதியையும் குறிக்கோளாகக் கொண்டு அர்ப்பணிப்புடன் பாடுபட்டுவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவரின் திருவுருவச்சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவுபெறுவதையொட்டி, மாபெரும் திருவிழா கொண்டாடுகிறார்கள். வரலாற்றுப் பெருமைக்குரிய இந்த மகத்தான விழாவினையொட்டி தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் ஆழிப் பேரலைகள்சூழ் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா – 2025 மலரினை உருவாக்கி இருப்பது மிகுந்த பாராட்டுக்குரியதாகும்.

இந்தச் சிறப்பு மலர் உருவாக்கும் திருப்பணியில் பங்கேற்ற அனைவரையும் அன்புடன் பாராட்டுகிறேன். அய்யன் திருவள்ளுவர் அவர்களின் அரும்பெரும் புகழைப் பாடும் இந்த மாமலர், தமிழ் மக்கள் அனைவருக்கும் நல்விருந்தாக அமைந்திட எனது நெஞ்சார வாழ்த்துகிறேன்.

6.12.2024

தொலைபேசி: 044–25671555 நிகரி: 044–25672304 மின்அஞ்சல்: cs@tn.gov.in

மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
நாமக்கல் கவிஞர் மாளிகை (9–வது தளம்)
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
தொலைபேசி : 044–25671300
நிகரி : 044–25677777
மின்னஞ்சல் : dipr@tn.gov.in

ஆசிரியர் உரை

திருக்குறள் ஒரு பொது நூல், வாழ்க்கைக்கான வழிகாட்டி நூல், அன்புநெறியை அறிவுறுத்தும் நீதி நூல், பண்பாட்டு நூலாக அழியாச் சிறப்புடன் விளங்கும் இச்சிறப்புமிகு திருக்குறள் ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கோ, மதத்திற்கோ, இனத்திற்கோ உரிமையுடைய நூல் அல்ல. உலகெங்கும் வாழும் அனைவராலும் ஏற்றுக்கொண்டு பின்பற்றக்கூடிய ஒன்றாக அமைந்த நூல் ஆகும்.

மானுடப் பண்பியல்புகளுக்கு ஓர் உறைவிடமாய் வாழ்க்கை நெறிமுறைகளுக்கு வழிவகுக்கும் திருக்குறள் எனும் உலகப் பொதுமறையை உருவாக்கியிருக்கும் அய்யன் திருவள்ளுவர் அவர்களுக்கு ஐந்தமிழ் அறிஞராகத் திகழ்ந்த டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் தென்கோடி பகுதியில் முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் 133 அடியில் முழு உருவச் சிலையினை நிறுவி அதனை திறந்துவைத்து உலக அரங்கில் பெருமை சேர்த்தார்கள் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

– என்ற வான்புகழ் வள்ளுவரின் குறள் அடிகளுக்கேற்ப மக்கள் நலன் ஒன்றையே தமது குறிக்கோளாகக் கொண்டு, பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்திவரும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி பெருவிழா குறித்த அறிவிப்பை வெளியிட்டார்கள்.

அதன்படி, இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க அய்யன் திருவள்ளுவர் சிலையின் வெள்ளிவிழா-2025 நிறைவு நாளின் நினைவாக, தமிழ்நாடு அரசு, செய்தி மக்கள் தொடர்புத்துறை, "தமிழரசு" அச்சகத்தின் சார்பில் "திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா 2025 சிறப்பு மலர்" தயாரிக்கும் பணிகளுக்கு கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள், வரலாற்றுக் குறிப்புகள் வழங்கிய ஆளுமைகளுக்கும், தமிழரசு அச்சக நிருவாக ஆசிரியர் உட்பட அயராது பாடுபட்ட அனைத்து அலுவலர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மரு.இரா.வைத்திநாதன்)

தமிழரசு

தமிழ்நாடு அரசு

செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2055
குரோதி வருடம் மார்கழி - தை
ஜனவரி 2025

திருவள்ளுவர் சிலை
வெள்ளி விழா மலர் - 2025

ஆசிரியர் - வெளியிடுபவர் : மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர் : இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர் : க.அ. முகம்மது ரசூல்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள் : எஸ். உதயா கதிரவன்
ப. கருணாகரன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள் : மு. மணிமேகலை
சி. சுஜிதா
இரா. பாலாஜி
கு. சுபாஷ்

நிருபர்கள் : எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

முதுநிலை ஓவியர் : ரா. சாமுண்டிஸ்வரி

ஓவியர் : இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர் : நி. ஷீலா

கணினிவழி
வடிவமைப்பாளர்கள் : தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

பிழைத்திருத்தம்
மேற்கொள்பவர் : த. பிரியா

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்
எண்.5, இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி: 044 – 2254 2221 / 22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in,
இணையதளம் : www.tndipr.gov.in

அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா மலர்-2025

மலர்க்குழு

தலைவர்

திரு. **மு.பெ.சாமிநாதன்,**
மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும்
செய்தித்துறை அமைச்சர்

உறுப்பினர் செயலாளர்

மரு. **இரா.வைத்திநாதன்** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச்செயலாளர்

உறுப்பினர்கள்

முனைவர் **ஒளவை அருள்,**
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை

பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்,**

திரு. **ப.திருமாவேலன்,**
மூத்த பத்திரிகையாளர்

பேராசிரியர் **இளமாறன்,**
(எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம்)

பேராசிரியை **சுடர்விழி,**
(சென்னை கிறித்துவக் கல்லூரி)

புலவர் **முத்து வாவாசி,**



பொருளடக்கம்

- அலையும், மலையும் இருக்கும் வரை சிலை அசையாது இருக்கும்... 19
  மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின்
- நானும்... திருக்குறளும்... 23
  தந்தை பெரியார்
- குறள் ஏந்திச் செல்வோம்... 29
  பேரறிஞர் அண்ணா
- திருக்குறள் என் சிந்தையை நெய்திருக்கும் செந்நூல் 39
  முத்தமிழறிஞர் கலைஞர்
- முப்பால் தந்த வள்ளுவருக்கு முக்கடல் சங்கமத்தில் உருவச் சிலை! 74
- சிலைத் திறப்பு விழா நிகழ்வுகள் 76
- என் உயிரோடு உயிரணுக்களோடு கலந்த விழா 85
  முத்தமிழறிஞர் கலைஞர்
- திருக்குறள்: மனித வாழ்க்கையை மையமாகக் கொண்ட தத்துவ நூல் 97
  பேராசிரியர் அன்பழகன்
- உலகச் சாதனை நிகழ்த்தியுள்ள கலைஞரைப் பாராட்டுவதில் மகிழ்கிறேன் 102
  ஜி.கே. மூப்பனார்
- நாளைய சரித்திரம் கலைஞரைச் சொல்லும்... 103
  சிவாஜி கணேசன்
- வள்ளுவருக்கு கடலுக்கு மேலேயே சிலை வைத்தவர் கலைஞர்... 104
  குமரி அனந்தன்
- கடல்களின் அலையோசை, கலைஞர் கலைஞர் என்றே ஒலிக்கும்... 106
  வைகோ
- தமிழ்ச் சமுதாயம் கலைஞரை மறக்காது 108
  வாழப்பாடி ராமமூர்த்தி
- திருவள்ளுவருக்கு சிலை எழுப்பிய கலைஞருக்கு நன்றி... 109
  என். சங்கரய்யா

- சிற்பக் கலை வளர்த்த செந்தமிழ்க் கலைஞர் 111
  வை. கணபதி ஸ்தபதி
- வான்புகழ் வள்ளுவர்க்கு வானுயரச் சிலை 121
  வை. கணபதி ஸ்தபதி
- பெருந்தச்சன் கணபதி ஸ்தபதி 146
  கதிரேசன் சுப்பிரமணியம்

கட்டுரைகள்

- திருவள்ளுவர் கற்ற கல்வி 155
  கு. அழகிரிசாமி
- மெய் நலம் திருவள்ளுவரின் மருந்து 169
  பிரமிள்
- குவலயம் எங்கும் திருக்குறள்நெறி பரப்பிய
  திருக்குறள் முதல்வர் கலைஞர் 175
  தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்
- முத்தமிழறிஞர் கலைஞரின் குறள் பரிசு உருவான வரலாறு 179
  கு. மோகனராசு
- திருவள்ளுவர் கூறிய நிலாவும் பாம்பும்! 195
  ம. இராசேந்திரன்
- தமிழ்ச்சமூகம்: திராவிட இயக்கம் – திருக்குறள் 201
  வீ. அரசு
- வானம் உள்ள மட்டும் மண்ணில்
  வாழப் போகும் தலைவர் கலைஞர் 209
  சாலமன் பாப்பையா
- திருவள்ளுவரின் தனித்துவம் 215
  ஆ. சிவசுப்பிரமணியன்
- திருவள்ளுவ மாலையிலுள்ள சில மலர்களின் மணங்கள்..! 221
  ஔவை அருள்
- வள்ளுவரின் குரல் கலகக் குரல்தானே! 227
  தொ. பரமசிவன்
- பேரறப் பெருஞ்சிலை 231
  ஆர். பாலகிருஷ்ணன்
- திருவள்ளுவ கலைஞரும், திராவிட இயல் முதல்வரும் 237
  மு. படிக்கராமு
- சுனாமியையும் வென்ற சிலை! 243
  சுப. வீரபாண்டியன்


- திருக்குறள் ஓலைச் சுவடிகள் சில உண்மைகள்... 247
  பொ. வேல்சாமி
- நெருநல் உளனொருவன் இன்றில்லை 251
  யுகபாரதி
- வீரமாமுனிவரின் திருக்குறள்... 261
  எஸ். ஜெயசீல ஸ்டீபன்
- நிற்கிறார் திருவள்ளுவர் 271
  க. தட்சிணாமூர்த்தி
- திருவள்ளுவர் சிலை அமைத்த நாள்
  தமிழ் நெஞ்சங்களெல்லாம் பூரிக்கும் நாள்... 277
  பொழிலன்
- வள்ளுவச் செல்வாக்கில் பாரதியார் 281
  செந்தலை ந. கவுதமன்
- சனாதனத்திற்கும், சாணக்கியத்திற்கும் எதிரானவர்! 285
  அருணன்
- உள்ளிருள் நீக்கும் ஒளி 289
  பழ. அதியமான்
- காப்பியங்களில் திருக்குறள் கருத்துகள் 297
  தி. பரமேசுவரி
- அய்யன் திருவள்ளுவரும், முத்தமிழறிஞர் கலைஞரும் 303
  முத்து. வாவாசி
- சிந்தனைச் சித்திரத்தை சிலையாக்கிய சிற்பி 307
  கோவி.லெனின்
- வள்ளுவர் பத்தும்... கலைஞர் பத்தும்... 313
  ப. திருமாவேலன்
- கலைஞர் கலையும், திருவள்ளுவர் சிலையும்! 319
  பிரபாகரபாபு
- கலைஞரின் திராவிடக் கலை நுட்பம் 327
  செ. செல்வின் சௌந்தரராஜன்
- திராவிட இயக்கமும், திருக்குறள் எழுச்சியும் 331
  தி. தாமரைச்செல்வி
- திருவள்ளுவரின் நூற்றாண்டுப் பயணம் 337
  பா. இளமாறன்
- திருவள்ளுவர் திருவுருவ வரலாறு 347
  ஸ்ரீராம் சர்மா

கவிதைகள்

- சமுதாயப் புரட்சி செய்யும் தத்துவப் பெருஞானி மகத்துவம் மிகக் கொண்ட மனிதகுலத் திருவிளக்கு 355
  முத்தமிழறிஞர் கலைஞர்
- திருவள்ளுவரும் திருவாரூராரும் 370
  மு.மேத்தா
- திருக்குறள்தான்! 372
  அறிவுமதி
- வள்ளுவர் முனை 374
  பொன்.செல்வகணபதி
- சிலையல்ல... திசைகாட்டி! 376
  பழநி பாரதி
- பாற்கடல் 378
  நெல்லை ஜெயந்தா
- காலம் வெல்லும் கலைஞர் நாட்டிய அய்யன் சிலை 380
  வா.மு. சேதுராமன்
- அறுசீர் அதிகாரம் 382
  கபிலன்
- திருக்குவளை கலைஞர்தான் நவீன அய்யன் 384
  ஆண்டாள் பிரியதர்ஷினி
- வெள்ளி விழாக் காணும் வள்ளுவன் சிலை! 386
  கவிதைப்பித்தன்
- வைகறைச்சாவி வள்ளுவன் உளிதான் 388
  இரா.கருணாநிதி

- திருக்குறள் வரலாற்றுக் குறிப்புகள்... 391
- திருக்குறள் போற்றி! போற்றி! 403
- திருவள்ளுவரின் வேண்டுதல்கள் 408
- காலப் பெட்டகம் 414





அலையும் மலையும் இருக்கும் வரை சிலை அசையாது இருக்கும்...

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் நிறுவப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா காண்பதையொட்டி வரும் டிசம்பர் 31ஆம் தேதி மற்றும் ஜனவரி 1ஆம் தேதி ஆகிய இரண்டு நாட்களும் தமிழ்நாடு அரசு, 25ஆவது ஆண்டு நிறைவுப் பெருவிழாவைக் கொண்டாடுவது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக ஆற்றிய உரை...

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது தமிழ் வணக்கம்!

வடக்கே உள்ள வானுயர்ந்த இமயமலைக்கு நிகராகத் தெற்கே குமரிமுனையில் தமிழ்மலையாக வள்ளுவர் சிலையை உருவாக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

கடல் அலைகள் தாலாட்டும் குமரிக்கடல் நடுவே அய்யன் திருவள்ளுவருக்கு 2000ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 133 அடியில் வானுயர் புகழுக்குச் சாட்சியமாகச் சிலை அமைத்தார். அந்தச் சிலை அமைக்கப்பட்டு கால் நூற்றாண்டு ஆகிறது. வெள்ளிவிழா காண்கிறது வள்ளுவனார் சிலை!

அதைக் கொண்டாடுகின்ற விதமாக 31.12.2024 மற்றும் 01.01.2025 ஆகிய நாட்களில் வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் நடத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்திருக்கிறது!

இந்த உலகத்திற்கே பொதுமறை வழங்கியவர் நம் அய்யன் திருவள்ளுவர். சாதி, மத பேதங்களை கடந்து தமிழினத்தை ஒற்றுமைப்படுத்த திருவள்ளுவர் தந்த "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பதை வாழ்வியலாகப் பாமர மக்களின் உள்ளங்களிலும் பதிய வைத்து, உதடுகளை உச்சரிக்க வைத்தது திராவிட இயக்கம்!

ஆனால், அந்த வள்ளுவருக்கே காவிச் சாயம் பூச இன்றைக்கு ஒரு கும்பல் நினைக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் "சமத்துவத்தை வலியுறுத்தியவர் வள்ளுவர்! அவர் எல்லோருக்கும் பொதுவான தமிழர்களின் அடையாளம்" என்று மீண்டும் முழங்க வேண்டியிருக்கிறது!

திருக்குறளுக்குப் பெருமை சேர்த்து, வெகுமக்களின் வாழ்வியலோடு கலக்க தன்னால் ஆன எல்லா முயற்சிகளையும் செய்தது திராவிட இயக்கம்.

திருக்குறள் மாநாடுகளை நடத்தி வள்ளுவத்தை உயர்த்திப் பிடித்தவர் தந்தை பெரியார். "நம் நெறி, குறள் நெறி! நம் மதம், குறள் மதம்!" என்று சொன்னார் தந்தை பெரியார்.

"குறள் வகுப்பறையில் மட்டுமல்லாமல் உங்கள் இல்லங்களில் மட்டுமல்லாமல் உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்றார் பேரறிஞர் அண்ணா.

அத்தகைய குறள் எனும் அறிவுத் திருவிளக்கை, திக்கெட்டும் பரப்புகின்ற பணியை தன்னுடைய ஒப்பற்ற கடமையாகக் கருதிச் செயல்பட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், குறள் பரப்புகின்ற ஓர் ஆசானாக வலம் வந்தார், தலைவர் கலைஞர்.

குறளோவியம் தீட்டினார். குறளுக்கு விளக்கவுரை தந்தார். தலைநகரில் வள்ளுவர் கோட்டம் அமைத்தார். அரசு அலுவலகங்களிலும், பேருந்துகளிலும் குறளை எழுதவைத்து, குறளை எளிய மக்களுக்குக் கொண்டு சேர்த்தார்.

குமரியில் சிலை அமைக்க 1975ஆம் ஆண்டே திட்டமிட்டாலும், அவருடைய கனவு 2000ஆம் ஆண்டுதான் நிறைவேறியது. சிலையை உருவாக்குகின்ற பொறுப்பை சிற்பி கணபதி ஸ்தபதியார் அவர்களிடம் ஒப்படைத்தார்.

133 அதிகாரங்களைக் குறிக்கின்ற வகையில் 133 அடியில் சிலை அமைத்தார். ஏறத்தாழ நான்கு ஆண்டுகளில் முத்தமிழறிஞர் கலைஞரின் கருத்துக்கு சிற்பக் கலைஞர் திரு. கணபதி ஸ்தபதி காட்சி வடிவம் தந்து அந்தச் சிலையை உருவாக்கினார்.

சிலை வடிவமைக்கின்ற பணி நடைபெறும்போது, "சிலை நிற்குமோ நிற்காதோ" என்று சந்தேகமாகக் கேட்டவர்களிடம் எல்லாம், ஸ்தபதி அவர்கள், "அலையும் மலையும் இருக்கும் வரை சிலை அசையாது இருக்கும், கவலைப்படாதீர்கள்" என்று சொன்னார். அதை உறுதிப்படுத்துகின்ற விதமாக தமிழ்நாட்டையே உலுக்கிய ஆழிப்பேரலையின் போது கூட எந்தவித பாதிப்பும் இல்லாமல், கம்பீரமாக நிமிர்ந்து நின்றார் திருவள்ளுவர்.

"மக்கள் தொண்டும் வள்ளுவர் சிலையும் என் பிறவிப் பெரும்பயன்" என செவ்வனே முடிவுற்ற திருவள்ளுவர் சிலைப் பணி 2000ஆம் ஆண்டு ஜனவரி 1 அன்று கலைஞர் அவர்களால் நாட்டிற்கு தமிழினத்திற்கு வழங்கப்பட்டது.

பொத்தானை அழுத்தும்போது என் உடம்பு நடுங்கியது என்று உணர்ச்சி வசப்பட்டார் தலைவர் கலைஞர். இந்த விழாவில்தான் திருவள்ளுவரை அய்யன் திருவள்ளுவர் என்று அழைக்கும்படி தலைவர் கலைஞர் வேண்டுகோள் விடுத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் எதைச் செய்தாலும் கலை நுணுக்கத்தோடு பார் போற்றும் வகையில் செய்வார் என்பதற்கு விண்ணைத் தொடும் வண்ணம் உயர்ந்து நிற்கின்ற திருவள்ளுவர் சிலையும் ஒரு சான்று.

இப்படி பெருமைமிகு சிலை வெள்ளி விழா காண்கிறது. வரும் டிசம்பர் 31ஆம் தேதி மற்றும் ஜனவரி 1ஆம் தேதி இரண்டு நாட்களும் தமிழ்நாடு அரசு, 25 ஆண்டு நிறைவுப் பெருவிழாவைக் கொண்டாட இருக்கிறது.

இந்த வெள்ளிவிழாவை முன்னிட்டு, பள்ளி மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டிகள் கல்லூரி மாணவர்களிடையே சமூக ஊடகங்கள் வாயிலாக குறும்படங்கள் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் வாயிலாக திருக்குறளின் சிறப்பை உணர்த்தும் ஓவியப்போட்டிகள் நடத்தப்படும்.

- அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டிருக்கின்ற இடங்கள் வரைபடத்தில் குறிக்கப்பட்டு எல்லோரும் தெரிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்படும்.
- அய்யன் திருவள்ளுவரின் திருவுருவச்சிலை அருகே சீரொளிக் காட்சி (3D Laser) ஏற்பாடு செய்யப்படும்.
- வெளிநாடுகளில் இருக்கின்ற தமிழ் இணையக் கழக மையங்கள், தமிழ்ச் சங்கங்கள், பிற மாநிலங்களில் இருக்கும் தமிழ்ச் சங்கங்கள், புது டெல்லியில் இருக்கும் தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் வலையொளி மூலம் ஒளிபரப்பப்படும்.
- வெளிநாடுவாழ் தமிழர்களுக்குத் தமிழ் இணைய கல்விக் கழக மையங்கள் மூலமாக திருக்குறளின் பெருமைகள் குறித்த போட்டிகள் நடத்தப்படும்.
- அனைத்து மாவட்ட நூலகங்களிலும், அன்றைய நாள் திருவள்ளுவர் புகைப்படம் வைக்கப்பட்டு, திருக்குறளின் பெருமையை உணர்த்துகின்ற நிகழ்ச்சிகள், திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்தல் செய்யப்படும்.
- திருக்குறள் விளக்க உரைகள் மற்றும் திருக்குறள் தொடர்பான புகைப்படங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.
- டிசம்பர் 25 முதல் 30 வரை மாவட்ட அளவில் திருக்குறள் தொடர்பான கருத்தரங்கம், பேச்சரங்கம் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

வரும் டிசம்பர் 31 மற்றும் ஜனவரி 1 ஆகிய நாட்களில் இந்தியாவின் வரலாற்றைத் தென் குமரியிலிருந்து எழுத வேண்டும் என்ற நம்முடைய இலக்கின் அடையாளமான கன்னியாகுமரியில் நடைபெறும் நிகழ்ச்சியில் நானும் பங்கேற்கிறேன். உலகெங்கும் உள்ள என் அருமைத்தமிழர்கள் எங்கிருந்தாலும் வருக! வருக! என்று அன்புடன் அழைக்கிறேன்.

உலகப் பொதுமறையை உருவாக்கிய வள்ளுவர், தமிழர் என்பது சிறப்பு!

உலகமே அவரை கொண்டாடிக் கொண்டிருப்பது தனிச்சிறப்பு!

அவருக்கு 133 அடியில் சிலை அமைத்தது பெரும் சிறப்பு!

அத்தகைய சிலை இப்போது வெள்ளிவிழா கொண்டாடுவது வெகுசிறப்பு!

வள்ளுவம் என்பது வாழ்வியல் நெறியாக மாற வேண்டும்.

சமுதாயம் குறள் சமுதாயமாக மலர வேண்டும்.

வேற்றுமையின் வேர்களை கிள்ளியெறிய வள்ளுவ மருந்தே பொது மருந்தாக ஆக வேண்டும்.

வாழிய குறளும், வள்ளுவர் புகழும், வாழிய வாழியவே!







புராணக் கருத்துக்களிலும், மூட நம்பிக்கைகளிலும் மூழ்கிக் கிடக்கும் தம் மக்களுக்குப் பகுத்தறிவு வளர்ந்தபின், மூடக் கருத்துக்கள் ஆட்டம் கண்ட பின்தான் குறளின் பொருளை உணரும் அறிவு மக்களுக்கு உண்டாகும் என்று கருதி, முதலில் மூடக் கருத்துக்களை அகற்றும் பணியில் பிரச்சாரம் புரிந்துவந்தேன்.

இன்று மக்களுக்குக் கொஞ்சம் அறிவுத் தெளிவு-பகுத்தறிவுத் தன்மை வளர்ந்து இருக்கிறதால் இன்று குறளைப் பற்றிப் பேசுகிறேன்.

'குறளில் இப்படியிருக்கிறதே! நீ ஏன் இப்படி நடக்கிறாய்?" என்று கேட்காதீர்கள். நான் சொல்லுவது அதில் இருக்கிறது என்ற அளவில்தான்-நான் குறளை ஆதரிக்கிறேன்; அதை அப்படியே முழுவதையும் ஒத்துக் கொள்ளமாட்டேன்.

குறளிலிருந்து உங்களுக்கு வேண்டியதை ஏற்றுக் கொள்ளுங்கள். வேண்டாததைத் தள்ளிவிடுங்கள் என்றுதான் கூறுகிறேன். ஒரு கடையில் எல்லா சாமான்களும் கிடைக்கும் என்றால், அந்தக் கடையில் உள்ள எல்லா சாமான்களையும் நாம் வாங்கிக்கொண்டு வருவோமா? நமக்குத் தேவையான சாமான்களை மாத்திரந்தான் வாங்கிவருவோம். அதுபோலவே, குறளில் வேண்டியதை எடுத்துக்கொண்டு வேண்டாததை விட்டு விடுங்கள் என்று கூறுகிறேன்.

திருவள்ளுவர் நல்ல அறிவாளி, ஆராய்ச்சிக்காரர். அந்தக் காலத்தில் மக்களிடம் பரவி இருந்த மூட எண்ணங்களோடு போராடிய அறிஞர் என்ற அளவில்தான் ஒத்துக்கொள்ள முடியும்.

காலத்திற்கு ஏற்ற முறையில்தான் எண்ணங்களின் விரிவும், கொள்கை, திட்டங்களும் இருக்க முடியும். போர் முறை பற்றி திருவள்ளுவர் - வில், வாள், வேல், கேடயம் என்ற ஆயுதங்களை வைத்துத்தானே எழுதியிருக்கிறார்? இன்று எழுதப்பட்டால், அணுகுண்டைப் பற்றி எழுதுவார்கள்; நாளைக்கு வேறொன்று.



இந்தப் படியாகத்தானே மாறிக்கொண்டே போகும்! அப்படியிருக்க, எதையும் மாற்றக்கூடாது என்பது என்ன நியாயம்? ஆரியக் கருத்துக்கள், தத்துவங்கள் நம் நாட்டில் நுழையாதிருந்தால், நமக்குக் குறளே ஆதாரமாக - குறளே நம்முடைய மதமாக இருந்திருக்கும். ஆரியர்கள் திருவள்ளுவரை முதலிலேயே- பிறப்பிலேயே இழிந்தவராக ஆக்கிவிட்டார்கள்.

வள்ளுவர் யார், எந்தக் குலத்தைச் சேர்ந்தவர் என்று நிச்சயமாய்க் கூறமுடியாது. வள்ளுவர் ஆரியத்தை எதிர்ப்பவர்; ஆரியக் கருத்துக்களைக் கண்டிப்பவர்; அவைகளை வெறுப்பவர் என்றுதான் நமக்குத் தெரிகிறது. அத்தோடு, வள்ளுவர் எந்த மதத்தையும் சார்ந்தவராகத் தெரியவில்லை.

இந்தப்படி எல்லோரும் போற்றுவதால்தான் திருக்குறள் ஒரு மதத்தைத் தழுவியோ, ஒரு மதத்தின் உயர்வுக்காகவோ எழுதப்பட்ட நூல் என்றில்லாமல், மக்களின் வாழ்க்கைக்கு, மக்கள் தங்களுடைய வாழ்க்கையிலே கையாள வேண்டிய வழி வகைகள் பற்றி எழுதப்பட்ட நூல் என்று ஆகிறது.

வள்ளுவர் கடவுள் வாழ்த்துப் பாடியிருப்பதெல்லாம் ஒவ்வொரு நற்குணங்களை வைத்து, அந்தப்படியாக நடக்கவேண்டும் என்பதற்காகவே பத்துப் பாட்டிலும் பத்து விதமான குணங்களைக் கூறினார். மனிதன் எப்படியிருக்க வேண்டும் என்பதைக் காட்டுவதற்காகத்தான் - வாழ்வின் வகையை, நிலையை உணர்த்துவதற்காகத்தான் எட்டு, ஒன்பது கருத்துக்களை வைத்து வள்ளுவர் கடவுள் வாழ்த்துக் கூறியிருக்கிறார்.

(விடுதலை: 30.05.1950)

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

ஒரு மனிதன் நல்ல அறிவுடையவனாய் இல்லாதிருந்தால், நல்ல அறிவுக்கு ஆட்பட்டிருக்க வில்லையானால் - அறிவோடு நடந்துகொள்ளாவிட்டால், அவன் எவ்வளவு படித்து இருந்தாலும் என்னதான் அந்தப் படிப்பில் அவனுக்குப் பயன் ஏற்பட்டது என்று கூறமுடியும்?

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

விருப்பு, வெறுப்பு இரண்டும் இருக்காதவனுக்குத்தான்-மன அமைதி இருக்கும்; விருப்பு, வெறுப்பு இருந்தால் மனிதனுக்கு மன அமைதி இருக்காது என்று கூறுகிறார்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

என்று - பிறப்பினாலே பேதம் இல்லை; பேதம் கற்பிக்கவும் கூடாது; அடுத்து செய்கின்ற தொழிலாலும் பேதங்கள் கற்பிக்கக் கூடாது என்று - ஆரியக் கொள்கையின் அடிப்படைக்கே அடி கொடுக்கிறார்.

குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
மானங் கருதக் கெடும்.

என்று கூறுகிறார். அதாவது, ஒரு மனிதன் தன் இனத்தவருக்கு ஏதாவது நன்மை செய்யவேண்டும் என்று நினைத்தானானால் - அதாவது, பொதுநலத்துக்குப் பாடுபட வேண்டும் என்று முன்வந்தால், அவன் அந்தக் காரியத்துக்கு ஏற்ற நல்ல காலம் வரட்டும் என்று எண்ணிக் காத்திருக்கக்கூடாது. இரண்டாவதாக, நாம் இந்தக் காரியத்தில் இறங்குகிறோமே; இதனால் இன்னின்ன கஷ்டங்கள் வருமே! நமக்குப் பலவிதத்திலும் அவமானம் ஏற்படுமே-மானம் போய்விடுமே என்று கவலைப்படக்கூடாது. அந்தப்படியாகவெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தால் பொதுவாழ்வில் நாம் செய்யப்புகும் காரியமே கெட்டுவிடும் என்று மிகப் புரட்சிகரமாகக் கூறுகிறார்.

ஏன் புரட்சிகரமாகச் சொல்லுகிறார் என்று கூறுகிறேன் என்றால், மற்றொரு இடத்தில் காலம் பார்த்துச் செய்தால் ஞாலமும் கைகூடும் என்று கூறுகிறார். இன்னொரு இடத்திலே,

'மயிர் நீப்பின் உயிர்வாழாக் கவரிமான்' போன்று மானம் நீங்குமானால் மனிதன் இறந்துவிட வேண்டும் என்று கூறுகிறார்.

மானமிழந்தால் மரணத்தைத் தழுவவேண்டும் என்று வள்ளுவர் கூறுவது ஏன் என்றால், மனிதனுடைய தனி வாழ்வில், அவனது சொந்த வாழ்வில் அவனுக்கு அவமானம் நேரிடின் உயிர்விட வேண்டும். உயிரைவிட மானத்தைப் பெரிதென மதித்து நடக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறார்.

இந்தக் குறள் பொது வாழ்வு பற்றியதாகும். பொதுவாழ்வில் எந்த மக்களின் நல்வாழ்விற்காக - முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறானோ, அந்த மக்களாலேயே வெறுக்கப்படலாம்; பல தொல்லைகளுக்கு ஆளாக நேரிடலாம். ஆனால், நாம் படுகின்ற பாடுகள் - அடைகின்ற அல்லல்கள் நன்மைக்காகத்தான் என்று கருதி வேலை செய்தால்தான், அவன் எண்ணிய காரியம் ஈடேறுமேயொழிய, மானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தால் காரியம் கைகூடிவராது என்று கூறுகிறார்.

இந்தப்படியாக வள்ளுவர் மக்களுக்கு நல்வாழ்வின் வழியையும், நல்லொழுக்கத்தையும் கூறுகிறார். இன்றையதினம் திராவிடர்களுக்கு ஒழுக்க நூல் குறள்தான்.

(விடுதலை: 01.06.1950)



திருக்குறள் பற்றிய தந்தை பெரியாரின் கருத்துகள்...

- ஆரியரல்லாத இந்நாட்டு மக்கள் அனைவர்க்கும், சிறப்பாக இந்நாட்டுப் பழங்குடி பெருமக்களான திராவிடர்கள் அனைவர்க்கும் வள்ளுவர் அருளிய 'திருக்குறள்' ஒரு பெரிய செல்வமேயாகும். நமது பெருமைக்கும், நெறிக்கும், நாகரிகத்திற்கும், வாழ்க்கை முறைக்கும் எடுத்துக்காட்டாக அதில் பல விவரங்களை நாம் காணலாம். திருக்குறளின் பேரால் திராவிட மக்களின் பெருமையை திராவிடரல்லாத மக்களுக்கு உணரச்செய்ய முடிகிறது

- நமது சரித்திரத்திற்கும், நாகரீகத்திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும், பல காவியங்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடியுமாயினும் அவை பெரும்பாலும் பண்டிதர்களுக்குத்தான் புரியும். அவர்களுக்குத்தான் பயன்படும். ஆனால், திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் எப்படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்குரிய தக்க ஆதாரமாய் அமைந்திருக்கிறது.

- திருக்குறள் 'தெய்வீகத் தன்மை பொருந்திய' ஒருவரால் எழுதப்பட்டது என்பதாகவோ அல்லது மனித சக்திக்கு மேம்பட்டவரால் சொல்லப்பட்டது என்பதாகவோ நாம் அதைப் போற்றவில்லை. அதில் கூறப்பட்டுள்ள உயர்ந்த கருத்துக்களுக்காகத்தான் நாம் அதைப் போற்றுகிறோம் என்பதை நீங்கள் அனைவரும் உணர்தல் வேண்டும்.

- நம் பண்டைத் திராவிட மக்களிடையே இரண்டு பெரியார்களைக் குறிப்பிட வேண்டுமானால் ஆண்களில் திருவள்ளுவரையும், பெண்களில் அவ்வையாரையும் நாம் சிறந்த அறிவாளிகளாகக் குறிப்பிட முடியும்.

- திருக்குறள் ஆரியக் கொள்கைகளை மறுக்க அவற்றை மடியச்செய்ய அக்கொள்கைகளிலிருந்து மக்களைத் திருப்ப எழுதப்பட்ட நூல் என்றுதான் நான் கருதுகிறேன்.

- சுருங்கக் கூறினால் - புத்தர் செய்த வேலையைத்தான் திருக்குறள் செய்திருக்கிறது. புத்த தர்மமும் ஆரியத்திற்கு மாறான தர்மம்தான். அதனால்தான் அது இந்நாட்டு ஆரியர்களால் அழிக்கப்பட்டது. ஆரிய தர்மத்தை எதிர்த்து அழித்து ஒழிப்பதற்காகத்தான் திருக்குறள் பாடப்பட்டதென்பது அதை ஆராய்ச்சி செய்வோர் எவருக்கும் விளங்காமற் போகாது.

- என்னைப் பொறுத்தவரையில், திருக்குறளைச் சிறிதாவது ஆராய்ச்சி செய்தவன் என்று என்னால் கூறிக்கொள்ள முடியாவிட்டாலும், அதன் பெருமையை நான் ஓர் அளவுக்காவது உணர்ந்திருக்கிறேனென்பதையும், அதன்மீது எனக்கு அளவற்ற பற்றுண்டு என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



- திருக்குறளின் ஒவ்வொரு கருத்தும் ஒருவனின் வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படக் கூடியதாகயிருக்கிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையும் ஒவ்வொரு துறையும் அதில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது.
- திருக்குறளில் பொய், மெய்யாகவோ அல்லது மெய், பொய்யாகவோ கூறப்பட்டிருக்கவில்லை என்பதுதான் என் கருத்து.
- திருக்குறளில் - ஒரு அரசன், ஒரு விவசாயி, ஒரு வியாபாரி, ஒரு துறவி, ஒரு பொதுநலத் தொண்டர், ஒரு மந்திரி, ஒரு காதலன், ஒரு காதலி, ஒரு தலைவன், ஒரு தலைவி என சகலருக்கும் அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. அவற்றில் ஒன்றில்கூட மூட நம்பிக்கை புகுத்தப்பட்டிருக்கவில்லை.
- குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய சகலமும் அதில் அடங்கியிருக்கிறது.
- ஒவ்வொருவனும் தான் "திராவிடனே - திருக்குறளானே" என்று கூறிக் கொள்வதில் பெருமையடைய வேண்டும்.
- என்ன மதம் என்றால் குறள் மதம், மனித தர்ம மதம் என்று சொல்லப் பழக வேண்டும்.
- என்ன மதத்தினர் என்று கேட்டால், 'வள்ளுவர் மதம்' என்று சொல்லுங்கள். உங்கள் நெறியென்னவென்றால், 'குறள் நெறி' என்று சொல்லுங்கள். குறள் நெறி என்று சொல்வீராயின், உங்கள் முன் எந்த பிற்போக்குவாதியும், எப்படிப்பட்ட சூழ்ச்சிக்காரனும் முன் நிற்கக் கூசி ஓடிவிடுவான். குறளை எவனாலும் மறுத்துக்கூற முடியாது. அவ்வளவிற்கு இயற்கைக்கும், அறிவுக்கும் இயைந்ததாக இருக்கிறது அது. எனவே, குறளைப் படியுங்கள். அதன் வழிப்படி நடங்கள். அதையே எங்கும் பிரச்சாரம் செய்யுங்கள். உங்களுக்கு மனத்தூய்மை ஏற்படும். முன்னேற்ற அறிவில் ஆசையும், நம்பிக்கையும் ஏற்படும்.
- திருவள்ளுவர் காலம் பொதுவுடைமைக் காலமோ, சமதர்மக் காலமோ அல்ல. ஆனால், வள்ளுவர் சிறந்த பொதுவுடைமைக்காரராகவே விளங்குகிறார். அதனால்தான் நம் போற்றுதலுக்கு ஆளாகிறார்.
- குறளுக்கு இதுவரை கண்ட உரைகள் பல அவரவர்கள் கருத்துக்கு ஏற்புடவையாகவே காணப்படுகின்றன. ஆதலால், ஜாதி, மத கடவுள் உணர்ச்சி கடந்து, இயற்கை உணர்ச்சியோடு பகுத்தறிவைக் கொண்டு நடுநிலையில் நின்று உரை கண்டால், அவ்வுரை மூலம் திராவிடர் கழகம் விரும்பும் கருத்துக்களைக் காணலாம். ஆதலால் குறளைப் போற்றுங்கள்! குறளைப் படியுங்கள்!! குறள் உள்ளத்தைக் காணுங்கள்!! எனவே, ஆண்டுதோறும் ஏப்ரல் 12ஆம் தேதியை குறள் நாளாகக் கொண்டாடுங்கள் என்று வேண்டிக்கொள்கிறேன்.

(விடுதலை நாளிதழ்)





குறள் ஏந்திச் செல்வோம்...

பேரறிஞர் அண்ணா

திருவள்ளுவர் - நமக்கு அளித்துள்ள திருக்குறள் இப்போது ஒவ்வொருவருடைய நாவிலும் - நெஞ்சிலும் - நினைவிலும் - இடம் பெற்றிருக்கிறது. எல்லோரும் குறளை ஆதரிக்கிறார்கள்; போற்றுகிறார்கள்.

திருவள்ளுவர் தமிழகத்திற்கு மட்டும் அல்லாமல், வையகம் முழுமைக்கும் வாழ்க்கைக்கு உரிய நெறியைத் தந்திருக்கிறார். அதனை நாம் உலகத்தின் பொதுச்சொத்து என்று எண்ணத் தக்க விதத்தில் பொதுக் கருத்தைப் பரப்பவேண்டும்.

தமிழ் மக்கள் திருக்குறளைப் பொதுமறை என்றும், இன்றைய தமிழர்கள் பெற்ற புதுமறை என்றும் போற்றுகிறார்கள். இந்த நல்ல கருத்துக் கருவூலத்தை உலகத்தின் கவனத்திற்கு எடுத்துவைக்க நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்த ஆண்டு (1968) உலகத் தமிழ் மாநாடு சென்னை நகரத்திலே நடைபெறவிருக்கிறது. தமிழ் ஆய்ந்த தமிழ் அறிந்த நல்லறிஞர்கள், பல நாடுகளிலிருந்தும் மாநாட்டுக்கு எனத் தமிழகத்துக்கு வர இருக்கிறார்கள்.

அப்போது திருக்குறளின் அருமை பெருமைகளை, ஏற்கெனவே தமிழறிஞர்கள் அறிந்திருந்தாலும், பத்து நாட்களோ எட்டு நாட்களோ மாநாடு நடைபெறும் நாட்களில், அவர்கள் எல்லோரும் கண்டுகளிக்கத்தக்க விதத்தில் திருக்குறளின் பெருமையை உலகு அறியச் செய்ய வேண்டும்.

திருக்குறளின் தமிழ் இலக்கியங்களின் கருத்துக்களை, ஓவியங்களாக-வரி வடிவங்களாக - பாடல்களாக - கூத்தாக உருவாக்கி வெளிப்படுத்தும் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

எனக்குள்ள நீண்ட நாளைய ஆசை - சென்னை கடற்கரை ஓரத்தில் சிலப்பதிகாரத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள காவிரிப்பூம்பட்டினக் கடற்கரையைப் போல் சித்தரித்துக் காட்டவேண்டும் - உருவாக்கிக் காட்டவேண்டும் என்பது!

(சென்னை - கோட்டை தலைமைச் செயலகத்தில் ஜூன் 9, 1967 நிகழ்ந்த திருவள்ளுவர் படத் திறப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை. (நம் நாடு நாளிதழ் - 10.06.1967)

உலக மொழிகளில் எல்லாம் திருக்குறள்

உலக மொழிகள் எல்லாவற்றிலும் திருக்குறளை மொழி பெயர்த்துப் பயன்படுத்துகிறார்கள். நாம் எல்லோரும் எதிர்பார்ப்பதை விட மேலாக வெளிநாட்டினர் திருக்குறளைப் பயன்படுத்த முனைந்துவிட்டனர்.

திருவள்ளுவருக்குக் கிடைக்கும் இந்தச் சிறப்பை நீண்ட காலத்திற்கு முன்பே நாம் செய்திருக்கவேண்டும்; தவறிவிட்டோம்.

இப்போது சோவியத்து நாட்டிலே உள்ளவர்கள் திருக்குறளைப் பயில்கிறார்கள். இங்கிலாந்து நாட்டில் உள்ளவர்கள் பயில்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னர் நான் புதுச்சேரிக்குச் சென்றிருந்தபொழுது, பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் புத்தகத்தை என்னிடம் தந்தார்கள்.

அதன் நல்லறிவுக் கருத்துக்கள் நாட்டு மக்கள் அனைவராலும் போற்றப்படுகின்றன. திருவள்ளுவர் விழாதான் நம் வாழ்வு செம்மைப்பட அமையும் விழாவாக அமைதல் வேண்டும்.

திருவள்ளுவரைப் போல, தமிழர்களிலே நிறையப் புலவர்கள் இருந்திருக்கிறார்கள். இளங்கோவின் சிலப்பதிகாரம் நாடு அறியாதது அல்ல; சிலப்பதிகாரத்தில் வரும் கனல் வரிக் கவிதை, உலகம் மறந்துவிடக் கூடியதும் அல்ல, இருந்தாலும் இரண்டு வரிகளுக்குள் வாழ்வுக்குத் தேவையான கருத்துகளை எப்படி வாழ வேண்டும் என்ற முறையை வகுத்துக் கொடுத்த பெரியார் வள்ளுவர்தான்!

தமிழ் நாட்டில் இருந்த பெஷ்ண்பாற் புலவர்களைப் போல் வெளிநாட்டில் எங்கும் நாம் கண்டதில்லை. இருந்தாலும் வள்ளுவரைப் போல் அவர்கள் சுவடி ஒன்றும் தரவில்லை. ஆதலால் வள்ளுவர் விழாவினை மற்ற விழாக்களைப் போல் எண்ணாது, தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அரிய விழாவாகக் கருத வேண்டும்.

இந்தக் குவலயத்திற்கே குறளைத் தந்த தமிழர் சமுதாயம், குறள் நெறியின்படி வாழ்கிறதா என்றால் இல்லை.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

என்று, உயர்வு பிறப்பிலே இல்லை; தான் செய்யும் தொழிலின் சிறப்பிலேதான் இருக்கிறது என்பதைத் திருவள்ளுவர் சொல்லியும் இந்தச் சமுதாயம் சாதிப் பிடிப்பிலிருந்து இன்னும் தன்னை விடுவித்துக்கொள்ளவில்லை.

அதுமட்டுமல்ல; சாதி இருந்தால் என்ன? என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள். ஆகையால் விழா நடைபெறும் இந்த நேரத்தில் திருவள்ளுவர் சொன்ன கருத்துகளை நடைமுறைக்குக் கொண்டுவர உறுதி எடுத்துக்கொள்ளவேண்டும்.

இன்றைய தினம் செல்வத்திலே சீரடைவதிலே கல்வி முன்னேற்றத்திலே தொழில் துறையிலே மிகவும் பின்தங்கியுள்ளோம். தமிழ்ச் செல்வம் யாரும் பெற முடியாத செல்வமாக இருக்கிறது. தமிழ்ப் பண்பாட்டுச் செல்வம் யாருக்கும் எந்த நாட்டுக்கும் கிட்டாத அளவிற்குக் கிடைத்திருக்கிறது.

இரஷ்யாவோடு நாம் போர்க் கருவிகளிலே போட்டியிட முடியாது; விஞ்ஞான வளர்ச்சியிலே போட்டியிட முடியாது. ஆனால் இலக்கியத்திலே போட்டியிட முடியும். அப்படிப்பட்ட இலக்கியச் செல்வம் நம்மிடத்திலே இருக்கிறது. அதில் தலையாயச் செல்வம் திருக்குறள்.

அந்தக் குறள், வகுப்பறையில் மட்டும் அல்லாமல் உங்கள் இல்லங்களில் மட்டும் அல்லாமல் உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்.

குறளைக் கற்றுக் கொள்வதால்,
நீங்கள் செம்மைப்பட்டு
நீங்கள் செம்மைப்படுவதால்,
நாடு செம்மைப்பட்டு
நாடு செம்மைப்படுவதால்,
உலகு செம்மைப்படச் செய்ய வேண்டும்.

(சென்னை இராணி மேரி கல்லூரியில் செப்டம்பர் 8, 1967 நிகழ்ந்த திருவள்ளுவர் விழாவில் முதலமைச்சர் மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை ஆதாரம்: நம் நாடு நாளிதழ் 09.09.1967)

நிலத்தாய் சிரிக்கிறாள்

ஒரு நாட்டில் ஒன்று இருந்தால் மற்றொன்று இருப்பது இல்லை. நம் தவத்திரு நாட்டிலோ எல்லாவற்றையும் பூமி தன் மடியில் அடக்கி வைத்திருக்கிறது. தோண்டினால் உனக்கு வேண்டியதைத் தருகிறேன் என்று பூமி மாதா கூறுகிறாள்! கொஞ்சம் தோண்டினால் ஊற்று நீர்!

இன்னும் கொஞ்சம் தோண்டினால் சுண்ணாம்புக் கல்! மேலும் சிறிது தோண்டினால் செம்பு! அதற்குப் பிறகு தங்கம்! அதற்கும் அடியிலே தோண்டினால், தங்கத்துக்கெல்லாம் மேலான கருப்புத் தங்கம் என்ற பொருளாதார வல்லுநர்கள் போற்றும் நிலக்கரி! இத்தனையும் தருவதற்குத் தயாராக இருக்கிறது நம் நிலம்.

இதனைத்தான் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே குறிப்பால் உணர்த்தியிருக்கிறார்; நிலத்தை மதிக்க வேண்டிய இன்றியமையாமையையும் வலியுறுத்தியிருக்கிறார்.

இலம் என்ற அசை இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லான் தகும்

என்னும் குறள் மூலம்!

நம்மிடம் எல்லாம் இருந்தும் எதுவும் இல்லையே! என்று தலைகுனிவதைப் பார்த்துத்தான் பூமி மாதா (நிலத் தாய்) சிரிப்பாள்! ஒரு பெண் தங்களைப்



பார்த்து ஏளனமாகச் சிரித்தால் தமிழர்கள் அதைத் தாங்கிக்கொள்ள மாட்டார்கள். இதை அறிந்துதான், பூமி மாதா சிரிப்பாள் என்று வள்ளுவர் எழுதியிருக்கிறார்.

நமது நிலத்திலே வளம் இருப்பது தெரிகிறது. ஆனால் அதனைத் தோண்டி எடுக்கும் அதிகாரம் நம்மிடத்திலே இல்லை! சேலத்திலே இரும்பு இருக்கிறது என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

வள்ளுவர் கூற்றுப்படி இரும்பைத் தன் மடியிலே அடக்கி வைத்திருக்கும் கஞ்சமலை, நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது! "தொழிற்சாலை வேண்டும் என்று துடிக்கிறாயே இங்கே தோண்டி எடு இரும்பை" என்கிறது கஞ்சமலை!

(சென்னை ஆகஸ்டு 15, 1967, விடுதலை நாள் விழாவில் மாண்புமிகு முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை. நம் நாடு, ஆகஸ்ட் 23, 1967)

இணையில்லா இலக்கிய வளம்


செழுமையான இலக்கிய வளம் நிறைந்த மொழி நமது மொழி தமிழ் மொழி. இதில் சிறிதும் ஐயப்பாடு கொள்ளத் தேவையில்லை.

உலகோர் முன் அவர் எம்மொழியினராயினும் சரியே எத்துணைக் கலையியல் வாய்ந்த எழுத்தாண்மைத் திறம் படைத்திட்ட நாட்டவரானும் சரியே நாம் தலைநிமிர்ந்து கூறிடலாம் அவரிடம்:

எம்மொழி தமிழ் மொழி. மிகச் செழுமையான மொழி. கலைப் பண்பார்ந்த ஏட்டுக் கருவூல வளம் காலக் கூறுக்கு ஏற்ற இலக்கியப் பகுதி ஏராளம் உண்டு எம்மிடம் எமது செந்தமிழில்! என்று.

இது வெறும் புகழ்ச்சியல்ல உண்மை! தற்பெருமைக் குற்றத்தினைப் பொருட்படுத்திடவே கூடாத தன்மைத்தான் தற்பெருமிதமும் கூட!

இலக்கிய உலகில் எழுத்தாண்மைத் துறையில் தமிழர் தம் சாதனை மிகவும்



எடுப்பானது ஈடும் இணையும் அற்றதும் கூட! எடுத்துக்காட்டு வேண்டுமா? இதோ ஒரு பாடல்:

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஒங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை.

இந்த ஒரு பாடலில் மட்டும் எட்டு நூல்கள் குறிப்பிடப்படுகின்றன. எட்டுத் தொகை என்னும் ஒரு சிறப்புத் தொகுதியில் வருவன மட்டும் இவை மெத்தச் சிறப்புடைத்தான நூல்கள் இவை.

மற்றத் தொகுதிகள் தொகுப்புகள் பற்றிப் பேசிடலும் வேண்டுமோ!

எல்லாவற்றையும் விட, திருக்குறள் குறித்து நாம் எவ்வளவு பெருமைப்பட்டுக்கொண்டாலும் தகும். வலி ஏதும் இல்லை, நாமே பெருமிதப்பட்டுக் கொள்வதில்.

மானிடப் பண்பியல்புகளுக்கு ஓர் உறைவிடமாய் வாழ்க்கை வழி, நெறிமுறைகளுக்கான வழி காட்டியாய் அமைந்துள்ளது திருக்குறள்.

காலக் கூறுக்கு ஏற்ற இலக்கியம் திருக்குறள் அன்றி வேறு ஏது? என்றும் நாம் கேட்டிடலாம், எவரைப் பார்த்தும். உலகெங்கணும் பறைசாற்றிடலாம்; அஞ்சிடத் தேவையில்லை.


"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" - நமது நாடு.

சி.சுப்பிரமணிய பாரதியார் எதனால் இப்படிக் கூறினார்?

அந்த வள்ளுவர், திருக்குறள் என்ற பொய்யாமொழியினை வாழ்க்கை நெறிக் கோட்பாட்டு மறைதனைத் தீட்டியதால்தான்!

ஷெல்லி, பைரன், கீட்ஸ், கால்ரிட்ஜ், எமர்சன், பேக்கன் முதலிய ஆங்கிலப் பாவாணர்களும் பேரிலக்கிய நூலாசிரியர்களும் அளித்துள்ள நற்காவியங்களும், எழுத்தோவியங்களும் நமக்கு அந்நியம் ஆகுமா? அயலானவை தாமா?

அந்நியம் என்கிற சொல்லின் நேரிடையான பொருளில்தான் அவற்றையெல்லாம் கருதிடவேண்டுமா? ஒதுக்கிடவும் வேண்டுமா?



தமிழ் மறையாம் திருக்குறளைத் தீட்டிய திருவள்ளுவர், தமிழர் என்பதால் தமிழருக்கு மட்டும்தான் வழிகாட்டியா?

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

- என்று பாடிப் பூரித்து மகிழ்கின்றோமே, என்ன பொருள் அதற்கு?

ஷெல்லி போன்றோர் ஆங்கிலத்திற்கோ, ஆங்கில நாட்டாருக்கு மட்டுமோ உரியவர் ஆக மாட்டார்.

அவர்கள் அனைவரும் உலகினுக்கே சொந்தம்!

உலகப் பெருமக்கள் - குடி மக்கள் - அவர்கள்!

உலகப் பேராசிரியர்களும் ஆவார்கள் அவர்கள்!

(1967இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு பேருரை. ஆதாரம்: திரு.மு.நமசிவாயம் தொகுத்துள்ள சாமானியனின் சகாப்தம் நூல்)

வாழ்க வள்ளுவர்!

வள்ளுவர் தந்த திருக்குறள் தமிழர்க்கு மட்டும் அல்லாமல் பண்புடன் வாழ விரும்பும் அனைவருக்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது.

திருக்குறள் பூஜா மடத்துக்கு மட்டும் தயாரிக்கப்பட்ட ஏடு அன்று; புனைந்துரைகள் நெளியும் புராணம் அன்று; வாழ்விலே, தூய்மையை அவரவரும், தத்தமது திறனைச் சரியாகப் பயன்படுத்தி, மற்றவர் வாழ்வின்

மேம்பாட்டினையும் மதித்து ஒழுகுவதன் மூலம் பெறக்கூடியது என்ற பெருநெறியைக் காட்டும் நூலாகும்.

திருவிழாக்களையும், தீர்த்த மகிமைகளையும், திருப்பல்லாண்டுகளையும், திரு அவதாரங்களையும் இவற்றின் பிற பதிப்புகளான வெண்பொங்கல், இனிப்புச் சோறு எனும் இன்ன பிறவற்றினையும் மக்களுக்கு வழங்கும் அழுக்குக் கருத்துரைகள் கொண்ட ஏடுகளையே தமிழ்நாடு கொண்டாடி வருகிறது. காரணம் பலப்பல. விளைவோ வாழ்வில் வேதனை; சமூகத்தில் சச்சரவு; நாட்டிலே நலிவு!

நாம் இதுகாறும் அத்தகு ஏடுகளின் பிடியிலிருந்து நாடு விடுபட வேண்டும் என்பதற்காகப் பணிபுரிந்து வந்தோம். அப்பணி தொடர்ந்தும் நடந்து வருகிறது. அப்பணியுடனும் இப்போது நாம் வள்ளுவர் தந்த திருக்குறளை ஒவ்வோர் இல்லத்திலும் குடியேறச் செய்தாகவேண்டும்; ஒவ்வொருவர் மனத்திலும் அவருடைய அற உரைகள் பதியச் செய்யவேண்டும் என்ற சீரிய பணியினை மேற்கொண்டு உள்ளோம்.

நாம் நாவலரும் பாவலரும் கூடிடும் நல் மணிமாடத்திலே அல்ல உலவுவது; உரையாடுவது! நாதனைக் கண்டோம்; நம் நாவில் அவர் சூலம் பட இம்மெய்யறிவு கொண்டோம் என்று இயம்பிடும் அருள் விற்பனையாளர்களின் அணி மாடங்களை நாம் அணுகுவது இல்லை.

மக்கள் இத்தகையவர்களிடம், மறைந்து கிடக்கும் இம் மாணிக்கத்தை திருக்குறளைக் காட்டும் மகத்தான பணியினை, நாம் மேற்கொண்டுள்ளோம். நமது பணி வெற்றி பெற்றால்தான், மக்களின் உடைமையாகும் இந்தத் தமிழ் அறிவுக் களஞ்சியம்.

நமது பெரும் பணி மூலமே, மக்களுக்கு, வாழ்க்கையிலே சந்தேகத்தை நீக்கவும், போக்கவும், நேர்மையை நிலைநாட்டவும் உதவும் இப்பெருநூலின் உண்மைப் பொருள் தெரிய முடியும்.

குறள் ஏந்திச் செல்வோம் நாடு, நகரமெங்கும்; பட்டி, தொட்டிகளில் எல்லாம்! பண்பாடு எது என்பதை மக்கள் அறியச் செய்வோம்!

அறம், பொருள், இன்பம் எனும் அரிய முப்பொருளை மக்கள் உணர மட்டுமல்ல; நுகரவும் பணியாற்ற வேண்டும்.

புதிய பணி இது; ஆனால் நமது பழைய பணியின் தொடர்ச்சிதான் முற்றிலும் புதிதன்று!

அப்பணிக்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கு குறளின் அருமை, பெருமை பற்றி அறிஞர்கள் கூறியுள்ள கருத்துரைகளை எண்ணிப் பார்ப்பது முக்கியமான முதல் வேலையாகும்.

பேராசிரியர் சுந்தரனார் பெரும்புலவர். அவர், வள்ளுவரின் திருக்குறளைப் பற்றிய அருமை பெருமையினை அறிவிக்கப் பல கூற வேண்டாம்; முக்கியமானதைச் சுட்டிக்காட்டினால் போதும் என்று எண்ணி



வள்ளுவர்செய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
ஒருகுலத்துக் கொருநீதி?

என்று பாடியுள்ளார். இந்த ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்னும் முறையினைக் காலம் கூடத் தகர்க்காதபடி, அவ்வப்போது உரம் ஊட்டி வருவனவே புராண, இதிகாசங்கள். அவற்றை நம்பியதாலேயே நாடு நலிவுற்றது.

நாட்டின் நலிவு நீங்கி, மக்கள் நல்வாழ்வு பெறுவதற்காக, வள்ளுவர் குறளை, மறவற நன்கு உணர்ந்தார் ஆதல் வேண்டும் மக்கள்.

வள்ளுவர் அனைத்துப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து அரிய உண்மைகளை வெளியிட்டிருக்கிறார். கடவுள் கொள்கை, நாடு, அரசு, இல்வாழ்க்கை எனும் பல பகுதிகளாக உள்ள குறளின் முழு நோக்கம் மக்கள் அறநெறியில் நிற்க வேண்டும் என்பதேயாகும். ஏனெனில், அவர் கூறியபடி அறத்தால் வருவதே இன்பம். இந்த அறநெறியைப் பரப்பும் பணியினை மேற்கொள்ளும் நமக்கு உறுதுணையாக, அறிஞரின் கருத்துரைகள் உதவுகின்றன.

திருக்குறளின் ஆரமையினை எடுத்துரைத்த அறிஞர் பலர் பல மொழிகளிலே குறள் மொழிபெயர்க்கப்பட்டு, அதன் பெருமை கடல் கடந்தும் சென்று பரவியுள்ளது. எனினும் தமிழர் மனைகளிலே குறள் உண்டோ? பஞ்சாங்கம் இருக்கும்; பாரதக் கதை இருக்கும்; அபிமன்யு வீரமும் இருக்கும்; அறநெறி கூறும் அருமைத் திருக்குறள் இருக்குமா? இல்லையே! ஏன்?

பண்புடைத் தமிழரின் மனப் புண்ணும் பயனில் நூல்களை மட்டுமே அறிந்ததால் மக்கள் மனத்திலே மூண்டு கிடக்கும் மருளும் போக்கப்பட வேண்டும்.

வாழ்க வள்ளுவர்! வளர்க குறள் நெறி!

('திராவிடநாடு' கிழமை இதழ், சனவரி 14, 1949)

பட்டை தீட்டிய வைரம்

திருக்குறள் இன்று பல்வேறு மொழிகளில் ஆக்கப்பட்டு உலக அரங்கில் உலா வருகிறது. இந்த அளவு வெற்றி, வேறு எந்தத் தமிழ் நூலுக்கும் கிடைத்தது இல்லை.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் தரணிக்கெல்லாம் நன்னெறி கூறும் நூல். நாளாக, நாளாக சூழ்நிலை மாற மாற திருக்குறள், புதிய விளக்கங்களை, விரிவான கருத்துக்களை நமக்குத் தரும் ஆற்றல் வாய்ந்தது! அதன் ஆழ்ந்த பொருளை அறிய ஆராய்ச்சி செய்வது இன்றியமையாதது.

வைரத்தைப் பட்டை தீட்டத் தீட்ட அதனுள் பல வண்ணங்கள் தெரிவது போல், திருக்குறளை ஆராய ஆராய அதில் பல புத்தம் புதிய அருமையான கருத்துக்கள் புலப்படும்.

இனி திருக்குறளைப் பற்றி விரிவுரைகள் ஆற்ற வேண்டிய அவசியம் இல்லை. வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களை எவ்வாறு பயன்படுத்துவது என்ற ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டியதுதான் தேவை.

திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. அந்தக் காலத்தில் வேறு நாடுகளில் இயற்றப்பட்ட எந்த நூலிலும், குறளில் உள்ளதைப் போல் கருத்துக்கள் காணப்படவில்லை.

பிற நாடுகளில் மக்கள் காட்டுமிராண்டிகளாக இருந்த அந்தக் காலத்திலேயே தமிழர்கள் நல்ல பண்பாடு மிகுந்தவர்களாகத் திகழ்ந்தனர் என்பதைத்தான் திருக்குறள் காட்டுகிறது.

திருக்குறளைப் பற்றிப் பெருமையாகப் பேசும் நம்மிடம் மூடப் பழக்க வழக்கங்கள் இருப்பதைப் பார்க்கும் வெளிநாட்டவர்கள் நம்மைப் பற்றி ஐயப்படுவார்கள். அதனால்தான் திருக்குறளுக்கு உலகில் கிடைக்கவேண்டிய அளவு பெருமை கிடைக்கவில்லை.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

என்ற குறளையும் போற்றிக்கொண்டு, சாதி முறைகளையும் கைவிடாமல் இருப்பது வாழ்க்கை நெறிக்குப் பொருத்தமாக இராது; குறளை நாம் உண்மையாகவே போற்றுவது ஆகாது!

சென்னைப் பல்கலைக்கழகத்தில் திருக்குறள் ஆராய்ச்சிக்கு என்றே ஒரு தனித் துறையை ஏற்படுத்தத் தமிழக அரசு முயற்சி செய்யும்.

(சென்னை, மயிலாப்பூரில் 1967ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ஆம் நாள் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய சிறப்புரை. நம் நாடு நாளிதழ் அக்டோபர் 16, 1967).







திருக்குறள் என் சிந்தையை நெய்திருக்கும் செந்நூல்

முத்தமிழறிஞர் கலைஞர்

நித்தம் தவம் செய்யும் குமரி எல்லையிலே,
நீலத் திரைக்கடல் ஓரத்திலே,
நீணிலத்திற்கு அறம், பொருள், இன்பம் என்று
வாழ்க்கை நெறி வகுத்தளித்த
திருவள்ளுவருக்கு நெடிதுயர்ந்த சிலை
அந்தச் சிலை திறப்பு விழா!

இந்தச் செய்தி என் சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிலிர்த்திட வைக்கின்றது. என் உள்மனத் திரையினிலே ஒளிக்கற்றை உமிழ்ந்து வரிசை வரிசையாக வந்துதிக்கும் வண்ணமிகு ஓவியங்கள்! என் கண்களின் நினைவலையில் நீந்திவரும் நித்திலப் பாடல்கள், என் செவிகளில் தேனாறாய்ப் பாய்ந்து வரும்! எத்தனை எத்தனை எண்ணங்கள்!

அதையெல்லாம் ஏடெடுத்து. இன்பத் தமிழெடுத்துச் சொல்லால் சுவை கூட்டிச் சுகமளிக்கும் விருந்து படைக்க வேணவாதான்! நேரம்தான் இல்லை; எனினும் வள்ளுவர் பற்றிய வளமான சிந்தனைகள், என்வாழ்வில் இதுவரை நடந்த நிகழ்வுகள், வார்த்தைத் தேரேறி என்னை வலம்வருகின்றன; வகுத்தும், தொகுத்தும் வழங்குகிறேன்!

என்னுள்ளே குறளின் பாதிப்பு

தானே முழுதுணர்ந்த தண்டமிழின் வெண்குறள்;
சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல் வல்ல குறள்;
உள்ளுதோ றுள்ளம் உருக்கும் குறள்;
ஓதற்கெளிதாய் உணர்த்தற்கரிதாகி உயர்ந்து ஒளிரும் குறள்!

திருக்குறளும். இதனை யாத்து இவ்வுலகிற்கு அளித்த வாலறிவன் வள்ளுவரும் இளமையிலேயே எனக்கு அறிமுகமாகி, என் வாழ்வின்

ஒவ்வொரு கட்டத்திலும் எனக்கு உரத்தையும், தரத்தையும் தந்து என்னுள் எங்கும், என்றும் நிறைந்த பொருளாய், எனை முழுதும் வியாபித்துள்ள வியப்பினும் வியப்பாய் விலகாது தொடர்ந்து வரும்.

புத்தர், வள்ளுவர், பெரியார், அண்ணா - காந்த சக்திகள்

1927 முதலே சொற்பொழிவுகள் மூலமாகவும், எழுத்து வாயிலாகவும் புத்தர் கொள்கைகளையும், திருக்குறளையும் மக்கள் முன்வைத்து மகத்தான பிரச்சாரத்தைத் தொடங்கியிருந்தார் தந்தை பெரியார்; அவரோடு இணைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் திருக்குறளின் சீரிய நெறியைச் செந்தமிழ் மாந்தருக்குத் தேனில் குழைத்து அளித்து வந்தார்.

பெரியாரின் இடிமுழக்கப் பேச்சும். அண்ணாவின் அழகு தமிழ்ச் சொற்பொழிவும் பிரவாகமாய்ப் பெருக்கெடுத்து இளைஞர்களை எல்லாம் எழுச்சி கொள்ளச் செய்திருந்தது.

புத்தர், திருவள்ளுவர், பெரியார், அண்ணா அந்தக் காலத்தில் சமூக மனசாட்சி கொண்டிருந்த சகலருக்கும் காந்த சக்திகள். அப்போது தமிழ் உணர்வால் உந்தப்பட்ட இளைஞனாக இருந்த நான், இந்தக் காந்தங்களால் ஈர்க்கப்பட்டது ஆச்சரியமல்லவே!

பள்ளி மன்றத்தில் 'நட்பு' என்ற முதல் பேச்சு

மேடைப் பேச்சுக்கு என்னைத் தயாரித்துக்கொண்டது. பள்ளிக்கூடச் சொற்போர் போட்டிகளின் மூலமாகத்தான். அந்த முதல் பேச்சு பற்றி எண்ணிப் பார்க்கிறேன்! முதன் முதலாக நான் மன்றத்தில் நின்று எழுப்பிய குரல் 'நட்பு'





என்ற பொருள் பற்றித்தான்; இந்தத் தலைப்பே திருக்குறளின் 'நட்பு' எனும் அதிகாரப் பெயரின் அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது! இன்றுபோல் அன்றும் நண்பர்கள் சூழவே இருப்பதைப் பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டேன்.

"நகுதல் பொருட்டன்று நட்டல்" என்ற குறளைக் கடைப்பிடித்து இடித்துரைத்த அறிவுரைகளும், "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களையும்" நண்பர்களும் என் வாழ்க்கைக்குத் தக்க துணையாயினர்.

தந்தை பெரியார் பேசிய 'குறளும்', பெருமைப்படுத்திய 'வள்ளுவரும்'

''திருவள்ளுவர் நல்ல அறிவாளி, ஆராய்ச்சிக்காரர். அந்தக் காலத்தில் மக்களிடமிருந்த மூட எண்ணங்களோடு போராடிய அறிஞர்" என்று கூறும் தந்தை பெரியார் தொடர்ந்து கூறுகிறார்:

'குடி செய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து மானம் கருதக் கெடும்'

என்று திருவள்ளுவர் கூறுகிறார். அதாவது, ஒரு மனிதன் தன் இனத்தவருக்கு ஏதாவது நன்மை செய்யவேண்டும் என்று நினைத்தானானால் - அதாவது. பொது நலத்திற்குப் பாடுபடவேண்டும் என்று முன்வந்தால், அவன் அந்தக் காரியத்திற்கு ஏற்ற நல்ல காலம் வரட்டும் என்று எண்ணிக் காத்திருக்கக் கூடாது.

இரண்டாவதாக, நாம் இந்தக் காரியத்தில் இறங்குகிறோமே; இதனால் இன்னின்ன கஷ்டங்கள் வருமே! நமக்குப் பலவிதத்திலும் அவமானம் ஏற்படுமே மானம் போய்விடுமே என்று கவலைப்படக் கூடாது. அந்தப் படியாகவெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தால் பொதுவாழ்வில் நாம் செய்யப் புகும் காரியமே கெட்டுவிடும் என்று மிகப் புரட்சிகரமாகக் கூறுகிறார்.

ஏன் புரட்சிகரமாகச் சொல்லுகிறார் என்று கூறுகிறேன் என்றால், மற்றொரு இடத்தில் காலம் பார்த்துச் செய்தால் ஞாலமும் கைகூடும் என்று கூறுகிறார். இன்னொரு இடத்திலே, 'மயிர்நீப்பின் உயிர் வாழாக் கவரிமான்' போன்று ''மானம் நீங்குமானால் மனிதன் இறந்து விடவேண்டும்" என்று கூறுகிறார்.

மானம் இழந்தால் மரணத்தைத் தழுவ வேண்டும் என்று வள்ளுவர் கூறுவது ஏனென்றால், மனிதனுடைய தனி வாழ்வில், அவனது சொந்த வாழ்வில் அவனுக்கு அவமானம் நேரிடின் உயிர் விடவேண்டும். உயிரை விட மானத்தைப் பெரிதென மதித்து நடக்கவேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறார்.

'குடிசெய்வார்க்கு' என்று தொடங்கும் இந்தக் குறள் பொதுவாழ்வு பற்றியதாகும். பொதுவாழ்வில் எந்த மக்களின் நல்வாழ்விற்காக முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறானோ, அந்த மக்களாலேயே வெறுக்கப்படலாம்; பல தொல்லைகட்கும் ஆளாக நேரிடலாம்.

ஆனால், தாம் படுகின்ற பாடுகள் அடைகின்ற அல்லல்கள் நன்மைக்காகத்தான் என்று கருதி வேலை செய்தால்தான், அவன் எண்ணிய காரியம் ஈடேறுமேயொழிய மானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தால் காரியம் கைகூடி வராது என்று கூறுகிறார். இந்தப்படியாக வள்ளுவர் மக்களுக்கு நல்வாழ்வின் வழியையும். நல்லொழுக்கத்தையும் கூறுகிறார். இன்றைய தினம் திராவிடர்களுக்கு ஒழுக்க நூல் குறள்தான்.

2500 ஆண்டுகளுக்கு முன்பு சித்தார்த்தர் என்ற புத்தர் தோன்றி சாதியைக் கண்டித்தார்; புத்தருக்கு அடுத்தபடி வள்ளுவர் தோன்றி "பிறப்பினால் பேதம் கிடையாது; எதையும் அறிவைக் கொண்டு சிந்தித்து அதன்படி நட" என அருமையான கருத்துக்களையெல்லாம் தமது நூலாகிய திருக்குறளில் கூறிச் சென்றார். புத்தர், வள்ளுவர் ஆகிய இருவருக்குப் பிறகு, திராவிடர் கழகத்தாராகிய நாங்கள்தாம்

இந்த, சாதி, மூடநம்பிக்கைகள் இவற்றை எதிர்த்துவருகின்றோம்" இவ்வாறு தந்தை பெரியார் திருவள்ளுவரைப் பெருமைப்படுத்திப் பேசியுள்ளார்.

திருக்குறளைப் பற்றி அந்த நாளில் அண்ணா சொன்னது

''திருவள்ளுவர் தமிழகத்திற்கு மட்டுமல்லாமல், வையகம் முழுமைக்கும் வாழ்க்கைக்கு உரிய நெறியைத் தந்திருக்கிறார். அதனை நாம் உலகத்தின் பொதுச்சொத்து என்று எண்ணத்தக்க விதத்தில் பொதுக் கருத்தைப் பரப்பவேண்டும். தமிழ் மக்கள் திருக்குறளைப் "பொதுமறை" என்றும், இன்றைய தமிழர்கள் பெற்ற "புதுமறை" என்றும் போற்றுகிறார்கள்.

உலக மொழிகள் எல்லாவற்றிலும் திருக்குறளை மொழிபெயர்த்துப் பயன் படுத்துகிறார்கள். நாம் எல்லோரும் எதிர்பார்ப்பதைவிட மேலாக வெளிநாட்டினர் திருக்குறளைப் பயன்படுத்த முனைந்து விட்டனர்.

மானிடப் பண்பு இயல்புகளுக்கு ஓர் உறைவிடமாய் வாழ்க்கை, வழி நெறிமுறைகளுக்கான வழிகாட்டியாய் அமைந்துள்ளது திருக்குறள். வள்ளுவர் அனைத்துப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து அரிய உண்மைகளை வெளியிட்டிருக்கிறார்.

கடவுள் கொள்கை, நாடு, அரசு, இல்வாழ்க்கை எனும் பல பகுதிகளாக உள்ள குறளின் முழு நோக்கம் மக்கள் அறநெறியில் நிற்கவேண்டும் என்பதே ஆகும். ஏனெனில், அவர் கூறியபடி அறத்தால் வருவதே இன்பம்.

இனி திருக்குறளைப் பற்றி விரிவுரைகள் ஆற்ற வேண்டிய அவசியம் இல்லை. வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களை எவ்வாறு பயன்படுத்துவது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டியதுதான் தேவை.

திருக்குறளைப் பற்றிப் பெருமையாகப் பேசும் நம்மிடம் மூடப்பழக்க வழக்கங்கள் இருப்பதைப் பார்க்கும் வெளிநாட்டவர் நம்மைப் பற்றி ஐயப்படுவார்கள். அதனால்தான் திருக்குறளுக்கு உலகில் கிடைக்க வேண்டிய அளவு பெருமை கிடைக்கவில்லை.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்-என்ற குறளையும் போற்றிக்கொண்டு சாதிமுறைகளையும் கைவிடாமல் இருப்பது வாழ்க்கை நெறிக்குப் பொருத்தமாக இராது. குறளை நாம் உண்மையாகவே போற்றுவது ஆகாது!".

இப்படியெல்லாம் பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் திருக்குறளைப் பற்றியும், திருவள்ளுவரைப் பற்றியும் தொடர்ந்து மக்களிடையே பேசி வந்ததால், அதுவரை ஆராய்ச்சிக் கூடத்தை மட்டுமே அலங்கரித்திருந்த திருக்குறளைக் கடைக்கோடிச் சாமான்யனும் கேட்கத் தொடங்கினான். 1948இல் தந்தை பெரியார் திருக்குறள் மாநாடு கூட்டினார்; திருக்குறள் நாள் கொண்டாடச் செய்தார்.

1952இல் 'பணம்' படத்தில் 'திருக்குறள் முன்னணிக் கழகம்'

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் கலையுலகம் உழைப்பால் கண்டெடுத்த நல்முத்து; உயர்ந்த உத்தமர். கலையுலகத்திற்குக் குளிர் தருவாக அவர் இருந்தார். ஏழை எளியவர்களின் பக்கம் அவரது கொடைக்கரம் நீண்டுகொண்டே இருந்தது. வறுமைச் சகதியில் அமிழ்ந்து வேதனைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அழுதுகொண்டிருந்த மனிதனையும் அவர் சிரிக்க வைத்தார். அந்தச் சிரிப்பு வெறும் சிரிப்பாக இல்லாமல் விதவிதமான கருத்துக்களை, எண்ண வளங்களை உருவாக்கக் கூடியதாயிருந்தது.

அவரில்லாமல் படங்கள் வெற்றியடைவது இயலாத ஒன்று என இருந்த

அந்தக் காலகட்டத்தில், நடிகர் திலகம் சிவாஜிகணேசன் - நாட்டியப் பேரொளி பத்மினி ஆகியோரும், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் - அவரது துணைவியார் மதுரம் அம்மையாரும் நடித்து, நான் திரைக்கதை வசனம் எழுதி, 1952ஆம் ஆண்டில் வெளிவந்த திரைப்படம் 'பணம்'. திரைப்படத் தணிக்கையெல்லாம் தீவிரமாக இருந்த நேரம். 'பணம்' படத்தில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள் தமது சொந்தக் குரலிலேயே பாடுவதைப் போன்ற காட்சி ஒன்று; அந்தப் பாடல் இதுதான்:

"தீனா மூனா கானா - எங்கள்
தீனா மூனா கானா
அப்படின்னா?
திருக்குறள் முன்னணிக் கழகம்
ஓகோ!
அறிவினைப் பெருக்கிடும்
உறவினை வளர்த்திடும்
பகுத்தறிவோடு நாட்டினர் வாழ
திருக்குறள் தந்தார் பெரியார்!
- வள்ளுவப் பெரியார்!
அந்தப் பாதையில் நாடு சென்றிடவே
வழிவகுப்பதும் - அதன்வழி நடப்பதும் - எங்கள்
தீனா மூனா கானா
கருப்பு சிகப்பு என்ற பேதத்தை நீக்கும்! - தலை
கனத்தைக் குறைத்து நல்ல தன்மை
உண்டாக்கும்;
கள்ளர் மறவரொடு பள்ளு பறையர் என
உள்ள பேதங்களை ஒழித்துக் கட்டும் - எங்கள்
தீனா மூனா கானா:
காந்தியடிகளின் அகிம்சையும்
வள்ளுவன் கருணையும்
ஒன்றெனச் சொல்லுவதும்;
சாந்த சித்தார்த்தன் கொள்கையும்-
திருக்குறள்
தருமமும் ஒன்றெனக் கொள்வதும் - எங்கள்
தீனா மூனா கானா;
தனயன்மாருக்கு ஒரு தந்தையைப் போலே
தங்கைகளுக்கும் ஒரு தமக்கையைப் போலே
தம்பியருக்கு ஒரு அண்ணா போலே!
சரியும் தவறும் இது எனக்காட்டும்
தமிழன் பெருமைதனை நிலை நாட்டும் -
எங்கள் தீனா மூனா கானா;
அறிவினைப் பெருக்கிடும்
உறவினை வளர்த்திடும்
தீனா மூனா கானா - எங்கள்
தீனா மூனா கானா
எங்கள் தி.மு.க.!"

- திருக்குறளையும் நான் சார்ந்திருந்த இயக்கத்தையும் இணைத்து அமைந்திருந்த இந்தப் பாடல், படம் பார்த்தவர்கள் மத்தியில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கியது; தமிழக மெங்கும் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

1953இல் திருச்சி சிறையில் திருக்குறள் மன்றம்

1953ஆம் ஆண்டு கல்லக்குடி போராட்டத்தில் கைது செய்யப்பட்டு திருச்சி சிறையில் இருந்தபோது தோழர்கள் மத்தியில் பலதரப்பட்ட பொருள்களின் மீது விவாதம் நடத்திப் பேச்சாற்றலை வளர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பேச்சு மன்றம் புதிய புதிய கருத்துக்களைப் பற்றி விவாதிக்கவும், விளக்கம் பெறவும், விரிவுரை நிகழ்த்தவும் தன்னைத் தயாராக்கிக்கொண்டது. குறள் பற்றி இரண்டு மூன்று நாட்கள் தோழர்கள் உரையாற்றிய பின் நான் முடிவுரை கூறினேன்.

குறளின் காமத்துப் பாலின் சுவையைத் தோழர்களிடம் கூறும்போது சிறையிலிருக்கிறோம் என்ற எண்ணத்தையும் சில நிமிடங்கள் மறந்து குறளாசிரியரின் வர்ணனையிலே ஆழ்ந்தார்கள். ஒரு தோழர் பேசும்போது குறிப்பிட்டார்: "குறளுக்குச் சிறப்புச் சொல்ல வந்த யாரோ ஒருவர். "வாமனாவதாரன் உலகை இரண்டடியால் அளந்தான். வள்ளுவனும் இரண்டடியால் அளந்தான்" என்று பாராட்டியிருக்கின்றார்" என்று! அது பற்றி நான் குறிப்பிட்டேன், "வாமனன் இரண்டடியால் உலகை அளந்துவிட்டு, மூன்றாவது அடியை மாபலி என்ற மனிதன் தலையிலே வைத்து அழுத்தினான். ஆனால் வள்ளுவன் மனிதன் தலையிலே



ஏறிக்கொள்ளவில்லை; மனிதனுக்காக நீதி வகுத்தான்" என்று விளக்கிச் சொன்னேன்.

1964இல் சட்டமன்றத்தில் திருவள்ளுவர் படம்

1969இல் தமிழ்நாட்டில் திருவள்ளுவர் நாள்

தமிழினத்தில் - தமிழகத்தில் பிறந்தபோதிலும் தரணிக்கே பொதுமறை வழங்கிய புதுமைச் சிற்பி திருவள்ளுவர். அவர் ஏற்றி வைத்திட்ட திருவிளக்கை, தேன்தமிழ்த் திருக்குறளைத் திக்கெட்டும் பரப்பிடும் பணியையும் தன் ஒப்பற்ற கடமையாய்க் கருதிச் செயல்பட்டு வந்துள்ளது தி.மு.கழகம். சமயக் கவிஞர்களையும், சாதித் தலைவர்களையுமே போற்றிப் புகழ்ந்துகொண்டிருந்த காலத்தில், திருவள்ளுவரின் சால்பு, தகைமை, தகுதி முதலானவற்றை இனங்கண்டு தெரிந்து. அவரை ஏற்றிப் போற்றிட முதன்முதல் குரல் கொடுத்த பெருமையும் தன்மானத் திராவிட இயக்கங்களையே சாரும்.

வழிகாட்டிகளை மறந்திடாமல், அவர்தம் வழி நடந்திடும் பேராவத்துடன் தான், சட்டமன்றத்தில் நுழைந்ததும், வள்ளுவருக்குச் சிறப்பு செய்யாதது ஏன் என்று நாங்கள் வாதிடவும் முற்பட்டோம். சட்டமன்றத்தில் திருவள்ளுவர் படத்தினைத் திறந்து வைத்திட வேண்டும்; திருவள்ளுவர் நினைவாக அரசாங்கம் விடுமுறை நாள் விடவேண்டும் என்று கோரிக்கைகளை முன்வைத்தோம்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் 21.11.1963 அன்று திருவள்ளுவர் பற்றிய சிந்தனை அலைகள் தவழ்ந்தன. அன்றைக்குத்தான் ''திருவள்ளுவர் நாள்" என்று ஒரு நாளைப் பொது விடுமுறை தினமாக அறிவிக்க வேண்டும் என்ற தீர்மானம் சட்டமன்றத்திலே முன்மொழியப்பட்டது.

நான் அந்த விவாதத்திலே பங்கு கொண்டு, "கொண்டுவந்திருக்கிறதீர்மானம் இந்த மன்றத்தில் எல்லாக் கட்சிகளுடைய பெரும்பான்மையான ஆதரவோடு நிறைவேற இருக்கின்ற நம்பிக்கையோடு பேசிக்கொண்டிருக்கிறேன். நம்முடைய முதலமைச்சர் (திரு. பக்தவத்சலனார்) அவர்கள் அடிக்கடி இந்த மன்றத்திலே

எதிர்க்கட்சியினரைப்பற்றிச் சுட்டிக்காட்டுகிற நேரத்திலே, நீங்கள் கொண்டு வருகிற நல்ல திட்டங்களை நாங்கள் வேண்டாம் என்றா சொல்லுகிறோம்? நீங்கள் சொல்லுகிற நல்ல கொள்கைகளை நிறைவேற்ற முடியாது என்றா மறுக்கிறோம்? என மிகத் தெளிவாக எதிர்க்கட்சியினரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்கள்.

ஆகவே, அவர்களுக்கு முழுக்க முழுக்க உடன்பாடான, எள்ளளவு வேறுபாடும் தெரிவிக்காத தீர்மானம் இப்போது எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற காரணத்தினால், நிச்சயமாக இந்த நன்னாளில் இந்தத் தீர்மானம் நிறைவேறி இந்த நன்னாளே தமிழகத்தின் புனித நாளாகப் போகிறது என்ற நம்பிக்கையோடு நான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

இந்தமாமன்றத்தில் திருவள்ளுவருடைய நாள் ஒன்றினை அரசாங்கத்தார் குறித்து, அதை விடுமுறையாக ஆக்க வேண்டுமென்ற தீர்மானம் விவாதிக்கப்படுகிற இந்த நேரத்தில் நான் மற்றொன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கடந்த சட்டமன்றத்தில் ஒருநாள் விவாதத்தின்போது, திருவள்ளுவர் படம் ஒன்றினை இந்த மாமன்றத்தில் வைக்க வேண்டும் என்ற கருத்தை நான் வெளியிட்டேன். அந்தப் படத்தை நானே வாங்கித் தருவதாக இருந்தால், என்னுடைய அன்பளிப்பாகத் தருவதாக இருந்தால், அதை இந்த மன்றத்தில் வைப்பதற்கு ஆட்சேபணை இல்லை என மறைந்த மதிப்பிற்குரிய திரு.கிருஷ்ணாராவ் அவர்கள் தெரிவித்தார்கள்.

திருவள்ளுவர் படத்தை அன்பளிப்பாகத் தருவதற்கு நான் இசைந்தபோது அந்தப் படத்தை இந்த மாமன்றத்தில் வைக்கும் பிரச்சினை பற்றி அவர்கள் ஆராய்ந்தபோது ஒரு கருத்தை வெளியிட்டார்கள். இந்த மன்றத்திற்குள் அந்தப் படத்தை மாட்டுவது என்பது இயலாது; இந்த மன்றத்தையொட்டி வெளியில் இருக்கிற தாழ்வாரத்தில்தான் மாட்ட முடியும் என்று சொல்லிவிட்டார்கள். அதற்கான காரணத்தை நான் கேட்ட நேரத்தில், இப்போது நான் திருவள்ளுவர் படத்தை இந்த மண்டபத்துக்குள் வைத்தால் பின் வேறொருவர் கம்பரின் படம் வைக்கவேண்டும் என்று சொல்கிறார்; இன்னொருவர் காளமேகத்தின் படம் வைக்கவேண்டும் என்று சொல்கிறார்; இப்படி அவரவர்கள் தங்கள் தங்கள் இஷ்டத்திற்கு ஏற்றபடி உரிமைப் பிரச்சினை எழுப்புவார்கள் என்று சொல்லப்பட்டது.

இந்த மாமன்றத்தில் உத்தமர் காந்தியின் படமும், திரு. இராசகோபாலாச்சாரியாரின் படமும் மாட்டப்பட்டு எத்தனையோ ஆண்டுகள் ஆகின்றன. எத்தனையோ அரசியல் கட்சிக்காரர்கள் இங்கே இருந்திருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களும் இருந்திருக்கிறார்கள். இங்கே காந்தி படம் இல்லையா, இராசாசி படம் இல்லையா; பட்டேல் படத்தை மாட்ட வேண்டுமென்றோ அல்லது வேறு ஒரு கட்சித் தலைவரின் படத்தை மாட்ட வேண்டுமென்றோ, இதுவரை ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்பவில்லை.

ஆகவே, இந்தத் தீர்மானம் இங்கே கொண்டு வரப்படுகிற இந்த நேரத்தில், இந்த சபையில் ஏகமனதாக நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு பேசிக்கொண்டிருக்கிற நான், மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுக்கும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த மன்றத்தில் காந்தியார் படத்தைப் போல, இராசகோபாலாச்சாரியார் படத்தைப் போல, திருவள்ளுவர் படமும் வைக்கப்பட்டு இந்த மன்றத்தை அலங்கரிக்க வேண்டும் என்று நான் மிகமிகப் பணிவன்புடன், தமிழ் உணர்ச்சியுடன் அவர்களைக் கேட்டுக் கொள்வதற்குக் கடமைப்பட்டுள்ளேன்.

புலவர்களே! நீங்கள் எல்லாம் ஒற்றுமையாக ஒருமுகப்பட்டு திருவள்ளுவர்

தினம் என்று எந்த நாளைக் குறிப்பிடலாம் என்று சொல்லுங்கள்; அதற்குப் பிறகு அந்த நாளை அரசாங்கம் விடுமுறை தினமாக அனுஷ்டிப்பது பற்றிப் பரிசீலனை செய்யும் என்று சமாதானம் சொல்வதிலே கனம் முதலமைச்சர் அவர்கள் கைதேர்ந்தவர்கள் என்று நாம் உணர்ந்திருக்கிறோம்... புலவர்களுக்குள் ஒருமனப்பட்ட கருத்து வராவிட்டாலும் புலவர்கள் ஒன்றுகூடிய நாளையே திருவள்ளுவருடைய நாளாகக் குறிப்பிட்டு, அதை அரசாங்க விடுமுறை தினமாக அனுஷ்டிக்கலாம்; அல்லது அந்த வம்பே வேண்டாம் என்று இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிற இந்த நாளையே திருவள்ளுவருடைய நாள் இதுவே விடுமுறை நாளாக அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்று தீர்மானம் செய்யலாம்.

இன்னும் கொஞ்சம் சுவையாகச் சொல்லப் போனால் - திருவள்ளுவருடைய நாளாக, விடுமுறை தினமாக விடுவதற்கு ஏற்ற நாள் முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற நாள். அந்த நாளையே கூட திருவள்ளுவருடைய நாளாகக் கொண்டாடலாம்... எந்த நாளை அப்படி அனுஷ்டிப்பது என்பதில் கருத்து வேறுபாடு இருக்கிறதே என்று மயங்காமல், புலவர்களிடையே ஒற்றுமை இல்லையே என்று ஏங்காமல், அதன் காரணமாக இந்தப் பிரச்சினையைத் தட்டிக் கழிக்காமல், சமாதானம் சொல்லி இந்தத் தீர்மானத்தை ஏற்காமல் விடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்".

- இப்படி நானும், புலவர் கோவிந்தனும், இராம. அரங்கண்ணலும், நாவலர் நெடுஞ்செழியனும், எவ்வளவோ வலியுறுத்தியும்கூட திருவள்ளுவர் நாள் அனுஷ்டிக்கப்பட வேண்டும்; திருவள்ளுவர் படம் சட்டமன்றத்தில் வைக்கப் படவேண்டும் என்ற எங்கள் கருத்து அன்றைய ஆட்சியாளர்களால் உடனடியாக ஏற்கப்படவில்லை.

ஆனால் 22.3.1964 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் திருவள்ளுவர் படத்தை, அன்றைய குடியரசுத் தலைவர் திரு. ஜாகீர் உசேன் அவர்கள் திறந்துவைத்தார்கள் என்பது, எங்கள் வலியுறுத்தலுக்குத் தாமதமாகக் கிடைத்திட்ட வெற்றியாகும். 30.10.1969 அன்று எனது தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவைத் தொடர்ந்து, ஆண்டுதோறும் பொங்கல் விழாக் கொண்டாடப்படும் நாளுக்கு அடுத்த நாள். 'திருவள்ளுவர் நாள்' என்றும், திருவள்ளுவர் நாள் விடுமுறை நாள் என்றும். 3.11.1969 அன்று அரசின் ஆணையாக வெளியிடப்பட்டது. (அரசாணை எண்: 2723, பொதுத்துறை. நாள்: 03.11.969)

மயிலாப்பூரில் திருவள்ளுவருக்குச் சிலை

சென்னை மயிலாப்பூர் பகுதியில் திருவள்ளுவருக்குச் சிலை வைத்திட வேண்டுமென்று கழகம் நீண்ட நாளாகக் கேட்டுக்கொண்டிருந்தது. ஆனால், அப்போதைய ஆட்சியாளர்களோ, இந்தக் கோரிக்கையில் பொதிந்திருந்த நியாய உணர்வினைப் பொருட்படுத்த மறுத்தனர்; புறக்கணிக்கவும் செய்தனர். தி.மு.கழகத்தின் பொறுப்பில் சென்னை மாநகராட்சி நிருவாகம் வந்ததற்குப் பிறகு, செந்நாப்போதாரின் சிலை அமைத்திடும் சீரிய பணியினை மேற்கொண்டது.

வாழ்வுக்கு வழிவகுத்த தமிழ்த் தலைவன் - உலகப் பெரும்புலவன் - மக்களாட்சித் தத்துவம் உரைத்திட்ட மாமேதை 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று பேசிய பகுத்தறிவுப் பகலவன் - 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றியான்!' என்று ஆண்டவனுக்கே அறைகூவல் விடுத்திட்ட புரட்சிப் பொறி, திருவள்ளுவருக்குச் சென்னை மயிலாப்பூரில் 2.6.1966 அன்று சிலை ஒன்று திறந்துவைக்கப்பட்டது.

தத்துவ வித்தகராம் வள்ளுவருடைய சிலையினைத் தத்துவ ஆராய்ச்சியில் தாகங்கொண்ட அப்போதைய இந்தியக்



குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களே திறந்துவைத்ததும் குறிப்பிடத்தக்கது ஆகும். அந்த விழாவிற்கு அப்போதைய முதல்வர் திரு.பக்தவத்சலனாரே தலைமை தாங்கிடவும், சென்னை மாநகராட்சித் தி.மு.க.வினர் பெருந்தன்மையோடு ஏற்பாடு செய்திருந்தனர்.

நானும், எதிர்க்கட்சித் தலைவர் நாவலரும் மற்றும் கழக முன்னணியினரும் அவ்விழாவிலே பார்வையாளராகக் கலந்துகொண்டோம். தமிழராகப் பிறந்திட்ட ஒவ்வொருவரும் பெருமிதம் அடைந்திடத்தக்க வகையிலே அந்தச் சிலை திறப்பு விழா பெருஞ்சிறப்போடு நடந்து என்ன பயன்? தமிழ்நாட்டார் இதயம் எல்லாம் குமுறிக் கொந்தளித்திடும் வண்ணமே, தன்னுடைய வழக்கமான அலட்சியப் போக்கினைக் காட்டிற்று மத்திய அரசின் செய்திப் படத்துறை.

சிங்காரச் சென்னை மாநகரில் திருவள்ளுவரின் சிலையைத் திறப்பதைத்தான் தலையாய நிகழ்ச்சியாக மேற்கொண்டு தில்லியிலிருந்து புறப்பட்டு வந்திருந்தார் குடியரசுத் தலைவர் இராதாகிருஷ்ணன். ஆனால், மத்திய அரசு செய்திப் படத்துறையினரோ, அவர் கலந்துகொண்ட மற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் படம் எடுத்துக் காட்டினர். வள்ளுவர் சிலைத் திறப்பு விழாவை மட்டும் வேண்டுமென்றே படம் பிடிக்காமல் விட்டுவிட்டனர். அவர்களுடைய அந்த ஓரவஞ்சனைச் செயலுக்கு ஒரே காரணம்தான் அப்போது எனக்குப் புலப்பட்டது.

திருவள்ளுவர் சிலைத் திறப்பு நிகழ்ச்சியினைச் செய்திப் படத்திலே சேர்த்துவிட்டால், மற்ற மாநிலக்காரர்களும் அதனைப் பார்ப்பார்கள். பிறகு, எந்தச் சமயத்தையும் சார்ந்திடாமல் எந்தச் சாதியையும் ஏற்றிடாமல், பொதுமை நோக்கோடு புதுமைக் கருத்துக் கதிர்களைப் பரப்பிய வள்ளுவரைப் பற்றி- அவருக்குச் சிலை எழுப்பியதன் மூலம் தன் திறமையையும், பெருந்தன்மையையும் வெளிப்படுத்திய சென்னைமாநகராட்சியைப் பற்றி அதன் நிருவாகத்தினைக் கைப்பற்றி விட்ட தி.மு.கழகத்தின் வளர்ச்சியைப் பற்றி இந்தியா முழுவதுமே அறிந்துகொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டு விடுமே! அதற்கு இடந்தரலாமா? என்கிற பொல்லாங்கான

நினைப்பினால்தான் பொலிவோடு நிகழ்ந்திட்ட அந்தத் தமிழகச் சிறப்பு நிகழ்ச்சியினைச் செய்திப் படத்துறையினர் புறக்கணித்திடத் துணிந்திருக்க வேண்டும்.

இல்லையென்றால் தன்னுடைய அலட்சியப் போக்கால் வேறு என்ன காரணத்தைத்தான் இயம்பிட இயலும்? இதைப்பற்றி முதல்வர் பக்தவத்சலனார் மத்திய அரசிடம் தமிழ் மக்களின் இதயக் குமுறலை வெளிப்படுத்திட வேண்டுமென்று 'முரசொலி'யில் நான் அப்போது தலையங்கமே தீட்டினேன். ஆனால், அன்றைய மத்திய செய்திப் படத்துறையினர் திருந்திய அறிகுறியே தென்படவில்லை. தமிழக நிகழ்ச்சிகளை அலட்சியப்படுத்துவதைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தனர். அந்த அவமதிப்பினைத் தாங்கிட முடியாததால்தான், பின்னால் தமிழக ஆட்சிப் பொறுப்பைத் தி.மு.கழகம் ஏற்றுக்கொண்ட போது, மாநிலத்திற்கென்று தனியாகச் செய்திப் படப்பிரிவு ஒன்றைத் தோற்றுவித்துக் கொள்ளவேண்டிய கட்டாய நிலை உருவெடுத்தது.

1967இல் பேருந்துகளில் குறளும், வள்ளுவர் படமும்

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967ஆம் ஆண்டில் ஆட்சியை உருவாக்கியபொழுது என்னைப் பொதுப்பணி மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்கப் பணித்தார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பேருந்துகளிலெல்லாம் திருவள்ளுவரின் படத்தை அமைத்து, திருக்குறளையும் பொறிக்கச் செய்தோம்.

அப்போது சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையிலிருந்த விநாயகம் அவர்கள் அண்ணாவைப் பார்த்து, 'யாகாவா ராயினும் நாகாக்க' என்று பேருந்துகளில் திருக்குறள் எழுதியிருக்கிறீர்களே யாருக்காக அந்தக் குறள் எழுதப்பட்டது? டிரைவருக்காகவா? கண்டக்டருக்காகவா?" என்று கேட்டார்.

உடனே அண்ணா அவர்கள், "யார் யாருக்கு நாக்கு இருக்கிறதோ அவர்களுக்கெல்லாம்" என்று நவின்றார். அப்படிப்பட்ட அருமையான குறட்பாக்கள் திருக்குறளில் இருக்கின்றன.

1967இல் பொதுப்பணித்துறை சுற்றுலா மாளிகைகளில் குறளும் வள்ளுவர் படமும்

அதுமட்டுமல்ல; தமிழ்நாட்டில் பொதுப்பணித்துறையைச் சேர்ந்த எல்லாச் சுற்றுலா மாளிகைகளிலும் அரசாங்கச் சுற்றுலா மாளிகை நகராட்சிப் பயணிகள் விடுதி போன்றவைகளில் எல்லாம் திருவள்ளுவரின் திருவுருவப் படத்தை வைக்கவேண்டுமென்றும், அதில் 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்ற குறள் எழுதி வைக்கப்பட வேண்டுமென்றும் முடிவெடுத்துச் செய்யப்பட்டது.

1967 முதல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் திருக்குறள்

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் கழக அமைச்சரவை 6.3.1967 அன்று பதவியேற்றதற்குப் பின்னர்தான். 24.11.1967 முதல் சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. ஆதித்தனார் அவர்களால் பேரவை நடக்கும் நாட்களில் தினமும் திருக்குறள் ஒன்றினைச் சொல்லி நிகழ்ச்சிகளைத் தொடங்கும் பழக்கம் அறிமுகமாயிற்று. அன்று தொடங்கி இன்றுவரை, இனி என்றென்றைக்கும், கழக அரசு தோற்றுவித்த இந்த மரபு தொடர்ந்து வரும் என்பது சுகமளித்திடும் செய்தியல்லவா!

1968இல் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு

இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு இணையில்லாச்

சிறப்போடு, எடுப்போடு, எழிலோடு சங்க காலமே தமிழகத்தில் தழைக்கத் தொடங்கிவிட்டது என்று பொதுமக்கள் அனைவரும் பூரித்திடும் வகையில் 1968 ஜனவரி முதல் வாரத்தில் பொலிவோடு நிகழ்ந்தேறியது.

மாநாட்டையொட்டி 2.1.1968 அன்று, சென்னை கடற்கரையில் திருவள்ளுவர் சிலையை முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள், கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் திறந்துவைத்தார். திருவள்ளுவரின் இந்தச் சிலையை வழங்கியவர் என்னரும் நண்பர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் ஆவார்.

1968இல் பல்கலைக்கழகங்களில் திருக்குறள் ஆராய்ச்சி

அறிஞர் அண்ணா முன்னின்று சென்னையில் நடத்திய உலகத் தமிழ் மாநாட்டின்போது, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு மூன்று இலட்சமும், மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு மூன்று இலட்சமும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு மூன்று இலட்சமுமாக மொத்தம் ஒன்பது இலட்சம் ரூபாய் திருக்குறள் ஆராய்ச்சிக்காக அளிக்க முடிவு செய்து, அவற்றைத் துணைவேந்தர்களிடம் ஒப்படைக்கும் விழா கடற்கரையில் நடைபெற்று, குடியரசுத் தலைவரும் அந்த விழாவில் கலந்துகொண்டார். துணைவேந்தர்கள், தமிழ்ப் புலவர்கள் ஆகியோரின் அக்கறையோடும், ஆர்வத்தோடும், உறுதுணையோடும் ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன.

அமெரிக்க 'யேல்' பல்கலைக்கழகத்தில் அண்ணா வழங்கிய 'குறள்'

அமெரிக்க அரசின் அழைப்பினையும், தங்கள் பல்கலைக்கழகத்தில் ஐந்து நாட்களுக்குக் குறையாமல் தங்கள் மாணவர்களோடு கலந்துரையாடிட வேண்டும் என்ற யேல் பல்கலைக்கழகத்தினர் வேண்டுகோளையும் ஏற்று, 15.4.1968 அன்று சென்னையிலிருந்து அமெரிக்கா `சென்ற அண்ணா அவர்கள், அங்கு பல்வேறு பகுதிகளைப் பார்த்துவிட்டு மகிழ்ந்ததுடன், யேல் பல்கலைக்கழகத்திலும் திட்டமிட்டபடி ஐந்து நாட்கள் தங்கியிருந்தார்.

திணறடிக்கும் மாணவர்களின் கேள்விக் கணைகளையெல்லாம் சிரமப்படாமல்



முனை முறிந்திடச் செய்து விடையளித்திட்ட அவர், அவர்களுக்குத் திருக்குறள் வகுப்பும் நடத்தி இருக்கிறார். எத்தனையோ தமிழர் தலைவர்கள் அதற்கு முன் அமெரிக்கா சென்றிருக்கிறார்கள். ஆனால், எவருக்குமே திருக்குறளைப் பரப்பிடும் எண்ணம் எழுந்ததில்லை. அண்ணாவோ அமெரிக்க மாணவர்களுக்குத் திருக்குறள் வகுப்பு நடத்தியதன் மூலம் ஒரு புதிய வரலாறு படைத்தார்.

காவல்துறைப் பதக்கத்தில் வள்ளுவரின் திருவுருவம்

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு, அவரது பிறந்த நாளில், காவல்துறையைச் சேர்ந்த திறமையானவர்களுக்கு முதல்வர் பதக்கம் வழங்க வேண்டும்; சிறந்த சேவைக்காகப் பொற்கிழியும், நற்சான்றிதழும் தரவேண்டும் என்று முடிவெடுத்து அப்படிப்பட்ட பதக்கத்தில் யாருடைய திருவுருவம் பொறிக்கப்படவேண்டும் என்ற நிலை ஏற்பட்டபோது திருவள்ளுவரின் திருவுருவம்தான் பொறிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்தேன்; ஏனென்றால், 'கடிதோச்சி மெல்ல எறிக!' என்பதை மறவாமல் இருப்பதற்காக.

திருவள்ளுவராண்டு தொடக்கம்

1921ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில், மறைமலை அடிகளார் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், திருவள்ளுவர் பிறப்பு கி.மு.31 என்று முடிவு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் திருவள்ளுவர் ஆண்டு' கணக்கிடப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைக் கருத்தில் கொண்டு, நான் முதலமைச்சராக இருந்தபொழுது 1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசின் நாட்குறிப்பிலும், 1972ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும், திருவள்ளுவர் ஆண்டு தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.



சிகாகோ பல்கலைக்கழக அரங்கில் திருவள்ளுவர் சிந்தனை

1971 நவம்பர் மாதம் அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டிருந்த நான் 23.11.1971 அன்று மாலை சிகாகோ பல்கலைக்கழக அரசியல் அரங்கில் உரையாற்றியபோது, "அரசியலுக்கென ஒரு தனி அதிகாரமே வகுத்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அரசியல் நெறிகண்ட வள்ளுவரின் திருக்குறள் மணம் கமழும் நாடு நான் பிறந்த தமிழ்நாடு" என்று குறிப்பிட்டேன்.

1973இல் திருமயிலை திருவள்ளுவர் நினைவாலயம் திருப்பணி

திருக்குறளையும் திருவள்ளுவரையும் மக்கள் உள்ளத்தில் பதிய வைக்கவும், குறளின் பெருமையை உலகமெங்கும் பரப்பவும் கழக அரசு பல்வேறு பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

அந்த வகையில், சென்னை திருமயிலை திருவள்ளுவர் நினைவாலயம் திருப்பணிக்கான அடிக்கல் 27.4.1973 அன்று என்னால் நாட்டப்பெற்று பணிகள் நிறைவு செய்யப்பட்டன.



1973இல் வள்ளுவர் கோட்டத்திற்கான கருத்து விதை

திருமயிலை திருவள்ளுவர் நினைவாலயத் திருப்பணிக்கு அடிக்கல் நாட்டியபோது. என் நெஞ்சத்தில் நீண்டகாலமாக நிறைந்திருந்த வள்ளுவர் கோட்டம் அமைத்திட வேண்டும் எனும் கருத்தினை, தமிழ் மக்களுக்குப் பின்வருமாறு விளக்கி உரைத்தேன்:

"சிலப்பதிகாரக் கலைக்கூடம் அமைக்க வேண்டும் என்று விரும்பி அதற்கான சிற்ப வேலைகள் மாமல்லபுரத்தில் நடந்து கொண்டிருந்தபோது, திங்களுக்கு இருமுறையாவது நான் அங்குச் செல்வதுண்டு. அங்கே வேலை செய்துகொண்டிருந்த சிற்பக் கல்லூரி மாணவர்கள், "இந்த வேலை முடிந்த பிறகு வேறு வேலை எங்களுக்குத் தரவேண்டும்" என்று கேட்டார்கள். "என்ன வேலை தருவது?" என்று ஏக்கத்தோடுதான் நான் திரும்பினேன். ''பழுதுபட்டிருக்கின்ற ஆலயங்களையெல்லாம் புதுப்பிக்க எங்களை அனுப்புங்கள்" என்றார்கள்.

பூம்புகாரில் சிலப்பதிகாரக் கலைக்கூடம் மட்டுமல்ல; மேலும் எட்டுக் கட்டடங்களுக்கான அடிக்கற்களும் நாட்டப்பட்டு, அவையனைத்தும் கலைமணம் கமழத்தக்கவையாகத் திகழ்கின்றன.

மாமல்லபுரத்தில் இருக்கின்ற மாணவர்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவும் திருவள்ளுவருக்கு அழியாத நினைவுச் சின்னம் அமைத்திடவும் தமிழகத்தின் கலைவளம் கண்டு உலகத்தார் மகிழ்ந்திடவும் சுற்றுலாத்துறை வளர்ந்து அதே நேரத்தில் பொருளாதாரமும் வளர வேண்டும் என்ற இவ்வளவு கண்ணோட்டத்துடனும் திருவள்ளுவர் நினைவாலயம் அமைகிறது.

இந்த நினைவாலயத்தைத் திருவாரூர் தேர் போல அமைக்க இருக்கிறோம். இந்த முடிவை பலமுறை குழுவினைக் கூட்டி எடுத்தோம் - ஏனென்றால், இது திருவள்ளுவருக்கான நற்பணி; யாரும் குறை காணக் கூடாது என்பதற்காகத்தான்.

தேர் போல அமையும் நினைவாலயம் இந்த கருங்கற்களினாலேயே அமைக்கப்பட இருக்கிறது. 1330 குறட்பாக்களும் ஒவ்வொரு குறளையும் விளக்கும் சிற்பங்களும் வைக்க வேண்டுமென்று ஆசை! இதற்கெல்லாம் பல இலட்சம் செலவாகும்.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையில் வள்ளுவர் கோட்டம் காணிக்கை

1974 ஜனவரித் திங்கள் பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டை எழுப்புவதற்கான அடிக்கல் நாட்டுவிழா நடத்தப்பெற்று, 1974 ஆகஸ்ட் 18ஆம் நாளன்று அந்த எழுச்சிமிக்கக் கோட்டையின் திறப்புவிழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அந்த விழாவில் நாவலர் நெடுஞ் செழியன், சிலம்புச் செல்வர் ம.பொ.சி., பெரியவர் மணலி கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர் க.சுப்பு உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

அந்த விழாவில் நான், "அண்ணன் இல்லையென்றாலும் இரத்தத்தோடு இரத்தமாக தசையோடு தசையாக எங்கள் கண்ணின் கருமணியாக இதயத்தின் துடிப்பாக இருக்கிறார். அண்ணனே! கடற்கரையில் நீடுதுயில் கொண்டிருக்கின்ற அண்ணனே! இதோ இந்தக் கட்டபொம்மன் கோட்டை உனக்குக் காணிக்கை! காவிரிப் பூம்புகார் கலைக்கூடம் உனக்குக் காணிக்கை! நாளை உருவாக இருக்கும் வள்ளுவர் கோட்டம் உனக்குக் காணிக்கை! இப்படிப்பட்ட காணிக்கைகளைத் தொடர்ந்து தந்துகொண்டே இருப்போம்!" என்று நிறைவுரை நிகழ்த்தினேன்.

1974இல் வள்ளுவர் கோட்டத்திற்கு அடிக்கல்

'ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கின்ற உலகத் தமிழ் மறையாம்' அந்தக் குறளோவியத்தின் கோட்டம் எந்த அமைப்பில் உருவாக வேண்டும்; எவ்வெவ்வகையில் அது பயன்தரத் தக்கதாக அமையவேண்டும் என்பதையெல்லாம் சிந்தித்துச் சிந்தித்து உலகோர் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் கலை நுணுக்கத்தோடு வள்ளுவர் கோட்டம் வடிவமைக்கப்பட்டது.

சென்னை நுங்கம்பாக்கத்தில் 5 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு 18.09.1974 அன்று வள்ளுவர் கோட்டத்திற்கு நான் அடிக்கல் நாட்டினேன். கட்டடப் பணிகள் நடந்துகொண்டிருக்கும்பொழுது அலுவல் பணிகளுக்கிடையில் நான் இதற்கென நேரம் ஒதுக்கி இடையறாது மேற்பார்வையிட்டு கலந்துரையாடி கருத்துக்களைப் பரிமாறி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வள்ளுவர் கோட்டம் வளரத் தொடங்கியது.

திராவிடக் கட்டடக் கலாச்சாரத்தை அடிப்படையாக வைத்து "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்ற குறளுடன் தோரண வாயில் அழகிய வடிவில் அமைக்கப்பட்டது. இங்கிருந்து தலைவாயிலை அடையும் வரை உள்ள நடைபாதைக்கு இருபுறமும் பச்சைப் போர்வை விரித்தது போல் எழிலார்ந்த புல்வெளித் தோட்டம் அமைக்கப்பட்டது.

அறம், பொருள், இன்பம் என்ற திருக்குறளின் 1330 பாக்களும் திறந்த புத்தக வடிவில் கலைவண்ண நயத்துடன் சலவைக் கற்களில் பொறிக்கப்பட்டன திருவள்ளுவரைப் போற்றும் "திருவள்ளுவர் மாலை" பாக்களும் பொறிக்கப்பட்டன.

கோட்டத்தின் மேல்தளமான வேயா மாடத்தின் வடக்குப்புறத்தில் சிற்பத் தேரின் கருவறையில், திருக்குறளின் முப்பாலைக் குறிக்கும் வகையில், மூன்று விரல்களை உயர்த்திய நிலையில் அழகிய பீடத்தில் ஒளிமிக்க கருங்கல்லினால் ஆகிய திருவள்ளுவர் சிலை உயிரோட்ட அழகோடு அமைக்கப்பட்டது.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற அருங்குறளை முகப்பில் கொண்டு. சுமார் 4,000 பேர் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் காணத்தக்க வகையில், தூண்களே இல்லாமல் அரங்க மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. இக்கலை மண்டபம்

ஆசியாக் கண்டத்திலுள்ள பெரிய அரங்குகளில் ஒன்றாகும்.


சங்கப்புலவர் அதங்கோட்டாசான், தொல்காப்பியர் ஆகியோரது ஓவியங்கள் அரங்கமேடையின் இருபுறமும், நடுவில் திருவள்ளுவரின் வண்ணமிகு ஓவியமும் இடம்பெறச் செய்யப்பட்டது.

திருவாரூர்த் தேரையே சென்னை மாநகருக்குக் கொண்டுவந்தது போல், வள்ளுவர் கோட்டத்தின் மணிமுடியாய்க் காண்போரைக் கவரும் வண்ணம் உயர்ந்து நிற்கும் சிற்பத் தேர். இவ்வழகிய தேரை இரண்டு யானைச் சிலைகள் இழுப்பது போல், சிற்பக் கலை நுணுக்கத்தோடு வடிவமைக்கப்பட்டது.

தேர்ச்சக்கரத்திற்கும், திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பளிங்கு பீடத்திற்கும் இடையில் உள்ள தேரின் மத்திய பாகத்தில் 133 குறட்பாக்களுக்குப் பொருள் விளக்கம் அளிக்கும் அழகிய சிற்பங்கள் உயிரோவியங்களாய்ச் செதுக்கப்பட்டன. வள்ளுவர் கோட்ட உருவாக்கப் பணிகள் அனைத்தும் 1976 ஜனவரித் திங்களில் முடிக்கப்பட்டன.

1976ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வள்ளுவர் கோட்டமும் வள்ளுவருக்குச் சிலையும்

1976ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் இந்திய நாட்டு வரலாற்றிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டு வரலாற்றிலும் மிக முக்கியமான இடத்தைப் பெற்ற காலகட்டங்களில் ஒன்றாகும். அந்தத் திங்கள் கடைசி நாள் மாலையில்தான் கழக ஆட்சி கலைக்கப்பட்டது என்ற செய்தியை எனது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த செய்தி நிறுவனத்தின் இயந்திரம் ஆங்கிலத் தட்டச்சு எழுத்துக்களின் மூலம் வழங்கியது.



ஜனநாயகத்தின் மீது கொண்டிருக்கும் பற்றின் காரணமாக நெருக்கடி நிலையை எதிர்த்த லோக்நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களுடன் அணி வகுத்தோம் என்பதற்காக நெருக்கடி கால மத்திய அரசால் அளிக்கப்பட்ட தண்டனை அது.

கன்னியாகுமரி முனையில் விவேகானந்தர் பாறைக்கு எதிரே உள்ள மற்றொரு பாறையில் 75 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை ஒன்றினை 10 இலட்ச ரூபாய் செலவில் வைப்பதெனக் கழக அரசு 31.12.1975 அன்று அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்த முடிவு. 1976 ஜனவரி முதல் நாள் ஏடுகள் மூலம் அறிவிக்கப்பட்டது.

எனது உள்ளத்து உன்னதக் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்த வள்ளுவர் கோட்டத்தின் வேலைகள் அனைத்தும் முற்றுப்பெற்று. அதன் திறப்புவிழாவுக்கான தேதியினைக் குறிக்கவும், விழா எத்தகைய சிறப்புடன் தமிழ்த் திருவிழாவாக நடைபெற வேண்டுமென்ற திட்டங்களைத் தீட்டவும் ஜனவரி 8ஆம் நாளன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. பிப்ரவரித் திங்கள் 22, 23 ஆகிய நாட்களில் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவைக் கழக அரசு முன்னின்று நடத்துவதென நாள் குறிக்கப்பட்டது.

திருக்குறள் சுவடி பொறித்த வண்ணக் கொடியினை ஏந்திட, திருக்குறளில் உள்ள 1330 பாக்களை விளக்கும் வகையில் 1330 மாணவர்கள். 1330 மாணவிகள், 1330 ஆசிரியர்கள், 1330 ஆசிரியைகள், அந்த ஊர்வலத்தில் பங்கு கொள்வார்கள்.

திருக்குறளின் முப்பாலை எடுத்துக்காட்டும் வகையில், தஞ்சை முத்துப் பல்லக்குகள் மூன்றில் திருக்குறள் சுவடி வைத்து ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படும். ஊர்வலத்தின் முகப்பில் 13 யானைகளும் 133 குறள் அதிகாரங்களை விளக்கும் வகையில் 133 குதிரைகளில் வீரர்களும் அமர்ந்து செல்வார்கள்.

அலங்கார வண்டிகளில் திருக்குறள் சிற்பங்கள் மட்டுமின்றி, தமிழ்நாட்டுக் கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், கிராமிய நடனங்கள், பொய்க்கால் குதிரை, நாதஸ்வரக் கச்சேரிகள் போன்றவை இடம்பெறும் என்றும் அந்த ஆலோசனைக் கூட்டத்தில் முடிவெடுத்து அறிவிக்கப்பட்டது.

ஆனால், வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவினைக் கழக அரசு நிறைவேற்றுவதற்கு முன்பு, ஜனவரி 31 மாலையிலேயே கலைக்கப்பட்டு விட்டது. அரசியல் சூழ்நிலையின் காரணமாக எஞ்சியிருந்த அதன் அமைப்புப் பணிகளும் அதன் திறப்பு விழா நிகழ்ச்சியும் அறவே நின்று விடுமோ என்று தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் கவலைப்பட்டன.

ஆனால், 1976ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15ஆம் நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் வள்ளுவர் கோட்டத்தைத் திறந்து வைக்கிறார் என்று செய்தி வந்தது.

16.1.1976 அன்று தில்லி தமிழ்நாடு இல்லத்தில் திருவள்ளுவர் சிலை

புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் கழக அரசின் சார்பில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு, அந்தச் சிலை 16.1.1976 அன்று திறந்து வைக்கப்பட்டது.


கோட்டம் திறக்கப்படுகிறது; குறளோவியம் தீட்டப்படுகிறது

அமைச்சர்களாக இருந்து அரும்பணியாற்றியோர், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்து நாட்டுநலம் போற்றியோர், கொட்டியும் ஆம்பலும் போல ஒட்டி உறவாடி கொள்கை குன்றமேறிய கழக முன்னணியோர் சுமார் 500 பேர் மிசா கொடுமைக்காளாகி கொட்டடியில் அடைபட்டிருந்த நேரம். அந்த நேரத்தில்தான் வள்ளுவர் கோட்டம் திறந்துவைக்கப்பட்டது.

பேசுவதற்கும் எழுதுவதற்கும் கூட நெருக்கடிகாலத் தணிக்கைக் கட்டுப்பாடு மிகத் தீவிரமாக இருந்த அந்த நேரத்தில், "கோட்டம் திறக்கப்படுகிறது; குறளோவியம் தீட்டப்படுகிறது" என்ற தலைப்பில் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவன்று, அதாவது 15.4.1976 அன்று நான் எழுதி 'முரசொலி'யில் வெளிவந்த கடிதம், இதோ

"உடன்பிறப்பே,
இன்று, சென்னையில் ஒரு விழா!
திருவிழா!
திருமிகு விழா!
திருவள்ளுவருக்கு எடுக்கும் விழா!

கல்லார்க்கும் கற்றவர்க்கும்
களிப்பருளுங் களிப்பாய் - காணார்க்கும்
கண்டவர்க்கும் கண்ணளிக்கும்
கண்ணாய் - வல்லார்க்கும் மாட்டார்க்கும்
வரமளிக்கும் வரமாய் - மதியார்க்கும்
மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியாய்-
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற



நடுவாய் - எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற ஏற்றமிகு குறளுக்கு ஓவியம் தீட்டப்படுகிறது. அந்தக் குறளோவியக் கோட்டம் திறக்கப்படுகிறது.

மாசறு பொன்னாக, வலம்புரி முத்தாக, காசறு விரையாக, கரும்பாகத் தேனாகத் திகழ்கின்ற திருக்குறளுக்கு விழா என்றால், உலகப்பந்தின் மீது எந்த மூலையில் இருக்கிற தமிழனும் நெஞ்சு புடைத்து நிற்பான் - மகிழ்வான் - தகதகவெனக் குதிப்பான் - தண்மதிகண்ட ஆம்பலாகும் அவன் உள்ளம் - தாமரை, கதிர்கண்டது போன்ற துள்ளல் எழும் என்பதில் ஐயமுண்டோ?

ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கின்ற உலகத்தமிழ் மறைக்கன்றோ பெருமைசேர் விழா, தாயகத்து மண்ணில் நிகழ்கின்றது.

இந்த விழா நாள் என்று வரும்? இன்றே வராதா? என்று எத்தனை நாள் காத்திருந்தோம் நாம்! அந்த நாள்தானே இந்த நாள் !

"கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்" என்று இடைக்காடர் கூற, "அல்ல! அல்ல! அல்ல! அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்" என்று ஔவையார் திருத்தம் கூறியதாகப் புகழப்படும் பொய்யாமொழிக்கல்லவா இன்று விழா! புத்தொளி பாய்ச்சிய புலவனுக்கல்லவா விழா!

கோட்டம் திறக்கப்படுகிறது ! குறளோவியம் தீட்டப்படுகிறது!

"தமிழ் மரபு, தமிழ் இலக்கியம், தமிழ் வரலாறு, தமிழ் மொழி ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டும். தரணியெங்கும் பரவிட வேண்டும். மங்காமல் மறையாமல் போற்றிப் புகழப்பட வேண்டும். அந்த மறுமலர்ச்சி தமிழுக்கு ஏற்படத்தான் தி.மு.கழகம் ஆட்சிபீடம் ஏறிட விரும்புகிறது" என 1967 விருகம்பாக்கம் மாநாட்டில் அறிஞர் அண்ணா முழங்கியதை அவர் மறைவுக்குப் பிறகும் மறந்தோமில்லை என்பதற்குச் சான்று பகரும் வகையிலேதான், தில்லையாடியில் வள்ளியம்மை நகர் உருவாக்கினோம்.

புதிய பூம்புகார், வாழ்ந்த தமிழகத்தின் வரலாற்றுச் சின்னமாக எழுந்து நிற்கிறது. அன்னியரை எதிர்த்த அடலேறு கட்டபொம்மனுக்கு நினைவுக் கோட்டை கம்பீரமாகக் காட்சி தருகிறது.

காரைக்குடியில் தமிழ்த் தாய்க்கு ஓர் ஆலயம்.

கலனாகிக் கிடந்த மயிலை வள்ளுவர் கோயிலுக்குப் புதிய திருப்பணி நுங்கம்பாக்கத்தில் உலகோர் கவனத்தைத் திருப்பும் வண்ணம் ஒப்பற்ற வள்ளுவர் கோட்டம்.

உடன்பிறப்பே. இவைகளையெல்லாம் நினைக்கிறேன்; நெஞ்சு இனிக்கிறது. திரும்பிப் பார்க்கிறேன்; தேன் பாய்கிறது, இதயமெனும் கழனியிலே! உயிர் தமிழுக்கு எனும் உறுதிப் பயிர் விளைகிறது! களைகளுக்கு இங்கு இடமில்லை என்ற திறமும், தெம்பும் பிறக்கிறது!

ஆகா! அதோ! அதோ! வள்ளுவர் கோட்டத்துத் தேரின் உச்சியிலே நானும் நாவலரும் இணைந்து கலசத்தை ஏற்றிவைக்கும் உணர்ச்சிமிகு காட்சி! மனத்திரையில் நிலைத்து நிற்கிறது.

கோட்டம் திறந்திட வருகிறவர் குடியரசுத் தலைவர்! நமது அன்புக்குரியவர்! மேன்மை தங்கிய பக்ருதீன் அலி அகமது அவர்கள். வள்ளுவர் கோட்டத்தை அவரது திருக்கரங்களால் திறக்கிறார் என்பதில் எனக்குப் பெருமகிழ்ச்சி.

குடியரசுத் தலைவர் தேர்தலில் அவர் வேட்பாளராக நின்றபோது. என்னைச் சந்திக்க கோபாலபுரம் இல்லத்துக்கு வந்தார். அந்தப் பெருமகனாரின் பாதம்பட்ட என் வீட்டுப் படிக்கட்டுகள். மிக்க பாக்கியம்

உலகில் எந்த நாட்டில் இருந்து வருகின்றவராயினும் இந்தக் கோட்டத்திற்கு வந்து பயன் பெற்றுத் திரும்பிடவேண்டும். குறள் பரவிடும் எளிமையான வழிகளைக் கற்றுத் தந்திட வேண்டும். எல்லாக் குறட்பாக்களும் கல்லில் செதுக்கப்பட வேண்டும். தேரில் வள்ளுவர் சிலை விளங்கிட வேண்டும். கலையரங்கில் தொல்காப்பியரும்; அதங்கோட்டாசானும் சிலை வடிவில் அமைக்கப்பட வேண்டும். இத்தனைக் கருத்துக்களையும் எடுத்துரைத்தோம்.

செய்தவை என்று அன்றைக்கு நான் மகிழ்ந்தேன். அந்த மகிழ்ச்சியை விடக் கோடானுகோடி பங்கு அதிக மகிழ்ச்சியை இன்று நான் அடைகிறேன்; அவர் கோட்டம் திறக்க வருவது கண்டு!

திறப்பு விழா நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குகிறவர், தமிழ் மக்களிடத்தில் ஐந்தாண்டு காலம் இரண்டறக் கலந்து பழகிடும் வாய்ப்பினைப் பெற்ற தமிழக ஆளுநர் திரு.கே.கே.ஷா அவர்களாவார்கள்.

ஆளுநர் அவர்கள் மனந்திறந்து பேசக்கூடிய பண்பாளர் ஆவார். தன்னுடைய பெயருக்கு முன்னால் உள்ள எழுத்துக்களான "கே.கே." என்பதைக் கூட "கலைஞர் கருணாநிதி ஷா" என்று இன்பம் பொங்கிடக் குறிப்பிட்டுத் தனது பாச உணர்வை என்மீது பல நேரங்களில் மழையாகப் பொழிந்தவர்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்"

என்ற குறள் நெறிக்கொப்ப, ஆளுநர் அவர்கள் தலைமை ஏற்பதும்; மேன்மைமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் திறப்புவிழா நடத்துவதும் சாலப் பொருத்தமுடையதாகும்.

என் இனிய உடன்பிறப்பே!

இன்று 1976ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15ஆம் நாள் வியாழக்கிழமை! இந்த நாளில் சென்னை மாநகரில் வள்ளுவர் கோட்டம் திறக்கப்படுகிறது. இது செய்தியா? வரலாறா? என்று கேட்டால் அதற்குத் தெளிவாகக் கிடைக்கக்கூடிய பதில் "வரலாற்றுச் செய்தி" என்பதுதான்!

இந்தக் கோட்டம் அமைக்க வேண்டுமென்று திட்டமிட்டு. அதற்கான தொடக்க விழா எப்போது நடைபெற்றது என்பது உனக்கு நினைவிருக்கிறதா? அதுவும் வெறும் செய்தியல்ல: வரலாற்றுச் செய்திதான் என்பதால் உன் குறிப்புக்காகவும், எதிர்கால வரலாற்றுக் குறிப்புக்காகவும் இப்போது அதை நினைவு படுத்துகிறேன்.

அறிஞர் அண்ணா பிறந்த செப்டம்பர் 15ஆம் நாளையொட்டிய அண்ணா பிறந்த நாள் வாரத்தில், அதாவது 1974ஆம் ஆண்டு செப்டம்பர் 18ஆம் நாள் சென்னை நுங்கம்பாக்கத்தில் மொழிநூல் அறிஞர் தேவநேயப் பாவாணரும், முத்தமிழ்க் காவலர் விசுவநாதமும் வீற்றிருந்த விழா மேடையில் பொதுப்பணி அமைச்சர் ப.உ. சண்முகம் வரவேற்புரையாற்றிட, கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தலைமையில், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் முன்னிலையில், அன்று தமிழக முதலமைச்சர் பொறுப்பில் இருந்த நான். வள்ளுவர் கோட்டத்துக்கான பணிகளைத் தொடங்கி அடிக்கல் நாட்டு விழாவை நிறைவேற்றி வைத்தேன்.

நயமான தமிழ் எடுத்து நாவலரும்; பேரருவியின் பெருக்கெனத் தமிழ் முழக்கிப்

பேராசிரியரும்; தமிழ் நிலத்தில் ஆழ உழுது அரும் பொருட் கருவூலங்களை வழங்குகின்ற பாவாணரும்; சிந்துபாடும் சிற்றாறு என முத்தமிழ்க் காவலரும்; அவர்களோடு இணைந்த காரணத்தால் நானும் அன்று ஆற்றிய உரைகள்! நடைபெற்ற தொடக்கவிழா நிகழ்ச்சி! கல்லில் உளிகொண்டு செதுக்கிச் சிற்ப வேலையைத் தொடங்கிய காட்சி!

அதேசமயம் நூற்றுக்கணக்கான சிற்றுளிகள் கற்களில் பரதமாடி எழுப்பிய சதங்கை நிகர்த்த சங்கீத ஒலி! அடடா! கரும்புத் தூண் நட்டு, கற்கண்டுக் கூறை வேய்ந்து. கனிச்சாறு கொண்டு தரைமெழுகி, சர்க்கரையால் கோலமிட்டாற் போன்றிருந்தது அந்த விழா!

உடன்பிறப்பே! அன்று தொடங்கிய முயற்சிக்குத் தொய்வு நேராமல் பணிகள் நடைபெற்றன! இப்படி ஒரு கோட்டம் அமைத்திடும் எண்ணம் எவ்வாறு எழுந்தது தெரியுமா?

பூம்புகார் உருவாக்கியதும், பாஞ்சாலங்குறிச்சி கண்டதும், புதிய எழுச்சி தமிழுக்குக் கிடைப்பதும் உணர்ந்த நல்லோர் சிலர், மயிலாப்பூர் திருவள்ளுவர் ஆலயத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்ற முறையீடு ஒன்றைத் தந்தனர் என்னிடம்!

மறுநாளே நானும், அறநிலைய அமைச்சர் கண்ணப்பனும் மயிலைக்குச் சென்றோம். கோயிலைப் புதுப்பிக்கத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. அதற்கென கருத்துரை வழங்கிடக் குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது.

இதற்கு இடையே அந்தக் கோயிலையன்னியில் நகரின் நடுப்பகுதியில் கோட்டம் ஒன்று அமைத்தால் என்ன என்ற ஆசையும் தோன்றியது. அதுபற்றி விவாதித்தோம். பெரிய அளவில் வரலாற்றுப் புகழ் வாய்ந்ததாக அந்தக் கோட்டம் அமைய வேண்டுமென விரும்பினோம்.

பூம்புகார்க் கலைக்கூடப் பணிகளை முன்னின்று நடத்திய சிற்பி கணபதி ஸ்தபதியாரிடம் கோட்டம் பற்றிய விவாத அரங்குகளைத் தொடர்ந்து நடத்தினோம்.



கோட்டம் எப்படி அமைந்திட வேண்டும்; வள்ளுவர் சிலை இருக்குமிடம் எப்படி அமைந்திட வேண்டும் என்பதற்கான "கோணல்மாணல்" கோட்டுச் சித்திரங்களை நானே வரைந்து காட்டினேன்.

திருவாரூர் தேர்போல ஒரு பகுதி அமைய வேண்டும். கலையரங்கம் ஒன்று இலக்கிய விழாக்கள் நடத்திட மிகப்பெரும் அளவில் உருவாக்க வேண்டும். திருக்குறள் முதலிய தமிழ்ப்பனுவல்களை ஆய்ந்திடும் ஆராய்ச்சி மன்றமொன்றும் அங்கே இடம்பெற வேண்டும். குறளுக்கெனவே தங்கள் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற ஐந்தாறு பெரும்புலவர்கள் (கிறித்தவ ஆலயத்து பாதிரிமார்களைப் போல) வள்ளுவர் கோட்டத்திலேயே இருந்து குறள் பரப்பும் தூய்மைப் பணி ஆற்றிட வேண்டும்.

உலகில் எந்த நாட்டில் இருந்து வருகின்றவராயினும் இந்தக் கோட்டத்திற்கு வந்து பயன் பெற்றுத் திரும்பிடவேண்டும். குறள் பரவிடும் எளிமையான வழிகளைக் கற்றுத் தந்திட வேண்டும். எல்லாக் குறட்பாக்களும் கல்லில் செதுக்கப்பட வேண்டும். தேரில் வள்ளுவர் சிலை விளங்கிட வேண்டும். கலையரங்கில் தொல்காப்பியரும்; அதங்கோட்டாசானும் சிலை வடிவில் அமைக்கப்பட வேண்டும். இத்தனைக் கருத்துக்களையும் எடுத்துரைத்தோம்.

நான் வரைந்து காட்டிய வள்ளுவர் கோட்ட அமைப்புச் சித்திரம் "கோணல் மாணல்" கோடுகளாக இருந்தாலும், அடிப்படை எண்ணத்தைப் புரிந்துகொண்டு அதனைத் திருத்தியமைத்து சிற்பிகளும், அரசு அதிகாரிகளும் வேலைகளைத் தொடங்கினர்.

இடையில் பணிகள் விரைவில் முடிவுற வேண்டி ஸ்தபதியார் எஸ்.கே.ஆச்சார் அவர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டார்! அவர்தான் குமரிமுனையில் விவேகானந்தர் மண்டபத்தை வியக்கத்தக்க வண்ணம் வடித்துத் தந்தவர்.

குமரிமுனையில் கோயில் எழுப்பிய சிற்பியும், காவிரி கடலோடு கலக்குமிடத்தில்



பூம்புகார் எழுப்பிய சிற்பியும் சேர்ந்து வழங்கும் சிறப்புமிகு கோட்டம்தான் சீர்சால் வள்ளுவர் கோட்டம்!

சிற்பக் கலைக்கு உயிரூட்டும் கழக அரசை அந்த இரு சிற்பிகளுமே பெரிதும் பாராட்டியுள்ளனர். எத்தனையோ அற்புதச் சிற்பங்கள் இருக்கலாம்! ஆனால் ஒரு பெரிய கதையையே தொடர்ச்சியாகச் சிற்பங்களில் பூம்புகாரில் வடிக்கச் செய்த அரசு, இந்த அரசுதான்!" என்று கழக அரசைக் கணபதி ஸ்தபதி பாராட்டினார்.

"பூம்புகார்ப் பெருந்தச்சன்" என்ற விருதினை மாமல்லபுரத்தில் எனக்குச் சிற்பிகள் வழங்கிய விழாவில்!

''பழைய காலத்தில் எத்தனையோ மன்னர்கள் கலையைப் பேணி வந்திருக்கிறார்கள். கோயில்களையும் மண்டபங்களையும் கட்டும்படி சிற்பிகளை அவர்கள் தூண்டியிருக்கிறார்களே தவிர யாரும் தனது வாழ்நாளில் இப்படி ஒரு கல் தேரை பிரம்மாண்டமாக உருவாக்கும்படி கூறியதில்லை" - என்று ஸ்தபதி எஸ்.கே. ஆச்சார், ஒரு பத்திரிகைப் பேட்டியில் கருத்து வெளியிட்டார்.

தொன்மை வாய்ந்த மொழி, தமிழ்மொழி! அதங்கோட்டாசானிடம் மாணவராக இருந்தவர் தொல்காப்பியர். அவர் காலத்திலே இலக்கணம் எழுதப்பட்டது என்றாலும் அதற்கு முன்பு ஒரு ஐயாயிரம் ஆண்டுகளாவது தமிழ்மொழி மெல்லமெல்லப் பண்படுத்தப் பட்டிருந்தால்தான், அதற்குத் தொல்காப்பியர் இலக்கணம் கண்டிருக்க முடியும்.

தொல்காப்பியர் காலமே மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது என்கிறார்கள். அதற்கு முன்பு ஐயாயிரம் ஆண்டு வளர்ச்சி, தமிழுக்கு! ஆக எண்ணாயிரம் ஆண்டுக்கால வரலாறு படைத்த பழம்பெரும் மொழி தமிழ்மொழி.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழுக்குக் கிடைத்த கருவூலம், திருக்குறள்!

நூல்களின் தன்மை பற்றிக் கூறவந்த ஆங்கில அறிஞன் ஜான்சன், "வாழ்க்கை அறிவு புகட்டாத நூல்கள் பயன் அற்றவை! வாழும் கலையைத் தவிர வேறு எதைக் கற்பிக்க நூல்கள் இருக்கின்றன?" என்று கேட்கிறான்.

அந்த அடிப்படையில் நோக்கினால், எந்த வகையில் வாழ்ந்தால் வாழ்வு இனியதாக, எழிலுடையதாக, பண்புடையதாகப் பயனுடையதாக இருக்குமென்பதை வலியுறுத்திக் கூறும் உயர் தனிப் பெருநூல் திருக்குறளாகும்.

நோபல் பரிசு பெற்ற அறிஞர் ஆல்பர்ட் சுவைட்சர். "இந்தியக் கருத்தும் அதன் வளர்ச்சியும்" என்று எழுதியுள்ள ஆராய்ச்சி நூலில்,

திருக்குறள், உயர்ந்த - தலைசிறந்த அறங்கள்
அடங்கிய ஒப்பற்ற உலக இலக்கியம்

என்று குறிப்பிட்டிருக்கிறார். அதனால் தானே "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனக் கவிச்சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் எக்காளமிடுகிறார்!

"தெள்ளு தமிழ்நடை
சின்னஞ் சிறிய இரண்டடிகள்
அள்ளு தொறுஞ் சுவை
உள்ளந்தொறும் உணர்வாகும் வண்ணம்
கொள்ளும் அறம், பொருள்
இன்பம் அனைத்தும் கொடுத்த திரு
வள்ளுவனைப் பெற்ற
தாற் பெற்றதே புகழ் வையகமே!"

- என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் பாடுகிறார். வள்ளுவனைப் பெற்றதால் வையகமே புகழ்பெற்றது என அந்தப் பாவேந்தர் பெருமைப்படுகிறார்.

குறளுக்குப் பெருமை சேர்ப்பதும், குறள் நெறி மயங்கியதை உணர்ந்து அதனை மீண்டும் தமிழ் மக்களின் உள்ளத்தில் பதியவைக்கும் முயற்சியினை மேற்கொள்வதும் நமது கழகத்தினரால்

இன்று நேற்று தொடங்கப்பட்ட தொண்டல்ல. சுமார் இருபத்தி எட்டு ஆண்டுகட்கு முன்பு பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் முன்னின்று சென்னை நகரத்தில் "குறள் மாநாடு" ஒன்றையே மிகச் சிறப்புற நடத்தியிருக்கிறார்கள்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"

இந்தக் குறள் வழி நின்றுதான் பகுத்தறிவு இயக்கமே மலர்ந்தது. அந்த இயக்கத்தின் கொள்கை பரப்பும் பணிக்குக் குறள் ஒரு பெருந்துணை எனில் அது மிகையாகாது.

தமிழன் பெருமையை ஏட்டில், இலக்கியத்தில் மட்டும் வாழ வைக்காமல் புதியதோர் எழுச்சியுடன் வருங்கால முழுமைக்கும் வாழவைக்கப் பூம்புகாரின் பதிப்பெடுத்தோம்; கடலில் ஆழ்ந்துபோன பூம்புகார் நிலத்தில் விளைந்தது.

பாரதியின் பாட்டாக, பாரதிதாசனின் கவிதையாக, பல்வேறு அறிஞர் பெருமக்களின் உரையாக மொழி பெயர்ப்புக்களாக வடிவு கொண்டிருந்த வள்ளுவருக்கு இதோ, கோட்டம் அமைத்துவிட்டோம். வான்புகழ் கொண்ட வள்ளுவர் கோட்டம்!

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த எழில்மிகு கோட்டத்தை நானும் நாவலரும் அமைச்சர்கள் சிலரும் சென்று பார்த்துவந்தோம். கோட்டத்தில் அமைக்கப்பட்ட ஒவ்வொரு கல்லும் எங்கள் கவனத்திலிருந்து தப்பியதில்லை.

இப்போதும் சிலர் என்ன கூறினார்கள்? ஆட்சி மாறிவிட்டது - வள்ளுவர் கோட்டம் அவ்வளவுதான்! என்றுதான் பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் அதற்கு மாறாக, நமக்கோர் நற்செய்தியாக மேன்மைமிகு குடியரசுத் தலைவர் அவர்களே அந்த அற்புதக் கோட்டத்தைத் திறந்து வைக்க இசைந்து வருகை தருகிறார்கள்.



மீண்டும் நமது ஆளுநர் அவர்களின் சொற்பொழிவுக் குறிப்பு ஒன்றையே நான் நினைவுகூர்ந்திட விரும்புகிறேன்.

"கருணாநிதி அவர்களே; தாங்கள் ஒரு உண்மையை உலகிற்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறீர்கள். கீழ்த்தளத்திலிருந்து ஒரு மனிதன் மிக உன்னத நிலைக்கு வரமுடியுமென்று காட்டியதற்காக, எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும். அரசியல்வாதிகள் இடையில் மறைந்துவிடலாம். ஆனால் எழுத்தாளராக-மனிதத் தன்மை உள்ளவராக இருக்கும் கருணாநிதி என்ன நேர்ந்தாலும் சரித்திரத்திலிருந்து மறைய மாட்டார்."

ஜூலை 31ஆம் நாள் 1971 ஆம் ஆண்டு நமது தமிழக ஆளுநர் ஆற்றிய உரைதான் இது! அவர், "கருணாநிதி" என்று என் பெயரைக் குறிப்பிட்டிருந்தாலும் கூட நான் ஆற்றியபணி, ஆற்றுகிற பணி எல்லாமே கழகச் சார்பில், கழக அரசின் சார்பில், அண்ணாவின் வழியைப் பின்பற்றி என்கிறபோது, தனிப்பட்ட எனக்கல்ல; நானும் நீயும் மற்றவர்களும் இணைந்துள்ள இந்தக் கழகத்துக்கு; கழக அரசின் நற்சாதனைகளுக்கு; தமிழ்ப்பணிக்கு என்றே பொருள் கொண்டிட வேண்டும்.

நமது அடிச்சுவடே தெரியாமல் அழித்துவிடக் கூடிய முயற்சிகள் செய்யப் பட்டாலும்கூட, அறுபது ஆண்டுக் காலமாக வளர்க்கப்பட்டுள்ள உணர்ச்சிகளின் இழையோட்டத்தை யாரும் அறுத்துவிட இயலாது.

ஆறு, நீரின்றி வறண்டு கிடப்பதைப் போல் தோன்றும். "ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளில் ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்" என்ற பாடலைக் கவனி! வறண்டு போன ஆற்றுக்கு அடியிலேயும் குளிர் நீர் ஊற்று இருப்பதுபோல, நமது அடையாளங்களே இல்லாமற் போய்விட்டாலும், நிலத்தடியில் இருக்கின்ற நீர்ஊற்றுப் போல, நமது கொள்கை - நமது உழைப்பு - நமது தியாகம் - நமது சாதனை- அனைத்தும் உணர்வுபூர்வமாக இருந்தே தீரும்.

எனவே, சரித்திரத்தில் நமக்குக் கிடைக்கிற இடம், சலுகையால் பெறக்கூடியது அல்ல! எது நேர்ந்தாலும், என்ன நேர்ந்தாலும் மறைக்க முடியாத இடம்! அந்த நம்பிக்கையுடன்தான் இன்று நடக்கும் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவை அகக் கண்ணால் காணுகிறேன்.

உயிர்வளர் மாதம் ஒன்பதும் ஒன்றும் நிறைந்து, பிறந்த குழந்தையைச் சுமந்ததையும் இன்பமாகக் கருதி, பேற்றுக்கால வேதனையையும் இனிய வேதனையாகக் கொண்டு; பாலூட்டிச் சீராட்டி பழமுத்தம் சுளை சுளையாய்த் தந்து, பள்ளிக்கனுப்பி, பின்னழகும் முன்னழகும் பார்த்துக் களித்து, பருவமடைந்த பின்னர் வாழ்க்கைத் துணையொன்றைத் தேர்ந்தெடுத்து அந்த ஆசைக் கிள்ளைக்கு இனிய திருமண விழா நடைபெறும்போது, தாலி கட்டும் காட்சியினைக் காணமுடியாமல் மணப் பந்தலுக்கு வெளியே நிற்கின்ற தாயின் மனதில் ஒருவிதத் தவிப்பு இருந்தாலும், தன் அன்புச் செல்வத்துக்கு நடைபெறும் மணவிழா குறித்த மகிழ்ச்சி பொங்கிடத்தானே செய்யும்!

என் தங்க உடன்பிறப்பே! அந்தத் தாயின் மகிழ்ச்சியைத்தான், நான் பெறுகிறேன் இன்று!

ஆம் - என் வாழ்நாளின் குறிக்கோள்களில் ஒன்றான வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவை அகக் கண்ணால் காணுகிறேன், ஆனந்தப் பள்ளு பாடுகிறேன்.

"நெடுநாள் ஆசை நிறைவேற்றம்
நெஞ்சில் இன்பக் கொடியேற்றம்"

நீயும் சேர்ந்து பாடுக! இந்த மகிழ்ச்சிப் பாடலை! வாழ்க வள்ளுவர்! வெல்க குறள்நெறி!

1985இல் 'குறளோவியம்' வெளியீடு

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு உருவாகியிருந்த தமிழ் நிலத்துச் சமுதாயச் சூழலின் நடுவிலே எழுத்தாணி பிடித்து ஏடெழுதிய வள்ளுவப் பெருந்தகையார், அறம் எதுவென அறுதியிட்டுக்கூறினார்.

இல்வாழ்க்கையின் இனிய பயனையும், எப்படி இருந்தால் துறவறம் சிறப்புடையது என்பதையும், வாழ்க்கையில் கொள்ளுவன- தள்ளுவன எவை எவை எனப் பகுத்துக் காட்டியும், முடியரசு ஆட்சி நடந்த காலத்திற்குச் சொல்லப்பட்ட அறிவுரைகள் குடியரசு ஆட்சி நடக்கும் நாடுகளுக்கும் பொருந்துமெனக் கூறுமளவுக்கு அரசியல் கோட்பாடுகளை வகுத்தளித்தும், ஆறாவது அறிவையும் பெற்றுள்ள மனித இனத்தினையும் ஆட்படுத்தக் கூடிய ஆற்றல் கொண்டதெனினும் அதற்கு அன்பினை அடிப்படையாகக் கொண்ட இலக்கண இலக்கியக் கவசம் அணிவித்தும், எப்பாலினும் சிறந்த முப்பாலினைப் பிழிந்து அதில் தேன்தமிழும் கலந்து நம் இதயத்தின் வாயிதழைத் திறந்து ஊட்டுகின்ற அமிழ்தமே திருக்குறள்!

ஒன்றுக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறட்பாக்களுக்கோ பதவுரை, விரிவுரை என்று எழுதிக்கொண்டிராமல், பலரும் விரும்பிப் படிக்கத்தக்க

ஏதோ ஒரு சக்தியில்லாமல் இத்தனை மாற்றங்கள் புவியிலும் சரி, விண்வெளியிலும் சரி, நடைபெற முடியாது என்று தீர்மானித்த மனிதன், அந்தச் சக்தியைக் கடவுள் என்று வர்ணித்தான். அதற்குக் கைகால்கள் உண்டோ? அது பேசுமா? அது வரம் அருளுமா? இந்தக் கேள்விகளுக்கு இடம் தராதவர்கள் அந்தச் சக்தியை ஒப்புக்கொண்டனர்.

வண்ணம் அவர்களைக் கவர்ந்திழுத்துக் கருத்துக்களை நெஞ்சத்தில் பதிய வைத்திட வேண்டுமென்ற ஆசைத்துடிப்பு எனக்கு நீண்ட நெடுங்காலமாகவே இருந்துவந்தது.

முதல் முயற்சியை 1956ஆம் ஆண்டு தொடங்கினேன். "முரசொலி" வார இதழில் "குறளோவியம்" என்ற தலைப்பில் தொடர்ந்து எழுதிடத் துணிந்தேன். அதற்கென முதலில் நான் தேர்ந்தெடுத்துச் சொல்லோவியம் தீட்டிய குறள்;

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து"

என்பதாகும்!

"தமைக்காத்த தலைவன் தமக்காகக் கண்ணீர் சிந்துமளவுக்கு ஏற்படுகின்ற களச்சாவினை வீரர்கள் யாசித்தாவது பெறவேண்டும்" என்பதே இதன் பொருளாகும்.

களம்பட்டுத் தியாகியாக நான் மாண்டு கிடக்க என் உடல் மீது என் தலைவர் அண்ணா அவர்கள் கண்ணீர் சிந்தும் பேறு பெறவேண்டுமென்ற அவா மிகுதியால் எழுதப்பட்ட முதல் "குறளோவியம்" இது. ஆனால், நான் நினைத்ததற்கு மாறாக நடந்துவிட்டதே! என் அன்புத் தலைவர் எனக்கு முன் மறைந்துவிட்டாரே!.

'முரசொலி' வார இதழ், நாளிதழாக மாறிய பிறகு, வாரந்தோறும் "குறளோவியம்" எழுதிட வாய்ப்பில்லாமல் போயிற்று.

பின்னர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு எழுத்தாள நண்பர் சாவி அவர்கள், அவர் ஆசிரியர் பொறுப்பேற்று நடத்திவந்த "தினமணி கதிர்" வார இதழில் குறளோவியத்தைத் தொடர்ந்து எழுதுமாறு என்னைத் தூண்டிக்கொண்டே இருந்தார். "தினமணி கதிர்" இதழில் வாரந்தோறும் குறளோவியம் இடம் பெற்றது. அதன் பிறகு தம்பி முரசொலி மாறன் வெளியிட்டுவந்த "குங்குமம்" வார இதழில் குறளோவியம் தொடர்ந்தது.

"குறளோவியம்" நூலில் முன்னூறு குறள்கள் இடம் பெற்றுள்ளன. பயன்படுத்தப்பட்டுள்ள குறட்பாக்கள் 354 ஆகும். அறத்துப் பாலில் 76 குறட்பாக்கள்; பொருட்பாலில் 137 குறட்பாக்கள்; இன்பத்துப் பாலில் 141 குறட்பாக்கள்.

உரைநடையில் குறட்பாக்களை மலர்மாலையாக ஆக்கியோர் உளர்! செய்யுள் செய்து குறளுக்குப் பொருள் உரைத்தோர் உளர்! சுருக்கமாகச் சுவையாகக் குறளுக்குப் பொழிப்புரை புகன்றோர் உளர்! இசைத்தமிழால் இனிய குறளைச் செவி வழி பாயச்செய்து சிந்தை குளிர்விப்போர் உளர்!

இவற்றுக்கிடையே என் பங்காக நிகழ்ச்சிகளைக் காட்சியாக்கி நிழல் தரும் குளிர் தருக்கள் அடர்ந்த நீரோடைத் தமிழிலும் நெஞ்சில் கனலேற்றும் முழவோசைத் தமிழிலும், நீள் விழியில் நதி தோன்றத் தூண்டும் உருக்கமிகு உணர்ச்சித் தமிழிலும் குறட்பாக்களை உலவ விட்டிருக்கிறேன்.

இதோ! எடுத்துக்காட்டுக்கு இரண்டொரு குறளோவியங்கள்!

''சாலையில் பல்லக்கு ஒன்றைச் சிலர் தூக்கிக்கொண்டு நடந்தனர். பல்லக்கில் ஒருவர் சாய்ந்தவாறு சாலையின் இருமருங்கிலுமுள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தவாறு பயணம் நடத்திக் கொண்டிருந்தார். கழுத்து வலியெடுக்கவும் கால் கொப்பளிக்கவுமான நிலையில் பல்லக்குத் தூக்கிகள் தங்கள் பணியினை ஆற்றிக் கொண்டிருந்தனர்.

இரண்டு முதியவர்கள் அந்தக் காட்சியை ஒரு மண்டபத்தில் இருந்தவாறு கண்டனர். அவர்களில் ஒருவர் தமிழ் நூல்களை நிரம்பப் படித்தவர். அவர் சொன்னார்; "பார்த்தீரா? இதுதான் பாவம்செய்த ஜென்மத்திற்கும் புண்ணிம்செய்த ஜென்மத்திற்கும் சரியான எடுத்துக்காட்டாகும்" என்று! அவருடன் இருந்த முதியவர் "எப்படி? எப்படி?" என்று ஆவலுடன் கேட்டார். தமிழ் படித்த முதியவர் கூறினார் விளக்கமாக!

"திருக்குறளில் வள்ளுவர் இதுபற்றி மிகச் சிறப்பாகச் சித்தரித்துள்ளார். அறத்தினால் ஏற்படும் பயன் என்னவென்று நூல்களைக் கொண்டு ஆராயத் தேவையில்லை. பல்லக்கில் செல்பவனையும் பல்லக்குத் தூக்குபனையும் பார்த்தாலே அவர்களில் அறஞ்செய்தது யார் என்று புரிந்துவிடும். ஒருவர் செய்த அறத்திற்கு ஏற்ப அவர் பல்லக்கில் ஏறுகிறார். அறம் செய்யாதோர் பல்லக்கைச் சுமக்கிறார்".

இவ்வாறு படித்த முதியவர் விளக்கம் கூறிக் கொண்டிருந்தபோது, "என்னே, கொடுமை! என் குறளையே குழிதோண்டிப் புதைக்கிறீர்களே" என ஒரு குரல் கேட்டது. இரு முதியவர்களும் வியப்புடன் திரும்பிப் பார்த்தனர். வள்ளுவர் கண்கலங்க நின்று கொண்டிருந்தார். முதியவர்கள் அவருக்கு வணக்கம் தெரிவித்தனர்.

பதிலுக்கு வள்ளுவர் அவர்களை வணங்கிவிட்டு "நான் எழுதிய குறளுக்கு இப்படி ஒரு பொருந்தாத உரை கண்டது யார் என்றே எனக்குத் தெரியவில்லையே! முதியவர்களே! பல்லக்குச் சுமப்போரையும் பல்லக்கில் செல்வோரையும் வைத்து நான் பாடிய குறளுக்கு நீங்கள் உரைத்தது சரியான பொருள் அல்ல. பல்லக்கில் ஏறியவன் அறச்செயல் புரிந்தவன் என்றோ, பல்லக்கைச் சுமப்பவன் தீச்செயல் புரிந்தவன் என்றோ நான் கருத்தறிவிக்கவில்லை. அது அறிவுக்கு ஒவ்வாத ஒன்றாகும்.

அறவழியில் நடப்பவர்கள் பல்லக்கில் செல்பவனைப்போல வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்கள் இரண்டையும் எளிதாகக் கருதிப் பயணத்தைத் தொடர்வர். தீய நெறிக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டவர்களோ பல்லக்கைத் தூக்குகிறவர்களைப் போல இன்பத்திலும் அமைதி கொள்ளாமல். அதேசமயம் துன்பத்தையும் தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவமின்றி வாழ்வையே பெரும் சுமையாகக் கருதுவர்.

இவ்வாறு அறச்செயலின் பயனுக்குப் பல்லக்கில் செல்பவனையும், தூக்குபவனையும் உவமை காட்டினேனேயல்லாமல், அவரவர்களின் பாவ புண்ணியங்களுக்கேற்ப பல்லக்குச் சுமப்போராகவும், பல்லக்கில் செல்வோராகவும் ஆகிறார்கள் என்று நான் குறிப்பிடவே இல்லை! என்னையும் என் குறளையும் உணர்ந்து கொள்ளாமல் தவறான எண்ணங்களை மக்களிடம் பரப்பாதீர்கள்" என்று உருக்கமுடன் கேட்டுக்கொண்டார்.

படித்த முதியவர், வள்ளுவரிடம் தன் செயலுக்குவருத்தம்தெரிவித்துக்கொண்டு- இனி தன்னைத் திருத்திக்கொள்வதாகவும் கூறினார்.

''உம்மைத் திருத்திக்கொண்டால் மட்டுமே போதாது; ஊரையும் திருத்துக" என உரைத்து வள்ளுவர் அவர்களிடம் விடைபெற்றுச் சென்றார். அதற்குள் பல்லக்கு, வெகு தொலைவுக்குச் சென்றுவிட்டது.



"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை"

திருவள்ளுவர் கடவுளை ஒப்புக்கொண்டாரா, இல்லையா? என ஒரு வாதமும் இல்லவே இல்லை என ஒரு வாதமும் நடைபெற்றுக் கொண்டு தானிருக்கிறது. வள்ளுவர் குறள் எழுதிய காலத்தில் கடவுள் நம்பிக்கையுள்ள மக்களே தமிழ் நிலத்தில் வாழ்ந்தார்கள் என்பதைத் தொன்மை வாய்ந்த இலக்கியங்களிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகிறது.

எல்லையற்றது வான்வெளி! விண் வெளியின் விளிம்பு எது என்று இயற்கை கோடு போட்டு வைக்கவில்லை. விரிந்து பரந்து கிடக்கும் இந்தப் பெருவெளியில் அந்தக் காலத்து "வான சாஸ்திரிகள்" முதற்கொண்டு இந்தக் காலத்து விஞ்ஞான மேதைகள் வரையில் கண்டறிந்து கூறும் கோள்கள் மட்டுமே நமது எண்ணிக்கைக் கணக்கிற்கு உட்பட்டவை!

அந்தக் கோள்களை விட பலமடங்கு பெரியதான விண்மீன்கள், இலட்சோபஇலட்சம் கல் தொலைவுக்கு அப்பால் சுழன்று கொண்டு கண் சிமிட்டுகின்றன என்பதையும் நாம் அறிகிறோம். அந்த விண்மீன்கள் எத்தனை எத்தனையோ?

வெப்பமிகு கோள்களில் ஒன்றான சூரியனிலிருந்து சிதறிய ஒரு துண்டுதான் இந்தப் பூமி! எவ்வளவோ கோடிக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு நெருப்புப் பந்தாக இருந்த இந்தப் புவி, குளிர்ச்சியடைந்து நீர்வளம், நில வளம், மலை வளம், மரம் செடி கொடி வளம் என்றெல்லாம் வளங்களைப் பெற்று - புழு, பூச்சி, கிருமிகள் போன்ற உயிரினங்கள் தோன்றக்கூடிய பக்குவத்தையும் அடைந்தது.

உயிரினங்களிடையே ஏற்பட்ட விளைவினால் விலங்கினம், பறவையினம், மனித இனம் முதலிய இனங்கள் தோன்றின.

வானிலிருந்து மழை பொழிந்தது - காற்று வீசியது - இயற்கையின் அற்புதங்களை யெல்லாம் கண்டு வியப்படைகிற அளவுக்கு மனிதனுக்கு மூளை வளர்ச்சியிருந்தது. இந்த வளர்ச்சி, மற்ற உயிரினங்களிலிருந்து மாறுபட்ட ஒன்றாகும்.

ஏதோ ஒரு சக்தியில்லாமல் இத்தனை மாற்றங்கள் புவியிலும் சரி, விண்வெளியிலும் சரி, நடைபெற முடியாது என்று தீர்மானித்த மனிதன், அந்தச் சக்தியைக் கடவுள் என்று வர்ணித்தான். அதற்குக் கைகால்கள் உண்டோ? அது பேசுமா? அது வரம் அருளுமா? இந்தக் கேள்விகளுக்கு இடம் தராதவர்கள் அந்தச் சக்தியை ஒப்புக்கொண்டனர்.

எங்கோ ஒரு இடத்தில் ஒரு ஆள் அமர்ந்துகொண்டு விண்ணிலும், இந்த மண்ணிலும் இத்தனை அதிசயங்களை நடத்துகிறார் என்பதை நம்ப முடியாவிட்டாலும்; அண்ட பகிரண்டமும் அடங்கவொரு நிறைவாகிய ஒரு சக்தியின் இயக்கத்தால்தான் எல்லாமே அசைகிறது என்பதில், கடவுளை அறவே மறுப்பவர்களும் எதிர்க்கருத்து கொண்டிருக்க இயலாது!

அந்தச் சக்தியை "இறைவன்" என்றனர்! "இறை" என்று பொதுவாகக் கூறினர்! ஆணா பெண்ணா என்று தெரியாத அளவுக்கு "கடவுள்" என்றனர். "தெய்வம்" என்றனர்! மதங்கள் தோன்றிய பிறகு அவரவர்க்கு ஏற்றவாறு பெயர்களையும் சூட்டினர்!

வள்ளுவர், தான் வாழ்ந்த காலத்து நிலையைத் தனது குறளில் வடித்துக் கொடுக்கத் தவறவில்லை. இறை அல்லது இறைவன் அல்லது தெய்வம் இவற்றுக்குச் சொல்லப்படும் இலக்கணங்களை அவர் புறக்கணிக்காதது மட்டுமல்ல; அந்த இலக்கணங்களின் வடிவமாக, மாந்தர் திகழவேண்டுமென விரும்பினார்.

"கடவுள் வாழ்த்து" என்ற அதிகாரத்தில் எழுத்துக்களுக்கு 'அகரம்' முதல்

என்பது போல, அவன் திருவடிகளைத் தொழாவிட்டால் கற்றும் பயனில்லை என்று சுட்டிக் காட்டினார்.

"வேண்டுதல் வேண்டாமை இலான்" - அதாவது விருப்பு வெறுப்பு இல்லாதவனுடைய நிழலை நாடுபவர்க்குத் துன்பம் இல்லையென்று குறிப்பிட்டார்.

"தனக்குவமை இல்லாதான்", "அறவாழி அந்தணன்" - இவ்வாறெல்லாம் கடவுள் எனப்படும் சொல்லுக்கு இலக்கணம் வகுத்தார்.

இறைவனுக்குரிய இத்தனைப் பெருமையும் கொண்டு ஒருவன் வையத்தில் வாழ வேண்டுமென்று வள்ளுவர் கருதினார்.

அதனால்தான் அவர், திட்டவட்டமாக ஒரு கருத்தை உலகிற்கு அறிவித்தார். "தெய்வத்திற்கென எத்தனையோ அருங்குணங்கள் சொல்லப் படுகின்றன! உலகில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன் வானத்தில் வாழ்வதாகச் சொல்லப்படும் தெய்வத்துக்கு இணையாக வைத்து மதிக்கப்படுவான்"

அதற்கு இதோ குறள்:

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்"

இத்தகைய கருத்துக்கள் கொண்ட இந்தக் "குறளோவியம்" நூலின் முதற்பதிப்பு 17.2.1985 அன்று சென்னையில் வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகு மூன்றாம் பதிப்பு 1992ஆம் ஆண்டிலும், நான்காம் பதிப்பு 1997ஆம் ஆண்டிலும் வெளிவந்துள்ளன.

"குறளோவியத்தை" ஆங்கிலத்தில் "Kural Portraits" என்ற பெயரில் டாக்டர் கே. செல்லப்பன் அவர்களும், இந்தி மொழியில், "குறள் அலேகன்" என்ற பெயரில் தமிழ் மொழி அகாதமியின் செயலாளர் த.சி.க. கண்ணன் அவர்களும் மொழியாக்கம் செய்துள்ளனர்.

திருவள்ளுவர் ஓவியம் தீட்டிய வேணுகோபால் சர்மாவுக்கு நிதி

மகாவித்வான் தண்டபாணி தேசிகர், வ.சுப.மாணிக்கம், நன்னன், மெ.சுந்தரம்- இத்தகைய தமிழறிஞர்கள் எல்லாம்

"குறளோவியம்" வெளியீட்டு விழா 17.2.1985 அன்று சென்னையில் நடைபெற்றபோது குறளோவியத்தைப் பாராட்டி உரையாற்றிய நேரத்தில் திருவள்ளுவருக்கு ஓவியம் தீட்டிய வேணுகோபால் சர்மாவை அந்த விழாவிற்கு அழைத்து, அவருக்கு நூலின் விற்பனையின் மூலம் கிடைத்த தொகையில் பத்தாயிரம் ரூபாய் கொண்ட பொற்கிழியை வழங்கினேன்.

ஓவியர் திரு. வேணுகோபால் சர்மா அவர்கள் நோய்வாய்ப்பட்டுள்ளார் என்று ஓவியரின் புதல்வர் 24.5.1989 அன்று முதல்வர் என்கிற முறையில் என்னைச் சந்தித்து விவரத்தைத் தெரிவித்தவுடன் முதலமைச்சர் நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாயை ஓவியருக்கு வழங்க உத்தரவிட்டேன்.

சட்டப்பேரவையில் 1990-1991ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெற்ற, பொது விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசுகையில். 'வேணுகோபால் சர்மா அவர்கள் வரைந்த திருவள்ளுவர் திருவுருவப் படத்திற்கான உரிமையைத் தமிழக அரசு பெற்றுக்கொண்டு, அவரது குடும்பத்தாருக்கு 3 இலட்சம் ரூபாய் வழங்கும்' என்று நான் அறிவித்திருந்தேன்.

அதன் தொடர்ச்சியாக, 1990 ஏப்ரல் 7ஆம் தேதியன்று தலைமைச் செயலகத்தில் ஓவியரின் குடும்பத்தாருக்கு மூன்று இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினேன்.

காசோலையைப் பெற்றுக்கொண்ட ஓவியரின் குடும்பத்தார் எனக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் ஒன்றை வழங்கினர்.

வேணுகோபால் சர்மா அவர்களின் புதல்வர்கள் வி.எஸ்.தியாகராஜன், வி.எஸ். ஸ்ரீராம் சர்மா ஆகியோர் எழுதிய கடிதத்தின் சில பகுதிகள் பின்வருமாறு:

"மறைந்த என் தந்தை ஓவியப் பெருந்தகை சர்மா அவர்களின் வாய்மொழிபோல், பால் நினைந்தூட்டும்



தாயினும் நல்லாய் என்பதனைத் தாங்கள் மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தி, எம் வாழ்வை ஒளிப்படுத்தியமைக்குக் கோடி நன்றிகளைத் தங்கள் முன் குவிக்கிறோம்.

எங்கள் தந்தை கௌரவிக்கப்பட்டார் என்பதைவிட, அவர் தங்களால் கௌரவிக்கப்பட்டார் என்பதை எண்ணும்பொழுது பெருமையின் விளிம்பில் நின்றுகொண்டு தத்தளிக்கிறோம்.

ஆட்சியில் இருந்தபோதும், இல்லாதபோதும் என் தந்தையின்மேல் - அவரிடம் இருந்த அருங்கலையின்மேல் அழிக்கமுடியாத பாசம் கொண்டு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உரியதைச் செய்த தங்களின் உள்ளத்தை எண்ணுந்தோறும் மனம் பூரிக்கிறது.

1959ஆம் ஆண்டு தாங்கள் கூறியதை நினைவு கூர்கிறோம்! இந்த உலகம் உள்ளவரையில் திருக்குறள்-திருவள்ளுவர்-வேணுகோபால் சர்மா இந்த மூன்று பெயர்கள் அழிக்க முடியாத ஒன்றாகிவிட்டது என்னும் இப்பொற்சொற்கள் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்."

1996 ஏப்ரல் 15ஆம் நாள் திருக்குறள் உரை வெளியீடு

இமயமலைக்குப் பொன்னாடை போர்த்துகிற முயற்சியில் ஈடுபடுவதும் திருக்குறளுக்கு உரை எழுதுவதும் ஒன்றுதான் என்பதை நான் அறியாதவன் அல்லன்.

354 குறட்பாக்களைக் கொண்டு குறளோவியம் எழுதி முடித்தபிறகு, 1330 குறட்பாக்களுக்கும் உரையெழுத வேண்டுமென்ற ஆர்வத்துடிப்பு என்னை ஆட்கொண்டது. அதனை நிறைவேற்றி மகிழ "முரசொலி" நாளேட்டில் ஒவ்வொரு நாளும் நான் எழுதிய திருக்குறள் உரைகளின் தொகுப்பே இந்த நூல்.

வள்ளுவர் வாழ்ந்த காலத்து நம்பிக்கைகள், பண்பாடுகள், அவைகுறித்து அவரது பார்வை ஆகியவற்றுக்கு மாறுபடாமலும், வலிந்து என் கருத்து எதையும் திணிக்காமலும், குறளில் அவர் கையாண்டுள்ள சொல்லுக்கு இதுவரை உரையாசிரியர்கள் கொண்டுள்ள பொருளே அன்றி தமிழில் மற்றொரு பொருளும் இருக்கிறது என்ற உண்மை நிலையைக் கடைப்பிடித்து, நான் எண்ணுவது போல் அவர் எண்ணினாரா? என்று நோக்காமல், அவர் எண்ணி எழுதியது என்ன என்பதை அறிவதில் மட்டுமே அக்கறை கொண்டு என் அறிவுக்கும் ஆற்றலுக்கும் எட்டிய வரையில் இந்தப் பொன்னாடையை நெய்துள்ளேன்.

"கடவுள் வாழ்த்து" எனும் அதிகாரத் தலைப்பை "வழிபாடு" எனக் குறித்துள்ளேன். வள்ளுவரைக் கடவுள் மறுப்பாளர் அல்லது கடவுள் நம்பிக்கையாளர் எனும் வாதத்திற்குள் சிக்கவைக்க நான் விரும்பவில்லை. 'வழிபாடு' எனும் அதிகாரத்தில் அமைந்துள்ள குறட்பாக்களுக்கு நான் எழுதியுள்ள உரைகளைக் கொண்டு இதனை உணரலாம்.

இந்த எனது உரை நூலுக்கு அரிமா நோக்கர், இனமானப் பேராசிரியர் அன்பழகனார் அவர்கள் வழங்கிய அணிந்துரையில்

"தெளிந்த சிந்தையன், தேர்ந்த புலமையன்,
நுண்மாண் நுழைபுலம் வாய்த்த மதியினன்,
ஆழ்ந்த கருத்தினன், அசைவிலா உறுதியன்,
வெல்லுஞ் சொல்வலான், சோர்வு மிலான்,
கொண்ட கொள்கையே கோட்பாடாய் ஏற்றவன்,
எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணியன்,
பகுத்தறிவுத் திறலோன், பண்பினை மறவோன்
பொங்கு நடையினில் 'சங்கத்தமிழ்ச்' சாறளித்தோன்
பளிங்குப் பாவையெனக் "குறளோவியம்"
படைத்தோன்
தெளிதமிழின் நடைபலவும் வல்லவனாம் கலைஞர்
"வீழ்வது நாமாக இருப்பினும்
வாழ்வது தமிழாகட்டும்" எனத்துணிந்து
"தமிழே தனது உயிர் மூச்செனவும்
தமிழர் வாழ்வே தன்வாழ்வெனவுங் கொண்டு
இனநலம் மொழிநலம் காக்கும் தொண்டே
தன்பிறவிக் கடனென்று ஏற்ற செம்மல்!"

என்று பெருமைப்படுத்தியுள்ளது நான் பெற்ற பேறு.

"திருக்குறள் - கலைஞர் உரை" நூலை 15.4.1996 திங்கட்கிழமை மாலை சென்னை மயிலை ஏ.வி.எம். இராசேசுவரி திருமண மண்டபத்தில், பேராசிரியர் அன்பழகனார் தலைமையில் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தனார் வெளியிட. முதல் நூலினைத் திருமதி ஏ.வி.எம்.இராசேசுவரி அம்மையார் மற்றும் நல்லி குப்புசாமி செட்டியார் பெற்றுக்கொண்டனர்.

நூல் வெளியீட்டு விழாவில் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் வரவேற்புரையாற்ற, முனைவர் சி. பாலசுப்பிரமணியம், சுவிக்கோ அப்துல்ரகுமான், கவியரசு வைரமுத்து, முனைவர் மா. நன்னன். முனைவர் திருமதி சக்திபெருமாள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

முதுபெரும் தமிழறிஞர் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தனார் அவர்கள் ஆற்றிய உரை ஆழ்ந்த சிந்தனைக் கருவூலமாக



இருந்தது. அந்தப் பேருரையின் சில பகுதிகள் இதோ:

நான் சொல்லப்போகிற விஷயம் - யாருக்கும் தெரியாத, 35 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த ஒரு நிகழ்ச்சி. ஒரு கூட்டம்! எதிர்ப்பக்கத்திலே ஏழெட்டுப் பேர் உட்கார்ந்திருக்கிறார்கள். இந்தப்பக்கம் இரண்டு மூன்று பேர். இந்தப் பக்கத்திலே இருந்த வயதான ஒருவர். நடுத்தர வயதுடைய ஒருவரை அழைத்தார். அவர் பயபக்தியுடன் "ஏன்" என்றார். "எதிர்த்தாற் போல் அமர்ந்திருக்கும் அந்தப் பிள்ளையாண்டானைப் பார்!" என்றார். இவர் முன்னால் இருந்தவர்கள் பெயரையெல்லாம் சொன்னார்.

'இல்லை' 'இல்லை' என மறுத்துவிட்டு, 'இரண்டாவது வரிசையில் ஒரு பிள்ளையாண்டான் இருக்கிறான் பார்!' என்றார். அந்த நடுத்தர வயது நண்பர் 'ஆமாம்' என்றார். 'இப்பொழுது சொல்கிறேன். மனதில் வைத்துக்கொள். இந்தத் தமிழ்நாட்டின் எதிர்காலம் அந்த பிள்ளையாண்டானின் கையிலிருக்கிறது' என்றார்.

இதைச் சொன்னவர் ராஜாஜி. யாரிடத்தில் சொன்னார் தெரியுமா? சா. கணேசனிடத்தில்! அந்தப் பிள்ளையாண்டான்தான் கலைஞர்!

கோல்ட்ஸ்மித் என்ற ஆங்கிலப் பேரறிஞன். அவனைப் பற்றி ஜான்சன் என்ற திறனாய்வாளன் எழுதினான், "அவன் தொடாத துறையே இல்லை: தொட்டதைப் பொன்னாக்காமல் விட்டதும் இல்லை" என்று. அப்படி கோல்ட்ஸ்மித்துக்கு ஜான்சன் சொன்னானே, அதைப்போல தமிழ்நாட்டில் ஒருவரைச் சொல்லவேண்டுமென்றால், அது கலைஞர் கருணாநிதிதான்!

இந்தியாவில் இரண்டு நூல்கள்தான் பெருமை உடையன. வடநாட்டில் கீதை. தமிழ்நாட்டில் திருக்குறள்!

முதல் அதிகாரத்திற்குத் தலைப்பு 'வழிபாடு' என்று கலைஞர் எழுதியிருக்கின்றார். இன்றைக்கு திருவள்ளுவர் வந்தாரென்றால், அவர் அதற்குப் பெயர் வைக்கவேண்டும் என்று நினைத்தால், 'கடவுள் வாழ்த்து' என்று வைக்கமாட்டார்: 'வழிபாடு' என்றுதான் வைப்பார்.

'வழிபாடு' என்ற சொல்லை முதலில் தமிழன் பயன்படுத்தியது ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில். அதற்கு என்ன விளக்கம் என்பதை. அதே நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் சொன்னார். அந்த மாதிரி கடவுள் வாழ்த்து யாருமே எழுதவில்லை இதுவரையில், முதன்முதலில் எழுதியவர் திருவள்ளுவர். அதை முதன்முதலில் கண்டுபிடித்தவர் கலைஞர்.

'ஊழுக்கு' கலைஞர் 'இயற்கை' என்று பெயர் வைத்தார். 'ஊழுக்கு' 'இயற்கை' என்ற பெயரைத் தவிர வேறு பெயரே வைக்கமுடியாது.

'இயற்கை' என்பதன் அடிப்படை என்ன? இயற்கைக்குச் சில சட்டங்கள் உண்டு

விஞ்ஞானம் படித்தவர்களுக்குத் தெரியும் இயற்கை என்ன சொல்கிறது? 'Third Law Motion' என்ன சொல்கிறது - நியூட்டனின் மூன்றாவது விதி? 'Every action has got an equal and opposite reaction' ஒவ்வொரு செயலுக்கும் அதே அளவுக்கு மறு செயல் உண்டு' என்பதுதான் விதி. என்ன செய்கிறாயோ, அதற்கு மறு செயல் உண்டு. அதுதான் இயற்கை.

இந்தக் கலைஞர் ஒருவர்தான், வேறு எவருக்கும் தோன்றாத ஒரு சொல்லை எடுத்து அதைப் பயன்படுத்தி, என்னைப்போல 80 வயது கிழவன்கூட ஏதும் செய்ய முடியவில்லை, ஏற்றுக்கொள்ள வேண்டியதாகத்தான் இருக்கிறது. 'ஊழ்' என்ற சொல்லுக்கு, 'இயற்கை' என்று பெயரிட்டாரே வாழ்க!

குறள் என்கிற அந்த இமயத்திற்குப் பொன்னாடை போர்த்தியதை - எந்தக் கோணத்தில் நின்று பார்க்கிறீர்களோ, அதைப்போல மின்னும்; நான் ஒரு கோணத்தில் நின்று பார்க்கிறேன். இந்தத் தமிழகத்தில் ஒரு நூற்றாண்டுக்கு ஒருவன் தோன்றுவான் - அப்படியெனக் கடவுள் அனுப்புவார் என நான் நம்புகிறேன்.

அதில் அறிவாளி, இந்தப் பழைய குறளை எடுத்து எப்படி புதிய வண்ணம் தீட்டுகிறார் என்று பார்த்துப் பெருமகிழ்ச்சி அடைந்தேன். இந்த உரை உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. அறிவினால் வைக்கப்படுகின்ற விருந்து, அந்த விருந்தைப் போற்றி மகிழ்ந்து, அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்"

- என்று அந்த முதுபெரும் தமிழறிஞர் அன்று சொன்ன சொற்கள், இன்றும் என் செவிகளில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன.

தில்லித் தமிழ்ச் சங்கத்தில் திருவள்ளுவர் கலையரங்கம்

1996ஆம் ஆண்டில் கழக அரசால் புதுதில்லியிலுள்ள தில்லித் தமிழ்ச்சங்கத்தில் திருவள்ளுவர் கலையரங்கம் அமைத்திட 10 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

திருவள்ளுவர் விருது

திருவள்ளுவர் விருது 1986ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. என்றாலும், தொடக்கம் முதல் அந்த விருதுக்கான பொற்கிழித் தொகை பத்தாயிரம் ரூபாய் என்றிருந்ததைக் கழக அரசில்தான். 1996ஆம் ஆண்டில் 20 ஆயிரம் ரூபாயாகவும். 1998ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தி அறிவித்தேன்.

திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணி வரலாற்றைத் திரும்பிப் பார்க்கிறேன்

முக்கடல் சந்திக்கும் குமரி முனையில் வான்புகழ் வள்ளுவருக்குச் சிலை அமைக்க 31.12.1975ஆம் நாளன்று எனது தலைமையில் கூடிய கழக அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்து அறிவிக்கப்பட்டு, சிலை அமைப்புக்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது 1976ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் கழக அரசு கலைக்கப்பட்டது.

15.4.1979 அன்று இந்திய நாட்டின் முன்னாள் பிரதமர் திரு.மொரார்ஜி தேசாய் அவர்கள் அடிக்கல் நாட்டிய போதிலும் சிலையமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படவில்லை.

கல்லில் சிலை அமைக்கலாமா? சிலைக்குப் பதிலாக நினைவுச் சின்னம் அமைக்கலாமா? சிலை செப்புத் தகட்டினால் வடிவமைக்கப் படலாமா? போன்ற கேள்விகளினால் சிலை அமைப்பதற்கான எந்தப் பணியும் நடைபெறவில்லை.

25.3.1989 அன்று சட்டப் பேரவையில் நான் வழங்கிய நிதிநிலை அறிக்கையில், "கடந்த காலத்தில் இந்த அரசு குமரி முனையில் வள்ளுவர் சிலை அமைத்திட வகுத்த திட்டத்தை மீண்டும் ஆய்ந்து விரைவுப்பணி மேற்கொண்டு வான்புகழ்



கொண்ட வள்ளுவருக்குச் சிலை அமைக்கும் அரும்பணியை நிறைவேற்றும்" என்று அறிவித்தேன்.

17.3.1990 அன்று நிதிநிலை அறிக்கையிலே. "நீண்டகாலக் கனவு நிறைவேறும் வகையில், குமரிமுனையில் உலகப் பொதுமறை தந்த வள்ளுவருக்குக் குறளின் அதிகாரங்களைக் குறிக்கும் வண்ணம் 133 அடி உயரம் உள்ள மாபெரும் சிலை ஒன்று அமைக்கும் பணி இந்த ஆண்டு தொடங்கப்படும் என்பதை உவகை பொங்கிடத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று மீண்டும் அறிவித்தேன்.

17.5.1990 அன்று சிலையை செம்பினால் செய்வதற்குப் பதிலாகக் கல்லினால் வடிவமைக்கலாம் என்று முடிவெடுத்தேன். கல்லில் சிலை அமைக்கும் பணியினை திரு. கணபதி ஸ்தபதியாரிடம் ஒப்படைப்பதற்கான ஆணை 19.7.1990 அன்று என்னால் வழங்கப்பட்டது.

சிலை அமைப்பதற்கு திரு. கணபதி ஸ்தபதி அவர்களுக்கு 3.60 கோடி ரூபாயும், தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்காக 1.38 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

6.9.1990 அன்று குமரி முனையில் திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணியை நான் நேரில் சென்று தொடங்கி வைத்தேன்.

சிலையின் பீடத்தின் உயரம் 38 அடி என்றும், பீடத்தின் மேல் சிலையின் உயரம் 95 அடி என்றும், ஆகமொத்தம் 133 அடி என்றும், சிலை அமைப்பதற்கு 3 டன் முதல் 8 டன் வரை எடையுள்ள 3,681 கற்கள் தேவையென்றும், 133 அடி உயரத் திருவள்ளுவர் சிலையின் மொத்த எடை

> எத்தனையெத்தனை நாட்களாகத் தவழ்ந்தது- தள்ளாடியது - தத்தி நடக்க எத்தனித்தது - இறுதியாக நடந்தேவிட்டது என்பதைக் காணும்போது, நான் பிறவியெடுத்த பயனாக 'மக்கள் தொண்டு' என ஒரு பகுதி ஒதுக்கப்படினும் எஞ்சியுள்ள பகுதி அனைத்தும் சிலை எழுப்பிய இச்செயலால் நிறைவுற்ற பயன்பெற்றதாகவே எண்ணிக் களிக்கிறேன்.

7,000 டன் என்றும் கணக்கிடப்பட்டது.

திருவள்ளுவர் சிலைக்குத் தேவையான கற்கள் செதுக்குகின்ற பணிகள் சென்னை சோழிங்கநல்லூரிலும், நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரத்திலும், கன்னியாகுமரியிலும் நடைபெற வேண்டுமென்று திட்டம் வகுக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் சிலை அமைப்பதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டிருந்த போதிலும், 1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு மே திங்கள் வரையிலான காலத்தில் பணிகள் மிகவும் தொய்வடைந்து நின்றுவிட்ட நிலையில் இருந்தன.

நான்காவது முறையாக முதலமைச்சராக நான் மீண்டும் பொறுப்பேற்றதற்குப் பிறகு 25.6.1997 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், 1999ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் சிலை அமைக்கும் பணிகளை முடித்திட வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது.

அத்துடன் சிலை அமைப்புப் பணிகளுக்குத் திருத்திய செலவின மதிப்பீடாக 6.14 கோடி ரூபாயும், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திற்குரிய திருத்திய செலவின மதிப்பீடாக 1.72 கோடி ரூபாயும் வழங்க 30.7.1997 அன்று கழக அரசு அனுமதி வழங்கியது.

18.4.1998 அன்று கன்னியாகுமரிக்கு நேரடியாகச் சென்று சிலை அமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு அவற்றை விரைவுபடுத்துவதற்கான கருத்துக்களை வழங்கி வந்தேன்.

சுமார் 9 கோடி ரூபாய் செலவில் உலக அதிசயங்களில் ஒன்றாகத் திகழ இருக்கும் திருவள்ளுவர் சிலைதான் கன்னியாகுமரியில் 2000ஆம் ஆண்டில் ஜனவரித் திங்கள் முதல் நாளில் திறந்துவைக்கப்படுகிறது.

மக்கள் தொண்டும் வள்ளுவர் சிலையும்; என் பிறவிப் பெரும்பயன்

"சூழும் தென்கடல் ஆடும் குமரி'" என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சிறப்பித்துக் கூறிய தென்னகத்து முனையில் திருவள்ளுவர் பெருந்தகைக்குச் சிலை எடுக்கும் விழா; உலகத் தமிழனமே ஒன்றுதிரண்டு நிற்க - இரண்டாயிரம் ஆண்டுத் தொடக்கத்தின் முதல் நாளே நடைபெறுகிறது.

என் வாழ்நாளில் மிகப்பெரிய ஆசையொன்று நிறைவேறுகிறது. இருபத்தைந்து ஆண்டுக்காலமாக எண்ணியெண்ணி விடுத்த பெருமூச்சு வீண் போகாமல் விண்முட்டும் சிலை ஒன்றை விரிகடல் பரப்பின் எல்லையில் எழுப்பி விட்டோம்.

1999 டிசம்பர் 31 - 2000 ஜனவரி 1 - அந்த இருநாட்கள் சங்கமிக்கும் இனிய எழுச்சி வாய்ந்த வேளையில்தான் முக்கடல் சங்கமிக்கும் குமரியில் குறளாருக்குச் சிலை வடித்து, தொழுதேத்தும் திருவிழா அமைகிறது.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு- தேசியக் கவி பாரதியாரின் இந்தத் 'தேனினும் இனிய பாடல் நம் சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிலிர்க்கச் செய்யும் விந்தைதான் என்னே!

விந்தை புரிந்து நம்மைக் கட்டியாளும் கணுக்கரும்பு சுவை சேர்த்துக் குறள் வெண்பாக்கள் வாயிலாக வாழ்வுக்குத் தேவையான கொள்கைகள் வகுத்தவர்- சமத்துவ சகோதரத்துவத்துக்குச் சட்டங்களாய் குறட்பாக்களைத் தொகுத்தவர்-இப்படித்தான் வாழ வேண்டுமென மாந்தர், பின்பற்றுதற்கேற்ப இலக்கணம் யாத்தவர்- அந்த அற்புத ஞானிக்குப் பொற்புடைச் சிலையொன்றை அமைத்திடவும் அது உலகுள்ளவரை நிலைத்திடவும் வேண்டுமென்ற தீராத அவா இந்தத் தமிழ் கூறும் நெஞ்சில் எத்தனையெத்தனை நாட்களாகத் தவழ்ந்தது-தள்ளாடியது- தத்தி நடக்க எத்தனித்தது - இறுதியாக நடந்தேவிட்டது என்பதைக் காணும்போது, நான் பிறவியெடுத்த பயனாக 'மக்கள் தொண்டு' என ஒரு பகுதி ஒதுக்கப்படினும் எஞ்சியுள்ள பகுதி அனைத்தும் சிலை எழுப்பிய இச்செயலால் நிறைவுற்ற பயன்பெற்றதாகவே எண்ணிக் களிக்கிறேன்.

இந்த இனிய வேளையில், அண்ணாவின் ஏற்றமிகு மொழியில்

"குறள் வகுப்பறையில் மட்டுமல்லாமல் - உங்கள் இல்லங்களில் மட்டுமல்லாமல் - உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்".

"குறளைக் கற்றுக் கொள்வதால், நீங்கள் செம்மைப்பட்டு - நீங்கள் செம்மைப்படுவதால், நாடு செம்மைப்பட்டு- நாடு செம்மைப்படுவதால், உலகு செம்மைப்படச் செய்ய வேண்டும்".

"குறள் ஏந்திச் செல்வோம் - நாடு, நகரமெங்கும்; பட்டிதொட்டிகளிலெல்லாம் பண்பாடு எது என்பதை மக்கள் அறியச் செய்வோம்."

"அறம், பொருள், இன்பம் எனும் அரிய முப்பொருளை மக்கள் உணர மட்டுமல்ல; நுகரவும் பணியாற்ற வேண்டும்".

"புதிய பணி இது; ஆனால் நமது பழைய பணியின் தொடர்ச்சிதான் - முற்றிலும் புதிதன்று! அப்பணிக்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கு- குறளின் அருமை, பெருமை பற்றி அறிஞர்கள் கூறியுள்ள கருத்துரைகளை எண்ணிப் பார்ப்பது முக்கியமான முதல் வேலையாகும்".

"நாட்டின் நலிவு நீங்கி, மக்கள் நல்வாழ்வு பெறுவதற்காக, வள்ளுவர் குறளை மறுவற நன்கு உணர்ந்தார் ஆதல் வேண்டும் மக்கள்" - என்று அவனியில் என்னருமைத் தமிழர்கள் எங்கிருந்தாலும் அவர்களையெல்லாம் அன்புடன் அழைக்கிறேன்.

வாழிய செந்தமிழ்!
வாழ்க நற்றமிழர்!
வாழிய குறளும்:
வள்ளுவர் புகழும்;
வாழிய! வாழியவே!



முப்பால் தந்த வள்ளுவருக்கு முக்கடல் சங்கமத்தில் உருவச் சிலை!

06.10.1990 அன்று, கன்னியாகுமரியில், கடலிடையே திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணியைத் துவக்கி வைத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை...

133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை இங்கே குமரிக் கடலிடையே அமைக்கப்படவிருக்கிறது. ஏறத்தாழ நான்கு கோடி ரூபாய் செலவில் அந்தச் சிலை அமைவதற்கான எல்லா விதமான ஏற்பாடுகளும், முழு முயற்சிகளும் ஆக்கப்பூர்வமான பணிகளும் தொடங்கப்பட்டுவிட்டன. இங்கே திருவள்ளுவர் சிலை வைப்பதற்கான உளியின் ஓசை கேட்கத் தொடங்கும்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. விவேகானந்தர் மண்டபம் இங்கே அமைக்கப்பட்டபோது, பல நேரங்களிலே நான் இங்கே வந்து தங்கியிருந்த நேரத்தில், இரவு எல்லாம் உளியின் ஓசை கேட்டுக்கொண்டே இருக்கும். ஒரு தனி இசையாகவேகூட என்னுடைய செவிகளிலே ஒலித்தது.

அதுபோன்ற ஒரு இசையைத் திருவள்ளுவர் சிலைக்காக ஒலிக்கிறார்கள் என்கின்ற பேரானந்தமான நினைவுடன் சிலையைக் காண நான் அடிக்கடி இந்த மாவட்டத்திற்கு வருவேன். இந்தக் கடற்கரையிலே உள்ள விடுதிகளிலே தங்குவேன். அந்த ஓசையைக் கேட்பேன். அந்த ஓசை எழும்போதெல்லாம் திருக்குறளைக் கேட்கின்ற இன்பத்தைப் பெறுவேன் என்று நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இந்தச் சிலை 133 அடி உயரத்தில் அமைகிறது என்று இங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதிலே அடி பீடம் 38 அடி உயரம். அந்த பீடத்திற்கு மேல் வள்ளுவரின் சிலை 95 அடி, இதுகூட ஒரு இலக்கணத்தோடு, ஒரு நயத்தோடு, சிற்ப நயத்தோடு இந்த அடிகளின் கணக்குகள் கூட அமைந்திருக்கின்றன.

பேராசிரியர் இங்கே அழகாகக் குறிப்பிட்டார். நாஞ்சிலார்கூட அதை எடுத்துச் சொன்னார். முப்பாலைப்போல மூன்று கடலும் கூடுகின்ற இந்த இடத்தில் வள்ளுவருக்குச் சிலை அமைகிறது என்று அவர்கள் இங்கே அழகுபட வர்ணித்தார்கள்.

அதைப்போல இந்த 38 அடி எதைக் குறிக்கிறது என்றால் வள்ளுவருடைய மூன்று பால்களில் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் இவைகளில் அறத்துப்பால் 38 அதிகாரங்களைக் கொண்டது.

எனவே; அறத்தின் அடிப்படையில்தான் பொருளும் இன்பமும் அமைகிறது, என்பதற்கு ஏற்ப 38 அடி பீடமும், பொருட்பாலும், இன்பத்துப்பாலும் 95

அதிகாரங்கள் கொண்டவை. அதைக் குறிக்கும் விதத்தில் அது திருவள்ளுவர் சிலையாகவும் அமைய இருக்கின்றது.

அது மாத்திரமல்ல; ஏதோ தூரத்தொலைவுகளிலிருந்து பார்த்தால் ஒரு பெரிய சிலை என்கின்ற அளவோடு மாத்திரமல்ல; உள்ளே சென்று வர, புறத்திலே மாத்திரமல்ல; அகத்திலேயும் அறிகின்ற அளவிற்கு அந்தச் சிலை ஒரு கூடு வடிவமாக அமையப்பெற்று, சிலைக்குள்ளேயே மக்கள் சென்று சிலைக்குள் இருந்தவாறே வெளிப்புறங்களையெல்லாம் பார்க்கக்கூடிய அளவில் அமைக்கப்படுகிறது.

அதிலும் ஒரு புதுமையாக உச்சிக்குச் சென்ற உடன் அங்கு வெற்றிடம் என்று இல்லாமல் உட்பகுதியிலேயே ஒரு சிறிய வள்ளுவர் சிலை 5 அல்லது 6 அடி உயரத்தில் தரைப்பகுதியிலே உள்ளே இருந்து பார்ப்பதற்கு ஏற்ற வகையிலே அமைக்கப்படுகிறது.

இவைகளையெல்லாம் நான் எண்ணிப் பார்க்கிறேன். கற்பனை செய்து பார்க்கிறேன். இந்தக் கற்பனையெல்லாம் இரவிலே கனவாக வர வேண்டும் என்றுகூட நான் விரும்புகிறேன்; வேண்டுகிறேன்.

அப்படிப்பட்ட ஒரு சிலையை அமைத்து, தமிழகத்திலே உள்ள 5 கோடி மக்களிலே பாதிப் பேராவது இந்தப் பகுதிக்கு வந்து, கன்னியாகுமரி முனையிலே இருந்து திருநெல்வேலி மாவட்டம், மதுரை மாவட்டம் வரையிலே பெருகி இருக்கின்ற மக்கள் கடல் நேரடியாகச் சிலை திறப்பு விழாவைக் காண முடியாவிட்டாலும் தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலமாகத் தமிழ் மக்கள் அந்தச் சிலை திறப்பு விழாவைக் காணவும் -

அந்தச் சிலை திறப்பு விழாவைக் காண உலகம் முழுவதிலுமிருந்தும் தலைவர்களும் உலகம் முழுவதிலுமிருந்து தமிழ்ப் பெருங்குடி மக்களும், வெவ்வேறு இனத்தவரும் வரவேண்டும் என்கின்ற கனவைக் காணுகின்றேன்.

அந்தக் கனவு பலிக்க வேண்டும் என்று விரும்புகின்றேன். அது பலிப்பதற்கான வாழ்த்துகளை உங்களிடமிருந்து நான் வேண்டுகிறேன்.



வள்ளுவருக்கு வானுயரச் சிலை; உலகத் தமிழினத்திற்கே கிடைத்த அரிய கருவூலம்!

இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இணையற்ற வரலாற்றுச் சாதனையை கலைஞர் நிகழ்த்தியுள்ளார்

தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஜன.1-

தென் குமரிமுனையில் ரூ.10 கோடி செலவில் வள்ளுவருக்கு வானுயரச்சிலை அமைத்ததன் மூலம் உலகத் தமிழினத்திற்கே அரிய கருவூலத்தை வழங்கியுள்ள முதல்வர் கலைஞர் அவர்கள்; இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இணையற்ற வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தி தமிழகத்திற்கும், தமிழ்மொழிக்கும், தமிழக அரசுக்கும் பெருமை சேர்த்திருக்கிறார் என தமிழக அரசு ஒரு செய்திக் குறிப்பில் கூறியுள்ளது.

இதுகுறித்து அரசின் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு செய்திக்குறிப்பு வருமாறு:-

முக்கடலும் சந்திக்கும் இடத்தில் ஒளிர்ந்து நிற்கும் பாறை. இந்தப் பாறையில்தான் தமிழுக்குச் சிறப்பளித்து, எக்காலத்திற்கும் எந்த இனத்திற்கும் பொருந்தக் கூடிய வாழ்வின் நிறைவு கோலாய்த் திகழும் குறளைப் படைத்த வள்ளுவருக்கு மாபெரும் நிலைவடிவம் கண்டிருக்கிறார் கலைஞர் அவர்கள்.

பொதுவாழ்வில் மனித நேயத்தை வளர்த்தெடுக்கும் கருவூலம்.

குறளின் மாட்சிமையை எடுத்துக்காட்டும் காட்சிகள்

ஏறத்தாழ ரூ.10 கோடி செலவில் நடைபெற்ற சிலை அமைப்புப் பணிகள் முடிவுற்று திறப்பு விழா இந்த நூற்றாண்டின் நிறைவு நாளான நேற்றும், இருபத்து ஒன்றாம்நூற்றாண்டின் முதல் நாளான இன்றும் கன்னியாகுமரியில் கடல் பெருமை சார்ந்த சான்றோர்களின் கட்டுரை, கதை, கவிதைகள் தாங்கி, கோட்டம் முதல் குமரி வரை மலரை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் முரசொலி மாறன் வெளியிடுகிறார்.

குறளின் குரலை வெளிப்படுத்தும் வகையில் 133 ஓவியர்கள் வரைந்த ஓவிய படைப்புகள் கண்காட்சியாய் அமைந்திருக்கின்றது.

4000-க்கும் மேற்பட்ட நூல்கள் கண்காட்சி. இதில் பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள், ஆய்வுக் கட்டுரைகள், வள்ளுவரையும் குறளையும் உயர்ந்தேத்தும் அறிஞர்களின் நூல்கள் பல இடம் பெற்றுள்ளன.

குழந்தைகள் பங்குபெறும் திருக்குறள் முற்றோதல் நிகழ்ச்சி, பதினாறு கவன நிகழ்ச்சி ஆகியவையும் நடைபெறுள்ளன.

இவ்விழாவில் மத்திய மாநில அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி கலந்து

வரலாற்றின் சாதனை ஏட்டில் இடம்பெறும் இவ் விழாவில், நாடோரே, நல்லோரே, நற்றமிழ் இனத் தோரே, திரண்டிடுவோம் வாரீர்! வள்ளுவம் போற்று வோம் வாரீர்!! வாரீர்!!!

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பு கூறுகிறது.

4-ஆம் பத்தி தொடர்ச்சி

உள்கட்டமைப்பு வசதிகளை யும் வாய்ப்புகளையும் உருவாக்கித்தர வேண்டும் அத்துடன் வரும் ஆண்டு களின் சவால்களைச் சந்திக்க நாமும் சகல வாய்ப்பு களையும் பெற்றிருக்க வேண்டும்.

அதே நேரத்தில் நம முடைய நாட்டை ஒன்றாகவைத்துள்ள, எதிர்கால சந்ததிகளை நமது மாபெரும் பாரம்பரியத்தை கூறி அவற்றை பாதுகாக்கும் உறுதியை உருவாக்க தேவை யான மதிப்பீடுகளையும் பாதுகாக்கவேண்டும்.

மதிழச் செய்கிறமான இந் நாளில் மோதல், வெறுப்பு, வன்முறை ஆகியவற்றை அகற்றவும், சமுதாய ஒருமைப்பாட்டை நமது



- 2030
மார்கழி 14


முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு.கருணாநிதி

முப்பால் யாத்த முதுபெரும் தமிழ் ஞானியின் திறம் பாடிட, திக்கெல்லாம் புகழ் பரப்பி

திருவள்ளுவப் பெருந்தகைக்கு 133 அடி உயரச்சி

முனை தன் குமரிமுனையில் கலைஞர் திறந்து வைக்கி





மிழோசையுடன் இன்று விழா தொடங்குகிறது

ம் சங்கமிக்கும் குமரிமுனையில்

டைத்த வள்ளுவருக்குச் சிலை

ல்வர் கலைஞர்

வைக்கிறார்

ய்து,

ணித்துறை விடுதிகளில் குறளுடன்
ம் வைக்கச் செய்து,

வர் படம் வரைந்த வேணுகோபால
ம்ப நிதி உதவி அளித்து,

த காவியமாக குறளோவியம் படைத்து,
ழங்கிய 1330 குறளுக்கும் உள்ளது
ழுதி,

வியக் கண்காட்சி
ல்கள் கண்காட்சி

மேலாக சென்னையில்



வாணன், முனைவர் சிலம்பொலி செல்வப்
சிகாகோவைச் சேர்ந்த ரிச்சர்டு வீஸ், ஜப்பானைச் சேர்
திருமதி யூகோ புக்குராய், பேராசிரியர் ப
பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், புலவர் இர
இளங்குமரன், முனைவர் சிதயினார்முகமது, முனைவ
திருமதி சக்திபெருமான், முனைவர் ப.வளரா
வலம்புரிஜான், திருமதி இளம்பிறை மணிமாறன்
ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்குகின்றனர்.

திருவள்ளுவர் சிலையை
முதல்வர் திறந்து வைக்கிறார்

பிற்பகல் 4.30 மணியளவில் திருவள்ளுவர் சிலை
திறப்பு விழா நடைபெறுகிறது. கல்வி அமைச்சர்
பேராசிரியர் தலைமை வகிக்கிறார். செய்தி
மற்றும் அச்சுத் துறை அமைச்சர்
வரவேற்புரையாற்றுகிறார்.


ஒரு ஊராட்சி மன்
த ஆண்டை த
ிய நூலாகவும்
ரி முனையில் இலட்சக்
திருவள்ளுவர் சிலையை
கன்னியாகுமரி, ஜன.1-
ஆண்டை தமிழ் ஆண்டாக மத்திய அரச
வேண்டும்; அதேபோன்று திருக்குறளை
ாக மத்திய அரச அறிவிக்க வேண்டும்;
ஊராட்சி மன்றத்திலும், பேரூராட்சியிலும்
யில் பல இடங்களிலும் வள்ளுவர் பெயரால்
அமைக்கப்பட வேண்டும் என்று குமரி
ல் இலட்சக்கணக்கான மக்கள் திரண்ட
டமான விழாவில் 133 அடி உயர திருவள்ளு
லையைத் திறந்து வைத்து உரையாற்றிய
ர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.
ள்ளுவர் சிலையை திறந்து வைத்தது முதல்வர்
ர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-
ும் இன்றும் நடைபெற்று வருகின்ற இந்த விழா
யில் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்த உங்கள்
வருக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தை
ாழுத்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்
றேன்.
மூப்பனார் என்னிடம் கொண்டுள்ள
புக்கும், நல்உணர்வுக்கும் அடையாளம்
ந்த இனிய விழா, எழுச்சி விழா, என் உள்ளம் கவர்ந்த
என உயிரோடு உயிரணுக்களோடு கலந்த விழா
தை நீங்கள் அறிவீர்கள், நீங்கள் அனைவரும் மிக நன்றாக
ர்வீர்கள். அதனால்தான் இந்த விழாவிலே கண்ட
ியை வியந்து நம்முடைய மூப்பனார் அவர்கள் இங்கே
இலட்சக்கணக்கில் குமு
எழுந்து நிற்கச் செய்து, "
பாராட்டுவதற்கு அடைய
நினது கையொலி செய்யு
உற்சாகத்தோடு கையொலி
வாழ்த்தியிருக்கின்றீர்கள். அ
நட்டும், நல்உணர்வும் கொ
அதைப்போலவே திருவள்ளு
பற்று கொண்டிருக்கிறார்
அடையாளமாகும். இதை
லை பேர் நாட்டிலே இருக்
ஆச்சரியமே தவிர வேறு
மூப்பனார் அவர்கள்
என்னிடத்திலே ஒரு
எப்பொழுதுமே புத்தகம்
வெளியிட்டு விழாவுக்கு
கொடுக்க மாட்டார்கள். அ
மேலே பளபளப்பான
"உங்களுக்கு ஒரு புத்தகம்
விழாவுக்கு பரிசாக" என்று
எதையும் விளம்பரத்தோடு
அவர் என்ற காரணத்தா
பொழுதே என்னிடத்திலே
பார்த்தேன். எனக்கே ஆச்சரி
"You Can Win". (உங்களால்
கைதட்டல்) என்று இ
கொடுத்தாரோ எனக்குத்
தொடர்ச்சி
ய்யன் வள்ளுவனுக்கு
லை கடற்பரப்பில் க

LICENCE NO: TN/MS (C) M 7436

...ற்றத்திலும் வள்ளுவர் பெயரால் படிப்பகம்

...மிழ் ஆண்டாகவும், திருக்குறளை...

...மத்திய அரசு அறிவிக்கவேண்டும்

...க்கணக்கான மக்கள் திரண்ட பிரமாண்ட விழாவில்

...யத் திறந்து வைத்து முதல்வர் கலைஞர் உரை

...ழுமியிருக்கின்ற உங்களையெல்லாம் ...ம். "கருணாநிதியை பாராட்டுங்கள். ...டர்களாக அலைவரும் எழுந்து ...யுங்கள்" என்று கேட்டு நீங்களும் ...ாலி செய்து என்னைப் பாராட்டி ...ர். அவர்கள் என்னிடத்தில் எதனையை ...கொண்டு இருக்கிறார் என்பதற்கும், ...ள்ளுவரிடம் எந்த அளவிற்கு அவர் ...ர் என்பதற்கும் இந்த நிகழ்ச்சி ஒரு ...தமும் புரிந்துகொள்ளாமல் இன்னும் ...ருக்கிறார்களே என்பதுதான் எனக்கு ...று இல்லை. (கைதட்டல்)

...கள் இந்தப் பந்தலுக்கு வந்ததும் ...ரு புத்தகத்தை கொடுத்தார். ...ம் கொடுத்தால் மேடையிலே புத்தக ...கு கொடுப்பதைப்போல யாரும் .... ஆனால், அவர் அந்தப் புத்தகத்தை ... பேப்பரெல்லாம் போட்டு ஒட்டி, ...ம கொண்டு வந்திருக்கிறேன். இந்த ...ாறு அங்கேயே கொடுத்துவிட்டார். ...டு கொடுப்பதற்கு பிரியப்படாதவர் ...த்தால் அங்கே உட்காந்திருக்கும் ...லே அதை கொடுத்தார். பிரித்துப் ...ச்சரியம்! புத்தகத்தினுடைய தலைப்பு ...ால் ஜெயிக்க முடியும்) (பலத்த ... இருந்தது. என்ன அர்த்தத்தில் ...த் தெரியாது. (மீண்டும் கைதட்டல்)

...ச்சி 3-ஆம் பக்கம்



குமரிமுனையில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை முதல்வர் கலைஞர் திறந்து வைத்த காட்சி. கல்வி அமைச்சர் பேராசிரியர், அமைச்சர்கள் முல்லைவேந்தன், சுரேஷ்ராஜன், அரசியல் கட்சித் தலைவர்கள் ஜி.கே.மூப்பனார், இல.கணேசன், என்.சங்கரய்யா, வைகோ மற்றும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோர் உடன் உள்ளனர்.

...அழியா நினைவுச்சின்னம்

...லைஞர் திறந்து வைத்தார்

...வெண்கலக் குரலில் 'தமிழ்த்தாய் வாழ்த்து' ஒலிக்க இனிதே தொடங்கிற்று!

இந்த வரலாற்று நிகழ்ச்சிக்கு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் தலைமை தாங்கினார்.

செய்தி - விளம்பரத்துறை அமைச்சர் வருவாய்வேந்தன் வரவேற்புரையாற்றினார்.

வள்ளுவர் வாழ்ந்த வீட்டிற்கு வந்து முதல்வர் கலைஞர் அவர்கள் - தேரடி வீட்டை சரியாக 7.30 மணியளவில் திறந்து வைத்தார்.

திருவெள்ளுமிருந்து ஒலி வெள்ளம் திருவாளர் வெ...பிரபு பொழிய - வாழ்நர் வள்ளுவர் வெ... பாராட்டுரை






திருவள்ளுவர் சிலை







திறப்பு விழா


கோட்டம்
முதல்
குமரி
வரை


திருவள்ளுவர் சிலை அமைத்து
திறந்து வைத்தவர்
தமிழக முதலமைச்சர்
கலைஞர் மு.கருணாநிதி
ஜனவரி 1.கி.பி.2000
THIRUVALLUVAR STATUE
DESIGNED AND DECLARED OPEN
BY
HON'BLE CHIEF MINISTER OF TAMI
KALAIGNAR M.KARUNAN
January 1, 2000 A.D.
Prof. K. Anbazhagan
Hon'ble Minister for Education
President of the Function
Thiru V. Mullaivenda
Hon'ble Minister for Informat
Secretary Celebration Committe
சிற்பி
கணபதி ஸ்தபதி
திருவள்ளுவர் ஆண்டு - 2030
Sculptor
V. Ganapati Sthapati
Thiruvalluvar Andu 2030

அறம்







என் உயிரோடு உயிரணுக்களோடு கலந்த விழா

கன்னியாகுமரி கடற்பாறையில் அய்யன் திருவள்ளுவர் சிலையை 01.01.2000 அன்று திறந்துவைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை...

நேற்றும் இன்றும் நடைபெற்று வருகின்ற இந்த விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும், வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இனிய விழா, எழுச்சி விழா, என் உள்ளம் கவர்ந்த விழா என் உயிரோடு உயிரணுக்களோடு கலந்த விழா என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் அனைவரும் மிக நன்றாக உணர்வீர்கள்.

அதனால்தான் இந்த விழாவிலே கண்ட எழுச்சியை வியந்து நம்முடைய மூப்பனார் அவர்கள் இங்கே இலட்சக்கணக்கில் குழுமியிருக்கின்ற உங்களையெல்லம் எழுந்து நிற்கச்செய்து, 'கருணாநிதியைப் பாராட்டுங்கள். பாராட்டுவதற்கு அடையாளமாக அனைவரும் எழுந்து நின்று கையொலி செய்யுங்கள்' என்று கேட்டு, நீங்களும் உற்சாகத்தோடு கையொலி செய்து என்னைப் பாராட்டி வாழ்த்தியிருக்கின்றீர்கள்.





என்னுடைய அருமைச் சகோதரர் சிவாஜி அவர்கள் உணர்ச்சிமிக்க சில வார்த்தைகளை இங்கே கொட்டி என்னையும் ஒரு கண நேரம் உணர்ச்சி வயப்படச் செய்தார். ஏற்கெனவே, கடந்த ஆண்டு நடைபெற்ற என்னுடைய பவள விழா நிகழ்ச்சியில் அவர் மனம் உருகப் பேசியதும், நானும் உருகியதும் உணர்ச்சிவயப்பட்டதும் ஊரெல்லாம் உள்ள தொலைக்காட்சி வாயிலாக நீங்கள் அனைவரும் கண்ட ஒன்றுதான்.

அதைப்போல இன்றைக்கு என்னுடைய தாய் மன்னிக்க வேண்டும். அவருக்கும் தாய்தான். அந்த அஞ்சுகத்தாயை நினைவுபடுத்தி, "அவர் இருந்து பார்த்தால் என்ன உணர்ச்சிவயப்படுவாரோ, அதே உணர்ச்சியோடு நான் உன்னை வாழ்த்துகிறேன்" என்று அவர் இங்கே சொன்னபோது நான் என்ன ஆகியிருப்பேன் என்பது அவருக்குத் தெரியும்.

அப்படி நாங்கள் இருவரும் பாலபருவத்திலிருந்து பழகிய பாசமுள்ள நண்பர்கள். இடையிலே சில நேரங்களில் புயல், சோதனை, சூறாவளி இவைகள் சுழன்று அடித்தபோதிலும் எங்களுடைய நட்பை எந்த ஒரு நிகழ்வுகளாலும் அசைக்க முடியவில்லை என்பதை நாடறியும். நாங்களும் மிக நன்றாக அறிவோம். அவருடைய வாழ்த்து, அவருடைய பாராட்டு இந்த விழாவிலே எனக்கும், இந்த அரசுக்கும் இந்த வள்ளுவர் சிலை திறப்பு விழாவிலே கிடைத்திருக்கிறது.

பல கட்சிகளின் தலைவர்கள் இங்கே என்னை வாழ்த்தியிருக்கிறார்கள். நம்முடைய வாழப்பாடியார் அவர்கள் ஒரு கோரிக்கையை இங்கு வைத்தார். "காலப் பெட்டகம் ஒன்றை அமைக்கவேண்டும். இப்போதே நடைபெற்றுள்ள சம்பவங்களையெல்லாம் அதிலே எழுதி வைத்து காலப்பெட்டகத்தை புதைத்து



வைக்க வேண்டும். எதிர்காலத்திலே புதிய சமுதாயம் அதை எடுத்துப் பார்த்து இந்த வரலாற்றை உணர வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

காலப்பெட்டகம் தயாரிக்கின்ற அளவிற்கு நான் இன்னும் பல சாதனைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது என்பதை உணராமல் இல்லை. அப்படி உணருகின்ற காரணத்தால்தான் இன்னும் நாம் ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம் இருக்கின்றன என்ற காரணத்தால்தான் வழிகாட்டக்கூடிய வள்ளுவனுடைய சிலையைத் திறந்துவைத்து அந்த அய்யன் வழி நின்று நம்முடைய பணிகளைத் தொடருவோம் என்கின்ற உறுதியை, சூளுரையை இன்றைக்கு இங்கே நாம் எடுத்துக்கொள்கிறோம்.

தம்பி வைகோ உணர்ச்சிகரமாக பல செய்திகளை இங்கே எடுத்துச்சொல்லி திராவிட இயக்கத்தினுடைய தாக்கம் பற்றி குறிப்பிட்டார். வாழப்பாடியார் அவர்களும் அதையே சொன்னார். திராவிட இயக்கத்தினுடைய தாக்கத்தால் திருவள்ளுவர் நினைவும், திருவள்ளுவரைப் பற்றிய சிந்தனைகளும் திருவள்ளுவருடைய கொள்கைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற மனப்பான்மையும் தமிழகத்திலே உருவானது என்ற வரலாற்றுச் சான்றுகளை எடுத்துச் சொன்னார்கள்.

பாமரர்களின் கைக்கும் திருக்குறள்

எங்களையெல்லாம் ஆளாக்கிய தந்தை பெரியார் அவர்கள் திருவள்ளுவருடைய பெருமையைச் சொல்ல திருக்குறளின் தத்துவங்களை எடுத்துக்காட்ட சென்னை மாநகரத்திலே 1942 ஆம் ஆண்டு வாக்கில் திருக்குறள் மாநாடு ஒன்றை நடத்திய பிறகுதான் பண்டிதர்களுடைய நூலகங்களில் மாத்திரம் இருந்த

திருக்குறள் பாமர மக்களுடைய கைக்கு வந்தது என்பதை யாரும் மறக்க முடியாது.

இப்படி பெரியார் அவர்களால் பாமர மக்களுடைய கைக்கு அனுப்பப்பட்ட திருக்குறள் இன்றைக்கு எல்லோராலும் போற்றப்படுகிற, எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கப்படுகின்ற அளவிற்கு வளர்ந்திருக்கின்றது. இதில் திராவிட இயக்கத்துக்கு மட்டும் உரிமை கொண்டாட நான் விரும்பவில்லை.

இங்கே தேசிய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பலர் இருக்கிறார்கள். தேசிய இயக்கத்திலே இருந்து தொண்டு புரிந்தவர்கள், தியாகம் செய்தவர்கள் எல்லாம் மேடையிலே வரிசையாக அமர்ந்திருக்கிறார்கள். இலக்கியச் செல்வர் குமரிஅனந்தனைப் போன்றவர்களெல்லாம் திருக்குறளிலே ஊறித் திளைத்தவர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். எனவே, திராவிட இயக்கத்திற்கென்று நான் தனிச் சொந்தம் கொண்டாட விரும்பவில்லை.

அது ஒரு கட்டத்திலே திருவள்ளுவரை



உணர்ந்து கொள்வதற்கு, அறிமுகம் செய்வதற்குப் பயன்பட்டிருக்கலாம். ஆனால், எல்லா இயக்கத்திற்கும், எல்லா கட்சிகளுக்கும், எல்லா கட்சிகளிலே இருக்கின்ற தமிழ்ப்பெருங்குடி மக்கள் அனைவருக்கும் உரிய ஒன்றுதான் திருக்குறள் நூல். திருவள்ளுவர் வகுத்த மார்க்கம், அவர் கண்ட வழி.

திருவள்ளுவரை சில பேர் கவிஞர், புலவர் என்றெல்லாம் இங்கே சொன்னார்கள். மன்னித்துக் கொள்ளவேண்டும். நான்கூட இதுவரையில் அப்படிச் சொல்லியிருந்தால் நானும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். திருவள்ளுவரை கவிஞர் என்ற ஒரு வட்டத்திற்குள் அடைக்க நான் விரும்பவில்லை. நேற்றைக்கு நம்முடைய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள். வட்டத்திற்குள்ளே திருவள்ளுவரை அடைக்க முடியாது என்று குறிப்பிட்டார்கள். அதைத்தான் நானும் சொல்கின்றேன்.

இங்கே நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போதும் அதைக் குறிப்பிட்டார். ஒரு கவிஞன், ஒரு புலவன் என்கிற அளவோடு திருவள்ளுவரை நிறுத்த முடியாது. அவர் ஒரு தத்துவ ஞானி மாத்திரமல்ல, பொருளாதார மேதை, பொருளாதார மேதை என்றால் நம்முடைய அருமை நண்பர் சங்கரய்யா அவர்கள் முழுமையாக ஒத்துக்கொள்ளமாட்டார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அவருடைய பேச்சிலே கூட அது வெளிப்பட்டது. அதையும் நான் கவனித்தேன். ஆனால், வள்ளுவர் குறளிலே சொல்கிறான்.

ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை

என்ற இந்த ஒன்றே அவருடைய பொருளாதார நிபுணத்துவத்திற்குச் சான்று என்று நான் கருதுகிறேன்.

அதாவது இதற்கு பொருள்: 'வரவு குறைவாக இருந்தாலும், வருகின்ற வழி

சிறியதாக இருந்தாலும் சுருக்கமானதாக இருந்தாலும், கவலைப்படத் தேவையில்லை. வருவாய் குறைவாக இருந்தாலும் கவலைப்படத் தேவையில்லை. ஆனால், அதனால் எந்தக் கேடும் இல்லை. எப்பொழுது? போகாறு அகலாக் கடை அதாவது செலவு அதிகமாக ஆகாமல் இருக்கிற வரை வரவு குறைவாக இருந்தால் கவலைப்படத் தேவையில்லை'.

- என்கின்ற இந்த கருத்து முதலமைச்சராக மாத்திரமல்ல நிதியமைச்சர் பொறுப்பையும் ஏற்றிருக்கின்ற எனக்கு எவ்வளவு பயன்படக்கூடிய கருத்து என்பதை எண்ணிப் பார்த்தால் திருவள்ளுவன் பொருளாதாரத்துறையிலும் எவ்வளவு நுணுக்கம் வாய்ந்தவராக இருந்திருக்கிறார் என்பதை திருக்குறள் எந்த அளவிற்கு நுணுக்கத்தைத் தெரிவிக்கின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

பேராசிரியருக்கும் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் நன்றி

இந்த விழாவிலே நான் முதலில் சில பிரச்சினைகளைப் பேசுவதற்கு முன்பு முதலில் நன்றியினை தெரிவிக்க வேண்டும். யார் யாருக்கு என்றால்; இந்த விழா சிறப்பாக நடைபெறுவதற்கு விழாக் குழுவின் தலைவர் பொறுப்பை ஏற்று இவ்வளவு சிறப்பாக இரண்டு நாள் விழா நடைபெற ஒத்துழைத்த - காரணமாக இருந்த விழாக்குழுவின் தலைவர் பேராசிரியர் அவர்களுக்கும், துணைத்தலைவர் தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் தம்பி தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், இங்கே சிலை வைக்கப்படவேண்டும் என்று நான்கு ஆண்டுகாலமாக நடைபெறுகின்ற இந்தப் பெரும் பணியில் அவ்வப்போது குமரிமுனைக்கு வந்து, சிற்பி கணபதி ஸ்தபதி அவர்களிடத்திலும் மற்றவர்களிடத்திலும் கலந்து பழகி ஒவ்வொரு நாளும் நடைபெறுகின்ற செய்திகளை என்னிடத்திலே அறிவித்து மாதம் மூன்று நான்கு முறை குமரி



மாவட்டத்திற்கு வந்து உழைத்து இந்த சிலை உருவாகக் காரணமாயிருந்த செய்தித்துறை அமைச்சர் தம்பி முல்லைவேந்தனை மறக்கமுடியாது, அவருக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மேடையிலே இன்றைக்கும் நேற்றைக்கும் நான் சந்தித்த பல பெரும் புலவர்கள், ஆராய்ச்சியாளர்கள், கருத்துரையாளர்கள், வெளிநாட்டிலிருந்து வந்த வித்தகர்கள் இவர்களெல்லாம் வருவதற்கும் அவர்களுக்கான நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதற்கும் காரணகர்த்தாவாக விளங்கிய நம்முடைய முனைவர் தமிழ்க்குடி மகன் அவர்களையும் நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.


இந்தக் குழுவின் உறுப்பினர்கள் தம்பி ஆலடி அருணா, தம்பி சுரேஷ்ராஜன், திருமதி ஜெனிபர் சந்திரன் ஆகியோர்களுக்கும் நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிகாரிகளையெல்லாம் முடுக்கிவிட்டு இந்தப் பணிகளை ஆற்றுவதற்கு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பணியாற்றிய தலைமைச் செயலாளர் திரு. முத்துசாமி ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், மிக அழகான ஒரு மலரை இதுவரையில் வெளிவந்ததில்லை என்று சொல்லத்தக்க அளவிற்கு ஒரு அற்புதமான மலரை, 'கோட்டம் முதல் குமரி வரை' என்ற தலைப்பிலே வெளியிடுவதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய ஐ.ஏ.எஸ். அதிகாரி இறையன்பு அவர்களுக்கும், செய்தித்துறை அதிகாரிகள் ராமு, ஐ.ஏ.எஸ், முத்துசாமி, ஐ.ஏ.எஸ். ஆகியோர்களுக்கும் இந்த மாவட்ட ஆட்சியாளர் திரு.பாண்டியன், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லோருக்கும் மேலாக நன்றி தெரிவிக்க வேண்டியவர் சிற்பி கணபதி ஸ்தபதி

இதற்கெல்லாம் மேலாக எனக்கும் மேலாக நன்றி தெரிவிக்க வேண்டியவர் ஒருவர் இருக்கிறார். அவர்தான் சிற்பி கணபதி ஸ்தபதி என்று நான் சொல்ல விரும்புகிறேன். நின்றுகொண்டு எனக்கு கை தட்டினீர்கள். உட்கார்ந்துகொண்டு அவருக்காக, அவரைப் பாராட்ட கைதட்டுங்கள் என்று உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வளவு கடினமான உழைப்பு, அவ்வளவு ஆர்வம், அவ்வளவு அக்கறை,

அந்த உணர்வோடு அவர் பாடுபட்ட காரணத்தால்தான் ஏற்கெனவே 1975ஆம் ஆண்டு சிந்தித்து அறிவித்து அதற்குப்பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1979ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டி பிறகு ஏறத்தாழ பத்தாண்டுகாலம் அந்த அடிக்கல்லைப் பற்றி யாரும் கவலைப்படாமல் இருந்து பிறகு 1989லே பணி தொடங்குகின்ற விழா நடத்தி இரண்டாண்டு காலத்தில் ஆட்சி கலைக்கப்பட்டு விட்ட காரணத்தால் 1991க்குப் பிறகு இதற்கென்று ஒதுக்கப்பட்ட தொகையெல்லாம் வேறு சில பணிகளுக்காக செலவிடப்பட்டு வேலையே நடக்காமல் போயிருந்த நேரத்தில் 96ஆம் ஆண்டு மீண்டும் நான்காவது





முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு நான் வந்தவுடன் கணபதி ஸ்தபதியை அழைத்து அவரிடத்தில் பொறுப்பை ஒப்படைத்து "என்ன செய்வீர்களோ தெரியாது? இதை மீண்டும் தொடங்குகின்ற காரணத்தால் தொடங்கும் போதெல்லாம் ஆட்சிக்கு ஆபத்து வருகிறது. இருந்தாலும் நான் அந்த நம்பிக்கைக்கு ஆட்பட்டவன் அல்ல. எனவே இந்த சிலையை நீங்கள் முடித்துத் தரவேண்டும்" என்று கேட்டேன்.

அவரும் அதற்கு இணக்கம் தெரிவித்து எத்தனையோ கஷ்டங்கள். எத்தனையோ சோதனைகள், எத்தனையோ எதிர்ப்புகள், மறைமுகமான சூழ்ச்சிகள் இதையெல்லாம் வெற்றி கண்டு இந்தச் சிலை இன்றைய தினம் உங்கள் முன்னால் 133 அடி உயரத்தில் நின்று கொண்டிருக்கிறது.

கணபதி ஸ்தபதி அவர்கள்தான் பூம்புகார் சித்திரக் கலைக்கூடத்தை நிர்மாணித்துத் தந்தவர். அவர்தான் பாஞ்சாலங்குறிச்சியிலே கட்டபொம்மன் கோட்டையைத் திரும்பக் கட்டியவர். அவர்தான் வள்ளுவர் கோட்டத்தை நிர்மாணித்தவர்.

வள்ளுவர் கோட்டத்தை நிர்மாணித்த போது, அதைத் திறந்துவைக்கின்ற பேறு எனக்குக் கிடைக்காமல் போயிற்று. அதை மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர். பாலு இன்று காலையில் பேசும்போது குறிப்பிட்டு அனைவருடைய கண்களையும் கலங்க வைத்தார்.

மிசா நேரம். சென்சார் கொடுமை பத்திரிகைகளுக்குக்கூட. 500க்கும் மேற்பட்டவர்கள் எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் சிறைச்சாலைகளிலே இருந்தார்கள். மேடையிலே இருக்கின்ற பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கூட அன்றைக்கு சிறைச்சாலையிலே இருந்தார்கள் மிசா கொடுமையின் காரணமாக.

அந்த நேரத்திலேதான் நான் கட்டி முடித்த வள்ளுவர் கோட்டத்திற்கு திறப்பு விழாவிற்கு தேதி வைத்த கட்டத்தில் ஆட்சி கலைக்கப்பட்டது. அந்தத் தேதியில் வள்ளுவர் கோட்டத்தை நான் திறந்து வைத்து விடக்கூடாது என்பதற்காக முன்கூட்டியே ஒரு வாரத்திற்கு முன்பு ஆட்சி கலைக்கப்பட்டது.

நான் திறந்து வைக்கவில்லையே என்ற ஏக்கம் அல்ல. அந்த வள்ளுவர் கோட்டம் முழுமையடைந்துவிட்டதை உள்ளே சென்று பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கத்தில் நான் முரசொலியிலே எழுதிய கடிதத்திலேதான், "அரும்பாடுபட்ட வளர்த்த அழகு மகளுக்கு திருமணமாகிற நேரத்தில் மணமேடைக்குச் செல்ல முடியாத தாய், பந்தலிலே இருக்கின்ற ஓலைக்கீற்றின் இடுக்கு வழியாக பார்த்து மகிழ்வதைப் போல் நான் வீட்டிலே இருந்து பார்த்துக் கொண்டே மகிழ்கிறேன் தம்பி", என்று உடன்பிறப்புக்களுக்கு கடிதம் எழுதினேன். பதிமூன்று ஆண்டு காலம் - அதைத்தான் தம்பி டி.ஆர். பாலு இங்கே சுட்டிக்காட்டிப் பேசினார்.

அடிக்கல் நாட்டிய என் பெயர் இல்லாமலே 13 ஆண்டுகள் வள்ளுவர் கோட்டம் இருந்தது

என்னுடைய பெயர் இல்லாமலேயே, அடிக்கல் நாட்டிய அந்தக் கல் இல்லாமலே வள்ளுவர் கோட்டம் 13 ஆண்டு காலம் இருந்தது.

"பக்ருதீன் அலி அகமது அவர்கள் வந்து அதைத் திறந்து வைத்தார்கள்: ஆளுநர் கே.கே.ஷா தலைமையில்" என்ற அந்தக் கல்தான் அங்கே இருந்தது. ஆனால் நான் வள்ளுவர் கோட்டத்திற்காக நாட்டிய அடிக்கல் இடம் பெறவில்லை. அது மாத்திரமல்ல; வள்ளுவர் கோட்டத்தைக் கட்டி முழுவதும் முடிந்த பிறகுகூட, நான் திறப்புவிழாவிற்குத் தயாராக இருந்தபொழுது - வேறு கல் வைக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது. அந்த அடிக்கல் 13 ஆண்டு காலம் இடம் பெறவில்லை. எனக்குள்ள வருத்தம் எல்லாம், என்னுடைய ஜாதகத்தைப் பார்த்தீர்களா? இரண்டு நாளாக சில பத்திரிகைகளில் எழுதுகிறார்கள், 1979ஆம் ஆண்டு வைக்கப்பட்ட அடிக்கல் எங்கே? எங்கே? என்று கேட்டு எழுதுகிறார்கள். நான் அவ்வளவு அற்ப புத்தி படைத்தவன் அல்ல. அந்தக் கல் வைக்கத்தான் போகிறோம். அந்தக் கல்லின் மாடல்தான் இங்கே முன்னால் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது, அதைக் கூட தம்பி திருநாவுக்கரசு இங்கே சுட்டிக்காட்டினார். சகோதரர் ஆர்.எம்.வீ. அவர்களும் எடுத்துக்காட்டினார்.

இந்தக் கல்தான் அங்கே வைக்கப்படப் போகிறது. அதை யாரும் மறைக்கத் தயாராக இல்லை. ஆனால், அந்த 13 ஆண்டு காலத்தில் எனக்காகக் குரல் கொடுக்க தமிழகத்தில் யாரும் இல்லையே ஏன் என்றுதான் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

இத்தனை சோதனைகளையும் - இத்தனை சோதனைகள் என்றால் - எறியும் ஈட்டிகளல்ல, குத்தும் பாணங்களல்ல, மோதும் கணைகள் அல்ல, சக்கராயுதங்களை அல்ல, சூலாயுதங்களை அல்ல, அந்த எதிர்ப்புக்களை அல்ல - நான் அலட்சியப்படுத்தப்படுகிறேன் என்ற அந்த எதிர்ப்பைத் தாங்கிக்கொள்வது சாதாரணமான விஷயம் அல்ல. அதையும் தாங்கிக்கொண்டேன். காரணம், வள்ளுவன் மீது எனக்கிருக்கின்ற அன்பு. யார் திறந்தால் என்ன? யார் திறப்பு விழா நடத்தினால் என்ன? என் அய்யன் வள்ளுவருக்கு ஒரு மண்டபம் - பிறகு நான் துடித்தேன். பதைத்தேன். அது எதற்காகத் தெரியுமா? ஏன் தெரியுமா?

இலக்கியச் செல்வர் இங்கே குறிப்பிட்டதைப் போல, அந்த வள்ளுவர் கோட்டத்தில் இடையிலே ஐந்தாண்டு காலம் நடக்கக் கூடாதது எல்லாம் நடைபெற்றது. அதைக் கேட்டும் பார்த்தும் - அதைப் படமெடுத்து சில பத்திரிகைக்காரர்கள் போட்டார்களே, அதைப் பார்த்தும் துடித்திருக்கிறேன். கேட்டும் பதைத்திருக்கிறேன். பதறியிருக்கிறேன். அதையும் மறந்துவிடக்கூடாது.

நம்முடைய பேரவைத் தலைவர் திரு.பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் நேற்றுக் காலையில் திறந்துவைத்த ஓவியக் கண்காட்சியிலே இருக்கின்ற எல்லா ஓவியங்களையும் சென்னையிலே இருக்கின்ற வள்ளுவர் கோட்டத்திலே

வைத்து அழகு பார்க்கவிருக்கின்றோம். அழகு பார்க்க மாத்திரமல்ல. அறிவூட்ட விருக்கின்றோம்.

அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கெல்லாம் வள்ளுவத்தைக் கற்பிக்க வள்ளுவத்தை உணர்ந்துகொள்ள ஒரு வழி காட்டக்கூடிய அளவிற்கு அந்த ஓவியங்களையெல்லாம் வள்ளுவர் கோட்டத்திலே வைக்கவிருக்கிறோம் என்ற அந்தச் செய்தியையும் உங்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன்.

இதென்ன கன்னியாகுமரியிலே சிலை, ஓவியக் கண்காட்சி அங்கேயா! என்று குமரி மாவட்டக்காரர்கள் யாரும் கோபித்துக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் இங்கே அதற்காக ஒரு மண்டபம் கட்டி அதற்கொரு கோட்டம் கட்டுவதற்கு செலவுக்கு பணமில்லாத காரணத்தால் - ஆகாறு அளவிட்டதாயினும் கேடில்லை போகாறு அகலாக்கடை - என்ற குறளைப் பின்பற்றி: ஏற்கெனவே இருக்கின்ற கோட்டத்திலே கொண்டு போய் இவைகளை வைக்கலாம் என்ற எண்ணம் எங்களுக்கு இருக்கின்றது.

அருமை நண்பர் கோவை செழியன் இங்கே பேசும்போது பெங்களூரிலே பத்தாண்டு காலமாக திருவள்ளுவருடைய சிலை ஒன்று மூடிக் கிடக்கின்றதே, அது என்னவாயிற்று என்று கேட்டார். வாழப்பாடியார் அதற்காக தான் கடிதம் எழுதியதாகவும், அதற்கு பதில் வரவில்லை யென்றும் கூறினார். அதை ஏன் கவனிக்கக் கூடாதா என்று பக்கத்திலே இருந்த மக்கள் தலைவர் மூப்பனார் என்னைப் பார்த்துக் கேட்டார். குமரிஅனந்தன் அதைப் பற்றி கோபாவேசமாகப் பேசினார். எல்லோரும் பேசியிருக்கிறார்கள்.

ஆனால் நான் ஒரு உறுதி எடுத்திருக்கிறேன். அதை மூன்று மாதத்திற்கு முன்பு கருநாடகத்திலிருந்து ஓர் அமைச்சர் சென்னை மாநகரில் வந்து பேசியபோது "தமிழக முதலமைச்சர் கலைஞர் விரைவிலே எங்கள் ஊருக்கு வரவேண்டும்" என்றும், "ஒரு விழாவிலே கலந்து கொள்ள வேண்டும்" என்றும் கோரிக்கை வைத்தார். நான் அதற்கு பதிலளித்துப் பேசும்போது, "பெங்களூருக்கு ஒரு விழாவிற்கு வருவதென்றால் - நான் அங்கே இனி கலந்து கொள்கின்ற முதல் விழா அந்த திருவள்ளுவருடைய சிலை திறப்பு விழாவாக இருந்தால்தான் வருவேனே தவிர வேறு எந்த விழாவிற்காகவும் நான் அடியெடுத்து வைக்க மாட்டேன்" என்று சொல்லி விட்டேன்.

வராவிட்டால் என்ன, நன்றாகப் போய்விட்டது என்று சொல்ல மாட்டார்களா, அதற்காக நாம் போராட வேண்டாமா என்று கேட்கக்கூடும். இங்கே பேசிய இல. கணேசன் கூடக் குறிப்பிட்டார். அவரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். இங்கேயிருக்கின்ற எல்லா கட்சித் தலைவர்களையும் - இந்தியா ஒரு நாடு, பல மொழி பேசுகின்ற மக்கள். ஆகவே மொழி வழி மாநிலங்கள் என்று பிரிந்தாலுங்கூட, நம்முடைய ஒற்றுமையும் ஒருமைப்பாடும் சோதனைக்கு ஆளாகக் கூடாது.

அதை சோதனைக்கு ஆளாக்குகின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை மீறி நாம் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் நிலை நாட்ட வேண்டும். அதற்கும் வள்ளுவம்தான் பயன்பட வேண்டும். பெங்களூரிலே இருக்கின்ற வள்ளுவருடைய சிலையை திறப்பதற்கு அனுமதிக்கிறார்களா? இல்லையா என்று கேட்டு உள்ளபடியே ஒற்றுமையிலே, ஒருமைப்பாட்டிலே மத்தியிலே இருக்கின்ற அரசுக்கோ அல்லது மாநிலத்திலே இருக்கின்ற அரசுக்கோ நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்து விட வேண்டியதுதான், காலையில் வந்த செய்தி உண்மையாக இருந்தால், அதிகாரபூர்வமாக இருந்தால் மகிழ்ச்சி. இல்லாவிட்டால் அதைப்பற்றி என்ன செய்யலாமென்று இந்த மேடையிலே இருக்கின்ற நாமெல்லாம் உட்கார்ந்து ஒரு முடிவெடுப்போம். முடிவெடுக்க நீங்கள் எல்லாம் வரவேண்டுமென்று இந்த வள்ளுவர் சிலை திறப்பு விழாவிலே உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

வள்ளுவருக்கு ஒரு நாள் விடுமுறை அளிக்க - "வள்ளுவர் நாள்" என்று ஒரு நாளை நிர்ணயிக்க வேண்டுமென்று தமிழக அரசு கடந்த காலத்திலே எண்ணி 1969ஆம் ஆண்டு நான் முதல்வராக ஆனபோது அமைச்சரவையிலே ஒரு முடிவெடுத்து ஒவ்வொரு ஆண்டும் பொங்கலுக்கு மறுநாள் வள்ளுவர் திருநாள் என்று அறிவிக்கப்பட்டது. அது முதல் பொங்கல் விழாவிற்கு மறுநாள் வள்ளுவர் விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டும் கொண்டாடப் போகிறோம்.

- அது மாத்திரமல்ல, திருக்குறளை ஒப்புவிக்கும் திறன் கொண்ட குழந்தைகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அரசின் சார்பில் அனுப்பப்படும் என்று நேற்று அறிவித்திருக்கிறேன். அதை இங்கே பேசிய பலரும் பாராட்டினார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த மாதம் முதலே அந்தத் தொகை அனுப்பப்படும். எங்களுக்கும் உண்டா என்று சில பெரியவர்கள் கேட்டார்கள். நான் குழந்தைகளுக்கென்றுதான் அறிவித்திருக்கிறேன். வயதானால் நாங்களும் குழந்தைகள்தானே என்று விவாதிக்கக்கூடும். ஆனால் அந்த வாதம் சரியான வாதமாக இருக்காது என்பது அவர்களுக்கும் தெரியும்.

குழந்தைகள் நான்கு வயதாக இருந்தால் அந்த வயது முதல் 20 வயது வரையிலே உள்ளவர்கள் திருக்குறளிலே தங்களுடைய திறமையைக் காட்டுவார்களானால் ஆற்றலைக் காட்டுவார்களேயானால் அவர்களுக்கெல்லாம் ஆயிரம் ரூபாய் நிச்சயமாக வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றைய தினம் 22 சிறாரும், இளைஞர்களும் தங்களுடைய திறமையைக் காட்டினார்கள். அந்த எண்ணிக்கை 25 ஆக ஆகலாம். 100 ஆகக்கூட ஆகலாம். அப்படியானாலும் கூட கவலையில்லை. அவர்களுக்கெல்லாம் குறள் பரிசு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். அப்படியாவது திருக்குறளை எல்லோரும் படிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு படிக்க மாட்டார்களா என்கிற ஆசையிலேதான் இதனை அறிவிக்கிறேன்.

இன்னொன்று; கடந்த காலத்திலே திருவள்ளுவர் மன்றங்கள் பல இடங்களிலே இருக்கும். திருவள்ளுவர் படிப்பகங்கள் பல இடங்களிலே இருக்கும். அரசின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன். தனிப்பட்ட முறையிலேயும் கேட்டுக் கொள்கிறேன். எல்லா கட்சித் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும் ஒரு படிப்பகம் திருவள்ளுவருடைய பெயரால் அமையவேண்டும்.

வரும் ஜனவரி 16 திருவள்ளுவர் நாள் முதல் அப்படி நிச்சயமாக அமைவதற்கான வழிவகைகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று இங்கே என்னோடு வந்திருக்கின்ற தலைமைச் செயலாளர் திரு. முத்துசாமி ஐ.ஏ.எஸ். அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக இந்த ஆண்டு திருவள்ளுவர் நாள், 15ஆம் தேதி பொங்கல் நாளுக்கு அடுத்து 16ஆம் தேதி வருகின்றது.

அன்றைய தினம் தமிழகத்தில் இருக்கின்ற எல்லா ஊராட்சி மன்றங்களிலும் குறைந்தபட்சம் ஊராட்சி மன்றம் என்று சொல்கிறேன். பேரூராட்சிகளும், நகராட்சிகளும் இடம் பெறலாம். நகராட்சிகளில் பல இடங்களிலேகூட ஏற்படலாம். அங்கெல்லாம் திருவள்ளுவர் நூலகங்கள், படிப்பகங்கள் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த முயற்சிகளும் அரசின் சார்பிலே எடுக்கப்படும். அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு தேவை என்று கேட்டுக் கொள்கிறேன்.



தமிழ் ஆண்டாக அறிவிக்க வேண்டும்

தமிழ் ஆண்டு என்று இந்த ஆண்டை அழைக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதிலே எனக்கு முழுமையான கருத்தொற்றுமை இல்லை. சங்கரய்யா எண்ணக்கூடும். இவர் சொன்னால் வாஜ்பாய் சம்மதிக்க மாட்டார். எனவே சமாளிக்கிறேன் என்றுகூட அவர் கருதக்கூடும். அதல்ல காரணம். நான் கேட்பது அதென்ன ஓராண்டு மாத்திரம் தமிழ் ஆண்டு, ஒவ்வொரு ஆண்டும் தமிழாண்டாக இருக்க வேண்டும் என்பதுதானே தமிழனுடைய எண்ணமாக இருக்க முடியும்.

இருந்தாலும்கூட - இதைக் கூடச் செய்ய கூடாதா என்று கேட்கின்ற கேள்விக்கு இடமில்லாமல், சென்ற ஆண்டு சமஸ்கிருத ஆண்டு என்று அறிவித்ததைப் போல இந்த ஆண்டை தமிழ் ஆண்டு என்று அறிவியுங்கள் என்ற அந்தக் கோரிக்கையை ஒரு தீர்மானமாகவே இங்கிருந்து அனுப்புவதாக மத்திய அரசு எண்ணி அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல திருக்குறளை தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்று கேட்டார்கள். அது உலக நூல். அதை ஏன் இந்திய அளவிற்கு ஆக்க வேண்டுமென்று கூறுகிறீர்கள் என்று தெரியவில்லை. இருந்தாலும் குமரி அனந்தன் கோபத்தோடு கேட்டிருக்கிறார். மற்றவர்களும் அதைப்பற்றி பேசியிருக்கிறார்கள். இதற்கு முன்பே இதைப்பற்றி தம்பி வைகோ பல இடங்களிலே பேசி நான் பத்திரிகையிலே படித்திருக்கிறேன்.

திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும்

இங்கே பேசிய பலரும் திருக்குறளை தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது உலக நூல், அதை தேசிய நூல் என்று இந்திய அளவிலே அடக்க நான் விரும்பவில்லையென்றாலுங்கூட குறைந்தபட்சம் தேசிய நூலாக ஆவது ஏற்றுக்கொள்ளுங்கள் என்ற அந்தக் கருத்தை உங்களுடைய கோரிக்கையாக நானும் ஏற்றுக்கொண்டு திருக்குறளை தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்கிற அந்த முன்மொழிவையும் மத்திய அரசுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

வாழ்க வள்ளுவர்

இன்று நான் சிலையைத் திறக்க முடியுமா என்று மாலையிலே எண்ணினேன். காரணம் சிலை திறக்கின்ற நேரத்தில் என்னுடைய உள்ளம் என்னவாகும் என்கின்ற அச்சம். என்ன ஆகுமென்ற பயம், என்ற சந்தேகம். அதற்காகவே மயக்கம் வரக்கூடாத மாத்திரை ஒன்றை சாப்பிட்டு விட்டுத்தான் நிகழ்ச்சிக்கு வந்தேன். ஏனென்றால் இந்தச் சிலையோடு நான் அந்த அளவிற்கு உணர்ச்சிகரமாக ஒன்றிப்போய் இருக்கிறேன். எனவேதான் உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

புலவர்களே, தலைவர்களே, இளைஞர்களே, அடிகளார் அவர்களே, எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன். இனி என் அய்யன் திருவள்ளுவனை கவிஞர் என்று அழைக்காதீர்கள், புலவன் என்று அழைக்காதீர்கள், அவனை அய்யன் என்றே அழையுங்கள். அய்யன் என்பதிலே ஒரு தெய்வாம்சம் இருக்கிறதே என்று தெய்வத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் எண்ணினால்கூட நான் நாத்திகன்தான். இருந்தாலும் இந்தத் தெய்வத்தை ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறி வாழ்க வள்ளுவர் என்றுரைத்து விடைபெறுகிறேன்.



திருக்குறள்: மனித வாழ்க்கையை மையமாக கொண்ட தத்துவ நூல்

திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் **பேராசிரியர் அன்பழகன்** அவர்கள் ஆற்றிய தலைமையுரை.

விழாவின் பெருமையை, விழா குறித்துப் பேசப்பட்ட எழுச்சிமிக்க, உணர்ச்சிமிக்க, ஆர்வமிக்க பேச்சுக்களால் நான் என்னையே இழந்திருந்தேன் என்று சொன்னால் அது தவறாகாது.

நான் நினைவோடு இருந்தால்தான் உணர்ச்சியோடு பேச முடியுமே தவிர என்னை இழந்திருந்த நிலையில் வள்ளுவர் கோமானுக்கு அதுவும் கலைஞர் அவர்கள் சொன்னது போல அய்யன் திருவள்ளுவருக்கு இவ்வளவு பெரிய ஒரு சிலையை எடுத்து அந்த அடிப்படையில் திறப்பு விழா நடைபெறுகிறபோது இத்தனை தலைவர்கள், இத்தனை பேச்சாளர்கள், இத்தனை அறிஞர்கள், கவிஞர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கியிருக்கிறபோது என் மனம் நிறைந்திருக்கிறது.

என் வாழ்நாளில் பல நாள் என் உள்ளத்தில் தோன்றுகிற குறை காரணமாகத்தான் நான் பேசிப் பழக்கப்பட்டவன். முழு நிறைவு- வாழ்விலோர் திருநாள் என்று என் திருமணத்தின்போது பேசிய நினைவு வருகிறது.

தமிழ் உணர்வு வளர்ப்பதற்கான ஒரு திருநாள்

இன்றைக்கு மறுபடியும் வாழ்விலோர் திருநாள். அன்பழகனுக்கு மட்டுமல்ல, கலைஞருக்கு மட்டுமல்ல, தமிழ் மக்களுக்கு வாழ்விலோர் திருநாள். வாழ்வெல்லாம் நினைக்கின்ற ஒரு திருநாள், வாழ்வு இழந்த மக்கள் தலைதூக்குவதற்காக ஒரு திருநாள். வழி இழந்த மக்கள் தெளிவதற்காக ஒரு திருநாள். தேய்ந்துபோன திராவிடம் நிமிர்வதற்கான ஒரு திருநாள். தமிழ் உணர்வு மங்கிப் போனதை வளர்ப்பதற்கான ஒரு திருநாள். நெறியறியாத மக்களுக்கு நெறியூட்டுவதற்காக ஒரு திருநாள். இன்னும் சொல்வதாக இருந்தால் உலகத்தை வாழ்விப்பதற்கான திருநாள் இந்தத் திருநாள் என்று நான் உணருகிறேன், மகிழ்கிறேன்.

கடந்த நூற்றாண்டிலேதான் வள்ளுவனை உணருகிற வாய்ப்பு நமக்கு கிடைத்தது. ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த கிரவ் என்ற அறிஞர் அதை மொழிபெயர்த்து அந்தக் கருத்து மேல்நாட்டுக்குச் சென்ற காரணத்தால், அதைத் தொடர்ந்து ஜி.யூ. போப் மொழிபெயர்ப்பு காரணமாக அவர் எழுதிய முன்னுரை காரணமாக, நாலடியார் மொழிபெயர்ப்பு என்ற நூலில் அவர் வரைந்த அந்த முன்னுரையால் தமிழன் வள்ளுவரைப் பற்றி அறிந்து கொள்கிற வாய்ப்பை பெற்றான்.

ஜி.யூ.போப் அந்த நாளில் எழுதினார்- திருக்குறளும் நாலடியார் போன்ற அரிய ஒழுக்க நூல்களை, பண்பாட்டு நூல்களை பெற்றிருக்கிற தமிழ்நாட்டு மக்கள், தன்னுடைய பண்பாடு பற்றியோ, தாய்மொழி பற்றியோ, தாழ்வானது என்று எண்ணி வெட்கப்பட்டு நடக்க வேண்டிய அவசியமில்லை. உலகத்தில் உள்ள வேறு எந்த மொழியிலும், நாகரீகத்திலும் கிடைக்காத உயர்ந்த கருத்துக்கள் இந்த நூல்கள் மூலமாக உலகத்திற்கு கிடைக்கின்றன. அது குறித்து தமிழர்கள் பெருமைப்படலாம் என்று எழுதினார்.

தமிழின் எழுச்சியை மக்களிடம் சேர்த்தது திராவிட இயக்கமே

இதற்கு என்ன காரணம் என்றால் திருக்குறள் என்றாலும் சரி, அல்லது தமிழில் பிறந்த இலக்கியங்கள் என்றாலும் ஒரு காலத்தில் தாழ்வாக கருதப்பட்டது. அப்படி ஒரு தாழ்வு தமிழன் மீது சுமத்தப்பட்ட காலம் கடந்த நூற்றாண்டு வரையில், மனோன்மணியம் சுந்தரனார் தமிழுக்கு ஒரு எழுச்சியை ஏற்படுத்தினார். தேசியக் கவி பாரதியார் இன்னொரு வகையில் உணர்ச்சியை ஊட்டினார். அந்த உணர்ச்சி தொடர்ந்து வளர்ந்தது. வடலூர் வள்ளலாரும் அதை உணர்ந்தார். ஆனால், மக்களிடம் ஒரு இயக்கமாகச் சேர்கிற ஒரு வாய்ப்பை இங்கே வாழப்பாடி இராமமூர்த்தி குறிப்பிட்டதைப் போல திராவிடர் இயக்கம்தான் ஏற்படுத்தியது.

திருக்குறளை ஒரு ஏடாக சிலர் பயில்வார்கள். ஒரு நூலாக சில பேர் விளக்கம் செய்வார்கள். அது தமிழனுடைய தனி பண்பாட்டு அடிப்படையில் பிறந்து உலகமெல்லாம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக விளங்குகிறது என்பதை எடுத்து வைப்பதற்கான உணர்வு அன்றைக்கு இல்லை. மறைமலையடிகளாரோ, பல்கலைப் புலவர் கா.சு. பிள்ளை அவர்களோ, நாவலர் சோமசுந்தர பாரதியாரோ, அவர்களையொட்டி வேறு பல தமிழ் அறிஞர்களோ தொடர்ந்து ஏற்படுத்திய அந்த எண்ண அலைகள் மக்களிடத்திலே திராவிடர் இயக்கத்தால் எடுத்துச் சொல்லப்பட்ட காரணத்தால்தான் ஒரு குலத்திற்கு ஒரு நீதி பேசுகிற மனுநீதியை விட பல மடங்கு திருக்குறள் உயர்ந்த ஒப்பற்ற நூல் என்று தமிழ்நாட்டு மக்களிடம் பரவியது.

திருவள்ளுவருடைய பெருமைக்கு உரிய தகுதி இந்தியாவில் கிடைக்கவில்லை. திருவள்ளுவர் பேசப்படுவது வேறு மாநிலங்களில் இல்லை. கருநாடகத்தில் சிலை திறக்க அனுமதிக்கவில்லை என்றால் ஒரு காரணம் திருவள்ளுவர் பெருமையை அவர்கள் அறிய மாட்டார்கள். இன்னொரு காரணம் அவர்கள் சொந்த வரலாற்றையே அறிய மாட்டார்கள்.

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றியபோது, கன்னடம் கிடையாது. அவர்கள் பேசியது தமிழ். தெலுங்கு கிடையாது. அங்கே அவர்கள் பேசியது தமிழ். உச்சரிப்பு வேறுபாடு இருக்கலாமே தவிர, தமிழ்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆந்திரம், கருநாடகாவிலே, கேரளத்திலே பேசப்பட்டது.

திருவள்ளுவர் அன்றைக்கு கருநாடகத்திற்கும் சேர்ந்த புலவர்தான். ஆந்திரத்திற்கும் சேர்ந்த புலவர்தான், ஆனால், அந்த வரலாற்றை அறியாததால் வள்ளுவர் சொன்ன குறள் கருத்து சில, சொற்கள் சில இன்றைக்கும் கன்னடத்திலே விளங்கினாலும்கூட

திருவள்ளுவர் தமிழ்நாட்டுப் புலவர் என்று எண்ணுகிற ஒரு எண்ணம் இருக்கிறது. வரலாற்றை நாம் மறந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

தத்துவ நூல் திருக்குறள்

அப்படிப்பட்ட திருவள்ளுவர் வரைந்த திருக்குறள் மனித வாழ்க்கையை மையமாக வைத்து இயற்றப்பட்ட தத்துவ நூல். மற்றவர்களெல்லாம் சமய அடிப்படையில்தான் நூல்களை இயற்றினார்கள். அது பகவத் கீதையாக இருந்தாலும் சரி, வேறுபல சமய நூல்களாக இருந்தாலும் சரி, மதச் சார்பு அடிப்படையில்தான் இந்த நூல்கள் பிறந்தன. திருவள்ளுவர் நூல் ஒன்றுதான் எந்த மதச் சார்பும் இல்லாமல் விளங்குகின்ற நூல்.

இங்கே பேசிய நண்பர்கள் கேட்டார்கள்- வள்ளுவனுக்கென்று ஒரு இயக்கம் அந்த குறளைப் பரப்ப - கொள்கையை பரப்ப அடியார்கள் கூட்டம் ஏன் தோன்றவில்லை என்று கேட்டார்கள். தோன்றாததற்கு எது காரணம் என்றால் அது சமய நூலாகத் தோன்றவில்லை. சமயத்திற்கு அப்பாற்பட்ட நூலாகத் தோன்றியது.

வடலூர் வள்ளலார் பாடல்கள் அவர் சீர்திருத்தவாதியாக இருந்தாலும்கூட சமய உணர்வோடு சைவப்பற்றும் சீர்திருத்தமும் கலந்து பாடப்பட்டது. அந்த வாய்ப்பு வள்ளுவருக்கு இல்லை. இன்னும் சொல்லப்போனால் வள்ளுவர் நூல் ஏன் அரங்கேறவில்லை என்று கேட்டார்கள். எந்த அரசும் அதை ஏற்கவில்லையா என்று கேட்டார்கள்.

வள்ளுவரைப் போல தன்மானம் மிக்க, தெளிவு மிக்க, சிந்தனை மிக்க ஒரு அறிஞன் தன் நூலை இன்னார், இன்ன இடத்தில் அரங்கேற்ற வேண்டும் என்று விரும்பியிருக்கவே மாட்டான். வள்ளுவர் நூலை அரங்கேற்றுகிற அளவிற்கு தகுதியுடைய நூல் என்று சொல்கிற தகுதி மிக்க புலவர்கள் வள்ளுவர் காலத்தில் இல்லை.

இன்னொரு வகையில் எண்ணிப் பார்த்தால் வள்ளுவரே ஒரு மன்னன். மன்னனாக இல்லாவிட்டாலும்கூட ஒரு குறுநில மன்னன். ஒரு சிற்றூர் தலைவன். அவன் நூலைக் கொண்டுபோய் இன்னொரு இடத்தில் அரங்கேற்றுவதற்கு அவசியமில்லை. ஆனால், மக்கள் மன்றத்தில் அரங்கேறும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்திருக்கத்தான் வேண்டும். அந்த மக்கள் மன்றத்தில் அரங்கேற்றுவதிலேதான் திராவிடர் இயக்கம் முன்னோடியாக இருந்தது.

இன்றைக்கும்கூட எண்ணிப் பார்த்தால் கிரேக்க நாட்டு சாக்ரடீஸோ, சீன நாட்டு கன்பூசியஸோ அல்லது வேறு பல தத்துவ ஞானிகளோ பல்வேறு விதமான, மக்களுக்குத் தேவையான அரிய கருத்துக்களைச் சொன்னாலும்கூட, வள்ளுவனைப் போல, முழுமையாகச் சொன்ன இன்னொரு புலவன் உலகத்தில் இதுவரை பிறக்கவில்லை.

இங்கே பேசிய துணைவேந்தர் வி.சி.குழந்தைசாமி பேசும்போதுகூட கேட்டார். வள்ளுவருடைய தத்துவத்தை ஏன் தத்துவத் துறை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கேட்டார். தத்துவத்துறையே தடுமாறுகிற துறையாக நீண்ட காலமாக இருக்கிறது.

தத்துவத்துறை என்று சொன்னால் மக்கள் உணர முடியாத, அறிய முடியாத செய்திகளை, விளக்கங்களைக் கொண்டதாக, கருத்துக்களைக் கொண்டதாக படிக்கட்டுகளை அமைத்ததாக இருந்தால்தான் அது தத்துவம் என்று கருதுகிறார்கள்.

வள்ளுவம் கண்ட தத்துவம் மனிதன் உணரக்கூடிய தத்துவம். இங்கே ஒரு நண்பர் சொன்னதைப் போல் மனிதனுக்காகத்தான் கடவுள் சிந்தனை.

கடவுளுக்காக - கடவுள் தோற்றுவித்ததாக மனிதன் இல்லை.

மனிதன் உயர்வதற்கும் அவன் உயர்ந்த ஒரு நிலையிலே பக்குவம் பெறுவதற்கும் கடவுள் தத்துவமோ, சிந்தனையோ பயன்பட வேண்டுமே தவிர, கடவுளுக்காக மனிதன் அல்ல. கடவுள் இட்ட கட்டளையின் விளைவு மனிதனல்ல.

அறிஞர் அண்ணா சொல்வார், "மக்கள் வாக்கே மகேசன் வாக்கு" என்பார். விவேகானந்தர் சொன்னார், "மக்கள் தொண்டுதான் மகேசன் தொண்டு" என்றார். இன்னொரு வகையிலே பார்த்தால் மக்களுக்காகத்தான் தத்துவம். அந்த மனித வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்தை வள்ளுவன் சொன்னதைப் போல வேறு எந்த நூலிலும் எடுத்துக்காட்டவில்லை.

அறம் - பொருள் - இன்பம். இது வடமொழியில் அறம் என்பது தர்மம். அது தனி. அதில் கட்டளைகள் தனித்தனியாகப் பிறக்கும். அதைப்போல அவர்களின் அர்த்த சாஸ்திரம் என்பது அரசன் ஆட்சி நடத்த என்னென்ன செய்ய வேண்டுமோ அது.

இன்பம் என்பது எப்படி வேண்டுமானாலும் அடையக் கூடியது. வள்ளுவர் கண்ட இன்பம் தூய நல்லின்பம். வள்ளுவர் வகுத்த பொருள் - முயற்சியினால் தேடுகிற பொருள் அடிப்படையில் உலகியல் வாழ்க்கைக்கு தேவையான எல்லாம் என்பதாகும். வள்ளுவர் கண்ட அறம் - மனத்துக்கண் மாசிலன் ஆதல்.

பண்பாட்டை பெரிய தத்துவமாக்கினார் வள்ளுவர்

மனிதன் மூன்று வகையில் வாழ்கிறான். ஒன்று மனிதன் மனத்தால் வாழ்கிறான். மனம் மனிதனை ஆண்டு கொண்டிருக்கிறது மனிதன் அறிவால் முன்னேறுகிறான். அறிவு அவனுக்குத் துணையாகிறது.

மனிதன் உடலால் இயங்குகிறான். அதை அவன் தவிர்த்துக் கொள்ள முடியாது. அறிவோடு கூடிய செயற்பாடு முயற்சி. அந்த முயற்சியின் விளைபொருள். அதன் விளைவு அரசியல் வரையில், மனம் - அறிவு - உடல் இந்த மூன்றையும் மனிதன் விட்டு விலக முடியாது.

உடம்பை கட்டுப்படுத்தலாம். அறிவை நெறிப்படுத்தலாம். மனதை ஆண்டு ஆண்டு, பழக்கிப் பழக்கி தவறான வழியில் போகாமல் நிறுத்தலாம். இந்த மூன்றுக்கும் தேவையான அறம் - பொருள் - இன்பத்தை வள்ளுவர் வகுத்தபோது மனிதனை உயர்த்துவதற்கான அடிப்படையில் அவர் வகுத்தார். மனிதனை வாழ்விக்கச் செய்வதற்கான அடிப்படையை வகுத்தார்.

இந்த அடிப்படையைத்தான் தென்னகத்து மக்களுடைய தொன்மை நாகரீகத்தில் முகிழ்த்த கலாச்சாரத்தின் விளைவு எளிய மக்களின் வாழ்க்கையிலே இழையோடியிருந்த பண்பாட்டை வள்ளுவர் பெரிய தத்துவமாக்கினார்.

எனவே, அப்படி ஒரு அற்புதமான அடிப்படை வள்ளுவரால் உலகத்திற்கு கிடைத்தது. நமக்கு கிடைத்தது. நமக்கு கிடைத்த அற்புதத்தை நாம் உணரவில்லை. காரணம் மதம் நம்மை பல்வேறு வகையில் ஆண்டது. ஜாதி பல்வேறு வகையில் நம்மை கெடுத்தது. தீண்டாமை போன்ற கொடுமைகள் நம்மிடம் மெல்ல, மெல்ல புரையோடிய புண்ணாக வளர்ந்தது. மனிதத் தன்மையை நாம் இழந்தோம். வள்ளுவரைப் புரிந்து கொள்ள நாம் தவறினோம்.

எனவே, காலம் மாறுகிறது. வள்ளுவரைப் புரிந்து கொள்கிற ஒரு நல்ல சூழல் உருவாகிறது. மேலும் மேலும் உருவாகும்.

இப்படிப்பட்ட அரும்பெரும் வாய்ப்பாக- தமிழ்மக்கள் எல்லோரையும் உயர்த்துவதாக- எந்த பாகுபாடுக்கும் இடம் தராததாக - எல்லா சமயத்தவரையும் இணைப்பதாக



ஒரு அடிப்படை அமைத்த திருவள்ளுவரின் திருக்குறள் இந்திய அரசியல் சட்டத்திற்கு இந்தியாவில் இருக்கிற ஒரே ஒரு சான்று நூல்.

இன்றைக்கு சமயச்சார்பற்ற கொள்கையை அரசு மேற்கொள்ள வேண்டும் என்பது சட்டம். சமய நல்லிணக்கம் மக்களிடையே தேவை. இது நம்முடைய வேண்டுகோள். ஜாதி எண்ணம் அடியோடு ஒழிய வேண்டும். இது நம்முடைய குறிக்கோள். தீண்டாமை ஒழிய வேண்டும். அந்த நல்லெண்ணம் நம்மிடம் வளர வேண்டும். இப்படி எத்தனையோ,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்று வள்ளுவர் சொன்னதுகூட மனிதன் பிச்சையெடுத்து வாழலாம் என்று சில சமயங்கள் சொல்லியிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் துறவிகள் பிச்சை எடுத்துத்தான் வாழவேண்டும். துறவி தனக்கென்று எதுவும் தேடிக்கொள்ளக் கூடாது என்பதற்காக அப்படி ஒரு இலக்கணம்.

வள்ளுவர் சொன்னார் - எந்த காரணத்திற்காகவும் ஒருவர் பிச்சை எடுத்து வாழ்ந்து துறவு நிலையை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை என்று கருத்துப்பட ஒரு பொது நோக்கில் கூறினார்.

ஆயிரம் உண்மைகள் தமிழன் பெருமை சொல்ல திருக்குறளில் உண்டு. அதை முற்றும் உணர்ந்தவர் என்னுடைய பெருமைக்குரிய தலைவர் கலைஞர். அவர் உணர்ந்தார். உரை எழுதினார். அதை ஓவியமாக்கினார். மக்கள் உள்ளம் கொள்ள அதை பல்வேறு நேரங்களில் எடுத்து வைக்கிறார். தொடர்ந்து திருக்குறளுக்கு கலைஞர் ஆற்றியிருக்கிற பணிகளே ஒரு இருபது பணிகள் இருக்கும். அதன் சிகரமாக வள்ளுவருடைய திருவுருவச் சிலையை இங்கே அமைத்தார்.

அப்படி அமைத்த கலைஞர் புகழ் வள்ளுவர் சிலையையும், வள்ளுவர் நூலையும் போல என்றைக்கும் நிலைத்து நின்று மக்களுடைய உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொண்டதாகத் திகழும் என்பதை தெரிவித்து, கலைஞர் சொல்லியிருக்கிறார் - என் மிகப் பெரிய ஆசையை நிறைவேற்றி விட்டேன். மகிழ்கிறேன் - என்று சொல்லியிருக்கிறார். நாங்களும்தான் மகிழ்கிறோம். உங்கள் ஆசையை நிறைவேற்றிவிட்டதாகச் சொல்லி நீங்கள் மகிழ்கிறீர்கள். நாங்களும் மகிழ்கிறோம். எங்கள் ஆசையை நிறைவேற்றுவதற்கு நீங்கள் தொடர்ந்து வாழவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

உலகச் சாதனை நிகழ்த்தியுள்ள கலைஞரைப் பாராட்டுவதில் மகிழ்கிறேன்



ஜி.கே. மூப்பனார்
தலைவர், தமிழ் மாநில காங்கிரஸ்

வான்புகழ் வள்ளுவர் பெருந்தகைக்கு 133 அடி உயரச்சிலை அமைத்து உலகச்சாதனை நிகழ்த்தியுள்ள கலைஞரைப் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு பேசுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இங்கு எல்லோரும் வள்ளுவரையும், கலைஞர் பற்றியும் பேசிய பிறகு என்னால் என்ன பேசுவதென்று தெரியவில்லை.

133 அடி உயரத்திலே உலகத்திலே எங்கும் சிலை அமைத்ததாக எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட சாதனையைச் செய்த கலைஞரை நான் பாராட்டுகிறேன்.

வள்ளுவரை பெருமைப்படுத்துகின்ற வகையிலே கலைஞர் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞருக்கு பெருமை செய்ய எனக்கு ஒன்றுதான் தோன்றுகிறது. அதை நீங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் எல்லோரும் எழுந்து நின்று கைதட்டி அவருக்குப் பாராட்டுத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (இதனைத் தொடர்ந்து எல்லோரும் எழுந்து நின்று கை தட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்).



நாளைய சரித்திரம் கலைஞரைச் சொல்லும்...

நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்

விழாத் தலைவர் அவர்களே; என் அருமை நண்பரைக் கொண்டு வள்ளுவர் சிலையைத் திறந்து வைத்து நீங்கள் சரித்திரத்தை ஆரம்பித்திருக்கிறீர்கள். இது விழாவாக சில பேருக்குத் தெரியும். ஆனால் சரித்திரம். இந்த நூற்றாண்டு முடிந்து அடுத்த நூற்றாண்டு ஆரம்பிக்கிற நேரத்தில் தமிழனின் சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். அதில் வள்ளுவரும் என் அருமை நண்பர் கலைஞரும்தான் இருப்பார்கள்.

காலையில் என்னைச் சந்தித்த ஜப்பானியர்களிடம் "எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து விட்டீர்களா" என்று கேட்டேன். "பார்த்து விட்டோம். இருந்தாலும் மாலையில் நடைபெறும் திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவைப் பார்த்து விட்டுத்தான் செல்கிறோம்" என்றார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது. இந்தச் சிலையை யார் திறக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு அந்த விழாவைப் பார்க்க இருக்கிறார்கள்.

டெல்லியிலே எவ்வளவோ பேர் ஆண்டார்கள். அவர்களைப் பற்றியெல்லாம் தெரிகிறதா? நமக்குத் தெரிவது தாஜ்மகாலும் அதை கட்டிய ஷாஜஹானும்தான். ஆகையால் நாளைய சரித்திரம் சொல்லப்போவது இந்த வள்ளுவனின் சிலையையும், என் அருமை நண்பரையும்தான்.

முக்கடலும் சேருகின்ற இந்தப் புனிதமான இடத்திலே ஒரு தமிழனைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்திருக்கிறீர்கள், உலகத்திலுள்ள தமிழர்களின் நன்றியும் வாழ்த்தும் உங்களுக்குக் கிடைக்கப்போகிறது. என் அருமை நண்பர் உயரப் போகிறார். அவருடைய புகழ் ஆல்போல் தழைக்கப் போகிறது. அந்த ஆலமரத்தின் கிளைகளிலே ஆயிரமாயிரம் தமிழ் நெஞ்சங் கொண்ட பறவைகள் கூடுகட்டி, முட்டை இட்டு குஞ்சு பொறித்து அந்தக் குஞ்சுகளின் தலையிலே தமிழை ஏற்றிக்கொண்டு உலகமெங்கும் பறக்கப் போகிறது. அந்த அருமையான காட்சி இப்போதே என் கண்முன் தெரிகிறது.

அன்னை அஞ்சுகம் உயிரோடு இருந்தால் என் நண்பனின் புகழைப் பார்த்து எவ்வளவு ஆனந்தப்படுவாரோ அதற்கு சற்றும் குறையாமல் நானும் ஆனந்தப்படுகிறேன். நண்பன் என்ற காரணத்தால் இவ்வளவு உயர்வுக்கு என் உளமார்ந்த நல்வாழ்த்துக்கள். நீங்கள் மேலே மேலே பறந்து செல்லவேண்டும். அதை நான் கீழே இருந்து பார்த்துப் பெருமைப்படவேண்டும்.

இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இந்த உலகம் உய்ய வேண்டும். இந்த நாட்டிலே சாந்தி நிலவ வேண்டும்.



வள்ளுவருக்கு கடலுக்கு மேலேயே சிலை வைத்தவர் கலைஞர்...

இலக்கியச் செல்வர் குமரி அனந்தன்

அய்யன் சிலையினைத் திறந்து வைக்க வேண்டுமென்ற எண்ணம் கலைஞர் உள்ளத்திலே உதித்தது. உதித்த எண்ணம் இன்று உருவாகி எழுந்து நிற்கின்றது. அதிலே ஒளிவெள்ளம் பாய்ச்சும் நேரத்தில் நமது உள்ளமெல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்திலே திளைத்து எத்தனையோ பேர் அந்தக் குறளுக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்று சொல்லி கல்லிலே ஓவியம் வடித்தார்கள். ஆனால் கல்லிலே ஓவியம் வடித்தவர்கள் யாரும் இல்லை.

குமரியில் நினைவுச் சின்னங்கள்

இங்கே அமைக்கப்பட்டுள்ள வள்ளுவர் சிலையைத் திரும்பிப் பார்க்கிறேன். குமரிக்கு எத்தனை எத்தனை பெருமையை கலைஞர் சேர்த்திருக்கிறார். கலைஞர்தான் விவேகானந்தருக்கு நினைவுச் சின்னத்தை எழுப்பினார். மகத்தான மனிதர் என்று நீங்கள் எழுதிய கட்டுரையையும் நான் படித்தேன். விவேகானந்தருக்கு நினைவுச் சின்னம் எழுப்பியபோதும் அதிலே உங்களுடைய கைவண்ணம் இருந்தது.

காமராஜர் நினைவகம்

இங்கே பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவகத்திற்கு அடிக்கல் நாட்டியதும் நீங்கள்தான். காட்சிக்கு எளியவனாக இருக்க வேண்டுமென்ற வள்ளுவனுக்கு இலக்கணமாக விளங்கிய ஒரு மனிதனுக்கு நாங்கள் பல ஆண்டு காலம் போராட்டம் நடத்திய பிறகு கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதானே காமராஜர் நினைவகத்திற்கு அடிக்கல் நாட்டும் பெரும் பேறு கிடைத்தது. உங்கள் கையாலே அந்த நினைவு மண்டபத்தை திறந்துவைத்து குமரிக்கு மேலும் பெருமை சேர்க்கிறீர்கள் என்பதை எண்ணி பூரிப்படைகிறேன்.

ஒளி வெள்ளம்

இங்கே உள்ள காந்தி மண்டபத்தின் உள்ளே அக்டோபர் 2ஆம் தேதி சூரிய ஒளி விழும். ஆனால் வள்ளுவரின் சிலையிலே எப்போதும் சூரிய ஒளி விழும். சந்திரன் ஒளியும் விழும். வெள்ளியின் ஒளியும் விழும். எல்லா ஒளியும் எந்நேரமும் விழும். தமிழுக்கு புதிய வாழ்வு கொடுத்துக் கொண்டிருக்கும் முக்கியமான நிகழ்ச்சி இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

தமிழே பயிற்றுமொழி

வள்ளுவனுக்கு கடலுக்கு மேலேயே நீங்கள் சிலை வைத்தீர்களே அது எவ்வளவு பெரிய காரியம். காமராஜர் முதலமைச்சராக இருந்த நேரத்தில் பத்தாவது வகுப்பு பாடத்திலே திருக்குறளை வைக்க வேண்டுமென்று சொன்னார்.

தமிழாசிரியர்கள் இன்று அணி வகுத்து வந்தார்களே அவர்களை நான் பாராட்டுகிறேன். கலைஞர் அவர்களின் கரத்தைப் பலப்படுத்துவதற்கு தமிழாசிரியர்கள் புறப்பட்டு வந்ததனை நான் பாராட்டுகிறேன். தமிழே பயிற்று மொழி என்ற அற்புதத்தைச் சொன்ன கலைஞர் அவர்களுக்கும் நாம் பாராட்டு தெரிவிக்க வேண்டும்.

இன்று தமிழுக்கு நாம் வாழ்வு கொடுக்க வேண்டும். தமிழ் ஆசிரியர்கள் தலைமையாசிரியர்களாக ஆக முடியாதென்ற நிலையை மாற்றி பெருந்தலைவர் காமராஜர் ஆணையிட்டதைத் தொடர்ந்து எத்தனை எத்தனை காரியங்களை நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை எண்ணி எண்ணி நாங்கள் பெருமைப்படுகிறோம்.

அரசும் வேம்பும் அருகருகேதான்

நேற்று கவிதை பாடியபொழுது கரும்புக்கு பக்கத்திலே வேம்பா என்று கேட்டீர்கள். நான் சொல்கிறேன். இந்த நாட்டிற்கு வேம்பு ஒரு இடத்திற்கு நிச்சயமாக வேண்டும். ஏனென்றால் உங்களிடம் அரசு இருக்கிறது. அரசுக்கு பக்கத்திலே வேம்பும் சேர்ந்திருந்தால்தானே இந்த நாட்டிலே சக்தி உண்டு என்று பரம்பரையாக நாம் சொல்லிவருகின்றோம்.

எனவே அரசைவைத்திருக்கின்றநீங்கள் அரசாக இருந்துகொண்டிருக்கின்ற நீங்கள் அது நல்ல காற்று வரவேண்டுமென்பதற்காக பூச்சி அரித்து விடக்கூடாதென்பதற்காக தமிழை எந்தப் பூச்சியும் அரித்து விடக் கூடாதென்பதற்காக நீங்கள் வேம்பாகவும் இருத்தல் வேண்டும். நீங்கள் அரசாகவும் இருத்தல் வேண்டும். இந்த வேப்பங்காற்றும் அரசங்காற்றும் சேர்ந்தால் தமிழை எந்தப் பூச்சியும் புழுவும் அழித்துவிடாமல் நாம் பார்த்துக் கொள்ளமுடியும். எனவே நீங்கள் அரசாகவும் இருத்தல் வேண்டும் வேம்பாகவும் இருத்தல் வேண்டும்.

இங்கே வாழப்பாடியார் பேசும்போது இந்தச் சிலையை எண்ணி எண்ணி கலைஞர் உள்ளம் 'திக்' 'திக்' என்று அடித்தது என்று சொன்னார்கள். இன்று திக்கெல்லாம் புகழுகின்ற அளவுக்கு உங்கள் பெயர் போயிருக்கிறதே அந்தத் திக்கிலிருந்து தொடங்கி திக்கெல்லாம் புகழ் பரவுகின்ற அளவுக்கு இந்தப் பணியை நீங்கள் செய்ததற்கு நான் பெருமைப்படுகிறேன்.

இங்கே பெருந்தலைவர் காமராஜருக்கு மணி மண்டபம் எழுப்பியதை நினைத்துப் பார்த்து இப்பொழுது நீங்கள் ஆட்சி செய்கிற அற்புதத்தையும், எண்ணிப்பார்த்து ஒன்றைச் சொல்கிறேன்.

புத்தாயிரமாண்டில் புதிய சட்டங்கள்

இப்பொழுது தலையெழுத்தையெல்லாம் பலர் ஆங்கிலத்திலே எழுதுகின்றார்கள். ஆனால் நீங்கள் மு.கருணாநிதி என்றே தமிழில் எழுதுகிறீர்கள். உங்களுடைய புதல்வர் ஸ்டாலின் இருக்கிறாரே அவர் மு.க.ஸ்டாலின் என்றுதான் எழுதுகிறார் ஆனால் எங்களிலே பலபேர் தலையெழுத்தை ஆங்கிலத்திலேதான் எழுதுகிறார்கள்.

எனவே இந்தப் புத்தாயிரம் ஆண்டிலிருந்து திருவள்ளுவர் சிலையைத் திறந்துவைத்திருக்கிறநேரத்தில் உங்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்வது, வருகிற கல்வி ஆண்டிலிருந்து எந்தக் குழந்தையை பள்ளியில் சேர்த்தாலும் தந்தையின் தலையெழுத்தை போடுகிறபோது அதை தமிழிலேதான் போடவேண்டுமென்ற ஒரு சட்டத்தை, பெயருக்குப் பின்னால் சாதி என்ற வால் சேர்க்கக்கூடாதென்ற ஒரு சட்டத்தை நீங்கள் கொண்டு வந்து தமிழனுடைய தலையெழுத்தும் தமிழ்தான் என்று சொல்கிற நிலையினை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



கடல்களின் அலையோசை, கலைஞர் கலைஞர் என்றே ஒலிக்கும்...

வைகோ, பொதுச்செயலாளர்,
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்.

மலர்ந்திடும் புத்தாயிரம் நல்லாயிரமாக நிகழ்த்திட மனிதகுலத்திற்கே வழிகாட்டிய திருவள்ளுவரின் திருவுருவச்சிலையை அண்ணன் கலைஞர் அவர்கள் தனது திருக்கரங்களால் இன்று திறந்து வைத்திருக்கிறார்கள்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு செப்டம்பர் மாதம் 6ஆம் தேதியன்று இதே கடற்கரையில் வள்ளுவர் சிலைக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றபோது அண்ணன் பேராசிரியர் அவர்கள் கலந்துகொண்ட விழாவிலே கலைஞர் அவர்கள் பேசும்போது கூறிய சொற்கள் இன்னமும் என் செவிகளிலே ரீங்காரம் செய்து கொண்டிருக்கின்றன.

இந்த விழாவிற்கு ஈடாக எவ்விழாவும் இல்லை

இரவு நேரங்களிலே பாறையில் மீது படுகின்ற உளியின் ஓசை என் செவிகளில் விழும். விவேகானந்தர் மண்டபம் எழுப்பிய நிகழ்ச்சி என் மனதிலே படும். திருவள்ளுவருக்குச் சிலை அமைக்க வேண்டுமென்று இந்த அடிக்கல் நாட்டு விழா நடைபெறும் நேரத்தில் என் மனக் கண்களிலே எண்ணிப் பார்க்கிறேன். கனவு காணுகிறேன்.

தமிழகத்தின் கோடான கோடி மக்கள் நேரடியாகவும் தொலைக்காட்சி வாயிலாகவும் காணுகிற அந்தத் திருநாளை எதிர்நோக்குகிறேன். அந்த நாள் வராதா என்று கனவு காணுகிறேன் என்று பேசினீர்களே, அண்ணன் கலைஞர் அவர்களே! அந்தத் திருநாள் வாய்த்திருக்கிறது. அந்த விழாவில் கலந்துகொண்டு பேசியவன் என்ற முறையில் நான் நன்றி தெரிவிக்கிறேன்.

இன்று புத்தாயிரத்தின் முதல்நாள் உலகிலயே பல பேர் இந்த நாளைக் கொண்டாடுகிறார்கள். நீங்கள் இந்தச் சிலையை திறந்து வைத்திருக்கின்றீர்கள். இந்த விழாவிற்கு ஈடாக எந்த விழாவும் இல்லை என்பதை நான் எண்ணிப்பார்க்கிறேன்.

உலகில் யாருக்கும் இப்படியொரு சிலை அலை கடலில் எழுப்பப்பட்டதில்லை. ஒரு வீரனை ஒரு வீரன்தான் மதிக்க முடியும். ஒரு கவிஞனை இன்னொரு கவிஞன்தான் மதிக்க முடியும். எங்கள் தமிழகத்தின் கொற்றவனே! ஒரு கவிஞன் என்ற காரணத்தினால் கலைஞர் அவர்களே! நீங்கள் இந்தச் சிலையைத் திறந்து வைத்திருக்கின்றீர்கள்.

வரலாற்றுப் பொன்னெழுத்தில் நிலைத்து நிற்பார்


திருவள்ளுவருக்கு பத்து பேர் உரை எழுதியிருக்கிறார்கள். கலைஞர் அவர்களே! நீங்கள் குறளோவியம் தீட்டினீர்கள். வான்புகழ் வள்ளுவனுக்கு கோட்டம் கண்டீர்கள். இன்று சிலையைத் திறந்து வைத்திருக்கின்றீர்கள்,

இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் வரும். அப்பொழுதெல்லாம் இந்த நாளை தமிழ்க்குலம் நினைவிலே வைக்கும். இந்த நாளும், நீங்களும் வரலாற்றின் பொன் எழுத்துக்களிலே நிலைத்து நிற்பீர்கள்.

உலகம் பல்வேறு நிகழ்ச்சிகளை அதிசயங்களாக நிர்மாணித்திருக்கின்றது. இங்கே எழுந்திருக்கிற திருவள்ளுவர் சிலை பலருடைய சிந்தனைச் செல்வமாக, வரலாற்றுச் சின்னமாக எழுந்திருக்கிறது. ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுந்த முதல் தமிழ்ச் சங்கம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இடைச் சங்கம். பல சிந்தனையாளர்களை அறிஞர்கள் வரிசைப்படுத்துவார்கள். ஆனால் எந்தச் சிந்தனையாளர்களுக்கும் எட்டாத கருத்துக்களை தந்தார் நம்முடைய திருவள்ளுவர்.

அமைதி நிலவுகிற இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கிறேன். வாழ்க்கையில் வந்து போகிற நாட்கள் எல்லாம் சிறப்புடைய நாட்கள் அல்ல. அலைகளின் ஓசை எழுகிறது. மக்கள் அயர்ந்து தூங்குகின்ற இரவு நேரங்களில் இந்த கன்னியாகுமரி கடல்களின் அலை ஓசை பாறைகளில் மோதிக் கொண்டே இருக்கும்.

அந்த அலைகள் எழுப்புகின்ற ஓசைகளின் ஒலி 'குறள் குறள் என்றே ஒலிக்கும்' வள்ளுவர் வள்ளுவர் என்றே ஒலிக்கும். கலைஞர், கலைஞர் என்றே ஒலிக்கும். அந்த ஒலியிலே தமிழ்த்தாயின் அருள் மழை இணைந்திருப்பதைக் கேட்கிறேன். பேரறிஞர் அண்ணாவின் வாழ்த்தொலி இணைந்திருப்பதைக் கேட்கிறேன். வளரட்டும் வள்ளுவர்! உயர்வடையட்டும் தமிழகம்!



தமிழ்ச் சமுதாயம் கலைஞரை மறக்காது

வாழப்பாடி ராமமூர்த்தி
தலைவர், தமிழக ராஜீவ் காங்கிரஸ்

இன்றைக்கு புதிய நூற்றாண்டின் தொடக்கம். இந்த வேளையில் தமிழர்களுடைய சிறப்பும் வள்ளுவத்தினுடைய மாண்பும் உலகம் முழுவதும் எடுத்துரைக்கக்கூடிய வகையில் சாதனையை புரிந்திருக்கின்ற முதல்வர் கலைஞர் அவர்களை வணங்கி வாழ்த்த நான் கடமைப்பட்டுள்ளேன்.

இங்கே அறிஞர் பெருமக்கள் குறிப்பிட்டதைப்போல 133 அடி உயரத்திற்கு சிலை செய்து, இந்தச் சிலையை 25 ஆண்டுக் காலமாக தன்னுடைய கனவிலே தேக்கி இன்றைக்கு செயல் வடிவமாக்கியிருக்கிற முதல்வர் கலைஞர் அவர்களை தமிழகம் மட்டுமல்ல; உலகத்திலே இருக்கக்கூடிய தமிழ்ச் சமுதாயம் என்றைக்கும் மறக்காது.

திருக்குறளும் வள்ளுவமும் தமிழகத்தில் மட்டுமல்ல; எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் செந்நாப் புலவருடைய புகழ் பரவியிருக்கிறது. அதற்கு தேசிய இயக்கம் மட்டும் காரணமல்ல: திராவிட இயக்கம் முக்கிய காரணம் என்பதை பெருமையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வள்ளுவரின் புகழைப் போல இந்தச் சிலையும் நீண்ட நெடிய காலம் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு முதல்வர் கலைஞர் அவர்கள், ஒரு குழந்தையைப் பெற்ற தாய்க்கு எந்த அளவுக்கு அந்தக் குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் இருக்குமோ அதைப் போல எண்ணி இருக்கிறார்.

இங்கே பேசியவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முதல்வர் கலைஞர் அவர்கள் முன் எடுத்து வைத்தார்கள். தமிழ்மொழி மேடைப் பேச்சுக்கள் மூலமாகவும், எழுத்து மூலமாகவும் வளர்ந்தது என்பதை, தமிழர்கள் வரலாற்றினை காலப் பெட்டகமாக அதனை உருவாக்கி பதியவைக்க வேண்டும் என்பதுதான் எனது கோரிக்கை.

பெங்களூரில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை விஷயத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் உறுதுணை புரிந்து நிச்சயமாக அந்த திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில் கலந்து கொள்வார்.

முதல்வர் கலைஞர் இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தமட்டிலுமல்ல; உலகளவிலே செய்திருக்கக் கூடிய சாதனை.. சாதாரண சாதனை அல்ல.

தமிழ் உள்ள அளவும் பூமி உள்ளளவும் இந்தப் புகழ் வாய்ந்த சிலை, முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட சிலை நீடித்து நிற்கும். வள்ளுவர் புகழ் ஓங்கும். முதல்வர் கலைஞர் அவர்களின் புகழும் சாதனையும் ஓங்கும்.



திருவள்ளுவருக்கு சிலை எழுப்பிய கலைஞருக்கு நன்றி...

என். சங்கரய்யா
தமிழ் மாநிலச் செயலாளர்,
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

குமரிமுனையில், திருவள்ளுவருக்கு சிலை எழுப்பி இருப்பதற்கு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக் குழுவின் சார்பாக என்னுடைய இதயப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக நான் இங்கே சொல்ல விரும்புவது; பயிற்று மொழி - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமல்ல; கல்வியின் அனைத்து மட்டங்களிலும் தமிழ்மொழிதான் பயன் படுத்தப்படவேண்டும். மேலும் தாய் மொழியில் கல்வி கற்றால்தான் அந்தக் கல்வி நிலைத்து நிற்கும்.

அனைத்துப் பள்ளிகளிலும் ஐந்தாம் வகுப்புவரை தமிழைப் பயிற்று மொழியாக்க வேண்டும் என்ற தமிழக அரசின் ஆணையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது.



சிற்பக் கலை வளர்த்த செந்தமிழ்க் கலைஞர்

வை. கணபதி ஸ்தபதி
சிலை வடிவமைப்பாளர்

டாக்டர் கலைஞர் அவர்களை பெரும்பாலானோர் அரசியல் மேதையாகவே பார்க்கிறார்கள்: பேசுகிறார்கள். கலைஞர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருக்கும் அவரை ஒருபெரும் கலைஞராக எவரும் என்னிடம் சுட்டிப் பேசியதில்லை. என்னைப் பொறுத்தவரையில், அவரை ஓர் அரசியல்வாதியாக அன்றி ஒரு கலைஞராகவே பார்த்திடும் வாய்ப்புகள் எனக்கு நிரம்பக் கிட்டியிருக்கின்றன.

எத்தனையோ பாகவதர்கள் இருந்திருந்தாலும் பாகவதர் எனும்சொல் எம்.கே.தியாகராஜ பாகவதரையே குறிப்பதுபோல கலைஞர்கள் எத்தனையோ பேர் இருந்திடும் இந்நாளில், கலைஞர் என்றால் டாக்டர் கலைஞர் அவர்களை மட்டுமே அது சுட்டி நிற்கும்.

அவரைப் பார்க்கக் கொடுத்துவைத்திட்ட முதல் சந்திப்பே அவரை ஒரு பெரும் கலைஞராக எனக்கு உணர்த்திக் காட்டியது. டாக்டர் கலைஞர் அவர்கள் அப்பொழுது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தார்கள். அந்நேரத்தில் பூம்புகாரில் கண்ணகிக்குப் 'பத்தினிக் கோட்டம்' ஒன்று கல்லால் செய்து, அங்கே கண்ணகியைப் பத்தினித் தெய்வக் கோலத்தில் சிலையாக நிறுவிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது.

முதற்படியாக, கண்ணகிப் படிமத்தை ஆளுயர அளவினதாகச் செய்து கொடுத்திருந்தேன். அதனைப் பூம்புகாருக்கு அடுத்த மேலையூரில் 'தாசீல் பண்ணை' திருமதி கௌரியம்மாள் வீட்டில் காட்சிக்கு வைத்திருந்தார்கள். அப்படிமத்தை டாக்டர் கலைஞர் அவர்கள் பார்க்க வேண்டுமென்றும் அதற்கான பத்தினிக் கோட்டத்திற்கு அடிக்கல் நாட்டும் வாய்ப்பினை அவருக்கு கொடுக்க வேண்டும் என்றும் தொடர்புடையோர் உறுதி செய்திருந்தார்கள்.

அங்ஙனமே, குறிப்பிட்ட நாளில், டாக்டர் கலைஞர் அவர்கள் வந்தார்கள். மதிப்புமிகு ம.பொ.சி. அவர்களும், கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்களும் வந்திருந்தார்கள். அம்மூவரும் மற்றும் பல உள்ளூர் பிரமுகர்களும் அப்படிமத்தைப் பார்த்துச் சுவைத்துப் பாராட்டினார்கள். அவர் உள்ளத்திலே

அப்படிமம் ஓர் அன்புணர்வைத் தோற்றுவித்து, 'இதை யார் செய்தது?' என்ற வினாவையும் எழுப்பிடச் செய்தது.

வெகுதொலைவில் நின்றிருந்த நான் அருகே அழைக்கப்பட்டு, டாக்டர் கலைஞர் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டேன். அவர்கள், ஒரு கண்ணால் படிமத்தைப் பார்த்துக்கொண்டு, அவருக்குப் பின்னால் நின்ற என்னை, மறு கண்ணால் அரைகுறையாகவே பார்த்தார்கள். அந்த அரைப் பார்வையிலேயே அவரது - அன்புணர்வை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

அன்று முகிழ்த்ததுதான், அவர்கள் பிறகு படைத்திட்ட பூம்புகார்க் கலைக்கூடமும் கலை மன்றங்களும் ஆகும். அக்காட்சிகளை ஒரு நொடியில் மனதிலே உருவாக்கிக்கொண்டு, அடுத்த நொடியிலே மேடை ஏறி, அவர்தம் அழகிய சொற்களாலே அவற்றை இலக்கியக் காட்சிகளாகவே சித்திரித்துக் காட்டினார்கள். ஆறஅமர இருந்து சிந்தித்தாலே மாதம் இரண்டு ஆகும். ஒரு திட்டம் தயாரித்திட பலருக்கு. அங்ஙனம் வெகுவிரைவில் கலைக்கூடங்கள் வரும் என்றும், பூம்புகார் பெருநகரமாக மலர்ந்திடும் என்றும் அப்பொழுதே சொன்னார்கள்.

மேடையிலே அன்று அவர் தீட்டிய ஓவியங்கள், இன்று அவை கண்கவர் காட்சிப் பொருள்களாக இருப்பதினால், அவர் மீது அன்பும் மதிப்பும் கொண்டு- நானே அவற்றையெல்லாம் செய்தேன் ஆனாலும் - அவர் அதற்கான உணர்வாக- வழிகாட்டியாக - இருந்தமையால் அவருக்கு ஒரு பெரிய விழா எடுத்து 'பூம்புகார் படைத்த பெருந்தச்சன்' என்ற பட்டத்தை 3000 சிற்பிகள் கூடி, வழங்கி மகிழ்ந்தோம். அவற்றையெல்லாம் கல்லால் செய்வித்த அவருக்கு 3'.0"× 2".0" அளவில் கற்பலகையில் அப்பட்டத்தை கல்வெட்டாக பொறித்து, இரண்டு தூண்கள் கொண்ட தோரணவாயில் அமைப்பு ஒன்றையும் கல்லாலேயே செய்து,



அதில் அக்கல்வெட்டைப் பொருத்தி, அவ்விழா மேடையிலேயே அவர்களிடம் வழங்கினோம்.

பண்டைக் காலத்தில் பல்லவ மன்னனுக்கு 'சித்ரகாரப் புலி' என்ற பட்டத்தை மக்கள் சூட்டியதை அந்நிகழ்ச்சி நினைப்பூட்டுவதாக, அந்நிகழ்ச்சிக்கு வந்திருந்த தொல்பொருள் ஆய்வர்களும், வரலாற்று ஆசிரியர்களும் என்னிடம் சொல்லி, அவர்தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர்.

இப்படித்தான் அந்த நாட்களிலும் கலை வளர்த்த மன்னர்களுக்கு சிற்பிகள் தங்கள் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டார்களோ என்று கேட்டு வியந்து, அதுவரை வினாக்குறியாக இருந்த வரலாற்றுச் செய்திக்கு ஒரு விடை கண்டிட்டதாகவே உளம் மகிழ்ந்தார்கள்.

கலைஞரைக் கலைஞராகக் கண்ட மற்றொரு சந்தர்ப்பத்தையும் இதோடு இணைத்துக் காட்டிட விரும்புகிறேன். கலைஞர் அவர்களே சொல்லோவியமாக தீட்டிய சிலப்பதிகார இலக்கியக் காட்சிகளைக் கல்லிலே செதுக்கி அமைக்க வேண்டிய நேரம். அப்பொழுதுதான் கலைக்கூடக் கட்டடத்திற்குப் பொறியாளர்கள் அடித்தளம் அமைத்துக் கொண்டிருந்தார்கள். அக்கட்டடப்பணிக்குப்



பொறுப்பேற்றிருந்த செயல் பொறியாளரும் உதவிப் பொறியாளர் ஒருவரும் மாமல்லபுரத்திலே உள்ள என்னுடைய கல்லூரிக்கு வந்து இதுபற்றி என்னிடம் பேசினார்கள். "இக்காட்சிகளை உங்களால் செய்ய முடியுமா? தமிழக முதல்வர் ஒரு கலைஞராயிற்றே? அவரை திருப்தி செய்ய முடியுமா?" என்று ஒரு சிக்கலை என் முன் வைத்து அப்பொறியாளர்கள் பேசினார்கள்.

எனக்கு 10 நாட்கள் அவகாசம் தருமாறு கோரினேன். அதற்குள் ஒரு சில படங்களை வரைந்துகொண்டு அவரிடம் எடுத்துச்சென்று காட்டி, அவரது கலையுணர்வையும் ஆதரவையும் நேரடியாகவே புரிந்துகொள்ளலாமே என்று அப்பொறியாளர்களிடம் சொன்னேன். அதற்கு அவர்களும் இசைந்தார்கள்.

ஒரு வாரம் கழித்து, நாலைந்து படங்களைத் தயாரித்துக்கொண்டு டாக்டர் கலைஞர் அவர்களைச் சந்திக்கச் சென்றேன். எப்படி இதனை வரவேற்று அங்கீகரிப்பாரோ என்று அப்பொறியாளர்கள் உள்ளூரப் பதறி வியர்த்து நின்றார்கள்.

பொறியாளர்கள் அங்ஙனம் பதறி நின்றதற்கு மற்றொரு காரணம் அப்பொழுது இல்லாமலுமில்லை. நாங்கள் கலைஞரைச் சந்தித்த இடம், நேரம், கலையுணர்வு பொங்கி வரும் நேரமல்ல; கலைஞர் அவர்களுக்குக் கோபம் பொங்கி வரும் நேரமேயாகுமது.

தலைமைச் செயலகத்தில் கலைஞர் அவர்கள் கவர்னர் அறையில் இருக்கிறார்கள். வெளியே மாணவர்கள் கிளர்ச்சி உச்ச நிலையை எட்டிக்கொண்டிருக்கிறது. கடுமையான உத்தரவுகள் அங்கிருந்து பறந்துகொண்டிருக்கின்றன. இக்கால கட்டத்தில் பொறியாளரும் நானும் அவர் அறைக்குள்ளே நுழைகிறோம்.

"வாருங்கள்" என்று அருகே வரச் சொல்லி, "அது என்ன?" என்று கையிலிருந்து படச்சுருளை சுட்டிக் கேட்டார். படங்களைக் காட்டுவதற்குச் சரியான நேரம் அதுவல்லவே என்ற நடுக்க உணர்வோடு அப்படங்களை விரித்துக் காட்ட முற்பட்டோம். வியர்வைப் படிந்திருந்த கலைஞர் அவர்கள் முகத்தில் வியப்பும் களிப்பும் படர்ந்திட்டதைப் பார்த்த நான் அவரிடம் நன்றாகவே அப்படங்களை விரித்துக் காட்டினேன்.

முதற்படம், சிலம்புக்குள் இளங்கோவடிகளை நின்ற கோலத்தில் காட்டி, சிலம்பின் அடியில் குன்றக் குறவர்கள் காட்சியை வைத்துச் சித்திரித்திருந்த படம் அது. அதைப் பார்த்து, "ஏன் இளங்கோடிகள் இங்ஙனம் வளைத்து நிற்கிறார்" என வினவினார்கள்.

'வளைவு கனிவைக் காட்டும்' என்றேன்.

உடனே அருகிலிருந்த மாண்புமிகு அமைச்சர்களிடம் அதனைக் காட்டி "பார்ப்பதற்கு இக்காட்சி எத்துணைச் சுகம் தருகிறது பார்த்தீர்களா?" என்று பாராட்டினார்கள். "அரசுப் பதவிகளை எல்லாம் துறந்து, அவர் மக்கள் மீது கனிவு கொண்ட நேரத்தில் படைத்திட்ட இலக்கியம் அல்லவா சிலப்பதிகாரம்? ஆதலால் இக்காட்சி நன்றாகவேப் பொருந்துகிறது" என்று வாயாரப் புகழ்ந்தார்கள்.

அடுத்த காட்சி, கனகவிசயர்தம் தலையில் கல்லைச் சுமந்துவரும் காட்சியாகும். டாக்டர் கலைஞர் அவர்கள் மேடையிலே அடிக்கடி தொட்டுப் பேசிடும் வரலாற்றுக் காட்சி இஃது ஆதலால் - அக்காட்சியினை மேடையிலே நன்றாகச் சுவைபடப் பேசி வந்தார்களே, அச்சுவை நான் வரைந்திட்ட காட்சியிலே படர்ந்திருக்கிறதா என்பதை அவர்கள் மூலம் கண்டறிவது எனது உள்நோக்கமாக இருந்தது.

படத்தில் கண்ட அக்காட்சியைக் கலைஞர் அவர் நன்றாகவே சுவைப்பதை என்னால் பார்க்க முடிந்தது. பளுவான கல்லைத் தூக்கி வரும்போது உடலில் ஏற்படும் நெளிவு, சுளிவு ஆகியவை வலியுறுத்தப்பட்டு இருப்பதையும் அவர்கள் அரசர்கள் என்பதைக் காட்டிட அதில் காட்டியிருந்த தொழில் யுக்தியையும் தொட்டுக் காட்டி அகம் மகிழ்ந்தார்கள். மற்ற படங்களை மேலும் பார்ப்பதற்கு உரிய நேரம் அஃது இல்லையாதலால், அப்படங்களை எல்லாம் சுருட்டி என்னிடமே கொடுத்துவிட்டு, பொறியாளர்களை நோக்கி, தமது முடிவைத் தெரிவித்தார்கள்.

"இப்பணியை - இவரிடமே கொடுத்துவிடுங்கள். இவரே செய்திடுவார்" எனக் கூறி எனக்கு விடை கொடுத்தார்கள். பொறியாளர்கள் வியப்பிலும் மகிழ்ச்சியிலும்




மூழ்கிப் போனார்கள். பிறகு கலைஞர் அவர்தம் ஜீப்பில் என்னை ஏற்றிக் கொண்டு, நியூ உட்லண்ட்ஸ் ஓட்டலுக்கு சென்று, சிறப்பு விருந்து ஒன்றினை எனக்குக் கொடுத்து உற்சாகப்படுத்தினார்கள்.

"கலைஞர் கலைஞராகவே இருப்பதைக் கண்டேன். அவர்தம் கலையுணர்வு ஓங்குக! அதனால் கலை மரபு வளர்க!" என்று உரத்த குரலில் உணவகத்திலேயே பேசிவிட்டு வெளியே வந்தோம். மரபுச் சிற்பக்கலையை டாக்டர் கலைஞர் ஏற்பார் என்பதை எப்படிக் கண்டுகொண்டீர்கள் என்பதை ரகசியமாக என்னிடம் கேட்டார்கள். மரபு வழிப்பட்ட கவிதையும் மரபு வழிப்பட்ட சிற்பமும் ஒன்றே என்றும், மரபு வழிப்பட்ட கவிதையை போற்றிடவும், சுவைத்திடவும் முடிகிற கலைஞர் அவர்களுக்கு இது எம்மாத்திரம் என்று சொல்லி முடித்தேன்.

கலைக்கூடப் பணிகள் நடந்துவரும் காலத்தில் பணிகளை நேரடியாக மேற்பார்வையிட வாரம் இருமுறை முன்னறிவிப்பின்றி வருவார்கள். 500 சிற்பிகள் வேலை செய்துகொண்டிருக்கும் பட்டறைக்குள், அவர்கள் நுழைந்தார்களானால், பணியாற்றும் சிற்பிகள். அவர்தம் உளி வழியாக முழக்கமிட்டு அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள். சிற்பிகளிடம் சகஜமாகப் பேசுவார்கள். எங்களோடு நீண்ட நேரம் இருந்து பேசிட விரும்புவார்கள். ஆனால் அங்கு அவர் வந்தவுடன் வந்து கூடிடும் கூட்டம், பேசிடும் நேரத்தைக் குறைத்துவிடும்.

என்னிடம் எத்தனையோ பேர் எத்தனையோ பணிகளைக் கொடுத்துவிட்டு, கடைசி நேரத்தில் வந்து பார்த்து, எதைத் தொட்டு எப்படிப் பேசுவதென்று தெரியாமல், பிறர் பார்த்துப் பேசியதை



மனதிலே வைத்திருந்து, எப்போதாவது என்னைக் கண்டால் பாராட்டிப் பேசியதை அனுபவித்திட்ட நான், அவர்களுக்கு முற்றிலும் மாறுபட்டவராக டாக்டர் கலைஞர் அவர்களையே கண்டேன்.

அவருடைய கண்கள் கூரிய கண்கள். அவர்தம் உள்ளம் முழுக்க முழுக்கவே கலையுணர்வுமயமான உள்ளம். அவர்தம் சொற்களோ அந்தக் கலையுணர்வுக்கு சிங்கார வடிவம் தந்திடும் சொற்கள். அத்தகைய சிறப்பியல்பைப் பலவிடங்களில் பல நேரங்களில் நான் கண்டிருக்கிறேன். எதையும் நகைச்சுவையோடு சொல்வதும், கிண்டல் செய்வதும் அவருக்கே கைவந்த கலையாகும்.

பூம்புகார்ப் பாவை மன்றத்தில் அவர் தேர்ந்து கொடுத்த குறள் பாக்களுக்கு வடிவம் செதுக்கிக்கொண்டிருந்த நேரம். அவற்றில் ஒரு காட்சி. தலைவன், அயல்நாடு சென்று விடுகிறான். தலைவி அவனை நினைந்து, நினைந்து, உருகி - அவன் பிரிந்து சென்ற நாட்களைச் சுவரில் ஒற்றி ஒற்றிக் குறியிட்டு, அவள் விரலே தேய்ந்துவிட்டதாம். இதுதான் அக்குறள் தரும் காட்சி.

இச்சிற்பத்தைச் சுவைபட அமைக்க வேண்டும் என்ற நோக்கில் அத்தலைவியின் கூந்தலை விரித்துத் தொங்கவிட்ட பாவனையில், சுவைமிகு கோலத்தில், உடலை வளைத்து, ஒரு பக்கம் முகத்தைத் திருப்பி, வலது கையை சுவர் நோக்கி நீட்டி, தலைவன் சென்ற நாட்களை சுவரில் விரலால் ஒற்றியெடுக்கும் கோலத்தில் அச்சிற்பம் இருந்தது.

இதில் நயம் யாதெனில், அவ்வடிவத்தின் உடலை மெலித்து, வயிற்றையும், அரசிலை போல ஒட்ட வைத்து, அடிவயிற்றை சிங்கார பாவத்தில் சுவைபடச் செதுக்கியிருந்த நேரம். அந்த இடத்தைத் தொட்டுப் பார்த்துச் சுவைத்திடும் உணர்வைக் கிளறிடும் அளவுக்கு நன்றாகவே அமைந்திருந்தது. தனது இல்லத்தரசியோடு டாக்டர் கலைஞர் அவர்கள் பட்டறைக்குள் நுழைந்தார்கள். அவரைக் கவர்ந்த அந்தப் படத்தைப்பற்றித் தனது மனைவியார்க்கு விளக்கிச் சொல்லி மகிழ்ந்தார்கள்.

எதை அவர்கள் பார்த்துச் சுவைத்திட வேண்டுமென்று நாங்கள் திட்டமிட்டுச் செய்கிறோமோ அதனை அனாயாசமாகத் தொட்டுப்பேசிடும் உணர்வுத் துடிப்புடையவராகப் பல நேரங்களில் அவரைப் பார்க்க முடிந்தது. எனக்கு ஒரு வேதனை! சிற்பங்கள் மலிந்த இந்தத் திருநாட்டில், ஒரு சிற்பத்தைப் பார்த்தவுடன் அதன் தொழில் நயங்களை, கலை அம்சங்களைத் தொட்டுச் சொல்லக்கூடிய ஆற்றல் உடையவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களாகவே இருக்கிறார்கள்.

இந்த நாட்டுச் சிற்பக்கலை மரபு பிறநாட்டுக் கலை மரபுகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகிறதே. இது ஏன் என்பதைப் புரிந்து பேசக்கூடியவர்கள் மிகச் சிலரே. இதனாற்றான் பாராட்டு மேடைகளிலே சிற்பிகளைப் பொதுமக்கள் பார்த்தார்கள் இல்லை! ஆனால் டாக்டர் கலைஞர் அவர்களின் சுவையுணர்வோ, தொழில் செய்யும் சிற்பிகளுக்கு வியப்பூட்டுவதாகவே இருந்தது. புரிந்து பாராட்டுபவர்களைத்தான் சிற்பிகள் எப்போதும் மதிப்பார்கள். புரியாதோர் எத்துனை பெரிய பட்டமும், பதவியும், பணமும் கொடுத்தாலும் வாங்கிக் கொண்டதை வெளியே சொல்லிக் கொள்ளவே மாட்டார்கள்.

பூம்புகார் கலைக்கூடத்துக்கு நான் செய்தளித்த மாதவி சிலையைப் பார்த்து டாக்டர் கலைஞர் அவர்கள் அடைந்த மகிழ்ச்சியை என்னால் வருணித்துச் சொல்லிவிட முடியாது. மாதவி சிற்பத்தை சென்னையில் பலவிடங்களில் ஆளுயர அளவில் புகைப்படமாக வைத்து, அதனை அவர்களாகவே பிரபல்யப்படுத்தினார்கள். அடுத்து தமிழன்னைத் திருவுருவம் அவர்கள் கண்பட்டுப் பெருமையுற என் வீட்டில் காத்துக் கொண்டிருக்கிறாள்! இது காரைக்குடி கம்பன் கழகத்துக்கு. இதிலும் கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள்.



பாடகர் ஒருவர் மேடையிலே அன்று நன்றாகப் பாடிவிட்டார் என்றால் அன்று அக்கூட்டத்தில் யாரோ விஷயமறிந்த ஒருவர் இருந்திருக்கிறார் என்பது பொருள். கலைஞர் உள்ளம் இப்படித்தான் உணர்வு பெறும், இயக்கமுறும். டாக்டர் கலைஞர் அவர்கள் அப்படித்தான் எங்களோடு ஒன்றியிருந்தார்கள். உறவு கொண்டிருந்தார்கள்.

கலைவளர்த்த மாமன்னர்களும் இப்படித்தானே நேரடித் தொடர்புகொண்டு சிற்பிகளோடு சிற்பியாக இருந்து மகிழ்ந்திருக்கிறார்கள். தலைமுறைச் சிற்பியாக இருக்கக் கொடுத்து வைத்த நான், இதனை அனுபவிக்கவே செய்தேன். எனவேதான் டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தைச் சிற்பக் கலையின் பொற்காலம் என்று அடிக்கடி சொல்லுவேன்.

வேலை செய்த என்னையும், என்னுடன் பணியாற்றிய சிற்பிகளையும் அவர்கள் எப்போதும் மறந்தார்களில்லை. பூம்புகார் கலைக்கூட இலக்கியக் காட்சிகளை சிற்பமாக வடித்துத் தந்த சுமார் 45 சிற்பிகளுக்கும் தங்கத்தால் ஆன சிலம்பு மோதிரங்களைப் பரிசாக வழங்கி அம் மேடையிலேயே மனதாரப் பாராட்டினார்கள்.

பாவை மன்றத்தில் மற்றொரு சிற்பம். டாக்டர் கலைஞர் அவர்கள், சொல்லுக்குப் பதிலாகக் கல்லையே மீடியமாக (Medium of Expression) வைத்துக் கொண்டிருந்தார்களானால், கற்பனை வளம் வாய்ந்த ஒரு சிற்பியாகத் தமிழ்நாட்டில் அவர் திகழ்ந்திருக்க முடியும் என்பதை மனம் திறந்து இங்கே சொல்லிட விரும்புகிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இன்பத்துப்பாலில் மிகப் பிடித்தமான குறள் இஃதென்று கவிஞர்கள் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதற்குரிய காட்சியும்,

பாவை மன்றத்தில் தூண் ஒன்றில் ஆளுயரச் சிற்பமாகச் செதுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பெண், கண்ணிற்கு மைதீட்டும் காட்சி. இடது கையில் கண்ணாடிப் பிடித்து, வலது கரத்தால் மைதீட்டிக் கொண்டிருக்கும் காட்சி. உடலை வளைத்து, ஸ்வஸ்திகமாக நிற்கும் கோலம். முகம், கண்ணாடியை நோக்கித் திரும்பிய நிலையில் இருந்ததால், முகமண்டலம் அரைகுறையாகவே பார்ப்போருக்குக் காட்சியாகும். வழக்கமாக மேற்பார்வையிட வருகை தந்திட்ட டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இச்சிற்பத்தைக் காட்டினேன்.

"எல்லாம் நன்றாகவே இருக்கிறது. அவள் உடல் நேர்த்திக்கீடான அவளுடைய முக மண்டலமானது முழுமையாகப் பார்வைக்குக் கிடைக்க வில்லையே!" என்று திறனாய்வு செய்த அவர், அடுத்த நொடியில் "அந்த கவின்மிகு முக மண்டலத்தை அந்தக் கண்ணாடியில் தெரியச் செதுக்கியிருக்கலாமே!" என்று சுவையுணர்வோடு அறிவுறுத்தினார்கள்.'

உடன் இருந்த நாங்கள் அதனைக் கேட்டு வியந்து, நாங்கள் அவருடன் சேர்ந்து சுவைத்து, வாயார அவரைப் புகழ்ந்து பாராட்டினோம். அவ்வண்ணம் மற்றொரு இடத்தில் செய்து காட்டுகிறோம் என்று சொல்லி, அத்தகைய சித்தரிப்புக்கேற்ற ஒரு சிறிய உருவத்தை இலஞ்சிமன்றக் கதவில் செதுக்கி வைத்தோம்.

இப்படி டாக்டர் கலைஞர் அவர்களுடைய கலை ஆற்றலை, கலையுணர்வை எடுத்துக் காட்டிட பலப்பல நிகழ்ச்சிகள் அந்தக் காலத்தில் நிகழ்ந்திருக்கின்றன. மேலும் ஒன்றை மட்டும் இங்கு எடுத்துச் சொல்லி, இக்கட்டுரையை முடிக்க விரும்புகிறேன்.

டாக்டர் கலைஞர் முதல்வராக இருக்கும் காலத்தில் கலைப் பணிகள் தமிழகத்தில் மிக விறுவிறுப்பாகவே நடந்தேறின, அவர் அடிக்கடி இப்பணிகளை மேற்பார்வையிட மாமல்லபுரம் வருவார்கள்.

"இப்பணியுணர்வு அவருக்கு உடன் பிறந்த உணர்வு. தொழிற் கொட்டகைக்குள் நுழைந்தவுடன் அச்சூழ்நிலை அவர்களை மாற்றிவிடும். உணர்வுகள் கொப்பளிக்கும். நினைத்தவுடன் செயலாற்றும் திறன் அவர்களிடம் இருப்பதால் காலத்தை அவர்கள் விரயம் செய்தார்களில்லை" என்பேன். இஃது எப்படி எல்லார்க்கும் புரியும்?

முதல்வர் அவர்கள் மாமல்லபுரம் வரப்போகிறார்கள் என்ற செய்தி எங்களுக்கு கிடைக்கும் போதெல்லாம், நாங்கள் அவரைப் பார்க்கப் பயப்பட்டோமில்லை. வேறு எங்காவது, முதல்வர் வருகிறார் என்றால், ஒரே அச்சம், பதட்டம், பரபரப்பு அரசு ஊழியர்களிடம் பரவி வழிவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள் இல்லையா? ஆனால், நாங்கள் வேறு. அவர்தம் வருகையினை நான் முதல், பட்டறைப் பையன் வரை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்போம்.

அவர் மனம் திறந்து பேசுவதை, Wit அடிப்பதைக் கேட்டு மகிழ்ந்திடச் செவிகளைத் தீட்டி வைத்துக்கொண்டிருப்போம். அந்த நாட்களை இப்பொழுது எண்ணிப் பார்க்கிறேன்.

இப்படித்தான் அந்தக் காலத்து மாமன்னர்கள் சிற்பிகளோடு நேரடி தொடர்பு கொண்டு, அவர்களோடு ஒன்றி நின்று, அவர்களை ஊக்குவித்து, அவர்தம் ஆற்றல்களை வெளிக் கொணர்ந்து, தமிழ்நாட்டைச் சிற்ப வளம் கொழிக்கும் திருநாடாக ஆக்கினார்களோ என்று எண்ணி எண்ணி மகிழ்வேன்.

அந்த நாட்கள், மீண்டும் வாராதோ என்ற ஏக்கமும், எதிர்பார்ப்பும் இருக்கத்தான் செய்கின்றன. காரணம் அரசு அதிகாரிகள் கலை வளர்க்க முற்பட்டு, கலைபட்டுப் போன கதைகளைப் பிற மாநிலங்களில் பேசக் கேட்டிருக்கிறேன். இங்கும் எதிர்காலத்தில் அப்படி நடந்துவிட்டால்? ஐயகோ! என்னால் இதனைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

மாமல்லபுரத்தில் நடைபெற்று வரும் சிற்பக்கலைக் கல்லூரி சாதாரணப்



பட்டறைப் பள்ளியாக இருந்ததை உயர்த்தி, பட்டயப் படிப்புகளையும் புகுத்தி, கல்லால், மட்டுமல்லாமல் செங்கல்லாலும், மரத்தாலும், செம்பாலும், வண்ணத்தாலும் சிற்பங்கள் தீட்டுவதற்கு ஏற்ற பயிற்சித் திட்டங்களையும் கலைஞர் அவர்கள் புகுத்திக் கொடுத்தார்கள்.

வள்ளுவர் கோட்டம் கண்ட டாக்டர் கலைஞர் அவர்கள் வள்ளுவர் கோட்டக் கட்டடப் பணியை ஒரு திருப்பணியாகவே-தெய்வீகப் பணியாகவே- கொண்டு செயலாற்றியதை நான் உடனிருந்து கண்டேன்.

இந்த நாட்டில், கோவில் கட்டடமே தேர்க் கட்டடத்திலிருந்து முளைத்தது தான்!. பூம்புகார்ப் பணிகளைக் கலைக்கென்றே- இலக்கியத்திற்கென்றே ஒதுக்கியது போல, வள்ளுவர் கோட்டப் பணியைத் தனக்கென்றே - தன் ஆத்ம திருப்திக்கென்றே ஒதுக்கிக் கொண்டதாக எனக்குப்பட்டது. இப்பணிக்கு யாதொரு களங்கமும் வந்திடக் கூடாதென்று கண்ணும் கருத்தும் கொண்டிருந்தார்கள். இந்த நாட்களையும் எண்ணிப் பார்க்கிறேன்.

மலையிலே - திருவண்ணாமலையிலே கல்லுடைக்கும் தொழிலாளர் முதல் சென்னையிலே கோட்டம் சேர்க்கும் சிற்பிகள் வரை சுமார் ஆயிரம் பேர்கள் பணியாற்றிய நாட்கள். இப்பணியை விரதமிருந்து முடிக்க, உணர்வு கொண்டவர் போல் டாக்டர் கலைஞர் என் கண்களுக்குப் பட்டார்கள்.

கட்டிடத்தின் ஒவ்வொரு கூறையும் துருவித் துருவிக் கேட்டு, தன்னுடைய உணர்வையும் கருத்தையும் அதிலே வைத்துப் பதித்து, அக்கோட்டத்தைக் கட்டிக் கொண்டார்கள், என்றால் மிகையன்று. அவர்தம் கருத்தும் உணர்வும் அதில் பதிந்துவிட்டதினால், அக்கட்டிடத்தை ஓர் உயிர்ப்பொருளாகவே அவர்கள் மதித்தார்கள். சிறப்பாக அதனைத் தனது பிள்ளையாகவே பார்த்தார்கள்.

பொதுவாகக் கலைஞர் தம் உள்ளங்கள் இப்படித்தான் உணர்ச்சியுறும்! கலையுள்ளமும் செயலாற்றும் திறனும் வாய்க்கப் பெற்றோர் இதனை நிச்சயம் ஏற்பார்கள். நான்கூட அப்படித்தான். என் படைப்புக்களை என் குழந்தைகளாகவே காண்பேன்.

பதிமூன்றாவது நூற்றாண்டோடு இருபதாவது நூற்றாண்டை இணைத்திடும் சிற்பம் என்று எனது 'மாதவிச் சிற்பத்தை' ஓவியர் திலகம் கோபுலு அவர்கள் ஒரு பேட்டியின் போது என்னிடம் சொல்லிப் பாராட்டினார்கள்.

அதே சிற்பத்தை, நாட்டியக் கலாமணி பத்மஸ்ரீ டாக்டர் பத்மா சுப்பிரமணியம் அவர்கள் தடவித் தடவிப் பார்த்து, சுற்றிச் சுற்றி வந்து, ஓகோவென்று பாராட்டினார்கள். நாட்டியமங்கையின் அக உணர்வையும் உடற் கூறுகளையும் வளைவையும் (ஆடற்கலையின் அரசியாய் விளங்குவதானால்) அவர்கள் உணர்ந்தே பாராட்டினார்கள்.

அத்தகைய சிற்பத்தை எனது தொழிலகத்தினின்று பூம்புகாருக்குக் கொடுத்திட மனம் வராமல், சாக்குப் போக்குச் சொல்லி காலம் தாழ்த்தியே வந்த எனது பாச உணர்வு, நினைத்தால் இப்போதும் கொப்பளிக்கவே செய்கின்றது. என் மகளாகவே 'சிற்ப மாதவியை' நான் இன்றும் பாசத்தோடு பார்க்கிறேன்.

இதற்கும் மேலான ஒரு தூய உணர்வை வள்ளுவர் கோட்டப் பணியில் கலைஞர் அவர்கள் வைத்திருந்ததினால் அதனைத் திருப்பணி என்றே சொல்லிச் சொல்லி மகிழ்வார்கள். ஆனால், இறுதி நேரப் பிரிவை எண்ணி மனமுருகி அவர்கள் எப்படிக் கதறியழுதார்கள் என்பதை இந்த நாடே அறியும்.



வான்புகழ் வள்ளுவர்க்கு வானுயரச் சிலை

வை. கணபதி ஸ்தபதி
சிலை வடிவமைப்பாளர்

திருவள்ளுவர் சிலையானது, கன்னியாகுமரியில், முக்கடல் நடுவே, அலைமோதும் மலை மீது, வலது காலை ஊன்றி இடது காலைச் சற்றே மடக்கி வைத்து, நின்ற கோலத்தில காட்சி தருவதாய் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இச்சிலை, 95 அடி உயரங்கொண்டு, 38 அடி உயரப் பீடத்தின் மீது சுகமாய் நிற்கிறது. தனது வலக்கையில் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலை முத்திரையாகப் பிடித்து இடக்கையில் திருக்குறள் ஏட்டினைத் தாங்கி, கருணை பொழியும் பார்வையுடையதாய், விளக்கமுறுகிறது.

உருவ வருணனை

தலைமீது தூக்கி முடிந்திட்ட கொண்டையைத் தலைக்கு மகுடமாய் அணிந்து இடுப்பில் பட்டாடையுடுத்தி, மார்பில் மேலாடை பூண்டு, புலவர் கோவாய் காட்சி அளிக்கின்றது இச்சிலை. எக்காலத்தும், எல்லா மக்கட்கும் பொருந்தும் நீதி நெறிகளை அருளிய செய்தியைப் பேசும் உதடுகளால் உணர்த்தி குறள் ஏட்டினை சுற்றி வைக்காது திறந்து வைத்து அதன் இடையறாத் தேவையினைச் சுட்டிக்காட்டி, சுவடியால் திருக்குறளின் தொன்மையையும் உணர்த்தியுள்ளது. சுவடியின் மீது 'திருக்குறள் ' எனும் சொற்றொடர் பொறிக்கப்பட்டுள்ளது.

திருக்குறளானது 1330 பாக்களை 133 அதிகாரங்களில் அடக்கி வைத்து, தமிழர்தம் நெறி காட்டும் அரியதொரு நீதி நூலாய் விளங்கிடும் நிலையில், 38 அதிகாரங்களால் அறத்தை உணர்த்தி, எஞ்சியுள்ள 95 அதிகாரங்களால் பொருளையும் இன்பத்தையும் உணர்த்துவதால், அறத்துப்பாற் பகுதியை 38 அடி உயரங்கொண்ட 'அறப்பீடமாகவும்' பொருளும் இன்பமும் சேர்ந்த பகுதியை 95 அடி உயரங்கொண்ட வள்ளுவர்தம் திருமேனியாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

அதாவது, அறத்தை ஆதாரமாகக் கொண்டு பொருளும், இன்பமும் துய்க்கப்பட வேண்டும் எனும் சீரியதொரு கருத்தைப் பீடமும் சிலையும் ஒருசேர வெளிப்படுத்துவதாக உள்ளது. மொத்தத்தில் 133 அதிகாரங்களைக்



கொண்டு விளங்கும் திருக்குறள் 133 அடி உயரங் கொண்ட திருவள்ளுவர் சிலையாய் உருவகிக்கப்பட்டிருக்கிறது.

உயிர்தரித்த உடல்போல உருத்தரித்த வள்ளுவம்

சிற்பக்கலைத் துறையில் இறைப் படிமங்கள் பீடத்தின் மீதே நிறுவப்படும். பீடத்தைப் பீட சக்தி யென்றும் இறையுருவத்தைப் பிம்பசக்தி என்றும் இரண்டையும் ஒன்றாக இணைத்து வைத்துப் போற்றுவதே தமிழர் கலைமரபு. இதற்கொப்ப அறமே பீடமாகி, பொருளும் இன்பமும் உருவமாகி மிளிரும் நுட்பத்தை 133 அடி உயரங் கொண்ட இச்சிலை காட்டுவதாகிறது. இத்தகையப் பீடத்தில் உள்ளடங்கியதாக தாமரைப் பீடமொன்று காட்டப் பெறுவதும் ஒரு கலை மரபே. இம்மரபிற்கிணங்க, 38 அடி உயரத்திற்கு உட்பட்ட நிலையில் எழில்மிகு தாமரைப் பீடமொன்றும் நிறுவப்பெற்று அதன் மீது 95 அடி உயரங்கொண்ட உருவத்தனாய் திருவள்ளுவர் இயற்றப்பட்டிருக்கிறார். அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலை இணைத்து உருவகித்த இச்சிலையினை - 'உயிர்தரித்த உடல் போல' - 'உருத்தரித்த வள்ளுவம்' என்று சொல்வது பொருந்துமன்றோ? முக்கடல் சங்கமிக்கும் குமரிமுனையில்



முப்பாற்கடலாம் 'வள்ளுவம்' வான் முகிலை முட்டும் நோக்கில் எழுச்சிகொண்டு நிற்கிறது.

வள்ளுவம் எட்டுத் திக்குகளிலும் பரவியதோடல்லாமல் வான்முதல் பாதாளம் வரை விராவி நிற்கும் கருத்தினை 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்ற அமரகவி பாரதியின் கூற்றுக்கேற்ப பத்துத் 'திசைகளையுணர்த்தும் வகையில் நான்கு கோடிகளில், கோடி ஒன்றுக்கு இரண்டிரண்டு யானைச் சிற்பங்களும். நுழைவாயிலில் பிறிதிரண்டு யானைச் சிற்பங்களுமாக மொத்தத்தில் 10 யானைச் சிற்பங்கள் திசைகள் நோக்கி விரைந்து நடைபோடும் பாவனையில் அறப்பீடத்தைச் சுற்றி நிற்கும் சுவர்ப்பகுதியை அலங்கரிக்கின்றன.

சொல்லுரு கல்லுருவானது

சிற்பக் கலை மரபிலே யானை ஆற்றலின் உருவகமாய் 'திக்கெஜங்கள்' என்ற பெயரில் நிறுவப்படுகின்றது. சொல்லுருவை (aural word form) கல்லுருவாகக் காட்டுவதே (visual word form) கவிக் கலைஞராம் சிற்பியர் மரபு. எனவே, 133 அடி உயரங் கொண்ட திருவள்ளுவர் சிலையானது கல்லிலே இழைத்த கவிதையாக (poem in stone) உருப்பெற்றுள்ளது. கவிஞர்கள் போல், மரபுச் சிற்பக் கலைஞர்களும் தனது உள்ளமென்ற உணர்ச்சித் திடலில் (field of consciousness) கருக்களை முகிழச் செய்து கொண்டு, சொல்லுருக்களை இசை நயத்தோடும் (musicalness) இசை தாங்கிவரும் யாப்போடும் (rhythm) இசைக் காட்சிகளாக (musical form) உருவாக்கிக் கொண்டு, அத்தகைய அகக் காட்சிகளையே கல்லுருக்களாக-கற்கவிதைகளாகப் படைக்கிறார்கள். இத்தகைய அடிப்படையில் உருப்பெற்ற கல்லுருவே சிற்பம் எனப்படும்.

நுற்பத்தின் பிறிதொரு சொல்லே சிற்பமாகும். மேலும், இதே போலத்தான் கவிதையாகக் கட்டிடங்களையும், தேர்களையும். சிற்பங்களையும், நாடு நகரங்களையும் மரபுச் சிற்பிகள் தோற்றுவிக்கிறார்கள். இதை உற்றறிந்த மேலை நாட்டுக் கலைஞர்கள், மரபு சார் கவினுறு கட்டிடங்களை உறைந்திட்ட இசை வடிவங்கள் (Frozen music) என்று புகழ்வாராயினர். இக்காரணங்கள் பற்றியே பண்டை மரபுச் சிற்பியர் 'கவிக் கலைஞர்' என்று அழைக்கப்பட்டார்கள்.

எனவே, துண்டு கற்களாம் எழுத்துக்களைக் கோர்த்து வள்ளுவர் உருவமாம் சொல்லாக்கி வள்ளுவமாம் பொருளை வைத்து, தாளமானமாம் யாப்பைக் கொண்டு கவினுறு உருவை (சிலையை)க் கட்டி, வள்ளுவர் பற்றிய சிறப்புச் செய்திகளை அணிகளாய்க் காட்சிப்படுத்தி இயற்றிய அழகுக் கவிதையே - உடல் தரித்த வள்ளுவமாய் திருவள்ளுவர் சிலையாய்க் காட்சி தருகிறது.

உருவ இலக்கணம்

திருவள்ளுவருக்கு 133 அடி உயரச் சிலை எழுப்ப வேண்டுமென்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கருத்துக்கு வடிவம் தரும் நேரத்தில், படிமமானத்திற்கு எடுத்தாளப் பெற்ற அளவுகோல் ஒன்றுண்டு. இந்த அளவுகோல்தான் கவிதை மரபிலே யாப்பு அல்லது கட்டு என்று சொல்லப்படும். ஆங்கிலத்தில் இதனை speech rhythm என்றும் தமிழ் மரபிலே 'சொற்கட்டு' என்றும் சொல்லப்படும். கவிதை மரபிலே இசை மரபிலே ஆடல் மரபிலே காலமாத்திரை (time unit) என்று குறிக்கப்படும்.

அதாவது உளவியல் துறை சார்ந்த ஒரு வகையான கால அளவு- காலக் கணக்கு- கால மானம் - படிம மானத்திற்கான - அடிப்படை அலகாக (basic unit) கையாளப்படுகிறது. இதனை ஆங்கிலத்தில் frequency of vibration (அ) ரிதம் (rhythm) என்று சொல்லுவர்.

இத்தகைய ரிதத்தில்தான் செடி

முகம்	10 பாக்கள்	10 அடி	1 முகம்	1 தாளம்
உடல்	30 பாக்கள்	30 அடி	3 முகம்	3 தாளம்
தொடை	20 பாக்கள்	20 அடி	2 முகம்	2 தாளம்
கால்	20 பாக்கள்	20 அடி	2 முகம்	2 தாளம்
பேருறுப்பு	80 பாக்கள்	80 அடி	8 முகம்	8 தாளம் (1)
உச்சந்தலை	2½ பாக்கள்	2½ அடி	1/4 முகம்	1/4 தாளம்
கழுத்து	2½ பாக்கள்	2½ அடி	1/4 முகம்	1/4 தாளம்
முட்டி	2½ பாக்கள்	2½ அடி	1/4 முகம்	1/4 தாளம்
தாள்	2½ பாக்கள்	2½ அடி	1/4 முகம்	1/4 தாளம்
	10 பாக்கள்	10 அடி	1 முகம்	1 தாளம் (2)
கொண்டை (முடி)	5 பாக்கள்	5 அடி	1/2 முகம்	1/2 தாளம் (3)
சிலையின் மொத்த உயரம் (1+2+3)	95 பாக்கள்	95 அடி	9லு முகம்	9லு தாளம்

சுருக்கம்

பேருறுப்பு மட்டும்	8 தாளம்	80 அடி
சிற்றுறுப்பு உள்ளிட்ட சிலை உயரம்	9 தாளம்	90 அடி
முடி உள்ளிட்ட சிலையின் மொத்த உயரம்	9½ தாளம்	95 அடி

கொடிகள், மரங்கள், பறவைகள், விலங்கினங்கள், ஏன் மனிதனும்கூட விந்து நிலையிலிருந்து வளர்ச்சியுற்று உடல் தரிக்கின்றன என்பது நுட்பமிகு சிற்ப விஞ்ஞானமாகும். இதனை biological rhythm என்றும் இக்கால விஞ்ஞானம் கூறும். இஃது இயற்கையிலே நடைபெற்று வரும் விந்தைமிகு விஞ்ஞான நிகழ்ச்சி (scientific phenomenon) ஆகும்.

இந்தக் காலக் கணக்கே (time unit) தொழில் நுட்பத் துறையில் தாளக் கணக்கு (அ) தாள மானம் என்றும் சொல்லப்படுகிறது. அதாவது, காலமானமானது, தாளமானம் எனப்படுவதாயிற்று. இந்தத் தாளமானத்தைத்தான் கவிஞர்களும் கலைஞர்களும் கவிதையிலே, ஆடலிலே, பாடலிலே கையாள்கிறார்கள். ஆடல்கலைஞர் தாள் தட்டி இந்தக் காலக் கணக்கை உணர்த்துவதால் தாளமானம் எனப்படுவதாயிற்று. ஆடற்கலையிலேதான் தாளம் என்ற சொல் தொல்பழங் காலந்தொட்டு இன்றுவரை தமிழ் மரபில் புழங்கி வருகிறது. பிறகு விரல் சுண்டிக் கவிதையிலேயும் மற்றும் கைதட்டி இசையிலேயும் இக்காலமானம் உணர்த்தப் பெறுவதாயிற்று.

இதே காலமானத்தை-தாளமானத்தை இடமானமாக (spatial measure)க் கொண்டு இயற்றப்படுவனவே மரபுச் சிற்பங்களும், சிற்பநிகர் கட்டிடங்களுமாகும். காலமானத்தைத் தாளமானமாகக் கொண்டிட்ட இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் ஒரே இலக்கணம் கொண்டு-ஓரிவுப்பட்டு - முத்தமிழ் என்று பெயர் பெறுவதாயிற்று. இத்தாளமானத்தை அடிப்படையாக ஒருசேர - கொண்ட

சிற்பமும் கட்டிடமும் மேலும் இரண்டு தமிழாகி ஐந்தமிழ் என்ற சொல்லும் சிற்பியர் சமூகத்தில் வழங்கி வரலாயிற்று. இதனைப் பஞ்சமரபு என்று சொல்வதும் தொல் பழஞ்சிற்பியர் மரபாகும்.

இத்தகைய தாளமானத்தை இடமானமாகக் (spatial unit) கொண்டு உருப்பெற்றதே பேசிவரும் திருவள்ளுவர் சிலையென்று சொல்லும் நேரத்தில், இதற்கான மூலக்கணக்கை-மூலதாளத்தை-திருவள்ளுவர் தமது குறளுக்கு வகுத்துக்கொண்ட எண்ணிக்கையிலிருந்து (அதிகாரம் மற்றும் பாக்கள் அமைப்பு முறை) இச்சிலையின் படிமானம் வகுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பது சிறப்பானதொரு நுட்பச் செய்தியாகும்.

வள்ளுவர் ஒவ்வொரு அதிகாரத்தையும் 10 பாக்கள் கொண்டதாக அமைத்துக் கொண்டுள்ளார். அதிகாரத்திற்கு அதிகாரம் இந்த எண்ணிக்கை மாறுபடாமல் ஒரே சீராக (rhythm) அமைத்துக் கொண்ட, பாங்கினை இதில் காணலாம். இதையொட்டி, ஓர் அதிகாரத்தின் 10 பாக்களைச் சிலையின் முக உயரமாகக் கொண்டு இவ்வளவையே மூலதானமாகக் கொண்டு வள்ளுவர் சிலையின் அனைத்து உறுப்புகளின் அளவுகளை நிர்ணயித்துக் கொள்ளலாயிற்று. அதாவது, சிலையின் முகத்தளவு அல்லது முகமானம் 10 அடி கொண்ட தாளமானமாகிறது. அங்ஙனம் பத்துப் பத்தாக, பத்தின் மடங்கினதாகவும், (ten and multiples of ten) பத்தின் பின்னங்களாகவும் (fractionals of ten) கொள்வது biological growth என்ற விந்துவளர் நெறியொத்ததாகும். (growth of egg into chick or growth of seed into plant) மனித விந்துவும், இப்படித்தான் கரு நிலையிலிருந்து உரு நிலைக்கு வளர்ந்தோங்குகிறது. அங்ஙனம் இச்சிலைக்குக் கொண்டிட்ட படிம அளவுகளைக் கீழே காண்க.

அறப்பீடத்தில் திருவள்ளுவர்

இத்தகைய உருவ இலக்கணப் பண்போடு இயற்றப்பட்டதே திருவள்ளுவர் சிலையாகும். இன்னுமொரு படிமமானம் பற்றிய நுட்பம் (rhythm) இச்சிலையமைப்பில் இயல்பாய் அமைந்துள்ளதைக் காணலாம். இது vertical proportion (அ) சிலையின் உயரமானத்தைப் பற்றியதாகும். பீடத்தின் உயரமாகிய 38 அடியின் 2½ பங்கு (95 அடி) உயரம் சிலையின் உயரமாய் அமைந்துள்ள இச்செய்தி, கட்டடக்கலை இலக்கணச் சார்புடையதாகும்.

வானுயர்த்திச் செய்யும் கோபுரங்களுக்குரிய உயரமானம் இதுவே. வள்ளுவரே தனது முப்பாலுக்கு ஓர் வடிவ இலக்கணமே வகுத்துக் கொண்டு இயற்றியுள்ளாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. முற்றுமறிந்த இந்த மாமுனிவர்க்கு இஃதொன்றும் பெரிய காரியமல்லதான். எனவே, அறப்பீடத்தின் மீது கோபுரமாகத் திருவள்ளுவர் நிற்கிறார் என்று சொல்லி மகிழ்ந்திடலாம்.

மேலே பட்டியலிட்டுக் காட்டிய படிம மானங்கள் சிற்ப விஞ்ஞான நெறி வழிப் பட்டதாகும். இத்தகைய படிம மானமே தமிழகச் சிற்ப வடிவங்களுக்கும் கட்டட அமைப்புகளுக்கும் நல்லதொரு தோற்றப் பொலிவைத் தருகின்றன.

கட்டுமான இலக்கணம்

இங்ஙனம் அளவு மதிப்பீடு செய்துகொண்ட பிறகு செய்முறைக்கு ஏற்ற பல கட்டுமான நுட்பங்கள் இச்சிலை நிர்மாணத்தில் புகுத்தப்பட்டிருக்கின்றன. வெளிப் பார்வைக்கு திருவள்ளுவர் சிலையானது மனித உடல் தரித்த தோற்றமுடையதாகும். ஆனால் மனித வடிவத்தை - நின்ற நிலையில் - சிலையாக நிறுத்தும்போது உடலமைப்பின் பலவீனங்கள் பல வெளிப்படுகின்றன. 133 அடி கொண்ட இச்சிலையின் தலை மட்டும் 20 அடியாகும். ஒரு மாடிக் கட்டிட உயரமுடையது இந்தத் தலை. இதனை உடல் மீது தோள் மட்டத்தில் எப்படிப் பொறுத்தி நிற்க வைப்பது என்பது ஒரு பிரச்சினையே.

அதாவது, மனித வடிவமானது மெலிந்த கை கால்களையும், தொடைகளையும் தன் உயரத்தில் பாதியளவு கொண்டுள்ளது. எஞ்சிய பாதி உடல் பருமனும் பளுவும் உடையது. இப்படிப்பட்ட ஓர் உருவத்தை 95 அடி உயரமுடையதாய்க் கல்லால் கட்டி நிறுத்துவது என்பது கடினமே. இத்தகைய மனித வடிவத்தின் பலவீனங்கள் கட்டுமான விதிமுறைகளால் தீர்க்கப்பட்டிருக்கின்றன. மனித வடிவத்தைத் தாங்கியிருப்பதும் நிலைகுலையாமல் நிற்க வைப்பதும், கால்களோ அல்லது தொடைகளோ அல்ல. அது மனித வடிவத்திற்குள் நின்று செயல்படும் உயிர்ப்பு (அ) ஆத்ம சக்தியாகும் (live energy). இந்த ஆத்ம சக்தியை உற்றுணர்ந்து, அதன் செயலறிந்து இச்சிலை நிற்க வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் எவரும் நம்புவதற்கில்லைதான். சிற்பக் கலைத்துறையானது இவ்வச்சத்தை அல்லது ஐயப்பாட்டைத் தனது விஞ்ஞான நெறி தழுவிய கட்டுமான நுட்பத்தால் வென்று விட்டதெனலாம்.

இச்சிலை நம் கண் முன்னால் இன்று நிற்கிறது. பல நூறு ஆண்டுகள் அசையாத் தூண் போல நிற்கவும் போகிறது. இது எங்ஙனம் நிறுவப்பட்டது என்பதை ஒரு சிறிது இங்கே நோக்கலாம். இஃதொரு வித்தையும் விந்தையுமாகும். பாராட்டுக்கும் பரிசிலுக்கும் உரிய பொறியியல் நுட்பமாகும். இதனைத் தெரிந்துகொள்வதால் சிற்பக்கலைத் துறை சார்ந்த கட்டுமான நுட்பம் அனைவருக்கும் தெரிந்திட வாய்ப்பாகும். இதனால் பாரம்பரியக்கட்டுமான நுட்பம் மற்றும் 'செய்திறன் வள்ளுவர் சிலை போல் ஓங்கி நிற்க, நிலைத்து நிற்க, மக்கள்தம் பாராட்டுப்பெற, அவர்தம் ஆதரவு பெற, 21ஆவது நூற்றாண்டிலும் வளர்ச்சியுற வாய்ப்பாகும் என்றும் கருதலாம். இந்த நுட்பம் இந்த மரபில் 10 ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து வந்திட்ட நுட்பம் ஆகும்.

கட்டுமான உறுதிப்பாடு


அருகேயுள்ள பீடமும், சிலையும் சேர்ந்திட்ட படத்தைப் பார்த்தால் அதன் ஆதாரப்பீடம் ஓர் அடிப்படைக் கட்டடமாகவும் (38 அடி உயரம்) அதன்மீது நிற்கும் சிலையின் உடற்பகுதி (75 அடி உயரம்) பிறிதொரு கட்டடமாகவும், அக்கட்டடத்தின் மீது நிற்கும் தலைப்பகுதி மேலுமொரு கட்டடமாகவும் (20 அடி உயரம்) ஒன்றன் மீது ஒன்று ஏறிய மூன்று கட்டடங்களாகத் தோன்றும். இவ்வமைப்பை முதலில் கணித்துக்கொண்டு சிலையின் வடிவமைப்பு செய்துகொள்ளப்பட்டிருக்கிறது.

அதாவது ஆதாரப்பீடக் கட்டடமானது உடற்பகுதிக் கட்டடத்தை அசையாமல் தாங்கிடச் செய்ய வேண்டும். இறுதியில் தலைப்பகுதிக் கட்டிடத்தை தோள்மீது உடல் நடுவே உறுதிப்பாடுடையதாய் நிறுத்தி வைத்திடலும் வேண்டும். இவை மூன்றும் - ஒன்றோடு ஒன்று இணைந்து - ஒரே கட்டிடமாகவும் - உறுதிபட நிற்கவும் வேண்டும்.

இவ்விணைப்பிற்குரிய ஆத்மசக்தியை உருவாக்கித் தருவது மரபு விஞ்ஞான ஆற்றலாகும். இதுவே சிலையின் உறுதிப் பாட்டை நிர்ணயம் செய்திடும் அடிப்படைத் தொழில்நுட்பமும் (technological secret or scientific concept) ஆகும். இந்த நுட்பத்தை இங்கே காணலாம்.

மேலும், இத்தகைய கட்டட அமைப்பின் நடுவே அடிவாரத்தில் 8 அடி அகலமும் 16 அடி நீளமும் கொண்ட வெற்றிடம் ஒன்று (empty space) அமைக்கப்பட்டிருக்கிறது. இது cosmic space அல்லது விண் எனப்படும். ஏன் நமது உடலும் உள்ளீடற்றதாகத்தானே இருக்கிறது? இதற்குள்ளேதான் உயிர்ப்புச் சக்தியொன்று தலை முதல் குய்யம் (தொடைகள் சந்திக்கும் இடம்) வரை தூக்காக (plumb) தொங்கி இயங்கும். இதோடு ஒத்துழைப்பது முதுகுத்தண்டு ஆகும்.

இந்தத் தூக்கு நூலுக்கு ஒளி நூல் (thread of consciousness) என்று பெயர். உடலைத் தாங்கும் முதுகுத்தண்டு சக்தி கொடுப்பது இதுவே.




வள்ளுவமானங்கள்

இத்தகைய வெட்டவெளி (cosmic space) உடற்பகுதியின் மேல்மட்டம் வரை நேரே சென்று இடையே 6.0" x 12'.0" மற்றும் 4'.0" x 8'.0" என அடுத்தடுத்து சுருங்கி இறுதியில், கழுத்து மட்டத்தில் 3'.0" x 6'.0" கொண்ட வெற்றிடமாகக் குறுக்கப்பட்டு தலை உச்சியில் 3'.0" x 4'.0"அளவில் முடிவடைகிறது. இதிலேயும் ஒரு rhythm (காலமானம்) கையாளப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இங்ஙனம் குறுக்கி அமைத்த உடலின் மேல்மட்டத்தில் தலையும் உள்ளீடற்றதாக (hollow like a tunnel) கட்டட நெறிமுறையொன்றால் கட்டுமானமாகி இருக்கிறது. அதாவது ஆதார பீடத்தின் அடியில் நின்றுகொண்டு தலைநிமிர்த்தி சிலையின் உட்பகுதியை நோக்கினால் அடி முதல் சிகரம் வரை ஒரு சீரான குகை போன்ற tunnel அமைப்பு தெரிய வரும். இதனை ஆங்கிலத்தில் vertical

cantilever (அ) vertical column என்று கூறலாம். இதற்கு மூலத்தூண் என்பது தமிழ்ப் பெயராகும். இந்த அமைப்பில் புகுத்தியிருக்கும் இந்தக் கட்டுமான நுட்பம் இங்கே குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்ததாகும்.

மேற்சொன்ன ஆதாரப்பீடம், சிலையின் உடற்பகுதி மற்றும் சிலையின் தலைப்பகுதி ஆகிய மூன்றையும் இணைப்பதற்குத் திராவிட கட்டுமானத் தொழில்நுட்ப நெறியொன்று செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த முறையானது கதலிகாகரணம் என்றும் corbelling technique என்றும் தண்டிகை என்றும் மரபில் சொல்லப்பட்டு வருகிறது. வாழை மரத் தண்டில் அதன் பட்டைகள் ஒன்றுக்குள் ஒன்றாக அமைவுற்று மரத்திற்கு வலுவூட்டி நிற்பது போல இந்த நெறிமுறையைத் தழுவிச் செய்திடும் கட்டுமான நுட்பம் கதலிகாகரணம் என்று பெயர் பெறுவதாயிற்று. 'வாழை



மரத்தின் அமைப்பியலில்' செய்தல் என்பது கதலிகாகரணம் என்ற சொல்லின் பொருளாகும். இத்தகைய கட்டுமானத்தில் தமிழகச் சிற்பிகள் வல்லுநர்கள் என்பதைக் கட்டுமான நெறிமுறை தெரிந்தோர் சொல்லுவர். இந்த முறையை மெக்ஸிகோ மாயர் தம் கட்டட நிர்மாணத்தில் காணலாம்.

இத்தகைய கட்டுமான நெறிமுறை புகுத்தப்பட்டு வெற்றிகரமாக இன்றளவும் அசையாமல் உறுதியாக நிற்கும் நுட்பத்தை- உண்மையை - சிறப்பை - 216 அடி உயரம் கொண்ட தஞ்சைப்பெருவுடையார் கோயில் விமானக் கட்டுமானத்தில் காணலாம். இதே கதலிகாகரணத்தை செங்கல்லால் கட்டப்படும் வானுயர்ந்த விமானங்களிலும் கோபுரங்களிலும் காணலாம். கல்லால் கட்டினாலும், செங்கல்லால் கட்டினாலும் இதற்குரிய அளவுமுறை, நெறிமுறை, செய்முறை பொதுவானதே ஆகும்.

8 அடி அகலமும், 16 அடி நீளமும் கொண்ட இந்தக் குகையின் அமைப்பு ஆதார பீடத்தின் அடிமட்டத்திலிருந்து (ground floor) உடற் பகுதியின் 55ஆவது அடி வரை கொண்டு போகப்பட்டிருக்கிறது. அதன் பிறகு கதலிகாகரணச் செய்முறையானது உடலின் உட்பகுதிக்குள் மேல்நோக்கிச் சென்று, தலையைத் தாங்கும் முதுகுத்தண்டு - போல சாய்வுற்று- சிறிதே வளைவுற்றுச் சென்று கழுத்தைத் தாங்கிப் பிடிக்கிறது. கழுத்தின் அடிப்பாகம் வரை செல்லும் இத்தகையக்கட்டுமான முறையினால் தோளின் மேல்மட்டம் உறுதியாகிறது. அதாவது 11'.6" x 12".6" பரப்புடைய தலைப்பகுதியாகிய கட்டடம் நிற்பதற்கு தோள் மட்டத்தில், 13'.0" x 13".0" அளவில் செய்திட்ட இந்த தொழில்நுட்பத்தால் தலைநிற்கத் தகுந்த ஓர் அஸ்திவாரமாகவே அமைந்து விடுகிறது.


மேலும், இக்கட்டடங்கள் தூக்கு நூலுக்கு (Plumb) ஒத்து நிற்கிறதா என்று சோதனை செய்திட இந்தக்குகையின் உள் அமைப்பு (inner rhythm) பேருதவியாக இருப்பதோடு மேடுபள்ளங்கள் வளைவு சுழிவுகள் கொண்ட சிலையின் வெளிப்புறத்தே (outer features of human body) தூக்கினை (Plumb) ஏற்றிப் பணி செய்வதற்கும் பேருதவியாய் இருப்பதாகிறது.

அதாவது இந்தக் குகைப் பகுதியானது தூக்குக்கு (Plumb) ஒத்து நிற்பதோடு சுற்றிலுமுள்ள உடல் பகுதியின் கட்டுமானத்தையும் செங்குத்தாக அமையச் செய்து, stability எனப்படும் உறுதிப்பாட்டைக் கண் முன்னாலேயே சரி செய்து காட்டிவிடுகிறது. இஃதொரு பெரிய விஞ்ஞான விந்தையும் தொழில்நுட்ப யுக்தியுமாகும்.

இத்தகைய யுக்தியைக் கையாண்டே 213 அடி உயரங்கொண்ட திருவரங்கக் கோபுரத்திற்கு இக்கட்டுரையாளர் (ஸ்தபதி) வடிவமைத்துக் கொடுத்து, அங்ஙனமே சிற்பிகள் கட்டுமானப் பணி செய்து, சிகரமாம் கோபுரத்தின் தலை இன்றளவும் உறுதிபட நிற்கிறது என்ற செய்தி இங்கே குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாம். மரபுச் சிற்பிகள் தாங்கள் படைத்திடும் ஒவ்வொரு பொருளையும் உயிர்ப்புள்ள பொருளாகவே பார்க்கிறார்கள்; அமைக்கிறார்கள். இது சிற்ப விஞ்ஞானம் காட்டியதொரு தொழில்நுட்பமாகும். திருவள்ளுவர் சிலையும் இந்த நுட்பத்தைப் பெறுவதால் இஃதும் ஓர் உயிர்ப் பொருளாகிறது (அ) vibrant organism ஆகிறது.

இத்தகைய உறுதிப்பாட்டை உருவாக்குவதற்கு மேலுமொரு நுட்பம் திராவிடக் கட்டுமானக் கலையில் (Dravidian technology) பின்பற்றப்படுகிறது. அதாவது, ஆதாரபீடம், சிலையின் காலும் உடலும் சேர்ந்த பகுதி, இவ்விரண்டும் ஒற்றைக்கல் சுவராக இல்லாமல் இரட்டைச் சுவர் கொண்ட (double walled structure) கட்டடமாகக் கட்டப்பட்டிருக்கிறது.

இந்த இரட்டைச் சுவரானது அடிவாரத்திலிருந்து தோள்மட்டம்



வரை தொடர்ந்து அமையலாகிறது. பளுவைக் குறைத்திட தலைப்பகுதி மட்டும் ஒற்றைக்கல் சுவராக உள்ளது. இந்த இரட்டைச் சுவர்களுக்கிடையே ஏற்படும் இடைவெளியை (கடகால்) கட்டுக்கற்களால் நிரப்பி 'கட்டாயம்' என்று சொல்லப்படும் பாண்டுகளை இடையிடையே செருகி, உட்சுவரும் வெளிச்சுவரும் தோள்மட்டம் வரைக்கும் உறுதி கொண்டதாய் செய்யப்பட்டிருக்கிறது. இத்தகைய இரட்டைச் சுவர் கொண்ட கட்டுமானத்தில் சுவர்கள் அபரிமிதமான உறுதிப்பாட்டைப் பெற்று விடுகின்றன. இத்தகைய உறுதிப்பாட்டில் தலைப் பகுதியும் சேர்ந்து விடுவதால் சிலையின் ஒட்டு மொத்த அமைப்பு உறுதி பெற்று விடுகிறது.

சுருக்கிச் சொன்னால் இரட்டைச் சுவர் கொண்ட இச்சிலை இத்தகைய கட்டுமானத்தினால் உறுதி பெற்று விடுவதை விடுத்து தலைப்பகுதிக் கட்டடத்தையும் உறுதியோடு இணைத்து நிற்க இடமளித்து விடுகிறது. ஒரே கல்லில் குகையும், குகையைச் சூழ்ந்துள்ள உடற்பகுதிகளும் செதுக்கப்படுமானால் எங்ஙனம் உறுதிப்பாட்டோடு விளங்குமோ அங்ஙனம் நிரந்தர உறுதிப்பாட்டோடு நிற்கும் இச்சிலை என்பது கருத்து.

தலை உட்பகுதியில் செய்திட்ட கதலிகாகரணம் தலை அசைவற்று நிற்பதற்கேற்ற உறுதிப்பாட்டையும் பெற்று விடுகின்றது. அருகிலுள்ள படத்தைப் பார்த்தால் இந்த நெறிமுறை விளக்கமுறும்.

இங்ஙனம் செய்து, மேற்குறிப்பிட்ட குகை (tunnel) வழியாக lift ஒன்றையும் வைக்கலாம் என்பது தொடக்க காலத் திட்டமாக இருந்தது. இடைக்காலத்தில் இத்திட்டம் கைவிடப்பட்டது. காரணம், இந்த lift-ன் மூலம் பார்வையாளர்கள், மற்றும் சிறுவர் சிறுமியர் ஏறிச் சென்று வருவது விளையாட்டாக அமைந்து விடுமென்றும், பல அபாயங்களுக்குக் காரணமாகி விடும் என்றும், திருவள்ளுவர் சிலையை ஒரு புனிதச் சின்னமாகப் பாவித்திட வேண்டுமென்றும், கருத்துக் கொண்டு lift வைப்பது தவிர்க்கப் படலாயிற்று.


என்றாலும், இஃது ஏன் இங்கு குறிப்பிடப்படுகிறது எனில், குகை வழியே lift-ஐப் பொருத்தி இயக்குவதற்குரிய உறுதிப்பாட்டோடு இந்தச் சிலைப் பகுதியின் கட்டுமானம் ஏற்கெனவே நடந்துவிட்டது. ஆகவே, இந்தக் கட்டுமானம் lift-ஐயும், அதன் இயக்கத்தினால் ஏற்படும் அசைவையும் தாங்கி நிற்கும் வலுவுடையது என்ற கருத்து இங்கே குறிப்பிடப்படுகிறது. இப்போது lift வைக்கப்படவில்லை. இனிமேல் வைக்கவும் இயலாது.

என்றாலும் உள்ளீடற்ற (hollow structure) இச்சிலையை மேலும் உறுதி செய்திட, சிலையின் உட்பகுதியில் 10 அடிக்கு ஒருமுறை பாவுக்கற்களைத் (covering stones) தளமாக அமைத்து, தன்னந்தனியே நிற்கும் சுவர்களை இணைத்து, உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இதே நேரத்தில் சிலையின் உட்பகுதியில் நீர்க்கசிவுகளோ, தேன்கூடுகளோ, பறவைக் கூடுகளோ ஏற்படுமானால் அவற்றை அப்புறப்படுத்தவும் பிற்காலத்தில் மராமத்துச் செய்திடவும் அடித்தளத்திலிருந்து மேல் தளங்களுக்குச் செல்வதற்கு ஏற்றவாறு இடைவெளியும் விடப்பட்டிருக்கிறது. ஏணியின் மூலமே மேலே சென்றிட வேண்டும்.

தரைமட்டத்திலிருந்து ஆதாரப் பீடத்தின் மேல்மட்டம் வரை ஏறிச் செல்லத் (38 அடி உயரம் வரை) தக்க படிக்கட்டுகளும் அங்கிருந்து சிலைக்குள்ளே நுழைந்திட சிலையின் பின்புறத்திலே ஒரு வாயிலும் வைக்கப்பட்டிருக்கிறது. இதுவும் வேண்டாமெனில் நீக்கிவிடலாம். சிலையை ஏறிப்பார்க்காமல் கரையில் நின்று பார்ப்பதே பொருந்தும் என்ற நல்லதொரு கருத்தும் அறிஞரிடையே இப்போது நிலவிவருகிறது.

மேலுமொரு நுட்பத்தையும் இங்கே சேர்த்துச் சொல்லுதல் தகுமெனக் கருதலாகிறது. அதாவது, ஆதாரப்பீடத்தையும், சிலையையும் சுற்றி 38 அடி உயரங் கொண்ட அலங்காரமான (architectural wall) சுவர் ஒன்றும் கட்டப்பட்டிருக்கின்றது. இதுவும் 3 டன் முதல் 8 டன் வரையுள்ள துண்டுக் கற்களால் கட்டப் பெற்று உறுதி மிகுந்த சுவராக விளங்குகிறது. இச்சுவரையும் ஆதாரப் பீடத்தையும் பாவுக்கற்கள் (covering stones) கொண்டு இணைத்துத் தளம் (floors) அமைக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஆதாரப் பீடத்தைச் சுற்றியமைந்த மண்டபமாகக் காட்சி தருகிறது. இங்ஙனம் மூன்று தளங்கள் (floors) கொண்டதாயுள்ள இக்கட்டடமானது சிலையினை அசையாது மேலும் காத்திட buttress wall போல முட்டுக் கொடுத்து நிற்கிறது எனலாம். கடல் கோள்கள் நிகழ்ந்தாலும் சிலை அசையாது நிற்க வேண்டுமென்ற கருத்திலே இங்ஙனம் செய்துள்ளது.

மேலும், பொது மக்கள் ஆதாரப் பீடத்தைச் சுற்றி வரவும், பொறிக்கப்பட்டுள்ள குறட்பாக்களை நின்று படித்துப் பார்க்கவும் இக்கட்டடமானது மண்டபமாகவும் விளங்கும். இங்கே நான்கு வாயில்கள் இருக்கின்றன. இந்த மண்டபத்தின் அளவுகளும் 10ன் மடங்கினதாகவே (Rhythm) அமைந்து அழகிய தோற்றம் தருவதோடு, கட்டடப் பகுதிகளின்



கதலிகோகரணமும் தூபியின் அஸ்திவாரமும்

(homogeneity of structural parts) பேருதவியாகவும் விளங்குகிறது.

மேலும், அதிமுக்கியமான தொழில் நுட்பப் பிரச்சினைகள் இரண்டு உள. அதாவது, தலைப்பகுதியைப் பாவுகற்கள் கொண்டு மூடிய பிறகு ஐந்து அடி உயரமுடையதும், பின்பக்கம் சரிந்து முகத்துக்கு எழிலூட்டும் பாவனையில் மீண்டும் துண்டுக் கற்களைக் கொண்டு, தலைமுடியை மகுடமாய் அமைத்து, உறுதிப்படுத்த வேண்டியது முதற் பிரச்சினையாகும். இந்த நிலையில், மரக்கட்டடங்களுக்கு மர ஆணி செய்து மரச்சட்டங்களைப் பொருத்துவது போன்று கல்லால் ஆன, உறுதி மிகுந்த ஆணிகளைத் தைத்து, அத்துணைக் கற்களையும் இணைத்து வைக்கப்பட்டிருக்கின்றது. இஃதொரு சாதனை எனலாம். இரும்பாலோ, செம்பாலே காங்கிரீட்டாலோ எந்தப் பிணைப்பும் செய்திடவில்லை. முற்றிலும் கல்லால் ஓரினப்பட்ட பொருள்கள்

கொண்டே, (homogenous material) கட்டுமானம் அமைத்தல் வேண்டுமென்ற திட்டத்திற்கேற்ப இந்த யுக்தியானது வெற்றிகரமாக நிகழ்ந்துள்ளது.

மேலும், ஏடு பிடித்திட்ட கையும், முப்பால் முத்திரை காட்டிய கையும் உடலோடு சேர்த்து வைத்து உறுதிபடக் கட்டுதல் வேண்டுமென்பது இரண்டாவது பிரச்சினையாகும். இரண்டு கைகளும் சிலையின் மார்பிலிருந்து 5 அடி தூரம் முன்னோக்கி விலகி நிற்பனவாகும். இதற்கு cantilever என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் யுக்தி கையாளப்பட்டது. இதற்கு தண்டிகை என்பது தமிழ்ப் பெயர். ஏட்டின் நீளம் மட்டும் 10 அடி ஆகும். இதனைக் கையிலும் ஏந்தியுள்ளது சிலை. இதற்கென 13 அடி நீளமுள்ள பெரியதொரு கல்லை உடலிலே செருகிக் கல்லின் முன்வாயில் கையையும் ஏட்டையும் செதுக்கி வைத்து உறுதிப் படுத்தியிருக்கிறது. அத்தகைய யுக்தியைக் கையாண்டு 10 அடி உயரமுள்ள முப்பால் முத்திரை பிடித்த கையும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இச்சிலையின் இடுப்புவரை இயல்பாய் அமையும் பலவீனத்தைப் போக்கிட இடுப்பில் உடுத்திய ஆடைகளைப் பக்கவாட்டிலும் முன்புறத்திலும் எழில் குன்றாமல் விரித்து அமைத்தும், பின்புறத்தில் ஆசனமொன்றைச் செதுக்கி அவ்வாசனத்தின் முன்புறத்தே சிலை நிற்பதாகக் காட்டியும் சிலையின் பாதிப்பகுதி தக்க அகலமும் நீளமும் பருமனும் கொண்டதாய் - அடி பெருத்ததாய் - சுமார் 40 அடி உயரம் வரை உறுதியாக்கப்பட்டிருக்கிறது. இச்சிலையின் அடி அகலம் 25 அடியாகவும் நீளம் 35 அடியாகவும் தோள் மட்டத்தில் 15 அடி அகலமும் 30 அடி நீளமும் கொண்டதாகும்.

இத்தகைய பிரச்சினைகள் நிரம்பிய இச்சிலையின் கட்டுமானத்தில் இரும்போ, பிற உலோகமோ, காங்கிரீட்டோ சேர்க்கப்படவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கப்பாலும் மேலுமொரு நுட்பம் இந்தச் சிலைக் கட்டுமான நெறியில் உளதென்பதும் இங்கு குறிப்பிடப்படுகிறது. சிலையின் ஆதாரப்பீடமும், சிலையும், சுற்றுச்சுவரும் 3,681 துண்டுகற்கள் கொண்டு (7000 டன்) கட்டுமானமாக அமைக்கப்பட்ட செய்தி ஏற்கெனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எனினும் இத்தகைய துண்டுக் கற்களைச் சாந்தின் மீது செங்கல்லை அடுக்கடுக்காய் வைத்துக் கட்டுவது போல் அல்லாமல் ஒவ்வொரு கல்லையும் நீர்மட்டத்திற்கும், தூக்குக்கும் (spirit and plumb) சரிபார்த்து, அங்ஙனமே ஒவ்வொரு வரிசையையும் (layer or course) சரிபார்த்து, அதாவது ஒவ்வொரு கல்லும் ஒவ்வொரு வரிசையும் (course) பிணைப்புற்று உறுதிபட நிற்பதற்கேற்ற கட்டுமான நுட்பமும் (anchorage) இங்கு கையாளப்பட்டிருக்கிறது. இதற்குக் "கடிப்பு என்பது தமிழ்ப்பெயர்.

அதாவது, ஒவ்வொரு கல்லும் தனக்குக் கீழுள்ள கல்லைக் கடித்து நிற்குமாறு (anchorage) ஒவ்வொரு கல்லின் அடிமட்டமும் (bottom) எசையும் (vertical joints) செதுக்கப் பெற்று சேர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது. இப்படித்தான் கல்லால் ஆன கட்டடங்களில் ஒருமித்த உறுதிப்பாடு (homogeneity and stability) ஏற்றப்படுவதாகிறது. சாந்து வைத்தல் என்பது சந்துகளை அடைப்பதற்காகவேயொழிய கற்களைப் பிடித்துக் கொள்வதற்காக அல்ல. கற்களுக்குக் கொண்டிட்ட அளவுகளும், அவற்றின் பளுவும் (3 முதல் 8 டன்) மேலும் சிலைக்கு உறுதி சேர்ப்பதாகின்றன. சுருங்கச் சொன்னால் இச்சிலையானது பாறை மீது நிற்கும் பிறிதொரு பாறையாக (rock on rock) பாறையையே செதுக்கி நிறுத்திய சிலை போல அமைத்திருக்கிறது எனலாம்.

கற்களை இணைப்பதற்கு sulphur resistant சிமெண்டுச் சாந்து கொண்டு

சந்து பதிந்து (grouted) இணைப்புகள் மூடப்பட்டுள்ளன (sealed), துண்டுக் கற்களால் ஆன சிலையாகையால் மழை நீர் தலை வழியாகவும் தோள் வழியாகவும் சிலையுட்பகுதியின் வடித்திடக் கூடுமாதலால் epoxite என்ற ரசாயனச் சாந்து கொண்டு, தேவையான இணைப்புக்களை grout செய்து seal பண்ணி நீர் ஒழுக்கும் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

இதற்கும் மேலாக polysilicon என்ற transparent ரசாயனக் கலவை சிலைமீது பூசப்பட்டுள்ளது. இதனால் சிலைமீது உப்பங்காற்றுப்பட்டு சிலையை அரித்து விடாது தடுக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய சிமெண்டுச் சாந்துகள் எதிர்வரும் காலத்தில் உதிர்ந்துவிட்டாலும் ஒவ்வொரு கல்லும் உறுதிப்பாட்டோடு சேர்மானம் செய்யப்பட்டிருப்பதால் சிலைக்கற்கள் நகர்வதற்கோ, சிதிலமடைவதற்கோ இடமில்லை எனலாம். அலையும் மலையும் இருக்கும்வரை இச்சிலை நிலைத்து நிற்பதற்கு ஏற்ப உறுதியான கட்டுமான நுட்பங்கள் கையாளப்பட்டிருக்கின்றன என்பது வலியுறுத்தப்படுகிறது.

நற்சான்றுகள்

இவற்றைச் சோதித்ததோடு எல்லாவற்றையும் தாங்கி நிற்கும் பாறையும் உறுதிமிக்கது என்பதை பொதுப்பணித்துறை கட்டுமானப் பொறியாளர்கள் ஆய்வு செய்து இச்சிலை எக்காலத்தும் எத்தகையச் சூழ்நிலையிலும் நிற்கும் உறுதிப்பாடுடையதெனச் சான்றும் பகன்றிருக்கிறார்கள்.

தொடக்க காலத்தில், சிலைக்கான வரை படங்களைக் கொடுத்து, கட்டுமான நுட்பங்களையும் சொல்லி இச் சிலையின் உறுதிப்பாடு பற்றி ஆய்வும் விளக்கமும், யோசனையும் தருமாறு ஒரு நிபுணரிடம் கோரப்பட்டது. Heavy structure பற்றிய வடிவமைப்பு நுட்பங்களைத் தெரிந்தவரும் அனுபவமுள்ளவருமான திரு.குருசாமி, BE, M.Sc., (struct); FIE, Chief Engineer, FWD (Retd); Chartered Engineer and Consultant, Chennai அவர்களின் ஆய்வுக்குறிப்புரையின் (remarks) சாரத்தை அப்படியே அவர் எழுதிக் கொடுத்தபடி கீழே காணலாம். இதன் நகல் அரசிடமும் உள்ளது.

"In conclusion, it will be necessary for me to place on record the fact that the proportioning of the statue is a fine piece of Engineering skill. The stone courses are so designed that the Centre of Gravity of each course is nearly in alignment. The use of granite ensures a very stable vertical cantilever. Due to the inherent weight of granite, it cannot be swayed or toppled by horizontal forces like wind loads, the effect of which is really negligible. Only under an earthquake of 10% horizontal acceleration the normal compression reaches 16 tons per sq.ft. Resistance to sliding and shearing is excellent, the granite surfaces being dressed rough in the interior contact surfaces though the edges are fine chiselled to ensure proper fit. Resistance to weather is ofcourse well known as borne out by our ancient temple Gopurams and needs no further emphasis. The design of the statue bears ample testimony to the Engineering and Architectural expertise of our forefathers handed down to generation after generation of our Sthapatis."

வள்ளுவர் சிலைக்கு உபயோகப்படுத்திய கற்களின் பளு தாங்கும் சக்தியை (Compressive strength) ஆய்வு செய்து வழங்கிய அண்ணா பல்கலைக்கழக Building Technology Centre-ன் நற்சான்றின் சாரம் பின்வருமாறு:

"சிலைக்குப் பயன்படுத்தப்பட்ட கற்கள் சதுர அடிக்கு 630 முதல் 750 டன் வரை தாங்கும் சக்தியுடையது" என்பதாகும். அதாவது, கற்கள் மிக உறுதியானவை என்பது கருத்தாகிறது. இதனைக்



குறைத்து மதிப்பிட்டால் (factor of safety 4) தாங்கும் திறன் 155 முதல் 185 டன் வரை ஆகுமென்பது பொருளாகிறது.

மேலே குறிப்பிட்ட பொறியாளர் பீ. குருசாமி அவர்களின் ஆய்வுக் கணக்குப்படி சிலையின் ஒவ்வொரு அடுக்கும் அழுத்தும் சக்தி (maximum compressive stress) அதிகபட்சம் சதுர அடிக்கு 7 டன்னாக உள்ளது. எனவே, சிலையும் பீடமும் மலைமீது உறுதியுடன் நிற்கும் என்பது தெளிவு.

சிற்பியர் ஆற்றிய பணிகள்

ஒரே கல்லால் அல்லது ஒரே பாறையில் சிற்பங்களைச் செதுக்கியோ, மலைகளைக் குடைந்து கட்டடங்களைச் செதுக்கி அமைத்தலிலோ யாதொரு வியப்புமில்லை. அப்படிச் செய்தல் மிக மிக எளிதே. உடல் உழைப்பும் நீண்டகாலமும், அதிகப் பொருட்செலவுமே இதற்குத் தேவையாகும். ஆனால் பல துண்டுக் கற்களைக் கொண்டு, திருவள்ளுவர் சிலைபோல் வானுயர்ந்து நிற்கும், சிலையாகக் கட்டுவதும், அதற்கான கற்களைச் செதுக்குவதும், செதுக்கிய கற்களை இணைத்து விரும்பிய வண்ணம் முழு வடிவமாக (round figure) உருப்பெறச் செய்வதும் மிகமிகக் கடினம். இதில் கடின உழைப்பு, அதிகக் கால அளவு, பொருட்



செலவு ஆகியவற்றோடு கணக்குப்படி செதுக்குவதும் சேர்ப்பதும் (mathematical precision) பிறிதொரு பிரச்சினையாகும்.

தரை மட்டத்திலே இத்தகைய பணியைச் செம்மையாகச் செய்திடலாம். ஆனால் இதனை அலைமோதும் கடல் மீது, 3 டன் முதல் 8 டன் வரையிலான செதுக்கிய கற்களைப் படகிலேற்றி, Jetty-யில் இறக்கி, அங்கிருந்து 30 அடி உயரப் பாறை மீது கிரேன் கொண்டு தூக்கி வைத்து, அங்ஙனம் கொண்டு சேர்த்திட்ட செதுக்கிய கற்களை 133 அடி வரை - ஆட்சேதம், பொருட்சேதமில்லாமல் தூக்கிச்சென்று சேர்மானம் செய்திடல் என்பது மிகமிகக் கடினம். இத்தகைய இடர்ப்பாடுகளைத் தவிர்த்திடவே தஞ்சைப் பெருவுடையார் கோவில் கட்டுமானத்திற்கு மண்சாரம் ramp அமைத்து, அதையே தாங்கு சுவராகவும் (retaining wall) கொண்டு பணி முடிக்கப்பெற்ற செய்தியை வரலாற்று ஏடுகள் வியப்புடன் எடுத்துரைக்கும்.

இங்ஙனம் செய்திட வள்ளுவர் பாறையில் இடவசதியேயில்லை. எனவே இதற்கு மாற்றாகவும் சாதகமாகவும் சவுக்கு மரம், பனை மரம் ஆகியவை கொண்டே 150 அடி உயரத்திற்கு (இது கடல் மட்டத்திலிருந்து 180 அடி உயரமாகும்) மரச் சாரம் அமைத்து, அந்தச்சாரமானது 3 டன் முதல் – 8 டன் வரையிலான கற்களைத் தாங்கிக் கொள்ளத்தக்கவாறு கனமான பலகைகளைக் குறுக்கிலும் நெடுக்கிலும் தளமாக அமைத்து, உறுதி செய்து, அக்கற்களை அவற்றின் மீது வைத்து, கடப்பாறை கொண்டு நகர்த்திச் சிலையையும், சிலையின் தலையையும் உறுதிபடக் கட்டி அமைப்பது மெத்த மெத்தக் கடினம் என்று சொன்னால் கிஞ்சிற்றும் மிகையல்ல. இதற்காக மேற்கொண்ட யுக்தியும் பணிகளும் உழைப்பும் அளவிட வொண்ணாததாகும்.

இதில் பணியாற்றிய அத்துணைப் பேரும் உழைப்பின் சிகரத்திற்கே போய்விட்டார்கள் என்று சொல்லலாம். இரவும் பகலும் இக்கடினப்பணிகள் திகழ்ந்தன. இது மட்டுமா எனில், இத்துணைப் பணிகளைச் செய்யும்போது ஏற்படும் அபாயங்களையும்,

இடர்ப்பாடுகளையும் வென்று, இயற்கையின் சீற்றங்களையும் தாங்கிக்கொண்டு, அரசு கொடுத்திட்ட காலவரையறைக்குள் முடித்துக் கொடுப்பதென்பது வரலாறு காணா அனுபவமும்; வெற்றியுமாகும். 95 அடி உயரமுள்ள இச்சிலையின் நிர்மாணம் 1 வருடம் 7 நாட்களுக்குள் முடிந்துள்ளது என்ற செய்தி பலரின் வியப்பைப் பெறுவதாயிற்று. இத்தகைய பின்னணியில், முற்றிலும் கடினமான கருங்கற்களால் கட்டுமான நெறி முறைப்படி உறுதி செய்திட்ட உலகத்திலேயே மிக உயரமான சிலை திருவள்ளுவர் சிலையே என்று துணிந்து கூறலாம். இதனை உலக அதிசயங்களில் ஒன்றாக மதிப்பீடும் செய்திடலாம்.

சிற்பியர் மற்றும் பல துறையினர்க்குப் பாராட்டுரைகள்

இதனைச் சாதித்திட சொல்லொணா ஆர்வமும் அக்கறையும் கொண்டு, அயரா உழைப்பை நல்கியோர் கல்லுடைக்கும் தொழிலாளர்கள் முதல் மலை மீது மலை எழுப்பிய சிற்பியர் வரை 500 பேர் ஆவர். அத்தகைய ஒவ்வொருவரும் பாராட்டுக்குரியவர் எனினும், குறிப்பாகச் சொன்னால், சிலை செதுக்கும் பணியையும், கட்டும் பணியையும் நேரிடையாக மேற்கொண்ட ஸ்தபதியர், உதவிச் சிற்பியர் மற்றும் சாரம் அமைத்துக் கொடுத்த தொழிலாளர்கள், கற்களைச் சிதற விடாது - சிதைத்திடாது படகில் ஏற்றிச் சென்ற படகு ஓட்டுநர் மற்றும் அவர்தம் துணைவர்கள் கரை சேர்த்திட்ட கற்களை கிரேன் மூலம் மலை ஏற்றிய கிரேன் ஓட்டுநர் மற்றும் பணியாளர்கள், மலையேறிய கற்களைச் சேர்மானம் செய்து உறுதியும் உருவும் கொடுத்திட்ட சேர்மானச் சிற்பியர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்களாகிறார்கள். மேலும் ஒவ்வொன்றும் ஒரு டன் முதல் 8 டன் வரை எடையுள்ள கற்களை, மலையைப் பிளந்து, வெட்டியெடுத்துத் தந்த பாரம்பரிய ஆற்றலும் அனுபவமும் நுட்பமும் தெரிந்த சிற்பிகளும் பாறைத் தொழிலாளர்களும் இப்பாராட்டுக்கு உரியவர்களே அரசிடமிருந்து அவ்வப்போது நிதி பெற்று செலவுகளைச் சிக்கனமாகச் செய்து, பணிகள் தொய்வுறா வண்ணம் கண்காணித்து, சிற்பியர் தம் செய்ஊதியங்களை அவ்வப்போது தொய்வின்றி வழங்கி, பணப்பொறுப்பும் வகித்து, அன்றாடக் கணக்கெழுதி மேலாளரின் ஒப்பமும் பெற்று மாதா மாதம் செலவினப் பட்டியலும் மேலாளருக்கு அனுப்பி காலத் தொய்வில்லாமல் சுறுசுறுப்போடு அனைத்துப் பணிகளையும் செம்மையாகச் செய்திட்ட அரசு ஊழியர் திரு.ஏ.திருநீலகண்டன் மற்றும் திரு.எஸ்.போரூரான் ஆகிய இருவர் இப்பணியின் வெற்றிக்கு அருந்துணையாய் இருந்தார்கள். அவர்களும் நெஞ்சார்ந்த பாராட்டுக்குரியோர் ஆகிறார்கள்.

கடற்கரையிலிருந்து மலை அடிவாரத்துக்குக் கற்களை படகின் மூலம் கடத்திச் சென்று, கிரேன் மூலம் 30 அடி உயரப்பாறை மீது ஏற்றி இறக்கி வைக்கும் பணியை வெற்றிகரமாக முடித்துக் கொடுத்திட்ட தமிழ்நாடு கட்டுமானக் கழக இயக்குநர்கள், உடனிருந்து உதவிய பொறியாளர்கள் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்களாகிறார்கள்.


மேற்சொன்ன அத்துணைப் பணிகளுக்கும் ஏற்ற பெரிய பெரிய கற்களைக் கொண்டு வந்து, மூன்று இடங்களில் பட்டறை அமைத்துச் செதுக்கி வைத்த கற்களை அளந்து பார்த்து. திட்டமிட்டபடி பணி நடப்பதாக அரசுக்குத் தெரிவித்து, கன்னியாகுமரியில் நடைபெற்று வந்த சேர்மானப் பணிகளையும் சரிபார்த்து, அரசிடமிருந்து நிதி பெறத் தகுந்த பரிந்துரை செய்து, சிலைப் பணிகளையும் உற்று நோக்கி, பணியின் பளுவறிந்து, சிற்பியரை ஊக்குவித்து, பண இடர்ப்பாடின்றித் துரித நடையில் இப்பணி நிறைவு பெறப் பேருதவியாக இருந்த PWD

வல்லுநர் குழுவினர் பெருமதிப்பிற்கும் நன்றிக்கும் உரியவர்களாகிறார்கள்.

இச்சிலை நிறுவும் பணி செம்மையாக நடந்தேறியதை உற்றுப்பார்த்து, இதற்குத் தயாரித்திருந்த வரைபடங்களையும் (measured designs and drawings) மரத்தாலான மாதிரி உருவத்தையும் ஆய்வு செய்து, இடைக்காலத்தில் நடைபெற்ற சேர்மானப் பணிகளையும் உற்று நோக்கி, structural analysis செய்து இந்தச் சிலை உறுதியுடன் எக்காலத்தும் நிற்கும் (structural stability) என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்த தமிழக அரசின் பொதுப்பணித்துறை கண்காணிப்புப் பொறியாளர் (Planning and Designs (B) circle) அவர்களுக்கும் இப்பொருள் தொடர்புடைய வல்லுநர் குழு உறுப்பினர்களுக்கும், மேலும், (24.11.1999) பொதுப்பணித்துறைப் பொறியாளர்களுடன் நேரே பாறைக்கு வந்து சிலையையும், கட்டுமான நுட்பத்தையும் உற்றறித்து, வாயாரப் போற்றி மகிழ்ச்சி தெரிவித்து அரசுக்கு நற்சான்றிதழ் வழங்கியப் பொதுப்பணித்துறைத் தலைமைப் பொறியாளர் CE (Bldgs) அவர்களுக்கும் நன்றி கலந்த வணக்கம் தெரிவித்தல் கடமையாகிறது.

இதுமட்டுமல்ல, சிலை நிறுவும் தலைமை ஸ்தபதியோடு சேர்த்து இப்பணியின் தொடக்கக் காலம் முதல் நாளது வரை ஆர்வத்தோடு தொழிற் கூடத்திற்குச் சென்றும், சேர்மானம் நிகழ்ந்திட்ட பாறைக்குச் சென்றும். மேற்பார்வையிட்டும், பண வரவு செலவுகளைக் கண்காணித்தும் ஸ்தபதிக்கு உறுதுணையாய்த் திகழ்ந்த சிலைப்பணியின் பொது மேலாளர் திரு.ஏ.இராமமூர்த்தி, B.Sc., B.E., அவர்களுக்கும் நன்றி தெரிவித்திடல் கடமையாகிறது.

சென்னையில் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் இணை இயக்குநராகப் (Joint Director, Planning and Development) பணியாற்றி ஓய்வு பெற்ற பொறியாளர் இவர். தலைமை ஸ்தபதியானவர், மாமல்லபுர அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் முதல்வராய் இருந்தபோது அரசு செய்திட்ட பூம்புகார்க் கலைக் கூடங்கள், வள்ளுவர் கோட்டம், மதுரைத் தோரண வாயில்கள். சென்னையில் அண்ணாநகர்த் தோரணவாயில், தஞ்சைப் பல்கலைக் கழகக் கட்டடங்கள் நுழைவாயில்கள் ஆகியவற்றைச் செய்து வரும் போது





எல்லாப் பணிகளையும் இயக்ககத்தின் சார்பில் பார்வையிட்டு வெற்றிகரமாகச் செய்திட அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தவர் இந்தப் பொறியாளர். இதனால் இவருக்கு ஸ்தபதியர் பணி நுட்பங்கள் நன்கு தெரியும். எனவே, அமைச்சர் நடத்திடும் கூட்டங்களுக்கு ஸ்தபதி இல்லா நேரங்களில் பொறுப்புடனும் தெளிவுடனும் பணிபற்றிய விளக்கம் கூறி அமைச்சர்களை மகிழ்வித்தவர் இவர். தமிழ்ப்பற்று மிக்க இவர் திருக்குறளைக் கற்றுத் தேர்ந்து அவ்வழி நடப்பவரும் ஆவார்.

மேலும்,தொடக்கக் காலத்திலிருந்து இறுதிவரை இப்பணியில் ஸ்தபதியோடு நின்று - ஸ்தபதி செய்திட வேண்டிய பணிகளைப் பகிர்ந்து கொண்டு - சொந்தப் பணியாய் உளத்தே எண்ணி, இரவு பகல் பாராது, வெய்யில் மழைக்கு அஞ்சாது, உடல் சுகம் பேணாது, தொழிற் பட்டறையிலும், சேர்மானப் பாறையிலும் சிற்பியர்களோடு சிற்பியாய்ப் பணி செய்து, உழைப்பின் உச்சத்தையே எட்டிப் பார்த்திட்ட திரு எஸ். ஷண்முக ஸ்தபதி, நெஞ்சார்ந்த பாராட்டையும் வாழ்த்தையும் பெறுகிறார். இங்ஙணமே ஸ்தபதியோடு பல்வேறு பணிகளில் நீண்ட காலம் ஈடுபட்டு உழைத்தவரும் திறமைசாலியும் விசுவாசியுமாகிற ஸ்தபதி ஏ.சேகர், எல்லா நிலைகளிலும் திரு. சண்முக ஸ்தபதியோடு ஒத்து நின்று, வேலைகளைக் கண்காணித்துப் பணியாற்றியவர். இவர் ஒரு பட்டதாரி ஸ்தபதியுமாவார். இவ்விருவரும் தலைமை ஸ்தபதியின் மாணாக்கர்களுமாவர்.

இவர்களை விடுத்து இறுதிக்கட்டத்தில் வேலைகளைத் துரிதப்படுத்திட துணை ஸ்தபதிகளாக திரு. எம். சீனிவாசன், திரு.ஏ.சுவாமிநாதன் ஆகியோர் பணியாற்றினர். அவர் தம் ஒத்துழைப்பும். காட்டிய அக்கறையும், திறமையும். கண்காணிப்பும் பாராட்டுக்குரியன. இவர்களும் ஸ்தபதியின் மாணாக்கர்களே.

சிலைக்கான பெருங்கற்களைச் செதுக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட திரு. எஸ். செல்லையா மற்றும் திரு.பி.ஆர்.சொர்ணம் என்ற செட்டிநாட்டுச் சிற்பிகளும், மலையில் சேர்மானப் பணியை மேற்கொண்ட திரு. எஸ்.சின்னக்கண்ணும்




திரு.எம். சுடலையாண்டி ஆச்சாரியும், வியத்தகு சாரம் அமைத்துக் கொடுத்த ராமேஸ்வர நிமிந்த மேஸ்திரி, திரு.என். நாகராஜன், திரு.பி.நாகமுத்துவும், யானைச் சிற்பங்களைச் செய்திட்ட அம்பை திரு. பிரமனாச்சாரி, திரு.வி. சுப்ரமணியனாச்சாரி மற்றும் யானைச் சிற்பங்களுக்கு குறி போட்டு, மேற்பார்வையிட்டு வழி நடத்திய சிற்பக் கலைக் கல்லூரி முன்னாள் மாணாக்கர் திரு.எஸ்.சந்தான கிருஷ்ணனும் நல்ல பாராட்டுக்களுக்கும் வாழ்த்துக்களுக்கும் உரியோர் ஆகிறார்கள்.

இறுதியாகத் தலைப்பகுதியைத் தரையிலேயே சேர்மானம் செய்து, கண், மூக்கு, நெற்றி, புருவம். உதடு ஆகிய நுட்பப் பகுதிகளைச் சரிபார்த்து, மலையில் சேர்மானம் செய்தபின்னும் எல்லாவற்றையும் செம்மையாக்கிடும் பணியில் ஈடுபடுத்தப் பட்டவர் ஸ்தபதி திரு.எஸ் பெருமாள் ஆவார். இவர், ஸ்தபதியோடு பூம்புகார்க் கலைப் பணிகளிலும் அயல் நாட்டுச் சிற்பப் பணிகளிலும் இருபது வருடங்களுக்கு மேல் ஈடுபட்டு, திறமை பெற்று, இன்று கல்லால் சிற்பம் செதுக்குவதில் நிகரற்று விளங்குபவர். விசுவாசம் மிகுந்த இவருக்கும் ஸ்தபதியின் நல்வாழ்த்தும், பாராட்டும் உரியதாகின்றன.

சிற்ப இலக்கணக் கூறுகளை அடிப்படையாக வைத்து ஓவியம் வரைந்து, சிறியதொகு கிமிண்ட் மாடல்செய்து. அதனை மரத்திலே பிரதி செய்து, அப்பிரதியை கச்சிதமான அளவுக்கு தனித்தனியான அடுக்குகளாக (layers) மண்சாந்து கொண்டு செங்கலால் கட்டி, சிமிண்டினால் பூச்சுப்பூசி, அதனைத் துண்டு துண்டாக அறுத்து. அத்துண்டுகளைக் கற்களில் பிரதி செய்து கொள்ள ஸ்தபதி ஏற்படுத்திக் கொண்ட இத்தொழில்நுட்பம் (technique), கல் செதுக்கும் பணிக்கு உதவிகரமாய் இருந்தது. இந்த actual sized model-ஐ செங்கல்லிலே திறம்பட செய்திட்ட ஸ்தபதி எஸ். நாகராஜன் மற்றும் மரத்தால் மாதிரி வடிவம் செதுக்கித் தந்த முன்னாள் மாமல்லபுரக் கல்லூரி மாணவர் திரு. முருகேசன், அவர்தம் துணைச் சிற்பிகள் ஆகிய அனைவரும் நெஞ்சார்ந்த பாராட்டுகளுக்கு உரியவராகிறார்கள்.

இச்சிலைக்கு மூலப்பொருளான கருங்கற்கள் அம்பாசமுத்திரத்துப் பாறையில் வெட்டிப் பெறுவதற்குப் பொறுப்பேற்று அதிகப்படியான கற்களை (4000 டன்) வழங்கிய அம்பை சிற்பி திரு.ஏ.ஆறுமுகம் ஆச்சாரியாருக்கும் பட்டுமலைக் குப்பம், சிறுதாமூர்ப் பாறையிலிருந்து கற்களை வெட்டித் தந்திட்ட மேஸ்திரிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பாராட்டுக்கள் இங்கே பதியப்படுகின்றன.

சிலைக்கற்களின் இணைப்புகளை sulphur resistant சிமெண்டு கொண்டு மூடியதோடு, முக்கியமான



இணைப்புக்களையும், தலைப்பகுதிகளையும் epoxite கொண்டு grouting மற்றும் sealing செய்து செவ்வனே முடித்துக் கொடுத்த சென்னை, S.I.P. Industries Ltd., நிறுவனத்தார்க்கும். நேரடிக் கண்காணிப்புச் செய்திட்ட, டாக்டர் எஸ்.குணசேகரன் (Chemist) மற்றும் பொறியாளர் திரு. டி.அசோகன் அவர்களுக்கும் பாராட்டும் நன்றியும் தெரிவிக்கலாகிறது.

கட்டுரையாளராகிய இச்சிலை நிர்மாணத் தலைமை ஸ்தபதி, 1957லிருந்து 1999 முடிய 42 ஆண்டுகாலமாக எண்ணற்ற பணிகளை இந்தியாவிலும், மேலை நாடுகளிலும் செய்திட்ட காலை இவருக்கு வாய்த்திட்ட தலைவர்கள் அனைவரும் தத்தம் நிலையில் மிகப் பெரியவர்களாகவே இருந்திருக்கிறார்கள். இவர்தம் முன்னோர்களான ஸ்தபதியரில் பெரும்பாலோர் நாடாண்ட மன்னர்கள் ஆதரவிலேயே பணியாற்றி வந்திருக்கிறார்கள்.

குறிப்பாகத் தொடக்க காலத்தில் இராஜராஜ சோழன் தலைமையிலும், கடைசிக் காலத்தில் சிவகங்கைச் சீமையை ஆண்ட சின்னமருது, பெரியமருது (இருவரும் அண்ணன்-தம்பிகள்) ஆகியோர் தலைமையில் புகழ் வாய்ந்த காளையார் கோயில் கோபுரத்தைப் பழம்பதி, பெரிய நாயகம் என்ற சிற்பக்கலை வல்லுநர்கள் (இருவரும் அண்ணன்-தம்பிகள்) செய்து சிற்பியர்தம் வரலாற்றில் இடம் பெற்றுள்ளார்கள். அவர்தம் பணிகளைச் செய்துவரும்போதே மன்னர்களின் அன்பையும், மதிப்பையும், ஆதரவையும் பெற்று வந்ததினால் அவரவர் பணிகள் சிறப்புற அமைவதாயிற்று.

இப்படித்தான் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் வள்ளுவர் கோட்டமும், பூம்புகார் சிலப்பதிகார மன்றங்களும், மாதவிச் சிற்பமும் பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் சிலையும், காரைக்குடியில் தமிழ்த்தாய்க் கோயிலும், தமிழ்த்தாய் உருவமும் சிறப்புற அமைந்தன. மேடையில் பாடும் பாடகருக்கு எதிரே அமர்ந்துள்ள பிறிதொரு பாடகரால் ஆக்க உணர்ச்சி (inspiration and creative effort) மேலோங்கி எழுவதுபோல, டாக்டர் கலைஞர் அவர்கள்





ஆக்கமிகு உணர்ச்சியை ஸ்தபதியிடம் தோற்றுவித்தவர்களாவார்கள். இதனால் அரசும் ஸ்தபதியும் பெருமையடைவதாயிற்று. எனவே, ஸ்தபதிக்கு ஆக்க உணர்ச்சியூட்டிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிப் பெருக்கைப் புலப்படுத்துதல் கடமையாகிறது.

இச்சிலையைச் செய்து வரும் நேரத்தில் ஸ்தபதிக்கு நேரடித் தொடர்பாகக் கிடைத்திட்ட செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் மாண்புமிகு வ.முல்லைவேந்தன் அவர்கள் இப்பணியில் கொண்ட அக்கறையின் அளவை மதிப்பிட்டுச் சொல்ல இயலாது. இப்படியொரு அமைச்சர் இப்பணிக்கு உகந்தவர் என்பதைத் தேர்வு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்தான் முதலில் பாராட்டுக்குரியவர்களாகிறார்கள்.

ஸ்தபதியை தனது நண்பராகவும் உடன் பிறந்தோனாகவும் நடத்தி, அன்பு காட்டி, வேலையையும் கடுமையாக வாங்கி, வெற்றி கண்ட திறமை மிகுந்த அமைச்சராக இருந்ததைப் பெருமையோடு இத்தருணம் சொல்லி ஸ்தபதியின் நெஞ்சார்ந்த நன்றியறிதல் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்களுக்குப் புலப்படுத்தலாகிறது.

இச்சிலை செய்திடும் நேரத்தில் செய்தி விளம்பரத் துறையை நிர்வகித்த அனைத்து அரசுச் செயலாளர்களும், அனைத்து இயக்குநர்களும், அவர்தம் துறை அரசுப் பணியாளர்களும், எல்லாக் கட்டங்களிலும் ஸ்தபதிக்குச் செய்து வந்த உதவிகள், காட்டிய ஆதரவுகள் இச்சிலைப் பணியின் வெற்றிக்குக் காரணமாயிருந்தன என்றால் மிகையாகாது. அவர்களையும் இந்த நல்ல நேரத்தில் நினைத்து நன்றி சொல்ல கடமையாகிறது.

தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலகத்திற்குச் சென்று வரும்போதெல்லாம் ஆர்வமிகு அதிகாரிகள் ஸ்தபதியிடம் சிலைப்பணியின் முன்னேற்றத்தைக் கேட்டுக் கேட்டு எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டதை உற்று நோக்கும்போது தமிழக அரசு அதிகாரிகள் அனைவரும் போற்றும் பணியாக இச்சிலை நிறுவும் பணி இருந்ததென்பது தெளிவாயிற்று. எனவே, அவர்தம் ஆர்வம் மெச்சுதலுக்குள்ளாகிறது.

வள்ளுவர் சிலை சேர்மானப் பணி தொடங்கிய காலத்திலிருந்து நாளது வரை இப்பணியின் மீது அளவிலா ஆர்வங்கொண்டு பார்வையிட வரும் மாண்புமிகு அமைச்சர்களிடமும், கட்டுமானக் கழக இயக்குநரிடமும். ஸ்தபதியிடமும் குறுக்கிலும் நெருக்கிலுமான கேள்விகளைக் கேட்டு,



பணி பற்றிய வளர்ச்சியைப் புள்ளி விவரங்களோடு திரட்டி, பொதுமக்களுக்குத் தெரியவேண்டிய முன் பின் செய்திகளையும் சேர்த்து, நல்ல தமிழில், போட்டி போட்டுக் கொண்டு தத்தம் செய்தித்தாள்கள் மூலம் வெளிப்படுத்தியதால் இச்சிலை நிர்மாணப் பணியின் அன்றாட வளர்ச்சி பற்றிய செய்திகள் அனைத்தும் தமிழகத்தின் பட்டிதொட்டிகளுக்கும் பரவிட நேர்ந்துள்ளது.

வள்ளுவர் சிலைப் பணி பற்றிய செய்தி வாராத நாளே இல்லையெனலாம். ஒரே நாளில் ஒரே இதழில் மூன்று இடங்களில் செய்திகள் இடம் பெற்றதுமுண்டு. குமரி மாவட்டச் செய்தியாளர்களும், நாகர்கோவில் P.T.I நிருபர் திரு. எஸ்.ரங்கநாதன் அவர்களும் அவரது துணை நிருபர்களும் காட்டிய ஆர்வம், சுறுசுறுப்பு, மலைமீது பணியாற்றிய சிற்பிகளுக்கு ஊக்கமளிக்கும் 'டானி'க்காக இருந்தது என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

எனவே, இப்பணியின் வெற்றியில் அவர்களுக்கும் சிறிது பங்களிக்கலாம். திறப்பு விழாவையொட்டி பல மலர்களும் வரவிருப்பதால் அம்மலர் மாலைகளை வள்ளுவர்க்குச் சூட்டி மகிழ்வார்கள் என்று எதிர்பார்க்கலாம். அத்தகு நண்பர்களுக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவிப்பது மிகப் பொருத்தமாகுமென கருதலாகிறது.

சிலை நிர்மாணப் பணியின்போது மாதம் மூன்று முறை சிலைப்பணி வளர்ச்சி பற்றி ஸ்தபதியோடும், ஸ்தபதியின் பிரதிநிதியோடும் உரையாடி, அவ்வப்போது சேர்மானப் பணிகளை மலைக்குச் சென்று பார்த்துப் பணியாற்றும் ஸ்தபதிகளோடும் சிற்பிகளோடும் நேரில் கலந்து உரையாடி உற்சாகமூட்டியவரும், அறப்பீடத்தின் மீது திருவள்ளுவர் பாதத்தைப் பதிய வைத்த நாளிலும், சிலையின் தலைப்பகுதியை மூடிய நாளிலும், ஸ்தபதியரோடு இருந்து, அந்தப் புனித நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கி, அந்நிகழ்ச்சிகளைப்

பெருமைப்படுத்தியவரும் ஆகிய கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.V.பாண்டியன், இ.ஆ.ப., அவர்களுக்கு வணக்கம் கூறல் கடமையாகிறது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தஞ்சைப் பேரரசனாம் இராஜராஜ சோழன் முற்றிலும் துண்டுக் கற்களைக் கொண்டு 216 அடி உயரங் கொண்ட மேரு எனப்படும் வியத்தகு விமானம் ஒன்றை நிறுவினான். கற்சின்னங்களே காலத்தைக் கடந்து நிற்கும் இயல்பின என்பதை உற்றறிந்து இப்படிச் செய்தனன் இராஜராஜன். இப்பணியின் சிறப்பு வரலாற்று ஏடுகளில் இன்றும் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. யுனஸ்கோ (UNESCO) நிறுவனம் இதனை World heritage என்ற பட்டியலில் இடம் பெறச் செய்து அனைத்துலக மக்களின் கவனத்தையும் ஈர்த்திடச் செய்திருக்கிறது.

இந்த விமானத்திற்கு முன்னும் பின்னும் கட்டுமானக் கோவில்கள் (structural temples) இந்திய நாட்டில் பல எழுந்துள்ளன. திருவள்ளுவர் சிலையினைக் கட்டி முடிக்கும் பேறு பெற்ற இக்கட்டுரையாளர் புதுடில்லியில் முற்றிலும் கற்களால் கருவறையும் விமானமும் கட்டி மத்திய அரசின் விருதும் பெற்றுள்ளார்.


இப்போது ஹவாய்த்தீவில் (USA) அமெரிக்க சுவாமி ஒருவருக்கு பிரம்மாண்டமான சிவன் கோவில் ஒன்றை முற்றிலும் கல்லால் கட்டி வருகிறார்; முடியும் தறுவாயில் இருக்கும் இப்பணி அமெரிக்காவிலேயே எழுச்சி பெற்று வரும் கருவறை, விமானம், கோபுரம், ஸ்தூபிகள் உள்பட முற்றிலும் கல்லால் ஆன கற்கோவில் ஆகிறது.

என்றாலும் 133 அடி உயரங்கொண்ட திருவள்ளுவர் சிலைபோல கருத்தாழமுள்ள-முற்றிலும் கல்லால் ஆன கட்டுமான நுட்பங்கள் செறிந்த சிலையாக - எங்கணும் எவரும் கண்டதில்லை, கேட்டதுமில்லை.



நினைத்துப் பார்த்ததுமில்லை. வெற்றி கண்ட இப்பணி, சிற்பக் கலை மரபுக்கு மேலுமொரு அணியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

கலைகளையும், கலைகளின் சிறப்புக்களையும், தொன்மையையும். உயர்வையும் பேசிடத்தக்கோர் நம் நாட்டில் ஏராளமாக இருப்பினும், கலைசார்ந்த பண்பாட்டுச் சின்னமாக பெரிய எடுப்புக்களைக் கல்லால் செய்திடத் தக்கோர் இன்று குறைவே எனலாம். மேலும், இத்தகையப் பணியைச் செய்திட எவருக்கும் ஆசை இருக்கலாம். வாய்ப்புமிருக்கலாம். ஆனால் எதைச் செய்திட வேண்டுமென்ற உணர்வும், உறுதியும் அதற்குரிய துணிச்சலும் அதனால் ஏற்படும் வெற்றி மீது நம்பிக்கையும் கொண்டோர் அரிதினும் அரிதே.



அத்தகைய துணிச்சலைத் தஞ்சைப் பேரரசன் இராஜராஜ சோழனிடம் அன்று கண்ட சிற்பக்கலை மரபு இன்று, 1000 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம்தான் காண்கிறது என்றால் மிகையன்று; இது முகமனும் அன்று. இத்துணிச்சல் மற்றும் அஞ்சா நெஞ்சம், டாக்டர் கலைஞர் அவர்களுக்கே உரித்தான - இயல்பாய் வாய்த்திட்ட - ஒரு சிறப்புப் பண்பாகும்.

இராஜராஜன் தனது படைப்பினால் சைவ சமயத்தை வானுயுர உயர்த்தி வைத்தான். டாக்டர் கலைஞர் அவர்களோ, தமது படைப்பினால் தமிழனுடைய சிறந்த பண்பாட்டை - வள்ளுவத்தை - வள்ளுவர் காட்டிய திருநெறியை - இன்று வானுயர ஏற்றிவைத்துள்ளார்கள் என்றால் இதுவும் மிகையன்று. அன்னாரது பேச்சிலும் மூச்சிலும் தமிழும் தமிழ்ப் பண்பாடும் தானே எதையும் மிஞ்சி நிற்கிறது.

இறுதியாக, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சிற்பக்கலை மரபு சிற்பியர் தம் கலை ஆற்றல் எத்தகைய ஏற்றம் கொண்டு விளங்கிற்று என்பதை இராஜராஜன் தமது படைப்பின் மூலம் சுட்டிக்காட்டி அவர்களுக்கும் வரலாற்றில் இடமளித்தானே அதுபோல இக்காலச் சிற்பக் கலை மரபும் சிற்பியர் கலை ஆற்றலும் அன்றுபோல் இன்றும் ஓங்கி நிற்கிறது என்பதை டாக்டர் கலைஞர் அவர்களின் படைப்பானது உலக மாந்தர்க்குச் சுட்டிக்காட்டி அவர்தம் பணியைப் பெருமைப்படுத்தி, அவர்களையும் வரலாற்றில் ஏற்றி வைத்துள்ளார்கள் என்று துணிந்து கூறலாம்.

இந்த நேரத்தில் சிற்பியர் இனமே அவர்களுக்குப் பாராட்டுக்களையும் நன்றியறிதலையும் புலப்படுத்திக் கொள்கிறது.

இரண்டாயிரமாவது ஆண்டு பிறந்திட்ட இந்த நேரத்திலிருந்து சிற்பியர்களுக்கு நல்லதொரு ஏற்றமும், வாழ்க்கையில் உயர் நலமும், சிறப்பும் கிடைக்குமென்று நம்பலாம். இதற்கு நல்லதொரு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்று கூறி அவர்தம் பெயரையும் புகழையும் நன்றியுணர்வோடு காப்போமாக!



பெருந்தச்சன் கணபதி ஸ்தபதி

கோவில் கட்டும் கலைஞன், சிற்பி, எழுத்தாளர் என பன்முகத் திறமையோடு வாழ்ந்த வை.கணபதி ஸ்தபதி முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் மீதும் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டவர்.


இந்த நூற்றாண்டின் மகா கலைஞனான கணபதியின் நேரடிக் கண்காணிப்பிலும் கைவண்ணத்திலும் உருவானதுதான் கன்னியாகுமரி அய்யன் திருவள்ளுவரின் விண்ணுயர் சிலை.

2011ஆம் ஆண்டு கணபதி ஸ்தபதி தனது 84வது வயதில் சென்னையில் காலமானபோது முத்தமிழறிஞர் கலைஞர் "நாம் நினைத்தவாறு சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமையவும், குமரியில் வள்ளுவர் சிலை எழுப்பவும் துணையாக இருந்து, அந்த பணிகளில் இரவு பகலாக கண் விழித்து வெற்றிகரமாக முடித்த கணபதி ஸ்தபதி மறைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். அவரது மறைவு தமிழகத்திற்கும், சிற்ப கலைக்கும் மிகப்பெரிய இழப்பாகும்" என புகழஞ்சலி எழுதினார்.

அவரை நினைவுகூறும் விதமாக அவர் மறைவதற்கு முந்தைய இந்த நேர்காணலை இங்கே பகிர்கிறோம்.



நேர்காணல்: பத்திரிகையாளர்
கதிரேசன் சுப்பிரமணியம்



தமிழன் தன்னை மறக்கலாமா?

சிலையை தெய்வமாகப் பார்ப்பதும், தெய்வத்தை சிலையாகப் பார்ப்பதும், அவரவர் மனப்பாங்கைப் பொறுத்தது. ஆனால், எந்தச் சிலையிலும், தெய்வத்தை வரவழைப்பது, உள்ளுணர்வில் ஒளியை தரிசித்தவர்களுக்கே வாய்க்கப்பெறும். தற்கால தமிழகத்தின் சிற்பக் கலையை பேச வைத்த பெருமை, கணபதி ஸ்தபதியையேச் சாரும். நம் பண்டைய, புராதன கோவில் சிற்பங்களைப் பார்க்கும் போதெல்லாம், தவறாது ஒன்றைச் சொல்வோம். "இதெல்லாம் இந்தக் காலத்தில் முடியுமா?" என்பதுதான் அது. ஆனால், அந்தக் காலத்தில் மட்டுமல்ல, இந்தக் காலத்திலும் முடியும் என்று அகிலத்திற்கு நிரூபித்துக் காட்டியவர். அதற்குச் சாட்சியாக அவர் வடித்த அநேக கோவில்களும் சிலைகளும் உண்டு என்றாலும், குமரிமுனையில் இருக்கும் திருவள்ளுவர் சிலையே மிக உயர்ந்த சாட்சி.

அவருடைய மயன்குடிலில்...

குடிலா அது? (முளிகை)

மழைக்காற்று வீசும் மாலை நேரத்தில் நம்முடன் மனம் விட்டுப் பேசினார். அந்த சந்திப்பிலிருந்து...

தமிழ்நாட்டில் மட்டும் கோவில்கள் அதிகமாக இருப்பது ஏன்?

உலகில் எந்த நாட்டினருக்கும், எந்த மொழியினருக்கும் இல்லாத ஒரு வரலாறும், நாகரீகக் கலாச்சார பின்புலமும் தமிழ் மண்ணுக்கு மட்டுமே உண்டு. ஆதிமனிதன் தோன்றியதே நம் தமிழ் மண்ணில்தான். கடற்கோள்களினாலும், புலம் பெயர்ந்து போனதாலும், உலகின் நாலா திசை களிலும், மனிதன் வாழத் தலைப்பட்டிருக்கிறான். உலகில் நாகரீகம், கலை, இலக்கியம், விஞ்ஞானம், ஆன்மிகம், ஜோதிடம், வானியல் என்று சகலக் கலைகளிலும் தேர்ந்த வல்லுநர்களின் தாயகமாக நம் தமிழ் மண்ணே திகழ்ந்திருக்கிறது. அது இன்று வரையும் அப்படியே தொடர்ந்து வருகின்றது. ஆனால், தமிழன்தான் தன்னை மறந்து போய் கிடக்கிறான். இப்படி நாகரீக வாழ்வை அவன் ஆதியிலேயே அடைந்ததால்தான் அவன் ஆலயங்களை, கோவில்களை கட்டினான். தமிழகத்தில் மட்டும் பட்டியலிடப்பட்ட 35,000 கோவில்கள் உள்ளன. பட்டியலிடப்படாதவை இன்னும் நிறைய உண்டு. கோவில்கள் ஓர் அதிசய விஞ்ஞான அனுபவத்தை நம் அகத்தே தோற்றுவித்து, ஆன்ம பலம் கூட்டுவதே இதற்கு அடிப்படையான காரண மாகும்.

தங்களது பால்ய காலம், பூர்வீகம் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்...

நாங்கள் தஞ்சை பெரியக் கோவிலை வடிவமைத்த குஞ்சரமல்லனின் வம்சாவழி பரம்பரையினர்கள். எனது தந்தையார் வைத்தியநாத ஸ்தபதி. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். தாயார் வேலம்பாள், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர். எனது தந்தை. சமஸ்கிருதம், தமிழ், கிரந்தம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளை அறிந்தவர். சிற்பக் கலையில் அளப்பறியாத திறமை பெற்றவர். எந்த ஊரில் கோவில் கட்டுகிறாரோ அப்பணி முடியும் வரை குடும்பத்துடன் அந்த ஊரிலேயே அவர் தங்கி விடுவது வழக்கம். அவர் ஒரு ஆசாரசீலர், அனுஷ்டானங்களை தீவிரமாகக் கடைபிடிப்பவர். இப்படி ஊர் ஊராகச் சென்று கோவில் கட்டும்போது காரைக்குடிக்கு அருகில் உள்ள பிள்ளையார்பட்டி கோவிலின் ஏழுநிலை இராஜகோபுரப் பணியை மேற்கொண்டார். அந்த வேளையில் நான் பிறந்ததால் எனக்கு கணபதி என்று பெயரிட்டார். தேவக்கோட்டை எஸ்.எம்.எஸ். பள்ளியில், என் அப்பத்தாவுடன் தங்கிப் படித்தேன். சிறுவயதில் குறும்பு, நிறைய பண்ணுவேன். படிப்பிலும் கவனமாக இருப்பேன். பள்ளி இறுதியாண்டு படிக்கும்போது, ரமணாஸ்ரமத்தின் மாத்ருபூதேஸ்வரர் சந்நிதி திருப்பணியை அப்பா ஏற்றார்.

அப்போது ரமணரின் 'நான் யார்?' சொற்பொழிவை விரும்பிக் கேட்பேன். விரைவிலேயே ரமணரின் அன்பிற்கு பாத்திரமானேன். இன்டர்மீடியட் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றிருந்ததால், கிண்டி பொறியியல் கல்லூரியில் இடம் கிடைத்தது. ஆனால் குடும்ப வறுமை காரணமாக காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பி.ஏ. கணிதம் படித்தேன்.


சென்னையிலுள்ள காந்தி மண்டபத்தை உங்கள் தந்தையார் வடிவமைத்தது எப்படி?

காந்தி மண்டபத்தை அமைக்கும் பணி அப்பாவுக்கு கிடைத்ததே ஒரு சுவாரசியமான விஷயம். ரமணாஸ்ரமத்திற்கு வருகை தந்த அப்போதைய முதல்வர் இராஜாஜி, கருவறையின் தெற்குப் பக்கத்தில் இருந்த தட்சிணாமூர்த்தி விக்ரகத்தின் அழகில் மயங்கி, இதனை வடிவமைத்தவர் யார்? அவரைச் சந்திக்க வேண்டும் என்று கூறினார். அதன் பின்னரே காந்தி மண்டபத்தை எனது தந்தை வடிவமைத்தார். அதற்காக தனது சொந்த பணத்தில், `தோடா' என்னும் ஆபரணத்தை வாங்கி, தந்தைக்குப் பரிசளித்தார். கூடவே, இத்தனை அற்புதமான சிற்பக்கலையை வளர்க்க, சிற்பக்கலைக் கல்லூரி

கணவர் கணபதி ஸ்தபதி பற்றி, மனைவி தட்சிணாவதி...

ஒரு ஸ்தபதியைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், அவருடைய இன்ப துன்பங்களில், சிந்தனைகள் மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றை நேரிடையான தொடர்பில்லாமல் புரிந்துகொள்ள இயலாது என்று அவர் அடிக்கடி சொல்வார். இதனால்தான் ஒரு ஸ்தபதியை மையப் பொருளாக வைத்து ஒரு சினிமாப் படம் கூட எவராலும் எடுக்க முடியவில்லையோ என்று என் கணவர் போல நானும் நினைக் கிறேன். இராஜலட்சுமி இராமநாராயணன், என் கணவரின் வாழ்வு நிகழ்ச்சிகளை, 'சிற்பிக்குள் கண்டெடுத்த முத்துக்கள்' என்று நூலாக வெளியிட்டுள்ளார் என்கிறார் தட்சிணாவதி.





ஒன்றினை மாமல்லபுரத்தில் தொடங்கவும் உத்தரவிட்டார். அந்த எண்ணம் 1957இல் நிறைவேறியது. கல்லூரியின் முதல்வராக எனது தந்தை பணிப்பொறுப்பினை ஏற்றார்.

நீங்கள் எப்படி இந்தத் துறைக்கு வந்தீர்கள்?


கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்ததும் ஏதேனும் ஒரு அரசுப்பணிக்கு முயற்சி செய்தேன். முதலில் தபால்துறையில் வேலை கிடைத்தது. ஆனால், அதில் நான் சேரவில்லை. அதன் பிறகு நான் படித்த உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணியில் பணியாற்றி வரும்போதே, பழனி அருள்மிகு தண்டபாணித் திருக்கோவில் ஆஸ்தான ஸ்தபதிக்கான பணிப் பொறுப்பு கிடைத்தது. அதனைத் தொடர்ந்து, சிற்பக் கலைக்கல்லூரி முதல்வரானேன். 27 ஆண்டுகள் முதல்வராக பணியாற்றினேன்.

உங்களது படைப்புகளில் உங்களை கவர்ந்தது?

எதைச் சொல்வது எதை விடுவது? கடவுளின் கையில் நான் ஒரு கருவி - அவ்வளவுதான் கடவுளின் வள்ளுவர் கோட்டம், மதுரைத் தமுக்கம் மைதானத்தில் இருக்கும் தமிழ்த்தாய் சிலை, குமரிக்கடல் முனையில் நெடிதுயர்ந்து நிற்கும் அய்யன் திருவள்ளுவர் சிலை, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் கட்டப்பட்ட கோவில்கள் என்று சொல்லிக்கொண்டே போகலாம். அதிலும் குறிப்பாக பூம்புகாரில் இருக்கும் அருங்காட்சியகக் கலைக்கோவிலில் இடம் பெற்ற மாதவியைப் பற்றி கலைஞர் பெரிதும் பாராட்டினார். நான் நகைச்சுவையாகச் சொல்வேன், ''அந்தக்கால மாதவியின் அழகைக் கண்டு, கோவலன் மயங்கினார். இந்த மாதவியைப் பார்த்து எங்கள் கோமகன் மயங்கினார்'' என்று சொன்னேன். குமரி முனையில், 133 அடி உயரத்தில் இடம் பெற்றுள்ள அய்யன் திருவள்ளுவரின் சிலையை அமைத்தபோது, ''மலை இருக்கும் வரை சிலை அசையாது'' என்று கூறினேன். அதனால்தான் சுனாமியிலும் நெடிதுயர்ந்து நின்றது. இப்போது சொல்கிறேன். அதனைக் காக்க வேண்டுமென்றால், மாமல்லபுர சிற்பங்களைக் காக்க பல்லவர் கால சிற்பிகள் மேற்கொண்ட முறையை மேற்கொள்ள வேண்டும். அதாவது, பெரிய பெரிய பாறைகளைக் கடலின் ஓரத்தில் தடுப்பு அரணாகப் போட்டு அமைக்க வேண்டும். இல்லாவிட்டால், சிலை அசையும். மலை அசைந்தால் சிலை அசையும்.

இந்த நுட்பங்களை நீங்கள் எப்படி அறிந்து வைத்திருக்கிறீர்கள்?

நம் தமிழர்களின் முதற்சங்கம் 10,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. அப்போதே `மயன்' என்னும் பெருந்தச்சன், இதற்குரிய விதிகளை வகுத்து வைத்திருக்கிறான். ஐந்திறம் எனப்படும் அதாவது, இயல், இசை, நடனம், கட்டடம், சிற்பம் ஆகியன. இவற்றின் உதவியைக் கொண்டு, வடிவமைக்கின்ற போது அந்தச் சிற்பங்கள் காலத்தை வென்று நிற்கும். இதுகுறித்து, தமிழ் சமஸ்கிருதம், கிரந்தம் ஆகியவற்றிலுள்ள அற்புதமான



இந்திய திரைப்படச் செய்தி பிரிவு சிற்பி கணபதி ஸ்தபதி பற்றிய செய்திப்படம் ஒன்றை தயாரித்து உள்ளது. சுமார் இருபது நிமிட நீளப்படமான இந்த படம் கணபதி ஸ்பதி அவர்களின் படைப்பாற்றலின் பன்முகத்தையும் வெளிப்படுத்துகிறது. இதை இயக்கியிருப்பவர் ப.ரவிக்குமார்.

சூத்திரங்களை எளியத் தமிழில் தொகுத்து, ஏற்கனவே நூலாக வெளியிட்டிருக்கிறேன். இப்போது மீண்டும் அது குறித்த ஒரு முழு புத்தகத்தை வெளியிட இருக்கிறேன். தமிழர்களின் நுண்ணிய அறிவுத்திறனை, மேல்நாட்டினர் அறிந்து கொண்டிருக்கும் அளவு தமிழர்கள் அறியாமல் இருப்பது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. `எனர்ஜி அண்ட் மேட்டர்' (Energy And Matter) என்ற ஐன்ஸ்டினின் சித்தாந்தத்தை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் கண்டறிந்து விட்டனர். 'மெய்யொளி உயிரோலி சிவணுதல் இயல்பே' என்று இதை சொல்லி இருக்கிறார்கள்.

எவ்வளவோ கோயில் சிலைகளையும், சிற்பங்களையும் செதுக்கியிருப்பீர்கள். உங்களைக் கவர்ந்த... நீங்கள் பிரமிக்கும் சிற்பம் எது?

சிதம்பரம் நடராஜர் சிலையையும், ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் சிலையையும் கண்டு மெய்சிலிர்க்கிறேன். எப்பேர்பட்ட உள்ளொளி தரிசனம் கிடைத்திருந்தால் இப்படியொரு சிலையை வடித்திருக்க முடியும்? நினைக்க நினைக்க பிரமிப்பாக இருக்கிறது.

எதிர்காலத்தில் என்ன வகையான திட்டம் வைத்திருக்கிறீர்கள்?

முதலில் என் ஆதங்கத்தைச் சொல்லி விடுகிறேன். சென்னை வள்ளுவர் கோட்டம், நான் பார்த்துப் பார்த்து செதுக்கியது. ஆனால், இன்று அதனை வர்த்தகக் கண்காட்சி நடத்துவதற்கு வாடகை விடுகிறார்கள். நம் தமிழரின் அடையாளச் சின்னம், அதை டிரேட் சென்டர் ஆக்குகிறார்கள். வேதனையாக இருக்கிறது. எதிர் காலத்தில் மகாபலிபுரத்திலிருந்து 7 கிலோமீட்டர் தொலைவில், இடமெல்லாம்' பார்த்து வைத்துவிட்டேன். தந்தை பெரியாருக்கு சிலை வைக்க வேண்டும். தெற்கே வள்ளுவருக்கு வைத்தது போல் அமைக்க வேண்டும்.


பொருள்




தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு
தமிழரசு

திருவள்ளுவர் கற்ற கல்வி





கு.அழகிரிசாமியின் டயரிக்குறிப்பு இது. 1970 பிப்ரவரி 2 வெள்ளிக்கிழமை அவர் கிண்டி பொறியியல் கல்லூரி (இன்றைய அண்ணா பல்கலைக்கழகம்)யில் தமிழ்மன்றத்தில் 'வள்ளுவர் கற்ற கல்வி' என்ற தலைப்பில் பேசியது தெரிகிறது. கு. அழகிரிசாமி சிறந்த எழுத்துக்காரர் மட்டுமல்ல; சுவையான பேச்சுக்காரரும் என்பதை உறுதிசெய்யும் இன்னொரு சான்று கு.அழகிரிசாமி வீட்டில் கையெழுத்துப் பிரதியாக கிடைத்தது இது. அவரது பேச்சைக்கேட்கும் வாய்ப்பு வயது காரணமாக எனக்குக் கிட்டவில்லை. எனினும் பாரதி குறித்த அவரது வானொலிப் பேச்சு என்னிடம் உள்ளது. மிகவும் மெல்லிய குரல் அவருடையது.

அடுத்த ஐந்து மாதத்தில் (5.7.1970) காலமாகிவிட்ட கு. அழகிரிசாமியின் நிறைவுப் பேச்சு இதுவாகவும் இருக்கலாம். இப்பேச்சு இதுவரை அச்சில் வராதது. இப்போது முதல்முறையாக வெளிவருகிறது.

- பழ. அதியமான்

திருவள்ளுவர் கற்ற கல்வி என்ன என்பது பற்றி ஒரு சிறிதேனும் ஆராய்வதும், தெரிந்து கொள்வதும் பயன்தரக் கூடிய செயலாகும்.

திருவள்ளுவர் உண்மைக் கல்வியைக் கற்றவர் என்பதை இன்று எல்லோருமே ஒப்புக்கொள்வார்கள். ஆனால் திருவள்ளுவர் இன்று உயிரோடு இருந்தால் அவ்வாறு எத்தனை பேர் ஒப்புக்கொள்வார்கள் என்று பார்க்க வேண்டும். திருவள்ளுவர் வித்வான் பட்டமோ பி.ஏ. பட்டமோ பெறாதவர். வெறும் எஸ்.எஸ்.எல்.சி கூட இல்லை. எனவே அவருக்கு எங்கேயும் உத்தியோகம் கொடுக்க மாட்டார்கள் - கல்வித்தகுதி பெறாதவர் என்று தயங்காமல் சொல்லி வெளியே அனுப்பி விடுவார்கள்.

அறம், அன்பு, வாய்மை போன்றவற்றை வற்புறுத்தி, வாழ்க்கையிலும் அவற்றைச் செயலுக்குக் கொண்டுவரக்கூடிய அவரை, ''உலகப் போக்குத் தெரியாத பத்தாம் பசலி'' என்று

சொல்லியும் எள்ளி நகையாடுவார்கள். இல்லையென்றால் அவரை ஒரு மகான் என்று சொல்லி வணங்கிவிட்டு விலகிக்கொள்வார்கள்.

கடைசியில் அவர் பிழைப்புக்கும் திண்டாடி, நாலுபேரிடம் மதிப்பைச் சம்பாதித்துக்கொள்ளவும் முடியாத நிலைக்கு உள்ளாகியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. நல்லவேளையாக அவர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி மறைந்து விட்டார்.

திருவள்ளுவர் கற்ற கல்விதான் மெய்க்கல்வி என்பதற்கு வேறு சான்று எதுவும் தேவை இல்லை; இன்று அது செல்லாக் காசுபோல் ஆகிவிட்ட ஒரு சான்றே போதும். அந்த மெய்க்கல்வி இன்னது என்பதை அறிந்து, அதை ஒட்டிய கல்விமுறையை நம் நாட்டில் மீண்டும் அமல்படுத்தினாலொழிய, நாம் திருவள்ளுவரைக் கொண்டாடுவதிலும் அர்த்தமில்லை. அவருடைய நல்லுரைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று மேடையில் நின்று மற்றவர்களைக் கேட்டுக் கொள்வதிலும் அர்த்தமில்லை.

திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் புத்தகம் எதுவும் அந்தக் காலத்தில் எழுதப்படவில்லை. வரலாறு என்ற பெயரால் வழங்குவது ஆதாரமற்ற கற்பனைக் கதையே. அவர் எங்கே கல்வி கற்றார், யாரிடம் கற்றார் என்பவற்றைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு நமக்கு இல்லாமலே போய்விட்டது.

ஆனால் அவர் என்ன கற்றார், எப்படிக் கற்றார், எப்படிப்பட்டவர்களிடம் கற்றார் என்பவற்றை அவருடைய நூலிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. எதைக் கல்வி என்றும், யாரைக் கற்றவர்கள் என்றும் அவர் கருதுகிறார் என்பதையும், கற்றவர்கள் செய்ய வேண்டியது என்று அவர் வற்புறுத்துவது எதை என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

திருவள்ளுவர் பிறர் இயற்றிய நூல்களிலிருந்தும் கற்றிருக்கிறார்; அவர் காலத்துப் பிற அறிஞர்களிடமிருந்தும் கற்றிருக்கிறார்; தமது சொந்த அனுபவத்திலிருந்தும் கற்றிருக்கிறார்; கல்விப்பயிற்சி பெறாத சாதாரணப் பொதுமக்களிடமிருந்தும் கற்றிருக்கிறார். குறிப்பிட்ட ஒரு நூலையோ ஒரு சில நூல்களையோ மட்டும் கற்று நிறுத்திக் கொள்ளாமல் பல நூல்களை, பல்வேறு சாஸ்திர நூல்களையுமே அவர் கற்றிருக்கிறார்.

இவ்வளவும் கற்று அவர் அடக்கத்தையே கடைப்பிடித்திருக்கிறார்; மற்றவர்களை மதித்திருக்கிறார்; கற்றதைக் காற்றில் பறக்க விடாமல், வாழ்க்கையில் பயன்படுத்தியிருக்கிறார்; தமது கல்வியால் மற்றவர்கள் பயன் அடையும்படியாகவும் செய்திருக்கிறார். இதுதான் அவர் கற்ற கல்வி. இவ்வாறு நாம் முடிவு கட்டுவதற்குத் துணைசெய்யும் ஆதாரங்களை அவருடைய நூலிலிருந்தே எடுத்துக் காட்டுவோம்.

திருவள்ளுவர் எதைக் கல்வி என்று கூறுகிறார்? இதுதான் அடிப்படையாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம்.

திருக்குறள் பொருட்பாலில் 'கல்வி' என்ற அதிகாரத்தில் அவர் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

''கற்க கசடு(ற)அறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக.''

முதலில் கற்க வேண்டும். சந்தேகங்கள் நீங்கும்படியும், தவறாகப் புரிந்துகொள்ளாமல் மெய்ப்பொருளை உணர்ந்து கொள்ளக்கூடிய விதத்திலும் கற்க வேண்டும். அப்படிக் கற்கும்போது, கற்கத்தக்கவற்றையே கற்க வேண்டும். கற்கத்தக்கவை எவை? வாழ்க்கையில் கடைப்பிடிக்கக்கூடியவற்றைக் கூறும் நூல்கள். அவற்றைக் கற்க வேண்டும். இது கல்வி.



எனவே கற்காமல் இருப்பது கூடாது; தெளிவில்லாமல் குழப்பங்களும் சந்தேகங்களும் தவறான கருத்துக்களும் கொள்ளக்கூடியவாறு அரைகுறையாகக் கற்கக் கூடாது; வாழ்க்கையில் கடைப்பிடித்தால் நற்பயன் தராதவற்றையும், தீயபயன் விளைவிக்கக்கூடியவற்றையும் கற்கக் கூடாது. இப்படியெல்லாம் தவறான முறையில் கற்றது கல்வியல்ல.

கற்றவழி நிற்காவிட்டாலும் அவன் கற்றது கல்வியல்ல; அவனும் கல்விமான் ஆகவும் மாட்டான். இந்த ஒரு குறளிலேயே கல்வியின் அடிப்படை அம்சங்கள் அனைத்தையுமே அடக்கிக் கூறிவிட்டார் திருவள்ளுவர்.

அவர் மேலும் சொல்கிறார்: 'எண்ணும் எழுத்தும் கண்களுக்குச் சமானம், கற்றவன் முகத்தில் இருப்பவையே கண்கள்; மற்றவன் முகத்தில் இருப்பவை புண்களே. எவ்வளவு தோண்டுகிறோமோ அவ்வளவுக்குத்தான் மணல் கேணியில் நீர் ஊறும்; அதுபோல எந்த அளவுக்குக் கற்கிறோமோ, அந்த அளவுக்குத்தான் அறிவு ஊறும். எந்த இடத்திற்குப் போனாலும் சரி, சாகும் வரையிலும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். கல்வி ஒன்றுதான் அழியாச் செல்வம், மற்றவை செல்வங்களல்ல.'

கல்வி என்ற அதிகாரத்தில் அவர் இவ்வளவும் கூறியிருக்கிறார். எனவே எண்ணும் எழுத்தும் கணித நூல்களும் இலக்கிய நூல்களும் கற்றபின், அவற்றை மறந்துவிட்டால், அவற்றை வாழ்க்கையில் பயன்படுத்தாவிட்டால் அவன் கற்றதும் ஒன்றுதான்; கல்லாததும் ஒன்றுதான். அவனுக்கும் கல்லாத மூடனுக்கும் வித்தியாசமே இல்லை. கற்றவற்றை மறந்தவனையும், உதறித்தள்ளிவிட்டவனையும் கல்விமான் என்று சொல்லவே கூடாது. அவன் முகத்தில் இருப்பவை புண்களே.

ஒரு சில நூல்களை மட்டும் கற்றவனோ, அந்த நூல்களிலுங்கூட, பிறருக்குத் தன்னைக் கல்விமான் என்று காட்டிக் கொள்வதற்கு அல்லது பரீட்சையில் தேறுவதற்கு ஒரு சில பகுதிகளை மட்டும் படித்தவனோ அறிவாளி அல்ல. கற்ற அளவுக்குத்தானே அறிவு ஊறியிருக்கும்!

பரீட்சை முடிந்ததும், அல்லது தனக்குப் பேரும் புகழும் வந்ததும், 'இனிப்படித்து ஆகவேண்டியது ஒன்றுமில்லை' என்று படிப்பதையே நிறுத்திவிட்டவன் கல்விமான் ஆகமாட்டான். அவனையும் கல்லாதவர்கள் கூட்டத்தில்தான் சேர்க்க வேண்டும். மேன்மேலும் கற்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டாத கல்வி, கல்வியே அல்ல. அப்படித் தூண்டாத கல்வியைக்

கற்றவனும் கல்விமான் அல்லன்; கல்லாதவனே.

சரி, எதற்காக ஒருவன் கற்க வேண்டும்?

மிருகங்களுக்கும் மக்களுக்கும் எவ்வளவு வித்தியாசமோ அவ்வளவு வித்தியாசம் கல்லாதவர்களுக்கும் கற்றவர்களுக்கும் இடையே இருக்கிறது. அதனால், கற்றவன் மனிதனாக இருக்கிறான்; கல்லாதவன் மிருகமாக இருக்கிறான். எதைக் கற்றவன் மனிதன்? அறிவொளி ஊட்டும் சிறந்த நூல்களை ('இலங்கு நூல்') படித்தவனே மனிதன். அறியாமையிலும் குழப்பத்திலும் ஆழ்த்துகின்ற, அணுவளவும் அறிவை அதிகப்படுத்தாத நூல்கள் இலங்கு நூல்களல்ல. அவற்றைப் படித்தவனும் கற்றவனல்ல. அவனும் கல்லாதவனே; கல்லாதவர்களோடு சேர்ந்து அவனும் ஒரு மிருகமாகவே இருக்கிறான்.

''விலங்கொடு மக்கள் அனையர்; இலங்குநூல் கற்றாரோடு) ஏனை யவர்''

இலங்கு நூல்களைக் கல்லாதவன் ஏன் மிருகமாக இருக்கிறான்?

மிருகங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எப்படி வாழ்ந்தனவோ அப்படியேதான் இன்றும் வாழ்கின்றன. அவற்றின் அறிவோ குணமோ செயலோ இந்த ஆயிரம் ஆண்டுக் காலத்தில் அணுவளவும் வளரவில்லை; மாறவும் இல்லை. இலங்கு நூல் கல்லாதவனும் வளர மாட்டான்; சிறந்த மாறுதலை ஏற்க மாட்டான். எனவே அவன் மிருகமாக இருக்கிறான். ஆயிரம் ஆண்டுகளில் ஏற்பட்ட அறிவு உணர்ச்சியைப் புறக்கணித்து, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மனித இனம் கண்ட அறிவையே மெய்யறிவாகக் கொண்டு, அந்த நிலைக்கே நாம் திரும்ப வேண்டும் என்று சொல்பவன் மிருகத்தை விட இழிவானவன் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

கல்லாதவர்களை விலங்குகள் என்று திருவள்ளுவர் பழிப்பானேன் என்று கேட்கலாம்.

அ, ஆ படிக்காதவர்களை அவர் அவ்வளவாகப் பழிக்கவில்லை. பணக்காரர்களின் முன் ஏழைகள் நிற்பது போல் தாழ்ந்து நின்று கல்விமான்களிடம் கற்க வேண்டும். அப்படிக் கல்லாதவன் கடைப்பட்டவன் என்று சொன்னார். முயற்சி செய்தால் கற்பதற்கு வசதி கிட்டாமல் போகாது என்பதால்தான் கல்லாமலே ஒருவன் இருந்தால் அவனைக் கீழானவனாகச் சொன்னார். அப்படித்தான் சொன்னாரே ஒழிய அவனை மிருகம் என்று சொல்லவில்லை. இலங்கு நூல் கல்லாமல் குப்பைகளைப் படித்துவிட்டுத் தருக்கித் திரிகிறவனைத்தான் மிருகம் என்று கூறியிருக்கிறார்.

தக்க ஆசிரியரிடம் சென்று, ஐயம் திரிபறக் கற்க வேண்டியவற்றைக் கற்று அவற்றின்படி நின்றதுடன், போகிற இடங்களிலெல்லாம் சாகும் வரையிலும் இலங்கு நூல்களைக் கற்றுக்கொண்டே இருந்திருக்கிறார் திருவள்ளுவர். அதனால்தான் மற்றவர்களும் அவ்வாறு செய்ய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

சிலர் தாங்கள் படிக்காமலே மற்றவர்களைப் படிக்கும்படி உபதேசம் செய்து கொண்டே இருப்பார்கள். வள்ளுவர் அப்படிப்பட்டவரல்லர். அவர் பல நூல்களையும் கற்றிருக்கிறார் என்பதற்குத் திருக்குறளில் சான்றுகள் இருக்கின்றன.

'மனைவியின் நற்குண நற்செய்கைகளை ஒருவனுக்கு 'மங்கலம்' (நன்மை) என்று சொல்வார்கள்.'

''மங்கலம் என்ப மனைமாட்சி'' (குறள் 60)

வள்ளுவர் இவ்வாறு 'என்ப' என்று சொல்லி அதைச் சரி என்றும் ஒப்புக்கொள்வதால், அது மற்ற அறிஞர்கள் ஏற்கெனவே சொன்னதும், நடைமுறையில் எல்லா அறிஞர்களும் ஒப்புக்கொள்ளக்கூடியதுமான உண்மை

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நூலாசிரியரான திருவள்ளுவரே, மற்றவர்களுடைய நூல்களைக் கற்றிருக்கிறார் என்பதும், கற்றதுடன் அவர்களுடைய கருத்துக்களை எடுத்தாண்டிருக்கிறார் என்பதும், சாகும் வரையில் கற்பதற்கும் நூல்கள் இருக்கின்றன என்று கருதியிருக்கிறார் என்பதும் நமக்கு அவருடைய நூலிலிருந்தே தெரியவருகின்றன. இந்த உண்மையை இக்காலத்தில் பலர் உணரவேண்டியது அவசியம்.

என்று சொல்கிறார். ஆகவே 'என்ப' என்ற சொல், அறிஞர்கள் தங்கள் வாய்மொழியால் மட்டுமின்றித் தங்கள் நூல்களின் வாயிலாகவும் சொல்லியிருப்பவற்றைக் குறிப்பிடுகிறது. சில இடங்களில் 'என்ப' என்று அறியாதார் கூற்றைக் குறிப்பிட்டு அதை அவர் மறுக்கவும் செய்திருக்கிறார். அந்த அறியாதாரில் நூலாசிரியர்களும் அடங்குவர்.

''தம் பொருள் என்ப தம் மக்கள்'' (63)
''குழல் இனிது யாழ் இனிது என்ப'' (66)
''அன்போடு இயைந்த வழக்கு என்ப'' (73)
''அன்புற்றமர்ந்த வழக்கென்ப'' (75)
''அறத்திற்கே அன்பு சார்பு என்ப'' (76)
''அறிவினுள் எல்லாம் தலை என்ப'' (203)
''உயிர் உடம்பின் நீக்கியார் என்ப'' (330)

இவ்வாறு 'என்ப' என்று இவர் குறிப்பிடும் இடங்கள் இன்னும் எத்தனையோ உண்டு. 'என்று கூறுவார்கள்' என்று மட்டும் இவர் நூலோரைக் குறிப்பிட்டு நிறுத்திக்கொள்ளவில்லை. சில இடங்களில் 'நூலோர்' என்றும் 'நூல்' என்றும் பெயர் குறிப்பிட்டே அவர் தெளிவாகவே சொல்கிறார்;

''பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதல், நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'' (322)

''அரங்கின்றி வட்டாடி அற்றே, நிரம்பிய நூல்இன்றிக் கோட்டி கொளல்'' (401)

''மதிநுட்பம் நூலோடு) உடையார்க்கு) அதிநுட்பம் யாவுள முன் நிற்ப வை'' (636)

''மிகினும் குறையினும் நோய்செய்யும், நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று'' (941)

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நூலாசிரியரான திருவள்ளுவரே, மற்றவர்களுடைய நூல்களைக் கற்றிருக்கிறார் என்பதும், கற்றதுடன் அவர்களுடைய கருத்துக்களை எடுத்தாண்டிருக்கிறார் என்பதும், சாகும் வரையில் கற்பதற்கும் நூல்கள் இருக்கின்றன என்று கருதியிருக்கிறார் என்பதும் நமக்கு அவருடைய நூலிலிருந்தே தெரியவருகின்றன. இந்த உண்மையை இக்காலத்தில் பலர் உணரவேண்டியது அவசியம்.

636ஆவது குறளில் நூலறிவைச் சொல்லும்போது, 'மதிநுட்பம்' என்பதையும் சேர்த்துச் சொல்கிறார். சுய அறிவோடு நூலறிவும் வேண்டும் என்று அவர் வற்புறுத்துகிறார். இதனால் வெறும் நூலறிவு மட்டும் போதாது என்று ஆகிறது (அதேபோல் நூலறிவு பெறாமல் சுய அறிவோடு திருப்தி அடைந்துவிடவும் கூடாது என்பதையும் உணர்த்துகிறார்).

373ஆவது குறளில் நுட்பமான நூல்கள் பல கற்றாலும் உண்மை அறிவே ஓங்கி நிற்கும் என்கிறார்.

''நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன் உண்மை அறிவே மிகும்''

நூலறிவு பெற்றாலும் உண்மை அறிவே ஓங்கும்; உண்மை அறிவு குறைவாக

மிருகங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எப்படி வாழ்ந்தனவோ அப்படியேதான் இன்றும் வாழ்கின்றன. அவற்றின் அறிவோ குணமோ செயலோ இந்த ஆயிரம் ஆண்டுக் காலத்தில் அணுவளவும் வளரவில்லை; மாறவும் இல்லை. இலங்கு நூல் கல்லாதவனும் வளர மாட்டான்; சிறந்த மாறுதலை ஏற்க மாட்டான். எனவே அவன் மிருகமாக இருக்கிறான்.

இருந்தால், அல்லது வெறும் அறியாமை மட்டுமே இருந்தால், அதுதான் ஓங்கும். அதற்கு என்ன காரணம்? இது 'ஊழ்' என்ற அதிகாரத்தில் வரும் குறளானதால் ஊழ்தான் காரணம் என்று ஆகிறது. ஊழ் அப்படி இருக்கும்போது, என்னதான் படித்தாலும் சுய அறிவே ஓங்கும் என்றும் இருக்கிறபோது நூல்களைக் கற்று என்ன பயன் ஒரு பயனுமில்லையே என்று கேட்கலாம்.

நூல்களைக் கற்று அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம் என்பதை அவர் குறட்பாக்களில் எடுத்துரைத்திருப்பதை மேலே பார்த்தோம். ஊழ் குறுக்கே நின்றால் அதைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்யலாம் என்று அவரே கூறுகிறார்.

''ஊழையும் உப்பக்கம் காண்பர்; உலைவின்றித் தாழாது) உஞற்று பவர்'' (620)

சோர்வுகொள்ளாமல் விடாமுயற்சியுடன் செயல்புரிந்தால் ஊழையும் விரட்டிவிடலாம் என்கிறபோது, நூலறிவால் ஏன் அனுகூலம் பெற முடியாது? ஊழை ஒரு சாக்காகக் காட்டி நூல்களைத் தொடாமல் இருக்கும் சோம்பேறித்தனம் கூடவே கூடாது. இதுவே திருவள்ளுவரின் கருத்தாக இருக்க முடியும்.

சுய அறிவு, மதிநுட்பம் என்பன ஊழின் காரணமாக குறைவாக இருந்தாலும், நூலறிவால் சுய அறிவைப் பெருக்கிக்கொள்ள முடியும். மதிநுட்பத்தைத் தன்னுடைய சொந்தப் பயிற்சியால் தன்னுள்ளேயே தேடிக் கொள்வதோடு வெளியிலும் தேடிக் கொள்ள வேண்டும். நூல்களை மட்டுமே படித்தவன் - இலங்கு நூல்களையே படித்தவனாக இருந்தாலும் சரி - படிப்பாளியல்ல, அறிவாளியுமல்ல என்று திருவள்ளுவரே கூறுகிறார்.

வெளியே எங்கே அறிவைத் தேடுவது? அறிஞர்கள் கூட்டத்திற்குச் சென்று அவர் கூறும் வாய்மொழிகளில் அறிவைத் தேடிக்கொள்ள வேண்டும். அந்தக் கேள்விஞானம் என்ற செல்வம், கல்வியறிவு என்ற அழியாச் செல்வத்தைவிட, மற்ற எந்தச் செல்வத்தையும் விடச் சிறந்தது.

''செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை'' (411)

ஒருவன் கல்லாதவனாக இருந்தாலும் கேள்வியால் பயன் அடையலாம்.

''கற்றிலன் ஆயினும் கேட்க'' (414)

கேள்வியால் கிட்டும் இன்பத்தை அனுபவிக்காமல், சாப்பாட்டுச் சுவையை மட்டுமே அனுபவிக்கக் கூடியவர்கள் செத்தால்தான் என்ன, உயிரோடு இருந்தால்தான் என்ன என்று கேட்கிறார்.

''செவியின் சுவைஉணரா வாயுணர்வின் மாக்கள் அவியினும் வாழினும் என்?'' (420)

இதிலிருந்து கல்வி என்பது நூலறிவோடும் சுய அறிவோடும் நின்று விடுவதல்ல, கேள்வியிலும் கல்வியறிவு இருக்கிறது என்று அவர் வற்புறுத்துவதைக் காண்கிறோம். மற்றவர்களிடம் நான் கேட்டுத் தெரிந்து கொள்ள என்ன

இருக்கிறது, அப்படிக் கேட்பதே என் புலமைக்கு இழுக்கு என்று கருதும் புல்லறிவாளர்களுக்கு அரைகுறைப் படிப்பாளிகளான போலிகளுக்கு வள்ளுவர் இங்கே சரியான சூடு கொடுக்கிறார்.

கேள்வியறிவுடன் கண்ணால் பார்த்தும் அறிய வேண்டியது, கற்க வேண்டியது உண்டு. உலகத்தோடு இசைந்து நடந்து கொள்வது, பார்த்துக் கற்கவேண்டிய கல்வி, உலகத்தோடு இசைந்து ஒழுகாதவன் எவ்வளவு கற்றிருந்தாலும் அவன் அறிவில்லாதவனே.

''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்.'' (140)

உலகம் என்பது இங்கே உயர்ந்தோரைக் குறிக்கிறது. உலகத்து உயிர்களை உலகம் என்று வள்ளுவர் குறிப்பிடும் இடங்களில் எல்லாம், உயர்ந்தோரைத்தான் குறிப்பிடுகிறார். அவர்களைப் பின்பற்றி நடக்க வேண்டும்; அப்படி நடந்துகொள்ளக் கற்காதவன் அறிவிலி.

கல்வியறிவு உடையவர்களெல்லோருமே உயர்ந்தவர்களா?

சில அற்பர்கள் எவ்வளவோ சிறந்த நூல்களைக் கற்றும், கேட்டும், ஆராய்ந்தும் இருந்தபோதிலும் அவர்கள் உள்ளம் நல்ல உள்ளமாக இருப்பதில்லை என்பதை வள்ளுவர் கண்டிருக்கிறார்.

''பலநல்ல கற்றக்கடைத்தும் மனம் நல்லர் ஆகுதல் மாணார்க்கு அரிது.'' (823)

எனவே படித்தவர்களிலும் தீய உள்ளம் படைத்தவர்கள் உண்டு. அவர்கள் கற்பன கற்காதவர்கள்; கற்றிருந்தாலும் அதன்படி நிற்காதவர்கள். அவர்கள் உயர்ந்தவர்கள் ஆக மாட்டார்கள் என்பதோடு மூடர்களிலேயே பெரிய மூடர்களாகவும் இருப்பார்கள்.



''ஓதி உணர்ந்தும் பிறர்க்(கு)உரைத்தும் தான்அடங்காப் பேதையின் பேதையார் இல்'' (834)

படித்த முட்டாள்களை வள்ளுவரும் பார்த்திருக்கிறார். அவர்களை உயர்ந்தவர்களாக நினைத்துவிட வேண்டாம் என்றும் எச்சரித்திருக்கிறார்.

சரி, உலகத்தோடு ஒட்ட ஒழுக வேண்டியதுதான்; உயர்ந்தோரைப் பின்பற்றி நடக்க வேண்டியதுதான். அப்படியானால் கல்விமான்களையும் மேலோரையும் தவிர்த்து மற்றவர்களிடம் கற்க வேண்டியது எதுவுமே இல்லையா? 'உண்டு' என்றே வள்ளுவர் கூறுகிறார்.

கற்றவனோ கல்லாதவனோ, நண்பனோ பகைவனோ, உயர்ந்தவனோ தாழ்ந்தவனோ- எவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும், அவன் ஒன்றைச் சொன்னால் எடுத்த எடுப்பில் அதை ஒப்புக் கொண்டுவிடவோ புறக்கணித்துவிடவோ செய்யாமல் அவன்

சொன்னதில் அடங்கியுள்ள உண்மையைக் கண்டறிய வேண்டியது அவசியம். அப்படி அறிபவனே அறிவாளி. அப்படி அறியாதவன் அறிவிலி - அவன் கற்றும் கேட்டும் பார்த்தும் சிந்தித்தும் எவ்வளவு தெரிந்துகொண்டிருந்தாலும் சரி.

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது) அறிவு.'' (423)

இதனால் கல்லாதவர்களாகவும் உயர்ந்தவர்களாகவும் இல்லாத சாதாரண மக்களின் வாய்ச் சொல்லிலிருந்தும் மெய்ப்பொருளைக் காண்பது அறிவாகவும் கற்க வேண்டிய கல்வியாகவும் ஆகிறது. திருவள்ளுவர் இவ்வாறு கற்றிருக்கிறார் என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு. கற்றவர்களின் கூற்றுக்கள் சிலவற்றை, அவர் மெய்ப்பொருள் கண்டு மறுத்திருப்பது போலவே, கல்லாதவர்களின் கூற்றுகளிலும் மெய்ப்பொருள் கண்டு அப்படியே மறுபேச்சுப் பேசாமல் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

திருக்குறளில் பல பழமொழிகளைக் காண்கிறோம். பழமொழி என்பது அன்றும் சரி, இன்றும் சரி நூலாசிரியர்களோ கல்விமான்களோ உற்பத்தி செய்ததல்ல. அனுபவத்தில் கண்ட உண்மைகளைப் பொதுமக்கள் பழமொழிகளின் உருவில் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த ஆற்றல் பொதுமக்களுக்குத்தான் உண்டு; புலவர்களுக்குக் கிடையாது.

உலகில் எந்த நாட்டிலுமே ஆதி இலக்கியம் இந்தப் பழமொழிகளே. ஒவ்வொரு மொழிக்கும் வரிவடிவம் ஏற்படுவதற்கு முன்பே தோன்றியவை பழமொழிகள். ஒவ்வொரு பழமொழியிலும் ஓர் அனுபவ உண்மை, ஒரு கதைக்கூறு போல் அமைந்திருக்கும். கதையோடு பிறந்ததே இலக்கியம். கதைதான் இலக்கியம். அது ஒரு கூறாகப் பழமொழியில் காணப்படுகிறது; அதை விரித்துக் கதைகளும் தனிப்பாடல்களும் காவியங்களும் பிற்காலத்தில் இயற்றினார்கள்.

பழமொழிகளில் இல்லாவிட்டாலும், அவற்றைக் கற்றதனால் தெரிந்துகொண்ட உண்மைகளைப் புலப்படுத்தவும் கதை, காவியங்கள் இயற்றினார்கள்.


''ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி'' என்பது ஒரு பழமொழி. இதில் ஆண்டி என்ற ஒரு பாத்திரம், ஊர் என்ற ஒரு களம், இளைத்திருக்கும் ஒரு நிகழ்ச்சி ஆகிய மூன்றும் சேர்ந்து ஒரு கதைக் கருவையோ, கதைக்கூறினையோ உருவாக்கிக் கொண்டு நிற்கின்றன. இதுபோன்ற பழமொழிகள் உலகத்தின் ஆதி இலக்கியம். இப்படிப்பட்ட இலக்கிய வகையை இன்றும் படைத்துக் கொண்டிருக்கும் பொதுமக்களைக் காண்கிறோம். இவர்களைப் பாமரமக்கள் என்று திருவள்ளுவர் அலட்சியமாக ஒதுக்கி விடவில்லை என்பதற்குச் சான்றாக, இவர்கள் படைத்த பழமொழிகளைத் தம்முடைய நூலில் எடுத்தாண்டிருப்பதைக் காண்கிறோம்.

''இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.'' (100)

இனிய சொற்கள் இருக்கும்போது, கடுஞ்சொற்களைப் பேசுவது, மரத்தில் பழம் இருக்கும்போது காயைப் பறித்துத்தின்றது போலாகும் என்பது இந்தக் குறளின் பொருள். இதில் ''கனி இருப்பக் காய்கவர்ந் தற்று'' என்பது வள்ளுவரால் உண்டு பண்ணப்பட்ட சொற்றொடர் அல்ல. அவர் காலத்தில் வழங்கிய ஒரு பழமொழியே.

அப்பர் தேவாரத்திலும் இந்தப் பழமொழி எடுத்தாளப்பட்டிருக்கிறது. அவர் பழமொழிப் பதிகம் என்றே ஒரு பதிகம் இயற்றி, அதன் பத்துப் பாடல்களில் பத்துப் பழமொழிகளை இணைத்துப் பாடியுள்ளார். அவற்றுள் ஒரு பாடல்:

''மெய்எலாம் வெண்ணீறு
சண்ணித்த மேனியான்
தாள்தொ ழாதே
உய்யலாம் என்றெண்ணி
உறிதூக்கி உழிதந்(து) என்
உள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக்
குயில்கூவ, மயில் ஆலும்



ஆரூ ரரைக்
கையினால் தொழாகு) ஒழிந்து
'கனி இருக்கக் காய்கவர்ந்த'
கள்வ னேனே''

பழமொழிப் பதிகத்தில் இடம் பெற்றிருப்பதால், ''கனி இருப்பக் காய் கவர்ந்தற்று'' என்பது ஒரு பழமொழியே; அது வள்ளுவர் மொழியல்ல.

மற்றொரு பழமொழி: மன ஒற்றுமை இல்லாதவர்கள் சேர்ந்து வாழ்வது, ஒரு குடிசையில் பாம்போடு வாழ்வதைப் போன்றதாகும் என்ற பொருளுடைய குறளைப் பார்ப்போம்.

'உடம்பாடு) இலாதவர் வாழ்க்கை, குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று.' (890)

'ஒரு குடிசையில் பாம்போடு வாழ்ந்ததைப் போல' என்ற பொருளில் தமிழ்நாட்டில் ஒரு பழமொழி வழங்கி வந்திருக்கிறது. அதை வள்ளுவர் தமது குறட்பாவுக்கு ஏற்றபடி, இரண்டொரு சொற்களை மாற்றி, அந்தப் பொருளுடைய வேறு சொற்களைப் போட்டு உபயோகித்திருக்கிறார். இந்தப் பழமொழி திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழியிலும் காணப்படுகிறது.

அவர் இதுபோன்று இன்னும் ஆறு பழமொழிகளை ஆறு பாசுரங்களில் உபயோகித்துள்ளார். அவற்றுள் 'இருதலைக் கொள்ளி எறும்பு' என்பதும், 'இடையன் எறிந்த மரம்' என்பதும் இன்றும் வழங்கும் பழமொழிகளாகும். இப்பொழுது, பாம்புடன் வாழ்வது பற்றிய பழமொழியை அவர் தமது பாசுரத்தில் உபயோகித்திருப்பதைப் பார்ப்போம்.

''தூங்கார் பிறவிக்க ணின்னம் புகச் செய்து
வாங்கா யென்று சிந்தித்து நானதற் கஞ்சி
பாம்போடு) ஒரு கூரையிலே பயின்றாற்போல்
தாங்காதுள் ளம்தள்ளும் என்தா மரைக்கண்ணா.'' (2024)

திருக்குறள் எந்தப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைச் சேர்ந்த ஒன்றோ, அந்த கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான 'பழமொழி' என்ற நூலிலும் இதே பழமொழி காணப்படுகிறது. நானூறு பழமொழிகளை இணைத்த நானூறு வெண்பாக்கள் கொண்டது அந்தப் பழைய நூல். அந்நூலில் இது இடம் பெற்றிருப்பது ஒன்றே, இது பழமொழிதான்

பழமொழி என்பது அன்றும் சரி, இன்றும் சரி நூலாசிரியர்களோ கல்விமான்களோ உற்பத்தி செய்ததல்ல. அனுபவத்தில் கண்ட உண்மைகளைப் பொதுமக்கள் பழமொழிகளின் உருவில் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த ஆற்றல் பொதுமக்களுக்குத்தான் உண்டு; புலவர்களுக்குக் கிடையாது.



என்பதைச் சந்தேகத்திற்கு இடமின்றி உறுதி செய்கிறது. 'ஓர் அறையுள் பாம்போ(டு) உடன் உறையும் ஆறு' (253) என்பது 'பழமொழி' என்ற நூலில் காணும் பழமொழி. அந்த நூலில் காணப்படும் வேறு சில பழமொழிகளையும் திருவள்ளுவர் கையாண்டிருக்கிறார் பொதுமக்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டதன் பயனாக.

1. 'களவினால் ஆகிய ஆக்கம், அளவிறந்து ஆவது போலக் கெடும்.' (குறள் 283)

'அல்லது செய்வார் அரும்பொருள் ஆக்கத்தை நல்லது செய்வார் நயப்பவோ? - ஒல்லொலி நீர் பாய்வதே போலும் துறைவ! கேள்; தீயன ஆவதே போன்று கெடும்.' (பழ. 213)

2. 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்(கு)இன்னா பிற்பகல் தாமே வரும்.' (319)

'முற்பகல் கண்டான் பிறன்கேடு, தன்கேடு பிற்பகல் கண்டு விடும்.' (பழ. 46)

(இந்தப் பழமொழி இப்பொழுது 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்று வழங்கப்படுகிறது)

3. "முதலில்லார்க் கூதியம் இல்லை; மதலையாஞ் சார்பிலார்க் இல்லை நிலை. (குறள் 449)

"முதல் இலார்க்(கு) ஊதியம் இல்.'' (பழ. 232)

4. "அச்ச முடையார்க் கரணில்லை ஆங்கில்லை பொச்சாப் புடையார்க்கு நன்கு.'' (குறள் 534)

"அஞ்சுவார்க்(கு) இல்லை அரண்.'' (பழ. 285)

5. "வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனைய துயர்வு.'' (குறள் 595)

"நீர்வரைய வாம்நீர் மலர்.'' (பழ. 379)

6. "வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள் யானையால் யானையாத்(து) அற்று.'' (குறள் 678)

"யானையால் யானையாத்த அற்று.'' (பழ. 29)

7. "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்.'' (குறள் 706)

"..... ஒளிப்பினும் படர்ந்ததே கூறும் முகம்.'' (பழ. 144)

(இப்பொழுது இந்தப் பழமொழி ''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்று வழங்கப்படுகிறது)

8. ''நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள் யாப்பினுள் அட்டிய நீர்.'' (குறள் 1093)

"யாப்பினுள் அட்டிய நீர்." (பழ. 311)

9. ''கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ நெஞ்சேநீ பெட்டாங் கவர்பின் செலல்.'' (குறள் 1293)

"கெட்டார்க்கு நட்டாரோ இல்'' (பழ. 134)

(பரிமேலழகருக்கு முற்பட்ட காலத்தினரான காளிங்கர் இந்தக் குறளுக்கு உரை எழுதும்போது ''.... 'உலகில் கெட்டார்க்கு நட்டார் இல்' என்று சொல்லும் முதுசொல் வழக்கோதான்...'' என்று கூறியுள்ளார்.)



பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ''முதுமொழிக் காஞ்சி'' என்பதும் ஒன்று. அதை இயற்றியவர் மதுரைக் கூடலூர் கிழார் என்ற புலவர். நூறு வரிகள் கொண்ட நூல் அது. ஒவ்வொரு வரியும் நூற்பா எனப்படும் செய்யுள் வகையைச் சேர்ந்தது. புத்தகத்தின் பெயரைப் பார்த்தாலே, அது முதுமொழிகளைக் கோத்துச் செய்யப்பட்ட நூல் என்பது தெரியவரும். முதுமொழி என்றாலும் பழமொழி என்றாலும் ஒரே பொருள்தான். முதுமொழியின் இலக்கணத்தையும் தொல்காப்பியம் விளக்கியிருக்கிறது.

''நுண்மையும் சுருக்கமும், ஒளியுடைமையும்
எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றி
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப'' (1435)

''முதுகாஞ்சி'' என்றால் அறிவில் சிறந்த முதியோர் அறிவு வளரப் பெறாத இளைஞர்க்குக் கூறுவது என்று பொருள். எனவே இந்த முதுமொழிக் காஞ்சி என்பது இளைஞர்க்கு முதியோர் சொன்ன மொழிகளைக் கொண்டது; அவை பழமொழிகளின் கருத்துக்களையும் சொற்களையும்கொண்டு,நூலில்கையாளும் பாவினத்துக்கு ஏற்ப உருவாக்கப்பட்டவை. இந்த முதுமொழிக் காஞ்சியில் காணும் பழமொழி வடிவங்களால், திருக்குறளில் எடுத்தாளப் பெற்ற பல மொழிகளை இனங்காண முடிகிறது; உதாரணத்திற்கு ஒரு சில.

1. ''ஒதலின் சிறந்தன்று, ஒழுக்கம் உடைமை''
(முதுமொழிக் காஞ்சி 1:1)

''மறப்பினும் ஒத்துக் கொளலாகும்; பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.'' (குறள் 134)

2. ''நலன் உடைமையில் நாணுச் சிறந்தன்று'' (மு. 1:6)

''நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும்'' (குறள் 960)

3. ''பழியோர் செல்வம் வறுமையின் துவ்வாது'' (மு. 4:1)

''பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை'' (குறள் 657)

4. ''மக்கட் பேற்றின் பெறும்பேறி ல்லை'' (மு. 6:1)

''பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற'' (குறள் 61)

5. ''நசையின் பெரியதோர் நல்குரவில்லை'' (மு. 6:7)

''நல்குர வென்னும் நசை'' (குறள் 1043)

6. ''இசையின் பெரியதோர் எச்சம் இல்லை'' (மு. 6:8)

''இசையென்னும் எச்சம்'' (குறள் 238)

7. ''இன்பம் வெய்யோர்க்குத் துன்பம் எளிது''மு. 8:6)

''இன்பம் வேண்டுவோன் துன்பம் தண்டான்'' (மு. 10:7)

''இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத் தூன்றும் தூண்'' (குறள். 615)

பழமொழிகளைத் திருவள்ளுவர் எடுத்தாண்டிருக்கும் உண்மையை இதுவரையிலும் பார்த்தோம்.

இனி, கல்வியின் மற்றோர் அம்சமாக வள்ளுவர் வற்புறுத்தும் ஒரு விஷயத்தைக் கவனிப்போம். ஒருவன் தான் கற்றதை, பிற கல்விமான்கள் ஏற்றுக்கொள்ளும் படியாகச் சபையேறிச் சொல்லத் தெரிந்தவனாக இருக்க வேண்டும். அவனே படிப்பாளிகளிலேயே படிப்பாளி என்கிறார்.

''கற்றாருள் கற்றார் எனப்படுவார் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார். (722)


கற்றோர் சபை ஏற்றுக் கொள்ளத்தக்கவாறு, சுவையோடும் அழுத்தத்தோடும் சொல்லத் தெரியாமல் சபைக்கு அஞ்சுகிறவன் கற்றிருந்தாலும் கல்லாதவனுக்கு ஒப்பானவனே.

''உளரெனினும் இல்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.'' (730)

மற்றொரு குறளில், சபைக்கு அஞ்சி மேடையிலேயே ஏறாமல் பின்வாங்குபவர்கள் கல்லாதவனை விடக் கீழானவன் என்று அறிஞர்கள் சொல்வார்கள் என்கிறார்.

''கல்லா தவரிற் கடையென்ப, கற்றறிந்தும்
நல்லா ரவையஞ்சு வார்.'' (729)

தான் கற்ற கல்வி பிறர்க்குப் பயன்படுமாறு செய்யவும் கற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அவன்



கற்றவன் ஆவான்; இல்லையென்றால் கல்லாதவனை விடக் கீழானவனே. குடத்துள் விளக்குப் போல் இருக்கும் கல்வியைக் கற்றுப் பயன் என்ன?

வள்ளுவர் உலக நடைமுறைகளை நன்கு கவனித்து, இன்னது செய்தால் இன்னது நடக்கும் என்று அனுபவபூர்வமாகவும், உய்த்துணர்ந்தும் கூறுவார், இன்னது செய்து இன்னது நடந்திருக்கிறது என்றும் சில குறட்பாக்களில் கூறுவார். இப்படி நடப்பதற்கு இதுதான் காரணம் என்றும் உரைப்பார். ஒருவன் பல்லக்கில் இருக்கிறான்; மற்றொருவன் அதைச் சுமக்கிறான்; ஏன் இப்படி? அறம் செய்தவனும் அறம் செய்யாதவனும் அடையக்கூடிய வாழ்க்கை நிலைகள் இவை என்பார்.

''அறத்தா றிதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை'' (37)

இது கல்வியறிவோடு சுய அறிவையும் அவர் பயன்படுத்தியதற்குச் சான்று.

வள்ளுவர் இலக்கிய இலக்கணங்களை மட்டுமன்றி, மருத்துவம், அரசியல், கலை போன்ற துறைகளைச் சேர்ந்த நூல்களையும் கற்றிருக்கிறார். ஓர் இலக்கியப் புலவனுக்குப் பிற கலைகளிலும் - ஓரளவுக்குப் பரிச்சயம் இருக்க வேண்டும் என்பதை அவர் தாமே கடைப்பிடித்துக் காட்டியிருக்கிறார்.

திருவள்ளுவர் காலத்தில் விவசாய நூல் (கலப்பை நூல்), சொல்முடிபு நூல் (மெய்ஞ்ஞானம்), வழக்கு நூல் (சத்தம்), தருக்க நூல், சமய நூல், வீட்டு நூல், கணித நூல், யாழ் நூல் ஆகிய பல்வேறு வகை நூல்களோடு, சந்தனம் அரைப்பது

பற்றிக் கூறும் நூல்களும், இலை நறுக்கி எண்ணுவது பற்றிக் கூறும் நூல்களும், தமிழ்நாட்டில் இருந்தன என்பதை பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய "சிறுபஞ்ச மூலம்" என்பதில் காணப்படும் வெண்பாக்களின் மூலம் அறிகிறோம்.

திருவள்ளுவர் கூத்துக்களையும் (நாடகங்களையும்), பாவைக் கூத்துக்களையும் பார்த்திருக்கிறார்.

"கூத்தாட் டாவைக் குழாத்" (332) என்றும்

"மரப்பாவை நாணால் உயிர்மருட்டி அற்று" (1020)

என்றும் அவர் கூறியுள்ளார்.

கல்விமான்கள் தங்கள் காலத்தில் பொதுமக்கள் வழங்கிவரும் சொற்களை- அவை பிறமொழிச் சொற்களாக இருந்தாலும் - மொழி வளர்ச்சி கருதி, மொழிக்கு ஒரு புதுவேகமும் புத்துயிரும் கொடுப்பதற்காகப் பயன்படுத்தத் தயங்கக் கூடாது என்பது அவர் கருத்து. அதனால் அவர் எத்தனையோ வடமொழிச் சொற்களையும் உபயோகித்திருக்கிறார். உதாரணமாகச் சில; ஆதி, பகவன் (1), பூசனை (18), மந்திரி (639), ஆசாரம் (1075), பாக்கியம் (1141).

இப்பொழுது திருவள்ளுவர் கற்ற கல்வி எப்படிப்பட்டது என்பதை நாம் தெரிந்துகொள்ளலாம்.

சாகும்வரையில் இலங்கு நூல்களைக் கற்க வேண்டும்; அவற்றைக் கடசறக் கற்க வேண்டும்; கற்றவழியில் நிற்க வேண்டும்; நூலறிவோடு கேள்வியறிவும் பெற வேண்டும்; உயர்ந்தவர்களின் வழியில் ஒழுக வேண்டும்.

அறிஞர்களிடத்தில் மட்டுமன்றி, சாதாரணப் பொதுமக்களிடமும் கற்க வேண்டும். சுய அறிவால் சிந்திக்க வேண்டும்; அடக்கம் வேண்டும்; நூலோரின் கருத்துக்களைப் போற்ற வேண்டும். கற்றதை அறிஞர்கள் ஏற்குமாறு சொல்லத் தெரிய வேண்டும். பல்வேறு கலைகளில் பரிச்சயம் வேண்டும்; மக்கள் வழங்கும் பிறமொழிச் சொற்களையும் பயன்படுத்த வேண்டும்;

இவை கல்வியின் இலக்கணங்கள். கற்றவனிடம் காணப்பட வேண்டிய இயல்புகள். இவற்றுள் ஒன்றைச் செய்யத் தவறினாலும் மறுத்தாலும் அவன் கற்றவன் ஆகமாட்டான்.

அதற்குப் பதிலாக, இலங்கு நூல் கல்லாத மிருகமாகவும், அடக்கம் இல்லாத மூடனாகவும், கற்றதைப் பிறருக்கு எடுத்துரைக்கத் தெரியாத கீழ்ப்பட்டவனாகவும், கேள்வி இன்பத்தை அனுபவிக்கத் தெரியாத பிணமாகவுமே இருப்பான்.

தெய்வப்புலவர் திருவள்ளுவரின் அரிய திருக்குறள் நூலினால் நாம் அறியும் உண்மைகள் இவை. இந்த உண்மைகளைத் தெரிந்துக்கொண்டு நம் நாட்டுக் கல்வி முறையை வகுக்க, வள்ளுவரின் 2000ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இந்தச் சமயத்திலாவது நமக்கு எண்ணம் தோன்றினால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்லது.

ஒருவேளை 3000ஆவது ஆண்டு விழா கொண்டாடும் வரையிலும் நாம் காத்திருக்க வேண்டுமோ என்னவோ? வள்ளுவரும் நாமும் எவ்வளவு தூரம் அதிர்ஷ்டசாலிகளாக இருக்கிறோம் என்பதைக் காலம்தான் எடுத்துக்காட்ட வேண்டும்.



மெய் நலம் திருவள்ளுவரின் மருந்து



பிரமிள்

'உடலுக்கு மருந்தே வேண்டாம்' என்று அடித்துச் சொல்கிறார் திருவள்ளுவர்:

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு".

நோய் உள்ள உடலுக்கே மருந்து. நோய் இல்லாத உடலுக்கு, மருந்து அப்போதைக்கு வேண்டாம். ஆனால் வள்ளுவரின் இந்தக் குறளில், அவரது குரல் மேலும் ஒரு அழுத்தம் பெறுகிறது. 'மருந்தென வேண்டாவாம்' என்கிறபோது, 'மருந்தே வேண்டாம்' என்ற அழுத்தத்தை உணரலாம். நோய், அப்போதைக்கு இல்லாததுடன் எப்போதுமே இல்லாத நிலையில்தான், 'மருந்தே வேண்டாம்'. இப்படி எப்போதுமே, நிரந்தரமாக மருந்து தேவைப்படாத நிலை, உடலுக்கு எப்படி ஏற்படுகிறது?

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு - அருந்தியது அற்றது போற்றி உணின்."

'சாப்பிட்ட உணவு கழிவாக வெளியேற, பின்பு மட்டுமே சாப்பிடுகிற ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தால், உடலுக்கு மருந்து என்று எதுவுமே வேண்டாம்.' என்பது இக்குறளின் பொருள்.

அருந்தியது அற்றது, உட்கொண்டது இல்லாமல் ஆகிய நிலையாகிறது. உட்கொள்ளப்பட்ட பொருள் உடலில் இல்லாத நிலை; அது கழிக்கப்பட்ட பின்பே ஏற்படும். இந்நிலையைக் கடைபிடித்து, அதன் பின்பு உண்டால் அருந்தியது அற்றது போற்றி உணின்' இப்படி உண்ணும் பழக்கம் இருந்தால், மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு.

இதன் விரிவுரை இது: "உட்கொள்ளப்பட்ட உணவு முதலில் கழிக்கப்பட வேண்டும். அதற்குப் பின்பே, அடுத்த உணவை உட்கொள்ள வேண்டும். இந்த ஒழுக்கம் இருந்தால், உடலுக்கு மருந்து என எதுவும் தேவையில்லை; நோயே வராது. இப்படிக்கின்றி, உட்கொண்டது உடலுக்குள்ளேயே இருக்கும் போது அடுத்த உணவையும் உள்ளே அனுப்பினால், அது நோய் வருவதற்கு மூலக் காரணம் ஆகும்."

இவ்வளவு பொருள் மண்டலமும் மேற்படி நிலையைக் குறிப்பிடும் தோரணையில், அதன் விரிவாக்கம் பொதிந்து நிற்கிறது. ஒரு



காரியத்தைச் செய்யாதிருப்பவன் பலனைக் கூறும் தோரணையிலேயே, அந்தக் காரியத்தைச் செய்தால் 'என்ன பலன்' ஏற்படும் என்பதைக் கூட அர்த்தப்படுத்தி விடலாம். திருக்குறளின் சிறப்பம்சங்களுள் இது ஒன்று. மேற்படி குறளில், இந்த அம்சம் அற்புதமாக அமைந்திருக்கிறது.

தவறுசெய்துவிட்டோம்;எதைச்செய்தால் நோயே வராது என்று சொல்லப்பட்டதோ, அதைச் செய்துவிட்டோம்; ஏற்கனவே உட்கொண்டது உள்ளே இருக்கும் போதே, அடுத்த உணவை உட்கொண்டு விட்டோம்! 'இதில் என்ன பெரிய தவறு? இப்படிச் செய்தால் என்ன குடி முழுகிவிட்டது? ஆரோக்கியம், சுறுசுறுப்பு எல்லாம் தொடர்ந்து எங்களுக்கு இருந்து கொண்டுதானே இருக்கின்றன?' இப்படி எதிர்வாதங்கள் கிளம்புகின்றன.

மேலும், ஒவ்வொரு வேளை உணவுக்கும் பிறகு, நாம் கழிவறைக்குப் போய்க் கொண்டிருப்பதில்லை. ஒரு நாளைக்கு ஒரு வேளை தான், உண்ட உணவை நாம் கழிக்கிறோம் (இந்த ஒழுக்கம் கூட இல்லாதவர்கள் இருக்கிறார்கள்).

திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தைப் பற்றி, அபிப்ராய பேதங்கள் உண்டு. இரண்டாயிர வருஷங்களுக்கு முன் என்ற பார்வை பரவலானது. இது எப்படி இருந்தாலும், 'ஒரு பழைய கருத்துதான் திருவள்ளுவருடையது. அடுத்த உணவுக்கு முன்பு முந்திய உணவைக் கழிப்பது அசாத்தியம்' என்று, ஆட்சேபணை எழுப்பலாம். சரியானது என்று தான் அவதானங்களை அடிப்படையாகக் கொண்ட அறிவியல் கூறுகிறது

இதற்கு வருமுன், உண்டது எவ்வளவு காலம் உடலினுள் இருக்கிறது என்பதைப் பார்ப்போம்.

வயிற்றுப்பையை உணவு அடைந்ததும், அங்கே அது உணவுக் கூழாக மாற்றப்படுகிறது. இதற்கு ஒரு மணி நேரம் ஆகும். அடுத்து, சிறுகுடலில் ஜீரணம், செரிமானம் நடக்கிற காலம்,



மூன்று மணி. மிஞ்சிய சக்கை வெளியே அனுப்பப்படுகிறது. பெருங்குடலினுள் 12 மணி நேரம். ஆக 1+3+12=16 மணி நேரம். உணவு கொள்ளப்பட்டதுக்கு, 16 மணி நேரத்துக்குப் பின்பே அடுத்த உணவை உட்கொள்ள வேண்டும். இதில் கூட, ஒரு எட்டு மணி நேர இடைவெளியை விடலாம். அப்படி இடைவெளி விட்டால், 24 மணி நேரம் ஆகிறது. அதாவது ஒரு நாளைக்கு ஒரு வேளை உண்ண வேண்டிய நிலை இது

"ஒரு வேளை உண்பவன் யோகி".

'யோகி' என்றால் யோகாசனம் செய்கிறவனோ தவம் செய்கிறவனோ அல்ல; 'சேர்ந்திருப்பவன்'. இயற்கையுடன் 'சேர்ந்திருப்பவன்' என்றே, இந்த இடத்தில் பொருள் காணவேண்டும். ஒருவேளை மட்டும் உண்டு பழகினால், அதன் அடிப்படை, 'அருந்தியது அற்றது போற்றி' இருக்க வேண்டும். அருந்தியது அற்றாவதற்கு, சுமார் 16 மணி நேரம். அதற்கு மேல், 8மணி நேர இடைவேளை. மொத்தம் 24 மணி நேரம். இப்படிப் பார்த்தால்,

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்."

இந்தத் திருக்குறளுக்கு, அதன் விரிவுரை மண்டலங்களுக்குச் சமமான கருத்துத்தான்,

"ஒரு வேளை உண்பவன் யோகி,
இரு வேளை உண்பவன் போகி,
மூவேளை உண்பவன் ரோகி."

திருக்குறளில் சுருக்கமாக, உள்ளர்த்தங்களைக் கொண்டு சொல்லப்பட்டதன் விரிவாக்கமே, பிந்திய வாக்கியம். ஆனால் இப்படி ஏன் உண்ண வேண்டும் என்ற காரணத்தை திருக்குறளில் காணலாம். பிந்திய வாக்கியத்தில் அது இல்லை. அதுதான், 'அருந்தியது அற்றது போற்றல்' உட்கொண்டதை வெளியேற்றுதல். இப்படி வெளியேற்றப்படும் முன்பே உண்பவர்கள் தான் போகியும் ரோகியும் - ருசிக்காக உண்கிறவனும் வியாதியாளனாக மாறிவிட்டவனும்.


திருவள்ளுவரின் மேற்படி கூற்றும் 'யாரோ' தந்த மேற்படி வாக்கியமும், இன்றைய அறிவியலின்படி மிகவும் சரியானவை; மறுக்க முடியாதவை. இரண்டு கூற்றுக்களுடன், அறிவியல் அவதானத்தையும் சேர்த்து மேலே சொல்வோம்.

உடலிலுள்ள கழிவுப் பொருளாக மாறிய உணவு, பெருங்குடலில் மூன்று பகுதிகளைக் கடந்தே வெளியேறுகிறது. உண்டது செரிமானமாக நான்கு மணி நேரம், பெருங்குடலின் இரண்டு பகுதிகளையும் கடந்து மூன்றாம் பகுதியை அடைய எட்டு மணி நேரம்; ஆக 4+8=12 மணி நேரங்கள்.

ஏற்கனவே, 24 மணி நேரத்தில், ஒரு வேளை உண்ணும் யோகியை சந்தித்து விட்டோம். அவன் பெருங்குடலையும் விட்டுச் சக்கையாகிவிட்ட கழிவு வெளியேறிய 16 மணி நேரத்திற்குப் பின்பும், 8 மணி நேரம் பொறுத்திருந்து உண்பவன். இவனே, இயற்கையுடன் ஒன்றிய யோகி.

உணவு உட்கொண்ட 12ஆவது மணி நேரத்தில், அதாவது 24 மணி நேரத்தினுள் இரண்டு வேளை உண்பவன் போகி. ருசிக்காக உண்ணும் இவன், உணவில் இன்பம் தேடி உண்பவன். இவன், இயற்கையிலிருந்து பிரிந்துவிட்டவன். இவனுடைய நிலையிலேயே, பிரச்சனை ஆரம்பிக்கிறது. ஏனெனில், இன்னும் கழிவு அகற்றும் வேலை நிறைவேறாத சமயத்தில், இவன் அடுத்த உணவையும் உட்கொள்கிறான். இதனாலேயே இவன் போகி.

இவனையே, 'களிபேறிரையான்' என்கிறார் திருவள்ளுவர், இன்னொரு குறளில். 'களிபேறு' என்றால், இன்பத்தைப்



பெறல்; 'களிபேறிரையான்' இன்பத்தைப் பெறுவதற்காக உண்பவன்.

'யோகி' என்றால், 'இணைந்தவன்'. 'போகி' என்றால் 'அநுபவிப்பவன்'. இன்பத்தை மட்டுமல்ல, துன்பத்தை அநுபவிப்பவன் போகி தான். அதுவே அகராதிப் பொருள். ஆனால் இன்பத்தை அநுபவிப்பவனை மட்டுமே நாம் 'போகி' என்கிறோம். இன்பம், துன்பத்துக்கே இட்டுச்செல்லும். "களிபேறிரையான் கண் நோய் நிற்கும்," என்கிறார் திருவள்ளுவர்.

இங்கே களிபேறு - அதாவது இன்பம் - துன்பமாகிவிடும் ஆபத்து உணர்த்தப்படுகிறது. இது, முதல் உணவை உட்கொண்ட 12ஆவது மணி நேரத்தில் - அதாவது கழிவு, பெருங்குடலில் மூன்றாம் பகுதியினுள் செல்லும் சமயத்தில், உணவு உட்கொள்பவனின் நிலை. கழிவு அகற்றப்படுவதற்கு நான்கு மணி நேரம் உள்ள நிலை இது.

மூவேளை உண்பவன் ரோகி ஒவ்வொரு ஐந்து மணி நேரமும் இவன் உண்கிறான். முதல் உண்டது, பெருங்குடலின் முதல் பகுதியிலிருந்து இரண்டாவது பகுதிக்குள் போகும் சமயம் இது. உண்டது முழுவதும் வெளியேற, இன்னும் ஐந்து மணி நேரம் இருக்கிறது. இந்நிலையில் உண்டால் என்ன ஆகும் என்பதையே, 'ரோகி' என்ற பதம் குறிக்கிறது.

'யோகி' என்றால், 'இணைந்தவன்'. 'போகி' என்றால், இன்பத்தை அநுபவிக்க நாடி, துன்பத்தை 'அநுபவிப்பவன்'. 'ரோகி' என்றால்? 'ரோகி' என்றால், நோயாளி என்றே பொதுவாய்ப் புரிந்து வைத்திருக்கிறோம். ஆனால் நோய் எப்படி வருகிறது என்பதையும், 'ரோகி' என்ற பதம் உணர்த்துகிறது. உறுதி உடைதல் என்பதே ரோகம். யோகத்தில் ஏற்படும் இணைப்பு நிலை - உறுதி. இதனையே 'கல்பம்' என்கிறோம். இந்த உறுதி உடையும் நிலை, 'ரோகம்'. உடைந்தால் பிரிவினை ஏற்படுகிறது. மனிதனை உருவாக்கி ஊட்டி வளர்க்கும் இயற்கையிலிருந்து மனிதன் உடைபட்டு, பிரிந்து நிற்கிறான் அவனையே, ரோகி - நோயாளி - என்று அழைக்கிறோம்.

இவ்வளவு பழைய இந்திய - தமிழ் பாரம்பரியக் கருத்தையும் அறிவியல் அவதானத்தையும் இணைத்துச் சொல்லப்பட்டது. இருந்தும்கூட, உணவு கொடுக்கப்படாத நிலையில் அடுத்த உணவை உட்கொள்வது, எப்படி இன்பத்திலிருந்து துன்பத்துக்கு இட்டுச் செல்லும்? எப்படி உறுதியை உடைக்கும்? இதை இங்கே பார்ப்போம்.

உணவின் ஜீரணமும் கழிவும், ஒரே இயக்கத்தின் இரண்டு வேலைகள். இந்த இயக்கம், ஒரு சமயத்தில் ஒரு வேலை மட்டும் செய்யும் விதமாகத்தான் படைக்கப்பட்டிருக்கிறது. உடல், கழிவு வேலையைச் செய்த பின்பே, ஜீரண வேலைக்குத் தயாராக இருக்கும். இதனைப் பற்றிய அறிவுப் பின்னணியை, "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு

அருந்தியது அற்றது போற்றி உணின்" என்ற திருக்குறளில் கண்டோம்.

அருந்தியது அற்றதாகாமல் உள்ள நிலையில், அடுத்த உணவை உட்கொண்டால் உடலின் இயக்கம், கழிவு வேலையை அரைகுறையாக நிறுத்திவிட்டு ஜீரணவேலைக்குத் திரும்பிவிடும். கழிக்கப்படாத சக்கை, உடலில் ஊற ஆரம்பிக்கிறது. உணவாக உட்கொள்ளப்பட்டது, விஷமாக மாறுகிறது.

ஒருவேளை உண்பது தான் இதற்கு விடுவிப்பு என்று நாம் சொல்லவில்லை. திருவள்ளுவர் வேறு ஒரு விடுவிப்பையும் தந்திருக்கிறார். அதுதான், 'இழிவறிந்து உண்ணல்.'

"இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும் களிபேறிரையான் கண் நோய்."

எதை எல்லாம் உண்ணக் கூடாது என்று அறிந்து, அவற்றை விலக்கி, உண்ண வேண்டியதை மட்டும் உண்பவனிடத்தில், ஆரோக்யம் நிலைநிற்கும். இதேபோல் உணவின்பத்துக்காக மட்டும் உண்ணக் கூடாததை உண்பவனிடத்தில், நோய் நிற்கும்," என்பது இதன் பொருள்.

உண்ண வேண்டியது இன்னதுதான் என்று தேர்வு செய்யும் போது, உடல் என்ன விதமான உணவைத் தேர்வு செய்ய வேண்டும்? கழிவகற்றல் நடைபெறாவிட்டால், நாம் தேர்ந்து கொள்ளவேண்டிய உணவுகள் வெகு சீக்கிரத்தில் ஜீரணமாகக் கூடியவை ஆக இருத்தல் வேண்டும். இந்த குணங்கள் அற்ற, கடினமான உணவுகளை விலக்க வேண்டும். 24 மணி நேரத்தில், ஒரு வேளைக்கு அதிகமாக உண்போருக்கு, இந்தக் குறளில் ஒரு விடுவிப்பு உண்டு என்றால், அது இதுதான்.

'மருந்து' என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள், அவரது காலத்திலேயே உயர்தர உணவு ஒழுக்கம் ஒன்று இருந்தவை நமக்குப் பறைசாற்றுகின்றன. இந்த ஒழுக்கம், இயற்கையை மதித்து அதன் இயக்கத்தோடு இணையும் இயக்கம்.

ஆனால் அதில் இன்னொரு பிரச்சனை. திருவள்ளுவரும் அதனை அறிவியலும் சொல்கிறபடி நாம் உணவை உட்கொண்டால் பசி ஆறாது. 24 மணி நேரத்திற்கு ஒரு தடவை உண்டாலும் சரி, இலகுவாகச் செரிமானம் ஆகக்கூடியவற்றை ஒரு நாளைக்கு இரண்டு மூன்று வேளைகள் சாப்பிட்டாலும் சரி, பசி என்ற உணர்வு இருந்து கொண்டே இருக்கும். இதற்கு விடுவிப்பு ஒன்றுண்டு. அது, இதற்கு விடுவிப்பு வேண்டவே வேண்டாம் என்பதுதான். அதாவது பசியைப் பூரணமாக அடக்குவதற்காக உணவு கொள்ளக்கூடாது; பசி இருக்கிறது என்றால், உடலில் கழிவகற்றல் பணி தீவிரமாக செயல்படுகிறது என்றாகும்.

'பசித்திரு' என்றார் வள்ளலார் இராமலிங்கம். இறைமைப்பசி, அறிவுப்பசி, உணவுப்பசி, உணவுப்பசியை எளிதாகத் தீர்த்துவிடலாம். இவற்றை எளிதாக தீர்த்துக்கட்டிவிட்டால், அறிவுப்பசி பிறக்காது; இறைமைப்பசி தோன்றாது. இதனாலேயே வள்ளலார், சூத்திரமாகச் சூன்யசம்பாஷணை முறையில், 'பசித்திரு' என்றார்.

இழிவறிந்து, அருந்தியது அற்றதான பின்பு உண்டால், பசித்திருக்கும் உயர்நிலை இருக்கும். ஒரு ஆழ்ந்த, உறுதி கொண்ட உந்நத சமூகம் பிறக்கும்.

லயம், ஜூலை 1998.



குவலயம் எங்கும் திருக்குறள்நெறி பரப்பிய திருக்குறள் முதல்வர் கலைஞர்



தவத்திரு குன்றக்குடி
பொன்னம்பல அடிகளார்

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று உயிர்க்குல நேயத்தின் உச்சத்தை உலகிற்குப் பிரகடனம் செய்தவர் தமிழ் மாமுனிவர் திருவள்ளுவர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தால் மனிதம் புனித நிலையை அடைய முடியும் என்றார் திருவள்ளுவர். திருக்குறள் நெறி பரவுவதற்கும், திருவள்ளுவர் பெருமை நிலைத்து நிற்பதற்கும் தம் வாழ்நாள் எல்லாம் அர்ப்பணித்து உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருக்குறளுக்கு உரை தீட்டினார். குன்றாப் புகழ் உடைய குறள் ஓவியம் தீட்டினார். வான்புகழ் வள்ளுவர் கோட்டம் அமைத்தார்.

குவலயம் போற்ற, குன்றின் மேலிட்ட விளக்காய், திருவள்ளுவருக்குப் பெருமை சேர்க்க, குமரிமுனையில் 133 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை அமைத்து வரலாற்று சாதனை படைத்தார். கடல்கோள் கொண்ட தமிழ்க் கருவூலங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து எழுந்து நிற்பது போல் கம்பீரமாய் கலைஞர் வடித்த திருவள்ளுவர் சிலை எழுந்து நிற்கின்றது.

2000ஆம் ஆண்டு உதயம் ஆகின்றது. 2000ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் நாள் நள்ளிரவு 12.00 மணி கன்னியாகுமரி கடல் நடுவில் கம்பீரமாய், நிற்கும் திருவள்ளுவர் சிலை மீது ஒளி வெள்ளம் பாய்ச்சப்படுகின்றது. உணர்ச்சியின் உச்சத்தில் அரங்கத்தில் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் இருந்தார். அவரது கால் நூற்றாண்டுக் கால கனவு நனவாகி உள்ளது. உணர்வின் உச்சத்தில் இருந்த கலைஞர் 133 அடி உயரத் திருவள்ளுவர் சிலையைத் திறந்து உலகிற்கு அர்ப்பணம் செய்திருக்கின்றார்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்று பாடிய பாரதியின் வாக்கினை நனவாக்கி விட்டார் முத்தமிழறிஞர் கலைஞர்

133 அடி உயரத் திருவள்ளுவர் சிலையினைத் திறந்து வைத்து முத்தமிழறிஞர் - கலைஞர் உணர்வின் உச்சத்தில்



உரையாற்றினார். தமது கால் நூற்றாண்டுக் கால கனவு நனவாகியதில் மட்டற்ற மகிழ்ச்சியின் உணர்ச்சிப் பெருக்குக் கரை புரண்டு ஓடியது.

"நான் இன்று இந்த மேடையில் உரையாற்றுவேனோ என்று எனக்கு சந்தேகம். மருத்துவர் என்னைப் பரிசோதித்து, நான் மாத்திரை எடுத்துக் கொண்டுதான் உங்கள் முன்பு உரையாற்றுகின்றேன். என் அய்யன் திருவள்ளுவன்... என் அய்யன் திருவள்ளுவன்...' என்று உணர்ச்சிப் பெருக்கில் அழைத்தார். "இனி ஒவ்வொருவரும் திருவள்ளுவரை அய்யன் திருவள்ளுவன் என்றே அழைத்திடுங்கள். பொன்னம்பல அடிகளார் அவர்களும் இனி திருவள்ளுவரை அய்யன் திருவள்ளுவன் என்றே அழைத்திட வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

2001ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் நாள் திருச்சியில் ஜமால் முகம்மது கல்லூரியில் நமது உலகத் திருக்குறள் பேரவையின் மூன்று நாள் மாநாட்டின் நிறைவு நாள். 2000 ஜனவரி 1 அன்று கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை திறந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு, "திருக்குறள் முதல்வர்" என்ற விருதினை வழங்கி மகிழ்ந்தோம்.

உலகத் திருக்குறள் பேரவையின் பாராட்டு விழா நிகழ்வில் திருச்சி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியில் கலை நிகழ்ச்சி; முத்தமிழறிஞர் கலைஞரின் "குறள் ஓவியத்தை" நாட்டிய நாடகமாக நடத்தினார்கள்.

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் நடைபெற்ற உலகத் திருக்குறள் பேரவை மாநாட்டு நிகழ்வில் முத்தமிழறிஞர் கலைஞர் உரையாற்றும் பொழுது, மாநாட்டினை நடத்துபவர் உலகத் திருக்குறள் பேரவைத் தலைவர் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார். கலை நிகழ்ச்சிகளைப் பொறுப்பேற்று நடத்தியவர் கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி முதல்வராக உள்ள அருட்தந்தை ஜார்ஜ் அடிகளார். இந்த சமய நல்லிணக்கம்தான்

நாட்டிற்குத் தேவை" என்று நெகிழ்ச்சியாகக் குறிப்பிட்டார்.

காயப்பட்டு, சேதப்பட்டு, ஒதுக்கப்பட்டு, புறந்தள்ளப்பட்ட தமிழ்மொழியை செம்மொழி சிம்மாசனத்தில் ஏற்றி வைத்த பெருமை முத்தமிழறிஞர் கலைஞருக்கு உண்டு.

நாடு, மொழி, சாதி, சமயம் என்ற எல்லைகளைக் கடந்து உலக மானுடத்தின் உயர்வுக்காகப் பாடப்பட்ட ஒரே அறநூல் திருக்குறள் ஆகும். தமிழ்மொழி செம்மொழி சிறப்பைப் பெற்றிருப்பதும் திருக்குறள் போன்ற அறநூலைத் தமிழ்மொழி தன்னகத்தே பெற்றிருப்பதும் ஒரு காரணம் ஆகும்.

தமிழைச் செம்மொழியாக அறிவிக்கப் பாடுபட்ட முத்தமிழறிஞர் கலைஞர் செம்மொழி மாநாட்டைக் கொண்டாட இருக்கும் தருணத்தில் கலைஞரின் திருக்குறள் பணிகளைப் பாராட்டி, நாம் சென்னையில் நடத்திய உலகத் திருக்குறள் மாநாட்டில் "திருக்குறள் பேரொளி" என்ற விருதினை வழங்கி மகிழ்ந்தோம்.

இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் திருக்குறளுக்குத் தொண்டாற்றியவர்கள் நமது முத்தமிழறிஞர் கலைஞரும், நமது குன்றக்குடி அடிகள் பெருமானும் ஆவர். நமது அடிகள் பெருமான் தொடங்கிய "திருக்குறள் பேரவை" இன்று நமது முயற்சியால் ஒருங்கிணைக்கப்பட்ட "உலகத் திருக்குறள் பேரவை"யாக விரிந்து, வளர்ந்து உலக நாடுகளில் கிளைகளைப் பரப்பி, திருக்குறள் பணிகளை ஆற்றி வருகின்றது.

நமது திருக்குறள் பணிகளைப் பாராட்டி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2008ஆம் ஆண்டில் நமக்கு "திருவள்ளுவர்" விருதினை வழங்கி மகிழ்ந்தார்கள்.

திருக்குறள் உரை, குறள் ஓவியம், அரசு அலுவலகங்களில் திருக்குறள் ஆட்சி, அலுவல் பணிகளில் திருக்குறள் என்று எல்லாத் தளங்களிலும் திருக்குறளைப் பரப்பும் பணியில் முத்தமிழறிஞர் கலைஞர் முத்திரை பதித்துள்ளார்.

குற்றமற்ற இளைய தலைமுறையை உருவாக்கத் திருக்குறளை இளைய தலைமுறைக்குக் கற்பிக்க வேண்டும் என்று மகத்தான தீர்ப்பினை பொதுநல வழக்கு ஒன்றில் நீதியரசர் திருமிகு மகாதேவன் வழங்கினார்.

"The future of every country lies at the hands of youger generation. It is duty of the state to show them the rightful path and there is no ther better philosophy than what is preached in Thirukkural"

"இளைய தலைமுறையை நல்வழிப்படுத்த இளைய தலைமுறைக்கு திருக்குறள் கற்றுத் தருவதைவிட வேறு வழி இல்லை" என்று மாண்பமை நீதியரசர் மகாதேவன் அவர்கள் மகத்தான தீர்ப்பை வழங்கினார். நாம் நடைமுறைப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம்.

"திருக்குறள் காட்டுவழிப் பாதைக்கு கைவிளக்கு! கடல்வழிப் பாதைக்குக் கலங்கரை விளக்கு! மலைவழிப் பாதைக்குக் குன்றின் மேலிட்ட விளக்கு!" என்று குன்றின் மேலிட்ட விளக்காய், குவலயம் எங்கும் திருக்குறள் நெறியைப் பரப்பி, உலக வரலாற்று சாதனையாக, கன்னியாகுமரிக் கடற்கரையில் 133 அடி உயரத் திருவள்ளுவர் சிலையை நிறுவிய முத்தமிழறிஞர் கலைஞரின் திருக்குறள் தொண்டினைப் போற்றுவோம்.

வாழ்க திருவள்ளுவர் புகழ்!
வளர்க திருக்குறள் நெறி!



முத்தமிழறிஞர் கலைஞரின் குறள் பரிசு உருவான வரலாறு



பேராசிரியர், முனைவர்
கு. மோகனராசு

உறவுப் பாலம்

திருக்குறள் வளர்ச்சி வரலாற்றில் முதன் முதல் திருக்குறளை அரியணையில் ஏற்றி அழகு பார்த்த பெருமிதத்திற்கு உரிய பெருந்தகையாளர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

திருக்குறளுக்காக யார்யாரெல்லாம் தொண்டு செய்கின்றார்களோ அவர்களை எல்லாம் இனம் கண்டு மதித்து உறவு பாராட்டிய கனிந்த உள்ளம் கொண்டவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அந்தக் கனிந்த உள்ளத்தில் எனக்கும் ஓர் இடம் கிடைத்தது.

சிறு வயது முதலே தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பாதையில் பயணித்த நான் 11 வயதிலேயே திருக்குறளைப் பரப்பத் தொடங்கினேன்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் சிந்தனைச் செம்மல் டாக்டர் ந.சஞ்சீவி அவர்களும், தமிழ்த் தொண்டர் சிறுவை மோகனசுந்தரனார் அவர்களும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களைச் சந்தித்த பொழுது திருக்குறளில் பற்றுக் கொண்ட நான் எதையோ சாதிப்பேன் என்னும் நம்பிக்கை விதையை விதைத்தனர். விளைவு! எனக்குச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின்கீழ் இயங்கிய திருக்குறள் ஆய்வுப் பகுதியில் ஆராய்ச்சித் துணைவர் என்னும் பணி வாய்த்தது.

வளர்ப்புத் தந்தையான டாக்டர் கலைஞர்

என் பல்கலைக்கழக வாழ்க்கைப் பயணத்தில் எனக்குச் சிக்கல்கள் ஏற்பட்டபோதெல்லாம் அரணாக நின்று தோன்றாத் துணையாகி ஒரு வளர்ப்புத் தந்தையைப் போல் என்னை வாழ வைத்த பெருமை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. அது ஒரு தனி வரலாறு.

பல்கலைக்கழகத்தில் பணி அமர்த்தம் பெற்ற பின்னர் பல்வேறு திங்கள் இதழ்களில் தொடர் ஆய்வுக் கட்டுரைகளும் தனி ஆய்வுக் கட்டுரைகளும் தொடர்ந்து எழுதி வந்தேன்.





உலகத் திருக்குறள் மையம்

1990ஆம் ஆண்டில் திருமதி சாந்தி மோகனராசு அவர்களை நிறுவனராகக் கொண்டு உலகத் திருக்குறள் மையம் தொடங்கி நூறு கோணங்களில் திருக்குறள் செயல்பாடுகளை மேற்கொண்டு தமிழகத்தில் பெரும் திருக்குறள் எழுச்சியை உருவாக்கினோம். நான் தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் பயணங்கள் மேற்கொண்டு திருக்குறள் விழிப்புணர்வை உருவாக்கம் செய்தேன்.

தமிழகத்தில் ஒரு நாளைக்கு ஒரு கிராமம் என 119 கிராமங்களில் - ஊர்களில் திருக்குறள் கருத்து விளக்கப் புனிதப் பயணங்கள் மேற்கொண்டு அந்தக் கிராமங்களை - ஊர்களைத் திருக்குறள் திருத்தலங்கள் என வழங்கச் செய்தோம். திருக்குறளைத் தமிழகம் எங்கும் பரப்பி வாழ்வியல் ஆக்கும் நோக்கில் திருக்குறள் தூதர்களை நியமித்தோம். அவர்கள் தமிழகம் எங்கும் மாணவர்கள் பங்குபெறும் திருக்குறள் முற்றோதல் பயிற்சிகளையும் வழங்கி வந்தார்கள்.

1995ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் உள்ள ஏவிஎம் இராசராசேசுவரி திருமண மண்டபத்தில் முதல் திருக்குறள் மருத்துவ அறிவியல் மாநாட்டை இரண்டு நாள்கள் நடத்தி வரலாறு படைத்தோம்.

அதன்பின்னர், 1997ஆம் ஆண்டு அதே மண்டபத்தில் இரண்டு நாள்கள் திருக்குறள் முதல் சட்டவியல் மாநாடு நடத்தி வரலாறு படைத்தோம். அந்த மாநாட்டை மாண்புமிகு முதலமைச்சராக அரியணையில் அமர்ந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் தொடங்கி வைத்தார்கள். அந்த ஆண்டு தமிழ்நாடு அரசின் திருவள்ளுவர் விருதினை டாக்டர் கலைஞர் அவர்களின் திருக்கைகளால் பெறும் பேறு பெற்றேன்.

1999ஆம் ஆண்டு திருக்குறள் தேசிய நூல் கருத்தரங்கு பத்து நாள்கள் தொடர்ந்து நடத்தினோம்.

உலகத் திருக்குறள் மையத்தின் திருக்குறள் செயற்பாடுகளை அறிந்து அதன்மேல் நம்பிக்கை வைத்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நாங்கள் வழங்கிய சில வேண்டுகோள்களை அரசின் சார்பில் நிறைவேற்றி எங்களுக்குப் பெருமை சேர்த்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவை வருமாறு:

1. மக்களுக்கு வழங்கும் குடும்ப அட்டையில் திருவள்ளுவர்





திருவுருவப்படமும் திருக்குறளும் இடம்பெறச் செய்தமை;

2. பேருந்துகளில் உள்ள இருக்கைகளின் பின்புறம் திருக்குறள் பொதித்து வைத்தமை;

3. கல்வி நிறுவனங்கள் ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாட வேண்டும் ஆணை என வழங்கியமை;

4. பொருள் வருவாய் நிறைந்த 43 ஆலயங்களில் திருக்குறளை ஓதத் திருக்குறள் ஓதுவார்களை நியமித்தமை.

இவை எங்கள் உறவுகளில் ஒரு நம்பகத் தன்மையை உருவாக்கம் செய்தன.

சிலை திறப்பு விழா அறிவிப்பு

இந்தநிலையில்தான் கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா நடைபெறும் என்ற அறிவிப்பு நாளிதழ்களில் வெளிவந்தது. எங்கள் மனங்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தன. உலகமே அந்த நாளை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தது.

அந்த மாநாட்டை எப்படி எல்லாம் மிகச் சிறப்பாக நடத்துவது என்பதை ஆராய்வதற்காக அரசு சார்பில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் முதற்கூட்டம் மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் பேராசிரியர் முனைவர் மு.தமிழ்க் குடிமகனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நான் அழைக்கப்படவில்லை. அதனை அறிந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் அடுத்து வரும் கூட்டத்தில் என்னை அழைக்குமாறு கேட்டுக்கொண்டார்கள்.

திருக்குறள் முற்றோதலுக்கு முன்னோட்டம்

இரண்டாவது கலந்தாய்வுக் கூட்டம் 20.09.1999 அன்று மாண்பமை அமைச்சர் பெருமகனார் மு.தமிழ்க் குடிமகனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா தொடங்குவதற்கு முன் மாணவ, மாணவியர்கள் பங்குபெறும் திருக்குறள் முற்றோதல் நிகழ்வு நடத்தினால் அது ஒரு பெரும் வரலாற்று நிகழ்வாக அமையும் எனக் கருத்துரைத்தேன். அந்தக் கருத்துரை மாண்பமை டாக்டர் கலைஞர் அவர்கள் பார்வைக்குச் சென்றது. டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தப் பொறுப்பு முழுவதையும் என்னிடமே வழங்குமாறு

பணித்தார்கள். நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன்.

இந்தச் செய்தி உலகத் திருக்குறள் மையத்தின் சார்பில் 1330 குறள்களையும் நினைவு கொண்டு அரங்கேற்றம் செய்து சாதித்துள்ள மாணவ, மாணவியர்களுக்கு அறிவிக்கப்பட்டது. தமிழகத்தில் 1330 குறள்களையும் நினைவு கொண்டு திருக்குறள் கவனக அரங்கேற்றம் செய்துள்ள மாணவ, மாணவியர்கள் வேறு யாரேனும் இருக்கிறார்களா என்பதை அறிய உலகத் திருக்குறள் மையத்தின் சார்பில் சுமார் 2000 பள்ளிகளுக்கு மடல்கள் அனுப்பப்பட்டன. பயிற்சிக்கான மாணவ மாணவியர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

ஒருங்கிணைப்பாளர் ஆனேன்!

அவர்கள் எவ்வெவ்வாறெல்லாம் பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்துத் தொலைபேசி வழியும் மடல்கள் வழியும் பயிற்சிகளைத் தொடர்ந்து வழங்கி வந்தேன். கடைசியில் 1330 குறள்களையும் ஒன்றரை மணி நேரத்திற்குள் ஒப்பிக்கும் ஆற்றல் பெற்ற 22 மாணவ மாணவியர்களைத் தேர்வு செய்து அவர்களுக்குப் பல கோணங்களில் மீண்டும் பயிற்சிகள் வழங்கினேன்.

அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா அழைப்பிதழ் கிடைத்தது. பயிற்சி பெற்ற 22 மாணவ, மாணவியர்களின் திருக்குறள் முற்றோதல் நிகழ்வு இரண்டாவதாக அமைந்தது. நான் இந்நிகழ்விற்கான ஒருங்கிணைப்பாளராக அழைப்பிதழில் குறிக்கப்பட்டிருந்தேன்.

எம்மிடம் அரசு ஒப்படைத்திருக்கும் பணியைச் செம்மையாகச் செய்து அதனை உண்மையிலேயே ஒரு வரலாற்று நிகழ்வாக மாற்றி அமைக்க வேண்டும் எனத் திட்டமிட்டோம்; அவ்வாறு அமையும் என எல்லோரும் நம்பினோம்; அதனை உலகத் திருக்குறள் மையம் நடத்திய ஒரு சில கூட்டங்களிலும் எடுத்துரைத்தேன்.

உலக வரலாற்றில் முதல்முறை

30.12.1999 அன்று மாணவச் செல்வங்களுக்கு அரசினர் மகளிர் இல்லத்திலும், எங்களுக்கு மாதிணி உணவகத்திலும் இடங்கள் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அனைவரும் 30.12.1999 அன்று காலை 10 மணிக்குள் உரிய இடத்திற்கு வந்து விட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டோம். அதன்படி அனைவரும் அரசினர் மகளிர் இல்லத்தில் முதன் முதலாக ஓரிடத்தில் சந்தித்தோம். உலக வரலாற்றில் 1330 குறள்களும் அறிந்த 22 மாணவச் செல்வங்கள் அனைவரும் ஓரிடத்தில் சந்திப்பது இதுவே முதல்முறை; முதல் வரலாறு.

உணவுக்குப் பின்னர் மூன்று முறை ஒத்திகைகள் என்னால் பார்க்கப்பட்டன. இரவு 10 மணிக்கு ஓர் ஒத்திகை திருக்குறள் தூதர் தவத்திரு ஈசுவர அடிகளார் அவர்களால் பார்க்கப்பட்டது. மீண்டும் 31.12.1999 அன்று காலை 7.00 மணி அளவில் ஐந்தாவது ஒத்திகை என்னால் நடத்தப்பட்டது. ஒத்திகையின் முடிவில் நான் அரை மணி நேரம் எழுச்சி உரை ஆற்றினேன். அந்த உரையில்,

"கன்னியாகுமரியில் இன்று நடைபெற உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில் நாம் நடத்த உள்ள திருக்குறள் முற்றோதல் நிகழ்வு உலகமே வியக்கும் ஒன்றாக வரலாற்றில் இடம்பெறும் நிகழ்வாக விளங்க உள்ளது என்பது சத்தியம். உலகமே நம்மைக் காண போகிறது; வியக்கப் போகிறது. அதன் பின்னர் திருக்குறளுக்கு ஒரு மாபெரும் எழுச்சி உருவாகப் போகிறது. அதனை உருவாக்கப் போகிறவர்கள் நீங்கள் என்பதை நன்றாக நினைவு கொள்ளுங்கள்" என உறுதிப்படுத்திக் கூறினேன்.

இந்த எழுச்சி உரைக்குப் பின் அனைவரும் சிற்றுண்டி அருந்திவிட்டு அரசு ஏற்பாடு செய்திருந்த வண்டிகளில்



ஏறி விழாப் பந்தலுக்குச் சென்றோம். எல்லோர் உள்ளத்திலும் இன்று நாம் வரலாற்றுச் சாதனை படைக்க உள்ளோம் என்னும் உறுதி ஆழமாக வேரூன்றி இருந்தது.

மாநாட்டு அரங்கின் ஒரு பகுதியில் ஓவியக் கண்காட்சி மற்றும் நூல்கள் கண்காட்சி ஆகியவற்றைச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராசன் அவர்கள் திறந்து வைத்தார்கள். ஆனால் மேடை ஏறிப் பேசவில்லை.

விழாவின் முதல் நிகழ்வு

விழா அரங்க மேடையில் முதல் நிகழ்வாகத் திருக்குறள் முற்றோதல் நிகழ்வை நடத்துமாறு ஆற்றுப்படுத்தப் பட்டோம். அதனை மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் தமிழ்க் குடிமகனார் அவர்கள் டாக்டர் கலைஞர் அவர்கள் உரைத்ததாகக் கூறினார்கள். திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கும் பரிசை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம் கைகளால் வழங்கினால் சிறப்பாக இருக்கும் என அவரிடம் வேண்டினேன். அது இயலாது என்பது போல் அவர்கள் கருத்துரைத்தார்கள். ஆனால் எப்படியும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மேடைக்கு வந்து மாணவர்களைச் சிறப்பிப்பார்கள் என்ற நம்பிக்கை என்உள்ளத்தில் ஆழப் பதிந்தது. அதற்கு ஏற்றவாறு இந்நிகழ்வினைத் திட்டமிட்டு வரையறுத்துக் கொண்டேன்.

விழா மேடையில் முதல் நிகழ்வை நடத்தப் போகின்றோம் என்பது பெருமையாக இருப்பினும் ஓரளவு அச்சமும் இருந்தது. ஆனால் சாதிக்க வேண்டும் என்னும் மன உறுதி அந்த அச்சத்தைத் தகர்த்தது. மேடையில் 22 மாணவ, மாணவியர்களை முன்னரே திட்டமிட்டபடி அமர வைத்தேன். என் உரை தொடங்கியது:

"ஒன்றே உலகம்; பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என முழக்கத்தை முன்வைத்து என் உரையைத் தொடங்கினேன்.

உரையின் தொடக்கத்தில் 20ஆம் நூற்றாண்டில் திருக்குறள் தொடர்பாக நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வுகளை வகைத்தொகை செய்து வழங்கினேன். அவற்றுள் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றிய திருக்குறள் பணிகளும் உள்ளடக்கம் ஆயின.

என்னுடைய உரையின் இரண்டாவது பகுதியாக முன்னரே திட்டமிட்டபடி பின்வருமாறு கருத்துரைத்தேன்:

"21ஆம் நூற்றாண்டு என்று சொல்லப்படும் 2000ஆம் ஆண்டின் முதல் உலக அதிசயமாக நிகழவுள்ள திருக்குறள் வரலாற்று நிகழ்வு, எட்டாவது அதிசயமாகத் திகழ உள்ள நிகழ்வு - திருவள்ளுவர் திருவுருவச் சிலையை மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் திருக்குறள் பேரொளி டாக்டர் கலைஞர் அவர்கள் திறந்து வைப்பதாகும். இருபதாம் நூற்றாண்டில் திருக்குறள் தொடர்பான இறுதி உலக அதிசயம் இன்றைக்கு நான் நடத்தப் போகும் திருக்குறள் முற்றோதல் நிகழ்ச்சியாகும்"

அரங்கில் இருந்த அனைவரும் இந்த உறுதி உரையைக் கேட்டு வியப்போடு பார்த்தார்கள்.

கலைஞர் கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீர்

திட்டமிட்டபடி உரையின் மூன்றாவது பகுதியாகத் திருக்குறள் முற்றோதல் நிகழ்வில் பங்கு பெற்ற மாணவச் செல்வங்கள் அனைவரையும் ஒவ்வொருவராக எழுந்து நிற்கச் செய்து அறிமுகப்படுத்தினேன். அந்த அறிமுக உரையில் மாணவரின் பெயர், மாணவரின் அகவை, அவரின் ஊர், அவர் 1330 குறள்களையும் அறிந்த அகவை, அவர் திருக்குறள் தொடர்பாகச் செய்துள்ள சாதனைகள், அவர் திருக்குறள் தொடர்பாகச் செய்து வரும் தொண்டுகள், அவர் பெற்றுள்ள திருக்குறள் விருதுகள், அவரின் பிற



சாதனைகள் என ஒவ்வொருவரையும் முறைப்படுத்தி ஏதோ ஓர் உறுதியோடு உரைத்தேன்.

ஒவ்வொரு மாணவரையும் அறிமுகப்படுத்தும் பொழுதும் அரங்கம் கையொலியால் அதிர்ந்தது. முத்தமிழறிஞர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் வெளிப்பட அவர் அதைத் துடைத்துக் கொள்வதைக் கண்டேன். தமிழக முதல்வர் பெருமகனார் அவர்கள் உள்ளம் நெகிழ்ந்து போனார்கள். பக்கத்தில் அமர்ந்திருந்த மாண்புமிகு கல்வி அமைச்சர் பெருமகனார் க. அன்பழகனார் அவர்களோடு ஏதோ பேசினார்கள்.

அடுத்து, திருக்குறள் முற்றோதல் நிகழ்வு தொடங்கியது. முதலில் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் உள்ள ஒவ்வொரு குறளாக நான் சொல்லி வர, மேடையில் இருந்த மாணவச் செல்வங்கள் தொடர்ந்து சொல்லி வந்தார்கள். பின்னர் வான்சிறப்பு அதிகாரத்தில் இருந்து ஒவ்வொருவராக நினைவாற்றல் அளவில் ஒவ்வோர் அதிகாரமாக முற்றோதல் செய்தார்கள். கையொலியும் மகிழ்ச்சிக் கண்ணீரும் அரங்கில் நிறைந்தன.

முதல்வரின் பாராட்டு

முதல் சுற்று முடிந்தது. மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் பேராசிரியர் முனைவர் தமிழ்க் குடிமகனார் அவர்கள் மேடைக்கு வந்து,

"தலைவர் அவர்கள் திருக்குறள் முற்றோதல் செய்த மாணவர்களை வாழ்த்த விரும்புகிறார்கள்" என்றார்கள்.

என் உள்ளம் எண்ணியது நிறைவேறியது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏதேனும் ஒரு அறிவிப்பை வழங்குவார்கள் என உறுதியாக நம்பினேன்.

திருக்குறள் முற்றோதல் நிகழ்வைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மகிழ்ச்சிப் புன்னகையோடு மேடைக்கு வந்தார்கள்.

அவர்களைத் தொடர்ந்து மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களும் மாண்புமிகு கல்வி அமைச்சர் பெருமகனார் அவர்களும் மேடைக்கு வந்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் பெருமானார் அவர்கள் முற்றோதல் செய்த ஒவ்வொரு மாணவரையும் மகிழ்ச்சியோடு கைகுலுக்கிப் பாராட்டினார்கள். எது நிகழ வேண்டும் என்று நான் நினைத்தேனோ அது நிகழ்ந்தது.

தொடர்ந்து மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களும் மாணவச் செல்வங்களை முகமலரக் கைகுலுக்கி வாழ்த்தினார்கள். பின்னர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மாணவச் செல்வங்களைப் பாராட்டி உரையாற்றினார்கள். அந்த உரை விவரம் வருமாறு:

"திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவினையொட்டி இங்கே தற்போது முற்றோதல் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆற்றலாளர் முனைவர் மோகனராசு இந்தக் குழந்தைகளையெல்லாம் அறிமுகப்படுத்தியபோது திருக்குறளைத் தலைகீழாக ஒப்பிக்கக் கூடியவர்கள் இவர்கள் என்றும், எந்தக் குறளைக் கேட்டாலும் அந்தக் குறளைச் சொல்லக்கூடிய ஆற்றலாளர்கள் என்றும், எந்தக் குறளுக்குப் பொருள் சொல்லச் சொன்னாலும் அல்லது பொருள் சொல்லிக் குறளைச் சொல்லச் சொன்னாலும் அதனைக் கூறக்கூடிய திறமை பெற்றவர்கள் என்றும், இப்படிப் பல திறப்பட்ட திறமைகளைப் படைத்த சிறுவர் சிறுமியர் இங்கே வந்திருப்பதாக எடுத்துச் சொன்னார்கள்.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல முற்றோதல் நிகழ்ச்சியில் நாம் அனைவரும் அதைக் கண்டோம். வள்ளுவருடைய எண்ணம் இன்றைக்கு நிறைவேறியிருப்பதைக் கன்னியாகுமரியிலே இந்த மேடையிலே நாம் கண்டிருக்கிறோம்.

சமத்துவம் சகோதரத்துவம் எல்லா மதங்களுக்கும் இடையேயும், எல்லாச் சமூகங்களுக்கும் இடையேயும் வேண்டும் என்பதுதான் திருக்குறளின் தத்துவம். அந்தத் தத்துவஞானி எந்தக் கனவு கண்டாரோ அந்தக் கனவு குமரியில் இன்றைக்கு நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகளும் அதைப் போலவே பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த குடும்பத்துப் பிள்ளைகளும் குறள்பால் கொண்டிருக்கின்ற அன்பு, ஆர்வம், ஈர்ப்பு - இவைகளையெல்லாம் காணும்போது உள்ளபடியே இந்த ஆண்டின் தொடக்கம் வள்ளுவரின் கனவு நினைவாகும் என்கின்ற நம்பிக்கையை எனக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இந்த அரும் செல்வங்களை எல்லாம் நான் வாழ்த்துகிறேன்.

முதல்வர் கலைஞரின் குறள் பரிசு

இந்தச் சிறார்களுக்கு என்ன பரிசளிக்கலாம் என்று நானும் கல்வி அமைச்சர் பேராசிரியரும் இப்போதுதான் சிந்தித்தோம். சிந்தித்த பிறகு எடுத்த முடிவு, இங்கே 22 பேர் குறளில் தங்களுக்குள்ள திறமையைக் காட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஆயிரம் ரூபாய்.... (அரங்கில் உள்ளோர் கைதட்டல்)... இன்னும் இருக்கிறது கைதட்டுவதற்கு... ஒரு முறை மட்டுமல்ல மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். இது இந்த 22 பேருக்கு மாத்திரமல்ல, இதைப் போன்ற திறமை பெற்றவர்கள் இன்னும் வருவார்களேயானால் அவர்களுக்கும், ஆயிரம் ரூபாய் வீதம் மாதந்தோறும் அரசின் சார்பில் தலைமைச் செயலகத்திலிருந்து அவர்கள் வீட்டு முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். இதற்குக் குறள் பரிசு என்று பெயர்.

இந்தத் திட்டம் தொடரும்; இந்த ஆட்சி இருந்தாலும், எந்த ஆட்சி

வந்தாலும் தொடரும், தொடர வேண்டும், தொடர்ந்தே தீரும் என்பதை எடுத்துக்கூறி குறளின்பால் தங்கள் உள்ளத்தைப் பதித்து நம்மையெல்லாம் மகிழ்ச்சியில் வாழ்த்திய இந்தச் செல்வங்களுக்கு என் இதயம் சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

மாண்புமிகு தமிழக முதல்வர் திருக்குறள் பேரொளி டாக்டர் கலைஞர் அவர்களின் இந்த அறிவிப்பைக் கேட்டதும் நான் மகிழ்ச்சியில் கண்ணீர் வடித்தேன். தொடக்கத்தில் 22 மாணவச் செல்வங்களுக்குத் தனித்தனியே ரூபாய் 2000 அளவிற்குப் பரிசு வழங்கிச் சிறப்பிப்பது என்றுதான் இருந்தது. ஆனால் மாணவச் செல்வங்களின் திருக்குறள் ஈடுபாடும் நினைவாற்றல் திறனும் என்னுடைய திட்டமிட்ட உழைப்பும் திருக்குறள் முற்றோதல் நிகழ்வில் நான் ஆற்றிய உரையும் அனைத்திற்கும் மேலாக மாண்புமிகு தமிழக முதல்வர் திருக்குறள் பேரொளி டாக்டர் கலைஞர் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் மீது கொண்ட அளத்தற்கரிய காதலும் குறள் பரிசு உருவாகக் காரணங்கள் ஆயின.

விழா மேடையில் எதிர்பாரத விதமாக வாழ்த்தி உரைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தாம் எழுதிய வரலாற்று சிறப்புமிக்க குறளோவியம் என்ற நூலைத் தம் கையொப்பனிட்டு எல்லா மாணவச் செல்வங்களுக்கும் மாண்புமிகு கல்வி அமைச்சர் பெருமகனார் அவர்களின் திருக்கைகளால் வழங்கச் செய்தார்கள். நிகழ்ச்சியின் பொறுப்பாளராக இருந்த எனக்குக் குறளோவியம் என்ற நூலும் விழாச் சிறப்புக் கேடயமும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் குறள் பரிசு பற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பு அன்று மாலை நாளிதழ்கள் அனைத்திலும் தலைப்புச் செய்திகளாக வந்து தமிழகத்தில் பெரும் பரபரப்பை உண்டாக்கியன.

விழாவில் முற்றோதல் நிகழ்ச்சியில் பங்கேற்ற 22 மாணவச் செல்வங்களுக்கும் ரூபாய் 2,000 வீதம் அரசின் சார்பில் 01.01.2000 அன்று வழங்கப்பட்டது.

கோட்டத்திலும் திருக்குறள்

இந்த நிலையில் 15.01.2000 அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவில், அழைப்பிதழில் இல்லை என்றாலும், சென்னையிலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள கன்னியாகுமரியில் திருக்குறள் முற்றோதல் நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்களைக் கொண்டு திருக்குறள் கவனக அரங்கேற்ற நிகழ்ச்சி நடத்துமாறு டாக்டர் கலைஞர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். நானும் அந்த நிகழ்ச்சியை நடத்தினேன். இந்த நிகழ்ச்சி முடிந்ததும் திருக்குறளுக்கென்று ஒரு பல்கலைக்கழகம் அமைக்கத் திட்டமிட்டு இருப்பதாகவும் அதில் நான் முதல் துணைவேந்தராக வரவேண்டும் என்றும் தம் வேண்டுகோளை முன்வைத்தார்கள். நான் அப்படியே அதிர்ந்து போனேன். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கை என்னை மெய்சிலிர்க்க வைத்தது. இசைவு சொல்ல நா எழவில்லை; சரி என்று தலையை மட்டும் மெல்ல அசைத்தேன்.

அந்தப் பல்கலைக்கழகம் உருவாக்கம் பெறுவதற்கு முன் வள்ளுவர் கோட்டத்தில் மாணவர்களுக்கான திருக்குறள் நினைவாற்றல் பயிற்சி வகுப்புகள் நடத்தவும் திருக்குறள் ஆய்வரங்குகள் நடத்தவும் வேண்டிய செயல் திட்டங்களை வரையறுத்து வழங்குமாறு கேட்டுக் கொண்டார்கள்; நானும் இசைவு தந்தேன்.

அடுத்த வாரமே சோதனை முயற்சியாக மாணவர்களுக்கான திருக்குறள் பயிற்சி வகுப்புகளை வள்ளுவர் கோட்டத்தில் தொடங்கினேன். அந்த வகுப்புகள் வாரம் ஒன்று என மூன்று வாரங்கள் தொடர்ந்தன. அந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களுக்கான பயிற்சி



வகுப்புகளுக்கான தற்காலிகத் திட்ட வரைவை உருவாக்கம் செய்தேன். ஆய்வரங்குகள் நடத்தும் பயிற்சியைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பெற்றிருந்த காரணத்தால் அதை அடிப்படையாகக் கொண்டு திருக்குறள் ஆய்வரங்குகளுக்கான திட்ட வரைவையும் தயாரித்தேன்.

முதல் காசோலை வழங்கல்

திருக்குறள் முற்றோதல் நிகழ்வில் பங்கேற்ற மாணவச் செல்வங்களுக்குத் தம் கைகளாலேயே முதல் காசோலை வழங்க வேண்டும் என எண்ணிய மாண்புமிகு தமிழக முதல்வர் பெருமகனார் அவர்கள் அதனை 09.02.2000 அன்று செயலாக்க எண்ணினார்கள்.

இச்செய்தி தமிழ் வளர்ச்சி இயக்கத்தின்வழி உலகத் திருக்குறள் மையத்திற்கு 04.02.2000 வெள்ளி மாலை தெரிவிக்கப்பட்டது. சனிக்கிழமை காலையில் உலகத் திருக்குறள் மையத்தின் சார்பில் 22 மாணவச் செல்வங்களுக்கும் தூதஞ்சல்வழிச் செய்திகள் அனுப்பப்பட்டன. அரசின் சார்பில் 06.02.2000 அன்று அனைவருக்கும் தந்திகள் அனுப்பப்பட்டன. சில மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களே மாணவ, மாணவியர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று தந்திகளை வழங்கி மாணவச் செல்வங்களுக்குப் பெருமை சேர்த்தனர்.

09.02.2000 அன்று காலை 22 மாணவச் செல்வங்களும் தத்தம் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் உலகத் திருக்குறள் மையத் தலைமையகத்திற்கு வருகை தந்தனர். அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. வருகை தந்த அனைவருக்கும் மையத்தின் சார்பில் காலை உணவு வழங்கப்பட்டது. காலை உணவு அருந்திய பின்னர் அனைவரும் ஒன்றாகத் தலைமைச் செயலகம் நோக்கிப் புறப்பட்டோம். தலைமைச் செயலகத்தில் எங்களை அன்போடு வரவேற்றார்கள்.



தாயுள்ளம் கொண்ட கலைஞர்

ஆயிரம் ரூபாய்க்கான முதல் காசோலை பெற மாணவர்களை மட்டுமே உள்ளே அனுமதிக்க வரிசைப்படுத்தினர். உலகத் திருக்குறள் மைய நிறுவனர் திருமதி. சாந்தி மோகனராசு அவர்கள் மாணவர்கள் உள்ளே செல்வதைத் தடுத்து நிறுத்தி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒவ்வொரு மாணவரும் அவரவர் பெற்றோருடன் வந்து முதல் காசோலையைப் பெறுவதைத்தான் பெருமையாகக் கருதுவார்கள். அதனால் பெற்றோர்களுடன் மாணவர்கள் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நடந்ததை அறிந்த தாயுள்ளம் கொண்ட டாக்டர் கலைஞர் அவர்கள் மாணவர்களைப் பெற்றோர்களுடன் அனுப்ப வேண்டும் என்று அந்தப் பொறுப்பைத் திருமதி சாந்தி மோகனராசு அவர்களிடம் வழங்கினார்கள். அதன்படி ஒவ்வொரு மாணவரும் அவரவர் பெற்றோருடன் சென்று முதல் காசோலையைப் பெற்றுக் கொண்டனர். நான் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டேன்.

உலகத் திருக்குறள் மையத்தின் நிறுவனர் திருமதி. சாந்தி மோகனராசு அவர்களும் திருக்குறள் செல்வி கோ. சி. பிரதீபா அவர்களும் உலகத் திருக்குறள் மையத்தில் தூதர்கள் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மூன்று தீர்மானங்கள் அடங்கிய படியை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் வழங்கினார்கள். அதில் இடம்பெற்று இருந்த தீர்மானங்கள் வருமாறு:

1. திருவள்ளுவர் சிலை திறப்பு விழா நடத்தியும் குறள் பரிசு வழங்கியும் திருக்குறளுக்கு வாழ்வு தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

2. மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருக்குறள் பணிகளைப் பாராட்டிப் பெருமகனாருக்குத் "திருக்குறள் பேரொளி" என்னும்

விருது வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

3. திருக்குறள் பல்கலைக்கழகம் அமைத்துத் திருக்குறள் ஆய்வுகள் பெருகச் செய்ய வேண்டுகிறோம்; குறள் பரிசு பெற்ற மாணவச் செல்வங்களுக்குச் சில சலுகைகளும், திருக்குறளுக்குத் தொண்டாற்றும் திருக்குறள் தூதர்களுக்குப் பயணச் சலுகைகள் போன்றனவும் வழங்க வேண்டுகிறோம்.

மாணவர்களுக்கான திருக்குறள் நினைவாற்றல் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கான திட்ட வரைவினையும் திருக்குறள் ஆய்வரங்குகள் நடத்துவதற்கான திட்ட வரைவினையும் அன்றே டாக்டர் கலைஞர் அவர்களிடம் நான் வழங்கினேன்.

வெளியே வந்ததும் குறள் பரிசு பெற்ற 22 மாணவச் செல்வங்களை தொலைக்காட்சியினர் பேட்டி எடுத்தனர். மீண்டும் அனைவரும் உலகத் திருக்குறள் மையத் தலைமையகத்திற்குத் திரும்பினோம். அடுத்து மாணவச் செல்வங்களும் அவர்தம் பெற்றோர்களும் செய்ய வேண்டியன என்ன என்பதைப் பற்றி நான் உரையாற்றினேன்.

குறள் பரிசு தொடர...

இதனை அடுத்து டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தபடி குறள் பரிசு பெறும் மாணவச் செல்வங்களைப் பலராக உருவாக்க வேண்டும், டாக்டர் கலைஞர் அவர்களின் எண்ணத்திற்கு ஏற்றம் சேர்க்க வேண்டும், திருக்குறளை வாழ்வியல் ஆக்க வேண்டும் எனும் வேட்கையில் நான் சொந்த வீடு வாங்கி வட சென்னையில் உள்ள செரியன் நகரில் குடி பெயர்ந்த போது, 30.04.2000 அன்று புதுமனைபுகுவிழாவாகத் தமிழ்நாடு முழுவதும் இருந்த திருக்குறள் நினைவாற்றல் கொண்ட மாணவர்களை வரவழைத்து நேர்முகத் தேர்வு நடத்தி 42 மாணவியர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு மே திங்கள் முழுவதும் 66 கோணங்களில் திருக்குறளை ஒப்பிக்கும் பயிற்சி வழங்கினேன்.

இனமானப் பேராசிரியர் மாண்பமை அமைச்சர் பெருமகனார் அன்பழகனார் அவர்கள் தலைமையில் பல சான்றோர்களைக் கொண்டு 42 மாணவ மாணவிகளின் அரங்கேற்ற நிகழ்வை மாபெரும் விழாவாக நடத்தினேன். அந்த விழாவில் பயிற்சி பெற்ற 42 மாணவச் செல்வங்களுக்குத் திருக்குறள் செல்வர் என்ற விருதும், திருக்குறள் இளம் தூதர் என்னும் பொறுப்பும் வழங்கப்பட்டன.

பின்னர் தண்டையார்பேட்டையில் உள்ள கொ. சி. சங்கரலிங்க நாடார் மேல்நிலைப் பள்ளியில் குளிர்கால விடுமுறைக் காலத்தில் 100 கோணங்களில் திருக்குறளை ஒப்பிக்கும் பயிலரங்கு தொடர்ந்து பத்து நாள்கள் நடத்தினேன். அதில் தமிழ்நாடு முழுவதும் இருந்து 60 மாணவ மாணவியர்கள் பங்கேற்றுப் பயிற்சி பெற்றுச் சிறப்பாக நினைவாற்றலை வெளிப்படுத்தினர். இவர்கள் அனைவருக்கும் திருக்குறள் செல்வர் விருதும் திருக்குறள் இளம் திருக்குறள் தூதர் பொறுப்பும் வழங்கி சிறப்பித்தோம்.

எம்மிடம் திருக்குறளை 100 கோணங்களில் ஒப்பிக்கும் பயிற்சி பெற்ற மாணவர்கள் அனைவரும் தமிழ்நாடு அரசின் குறள் பரிசு பெற வேண்டும் என்ற நோக்கில் "திருக்குறள் நினைவாற்றல் பயிற்சிகள்" என்னும் 160 பக்க நூலையும் தயாரித்து வெளியிட்டேன்.

பின்னர் திருக்குறளை 100 கோணங்களில் ஒப்பிக்கும் பயிற்சி பெற்ற 100 மாணவர்களை மையமிட்டுப் போட்டி நடத்தி அவர்களுள் வெற்றி பெற்ற ஒருவருக்குத் "திருக்குறள் மாமணி" விருதும், ரூபாய் 1330 பரிசும் வழங்கிச் சிறப்பித்தோம். அதில் முதல் பரிசு பெற்ற மாணவி பற்றிய செய்திகள்

தினமணி நாளிதழில் மிகச் சிறப்பான செய்தியாகப் படத்துடன் வெளிவந்தது. இந்நிகழ்வுகள் குறித்த அறிக்கையினை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் வழங்கினோம்.

திருக்குறள் நினைவாற்றல் பயிற்சி வகுப்பு

வள்ளுவர் கோட்டத்தில் மாணவர்களுக்குத் திருக்குறள் நினைவாற்றல் பயிற்சி வகுப்புகள் நடத்துதல் - திருக்குறள் ஆய்வரங்குகள் நடத்துதல் ஆகிய இரண்டு திருக்குறள் பணிகளையும் நடத்துவதற்கான பொறுப்பு ஆணை 20.12.2000 அன்று எனக்கு வழங்கப்பட்டது (அரசு ஆணை எண் 279). நான் அதனை எனக்குக் கிடைத்த பேறாக எண்ணி ஏற்றுக் கொண்டேன்; சாதிக்க வேண்டும் எனத் திட்டமிட்டேன்.

இந்த இரண்டு பணிகளையும் நடத்தும் முறைமைகளை ஆய்வு செய்யும் நோக்கில் தலைமைச் செயலகத்தில் 30.01.2001, 16.02.2001 ஆகிய நாள்களில் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. நான் என் திட்ட வரைவுகளைத் தெளிவு செய்து அறிக்கைகள் வழங்கினேன். திருக்குறள் வகுப்புகளைப் புதன்கிழமை தோறும் மாலையிலும், திருக்குறள் ஆய்வரங்குகளைச் சனிக்கிழமை தோறும் காலையிலும் மாலையிலும் வள்ளுவர் கோட்டத்தில் நடத்துவது எனத் திட்டமிட்டேன்.

மாணவர்களுக்கான திருக்குறள் வகுப்புகளைத் தொடங்கினேன். 13 வாரங்கள் நடத்தினேன். நான் வழங்கிய திட்ட வரைவின்படி செயல்பாடுகள் அமையாமையால் என் திட்ட வரைவுக்கு உடன்படும் வரை திருக்குறள் வகுப்புகளைத் தள்ளி வைப்பது என முடிவு செய்தேன்.

திருக்குறள் ஆய்வரங்குகளை 01.04.2001 அன்று தொடங்கினேன்.



வள்ளுவர் கோட்டத்தை வள்ளுவத்தின் ஆய்வியல் கோட்டம் ஆக்க வேண்டும் என எண்ணிய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் கனவை நனவாக்கினேன். உலக வரலாற்றிலேயே மிக ஆழமான திருக்குறள் ஆய்வுகள் நடக்கும் களமாக வள்ளுவர் கோட்டத் திருக்குறள் ஆய்வரங்குகளைத் திட்டமிட்டு அமைத்து நடத்தி வந்தேன்.

திருவள்ளுவரின் சிந்தனைகளைக் கோட்பாடாக்கும் ஆழமான ஆய்வு முறையினைக் கண்டறிந்து அதற்கான பயிற்சிகளை ஆய்வாளர்களுக்கும் பேராசிரியர் பெருமக்களுக்கும் வழங்கி வந்தேன்.

வள்ளுவர் கோட்டத்தில் வழங்கப்பட்ட ஆய்வுரைகள் செம்மை செய்யப்பட்டு 200க்கும் மேற்பட்ட நூல்களாக வெளிவந்துள்ளன. அவற்றுள், வள்ளுவர் கோட்டத்தை வள்ளுவத்தின் வாழ்வியல் கோட்டம் ஆக்கும் வழிமுறைகள் என்னும்

நூலும் வள்ளுவர் கோட்டத் திருக்குறள் ஆய்வரங்குகள் 1000 என்னும் நூலும் அடங்கும்.

07.03.2020 வரை 986 ஆய்வரங்குகளை நடத்தினேன். கொரோனாப் பெருந்தொற்றுக் காலம் வள்ளுவர் கோட்ட ஆய்வரங்குகளின் தொடர்ச்சிக்குத் தடையாக அமைந்தது.

கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் காணொளி வழியில், 2000 ஆண்டுக் காலத் திருக்குறள் வளர்ச்சி வரலாறு, திருக்குறளும் இந்தியச் சிந்தனைகளும், திருக்குறள் செம்பதிப்பு உரை என 450க்கும் மேற்பட்ட திருக்குறள் நிகழ்வுகளை உலகத் திருக்குறள் மையத்தின் சார்பில் நடத்தினோம்.

கொரோனாப் பெருந்தொற்றின் தாக்குதல் நீக்கம் பெற்ற பின்னர் 17.12.2022 முதல் வள்ளுவர் கோட்டத் திருக்குறள் ஆய்வரங்குகளை மீண்டும் தொடங்கினோம். இதுவரை 1083 ஆய்வரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. அதே வேளையில் கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் காணொளி வழியில் தொடங்கிய ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்றும் வருகின்றன.

கின்னஸ் சாதனைக்காக...

திருக்குறள் உலக நூல் என்னும் எழுச்சியை உலகளவில் உருவாக்கும் நோக்கில் உலகளாவிய அளவில் ஒரே நாளில் 100 தலைப்புகளில் 100 இடங்களில் 100 திருக்குறள் உலக நூல் மாநாடுகள் நடத்தி நூறு மலர்கள் வெளியிடுதல் என்னும் கின்னஸ் சாதனைக்கான நிகழ்வினை முன்னெடுத்துச் செயலாக்கம் செய்து வருகின்றோம். இந்த நிகழ்வு வரும் 25.01.2025 அன்று நடைபெற உள்ளது.

என் திருக்குறள் பணிகளையும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் எனக்கும் உள்ள திருக்குறள் உறவுகளையும் நன்கறிந்த இன்றைய முதல்வர் பெருமகனார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் 03.06.2022 அன்று கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதாக ரூபாய் 10 லட்சம் வழங்கிப் பின்னர் கனவு இல்லம் ஒன்றையும் வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள்.

திராவிட மாதிரி ஆட்சி

திராவிட மாதிரி ஆட்சியினை வடிவமைத்து இரவும் பகலும் கடுமையாக உழைத்துத் தமிழ்நாட்டைப் பல கோணங்களில் உயர்த்தி எழுச்சி பெறச் செய்து வரும் இன்றைய முதல்வர் பெருமகனார் அவர்கள் கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை திறப்பு நிகழ்வின் 25ஆம் ஆண்டைக் கொண்டாடும் வகையில் மிகச் சிறப்பான முயற்சிகள் முன்னெடுத்து வருவது உலகத் தமிழர்களின் நெஞ்சமெல்லாம் நெகிழ வைக்கும் அரும்பெரும் செயலாகும். அந்தப் பெருமகனாரை உள்ளத்தில் ஆழ நினைத்து வணங்குகிறேன்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை என் வளர்ப்புத் தந்தையாக உள்ளத்தில் ஏந்தி வாழ்ந்து வரும் நான், இன்றைய மாண்பமை முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை என் உடன் பிறவாச் சகோதரராக உள்ளத்தில் ஏந்தி அன்னாரின் அளப்பெரிய சாதனைகளை நினைத்து நெஞ்சம் நெகிழ்ந்து வருகின்றேன்.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருக்குறள் ஓவியப் போட்டியில் வென்றவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பரிசு வழங்கி பாராட்டிய ஓவியங்கள்...



கல்லூரி மாணவர்கள் பிரிவு



1

வெ.ராஜேஷ், எம்.எ:ப்.ஏ.
அரசு கவின் கலைக்கல்லூரி,
கும்பகோணம்.



2

ஆ.பாலாஜி, எ.எ:ப்.ஏ.,
அரசு கவின் கலைக்கல்லூரி,
கும்பகோணம்.



3

க. ராஜேஷ், பி.எ:ப்.ஏ.,
அரசு கவின் கலைக்கல்லூரி,
சென்னை.

பள்ளி மாணவர்கள் பிரிவு

1




ஜி.ஜெய்கீர்த்தன்ஹா
பத்தாம் வகுப்பு,
சிந்தி மாடல் சீனியர் செகண்டரி பள்ளி,
கெல்லிஸ், சென்னை.




2

பி. கீர்த்திவாசன்
ஒன்பதாம் வகுப்பு,
வேலம்மாள் வித்யாலயா,
ஆலப்பாக்கம், சென்னை.

3



மோ.சு. பிருந்தா,
பதினொன்றாம் வகுப்பு,
ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா
மேல்நிலைப்பள்ளி, பெ.நா.பாளையம்,
கோயம்புத்தூர்.


தவம்
மா
தலைநிலை
கின்று
தமிழ்
திரு
அமைதி

திருவள்ளுவர் கூறிய நிலாவும் பாம்பும்!



முனைவர்
ம. இராசேந்திரன்

முதலமைச்சராக 1975 டிசம்பரில் அமைச்சரவையைக் கூட்டித் திருவள்ளுவருக்குச் சிலை எடுக்கத் தீர்மானித்த முத்தமிழ் அறிஞர் கலைஞரே 25 ஆண்டுகளுக்குப் பின் கன்னியாகுமரியில் முதல்வராக இருந்து திருவள்ளுவருக்குச் சிலை திறந்தார்.

இடையில் எவ்வளவோ - ஆட்சியிலும், நாட்டிலும் - வந்து சென்றன. ஆனாலும் கலைஞர் மனதில் திருவள்ளுவர் சிலை நின்றுகொண்டிருந்தது. 2000 ஜனவரியில் சிலைக்குக் கண் திறந்தார். இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் அந்தச் சிலை திறப்பின் வெள்ளிவிழா!

திருவள்ளுவர் சிலை! தமிழர்களின் சிந்தனைக் கருவூலக் குறியீடு என்றால் வெள்ளிவிழா திராவிட மாடலின் அரவணைக்கும் அன்பின் வெளிப்பாடு!


ஆம்!

தனித்தனித் தீவுகளாக இருந்த திருவள்ளுவரையும் விவேகானந்தரையும் இணைக்கும் கண்ணாடிப் பாலம் அமைக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர்! இரு வேறு சிந்தனைத் தீவுகளையும் பார்க்க வரும் மக்களை இணைக்கிறது கண்ணாடிப் பாலம்! இது அனைவரையும் அரவணைக்கும் அன்பின் வெளிப்பாடு!

அவ்வப்போது கடல்நீர் மட்டம் காரணமாகத் திருவள்ளுவர் சிலைக்குப் படகு போகாதென்று சொல்லி விவேகானந்தரை மட்டும் பார்த்துவிட்டு வரவேண்டியிருக்கும் கட்டாயப் புறக்கணிப்பைக் கண்ணாடிப் பால வழியமைத்துத் தீர்த்து வைக்கிறார் தமிழ்நாடு முதல்வர்.

சிலை திறப்பு வெள்ளிவிழாக் காலத்தில், சிலை திறந்த காலத்து நினைவுகள் வருகின்றன.

திருவள்ளுவர் சிலை திறப்பு 21ஆம் நூற்றாண்டு பிறந்த 2000 ஜனவரி முதல்நாள்தான் என்றாலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மூன்றுநாள் முன்னதாக டிசம்பர் 30



ஆம் நாள் இரவே கன்னியாகுமரிக்கு வந்துவிட்டார்! உழவர் சந்தையைத் திண்டுக்கல்லில் திறந்து வைத்துவிட்டுச் சொல்லேருழவருக்குக் கன்னியாகுமரியில் சிலை திறக்க வந்தார். வந்தவர் களைப்பில் ஓய்வெடுக்கப் போய்விடுவார் என்று நினைத்த அதிகாரிகள் அல்லாடிப் போனார்கள். விழா ஏற்பாடுகளைப் பார்க்கப் பந்தலுக்கு வந்தார்!

கடற்கரை ஓரம் விழா மேடை! கடலுக்குள் திருவள்ளுவர் சிலை! மேடையில் பின்னணியாக வைக்கப்பட்டிருந்த திருவள்ளுவர் படத்தில் அவருக்குத் திருப்தி இல்லை. மாற்றச் சொன்னார். இரவோடு இரவாக மாற்றப்பட்டது.

மற்ற ஏற்பாடுகளைப் பார்த்துக்கொண்டே வந்தவர், எவ்வளவு பேர் கலந்துகொள்ள இடம் இருக்கிறதென்று நோட்டமிட்டுக் கொண்டே அறைக்குப் போனவர், ஓவியக் காட்சிக் கூடத்தையும் திருக்குறள் நூல் கண்காட்சி அரங்கையும் பார்க்கவில்லையே என்று அமைச்சரைக் கூப்பிட்டு அடுத்தநாள் காலையில் பார்க்க வருவதாகச் சொல்லிவிட்டுப் படுக்கைக்குப் போய்விட்டார். அமைச்சருக்குத் தூக்கம் போனது; காட்சிக் கூடங்களுக்கு வந்து பார்த்தார். ஓவியக் காட்சியில் ஒரு படத்தைத் தேடிப் பார்த்துவிட்டுத் தயாராக இருக்கச் சொல்லிவிட்டுப் போனார்.

அந்தப் படம் கோட்டம் முதல் குமரி வரை சிலை திறப்பு விழா மலருக்குப் படம் வரையச் சொல்லி இருந்தார்கள். திருக்குறள் அதிகாரம் ஒவ்வொன்றுக்கும் ஒரு படம் வரையத் திட்டம். பெரிய அளவில் வரைந்து, கன்னியாகுமரியில் கண்காட்சி வைக்க அப்போதைய முதல்வரிடமிருந்து ஆணை வந்தது.

ஓவியக் கல்லூரி முதல்வரைக் கொண்டு தலைசிறந்த ஓவியர்கள் வரைந்த 133 படங்கள் தயாராகி, முத்தமிழ் அறிஞரின் பார்வைக்கு வந்தன. ஒவ்வொரு படமாகப் பார்த்துத் திருத்தம் சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது தமிழ் வளர்ச்சி இயக்குநராக இருந்த நானும் அங்கிருந்தேன்.



"திங்களைப் பாம்பு கொண்டற்று" என்பதும் 133 ஓவியங்களில் ஒன்றாக இருந்தது. முழு நிலாவைப் பாம்பு விழுங்குவதாகப் படம் வரையப் பட்டிருந்தது. முத்தமிழ் அறிஞருக்கு அந்தப் படத்தில் உடன்பாடு இல்லை. அறிவியலோடு முரண்படுவதாகக் கருதினார்.

வானத்து நிலாவைப் பூமிப் பாம்பு விழுங்கும் சந்திரக் கிரகணத்தை பின்வரும் பாடலில் திருவள்ளுவர் உவமையாகச் சொல்லியிருக்கிறார்.

"கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று." (1146)

சூரியன் பூமி நிலவு மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் வரும்போது, சூரிய ஒளி நிலவின் மீது படாமல், பூமி இடையில் வந்து மறைப்பதே அறிவியல் கூறும் சந்திர கிரகணம். ஆனால் பூமியில் உள்ள பாம்பு வானத்தில் உள்ள நிலாவை விழுங்குவதாகக் கூறி வருவது கதை.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர், 'திங்களைப் பாம்பு கொண்ட அலர் போல' என்று உரை சொல்லியிருக்கிறார். அதில் நிலாவைப் பாம்பு விழுங்குவது கதையா, நம்பிக்கையா என்ற வேறுபாடு தெரியவில்லை.

டாக்டர் மு.வ. அவர்கள், 'திங்களைப் பாம்பு கொண்ட செய்தி போல்' என்று உரை சொல்லியிருக்கிறார். நிலாவைப்பாம்பு விழுங்குவது கதை அல்லது நம்பிக்கை என்று சொல்லாமல் செய்தி என்று சொல்கிறார். செய்தி என்றால் உண்மையாகவும் இருக்கலாம். பொய்யாகவும் இருக்கலாம். ஆனால் செய்தி பொய் என்றால் பொய்ச் செய்திபோல் என்றிருக்க வேண்டும்.

பாவாணர் அவர்கள், "நிலாவைப் பாம்பு கௌவின செய்தி போல" என்று உரை கூறியுள்ளார்.மேலும் நிலாவைப் பாம்பு கவ்விய செய்தி உண்மையா இல்லையா என்பதற்குக் கூடுதல் விளக்கம் தந்திருக்கிறார்.

> "காதலர் சந்தித்துக் கொண்டது ஒரு நாள் தான் என்றாலும் சந்திரனைப் பாம்பு விழுங்குவதாகக் கற்பனையாகக் கூறப்படும் கிரகணம் என்னும் நிகழ்ச்சியைப் போல அந்தச் சந்திப்பு ஊர் முழுவதும் அலராகப் பரவியது" என்று உரை தந்திருக்கிறார்.


அதாவது, "கதிரவன் மறைவைக் கேது என்னும் செம்பாம்பு கௌவலாகவும் திங்கள் மறைவை இராகு என்னும் கரும்பாம்பு கௌவலாகவும் கருதியது பண்டைக் குருட்டு நம்பிக்கை" என்று கூறியுள்ளார்.

இப்படியாக, நிலாவைப் பாம்பு விழுங்குவது உண்மை என்றும் கதை என்றும் நம்பிக்கை என்றும் செய்தி என்றும் குருட்டு நம்பிக்கை என்றும் இந்தக் குறளுக்கு உரைகள் வந்துள்ளன. ஆனால் முத்தமிழ் அறிஞர் வேறுபட்டுச் சிந்தித்தார்.

ஆகவே, முழு நிலாவைப் பாம்பு விழுங்குவதாகப் படம் வரையப் பட்டிருந்ததில் அறிவியலுக்கும் அவருக்கும் உடன்பாடு இல்லை.

எனவே, நிலாவைப் பாம்பு விழுங்குவதில் உண்மை இல்லை. அது கற்பனை என்று கூறி, பாம்புக்குப் பதிலாக மேகம் நிலாவை மறைப்பது போலவும் நிலாவை மறைக்கும் அந்த மேகம், பாம்பு போன்ற அமைப்பில் வானத்தில் இருப்பது போலவும் படத்தை மாற்றச் சொன்னார். அப்படித்தான் அந்தக்






குறளுக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர்,

"காதலர் சந்தித்துக் கொண்டது ஒரு நாள் தான் என்றாலும் சந்திரனைப் பாம்பு விழுங்குவதாகக் கற்பனையாகக் கூறப்படும் கிரகணம் என்னும் நிகழ்ச்சியைப் போல அந்தச் சந்திப்பு ஊர் முழுவதும் அலராகப் பரவியது" என்று உரை தந்திருக்கிறார். கலைஞரின் கருத்துப்படி அமைந்த ஓவியம் அங்கு வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்ததும் அமைச்சர் நிம்மதி அடைந்தார்.

அடுத்திருந்த திருக்குறள் நூல் கண்காட்சிக்கு வந்து பார்த்தார். அங்கே திருக்குறள் ஓலைச்சுவடி முதலாக அச்சில் வந்த திருவள்ளுவர், திருக்குறள் தொடர்பான நூல்கள் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்துவிட்டு அமைச்சர் போனார். அவர் போன பின்புதான் தெரிய வந்தது முத்தமிழ் அறிஞரின் குறளோவியம் நூல் அங்கே இடம் பெறவில்லை. அப்போதே இரவு 10 மணி ஆகியிருந்தது.

நூலகம், கல்லூரி, பல்கலைக்கழகம் எல்லாம் காலையில்தான் திறப்பார்கள். காலையில் 9 மணிக்கு சபாநாயகர் கண்காட்சிகளைத் திறப்பதாக ஏற்பாடு. அதற்குள் கண்காட்சிக் கூடங்களைப் பார்க்க முதலமைச்சர் வந்து விடுவார் என்ன செய்வது என்று தெரியவில்லை. இரவோடு இரவாக ஏதாவது செய்ய வேண்டும். சென்னை என்றால் சமாளித்து விடலாம்.

நல்லவேளை, கன்னியாகுமரி, நாகர்கோயில் பகுதிகளில் உள்ள தமிழ் அறிஞர்கள் முகவரிப் பட்டியல் சிலை திறப்பு விழாவுக்காக முன்பே கையில் இருந்தது. நாகர்கோயிலுக்கு ஒருவர், கன்னியாகுமரிக்கு ஒருவர் என்று பிரிந்து போய், விடிய விடியத் தூங்கிக் கொண்டிருந்த தமிழ் அறிஞர்களை எழுப்பினோம். முயற்சிக்குப் பலன் கிடைத்தது. அதுவும் ஒன்றுக்கு இரண்டாகக் குறளோவியம் நூல்கள் கிடைத்தன. முதல்வரின் பார்வையில் விடுபட்டு விடக் கூடாது என்பதற்காக



இரண்டையும் காட்சிக் கூடத்தில் இரண்டு இடங்களில் காட்சிப்படுத்தியிருந்தோம்.

காலையில் 7 மணிக்கெல்லாம் முத்தமிழறிஞர் சட்டைக்குமேல் கைலியைக் கட்டிக் கொண்டு, இடது கையில் மடித்த கைக்குட்டையுடன் வந்து இறங்கினார்.

ஓவியக் கண்காட்சியில் அவர் திருத்தத்தோடு இருந்த படத்தைப் பார்த்து இளஞ்சிரிப்போடு அடுத்த கூடத்திற்கு வந்தார்.


ஓலைச்சுவடியில் இருந்த திருக்குறளைக் கையில் எடுத்துப் பார்த்தார். திருக்குறளின் மிகப் பழைய பதிப்புகளையும் அண்மையில் வந்திருக்கும் நூல்களையும் பார்த்தார். அவருடைய திருக்குறள் உரை நூலைப் பார்த்தார். அடுத்தது குறளோவியம் இருந்தது. எடுத்துப் பார்த்தார். அரிய நூல்களில் அங்கங்கே பார்வை கொஞ்சநேரம் நங்கூரம் இட்டது. காட்சிக் கூடத்தின் முடிவில் இருந்த இன்னொரு குறளோவியத்தைப் பார்த்ததும் கேட்டார்.

"அது என்ன குறளோவியம் மட்டும் இரண்டு இடங்களில்?"

உடன் இருந்தவர்கள் திகைத்துப் போயினர்.

"ஐயா! காட்சிக் கூடத்தில் முன் பகுதியில் இருப்பது குறளோவியத்தின் முதல் பதிப்புங்க. இது அண்மையில் வந்த பதிப்புங்க" என்றதும் எடுத்துப் பிரித்துப் பார்த்துக் கொண்டே நிமிர்ந்து பார்த்தார். கண்ணாடிக்கும் மேலே சற்றே புருவங்கள் உயர்ந்தன.

மேகத்திலிருந்து விடுபட்ட நிலாவைப் போல எங்கள் மனதில் மகிழ்ச்சி வெளிக்கிளம்பிற்று!



தமிழ்ச்சமூகம்: திராவிட இயக்கம் - திருக்குறள்

"தமிழ்நாட்டில் தமிழ் மக்கள் கூட்டத்தில் பேசப்படும் பேச்சுக்களில், ஆரியப் பாதுகாப்பு நூல்களான கீதையும், பாரதமும், இராமாயணமும் எடுத்துக்காட்டு நூல்களாக விளங்கினவேயன்றி, திருக்குறள் முதலிய தமிழ் நூல்கள் இடம்பெறவில்லை. எங்கு பார்த்தாலும் இராமாயணச் சொற்பொழிவுகள், பாரதச் சொற்பொழிவுகள், புராணப்பேச்சுக்கள், திருக்குறள் பேச்சோ, சிலப்பதிகாரப் பேச்சோ இல்லை. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல்கள் தமிழ்மக்கட்குத் தெரியாப்பொருள்களாயின. தொல்காப்பியம் என்ற ஒரு சிறந்த பழந்தமிழ் நூல் உண்டு என்பது தமிழருக்கு அறவே தெரியாது". (புலவர் குழந்தை, 1964: 10)



பேராசிரியர்
வீ. அரசு

தமிழில் உள்ள தொல் நூல்கள், தமிழ்ச்சமூக வரலாற்றில், ஒவ்வொரு காலச்சூழலிலும் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டன என்பது சுவையான உரையாடல் ஆகும். தொல் ஆக்கங்கள் என்பவை பின்னர் உருவாகும் நீதிநெறிமரபுகள், சமயமரபுகள், சீர்திருத்தமரபுகள் ஆகியவை சார்ந்து வாசிக்கப்படுவது தவிர்க்க இயலாத ஒரு செயல்பாடு.

இவ்வகையில் தொல்காப்பியம், செந்நெறி சார்ந்த பனுவல்கள், சிலப்பதிகாரம், திருக்குறள் முதலிய பிற குறித்த உரையாடல்கள் நிகழ்ந்துள்ளன. திருக்குறள் தொடர்பான உரையாடல்கள்தான் மிகுதியாக நடைபெற்றதையும் நடைபெறுவதையும் காணமுடிகிறது. காலந்தோறும் திருக்குறள் எதிர்கொள்ளப்பட்ட மரபைப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

திருக்குறள் எதிர்கொள்ளப்பட்ட வரலாற்றைப் பின்வரும் வகையில் தொகுத்துக்கொள்ள முடியும்.

- கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழ்ப்பிரதிகளில் திருக்குறள் எவ்வகையில் இடம்பெற்றுள்ளது என்பது குறித்த உரையாடல்.
- கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு முடிய உள்ள காலச்சூழலில் திருக்குறள் எதிர்கொள்ளப்பட்ட வரலாறு.

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் திருக்குறள் வாசிக்கப்பட்ட பல்வேறு பரிமாணங்கள்.
- இருபதாம் நூற்றாண்டில் திருக்குறள் உள்வாங்கப்பட்ட பல்வேறு முறைமைகள் மற்றும் கருத்து நிலைப்பாடுகள்.

தொல்பழம் பிரதிகளில் இடம்பெற்றுள்ள சொற்களை அடிப்படையாகக் கொண்டு, அப்பிரதிகள் குறித்த மதிப்பீட்டை நிகழ்த்த முடியும். நமது புலமை மரபில் 'சொல்லாய்வு' என்னும் நோக்கத்தில் சொல்லின் வேர்ப்பொருள், சொல் தொடர்பான இலக்கணக் குறிப்புக்கள், புழக்கத்தில் உள்ள சொற்பொருள் மாறுபடும் தன்மைகள், காலந்தோறும் சொற்பொருள் மாறிவரும் வரலாறுகள் ஆகியவை குறித்துப் பேசியுள்ளனர்.

ஆனால் அந்தந்தக் காலச்சூழலில் சொற்கள் பயன்படுத்தப்படும் சூழல் சார்ந்த சமூக வரலாற்றுப் பதிவுகள் விரிந்த அளவில் நிகழ்ந்ததாகக் கூறமுடியாது. திருக்குறளில் 'தமிழ்' எனும் சொல் இடம்பெறவில்லை. ஆனால் 'உலகம்', 'உலகு' எனும் சொற்கள் ஐம்பத்தேழு முறையும் 'ஊர்' எனும் சொல் பதினாறு முறையும் 'நாடு' எனும் சொல் பதிமூன்று முறையும் இடம் பெற்றிருப்பதைக் காண்கிறோம். இதன் மூலம் இச்சொற்கள் சார்ந்த பொருண்மை என்பது, பிற்காலத்தில் உருவான 'சனநாயகம்' அல்லது 'குடியரசு' எனும் பண்பின் தொடக்ககாலப் பொருண்மையை முன்னெடுத்த நூலாகக் கருதமுடியும்.

இவ்வகையான பல்வேறு கூறுகளை 'குறள்' எனும் ஆக்கம் தம்முள் கொண்டிருப்பதால், அப்பிரதி பொதுமைப் பண்புகளைக் கொண்டிருப்பதாகப் பலராலும் உள்வாங்கப்படுகிறது. பல்வேறு நீதிமுறை மரபினர், பல்வேறு சமய மரபினர், பல்வேறு கருத்துநிலைச் சார்பினர் ஆகிய அனைவரும் இந்நூலுக்குச் சொந்தம் கொண்டாடுவது, இந்நூலில் அமைந்துள்ள பொருண்மையின் தனித்தன்மையாகக் கருதமுடியும். இம்மரபு தமிழ்ச்சமூக வரலாறு முழுவதும் தொடர்ந்து செயல்பட்டு வந்திருப்பது திருக்குறளுக்கு மட்டும்தான் என்று கருதமுடிகிறது.

கி.பி ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் காப்பியங்கள் அனைத்திலும் திருக்குறள் வரிகள் இடம்பெற்றிருப்பதைக் காண்கிறோம். காப்பியங்களையும் திருக்குறளையும் ஒப்பிட்டுப் பல்வேறு ஆய்வுகள் நிகழ்ந்த அதேவேளையில், நேரடியான திருக்குறள் ஆட்சி குறித்தும் பல்வேறு தொகுப்புகள் வெளிவந்துள்ளன.

திருக்குறள் மரபில் உருவான அறநூல்கள் மற்றும் நீதிநூல்களிலும் நேரடியான திருக்குறள் ஆட்சியைக் காணமுடிகிறது. பக்திப் பனுவல்களிலும் திருக்குறள் எடுத்தாளப்பட்டிருக்கிறது. இவ்வகையில் தமிழ்ப்பிரதிகளில் பெரிதும் எடுத்தாளப்பட்ட நூலாகத் திருக்குறள் அமைகிறது. இதுவே இப்பிரதியின் தனித்தன்மையாகும்.

தமிழ்ப் புலமைத்தளத்தில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் புதிய போக்குகள் உருப்பெற்றன. இத்தன்மை சில நூற்றாண்டுகள் நீடித்தன. பக்திப் பனுவல்கள் தொகுக்கப்படுதல், அப்பனுவல்கள் சார்ந்து சாத்திரங்கள் உருவாக்குதல், அதன் தொடர்ச்சியாக ஆகமங்கள் உருவாக்கம் ஆகியவை இலக்கியங்களில்தான் உருவாயின. வீரசோழியம், நன்னூல் உள்ளிட்ட பல்வேறு இலக்கண நூல்கள் உருவாக்கப்பட்டன.

பழம்பிரதிகளுக்கு உரை எழுதும் மரபு உருவானது. தமிழ்ச்சமூகத்தின் குறிப்பிடத்தக்கப் புலமையாளர்களாக உரையாசிரியர்கள் செயல்பட்டனர். பிரபந்த இலக்கிய வடிவங்கள் உருவாயின. பிரம்மாண்டமான கோயில்கள் கட்டியெழுப்பப்பட்டன; கோயில் பண்பாடு வடிவம் கொண்டது. அன்றைய சூழலில் பேரரசர்களாகப் பிற்காலச்சோழர்கள்



செயல்பட்டனர். பாலி, பிராகிருதம், சமசுகிருதம் உள்ளிட்ட வடமொழிகள், தெலுங்கு போன்ற தென்னாட்டு மொழிகள் ஆகியவற்றோடு தமிழுக்கு மிக நெருக்கமான உறவு உருப்பெற்றது.

இந்தச்சூழலில் திருக்குறள் பெரிதும் பேணப்பட்டது. இதனை வெளிப்படுத்தும் வகையில் பத்துக்கும் மேற்பட்டோர் திருக்குறளுக்கு உரை எழுதினர். திருவள்ளுவ மாலை எனும் தொகுப்பு உருவாக்கப்பட்டது. திருவள்ளுவர் நூலுக்கு நுண்பொருள் காணும் மரபு உருவாயின. இச்செயல்கள் திருக்குறள் வாசிப்பு மிக உச்ச நிலையில் இருந்ததைக் காட்டுகின்றன.

‘தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பருதி பரிமேலழகர் - திருமலையார்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர் நூற்
கெல்லையுரை செய்தா ரிவர்’

என்ற தனிச்செய்யுளும், சுமார் ஐம்பத்து மூன்று பேர்களால் எழுதப்பட்ட திருவள்ளுவமாலையும் இந்நூலுக்கு சமூகத்தில் இருந்த செல்வாக்கைக் காட்டுகிறது.

‘சமயக் கணக்கர் மதிவழி கூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவர்’

என்று கல்லாடமும்,

‘தேவர் குறளும் திருநாண் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்’

என்று ‘நல்வழி’ என்ற நீதி நூலும் திருக்குறளுக்கு அன்றைய சூழலில் இருந்த செல்வாக்கைப் புலப்படுத்துவதாகக் கருதலாம். இந்தச் சூழலில் பொ.ஆ.பதிமூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் பரிமேலழகர். இவர் திருக்குறளுக்கு எழுதிய உரைதான் மிகச்சிறந்த உரை என்று பலதரப்பிலும் அங்கீகரிக்கப்பட்டது. இவர் காலத்திலும் பின்பும் சைவ மற்றும் வைணவ வைதீக சமயங்கள், பிற தமிழ் நூல்கள் மீது காட்டாத ஈடுபாட்டைத் திருக்குறள் மீது காட்டியிருப்பதைக் காண்கிறோம். இந்நூலை வைதீகச் சமயச் சார்பு



நூலாகவே அடையாளப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர்,

'பனுவல்கதை காவ்ய மாமென ணெண்கலை
திருவள்ளுவ தேவர் வாய்மை யென்கிற
பழமொழியை யோதி யேயுணர்ந்து'

- என்று பாராட்டுகிறார். 'பத்துப்பாட்டு', 'எட்டுத்தொகை', 'சிலப்பதிகாரம்' ஆகிய நூல்களைப் பயில வேண்டாம் என்று கூறிய பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த 'இலக்கணக்கொத்தை' எழுதிய சுவாமிநாத தேசிகர், திருக்குறளைப் பாராட்டிச் சொல்லியிருப்பதைக் காண்கிறோம்.

'பல்கால் பழகினுந் தெரியா வுளவேல்
தொல்காப்பி யந்திருவள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்...

என்பது அவரது பதிவாகும். இவ்வகையில் சைவ நூல்களே பெரும் செல்வாக்கோடு இருந்த காலங்களில்கூடத் திருக்குறள் பெரிதும் போற்றிப் பாராட்டப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இவ்வகையான அணுகுமுறை, 'குறள் வெண்பா' வடிவத்தில் அமைந்திருப்பதும், நேரடியான சமயக்கருத்து நிலைகள் வெளிப்படாமல் இருப்பதும் காரணமாகக் கருத முடியும். தாயுமானவரின் (17.06.1744) 'பராபரக்கண்ணி' எனும் அவரது சிறந்த பாடல்களாகக் கருதப்படுவனவற்றில் குறளின் தாக்கம் இடம்பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

பொ.ஆ. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன் திருக்குறளை பயன்படுத்துவது என்ற நிலை இருந்தது. ஆனால் பொ.ஆ. 10-18ஆம் நூற்றாண்டுகளில் திருக்குறள் குறித்த பல பரிமாணங்களில் பலரும் பதிவு செய்திருப்பதைக் காண்கிறோம். சங்கப்பாடல்கள் வாசிப்பு, சிலப்பதிகார வாசிப்பு, தொல்காப்பிய வாசிப்பு ஆகியவை மிகக்குறைவாக இருந்த காலத்தில், வைணவ மரபு மிகுந்த செல்வாக்கோடு இருந்த காலத்தில் திருக்குறள் மிக விரிவாகவே வாசிக்கப்பட்டது என்று அறிகிறோம். இதன் குறியீடாகவே பரிமேலழகர் அமைகிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில், முன்னிருந்த செல்வாக்கு தொடர்ந்தது. இந்நூற்றாண்டில் திருக்குறளுக்கு ஏழு பதிப்புகள் வெளிவந்தன. இதில் ஐந்து பதிப்புகள் பரிமேலழகர் உரையுடன் கூடிய பதிப்புகள். இதன்மூலம் பரிமேலழகர் உரையின் வாசிப்புத் தொடர்ச்சியைக் காணமுடிகிறது.

திருத்தணி சரவணப்பெருமாள் அய்யர் (1838), ம.ரா. இராமாநுச கவிராயர் (1840), களத்தூர் வேதகிரி முதலியார் (1850), ஆறுமுக நாவலர் (1861) ஆகியோர் பரிமேலழகர் உரையுடன் கூடிய திருக்குறளைப் பதிப்பித்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் எழுதிய 'மநுநெறித் திருநூல்' மற்றும் இராமலிங்க அடிகள் எழுதிய 'மநுமுறை கண்ட வாசகம்' ஆகிய ஆக்கங்களில் திருக்குறளின் தாக்கம் இருப்பதைக் காண்கிறோம்.

குறள் வெண்பா வடிவத்தில் எழுதிய தண்டபாணி சுவாமிகள், திருக்குறள் கருத்துக்களை தன் கருத்து வடிவமாக வெளிப்படுத்தியிருப்பதைக் காணலாம்.


'புறங்கூறல் கேட்டுவப்பார் போய்த்தமக்கும் அந்தத்
திறங்கூறல் ஓராச்சிலர்' (மநுநெறி. 15:5)

அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்
புறங்கூறா னென்றல் இனிது. (குறள். 181)

வைதீக சமய மரபினர் திருக்குறளைப் போற்றிப் பாராட்டிய அதேகாலத்தில் காலனிய மரபைச்சேர்ந்த ஆட்சியாளர்கள், பாதிரியார்கள் ஆகியோர் திருக்குறளை மொழியாக்கம் செய்யும் பணியில், பத்தொன்பதாம் நூற்றாண்டில் முனைப்புக் காட்டினர். வைதீக மரபு சார்ந்த கருத்துமுறைகளுக்கு எதிர்நிலையில் திருக்குறளை அணுகும் பார்வை காலனியப் புலமையாளர்களிடம் இருந்ததைக் காணலாம். சீவகசிந்தாமணி, திருக்குறள் ஆகியவை அவைதீக சமய நூல்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, காலனிய மற்றும் கிருத்துவ சமயப் பரப்புரையாளர்கள் செயல்பட்டனர்.

வைதீகச் சார்பு நூலாக ஒருபுறமும் வைதீக மறுப்பு நூலாக இன்னொரு நிலையிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் திருக்குறள் வாசிக்கப்பட்ட வரலாறு சுவையானது. இந்த நூற்றாண்டில் செயல்பட்ட திருக்குறள் மொழியாக்கங்களை மேற்குறித்த வாசிப்பு மரபோடு இணைத்துப்பார்க்கும் தேவையுண்டு. திருக்குறள் வாசிப்பு குறித்த காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை அவர்களின் கீழ்க்காணும் பதிவு, திருக்குறள் வாசிப்புப் போக்குகள் குறித்ததாக அமைகிறது.

'வேதநெறி தானென்பர் வேத வாணர்
விறன் மிகுந்த திருச்சைவ ராகமத்தின்
போதநெறி தானென்பர் அருகர் புத்தர்
பூம்பிடக நூலென்பர் பொழுது மோயா
தோதுநெறி தானென்பர் விவிலிய நூலார்
உயரொழுக்க விதியென்பர் உலகவாணர்
யாதுநெறி தானெனினு மஃதே யாக
இசைத்தனரால் வள்ளுவம் முப்பானூலே.'



இவ்வகையில் இருபதாம் நூற்றாண்டில், திருக்குறள் வாசிப்பு சமூக இயங்குதளத்தில் புதிய பரிமாணத்தோடு செயல்படத் தொடங்கியது. குறிப்பாக, திராவிடக் கருத்தியல் சார்ந்த மரபினர், இதற்குமுன் இருந்த வைதீக மரபு சார்ந்த கருத்துக்களை மறுக்கும் நோக்கில் திருக்குறளை வாசித்தனர். திராவிடக்கருத்துநிலை சார்புநிலையினரும் தமிழ்த்தேசியப் பார்வையுடையோரும் பரிமேலழகரின் உரையை ஏற்றுக்கொள்ளாது மாற்று உரை எழுத முற்பட்டனர்.

காங்கிரஸ் அமைப்பு சார்ந்து, இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவரும், 'தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவருக்கோர் குணமுண்டு' என்று பாடியவருமான நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை, பரிமேலழகர் கருத்துக்களை மறுத்து 'திருவள்ளுவர் திடுக்கிடுவார்' எனும் நூலை 1954 இல் எழுதினார்.

அந்நூலில் அவர் பதிவு செய்யும் கருத்து வருமாறு:

"பரிமேலழகருக்கு முன்னால் ஒன்பது பேர் திருக்குறளுக்கு உரை எழுதியிருந்தார்கள். அவை எல்லாவற்றினும் சிறந்ததாகப் பரிமேலழகர் உரை ஏற்றுக்கொள்ளப்பட்டதால் மற்ற உரைகளெல்லாம் வழக்கிழந்து மறைந்துவிட்டன. அதனால் கடந்த அறுநூறு ஆண்டுகளாகத் தமிழ்மக்கள் பரிமேலழகர் உரையைப் பின்பற்றித்தான் திருக்குறளை அனுபவித்து வருகிறார்கள். ஆனால் போற்றற்குரிய உரையாசிரியரான பரிமேலழகர் பலவிடங்களில் திருவள்ளுவருடைய கருத்துக்குப் பொருந்தாத உரைகளையும் சில இடங்களில் திருவள்ளுவர் கருத்துக்கு முற்றிலும் விரோதமான உரைகளையும் செய்துவிட்டார்." (மூன்றாம் பதிப்பு.1963:7)

தேசிய இயக்கக் கருத்துமரபில் செயல்பட்ட கவிஞரே பரிமேலழகர் குறித்து இவ்வகையில் பதிவு செய்திருக்கும்போது திராவிட இயக்க மரபினர் பரிமேலழகரை எப்படி எதிர்கொள்வர் என்பது குறித்த உரையாடலை நாம் புரிந்துகொள்ள முடியும். இவை குறித்த செய்திகளைப் பின்வரும் வகையில் வகைப்படுத்தித் தொகுத்துக்கொள்ளலாம்.

திராவிட இயக்க மரபில் வெளிவந்தவை எனும் கண்ணோட்டத்தில் பதினெட்டுபேர் திருக்குறளுக்கு எழுதிய உரைகளைத் தெரிவு செய்து கொண்டிருக்கும் முறையில் திருக்குறளை, தங்கள் கருத்து மரபுக்காக வலிந்து உரை எழுதியுள்ள பாங்கைப் புரிந்து கொள்ளும் முறைமை ஈ.வெ.ரா பெரியார் திருக்குறளுக்கு கொடுத்த இடம் மற்றும் செயல்பாடுகள்.

சுருக்கம் கருதி மேற்குறித்த மூன்று கருத்துக்களை மட்டும் கவனப்படுத்த விரும்புகிறேன். காலனிய வருகை, பல்வேறு புதிய விளைவுகளுக்கு மூல காரணமாக அமைந்தது. சாதி, தேசிய இனம், மொழி ஆகிய பிற பண்பாட்டுக்கூறுகள் தொடர்பான புதிய உரையாடல்களைக் காலனியம் உருவாக்கித் தந்தது.

இதன் மூலம் தமிழ்த்தேசியம், இந்திய தேசியம், சர்வதேசியம் எனும் கருத்துநிலைகள் உரையாடலுக்கு வந்தன. ஒவ்வொரு கருத்து நிலை சார்ந்தும், தனித்தனியான 'தேசியம் குறித்த நிலைப்பாடுகள் உருவாயின. கால்டுவெல் காலத்துக்குப்பின் திராவிடக்கருத்தியல் புதிய முறைகளில் அணுகும் சூழல் உருவானது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காலனிய மரபு சார்ந்த பார்வை எனும் தன்மைகள் உருப்பெற்றன. இத்தன்மைகள் இலக்கியம், கலை, பண்பாடு என அனைத்து நிலைகளிலும் வடிவம் பெறத் தொடங்கியது.

திருக்குறள் எனும் இலக்கியம் சார்ந்து, திராவிட இயக்கப் பார்வைகள் என்பதை திராவிட மரபு என்று வரையறை செய்யலாம். இம்மரபிற்குள் பல்வேறு உட்கூறுகள் செயல்பட்டன. மொழிசார்ந்த தனித்தமிழ் இயக்கம், கலை சார்ந்த தமிழிசை இயக்கம், சமூக சீர்திருத்தம் மற்றும் விடுதலை சார்ந்த சுயமரியாதை இயக்கம், அரசியல் அதிகாரம் சார்ந்த நீதிக்கட்சி, மொழி ஆதிக்கத்திற்கு எதிரான இந்தி மற்றும் சமசுகிருத ஆதிக்க எதிர்ப்பு இயக்கம், தேசிய இன விடுதலை சார்ந்த தமிழ்த்தேசிய இயக்கம், சைவ மறுமலர்ச்சி இயக்கம் எனப் பல பரிமாணங்களில் திராவிட இயக்க மரபு செயல்பட்டது.

திராவிட இயக்க மரபு சார்ந்த திருக்குறள் உரையாசிரியர்கள் மேற்குறித்த பல்வேறு நுண்அரசியல் வேறுபாடுகளைக் கொண்டவர்கள். அதேநேரத்தில் திருக்குறள் எனும் பிரதிமீது ஈடுபாடு உடையவர்கள். தங்களுடைய நுண் அரசியல் வேறுபாடுகளைச் சமரசம் செய்துகொள்ளாமல், அதே நேரத்தில் 'திராவிட இயக்கம்' எனும் பொதுநிலையில்


தங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள்.

ஓரிறைக் கோட்பாடு, பௌத்த மரபு, தனித்தமிழ் மரபு, நாத்திக மரபு ஆகிய கருத்துநிலைகள், ஒரு புள்ளியில் தமக்குள் இணக்கம் கொண்டுள்ள பாங்கை அறிவதற்குப் இந்த உரைகள் உதவுகின்றன. இவ்வுரைகள் அனைத்தும் பரிமேலழகர் உரைக்கு எதிர் நிலையாக எழுதப்பட்டவை. பரிமேலழகர் முன்னெடுத்த வைதீக மரபு என்பது திராவிட இயக்க மரபுக்கு முரணானது எனும் கருத்து நிலையை பரிமேலழகர் திராவிட இயக்கம் என்று கட்டமைத்துள்ள முறை தர்க்கப் பாங்கிலானது.

திராவிட இயக்கங்களின் கருத்துப் பரப்புரை சார்ந்த செயல்பாடுகள் என்பவை தமக்குத் தேவையானவற்றை இலக்கியத்தில் கண்டெடுத்து அவற்றைப் பரப்புரை செய்கின்றன. அதனை நாம் புரிந்துகொள்ளவேண்டும். 'பெரியார் தமிழுக்கு எதிரானவர்', 'இலக்கியத்திற்கு எதிரானவர்' எனும் குரல்கள் பல தருணங்களில், பல காரணங்களுக்காக எழுப்பப்படுவதைக் காண்கிறோம். பெரியார் திருக்குறளை ஓர் இயக்கச் செயல்பாட்டிற்கான வழிகாட்டுதல் நூல் என மதிப்பிட்டுள்ளார். இந்நூலுக்காக மாநாடுகள் நடத்தினார். திருக்குறளைப் பரப்புவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டார். இவ்வகையில் திராவிட இயக்க மரபு திருக்குறளை எதிர்கொண்ட மரபை அறிந்து கொள்ள முடிகிறது.

சான்றாதார நூல்கள்:

- *1854. மநுமுறை கண்ட வாசகம், இராமலிங்க அடிகள், மறுபதிப்பு: ப.சரவணன், சந்தியா பதிப்பகம்.*
- *பதிப்பகம், 2005, சென்னை-83.*
- *1864. ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் இலக்கணக்கொத்து மூலமுரையும். யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரவர்களால்... வித்தியானுபாலன யந்திர சாலையில் அச்சில் பதிப்பிக்கப்பட்டன. நான்காம் பதிப்பு, 1924.*
- *1937. தாயுமான சுவாமி பாடல்கள் - மூலமும் உரையும், பதிப்பு நா.கதிரைவேற்பிள்ளை; மறுபதிப்பு 2010, சந்தியா பதிப்பகம், சென்னை-83.*
- *1952. திருக்குறளும் பரிமேலழகரும், புலவர் குழந்தை, இளங்கோ புத்தகசாலை, புத்தக வியாபாரிகள், ஈரோடு, இரண்டாம் பதிப்பு, 1964.*
- *1954. திருவள்ளுவர் திடுக்கிடுவார், நாமக்கல் கவிஞர், இன்ப நிலையம், மூன்றாம் பதிப்பு, 1963, சென்னை-4.*
- *1959. திருக்குறள் வழங்கும் செய்தி, மூலம் அ.சக்கரவர்த்தி நயினார், தமிழாக்கம் பகவதி ஜெயராமன், பாரிநிலையம், முதற்பதிப்பு, சென்னை.*
- *1965. திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் மூலமும் பரிமேலழகருரையும். பதிப்பு வை.மு.கோபாலக்கிருஷ்ணமாச்சாரியார்; வை.மு.கோபாலக்கிருஷ்ண மாச்சாரியார் கம்பெனி, சென்னை-5, முதல் பதிப்பு.*
- *1970. தமிழ் இலக்கிய வரலாறு, பதிமூன்றாம் நூற்றாண்டு, மு.அருணாசலம், திருத்தப்பட்ட பதிப்பு, 2005, தி பார்க்கர். சென்னை-14.*
- *1997. திருக்குறளும் திராவிடர் இயக்கமும். க.திருநாவுக்கரசு, நக்கீரன் பதிப்பகம், சென்னை-18, முதல் பதிப்பு.*
- *2000. திருக்குறள் நூல்கள். தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை, முதல் பதிப்பு.*
- *2004. திருக்குறளும் மனுநெறித் திருநூலும், அ.மரிய அலெக்சாந்தர் இருதயராசு, தி.பார்க்கர், சென்னை-14, முதற்பதிப்பு.*
- *2009. திருக்குறள் பன்முக வாசிப்பு; பதிப்பு வெ.பிரகாஷ், மாற்று, சென்னை.*
- *2019. திருக்குறளும் திராவிட இயக்கமும், பா. குப்புசாமி, பாரதி புத்தகாலயம், சென்னை.*



வானம் உள்ள மட்டும் மண்ணில் வாழப் போகும் தலைவர் கலைஞர்



பேராசிரியர்
சாலமன் பாப்பையா

அது நான் நடைப்பயிற்சியும் செய்து கொண்டிருந்த காலம்; அப்போது ஐம்பத்து ஐந்து வயதிற்கும் மேற்பட்ட நண்பர் ஒருவர் வந்து, 'ஐயா, எனக்குப் படிக்கவே நேரமில்லை; வேலைப் பளு; அலைகிறேன்; அதனால் உங்களை சிரமப்படுத்துவதாக இருந்தால் மன்னிச்சுக்குங்க; திருக்குறளின் உயிர் என்று நீங்க நினைக்கிற இரண்டே அதிகாரங்களை மட்டும் எனக்குச் சொல்லுங்க; எங்க வீட்டுல திருக்குறள் இருக்கு; புரட்டிப் பாக்கத்தான் நேரமில்ல' என்றார்.

அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது; நானும் சிறிது எண்ணினேன். 'என் தெய்வம், உன் தெய்வம் என்று தொன்மக் கதைகளில் சிக்கி புராணங் கேட்டுப், பொய்மையை மணக்கும் மனத்தைப் பெற்று, அலைவதை விட மெய்ப் பொருள் காணும் நோக்கில் வாழ்வது மேல் என்ற எண்ணத்தில்' கடவுள் வாழ்த்து என்ற தலைப்பில் திருவடிகளை எண்ணித் தெளிவு பெறும் அதிகாரம் ஒன்று;

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

'மனத்தளவில் குற்றம் இல்லாதவனாய் ஆகுங்கள்; அறம் என்பது அவ்வளவே. பிற வார்த்தை நடிப்பும், வாழ்க்கை வேடங்களும். பிறர் அறியச் செய்யும் ஆடம்பரங்களே' (34) என்றெல்லாம் வரும்,

அறன் வலியுறுத்தல் (4) என்னும் அதிகாரம் மற்றொன்று; இந்த இரண்டு அதிகாரங்களில் இருபது குறள்கள் தேறும்; படியுங்கள்; உங்களை அறியாமலேயே திருக்குறள் முழுவதையும் மனத்தாலும் அறிவாலும் படிக்கும் ஆர்வம் தானாக வந்துவிடும் என்றேன்.

பிறிதொரு நாள் என் நடைப்பயிற்சிக்கு இடையே கொஞ்சம் இளைப்பாற எண்ணி பழகிப் போன பலகைக் கல்லில் அமர்ந்திருந்தேன். கூசிக் கூசி இளைஞன் ஒருவன் மெல்ல என் அருகில் வந்தான்; நின்றான்; நெளிந்தான்; 'என்ன தம்பி வா, உட்காரு' என்று அவனை நான் அழைத்தேன். 'இல்லை.... இல்லை' என்று இழுத்தான். 'என்னய்யா, என்ன சொல்ல நினைக்குறே; சொல்லு சும்மா, கூச்சப்படாத' என்றேன்.

'ஐயா... வந்து... வந்து... காதலைப் பற்றித் திருவள்ளுவர் என்ன மாச்சும் சொல்றாறானு கேட்டான்; கேட்டான் என்பதை விட உளறினான் என்பது சரியாக இருக்கும். மறுபடியும் நெளிந்தான்; காதல் என்னும் குற்றாலச் சாரலில் குதூகலிப்பவனாய் அவன் முகத்தில் அப்படியொரு வெளிச்சம்! நாணம்!

'என்னப்பா! சிக்கிக் கிட்டயா என்றேன்; இல்லை வந்து மீண்டும் உளறல் தான்... பரவாயில்லை இந்த வயதில் எல்லோரையும் ஆட்டிப் படைக்கும் பனிக்குளிர்தானே காதல், அதனால் என்ன? வள்ளுவர் என்ன சொல்றாருன்னு தெரிஞ்சிகிடனும்னு கேட்கிற; சொல்றேன் கேளு' என்றேன். பையன் மெதுவாக என் அருகில் அமர்ந்தான், எனக்கும் என் பருவத்து நினைவுகள் சிறகடித்து என் சிந்தைக்குள் முட்டி மோதின.

'தம்பி! நீ அந்தப் பெண்ணைப் பார்த்ததும் ஏதோ ஒரு பரவச விமானத்தில் பயணம் செய்து கொண்டு இருந்திருப்ப. அந்த நேரம் அந்த பெண் உன்னைப் பார்த்திருக்கும்; அவ்வளவு தான்; ஏதோ ஒரு மாய சக்தி ஆயுதங்களோடும் தன் ஆட்களோடும் வந்து உன்னை ஒரே அடியாய் அடிச்சு வீழ்த்தியது போல் இருந்திருக்கும்; திரும்பவும் பார்க்க முடியாமல் திகைச்சிருப்பியே'

'நோக்கினாள் நோக்கு எதிர்நோக்குதல், தாக்குஅணங்கு தானைக்கொண்டு அன்னது உடைத்து' (1082)

(அவள் அழகு அவனை வருத்துவது - தாக்கு அணங்கு உறுத்தல் - 1081)

அப்போது அந்த இளைஞன், 'அப்படித்தான்யா சிக்கிக்கிட்டேன்; ஆனால் அவள் மனசுல, நான் இருக்கனானுதான் தெரியல; அதுதான்யா நிமிடத்துக்கு நிமிடம் என்னைக் கொல்லுது' என்றான்.

'அப்படியா, நீ அந்தப் பெண்ணைப் பார்க்கும் போது அது உன்னை யாரோ எவரோ பகைவனைப் பார்க்கிற மாதிரி பார்த்திச்சா; அப்படினா கவலைப்படாதே;

> யூதன் தான் மட்டுமே கடவுளால் 'தெரிந்து கொள்ளப்பட்டவன்' என்றான்; கிரேக்கன் தன்னை மேல் மகன் என்று கூறிப் பிறரைக் காட்டுமிராண்டி, அடிமை என்றான்; ரோமன் தன்னைப் பெட்ரீசியன் என்று கூறித் தருகித் தலை நிமிர்ந்து பிறரை இழிவாகக் கூறினான். வேதம் படித்த இந்தியப் படிப்பாளிகள் தாங்கள் பிரம்மன் முகத்தில் பிறந்தவர்கள் என்றும் மற்றவர்கள் தமக்குத் தொண்டு செய்யப் பிறந்த தொழும்பர் என்றும் மேட்டிமை கொண்டிருந்தனர்.

அது மனசுல நீ நிச்சயமாய் இருக்குற'

'ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல் காதலார் கண்ணே உள.'

(குறிப்பறிதல் 1099), இது அவள் மனதினை அறிந்து கொள்ளும் வழி என்றேன்; ''நன்றி ஐயா, நன்றி ஐயா, என்று சொல்லிவிட்டு உற்சாகமாக மரம் தாவும் மந்தி வேகத்தில் இளைஞன் புறப்பட்டுப் போய் விட்டான்.

இரண்டு மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. ஒருநாள் நான், வழக்கமாக இளைப்பாறும் கல்லில் யாரோ ஒருவர் அமர்ந்திருப்பது தொலைவில் தெரிந்தது. நான் நெருங்கிய உடனே அவர், அவன் எழுந்து நின்றான்; பார்த்தால் நான் முன்பு கண்ட இளைஞன் தான்! முகம் வாடி இருந்தது; மனதினுள் ஏதோ ஓர் அச்சம் உடலை இளைக்க வைத்திருந்தது.

'என்ன தம்பி! என்ன இப்படி இளைச்சுப் போயி இருக்கீங்க; வேலையில எதுவும் பாதிப்பா' என்றேன்.



'அதெல்லாம் ஒன்னுமில்லை ஐயா, என்று நிறுத்தினான்; பின்பு மெல்ல அந்தப் பெண்ணு என் மேலே உசிராய்த்தான் இருக்கு; ஆனால் எங்கள் தொடர்பு அவுங்க அம்மாவுக்குத் தெரிஞ்சு போச்சுனு சொல்லுது; அவுங்க தெருவுக்குள்ள நான் போனால் சின்னப் பிள்ளைகள் கூட என்னைப் பார்த்துப் பார்த்து ஏதேதோ பேசுதுக; அதுதான் ரொம்ப ரொம்பப் பயமாய் இருக்குது' என்று சொன்ன இளைஞன் உள்ளபடியே நடுங்கவும் செய்தான். அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது...

இதுக்காகவா இப்படி பயப்படுற... பயப்படாத; 'இனிமேல் தான் உங்க காதல் கெட்டியா இறுகிடும்; எப்படின்னு கேக்கிறயா

'ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும் இந் நோய்'

அதாவது தெருவார் பேசும் பேச்சே உரமாக, தாயின் தடைச் சொல் நீராக (உங்கள் காதல் பயிர்) வளரும்' வளர்ந்து கொண்டே இருக்கும் என்று நம் அய்யன் திருவள்ளுவர் கூறுகிறார். (1147 அவர் அறிவுறுத்தல்) என்று சொன்னேன்; நான் சொன்ன அளவில் அந்த இளைஞனின் வாயிலும், முகத்திலும் அப்படி ஒரு மகிழ்ச்சி. ஓ! காதல் தான் எப்படி எல்லாம் மனித மனத்தில் கலவரத்தை, கலகலப்பை விளைவித்துவிடுகிறது!. அவன் நன்றியோடு என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்... இதுதான் சமயம் என்று அந்த இளைஞனின் இதயத்தில் திருவள்ளுவரின் பெருமையை, திருக்குறளின் மேன்மையை மெல்ல விதைக்கத் தொடங்கினேன்.

'தம்பி! திருக்குறளை நாம் ஏன் படிக்கணும், உள் வாங்கனும், பின்பற்றனும்னு தெரியுதா! ஒரு சமயம் தமிழ்நாட்டில் புலவர்கள் காதலைப் பாடிப் படைப்பிலக்கியம் செய்து கொண்டிருந்தார்கள்; மற்றொரு புறம் மன்னர்களைப் பாடி மனங்களிக்கப் பரிசில் பெற அலைந்தனர். ஆனால் அந்தக் காலத்தில் சராசரி மனிதனை- அவனது துயரத்தை - அதிலிருந்து அவனை விடுவிக்கும் வழி பற்றி



எண்ணியே இலக்கியம் படைத்தவர் தான் திருவள்ளுவர்.

இதுதான் எங்கள் சமயம் என்று தொன்மங்களில் சுகத்தையும் அறிவையும் மக்கள் தொலைத்துக் கொண்டிருந்த காலத்தில் 'மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளின் வழியே பிறக்கும் தீய ஆசைகளை அழிப்பவன் வழியே பின்பற்ற வேண்டிய வழி' என்பார் போல

'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்' (6)

என்று கூறித் தன்னை தன் மனத்தை, கட்டுப் படுத்துவதே தமிழ்ச் சமயம் என்று கூறுகிறார்.

யூதன் தான் மட்டுமே கடவுளால் 'தெரிந்து கொள்ளப்பட்டவன்' என்றான்; கிரேக்கன் தன்னை மேல் மகன் என்று கூறிப் பிறரைக் காட்டுமிராண்டி, அடிமை என்றான்; ரோமன் தன்னைப் பெட்ரீசியன் என்று கூறித் தருகித் தலை நிமிர்ந்து பிறரை இழிவாகக் கூறினான். வேதம் படித்த இந்தியப் படிப்பாளிகள் தாங்கள் பிரம்மன் முகத்தில் பிறந்தவர்கள் என்றும் மற்றவர்கள் தமக்குத் தொண்டு செய்யப் பிறந்த தொழும்பர் என்றும் மேட்டிமை கொண்டிருந்தனர். திருவள்ளுவரோ

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்' (972)


'எல்லா மக்களும் பிறப்பால் சமமே; அவரவர் செயல்
வேறுபாடுகளால் மட்டுமே பெருமை வரும்'

என்று கூறி 'எல்லோரும் ஓர் நிறை; எல்லோரும் ஓர் விலை' என்கிறார். இவற்றால் தான் நூற்றாண்டு கண்ட தனித் தலைவர் கலைஞர் அவர்கள் ஈராயிரம் ஆண்டுகளாக வாழும் திருவள்ளுவருக்குத் தேடித் தேடி ஓர் உருவப் படத்தைக் கொண்டு வந்தார்.

- அதைத் தமிழர்களின் சட்ட மன்றத்தில் சரியான இடத்தில் வைக்கப் பெருமுயற்சி எடுத்தார்.
- திருக்குறளில் தேர்ந்து அழகிய படங்களோடு கதை வடிவில் குறளை விளக்கினார்.
- இதுதான் குறளுக்குப் பொருளாக இருக்கும் என்று தான் எண்ணுவதை உரையாக வடித்து உலகிற்கு வழங்கினார்.



- உழவர் திருநாளுக்கு முதல் நாளை திருவள்ளுவர் திருநாள் என்று அறிவித்து அந்நாள்தான் தமிழ் புத்தாண்டு என்றும் அந்நாள் தொடங்கி தமிழ் ஆண்டுகளை கணக்கிட சட்டம் கொண்டு வந்தார்.
- பேருந்துகளில் திருக்குறளை எழுதி வைத்து தமிழ்மக்களை சிறிதேனும், சிந்திக்க வைத்தார்.
- சென்னை நகரில் குறளகம் ஒன்றை கலைநயம் பொருந்த பெரும் மாளிகையாகக் கட்டி திருவள்ளுவருக்கு நினைவாலயம் ஒன்றை அமைத்தார்.
- நிறைவாக காலங்கள் தோறும் ஞாலம் முழுவதும் வாழப் போகும் அறிவுலகத் தலைவராம் திருவள்ளுவருக்கு குமுறும் அலைகள் தாலாட்டும் குமரிக் கடலில் வானம் அளக்கும் உயரத்தில் அதிகாரம் இத்தனை என்று காட்டுவார் போல அடி உயரம் உயர்த்தி, அகிலத்திற்கு அறிவித்தார்.
- ஒடுக்கப்படும் ஏழைகளின் மீது இரக்கம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள். வள்ளுவர் வாழும் காலம் எல்லாம் வாழப் போகும் தலைவர் ஆக வளர்ந்தார்.
- இத்துடன் மனநிறைவு கொள்ளாமல் திருக்குறளை முற்றோதல் செய்யும் இருபால் மாணாக்கருக்கு, இதயங் களிக்கப் பரிசளிக்கும் பரிசளிப்பு விழாவை ஆண்டுதோறும் நடத்தச் செய்த அறிஞர் முனைவர் கலைஞர் அவர்கள் திருப்பெயர், உயிர்க்காற்று உள்ளவரை உலகில் வாழும்.



திருவள்ளுவரின் தனித்துவம்



பேராசிரியர்
ஆ. சிவசுப்பிரமணியன்

தமிழர்களின் சிறப்புக்குரிய தொன்மையான அடையாளங்களில் ஒன்று திருக்குறள். இதன் யாப்பு, நுவலும் பொருள், அதைக் கூறும் முறை என்பனவற்றின் அடிப்படையில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. அத்துடன் இந்தியத் தேசிய மொழிகள் அனைத்திலும் பெருமைக்குரிய ஒரு நூல் என்ற தகுதி இதற்குள்ளது. இது காரணம் பற்றியே நினைவில் வாழும் குன்றக்குடி அடிகளார் இந்தியாவின் தேசிய நூலாக திருக்குறளை அறிவிக்க வேண்டும் என்று பல்லாண்டுகளாய் அழுத்தமாக வலியுறுத்தி வந்தார். இந்தியாவின் தேசியப் பறவை, தேசிய விலங்கு, தேசிய மலர் என்று அடையாளப்படுத்தப்படுவது போன்று ஒரு தேசிய நூல் ஒன்றும் அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்பது அவரது விருப்பமாக இருந்துள்ளது.

பல்வேறு தேசிய இனத்தினர், சாதியினர், சமயத்தினர், மொழி பேசுவோர் வாழும் நாடு இந்திய ஒன்றியம். இது காரணம் பற்றியே "வேற்றுமையில் ஒற்றுமை" என்று கூறுவதுண்டு. ஆனால் நீண்ட காலமாக ஒற்றுமை வலியுறுத்தப்பட்ட அளவுக்கு வேற்றுமை புரிந்து கொள்ளப்படவில்லை. இது காரணத்தால் அவரது விருப்பம் இன்றுவரை நிறைவேறவில்லை (வலியுறுத்தி வந்தவர் தமிழர் என்பதும், திருக்குறள் தமிழ்மொழியில் எழுதப்பட்டது என்பதும் இதற்குக் காரணமோ?).

அடிகளார் தம் வேண்டுகோளை உணர்ச்சி வயப்பட்டுக் கூறவில்லை. உணர்வு சார்ந்த சிந்தனையின் வெளிப்பாடே அவரை இவ்வாறு கூறத் தூண்டியுள்ளது. இதற்கான காரணம் திருக்குறளின் தனித்துவம்தான்.

ஒரு குறிப்பிட்ட நூலின் தனித்துவம் என்று கூறும் போது அது எந்த வகைமை சார்ந்தது என்பதை வரையறுத்துக் கொள்வது அவசியமாகும். அவ்வாறு வரையறுத்துக் கொள்வதில் வாசிப்பவனுக்கு இடர்ப்பாடு ஏற்படாதவாறு அதன் 1330 குறட்பாக்களை வள்ளுவரே வகைப்படுத்தி அறம், பொருள், காமம் என மூன்றாகப் பகுத்து நூல் நுவலும் பொருள் யாது? என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.



இம்மூன்றும் மனிதவாழ்வின் அடிப்படைத் தேவை என்பதை அவர் உணர்ந்தமையின் வெளிப்பாடுதான் இப்பகுப்பு. இவை அனைத்தையும் அறிமுகம் செய்ய விரும்பினால் ஒரு நூலாக எழுதவேண்டும்; ஒரு கட்டுரையில் அறிமுகம் செய்ய இயலாது. எனவே அறம், சமயம், அரசு என்ற மூன்றின் மீதான அவரது தனித்துவமான கருத்துக்களை மட்டும் அறிந்து கொள்வோம்.

அறம்

அடிப்படையில் ஓர் அறநூல் என்றே திருக்குறள் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூன்று பகுதிகளில் முதலாவது பகுதியாக முப்பத்தியெட்டு அதிகாரங்களையும், முந்நூற்று எண்பது குறட்பாக்களையும் கொண்டதாக அறத்துப்பால் இடம்பெற்றுள்ளது. வள்ளுவரின் அறம் சமயம் சார்ந்த அறமன்று. பொதுவாக, சமயம் சார்ந்தே அறம் வெளிப்படும். சமயம் சார்ந்து வெளிப்படும் அறம் அது சார்ந்த சமயத் தத்துவத்தை விட்டு விலகி நிற்காது.

தத்துவங்களை வகைப்படுத்தும் போது இவ்வுலகம் (உலகவாழ்க்கை) குறித்த அதன் கண்ணோட்டத்தின் அடிப்படையில் (1) வாழ்க்கை உகப்புத் (Life Affirmation) தத்துவம், (2) வாழ்க்கை மறுப்புத் (Negation of life) தத்துவம் என இரண்டாகப் பகுப்பதுண்டு. இதுபோன்றே அறமும் மறுமைப் பயன் கருதும் அறமாகவும், மனித நேயமும் இவ்வுலகமும் சார்ந்த அறமாகவும் வெளிப்படும்.

வள்ளுவரது அறம் பெரிதும் மனிதநேயம் சார்ந்த அறமாகவே வெளிப்படுகிறது. மற்ற உலகம் சார்ந்த அறமாக அமையவில்லை. (1) இல்வாழ்க்கை, (2) வாழ்க்கைத் துணை நலம், (3) மக்கட்பேறு, (4) விருந்தோம்பல் என்ற தலைப்பிலான அதிகாரங்கள் இவ்வுலக வாழ்க்கையைச் சாரமுள்ளதாக்கும் குடும்பம், மனைவி, குழந்தைகள் என்பனவற்றை இன்றியமையாதனவாகவும் உயர்வாகவும் அழகியல் தன்மையுடன் வலியுறுத்துகின்றன. இல்லறம் துறவறம் என்ற இரண்டில் எது உயர்ந்தது என்பது விவாதத்திற்குரிய ஒன்றாக

இன்றுவரை விளங்கிவருகிறது. ஆனால் வள்ளுவர் அறம் சார்ந்த இல்லற வாழ்வை முன்வைத்துள்ளார்.

சமயம்

சங்ககாலச் சமுதாயத்தின் ஐந்திணை வாழ்க்கை ஒன்றன் பின் ஒன்றாக, ஒன்று மறைந்து மற்றொன்றாக அறிமுகமாகி நடைமுறையில் இருந்தது என்று கூற இயலாது. ஒரே நேரத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மாறுபட்ட திணைச் சமூக வாழ்க்கை இருந்துள்ளது. இந்நிலையைச் "சமச்சீரற்ற வளர்ச்சி" என்று கா.சிவத்தம்பி குறிப்பார். திருக்குறள் சங்கம் மருவிய காலத்தது என்ற கருத்து உள்ளது. இதை மறுப்போரும் ஏற்போரும் உண்டு.

எவ்வாறாயினும் சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் வடபுலத்தின் வைதீகச் சமயமும், வைதீக மறுப்புச் சமயங்களான சமணம், ஆசீவகம், பௌத்தம் என்பனவும் தமிழ்நாட்டில் பரவி நிலைகொண்டிருந்தன.

இதன் தொடர்ச்சியாக இவர்களின் வழிபாட்டுத் தலங்கள் உருவாகி அவை மன்னர்களின் ஆதரவைப் பெற்றிருந்ததைக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பதிவு செய்துள்ளன. பள்ளிச் சந்தம் என்ற பெயரில் சமண பௌத்தச் சமயங்களின் வழிபாட்டுத் தலங்களுக்கு விளை நிலங்கள் கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

சங்ககாலத்தைச் சேர்ந்த புலவர்களில் சிலர் இச்சமயங்களைச் சார்ந்தவர்கள் என்பதை அவர்களது பெயர்களும், எழுதியுள்ள செய்யுள்களும் வெளிப்படுத்துகின்றன. ஆனால் தமிழ்நாட்டில் வழக்கில் இருந்த எந்தவொரு சமயத்தைச் சேர்ந்தவராகவும் திருவள்ளுவர் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.


உலகாயுதன், பூதவாதி என்றழைக்கப்பட்ட இறைமறுப்பாளர்கள் பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்துள்ளார்கள். ஆனால் வள்ளுவர் இறைமறுப்பாளர்

> அதில் அவன் எளிதில்
> சந்திக்கக் கூடியவனாகவும்
> கடுஞ்சொல்
> கூறாதவனாகவும்
> அவனது காதுகள் கைத்துப்
> போகும் அளவுக்கு
> அறிவுரை கூறினாலும்
> அதைக் கேட்கும் தன்மை
> கொண்டவனாகவும்
> இருக்க வேண்டும் என்றும்
> வலியுறுத்துகிறார்.

இல்லை என்பதைத் திருக்குறளின் பாயிரப் பகுதியில் உள்ள கடவுள் வாழ்த்து உறுதிப்படுத்துகிறது (பாயிரம் இடைச்செருகல் என்பது வ.உ.சி.யின் கருத்தாகும்).

திருக்குறளின் முதல் அதிகாரம் "கடவுள் வாழ்த்து". இதில் அவர் எந்த ஒரு சமயத்தின் கடவுளையும் குறிப்பிடவில்லை. இவ்வியலின் முதல் எட்டுக் குறள்களில் முறையே (1) ஆதிபகவன், (2) வாலறிவன், (3) மலர்மிசை ஏகினான், (4) வேண்டுதல் வேண்டாமை இலான், (5) இருள்சேர் இருவினையும் சேரா இறைவன், (6) பொறிவாயில் ஐந்தவித்தான், (7) தனக்குவமை இல்லாதான், (8) அறவாழி அந்தணன் என்று அவர் இறைவனது பண்புகளைப் பொதுப்படையாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த எட்டுப் பண்புகளையும் உள்ளடக்கியே ஒன்பதாவது குறளில் எண்குணத்தான் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார் என்பது பெரும்புலவர் அ. நடேச முதலியாரின் கருத்தாகும். இக்கருத்து பொருத்தமாகவே உள்ளது.

பொது ஆண்டு பத்து அல்லது பதினொன்றாவது நூற்றாண்டுக்



காலத்தைய நூல் திருவள்ளுவமாலை. இது திருக்குறளின் சிறப்புகளை வெளிப்படுத்தும் தொகுப்பு நூல் (இதன் உள்ளடக்கத்தின் சில பகுதிகள் கேள்விக்குரியவைதாம்). திருவள்ளுவரின் சிறப்புகளில் ஒன்றாக, "சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருள் இதுவென்ற வள்ளுவன்" என்று இந்நூல் குறிப்பிட்டுள்ளது. இந்நூலின் உரையாசிரியர் பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார், "பல்வேறு சமயங்களை மேற்கொண்ட சமயக்கணக்கர் கருத்தின் வழியே கூறாமல் உலகியல் வழியே கூறி இதுவே மெய்ப்பொருள் என்று வரையறுத்துக் காட்டிய வள்ளுவன்" என்று இத்தொடருக்கு உரையெழுதி உள்ளார். மேலும் சமயக்கணக்கர் என்ற சொல்லுக்குச் "சமயங்களை வளர்க்கும் ஆசிரியன்மார்" என்று பொருளுரைத்துள்ளார்.

அரசு

வள்ளுவர் காலத்தில் இனக்குழுத் தலைவர்கள் (குறுநில மன்னர்கள்) வலுக்குன்றி வேந்தர்கள் ஆளுவோராக நிலைபெறத் தொடங்கிவிட்டனர். பொருட்பாலில் நாடு என்ற அதிகாரத்தில்,

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்துஅலைக்கும் கொல்குறும்பும் இல்லது நாடு. (குறள் 735)

என்று வள்ளுவர் கூறும் செய்தி நாடு என்ற பரந்துபட்ட ஆட்சிப்பரப்பிற்கு அவரது ஆதரவு உள்ளது என்பதை உணர்த்துகிறது. இக்குறளின் இரண்டாவது அடியில் இடம்பெறும் கொல்குறும்பு, நாடு என்ற இரு சொற்களும் வள்ளுவர் காலத்தில் நிலைபெற்றிருந்த முக்கிய அரசியல் கலைச் சொற்களாகும்.

கொல்குறும்பு என்பது குறுநில மன்னர்களால் ஆளப்படும் சிறிய அளவிலான ஆட்சிப்பரப்பைக் குறிப்பதாகும். நாடு என்பது வேந்தர்களால் ஆளப்படும் பரந்த நிலப்பரப்பைக் குறிப்பதாகும். நாடு என்னும் ஆட்சிப்பரப்பு உருவாகக் குறுநில மன்னர்கள் தடையாக இருந்தமையால் "வேந்துஅலைக்கும் கொல்குறும்பு" என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

பரந்துபட்ட நிலப்பரப்பை ஆளும் வேந்தருக்கு ஆதரவான குரலாகவும் இனக்குழுச் சமூகத்தின் ஆட்சியாளர்களுக்கு எதிரான குரலாகவும் வள்ளுவரின் குரல் ஒலிக்கிறது. வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் நாடு என்ற பரந்துபட்ட ஆட்சிப்பரப்பு உருவாதல் தவிர்க்க முடியாத ஒன்று. இனக்குழுக்கள் அழிக்கப்படும்போது புத்தர் வாளாயிருந்ததும் இங்கு நினைவு கூரத்தக்கது.

வேந்தன் உருவாவதை விரும்பினாலும் அவன் எத்தகைய தன்மை கொண்டவனாக இருக்க வேண்டும் என்பதில் வள்ளுவர் தெளிவான சிந்தனைப் போக்கில் இருந்துள்ளார். நாடு என்ற அதிகாரத்தின் ஒன்பது குறள்களிலும் ஒரு நாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்று கூறிவிட்டு அவ்வாறு இருந்தாலும் நல்ல வேந்தன் அமையவில்லை என்றால் பயனில்லை என்ற பொருளில்,

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே வேந்துஅமை வில்லாத நாடு. (குறள்: 740)

என்று கூறியுள்ளார்.



வேந்தன் எத்தகைய சிறப்புடையவனாக இருக்க வேண்டும் என்பதை "இறை மாட்சி" என்ற அதிகாரத்தின்வழி அவர் விளக்கியுள்ளார். அதில் அவன் எளிதில் சந்திக்கக் கூடியவனாகவும் கடுஞ் சொல் கூறாதவனாகவும் (குறள்:386) அவனது காதுகள் கைத்துப் போகும் அளவுக்கு அறிவுரை கூறினாலும் அதைக் கேட்கும் தன்மை கொண்டவனாகவும் (குறள்:389) இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார். அறிவுரை கூறுபவர்களின் துணை இல்லாத மன்னனைக் குறித்து, "கெடுப்பார் இலானுங் கெடும்" (குறள்:448) என்றும் கூறியுள்ளார்.

ஆளுவோன் குறித்த அவரது பதிவுகளைக் கூர்ந்து நோக்கினால் அவர் மக்களில் ஒருவராக இருந்தே ஆளுவோனை நோக்கி உள்ளார் என்பது தெரியவரும். அவர் அரசவைக் கவிஞராக இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

இதன் காரணமாகவே தமிழ் மன்னர்கள் தாம் ஆட்சிபுரியும் நெறியாக வள்ளுவரது நெறியைக் குறிப்பிடவில்லை. மாறாக மனு என்ற பெயரைத் தாங்கிய சுமதி பார்க்கவியின் மனு நெறியைக் குறிப்பிட்டுள்ளார்கள். ஏனெனில் மனு மக்கள் பார்வையில் மன்னனைப் பார்க்கவில்லை. ஆளுவோன் சார்புநிலைப்பாடும் வைதீக மரபின் தாக்கமும் அவரிடம் இருந்தது.

அம்பேத்கரின் கூற்றுப்படி நான்கு வருணப் பிரிவுகள் மட்டுமே இருந்த சமூகத்தில் நான்கு வருணங்களுக்கு அப்பால் வருணமற்றவர்களாக அவர்ணர்கள் என்ற பிரிவை உருவாக்கினார். இவர்கள் சண்டாளர்கள் என்ற பெயருடன் தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்டனர். அதே நேரத்தில் முன்னுரிமை பெற்றவர்களாகச் சிலரை அடையாளப்படுத்தினார்.

ஆனால் திருவள்ளுவரோ முன்னுரிமை பெற்றவர்களாக யாரையும் அடையாளப்படுத்தவில்லை. மாறாக,

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான் (குறள்: 972)

மேலிருந்தும் மேல்அல்லார் மேல்அல்லர் கீழிருந்தும் கீழ்அல்லார் கீழ்அல் லவர் (குறள்: 973)

என்று எழுதியவர். இதனால் வள்ளுவ நெறிக்கு மாற்றாகத் தம் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் இடம்பெறும் பிரகஸ்தி என்ற மெய்க்கீர்த்திப் பகுதியில், "மன்னுயிர் தழைப்ப மனுவாறு விளங்க", "மனுவின் நெறி தழைத்தோங்", "மனுநெறி வாழ" என்று தமிழ் மன்னர்களைப் பற்றி பதிவு செய்துள்ளனர். தமிழ் மன்னர்களால் வள்ளுவர் புறக்கணிக்கப்பட்டார்.

தனித்துவம்

இதுவரை பார்த்த செய்திகளின் அடிப்படையில் திருவள்ளுவர் குறித்து மதிப்பீடாகப் பின்வரும் செய்திகளைத் தொகுத்துரைக்கலாம்:

1. வள்ளுவர் இறை நம்பிக்கை கொண்டவர். ஆனால் தம் சமய நெறி எது என்பதை அவர் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.
2. மறுமையை முன்நிறுத்தி இவ்வுலக வாழ்வை அவர் வெறுத்து ஒதுக்கவில்லை. அவரது அறம் மண்ணுலகு சார்ந்த ஒன்று.
3. மக்களது பார்வையிலேயே மன்னனைப் பார்த்துள்ளார்.

வள்ளுவரின் தனித்துவமான பண்புகளில் இவை மூன்றும் முக்கியமானவை. இதுவே காலவெள்ளத்தில் கரைந்து போகாது - அவரை நிலைத்து நிற்கச் செய்துள்ளன.



திருவள்ளுவ மாலையிலுள்ள சில மலர்களின் மணங்கள்..!



ஔவை அருள்
இயக்குநர்
தமிழ் வளர்ச்சித் துறை

திருவள்ளுவரையும் திருக்குறளையும் சிறப்பிக்கும் நூலாக விளங்குவது, 'திருவள்ளுவமாலை'. அதில், ஈரடி வெண்பாக்களாக – குறள் வெண்பாக்களாக அமைந்தவை இரண்டு; நாலடி வெண்பாக்களாக – அவற்றிலும் பெரும்பான்மையாக நேரிசை வெண்பாக்களாக அமைந்தவை ஐம்பத்து மூன்று. ஆக மொத்தம் ஐம்பத்தைந்து.

அறிவுமூதாட்டியார் ஔவையார்,

'அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்' என்றார்.

இடைக்காடனாரோ,

'கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்' என்றார்.

ஆண்பாற் புலவரினும், பெண்பாற் புலவர் அறிவிற் சிறந்திருந்தனர் என்பதற்கு இவையே சான்றுகள். திருவள்ளுவ மாலையிலுள்ள சில மலர்களின் மணங்களை நுகரலாமே!

உக்கிரப் பெருவழுதியார், நான்முகனே வள்ளுவனாய்த் தோன்றி, நான்மறைகளின் மெய்ப்பொருள்களை, அறம், பொருள், இன்பமெனும் முப்பால்களாகத் தந்ததாகவும், அந்த முப்பாலைத் தலைவணங்க வேண்டுமெனவும், வாய் வாழ்த்த வேண்டுமெனவும், நன்னெஞ்சம் சிந்திக்க வேண்டுமெனவும், செவிமடுக்க வேண்டுமெனவும் கூறுகின்றார்.

மதுரைக் கூலவாணிகர் சீத்தலைச் சாத்தனாரோ, வள்ளுவரின் முப்பால் எத்தகையது என்பதை, மிகச் சிறப்பாகப் புலப்படுத்தியுள்ளார். 'திருக்குறள், கொல்லிமலை, நேரிமலை, பொதியமலை என்னும் மூன்று மலைகளையும், குடநாடு, புன்னாடு, தென்னாடென்னும் மூன்று நாடுகளையும், பொருநைநதி, காவிரிநதி, வையை நதியென்னும் மூன்று நதிகளையும், கருவூர், உறையூர், மதுரையென்னும் மூன்று பகுதிகளையும், மங்கலமுரசு, வெற்றிமுரசு, கொடை முரசென்னும் மூன்று முரசுகளையும், இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழென்னும்



மூன்று தமிழ்களையும், விற்கொடி, புலிக்கொடி, கயற்கொடியென்னும் மூன்று கொடிகளையும், கனவட்டம், பாடலம், கோரமென்னும் மூன்று குதிரைகளையும் தாம் முறையே பெற்றுள்ள சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தர்தம் முடிகளின் மீதுள்ள 'மாலைகள்'.

மாமூலனார், 'அறம், பொருள், இன்பம், வீடாகிய நான்கு உறுதிப் பொருள்களின் தன்மைகளை அறிந்து கூறிய தெய்வமாந்தன் வள்ளுவன்' என்கின்றார். அரிசில் கிழாரோ, 'சுருங்கிய சொற்களால் விளக்கமாகச் சொல்ல வல்லவர் திருவள்ளுவரைத் தவிர, வேறொருவர் யார்?' என, வினா தொடுக்கின்றார். அதற்கு, 'ஒருவருமில்லை' எனும் எதிர்மறை விடைதான்.

முகையலூர்ச் சிறு கருந்தும்பியாரும், ஆசிரியர் நல்லந்துவனாரும் 'எப்பா வலரினு மில்' எனும் ஈற்றடியை வைத்தே பாடியுள்ளனர். முதலாமவர், 'முப்பாலின் மிக்க மொழியுண்டெனப் பகர்வாரில்லை' என்கின்றார்; இரண்டாமவர், 'முப்பால் மொழிந்த முதற்பாவலரொப்பாரில்லை' என்கின்றார். முன்னடி திருக்குறளைக் குறிப்பதும், பின்னடி திருவள்ளுவரைக் குறிப்பதுமே வேறுபாடு.

திருவள்ளுவமாலையில் கொடுக்கப்பட்டுள்ள ஒரு மலராக உள்ள மாங்குடி மருதனாரின் வெண்பா மலரின் நறுமணத்தை முழுமையாக நுகர்வது சிறப்புடைத்து.

'ஒதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிக விளங்கி – தீதற்றோ
ருள்ளுதொ றுள்ளுதொ றள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு!

'மலர்களுக்குள்ளே தாமரை;
பொன்களுக்குள்ளே சாம்புநதம்;
பசுக்களுக்குள்ளே காமதேனு;

அறிவு மூதாட்டியார் ஔவையாரும், 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி; நாலு மிரண்டுஞ் சொல்லுக் குறுதி' என்றார். எதுகை நோக்கி நாலடியாரை முதற்கண் குறிப்பிட்டாலும், முதன்மை கருதத் திருக்குறளே சாலப் பொருந்தும். 'பழகு தமிழ் சொல்லருமை நாலிரண்டில்' என்பதும் தனிப்பாடலடி. மேலும், சமண முனிவர் பலரால் இயற்றப்பட்டது 'நாலடியார்'; திருவள்ளுவர் ஒருவராலே இயற்றப்பட்டது 'திருக்குறள்'.

யானைகளுக்குள்ளே ஐராவதம்; தேவர்களுக்குள்ளே திருமால்; நூல்களுக்குள்ளே திருவள்ளுவரின் திருக்குறளைச் சிறந்ததெனக் கூறுவர்' என்கின்றார் மதுரை பெருமருதனார்.

முன்னர்க் குறிப்பிட்ட முகையலூர்ச் சிறுகருந்தும்பியார், ஆசிரியர் நல்லந்துவனார் போலவே, நப்பாலத்தனாரும், மதுரை பாலாசிரியனாரும் ஒன்றுபடுவதைக் காணலாம். முன்னவர்,

'வள்ளுவனா ரேற்றினார் வையத்து
வாழ்வார்க்களுள்ளிரு ணீக்கும் விளக்கு'

என்கின்றார்; பின்னவரோ,

'வள்ளுவ ரின்குறள் வெண்பா
வகிலத்தோருள்ளிரு ணீக்கு மொளி'

என்கின்றார். முன்னதன் ஈறு 'விளக்கு'; பின்னதன் ஈறு 'ஒளி' விளக்கின்றி ஒளியில்லை; ஒளியின்றி விளக்கில்லை.

திருக்குறளுக்குப் பதின்மர் பழைய உரைகாரரெனப் பழம்பாடல் ஒன்றுண்டு. அது வருமாறு:


'தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பரிதி – திருமலையாள்
மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர் நூற்
கெல்லையுரை கண்டா ரிவர்'

இப்பதின்மருள், நமக்குக் கிடைத்துள்ள உரைகள், மணக்குடவர், காளிங்கர், பரிதியார், பரிப்பெருமாள், பரிமேலழகர் ஆகிய ஐவர் உரைகள்தாம். இவருள்ளும் முந்தையோர் மணக்குடவரெனவும், பிந்தையோர் பரிமேலழகரெனவுங் கூறுவர். முந்தையோருரை சிறந்ததென்பது, சிலரின் கருத்து; பிந்தையோருரையே சிறந்ததென்பது, பலரின் கருத்து.

முந்தையோர் பலரிருக்கப் பிந்தையோராகிய பரிமேலழகர் சிறப்பாக உரைவகுத்தமைக்கு காலம் கை கொடுத்ததாக இருக்கலாம். 'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்பதற்கேற்ப, அவர் காஞ்சி மண்ணில் வாழ்ந்தவர் என்பதும், உலகளந்த பெருமாள் உயர்கோயிலில், அர்ச்சகராகப் பணிபுரிந்தார் என்பதும் எண்ணி மகிழ்தற்குரியன.

'வள்ளுவர்தாம் அறம், பொருள், காமமென்னும் முப்பால்களையும் அமைத்தாரென்பதில் ஐயமில்லை. அதிகாரத் தலைப்புகளையும் அவரே கொடுத்தார் என்பதிலும் ஐயமில்லை. ஒவ்வோரதிகாரத்திலும், குறட்பாக்கள் முறைவைப்பை, யார் செய்தார் என்பது தெரியவில்லை' என்பார் மூதறிஞர் செம்மல் ச.வே.சுப்பிரமணியனார்.

மேலும், 'பரிமேலழகருரையே சிறப்பானது' என்பதற்குச் சான்றோர் சிலரின் வாய்மொழிகளை ஈங்கெண்ணிப் பார்த்தல் நலமே. திரிசிபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, அவர்தம் மாணாக்கர் தியாகராசச் செட்டியார்,



தெய்வ நாயகப்பிள்ளை, சுப்பராயச் செட்டியார் ஆகிய பெருமக்கள் நால்வரின் பாக்கள், விருத்தங்களாக – அகவல்களாக இடம் பெற்றுள்ளன. பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதமென்பர். நால்வரின் பாச்சோற்றுப் பானைகளினின்றும் பாச்சோறுகளின் பதங்களைப் பார்ப்போம்.

'...பலருரையும் வியாப்பிய மாயிருக்க
நாளு முன்னவாம் வியாபகமே யாகநூற்
கருத்துணர்ந்தே மொழிந்தாரென்ன நன்னர்வான்
புகழ்ப்பரிமேலழகருரை...

- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

'ஒருவா புலமைத் தருமர்முன் னாய
பாடல்சால் சிறப்பிற் பதின்மர் செய்த
நாடுறு முரைகளுட் பீடமைந்த தோங்கும்
பரிமே லழகர் பண்ணிய வுரை'

- தியாகராசச் செட்டியார்.

'தெய்வத் திருக்குறள் மெய்ம்மலி நூலைப்
பொற்பமர் தருக்களுட் கற்பக மென்னப்
பலருரை யுள்ளு நிலவுற விளங்கும்
பரிமே லழகர் புரியுரை..!

- தெய்வநாயகப்பிள்ளை

'தருமர் முதலிய சால்பினர் வகுத்த
திருகில்பே ருரைகளுட் சிறந்து நிலைஇய
வரிமே லியல்புகழ்ப் பரிமே லழக
ருளங்கனிந் தியற்றிய வளங்கனி யுரை...!

- சுப்பராயச் செட்டியார்.

தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணை வேந்தர் நாவரசர் ஔவை நடராசனார், 'திருக்குறள் உரை, பலவாகப் பெருகி வருகின்றது. நாடெங்கும் திருக்குறள் ஆர்வம், தழைத்துச் செழிப்பது, நமக்குப் பெருமிதம் தருகின்றது. செவ்விய புலமைக்கும், சிந்தனைச் செறிவுக்கும் ஏற்ப, நினைவார்க்கு நினையும் வகையில் புதிய விளக்கங்கள், நாளும் மலர்கின்றன' என்கின்றார்.

மூதறிஞர் செம்மல் முனைவர் வ.சுப.மாணிக்கம் ஐயா, 'சுருங்கிய ஈரடியால் செறிவான முறையில் நுணுகிய பொருள்களை, யாப்பு வேலியுள் அடக்க முயன்றவராகலின், பல்வேறு எழுத்து



உத்திகளை வகுத்துக் கொண்டு, குறள் நூல் படைத்தார் வள்ளுவர். தமக்கெனச் சில உத்திகளைப் படைத்துக்கொண்டு, நூல் யாத்தார். 1330 குறள்களையும் சில உத்திகளுக்குள் அடக்க முடியும்; அவ்வுத்திகளைப் பயன்படுத்தினால், மயக்கமற்ற பொருள் தோன்றும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகின்றார். 'பௌத்தத் தமிழ்க் காப்பியச் சாத்தனார், தம்நூலுள் திருக்குறள் கருத்துகளையும் தொடர்களையும் நிரம்ப ஆளுவர். திருக்குறளை யாப்பாங்கு எடுத்தாண்டதோடு, தமிழிலக்கியவுலகில் முதன் முதலாகத் திருவள்ளுவரை 'பொய்யில் புலவன்' என்ற சிறப்பு பெயராற் பாராட்டினார்.

திருக்குறளில் அதிகாரத் தலைப்புகள் கூடக் கல்வி – கல்லாமை, செங்கோன்மை–கொடுங்கோன்மை, ஊக்கமுடைமை–மடியின்மை, பெரியாரைத் துணைக்கோடல்–சிற்றினஞ்சேராமை, இரவு – இரவச்சமென, இருமை வகைபட வருதலுமுண்டு. நட்பினை ஐந்து அதிகாரங்கள் விதிமுகத்தானும், பன்னிரண்டதிகாரங்கள் எதிர்மறை முகத்தானும் கூறுவர் திருவள்ளுவரென்பதைப் பரிமேலழகருங் குறிப்பிட்டுள்ளார். இன்ன அறத்தைச் செய்தால் வரும் தன்மைகளிவையென ஒரு பாங்காகவும், செய்யாமையால் வரும் குற்றங்களிவையென மறுபாங்காகவும் திருக்குறள் தொகுத்துக் கூறுகின்றது.

திருக்குறளின் வாழ்வுக்கோட்பாடு, இல்லறமும் துறவறமும் இணைந்தது. பாலின்பத்தை உரிய பருவங்களிற் போற்றுவது. ஐம்புலவின்பம் நன்கு முறையாகத் துய்க்க வேண்டும் என்பதற்காகவே, 'காமத்துப்பால்' பாடினார் திருவள்ளுவர். 'தம்பொருள் என்பதம் மக்கள்' எனவும், 'பெறுமவற்றுள் நன்மக்கட்பேறே சிறந்தது' எனவும் குழந்தைச்செல்வத்தை மதித்து, ஓரதிகாரம் கண்டவர். ஒழுக்கத்தால் மேன்மை எய்தலாம், அரியன செய்வார் பெரியர், முயற்சி திருவினைத் தரும், நாடென்ப நாடா வளத்தன, உள்ளம் உடைமை, கண்ணோட்டத்துள்ளது உலகியல், சிற்றினமஞ்சும் பெருமை, அறிவுடையார் ஆவதறிவார், அறிவுடையார் எல்லாருடையார், கண்ணுடையரென்பவர் கற்றோர், தலைப்பட்டார் தீரத்துறந்தார், தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார், தோன்றிற் புகழொடு தோன்றுக, அடக்கம் அமரருய்க்கும், அறத்தான் வருவதே இன்பம் எனப் பல குறள்களில் முதற்கண் விதிமுகம் நடைப்படுத்துவதை அறிகின்றோம்.

மணிவாசகர் பதிப்பக நிறுவுநரும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியரும், பதிப்புச் செம்மலுமாகிய முனைவர் ச.மெய்ப்பனார், "நீதி நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களெனத் தொகுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் திருக்குறளும் நாலடியாரும் பெரிதும் பயிலப் பெறும் நூல்கள்" என்பார்.

அறிவு மூதாட்டியார் ஔவையாரும், 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி; நாலு மிரண்டுஞ் சொல்லுக் குறுதி' என்றார். எதுகை நோக்கி நாலடியாரை முதற்கண் குறிப்பிட்டாலும், முதன்மை கருதத் திருக்குறளே சாலப் பொருந்தும். 'பழகு தமிழ் சொல்லருமை நாலிரண்டில்' என்பதும் தனிப்பாடலடி. மேலும், சமண முனிவர் பலரால் இயற்றப்பட்டது 'நாலடியார்'; திருவள்ளுவர் ஒருவராலே இயற்றப்பட்டது 'திருக்குறள்'.

திருக்குறளைப் பற்றியும், திருவள்ளுவரைப் பற்றியும் இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். இவ்வளவுதாம் என்றில்லாமல், எவ்வளவும் சொல்லலாம்.



வள்ளுவரின் குரல் கலகக் குரல்தானே!



பேராசிரியர்
தொ. பரமசிவன்

உலக நாகரீகத்திற்குத் தமிழினத்தின் பங்களிப்புகள் பல. அவற்றுள் இரண்டைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஒன்று, தமிழிசை மற்றொன்று திருக்குறள். தமிழில் மிகச் சில சொற்களில் ஆன கவிதை வடிவம் குறள் வெண்பா ஆகும். மிக விரிந்த உலகச் சிந்தனைகளை மிகக் குறுகிய வடிவத்தில் தர முடியும் என்பதை உலக இலக்கிய அரங்கில் முதலில் வள்ளுவரே செய்து காட்டினார் எனலாம். சின்னக் குழந்தையின் சிரிப்பு முதல் 'மெய்யுணர்தல்' வரை வள்ளுவர் மண்ணுக்கும் விண்ணுக்குமான சிந்தனைகளைத் தம் அளவிற்சிறிய நூலில் பொதிந்து வைத்துள்ளார்.

வள்ளுவரது காலம் பல்வேறு அறிஞர்களால் கி.மு. முதல் நூற்றாண்டில் இருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை அறுதியிடப்படுகிறது. இலக்கிய வரலாற்று நோக்கில் பார்ப்பதானால், சங்க இலக்கியங்கள் பெரும்பாலானவற்றுக்குத் திருக்குறள் காலத்தால் பிற்பட்டது; சிலப்பதிகாரத்துக்கு முற்பட்டது.

இளங்கோவும், கம்பரும் ஆக்கியளித்த பேரியலக்கியங்களில் 'தமிழ்' என்ற அடையாளத்துக்குள்ளேயே அவர்களது முகம் தெரியும். வள்ளுவத்தை மட்டும் 'உலகப் பொதுமறை' என்கின்றோம். காரணம் என்ன? தமிழ் மொழியில் அமைந்தது என்பதைத் தவிர, இனம், நாடு குறித்த வெளிப்படையான தன்னடையாளம் எதையும் வள்ளுவர் தம் நூலில் கூற முற்படவில்லை. தமிழ், தமிழ்நாடு, வஞ்சி, மதுரை, பாண்டியர், சோழர் ஆகிய அடையாளம் காட்டும் எந்தச் சொல்லும் திருக்குறளில் காணப்படவில்லை.

வள்ளுவரின் சமகாலத்தில், ஏன், அவருக்குப் பின்னரும் கூட, இந்தியத் துணைக் கண்டத்தில் இலக்கியங்களின் வழி அறம் பேச வந்தவர்கள் சாதி, சமயம், நிலப்பகுதி ஆகிய அடையாளங்களைத் தாண்டிச் செல்ல இயலவில்லை. வள்ளுவர் மனிதப் பொது அறம் பேசியவர். அவரது இயற்பெயர் கூட நம்மால் அறியப்பெறவில்லை வள்ளுவர் என்பது ஒரு குடிப்பெயராகும்.

'இன்பத்துப் பாலை'க் கொண்டும் 'மக்கட்பேறு' அதிகாரத்தைக் கொண்டும் அவர் மணமானவர், மழலை இன்பம் துய்த்தவர் என்பதை அறிய முடிகிறது.

'நேற்று வந்த பசி இன்றும் வந்துவிடுமோ', (குறள் எண் 1048) என்று அஞ்சுகிற இடத்திலும் 'நெருப்பிலே தூங்கலாம். பசியிலே தூங்க முடியாது' என்ற தன்னிரக்கம் காட்டும் இடத்திலும் வறுமையோடு போராடிய வள்ளுவரின் தனி வாழ்க்கையினை நாம் உய்த்து உணரலாம். இவையன்றி, திருக்குறளிலிருந்து அந்த மானுடப் பெருமலையின் எந்தப் பக்கத்தையும் நம்மால் அறிய முடியவில்லை.

இனி, வள்ளுவரின் காலத்தில், தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த அல்லது தமிழ்ச் சமூகத்தை இயக்கிக் கொண்டிருந்த கருத்தியல்களை நோக்கலாம். தமிழகத்தில் புகுந்த வைதீகப் பார்ப்பனர்கள் தமிழ்நாட்டு அரசு அதிகாரத்திற்கு அருகில் அமர்ந்துள்ளனர். "ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப் பூவும் பொன்னும் புனல் படச் சொரிந்த" தமிழ் மன்னர்கள் இருந்திருக்கிறார்கள். மறுபுறமாக, வைதீகத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த சமண, பௌத்த மதங்கள் தமிழ்நாட்டில் தங்கள் செல்வாக்கைப் பரப்பத் தொடங்கியிருந்தன.

வள்ளுவர் வைதீகத்திற்கு எதிராகக் குரலெழுப்பியவர், 'பிறப்பு வழி வேற்றுமையே', வைதீகக் கொள்கையின் உயிர்நாடி. இந்தக் கொள்கை அதிகாரத்திற்கு நெருக்கமாக இருந்த பொழுது 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்ற வள்ளுவரின் குரல் கலகக் குரல்தானே. அதுபோல 'அந்தணர்' என்ற சொல்லைப் பார்ப்பனர்கள் தமக்கு வழங்கிய காலத்தில், வள்ளுவர் அச்சொல்லுக்கு 'அந்தணர் என்போர் அறவோர்' என்ற எதிர்மறை வரைவிலக்கணம் தர முற்படுகின்றார்.

நமது நிகழ்கால நோக்கில் வள்ளுவத்திற்குப் 'போதாத காலம்' ஒன்று இருந்தது. 17, 18, 19ம் நூற்றாண்டுகளில் தென்னகத்திற்கு வந்த மேல்நாட்டு அறிஞர்கள் திருக்குறளை உச்சி முகர்ந்து தலைமேல் வைத்துக் கொண்டாடினார்கள். ஆனால், 18ஆம் நூற்றாண்டில் வந்த காலனிய அரசு கல்கத்தாவில் மையம் கொண்டிருந்தது. எனவே, உள்நாட்டு நீதி முறைகளைத் தொகுத்த காலனி ஆட்சியாளர்களின் பார்வையில் திருக்குறள் படவில்லை. அதன் விளைவாக, மனுதர்மத்தை அடிப்படையாகக் கொண்ட 'இந்து சட்டம்' இந்திய ஏழை மக்களின் தலையில் விடிந்தது.

ஆனாலும் கூட திருக்குறளை ஐரோப்பிய மொழிகளில் மொழிப்பெயர்த்த நன்றிக்குரியவர்களின் பெயர்களை இங்கே நினைக்கலாம். ஜி.யூ. போப் (G.U. Pope), கிண்டர்ஸ்லி (Kindersley), எல்லிஸ் (F.W. Ellis), ட்ரூ (W.H. Drew), சார்லஸ் கி. கோவர் (C.E. Gover), ராபின்ஸன் (E.G. Robinson), லாசரஸ் (Rev. G. Lazarus), ஸ்காட் (T.M. Scott), பாப்லி (H.A. Popley) ஆங்கிலத்திலும், பெஸ்கிப் பாதிரியார் (Father Beschi), டாக்டர் கிரேஎல் (Dr. Graul) ஆகியோர் இலத்தீன் மொழியிலும் ஏ.எப். காம்மர்ஸ் (A.F. Commers), ப்ரீட்சிக் ரூகர்ட் (Friedrich Ruckert) ஆகிய இருவரும் ஜெர்மன் மொழியிலும் இ. ஏரியல் (E. Ariel), டி டூமாஸ்ட் (P.G. De Dumast), எம். லெமரேஸ், லூயி ஜெகோலியாட் (Louis Jacolliot), பொண்டேனோ (G.de. Barrigue de.Fontainieu) போன்றோர் பிரெஞ்சு மொழியிலும் திருக்குறளைப் பெயர்த்துள்ளனர்.

கி.பி. 1810 இல் கிண்டர்ஸ்லி (Kindersley) திருக்குறளின் சில பகுதிகளை முதலில் அச்சு வாகனம் ஏற்றினார். அதே கால அளவில் 'எல்லீசன்' என்று தம் பெயரைத் தமிழில் எழுதியவரும். அன்றைய சென்னை மாநிலத் தலைமை நிதி அதிகாரியுமான எல்லீஸ் (F.W. Ellis) வள்ளுவ தாசனாக வாழ்ந்திருக்கிறார். கி.பி. 1818இல் சென்னையில்; உருவான குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க, எல்லீஸ் வெட்டிய கிணறுகளில் ஒன்று சென்னை ராயப்பேட்டை பெரிய பாளையத்தம்மன் கோயிலில் இன்றும் உள்ளது. இக்கிணற்றின் கைப்பிடிச் சுவரில் பதிக்கப்பட்டுள்ள ஒரு கல்லில் எல்லீஸ் துரை 1818ம் ஆண்டில் வெட்டி வைத்த கல்வெட்டு இன்றளவும் நம் பார்வைக்கு உள்ளது.

மற்றொரு கல்வெட்டு திண்டுக்கல் நகரிலுள்ள எல்லிஸ் கல்லறையின் மீது பொறிக்கப்பட்டுள்ளது. இதில் ('எல்லீசன் என்னும் இயற்பெயருடையோன்')

திருவள்ளுவப் பெயர்த் தெய்வஞ் செப்பி
அருள் குறள் நூலுள் அறப் பாலினுக்குத்
தங்கு பல நூல்உ தாரணக் கடலைப் பெய்(து)
இங்கி லீசுதனில் இணங்க மொழி பெயர்த்தோன்.

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகளிலிருந்து எல்லிஸ் துரையின் ஆழ்ந்த தமிழ்ப்புலமையும் அவருக்குத் திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் இருந்த ஈடுபாடும் தெளிவாகத் தெரிகின்றன.

எல்லிஸ் மாநில நிதி அதிகாரியாகவும், அக்கசாலை (Mint)யின் தலைவராகவும் இருந்த காரணத்தால், திருவள்ளுவர் உருவம் பொறித்த (புழக்கத்தில் வராத) தங்க நாணயங்களை வெளியிட்டார் என்று தெரிகிறது. இந்நாணயங்களை அண்மைக் காலத்தில் நாணயவியல் அறிஞர்கள் ஐராவதம் மகாதேவன், அளக்குடி ஆறுமுக தாராமன் ஆகிய இருவரும் கண்டுபிடித்துள்ளனர்.

திருக்குறளின் பெருமையில் நாட்டமுடைய உரையாசிரியர்கள் பலர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளனர். 12 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே, பரிமேலழகர் உள்ளிட்ட பத்துபேர் குறளுக்கு உரை செய்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டில் சாதி, சமய எல்லை கடந்து 50க்கும் மேற்பட்டோர் உரை எழுதியுள்ளனர். திருக்குறளுக்கு எழுந்த உரை நூல்களுள் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவை சில. பரிமேலழகர், மு. வரதராசனார், தேவ நேயப் பாவணர் ஆகியவரோடு ஐரோப்பிய மொழிகளில் மொழிப்பெயர்த்த வீரமாமுனிவர் இந்நூலின் அகத்துப்பாலுக்கும், பொருட்பாலுக்கும் தமிழில் உரை எழுதியுள்ளார்.

திருக்குறளுக்கு இருபதாம் நூற்றாண்டில் ஒரு பெண்மணியும் உரை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத் தகுந்த செய்தி. திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஜெமீன் தாரிணி கி.சு.வி. இலட்சுமி அம்மணி என்பார் 1929ல் 'திருக்குறள் தீபாலங்காரம்'. என்ற பெயரில் சாது அச்சுக்கூடப் பதிப்பாக ஒரு உரை நூலை வெளியிட்டுள்ளார்.

ஜார்ஜ் யுக்ளோ போப் என்ற ஜி.யு. போப் (1820-1908) என்பது தமிழர்கள் நன்றியுடன் நினைக்கக்கூடிய பெயர்களில் ஒன்று. திருக்குறளை முழுமையாக ஆங்கிலத்தில் முதலில் மொழிபெயர்த்தவர் இவரே. 1886-இல் இவரது திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியானது. தமிழ் எழுத்து இலக்கியங்களை முறையாகப் பயின்ற ஜி.யு. போப் தமிழ்ப் பேச்சு மொழியின் நுட்பங்களையும் உணர்ந்தவர். அவரது 'திருவாசக' மொழிபெயர்ப்பு உலகறிந்த ஒன்று. சைவ சாத்திர நூலான 'திருவருட் பயனை'யும், தமிழ்ச் சமூகத்தின் எட்டாம் நூற்றாண்டு வாழ்வியலைக் காட்டும் 'புறப்பொருள் வெண்பா மாலை' என்றும் இலக்கண நூலையும் மொழி பெயர்த்துள்ளார். நீதி நூலான 'நாலடியாரை'யும் மொழிபெயர்த்தார். புறநானூற்றின் சில பாடல்களை மொழி பெயர்த்ததோடு அந்நூல் குறித்த கட்டுரைகளையும் அக்கால இதழ்களிலே எழுதியுள்ளார். போப் இலண்டனில் 1908ல் காலமானார்.

போப்பின் குறள் மொழிபெயர்ப்பு நூலைப் பின்னர் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இருபதாம் நூற்றாண்டில் வெளியிட்டது. அதில் போப் எழுதிய முன்னுரையின் சில பகுதிகள் விடுபட்டுள்ளதாக கா.மீனாட்சி சுந்தரம் குறிப்பிடுகின்றார்.

போப்பின் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு முயற்சி குறளை யாவரிடத்தும் கொண்டு செல்வதற்கும், தமிழ் அறியாதாரிடத்தும் குறளை அறிய வைப்பதற்குமான முயற்சியாகும்.



பேரறப் பெருஞ்சிலை



ஆர். பாலகிருஷ்ணன்
இ.ஆ.ப. (ஓய்வு)

குமரிமுனை, இந்தியப் பெருங்கடற்பரப்பும் இந்தியத்துணைக்கண்டத்தின் பெருநிலவெளியும் கைகுலுக்கும் கரை. ஆர்ப்பரிக்கும் அலைகளுக்கு நடுவே குன்றென நிமிர்ந்து நிற்கும் குறியீடாக 133 அடி உயரத்தில் நெடிதுயர்ந்து நிற்கிறார் அய்யன் திருவள்ளுவர் பேரறப் பெருஞ்சிலையாய். திருக்குறள் என்ற உலக இலக்கியத்தை எழுதிய உலக மனிதர். நமது எத்தனை யுகங்களுக்கான தவம்; நமது எத்தனை தவங்களுக்கான வரம்!

திருவள்ளுவரின் சிலையின் மீது மனதைச் செலுத்தி மவுனமாக நிற்கிறேன். இந்தச் சிலை இங்கே நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் ஆகின்றன. வெள்ளிவிழா. சீறும் கடலலைகளுக்கு நடுவே இந்தச் சிலையை எழுப்பவேண்டும் என்ற எண்ணம் முத்தமிழறிஞர் கலைஞரின் நெஞ்சில் தோன்றிய வரலாற்றுத் தருணத்தின் கருத்தியல் செறிந்த கவித்துவ நொடிகளை நினைத்துப் பார்த்து நெகிழ்கிறேன்.

தமிழ் வரலாறு, இந்தப் பெருமிதம் மிக்க தருணத்திற்காக, மக்களாட்சி என்ற மகத்துவம் மலரவும், தமிழாய்ந்த, தமிழில் தோய்ந்த ஒரு தலைவர் ஆட்சிப்பொறுப்பில் அமரவும் இரண்டாயிரம் ஆண்டுகள் காத்திருந்திருக்கிறது என்பதை உணர்ந்து உள்வாங்குகிறேன்.

அவ்வளவு எளிதாக யாரும் எழுப்பிவிடக்கூடிய இன்னொரு சிலையா முப்பால் உணர்த்திய வள்ளுவர் சிலை? அவ்வளவு எளிதாக அமைந்துவிடக்கூடிய ஒரு இடமா முக்கடல்கள் முத்தமிடும் குமரிமுனை?

"ஆரியர் துவன்றிய பேர் இசை இமயம், தென்னம் குமரியொடு ஆயிடை" (பதி.11) என்றும்; "வடதிசை எல்லை இமயம் ஆகத் தென்னம் குமரியொடு ஆயிடை" (பதி.43) என்றும் "தென் குமரி வட பெருங்கல் குண குட கடலா எல்லை" (மதுரை 70) என்றும்; "வடாஅது பனி படு நெடு வரை வடக்கும் தெனாஅது உரு கெழு குமரியின் தெற்கும்" (புறம் 6) என்றும் "தென் குமரி வட பெருங்கல் குண குட கடலா எல்லை (புறம் 17) என்றும்



இந்தியத்துணைக்கண்டப் பெருநிலத்தின் எல்லைகளை தெள்ளத்தெளிவாக வரையறுத்துப் பேசிய இந்தியத் துணைக்கண்டச் செவ்வியல் இலக்கியம் சங்க இலக்கியம் மட்டும் தான்.

திருக்குறள் ஒரு திறந்தவெளி இலக்கியம். குறிப்பிட்ட ஒரு சமயச் சார்பின்மையும் பரந்து விரிந்து உலகப்பார்வையும் திருக்குறளின் தலையாய பண்புகளாகும். திருக்குறள் ஒரு மந்திரமோ தந்திரமோ அல்ல; உண்மையில் சொல்லப்போனால் அது ஒரு சுதந்திரம். "தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்" என்று மனித முயற்சியின் மகத்துவம் பேசிய மகாசாசனம். அதனால் தான் கால, நில இடைவெளிகளைக் கடந்து நிற்கிறது. இந்தச் சிலையை நிறுவுவதற்கு எல்லாவகையிலும் பொருத்தமான மாக்கடற் புவிச்சூழல் இது தான்.

1975ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் திருவள்ளுவர் சிலையமைப்பு திட்டத்தை முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அறிவித்தபோது நாட்டில் நெருக்கடிநிலை அமலில் இருந்தது. 1976ஆம் ஆண்டு ஆட்சி கலைக்கப்பட்டு, 1977 தேர்தலுக்குப் பின், 1979ஆம் ஆண்டு திருவள்ளுவர் சிலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டபோது கலைஞர் முதல்வர் பொறுப்பில் இல்லை. அடிக்கல் நாட்டப்பட்டாலும் சிலையை எழுப்பும் பணியில் முன்னேற்றம் இல்லை. நீண்ட இடைவெளிக்குப்பின்னர், 1989இல் கலைஞர் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று 1990-1991 நிதிநிலை அறிக்கையில் வள்ளுவர் சிலைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1990ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் தேதி திருவள்ளுவர் சிலையமைக்கும் பணியை கலைஞர் தொடங்கிவைத்தார்.

ஆனால் 1991ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கலைப்பு, அதைத்தொடர்ந்து ஆட்சிமாற்றம் ஆகிய காரணங்களால் சிலையமைக்கும் பணி முடங்கியது. 1996இல் கலைஞர் மீண்டும் முதல்வரானதும் 1997இல் சிலையமைக்கும் பணி புத்துயிர் பெற்றது. இறுதியில் 2000ஆம்



ஆண்டு சனவரி 1ஆம் தேதி திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்டது. இந்தத்தாமதம் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்றாலும் கூட ஒருவகையில் பொருத்தமானது தான்.

வள்ளுவர் கோட்டம் எழுப்பிய, குறளோவியம் படைத்த கலைஞர் தொடங்கிய பணியை அவரே முடித்து திறந்துவைத்தார் என்பது ஒரு சிறப்பு. 2000ஆவது ஆண்டு சனவரி முதல் நாள் என்பது ஆண்டுதோறும் வரும் வழக்கமான ஆங்கிலப்புத்தாண்டு நாள் அல்ல. அது ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை வருவது என்பது மற்றொரு சிறப்பு. பொதுயுகத்திற்குப் பின்னால் இரண்டாயிரம் ஆண்டுகள் நிறைவுபெற்று இந்த உலகம் மூன்றாம் ஆயிரமாவது ஆண்டில் (New Millennium) அடி எடுத்து வைத்த நாள். பாரதியார் கூறியது போல, "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" தனது ஆகச்சிறந்த பெருமிதத்தை இதைவிடச் சிறப்பாக, பொருத்தமான ஒரு மாபெரும் "மைல்கல்" நாளில் கொண்டாடியிருக்க முடியாது.

இப்படியான திட்டங்கள், இப்படியான செயல்பாடுகள், இப்படியான தேதிகள் அமைவது எல்லாம் இயல்பாக எளிதாக நடந்துவிடுவதில்லை. அதற்குப் பின்னால் மிக ஆழமான மொழியுணர்வும், பண்பாட்டு உணர்வும், கலையுள்ளமும், தனது எழுத்திற்கும், அழகியலுக்கும் தொலை நோக்குப் பார்வைக்கும் செயல்வடிவம் கொடுக்கும் அரசு அதிகாரமும் ஒருசேர அமையவேண்டும். இவையனைத்தும் கலைஞருக்கு இருந்தன. இது வரலாற்றில் எப்போதோ ஒருமுறைதான் கைகூடும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க சிலையை வடிவமைத்தவர் உலகப்புகழ் பெற்ற சிற்பி கணபதி ஸ்தபதி. இந்தச் சிலை செயல்வடிவம் பெற்றது எப்படி என்பது குறித்த விவரங்களை சிற்பி செல்வநாதன் அளித்த ஒரு நேர்காணல் மூலம் படித்தறிந்தேன். அவர் சிற்பி கணபதி

ஸ்தபதியின் சகோதரரின் மகன் ஆவார்.



குமரிக் கடல் நடுவே, பாறையில் 133 அடி உயரத்தில் வள்ளுவருக்கு சிலை வைத்தால் எப்படி இருக்கும், அது நடைமுறையில் சாத்தியமா என்று முதல்வர் கலைஞர் கணபதி ஸ்தபதியிடம், தொலைபேசியில் கேட்டார். அது "முடியும்" என்று சொன்ன சிற்பி, குமரிக்கடலில் அலைவீச்சு அதிகம். அது காலம் காலத்திற்கும் நிலைத்து நிற்க வேண்டுமென்றால் அந்தச் சிலையை ஒரே கல்லில் செதுக்காமல் கோயில் கட்டுவதுபோல கற்களை அடுக்கிக் கட்ட வேண்டும்" என்றும் கூறினார். முதல்வரும் அவ்வாறே செய்யலாம் என்று ஒப்புக்கொண்டாராம். இவ்வாறு தான் இந்தமாபெரும்சிலைப்பணி தொடங்கியிருக்கிறது என்பதை செல்வநாதன் தெரிவிக்கிறார்.

இந்தச் சிலையின் கட்டமைப்பிற்குப் பின்னால் திருக்குறளின் அமைப்பு சார்ந்த ஒரு திட்டமிடல் உள்ளது என்பதை உணரும்போது வியப்பாக இருக்கிறது. பெருமை மேலிடுகிறது. சிலையின் அறபீடம் 38 அடி. ஏனெனில் திருக்குறளின் அறத்துப்பாலில் 38 அதிகாரங்கள்; திருவள்ளுவரின் முழு உருவச்சிலை 95 அடி, ஏனெனில் பொருட்பால் (70) மற்றும் இன்பத்துப்பால் (25) இரண்டும் சேர்த்து 95 அதிகாரங்கள்.

அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலின் குறியீடாக முப்பது அடி உயரம் கொண்ட இயற்கையான பாறை. அதன் மீது அறம் என்ற பீடத்தில் நிற்கும் திருவள்ளுவர். திருக்குறளின் அடிப்படை திசை அறம் தான். அறத்தான் வருவதே இன்பம்" என்பதே திருக்குறள் முன்வைக்கும் தேற்ற ஏகாரத் தெளிவு.

சென்னை சோழிங்கநல்லூரில் தலை, கை, அம்பாசமுத்திரத்தில் பீடம்; கன்னியாகுமரியில் உடல் என்று மூன்று இடங்களில் சிலை வடிவமைக்கப்பட்டது. மொத்த எடை 7000 டன்.

சிலை திறப்புவிழாவில் பேசும் போது, "கடலும் மலையும் உள்ளவரை இந்தச் சிலை இருக்கும் என்று கணபதி ஸ்தபதி சொல்கிறார்" என்று கலைஞர் குறிப்பிட்டாராம். 2004ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் தேதி இந்தியப்பெருங்கடலை "ஆழிப்பேரலை" அலைக்கழித்தது. ஆனாலும் திருவள்ளுவர் சிலை, திருக்குறள் போலவே நிலைத்து நின்றது; நிற்கிறது.


அடையாளங்களைக் கடந்த அற்புதனாகிய திருவள்ளுவர் மீது "புற அடையாளங்களை" இட்டுக்கட்டி நிரப்பி, கையகப்படுத்தும் குறுக்குவழி முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. ஆனாலும் இது புதிதும் அல்ல. நாம் அய்யன் என்று அன்புடன் அணுக்கமாக அழைக்கும் திருவள்ளுவரின் இயற்பெயர் "மாதானுபங்கி" என்று கட்டுக்கதைகளைக் கட்டவிழ்த்துவிட்ட காலத்திலிருந்தே இந்த மடைமாற்று முயற்சிகள் தொடங்கிவிட்டன. திருக்குறளை "இதன் சாரம் அதன் சாரம்" என்று சராசரியாக்கி ஓரம்கட்டும் முயற்சிகளைத் தமிழ்ச் சமூகம் தொடர்ந்து கண்கூடாகப் பார்த்துவருகிறது, அப்படி எல்லாம் யாரும் கடத்திச்சென்று விட திருக்குறள் ஒன்றும் "எடுப்பார் கைப்பிள்ளை"யும் அல்ல; தனது ஆகச் சிறந்த பண்பாட்டுப் பெருமிதத்தை "தத்து கொடுக்க" தமிழ்சமூகமும் ஒருபோதும் அனுமதிக்கப்போவதும் இல்லை. வள்ளுவரின் வேட்டியின் நிறம் வெண்மை; இது ஒவ்வொரு தமிழரும் உணர்ந்திருக்கும் உண்மை.

அடையாளங்களுக்கு அப்பால் நின்று பேசுவது போன்ற மெய்யறிவும் விடுதலையும் வேறு எதுவும் இருக்கிறதா? அது வள்ளுவன் தனக்குள் உணர்ந்த உலகப் பொறுப்பு. எல்லைகளற்றது வானம். அதனால் தான் அது அழகாக இருக்கிறது. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சமத்துவம்; உறுபசி அகற்றும் பகிர்தல் அறம், கல்விப்பரவலாக்கம், மெய்ப்பொருள் காண்பது அறிவென்று உணர்த்தும் பகுத்தறிவுப் பாதை, சமூகநீதி ஆகிய கோட்பாடுகளின் தடம் பற்றி தமிழ்ச் சமூகத்தை வழிநடத்துவது கூட திருக்குறள் என்னும் திசைகாட்டும் கருவி தான் என்று தோன்றுகிறது.

திருவள்ளுவர் சிலையை மீண்டும் திரும்பிப்பார்க்கிறேன் சிந்துவெளிப் புனல்; கீழடி மணல், ஈரடிக் குறள் என்று எனக்குள் நானே சொல்லிக் கொள்கிறேன். திருக்குறள் ஒரு தனிமனிதரின் குரல் அல்ல! ஓர் உயர்நாகரீகத்தின் ஒட்டுமொத்த தெளிவின் திரள். திருக்குறளை மொழிபெயர்ப்பில் படித்தால் கூட முன்னேறிவிடலாம். தமிழில் படிக்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள் வரம் பெற்றவர்கள்.

திருக்குறள் ஒரு தனிமனிதரின் குரல் அல்ல! ஓர் உயர்நாகரிகத்தின் ஒட்டுமொத்த தெளிவின் திரள். திருக்குறளை மொழிபெயர்ப்பில் படித்தால் கூட முன்னேறிவிடலாம். தமிழில் படிக்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள் வரம் பெற்றவர்கள்.

இந்த கம்பீரமான பேரறப் பெருஞ் சிலை இல்லாத குமரிக்கடலை என்னால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை. அவ்வளவு நெருக்கமாகவும் நெகிழ்வாகவும் இருக்கிறது. முத்தமிழறிஞர் கலைஞருக்கு நெஞ்சார நன்றி சொல்லி நகர்கிறேன்.


25

திருவள்ளுவ கலைஞரும் திராவிட இயல் முதல்வரும்



பெரும்புலவர்
மு. படிக்கராமு

சங்க காலத் தமிழர், பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய் தீர் ஒழுக்க நெறி நின்றவர்; பெருமைமிகு நிறைமொழி மாந்தர்; அன்றறிவாம் என்னாது அறம் செய்தோர்; இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்ந்தவர்; மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை எனக் கொண்டொழுகியவர்; அறிவறிந்த பழி பிறங்காப் பண்புடை நன்மக்கட் பேறு பெற்றவர்; அன்பை அகத்துறுப்பாகக் கொண்டவர். ஒரு விருந்து வைகலும் ஓம்புபவர். பணிவுடைமையையும் இன்சொல் இயம்புவதையும் அணிகலனாக அணிந்தவர்.

ஒருவர் தினைத்துணை நன்றி செயினும் அதனைப் பனைத்துணையாக் கொள்பவர்; சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால் கோடாத சான்றோர்; நிலையில் திரியாது அடங்கியோர்; விழுப்பம் தரும் ஒழுக்கத்தை உயிரினும் மேலாய் ஓம்பியவர்; அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்துக் கொண்டவர்; தன் நெஞ்சத்து அழுக்காறு இல்லாத இயல்பை ஒழுக்காறாகக் கொண்டவர்; அறனறிந்து வெஃகா அறிவுடையவர்; ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்பவர்;

பொருள் தீர்ந்த சொல்லைப் பொச்சாந்தும் சொல்லாதவர்; மறந்தும் பிறன்கேடு சூழாதவர்; தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு எனக் கொண்டவர்; மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று எனக் கொண்டவர்; தோன்றின் புகழோடு தோன்றியவர்; அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் எனக் கொண்டவர்.

உற்ற நோய் நோன்றவர், உயிர்க்கு உறுகண் செய்யாதவர்; உலகம் பழித்ததை ஒழித்தவர்; பிறன்பொருளைக் கள்ளத்தால் கள்வேம் என உள்ளத்தாலும் உள்ளாதவர்; பொய்யா விளக்கே விளக்கு எனக் கொண்ட சான்றோர்; இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும் புணரின் வெகுளாமை நன்று எனக் கொண்டவர்; எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம் மாணா செய்யாமை தலை எனக் கொண்டவர்;

தமிழன் பெற்ற
ஒப்புயர்வற்ற உயர்
செல்வம் திருக்குறள்
எனினும் அஃது
தமிழனுக்கு மட்டும்
பயன்படும் நூலன்று.
உலக மாந்தர்
அனைவரும் ஒருங்கே
கற்று மேனிலை எய்த
வழிகாட்டும் நூலாகும்.
திருவள்ளுவத்தின்
சிறப்பாலே திகழும்
தமிழன் பெருகும் செல்வம்
எனப் பேணிப் பெரிதும்
அதனைப் பரப்புதலே
உரிய கடனாகும்.

அற்கா இயல்பிற்கு செல்வம், அது பெற்றால் அற்குப ஆங்கே செய்துவிடுவர்; பற்றற்றான் பற்றினைப் பற்றியவர்; எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப் பொருள் மெய்ப்பொருள் காணும் அறிஞர். வேண்டாமை அன்ன விழுச்செல்வம் பெற்ற செல்வர்; இரு வேறு உலகத்து இயற்கையை அறிந்த மெய்யுணர்வாளர்.

முறை செய்து காப்பாற்றும் மன்னவன்; கற்பவை கசடறக் கற்றவர் கற்ற வழி நின்றவர்; நுண்மாண் நுழைபுலம் உள்ளோர். செவியுணவிற் கேள்வி உடையார்; சென்ற இடத்தால் செலவிடாது தீது ஓர்கு நன்றின்பால் உய்க்கும் அறிவுடையோர். தன்னை எஞ்ஞான்றும் வியாதவர்; நன்றி பயவா வினையை நயவாதவர். பெரியாரைப் பேணித் தமராகக் கொள்பவர்; நல்லினத்தைத் துணையாகக் கொண்டவர்; செய்தக்கவே செய்பவர்; செய்தக்க அல்ல செய்யாதவர்.

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயலாற்றுவோர்; பருவத்தோடு ஒட்ட ஒழுகுபவர்; அஞ்சாமையைத் துணையாய்க் கொண்டு எஞ்சாமை எண்ணி இடனறிந்து செய்வர்; குணம் நாடிக் குற்றமும் நாடி, அவற்றுள் மிகை நாடி மிக்க கொள்வர்.

இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண்ணே விட்டனர்; சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வன்தான் பெற்றத்தால் பெற்ற பயன் எனக் கொண்டனர்; புகழ்ந்தவை போற்றிச் செய்தனர்; மாநில மன்னவர் குடிதழீஇக் கோல் ஓச்சினர். கண்ணோட்டமே கண்ணிற்கு அணிகலனாகக் கொண்டவர்; உள்ளுவது எல்லாம் உயர்வே உள்ளினர்; அடி அளந்தான் தாஅய தெல்லாம் ஒருங்கே எய்தினர் மடியிலா மன்னவர்.

உலைவின்றித் தாழாது உஞற்றியவர் ஊழையும் உப்பக்கம் கண்டனர். இடும்பைக்கு இடும்பை படாது, இடும்பைக்கு இடும்பை படுத்தினர்; செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து இயற்கை அறிந்து செயல்புரிந்தனர்; கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிந்தனர்; ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் சான்றோர் பழிக்கும் வினை செய்யான்; கலங்காது கண்ட வினைக்கண் துலங்காது தூக்கம் கடிந்து செய்தனர். பொருள் கருவி காலம் வினை இடனோடு ஐந்தும் இருள் தீர எண்ணிச் செய்தனர். ஐயப் படாஅது அகத்தது உணர்ந்தவரும் இருந்தனர்;

சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர் அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுவர்; நாடு - பிணி இன்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம் ஆகிய ஐந்தையும் அணியாய்க் கொண்டு விளங்கியது; வினைமாட்சியரால் நாடு மாட்சிமை பெற்று விளங்கியது; தமிழர் திறனறிந்து தீதின்றி வந்த பொருளையே பொருளாகக் கருதினர்; கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும் ஆற்றல்



உடையவராய்ப் படையினர் விளங்கினர். படைஞர் பேராண்மையும் ஊராண்மையும் ஒருங்கே பெற்றிருந்தனர்.

உடுக்கை இழந்தவன் கைபோல நண்பனின் இடுக்கண் களைந்தனர்; அன்பின் வழிவந்த கேண்மையர், அழிவந்த செய்யினும் அன்பறார்; பகையை நட்பாகக் கொண்டொழுகும் பண்புடையவர்; ஆற்றுவார் ஆற்றல் இகழாதவர்; அற்றால் அளவறிந்து உண்டனர்; அடுக்கிய கோடி பெறினும் குன்றுவ செய்யாதவர். மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அனையவர்; ஆற்றின் அருமையுடைய செயலையே ஆற்றியவர்; ஊழி பெயரினும் தாம் பெயரார்; நயனொடு நன்றியே புரிந்த பயனுடையார்; நாணால் உயிரைத் துறப்பவர்; குற்றம் இலனாய்க் குடி செய்து வாழ்ந்தனர்; உழுதுண்டு வாழ்ந்தனர் இடமில்லாக் காலும் இரவொல்லார்.

இத்தகைய சீரோடும் சிறப்போடும் பீடும் பெருமையும் துலங்க பண்டு வாழ்ந்து, உலகிற்கு வழிகாட்டியாய் விளங்கியவர் தமிழர் என்பதைத் தொல்காப்பியமும், எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் எடுத்து பொழிந்ததைக் காட்டிலும் மிகத் தெளிவாகக் கட்டுக்கோப்புடன் எடுத்து மொழியும் நூல் திருக்குறளேயாகும்..

தமிழன் பெற்ற ஒப்புயர்வற்ற உயர் செல்வம் திருக்குறள் எனினும் அஃது தமிழனுக்கு மட்டும் பயன்படும் நூலன்று. உலக மாந்தர் அனைவரும் ஒருங்கே கற்று மேனிலை எய்த வழிகாட்டும் நூலாகும். திருவள்ளுவத்தின் சிறப்பாலே திகழும் தமிழன் பெருகும் செல்வம் எனப் பேணிப் பெரிதும் அதனைப் பரப்புதலே உரிய கடனாகும்.

திருவள்ளுவர் அரசு அலுவலகங்களில் எல்லாம் அணி செய்தார். அலுவலகங்களில் திருக்குறள் மணி ஒலித்தது. பேருந்துகளில் எல்லாம் திருவள்ளுவர் ஊர் ஊராய் நாடெங்கும் பயணப்பட்டார். குறளின் உண்மைப் பொருளைக் காணவியலாது மூடி இருந்த திரைகளை விலக்கி, திருவள்ளுவரின் உண்மை உள்ளம் காணப் பகுத்தறிவு உரை தந்து பரப்பினார்.

அக்கடனைத் தலைமேற்கொண்ட உயர் தமிழர்களில் 'தமிழ்ப்பற்று, தமிழறிவு, தமிழுணர்வு மிக்கவர், சங்க இலக்கியப் பயில்வினர், தமிழ் நாகரீகமே மனித நாகரீகம் என்ற கடைப்பிடியினர், புத்திலக்கியம் படைக்கும் கற்பனைக் கவிஞர், எழுத்திலும் சொல்லிலும் தொடை வளம் மிக்க உரைநடைக் கவிதையர், நாடகப் பார்வையர், உரை பல கற்றவர், நாட்டின் ஆட்சியில் உயர்பதவி தாங்கியவர், உலக அரசியற் கண்ணோட்டத்தவர், பல்துறை மக்களொடு அணுகிப் பழகிக் காலவுலகியல் கைவரப் பெற்றவர், வாழ்வுப் பாசறையில் மலையும், கடலும் கண்டவர், தோலா நாவினர், தொய்யா நெஞ்சினர், சாதி சமயச் சழக்கிற் புகாப் பகுத்தறிவினர், சிந்தனைச் செயலினர் திருக்குறட் சிந்தையர், தமிழினத் தலைவர், எழுத்துக் கலை, செந்நாக் கலை, நாடகக் கலை, கவிதைக் கலை, அரசியற் கலை, எழிற்கலை என்றாங்கு பல்வேறு கலைகளிலும் நெஞ்சு அறிவு செயல் தோய்ந்தவர்" என பெருமூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரால் படம் பிடித்துக் காட்டப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குறள்நெறி பரப்ப மேற்கொண்ட பணிகள் பலவாகும்.


அன்னார் முயற்சியால் திருவள்ளுவர் அரசு அலுவலகங்களில் எல்லாம் அணி செய்தார். அலுவலகங்களில் திருக்குறள் மணி ஒலித்தது. பேருந்துகளில் எல்லாம் திருவள்ளுவர் ஊர் ஊராய் நாடெங்கும் பயணப்பட்டார். குறளின் உண்மைப் பொருளைக் காணவியலாது மூடி இருந்த திரைகளை விலக்கி, திருவள்ளுவரின் உண்மை உள்ளம் காணப் பகுத்தறிவு உரை தந்து பரப்பினார்.

திருக்குறள் மக்கள் மனத் தகத்தே என்றும் அழியா ஓவியமாய் அமைந்திருக்க கலை மணமும் கருத்து மணமும் எடுத்துக்காட்டு மணமும் கமழக் குறளோவியம் தீட்டிப் பல மொழிகளிலும் பரவ வழி செய்தார்; அய்யன் திருவள்ளுவனுக்கு 'வள்ளுவர் கோட்டம்' எனும் திருப்பெயரில் ஐயன்மிகு பண்பாட்டு அறநெறி மண்டபம் அமைத்தார்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு எனப் பாரதியாராலும்,

"வள்ளு வனைப்பெற்ற தால் பெற்ற தேபுகழ் வையகமே" எனப் பாவேந்தராலும்

- அடையாளம் காட்டப்பட்ட திருவள்ளுவப் பெருந்தகைக்கு, 25 ஆண்டுகட்கு முன்னர் உலகம் வியக்க, உண்மைத் தமிழர் பாராட்ட முக்கடலின் அலைகளும் கூடும் இடத்தில் 133 அதிகாரத்தில் குறள் வடித்த சீர்மையை நினைவுபடுத்த 133 அடி உயரத்தில் சிலை வடித்து அமைக்க வழி கண்டு நிறுவி, அதனை நெஞ்சம் நிறைந்த குறிக்கோள் பணி என உலகிற்கு உணர்த்திய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கட்கு உலகத்



தமிழர்கள் அனைவரும் கடமைப்பட்டவர்கள் ஆவர்.

குமரி முனையில் இருபத்தைந்து ஆண்டுகளாய்த் தன் பீடும் பெருமையும் மிக்க தோற்றத்தால் தன் எண்ணம் ஈடேறச் செய்துவரும் திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழாவைக் கொண்டாடும் அரிய வாய்ப்பு முதலமைச்சர்கட்கு இலக்கணமாய் இலங்கும் நம் தமிழ்நாடு திராவிட இயல் ஆட்சி நடத்தும் நம் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கட்கு வாய்த்திருக்கிறது. அவர்கள் 'கடல் அலை நடுவே இருக்கும் தமிழ்மலை என்ற அச்சிலைக்குப் புகழ் மாலை' அணிவித்திருக்கிறார்கள்.

"வள்ளுவம் என்பது வாழ்வியல் நெறியாக மாற வேண்டும். சமுதாயம் குறள் வழிச் சமுதாயமாக மலர வேண்டும். வேற்றுமையின் வேர்களைக் கிள்ளி யெறிய வள்ளுவ மருந்தே பொதுமருந்து ஆக ஆகுதல் வேண்டும்" என எண்ணியிருக்கிறார். எண்ணியவர் திண்ணியர், வினை மாட்சியர் ஆகலான் 'எண்ணிய எண்ணியாங்கு எய்தும் என்பது திண்ணம்!'

'வள்ளுவம் உலகெலாம் பரவ வேண்டும்
வள்ளுவ வாழ்வு மலர வேண்டும்.
வாழிய நலனே!'



சுனாமியையும் வென்ற சிலை!



பேராசிரியர்
சுப. வீரபாண்டியன்

அது வெறும் சிலை அன்று, தமிழகப் பண்பாட்டு வரலாற்றின் ஒரு பகுதி! ஒரு நுண் அரசியலைத் தன்னுள் அடக்கியபடி ஓங்கி உயர்ந்து நிற்கும் வள்ளுவச் செம்மாப்பு!

"வங்கத்து ஞானிகட்குச் சிலைகள் இங்கே! வடலூரார் போன்றார்க்குச் சிலைகள் எங்கே?" என்று கேட்பார் கவிஞர் சுரதா.

வடலூராருக்கு மட்டுமின்றி, வள்ளுவருக்குமே கூட இங்கு பெரிய சிலைகள் இல்லை. கன்னியாகுமரிக்குச் செல்பவர்கள் எல்லோரும், சூரிய உதயம் பார்க்கவும், விவேகானந்தர் பாறையைப் பார்க்கவும்தான் சென்று கொண்டிருந்தார்கள். இப்போது கேட்டால், குமரிக் கடலில் வானுயர ஓங்கி நிற்கும் வள்ளுவர் சிலை பார்க்கச் செல்கிறோம் என்பார்கள்! இந்த நுண் அரசியலைப் புரிந்தவர் புரிவாராக!

சென்னை, நுங்கம்பாக்கம் பகுதியில், குப்பை மேடாக இருந்த இடத்தை வள்ளுவர் கோட்டமாக மாற்றியவரும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர்தான்! அந்தக் கோட்டத்தில் இருக்கும் ஒவ்வொரு செங்கல்லும் கலைஞரின் கண் பார்வையில் இருந்து தப்பி இருக்க முடியாது! எல்லா வேலைகளும் முடிந்து, அதனைத் திறப்பதற்கான நாளும் குறிக்கப்பட்டுவிட்ட நிலையில்தான், 1976 ஜனவரி இறுதியில் கலைஞர் தலைமையிலான கழக ஆட்சி கலைக்கப்பட்டது.

பிறகு ஏப்ரல் மாதம், ஓர் அரசாங்க அலுவலகக் கட்டடத்தைத் திறப்பது போல் திறந்து வைத்தார்கள்! 13 ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராகி, அந்த வள்ளுவர் கோட்டத்திற்குள் தலை நிமிர்ந்து கால் வைத்தார் தலைவர் கலைஞர்!

எப்போதும் தமிழர்களின் வரலாறு, இலக்கியம், பண்பாடு என எல்லாவற்றிலும் மாறாத காதல் கொண்ட கலைஞர் அவர்கள், அவை அனைத்திற்கும் தன்னால் ஆன பங்கினைச் செய்திருக்கிறார்.





தொல்காப்பியப் பூங்காவைத் தந்தார். சங்க இலக்கிய அழகினைப் பல நூல்களில் எடுத்துக்காட்டினார். சிலப்பதிகாரத்தைப் பூம்புகார் என்னும் பெயரில் திரைக்காவியம் ஆக்கினார்!

திருக்குறளுக்கு ஒன்று இரண்டு இல்லை, மூன்று உரைகளை எழுதியிருக்கிறார். ஒரு நூல் 1330 குறட்பாக்களுக்கும் உரை தருகிறது. மற்ற இரண்டுநூல்கள்,குறிப்பிட்டசிலகுறள்களை எடுத்து விளக்குகின்றன."தெய்வம் தொழாஅள்..." எனத் தொடங்கும் குறளுக்கு, அவரே தன் மூன்று நூல்களில், இரண்டு உரைகளைத் தந்திருக்கிறார்.

> வெறும் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்திச் சிலை ஒன்று வைத்து விட்டார் என்று கூற முடியாது. அந்தச் சிலை முதலில் அவர் நெஞ்சில் எழுந்தது! கற்பனையில் வளர்ந்தது, கடைசியாய்த்தான் கடலில் கால் கொண்டது!

முதலில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் உரையையொட்டி, அவள் பெய் என்று சொன்னால் மழை பெய்யும் என்பது இல்லை, பெய் என்று சொன்னவுடன் பெய்கின்ற மழை எவ்வளவு நல்லதோ, அதை போன்றவள் என்று பொருள் சொன்னார். பெய்ய வேண்டிய நேரத்தில் பெய்யாமலும், பெய்ய வேண்டாத நேரத்தில் பெய்தும், மழை கெடுத்துவிடும் என்று வள்ளுவரே ஒரு குறளில் சொல்லியிருக்கிறார். அப்படி இல்லாமல், உரிய நேரத்தில், அழைக்கும் போது மழை வந்தால், அது எவ்வளவு நல்லது என்று எண்ணிப் பார்த்து எழுதப்பட்ட உரை இது!

பிறகு தலைவர் கலைஞரே வேறு வகையில் எண்ணிப் பார்த்து, இதனினும்






அழகான, வேறு எவரும் சொல்லாத ஓர் உரையைத் தந்திருக்கிறார். பெய் என்று சொல்லுகிற போதெல்லாம் மழை பெய்யுமானால் அதற்கு என்ன மதிப்பு இருக்கிறது? அம்மழையை யார் மதிப்பார்கள்? அப்படித்தான், கணவனைத் தொழுது எழுகிற பெண்ணையும் யாரும் மதிக்க மாட்டார்கள் என்று சுயமரியாதைச் சிந்தனையோடு அந்தக் குறளுக்கு கலைஞர் உரை எழுதியிருக்கிறார்.

இப்படிக் குறளில் தோய்ந்து தோய்ந்து, உரைகளை எழுதி, நூல்களில் மேற்கோள் காட்டி, மேடைகளில் திருக்குறளால் தன் உரையை அழகு செய்து, வள்ளுவத்தோடு இரண்டறக் கலந்து நின்றவர் நம் கலைஞர்!

வெறும் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்திச் சிலை ஒன்று வைத்து விட்டார் என்று கூற முடியாது. அந்தச் சிலை முதலில் அவர் நெஞ்சில் எழுந்தது! கற்பனையில் வளர்ந்தது! கடைசியாய்த் தான் கடலில் கால் கொண்டது!

21ஆம் நூற்றாண்டு தொடங்கிய ஒரு மாலைப் பொழுதில், அந்தச் சிலை தமிழனின் பெருமையை உலகெலாம் அறிய, எழுந்து நின்று சொன்னது!

24 ஆண்டுகள் ஓடிவிட்டன. இப்போது அந்தச் சிலைக்கான வெள்ளி விழாவைத் தமிழ்நாட்டின் இன்றைய மாண்புமிகு முதலமைச்சர், இன்னொரு கலைஞராய் நமக்குக் கிடைத்திருக்கும் தளபதி அவர்கள் விழா எடுத்துப் பெருமை சேர்க்கிறார்! கடலில் எழுந்த சுனாமியாலும் அசைக்க முடியாத அந்த வள்ளுவர் சிலை, கால ஓட்டத்தின் சுனாமிகளையும் வென்று நிற்கும், என்றும் நிற்கும்!



திருக்குறள் ஓலைச் சுவடிகள் சில உண்மைகள்...



பேராசிரியர்
பொ. வேல்சாமி

உலகம் முழுமையும் உள்ள சிந்தனையாளர்கள் "திருக்குறளை" வைத்துத்தான் தமிழையும் தமிழரையும் அடையாளம் கண்டு வருகின்றனர். இப்படியான வரலாற்றுச் சூழல் இருக்கையில், அண்மைக் காலங்களாகத் திருக்குறளைப் பற்றி இணையத்தளங்களில் பல்வேறுவிதமான தவறான கருத்துக்களைப் பலரும் பலவகையாகப் பேசி வருகின்றனர். இத்தகைய பலர் தங்களை அறிஞர்கள் போல கருதிக் கொண்டு எவ்வித ஆதாரமும் இல்லாத அபத்தக் கருத்துக்களைச் சிலர் சொல்லி வருகின்றனர். அத்தகைய அபத்தங்கள் ஒருசிலவற்றை வரிசைப்படுத்துவோம்.

திருக்குறள் எழுதப்பட்ட ஏட்டுச்சுவடிகள் ஒரு காலக்கட்டத்தில் தமிழகத்தில் இல்லாமல் போய்விட்டதா?

"அறிஞர் எல்லீஸ்" 1812ஆம் காலத்திற்கு முன்பு தமிழ்நாட்டில், திருக்குறள் எழுதப்பட்டு இருந்த ஓலைச்சுவடிகள் எல்லாம் தமிழ் மக்களால் நெருப்பிலிட்டு எரிக்கப்பட்டுவிட்டன என்றும் அதனால் திருக்குறள் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகளைத் தமிழகத்தில் காண்பது அரிதாகிவிட்டது என்றும் "அயோத்திதாசரின்" பாட்டனார் நெருப்பிலிருந்து எரிக்கப்படாமல் தப்பிய ஒரேயொரு திருக்குறள் ஓலைச்சுவடியை அறிஞர் எல்லீஸிடம் கொடுத்ததாகவும் அந்த ஒரேயொரு ஓலைச்சுவடியை வைத்து திருக்குறளை முழுமையாக அச்சில் முதல் முதலாகப் பதிப்பித்துவிட்டார் என்றும் அவ்வாறு எல்லீஸ் ஓலைச் சுவடியை அச்சிடாமல் இருந்திருந்தால் திருக்குறளே தமிழர்களுக்குக் கிடைக்காமல் அழிந்துப் போயிருக்கும் என்றும் இணையத்தில் பலரும் பேசி வருகின்றனர்.

இதில் ஒருதுளிகூட உண்மை இல்லை என்பதை எல்லீஸ் அவர்கள் பதிப்பித்த திருக்குறளே சான்றாகி விடுகிறது. அதாவது, எல்லீஸ் திருக்குறளில் உள்ள 1330 குறட்பாக்களில் வெறும் 129 குறட்பாக்களை மட்டும்தான் பதிப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் சொல்வதில் கொஞ்சமாவது உண்மையிருந்திருந்தால் எல்லீஸே திருக்குறளின் 1330 குறட்பாக்களையும் பதிப்பித்து இருந்திருப்பாரல்லவா?



ஏன் அதனை அவர் செய்யவில்லை? (எல்லீஸ் திருக்குறளை 1812இல் பதிப்பித்த 7 ஆண்டுகளுக்கு பின்னர்தான், அதாவது 1819இல் தான் மரணமடைந்தார் என்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.)

அதே 1812இல் தஞ்சை மலையப்பப் பிள்ளையின் மகன் ஞானபிரகாசன் என்பவரால் திருக்குறள் 1330 பாடல்களும் நாலடியாரும் திருவள்ளுவமாலையும் ஆகிய மூன்று நூல்களையும் சேர்த்து பதிப்பித்துள்ளார். எனவே திருக்குறளை முதன்முதலாக அச்சில் கொண்டு வந்தவர் ஞானபிரகாசன்தான் என்பது வெளிப்படையானது. ஞானபிரகாசன் தன் பதிப்பைப் பற்றிய குறிப்பில் திருக்குறள் ஓலைச்சுவடிகள் பலவற்றைத் பலரிடமிருந்தும் பெற்று, அந்தச் சுவடிகளை ஒப்பிட்டு இந்தப் பதிப்பை வெளியிட்டதாக எழுதியுள்ளார்.

இந்த முதற்பதிப்பு வெளிவருவதற்கு 100 ஆண்டுகளுக்கு முன்பாகவே சீகன்பால்கு (1682-1719), வீரமாமுனிவர் (1680-1747), சிவஞானமுனிவர் (1785இல் மரணமடைந்தார்), கிண்டர்ஸ்லே (1763-1831) இவர்களைப் போன்ற அறிஞர்கள் குறிப்பிடும் செய்திகள் திருக்குறள் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் தமிழகம் முழுமையும் நிறைந்து இருந்ததை உறுதிசெய்கின்றன.

சீகன்பால்கு அவர்கள் 1708இல் தமிழ்நாட்டில் புகழ்பெற்றிருந்த 200க்கு மேற்பட்ட தமிழ் ஏட்டுச்சுவடிகளைக் குறிப்பிட்டு எழுதியுள்ளார். அத்தொகுதியில் தொல்காப்பியம், தேவாரம், திருவாசகம், திவ்விய பிரபந்தம், இராமாயணம், மகாபாரதம் போன்று திருக்குறளும் புகழ்பெற்றிருந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

1730 காலக்கட்டத்தில் வீரமாமுனிவர் திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். அத்துடன், தான் எழுதிய "செந்தமிழ்" "கொடுந்தமிழ்" ஆகிய நூல்களில் 100க்கும் மேற்பட்ட குறள்களை மேற்கோள் காட்டியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எல்லீஸ் திருக்குறளை வெளியிடுவதற்கு 27 ஆண்டுகளுக்கு முன் மரணமடைந்த திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த சிவஞானமுனிவர் (1785) "சோமேசர் முதுமொழி வெண்பா" என்ற நூலில் திருக்குறளில் உள்ள 133 அதிகாரங்களிலும் அதிகாரம் ஒன்றிற்கு ஒரு பாட்டை எடுத்து 133 வெண்பாக்களாகப் பாடியுள்ளார். அக்காலகட்டத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தில் திருக்குறள் எழுதப்பட்ட பல ஏட்டுச்சுவடிகள் பாதுகாக்கப்பட்டுள்ளதைப் புரிந்து கொள்கிறோம்.

அடுத்து 1794 ஆம் ஆண்டு திருக்குறளின் சில பகுதிகளை ஆங்கிலத்தில் கிண்டர்ஸ்லே என்பவர் மொழிபெயர்த்துள்ளார். இவர் எல்லீஸ் வாழ்ந்த காலத்திலும் எல்லீஸ் மறைந்த பிறகு 12 ஆண்டுகளும் தமிழகத்தில் அரசு குடிமைப்பணி (civil service officer) அதிகாரியாகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எல்லீஸ் திருக்குறளின் 129 குறட்பாக்களைப் பதிப்பிப்பதற்கு 18 வருடங்களுக்கு முன்பே இந்த நூல் வெளிவந்துவிட்டது. இந்த நூற்பதிப்பின் வழியாக திருக்குறள் எழுதப்பட்ட தமிழ்ச்சுவடிகள் எல்லீஸ்க்கு முன்பே பரவலாகக் கிடைத்துள்ளன என்பது வெளிப்படுகின்றது.

இதேபோன்று எல்லீஸ்க்கு பின்பும் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் திருக்குறள் சுவடிகளும் திருக்குறள் உரைச்சுவடிகளும் கிடைத்த செய்திகள் பல உள்ளன. எடுத்துக்காட்டாக, "மகாவித்துவான் தண்டபாணி தேசிகரின்" குறிப்புகளைக் கூறலாம்.

மகாவித்துவான் தண்டபாணி தேசிகரைக் கொண்டு 1951இல் திருக்குறள் உரைவளத்தை மூன்று தொகுதிகளாக தருமபுரம் ஆதீனம் வெளியிட்டுள்ளது. பின்னர் அதே "உரைவளம்" நூலை பல்வேறு உரைகளுடன் விரிவுபடுத்தி, "திருக்குறள் உரைக்களஞ்சியம்" என்ற பெயரில் 1981இல் தொடங்கி 1990 வரை எட்டுத்தொகுதிகளாக மதுரைப் பல்கலைக்கழகம் தண்டபாணி தேசிகரை வைத்து வெளியிட்டுள்ளது. இந்த இரண்டு விதமான திருக்குறள் தொகுதிகளும் வெளிவருவதற்கு தருமபுரம் ஆதீனம் உள்பட தமிழ்நாட்டில் வாழ்ந்த புலவர்கள் பலரிடமிருந்து திருக்குறள் ஏட்டுச்சுவடிகளைப் பெற்றுக் கொண்டதாக மகாவித்துவான் குறிப்பிட்டுள்ளார்.

1812 இல் தொடங்கி கிட்டத்தட்ட 1990 வரையில் பல்வேறு வகையான திருக்குறள் மூலப்பதிப்புகளும் உரைப்பதிப்புகளும் வெளிவந்துள்ளன. அவற்றுள் முக்கியமான ஆராய்ச்சிப் பதிப்புகள் பல உள்ளன.

1. *1840, 1852 துறு பாதிரியாரின் திருக்குறள் பரிமேலழகர் உரையுடன் கூடிய பதிப்பு (630 பாடல்கள் மட்டும்)*
2. *1861 ஆறுமுகநாவலரின் பதிப்பு (பரிமேலழகர் உரை முழுமையும்)*
3. *1865 சார்லஸ் கிராலின் இலத்தீன் மொழிப்பெயர்ப்பு*
4. *1886 ஜீ.யூ.போப்பின் ஆங்கில மொழிபெயர்ப்பு*
5. *1904 வடிவேலு செட்டியார் பதிப்பு*
6. *1917 வ.உ.சி.யின் மணக்குடவர் உரைப் (அறத்துப்பால்) பதிப்பு*
7. *1925 பொன்னுசாமி நாட்டார் மணக்குடவர் உரை முழுமையும்*
8. *1937 வை.மு.கோ. பதிப்பு*
9. *1945, 1948 பழனியப்ப பிள்ளையின் காளிங்கர் பரிபெருமாள் உரைப் பதிப்பு*
10. *1949 சக்கரவர்த்தி நயினாரின் திருக்குறள் கவிராஜ பண்டிதர் உரைப் பதிப்பு*
11. *1951 மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் - தருமபுரம் உரைவளம் பதிப்பு.*

18, 19, 20ஆம் நூற்றாண்டுகளில் திருக்குறள் மூலச் சுவடிகளும் பல்வேறு உரையாசிரியர்கள் திருக்குறளுக்கு எழுதிய உரைச்சுவடிகளும் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், அரசு ஓரியண்டல் கையெழுத்துப் பிரதிகள் நூலகம், தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகம், மதுரைத் தமிழ்ச் சங்கம் போன்ற இடங்களில் (தமிழ்நாடு முழுமையும்) 200க்கு மேற்பட்ட திருக்குறள் ஓலைச்சுவடிகள் இன்றும் பாதுகாப்புடன் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில் திருக்குறள் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் எவையும் என்றும் தமிழ்நாட்டில் தீயினால் எரிக்கப்படவில்லை என்பதையும் அந்தச் சுவடிகள் காலங்காலமாகப் பாதுகாக்கப்பட்டு இன்றுவரை வந்துள்ளன என்றும் உறுதியாகக் கூறலாம்.





நெருநல் உளனொருவன் இன்றில்லை



கவிஞர்
யுகபாரதி

ஒரே ஒரு திருக்குறளை எடுத்துக்கொண்டு அதற்கு எத்தனைபேர் எத்தனைவிதமாக உரையெழுதியிருக்கிறார்கள் என்பதைக் கவனித்தாலே வள்ளுவரின் தனித்துவம் விளங்கிவிடும். ஆளுக்கும், அறிவிற்கும் தக்கவாறு ஒரு குறள் அர்த்தமாகிறது என்றால் அது, எப்படிச் சிறந்ததாக ஆகும் என்கிற கேள்வி எழலாம். உண்மையில், வள்ளுவர் அங்கேதான் வேறு எவரைவிடவும் வித்தியாசப்படுகிறார். ஒரு நல்ல படைப்பென்பது வாசிப்பவருக்கும், அதுகுறித்து யோசிப்பவருக்கும் கூடுதல் இடமளிக்க வேண்டும். தட்டையான சொற்களில் செய்திகளையோ, செயல்களையோ விவரிப்பது இலக்கியமாகாது.

ஓர் இலக்கியம் முழுமையடைய வேண்டுமானால் எழுத்தாளனே எல்லாவற்றையும் எழுதிவிடக் கூடாது என்பார்கள். எதை எழுதினாலும் அதை வாசிப்பவர்கள் வந்துபோகக் கொஞ்சமாவது வைக்கவேண்டும். வள்ளுவர், ஒவ்வொரு குறளிலும் உள்வாங்கும் உரையாசிரியர்கள் நீட்டியும் குறுக்கியும் எதையேனும் சொல்ல அனுமதித்திருக்கிறார். சங்க இலக்கியத்திற்குப் பின் ஆகப்பெரும் நூலாகத் திருக்குறளைக் நாம் கொண்டாடுவதற்குக் காரணம், எல்லாப் பொருள் குறித்தும் அந்நூல் பேசுகிறது என்பது மட்டுமன்று, எல்லாக் காலத்திற்கும் பொருந்தக்கூடிய தன்மையுடனும் அது அமைந்திருக்கிறது என்பதால்தான்.

கருத்து எதுவென்றாலும் அதைக் காலத்திற்கு ஏற்றவாறு பொருத்திக்கொள்ள முடியும். நேற்று அளித்த அதே பொருளை இன்றும் அளித்தால் அதில் விஷேசம் ஒன்றுமில்லை. இன்றைய நில அமைப்பையோ வாழ்நிலையையோ வள்ளுவர் கண்டிருக்க வாய்ப்பில்லை. ஆனால், அவர் வடித்துக் கொடுத்துள்ள வரிகள் அப்படியே பொருந்துகின்றன.

பெண்களின் வாழ்வியல், உரிமைகள் பற்றிய சில பிறழ்வுகள் உண்டு. எனினும், அவற்றையும் தமிழாய்ந்த அறிஞர்கள் தம்முடைய மேதமையால் உரிய பொருள்காண உதவியுள்ளனர். வள்ளுவர் தம்முடைய அதிகாரங்களை

இன்பம், பொருள், அறம் என்றே தொல்காப்பியர் தம் நூற்பாவில் வாழ்வியலை வரிசைப்படுத்துவார். வள்ளுவரோ அறத்தை முன்வைத்து பொருளையும், இன்பத்தையும் பின்னே வைக்கிறார். அறத்துடன் பொருளையும் இன்பத்தையும் ஈட்ட வேண்டுமென்னும் சிந்தனை, வள்ளுவர் காலத்தின் விழுமியம். அதற்குமுன் வாழ்விற்கு இன்பமே பிரதானமாக இருந்திருக்கிறது.

வரிசைப்படுத்தும் முறையிலேயே தமக்கு முன்னிருந்தவர்களைத் தாண்டியிருக்கிறார். இன்பம், பொருள், அறம் என்றே தொல்காப்பியர் தம் நூற்பாவில் வாழ்வியலை வரிசைப்படுத்துவார். வள்ளுவரோ அறத்தை முன்வைத்து பொருளையும், இன்பத்தையும் பின்னே வைக்கிறார். அறத்துடன் பொருளையும் இன்பத்தையும் ஈட்ட வேண்டுமென்னும் சிந்தனை, வள்ளுவர் காலத்தின் விழுமியம். அதற்குமுன் வாழ்விற்கு இன்பமே பிரதானமாக இருந்திருக்கிறது.

முப்பாலில் வள்ளுவர் பொருட்பாலுக்கே கூடுதல் அதிகாரங்களை வழங்கியிருக்கிறார். ஒருவிதத்தில் பார்த்தால் அவர் ஒரு பொருள்முதல்வாதி. நான் சொல்வது, அதிகாரங்களை அவர் கட்டமைத்துள்ள நுட்பம். இருபத்து ஐந்து அதிகாரங்களைக் காமத்திற்கும், முப்பத்தெட்டு அதிகாரங்களை அறத்திற்கும் வகுத்த அவர் எழுபது அதிகாரங்களைப் பொருட்பாலுக்கு ஒதுக்கியிருக்கிறார். கருத்துநிலைகளில் வெவ்வேறாகக் கட்டுண்டிருந்த தமிழ்ச்சமூகத்தில் பொருளின் அவசியத்தை அவரளவிற்குப் புரிந்துகொண்டு விளக்கியவர்கள் எவருமில்லை. பதினான்காயிரம் வார்த்தைகளில் மொத்த வாழ்வையும் அவரால் எழுத முடிந்திருக்கிறது.

எனக்கு வள்ளுவரிடம் ஆகப்பிடித்தது, வற்றாத அவருடைய சொல்வளம். ஒரு பொருளுக்கு எத்தனை சொல் இருக்கின்றனவோ அத்தனையையும் அவர் ஓர் அதிகாரத்தில் கொண்டுவந்து சேர்த்துவிடுகிறார். அதே போல, ஒரு பொருளுக்கு எத்தனை சொற்கள் உண்டென்பதையும் அவரிடம் கற்கலாம். ஓர் அதிகாரத்தில் அவர் பத்துக் குறட்பாக்களை எழுதியுள்ளார் எனில், அதற்குமேல் அப்பொருள் குறித்துச் சிந்திக்க எதுவுமே இல்லை எனும் நிலைக்கு நம்மைத் தள்ளிவிடுவார்.

'செய்க பொருளை' என்ற அவர், தான் செய்த எல்லாக் குறளிலும் பொருளைக் கொண்டுவந்து பொருத்தியிருக்கிறார். ஏழு சொற்களை இரண்டு அடிகளாக்கி அவர் கடத்தும் கருத்தும், கவித்துவமும் அலாதியானவை. கிழக்கிந்திய கம்பெனி அதிகாரியாயிருந்த கிண்டர்ஸ்லே,1794இல் முதன்முதலில் ஆங்கிலத்தில் திருக்குறள் குறித்த செய்தியையும், மொழிப்பெயர்ப்பையும் Specimens of Hindoo Literature என்னும் நூலில் பதிவு செய்திருக்கிறார்.

சிலர் சொல்வதுபோல எல்லீஸ் துரையே முதலில் ஆங்கிலத்தில் திருக்குறளை அறிமுகப்படுத்தினார் என்பது பிழையான தகவல். எல்லீஸுக்கு முன்னரே கிண்டர்ஸ்லே அக்காரியத்தைச் செய்திருக்கிறார். கிண்டர்ஸ்லேயின் நூல், தற்போது தமிழ் இணையக் கல்விக் கழக

நூலகத்தில் கிடைக்கிறது. விரும்பினால் வாசிக்கலாம். அயோத்திதாசரின் பாட்டனார் கந்தப்பன் வழியே திருக்குறள் ஓலைச்சுவடிகள் எல்லீஸுக்குக் கிடைத்ததாகச் சொல்லப்படும் குறிப்பையும் இத்துடன் ஒப்பு நோக்கலாம். இந்த இடத்தில் கவியோகி சுத்தானந்தபாரதி ஆங்கிலத்தில் ஆக்கி அளித்துள்ள திருக்குறளைப் பற்றிச் சொல்ல வேண்டும்.


தமிழின் ஓசை ஒழுங்குகளைக் கருத்திற்கொண்டு அவர் பெயர்த்துள்ள குறள்கள் இரசிக்கத் தக்கவை.

'உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு'

என்னும் குறளை அவர், 'Love between me and this lady / Is like bond between soul and body' என்று தந்திருக்கிறார். தமிழிலுள்ள இயைபின் அழகை, ஒவ்வொரு குறளிலும் கொண்டுவர முயன்றிருப்பதைக் கவனிக்கலாம்.

'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல'

என்பதற்கு 'The words of mouth are of no use / When eye to eye agrees



> வலிமை குன்றிய நாரை,
> கடலலைகளை ஒட்டிய
> மரக்கிளையில் இருந்தபடி,
> அலைகள் கொண்டுவரும்
> மீன்களைத்
> தனக்கு இரையாக
> உண்ணுவதைப்போல்,
> தன் அழகை, வலிமையை
> இழந்த காதலி,
> காதலித்தவன் தானே
> வந்து தன் தவிப்பினைப்
> போக்கித் தன்னை
> மணந்துகொள்வான்
> என்று எதிர்பார்க்கிறாள்
> என்பதாக அம்மூவனார்
> எழுதியிருக்கிறார்.

the gaze' என்று வழங்கியிருக்கிறார். திருக்குறளைப் பொறுத்தவரை அதில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள், காட்சிகளாக விரியக்கூடியவை. வெறும் சொற்களை அடுக்கி, கருத்துரைகளை அவர் கக்குவதில்லை. கீழ்க்கணக்கு நூல்களில் எல்லோராலும் வாசிக்கப்படும் நூலாகத் திருக்குறள் அமைந்திருப்பதற்கு அதுவும் ஒரு காரணம்.

'துறைவன் துறந்தமை' எனத் தொடங்கும் ஒருகுறள், காமத்துப் பாலில்(1157) வருகிறது. அக்குறள், கணவன் பிரிந்துவிட்டதை கழன்றுவிடும் தன்னுடைய கைவளையல்களே காட்டிக் கொடுத்துவிடும் போலிருக்கிறதே என்று வருத்தமுறும் தலைவியைப் பற்றியது. ஊருக்கோ உறவினருக்கோ தெரியாமல் கணவன் பிரிந்திருக்கிறான். அந்தப் பிரிவை அவளால் தாங்க முடியவில்லை. உடல் மெலிந்துவிடுகிறது. மணமுடித்த மகிழ்ச்சியில் திளைந்திருந்த அவள் உடல் சட்டென்று இளைத்துவிட, பூரிப்பில் அணிந்திருந்த கை வளையல்கள் கழன்று விழுகிறது. அதைப் பார்த்த அவள், அச்சத்தில் தவிக்கிறாள். எங்கே தன் கணவன் தன்னைவிட்டுப் பிரிந்துள்ளதை மற்றவர்கள் அறிந்துவிடுவார்களோ என ஆதங்கப்படுகிறாள்.


வள்ளுவர் இந்தச் சிறு காட்சியை மனத்தில் இருத்திக்கொண்டு,

'துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறையிறவா நின்ற வளை'.

என்கிறார். எத்தகைய கவித்துவத்துடன் ஒரு காட்சியை அவர் கடத்துகிறார் என்பதுதான் கவனிக்கதக்கது. முன்னும் பின்னும் எதுவுமே சொல்லவில்லை. ஆனால், நமக்கு முழுக்காட்சியும் புரிந்துவிடுகிறது. எழுபதுகளில் வெளிவந்த 'குறள்வழி பிராகிருத இலக்கியம் இன்பம்' என்னும் நூலில், இக்குறளுக்குப் பேராசிரியர் இரா. மதிவாணன் ஓர் அழகிய உரையைத் தந்திருக்கிறார்.

ஊரில் ஒருத்தி இரண்டு கைகளையும் உயர்த்திக்கொண்டே நடக்கிறாள். அப்படி நடந்து போவதைப் பார்த்த ஊரார் அவளைப் பைத்தியமோ என்று நக்கலடிக்கிறார்கள். ஆயினும், அது பற்றியெல்லாம் அவள் பொருட்படுத்தாமல் நடக்கிறாள். திருமணம் முடிந்து சில மாதங்களே ஆனநிலையில், கணவனைப் பிரிந்த அந்தப் பெண் அவ்விதம் கைகளைத் தூக்கிக்கொண்டே போவதை ஒருவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆளாளுக்கு எதை எதையோ அவிழ்த்து விடுகிறார்கள். அவளுக்கோ நாள் பார்த்து, நேரம்பார்த்து அணிவித்த மங்கல வளையல்கள், உடல்மெலிவால் கழன்று கீழே விழுந்து உடைந்துவிட்டால் அது கெடுகுறியாகப் பார்க்கப்படுமே என்கிற அச்சம். வெளியே போகும்போது மட்டுமல்ல, வீட்டிலும் அவள் கைகளைக் கீழே விடாமல் அப்படியே வைத்திருக்கிறாள்.

வளையல்களைக் காப்பாற்றுவதென்பது அவளுக்கு வாழ்க்கையைக்



காப்பாற்றுவதற்குச் சமம். கணவன் ஏதோ ஒரு காரியத்திற்காகத் தன்னைப் பிரிந்திருந்தாலும், அவன் அன்புடனும் காதலுடனும் அணிவித்த வளையல்கள் பிரியக் கூடாதென்று பெரும்பாடுபடுகிறாள். அவளுடைய தோழியோ அதையே வேறு மாதிரி விவரிக்கிறாள். 'கணவனைப் பிரிந்த அவள் துன்பக் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கிறாள். அதனால்தான் கைகளை உயர்த்திக்கொண்டே போகிறாள்' என்கிறாள். ஆற்றிலோ கடலிலோ ஒருவர் மூழ்க நேர்ந்தால் தன்னியல்பாகக் கைகளை மேலே உயர்த்துவதுதான் வழக்கம். மூழ்கிக் கொண்டிருக்கிறேன் என்பதை மற்றவருக்கு உணர்த்தும் வழிகளில் அதுவும் ஒன்று.

வள்ளுவரின் ஒற்றைக் குறளை வைத்துக்கொண்டு இதுபோல் எத்தனையோ கதைகளை, காட்சிகளை எழுதலாம். வளையல் கழன்று கீழே விழுதல், சங்கப் பாடல்களில் வந்திருக்கின்றன. குறிப்பாக, குறுந்தொகையில் (125) வரக்கூடிய

'இலங்குவளை நெகிழச் சாஅ யானே'

- என்னும் பாடலைச் சொல்லலாம். 'வளையல் நழுவி கீழே விழும் அளவிற்கு உடல் மெலிந்து இருக்கிறேனே தோழி, முன்பு நான் எப்படியெல்லாம் இருந்தேன். ஆடை, அணிமணிகளை அணிந்து விழாக்கோலம் பூண்டிருந்தேனே என்று வருந்துகிறாள். இப்போதோ இறகை இழந்த நாரையைப் போல் கரையோரத்தில் உட்கார்ந்திருக்கிறேனே' என்றும் பொருமுகிறாள். இறகை இழந்த நாரை என்பது வலிமை குன்றியதன் குறியீடு.

வலிமை குன்றிய நாரை, கடலலைகளை ஒட்டிய மரக்கிளையில் இருந்தபடி, அலைகள் கொண்டுவரும் மீன்களைத் தனக்கு இரையாக உண்ணுவதைப் போல், தன் அழகை, வலிமையை இழந்த காதலி, காதலித்தவன் தானே வந்து தன் தவிப்பினைப் போக்கித் தன்னை மணந்துகொள்வான் என்று எதிர்பார்க்கிறாள்' என்பதாக அம்மூவனார் எழுதியிருக்கிறார். கை வளையல் கழன்று விழுவதற்குப் பின்னே காதலும் வாழ்வும் கலந்திருப்பதை நம்முடைய இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. வள்ளுவரே இன்னொரு குறளில்,

'இலங்கிழாய் இன்று மறப்பின்என் தோள்மேல்
கலங்கழியும் காரிகை நீத்து'.

என்கிறார். அதுவும் வளையலை முன்வைத்துதான். 'காதலனின் பிரிவால் வருந்துகின்ற நான், இந்த நாட்களில் அவனை மறந்துவிட்டால் என் தோள்கள் மேன்மேலும் அழகினை இழந்துவிடும். உடல் மெலிவால் வளையல்கள் கழன்று கீழே விழுந்துவிடுமே' என்று தோழியிடம் காதலி வருந்துவதாக எழுதியிருக்கிறார்.

முந்தைய குறளிலிருந்து ஒருபடி மேலே போய் வருத்தத்தில் வளையல்கள் மட்டுமல்ல, தோளில் அணிந்துள்ள ஆபரணங்களும் துவண்டு விழுமே என்று அவள் யோசிப்பதாகச் சிந்தித்திருக்கிறார். அவனுடைய நினைவால் உடல்மெலிகிறதே என நினைக்காமல் இருந்தால் அதுவே வேதனையைக் கூட்டி வேறு சில பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. நினைத்தாலும் பிரச்சினை. மறந்தாலும் பிரச்சினை எனில் அவள் என்னதான் செய்வாள் என்பதுபோல் குறளை அமைத்திருக்கிறார். அறத்திலும், பொருளிலும் எத்தகைய தீவிரத்துடன் தென்படுகிறாரோ அதையே இன்பத்திலும் காட்டிவிடுகிறார்.

வள்ளுவரின் சொல்லாட்சி என்றே தனித் தலைப்பில் ஒரு நூல் எழுதலாம். அந்த அளவிற்குச் சொற்களை அவர் தமிழுக்கு வழங்கியிருக்கிறார். குறள் வெண்பாவின் இலக்கணத்தை உத்தேசித்தே அவர் பல சொற்களை உற்பத்தி செய்திருக்கிறார். அவருக்குமுன் ஒருவருமே சிந்திக்காத அல்லது பயன்படுத்தாத சொற்கள் என்று பட்டியலே தயாரிக்கலாம். உதாரணமாகக் 'காதலம்' என்றொரு சொல். என் வாசிப்பிற்கு எட்டியவரை குறளில் மட்டுமே அச்சொல் தென்படுகிறது. இலக்கணப்படி காதல் என்கிற 'தேமா வாய்ப்பாடு' பொருந்தாமல் போனதால், காதலம் என்கிற கூவிள வாய்ப்பாட்டை அவர் கண்டுபிடித்திருக்கிறார்.

அவருக்குமுன் அச்சொல்லை வேறு யாரேனும் கையாண்டிருக்கிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டும். சொற்களைப் பலவாறாகக் கையாளும் உத்தியிலும் அவருக்கு நிகர் அவர்தான். திருக்குறளுக்கு உரையெழுதிய நாவலர் நெடுஞ்செழியன் அந்நூல் வெளிவந்த சமயத்தில் ஒருமுறை தென்கச்சி கோ.சுவாமிநாதனைச் சந்தித்திருக்கிறார். அப்போது தென்கச்சியிடம்,

'காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'

என்னும் குறள், பொருத்தமான உவமையுடன் இல்லையே என்றிருக்கிறார். தென்கச்சிக்கு என்னசொல்வதென்று தெரியவில்லை. பின் அவரே 'தக்க நேரத்தில் ஒருவர் செய்த உதவியை ஏன் உலகத்துடன் வள்ளுவர் ஒப்பிடுகிறார்' எனக் கேட்டிருக்கிறார்.

உருண்டையான பூமி, ஒருவர் செய்யும் உதவியைவிட எதனால் பெரியது என்னும் கேள்வியை எதிர்கொள்ள முடியாமல், 'நீங்களே சொல்லுங்கள்' என்றதும், 'உலகத்தில் அதாவது பூமியில், ஒரு விதையை நட்டோமெனில் அது உடனே பயன் தராது. காலம் பொறுத்தே காயையோ கனியையோ கொடுக்கும். ஆனால், ஒருவனுடைய உதவியென்பது அப்படியன்று. தேவைப்பட்ட உடனே கிடைத்துவிடுகிறது. அதனால்தான் பூமியைவிட ஒருவனின் உதவியைப் பெரிது என்று விளக்கியிருக்கிறார். திருக்குறள் மட்டுமல்ல, எல்லா இலக்கியங்களும் உரையாசிரியர்களின் உதவியால்தான் நின்று நிலைபெறுகின்றன. கொண்டுகூட்டி அவர்கள் சொல்லும் உரையினால் சாதாரண சொற்களும் சாகாவரம் பெற்றவையாக மாறுகின்றன.

உரையாசிரியர்கள் திரித்தும், பிரித்தும் சிலவற்றுக்குத் தப்பிதமான பொருளை ஏற்றினாலும், இலக்கிய வளர்ச்சிக்கு அவைதாம் அடிப்படை. திருப்பாவையில்,

எல்லாக் கேள்விகளுக்கும் வள்ளுவரிடம் பதில்கள் இருக்கின்றன. வள்ளுவத்தின் வெற்றி, சொல்லப்பட்ட பதில்களில் இல்லை. கேட்கப்படாத அல்லது முன்வைக்கப்படாத கேள்விகளில்தான் தொக்கி இருக்கின்றன. ஒருவர் நிலை பெற்றார் என்பதை நிரூபிக்கவே சிலை வைக்கப்படுகிறது. எத்தனையோ சொற்களைத் தம் குறளில் எடுத்தாண்ட வள்ளுவர், சிலை என்னும் சொல்லைத் தவிர்த்திருக்கிறார். கடைசியில் அவரே அதுவாக மாறுவார் என்று நினைத்திருப்பாரோ?

'கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்'

என்னும் தொடர், உரையாசிரியர்களால்தாம் இன்றும் சுவையாக ருசிக்கப்படுகிறது. ஏர் என்றால் அழகு. ஆர்ந்த என்னும் சொல், வளர்ந்துகொண்டே என்னும் பொருளை உடையது. ஏரார்ந்த கண்ணி யசோதை என்றால் அழகு வளர்ந்துகொண்டே இருக்கும் கண்ணுடைய யசோதை என்று அர்த்தம். அது எப்படி அழகு வளர்ந்துகொண்டே இருக்கிறது என்றால், யசோதை கண்ணனைப் பார்த்தபடியே இருப்பதால் அவளுடைய அழகு வளர்ந்துகொண்டே இருக்கிறது என்று உரையெழுதியிருக்கின்றனர்.

குறளில் அதிகாரம் எதுவானாலும் வள்ளுவர், அதை அவர் அமைத்துள்ளவிதம் நாடகத் தன்மையைக் கொண்டிருக்கிறது. இன்பத்துப் பாலில் களவியல், கற்பியல் என்று இரண்டு பகுதிகள் வருகின்றன. இரண்டிலும் உள்ள அதிகாரங்களை வரிசைப்படுத்தி நாமக்கல் கவிஞர் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். `திருவள்ளுவர் இன்பம்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ள அக்கட்டுரையில், அதிகார அமைப்பில் வள்ளுவர் வரைந்துள்ள நாடகீயத்தை நயத்துடன் விவரித்திருக்கிறார்.


ஒன்றன்பின் ஒன்றாக வரக்கூடிய சம்பவங்கள். ஓர் அதிகாரத்தில் பத்துக் குறள்கள் என்றால் அந்தப் பத்திற்கும் இடையே நிகழும் காட்சிகள் என்னென்ன என்று காட்டியிருக்கிறார். திருமணத்திற்கு முன் சந்திக்கும் ஓர் ஆணும் பெண்ணும் களவில் ஈடுபடுகிறார்கள். முதலில் கண்டு, பிறகு குறிப்பறிந்து, கலந்து, மகிழ்ந்து, நினைந்து, கரைந்து, இயல்பைத் துறந்து பின் எல்லாவற்றுக்கும் துணிகிறார்கள். நாமக்கல் கவிஞர் அவ்வதிகாரங்களை அத்துணை நுட்பமாகப் பார்த்திருக்கிறார். குறளுக்குக் குறள் அவர் சொல்லிச்செல்லும் பொருள், ஐந்நூறு வரிகளில் ஒரு காதல் காவியத்தை வள்ளுவர் தீட்டியிருக்கிறாரோ எனத் தோன்ற வைக்கிறது.

குறளைப் பற்றி யோசிக்கும் போதெல்லாம் எனக்கு 'படை' என்கிற சொல், நினைவிற்கு வந்துவிடும். பதிமூன்று இடங்களில் அச்சொல் வருகிறது. முப்பாலிலும் அச்சொல்லை வைத்துக்கொண்டு வள்ளுவர் செய்திருக்கும் வித்தை வியப்புக்குரியது. சிறுமை, வறுமை, பெருமை, அழுகை, உவகை என அச்சொல்லை அவர் எல்லாவற்றுக்கும் கையாண்டிருக்கிறார். அவற்றில்,

'அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்
செல்வத்தைத் தேய்க்கும் படை

என்பதும்,

'பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோ நம்
பெண்மை உடைக்கும் படை'.



என்பதும் குறிப்பிடத்தக்கவை. அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் என்னும் குறள், சிலப்பதிகாரத்தை ஒருவரியில் புரிந்துகொள்ள உதவுவது. இன்பத்தில் மூழ்கிய கோவலன், கைப்பொருளையெல்லாம் இழக்கிறான். கண்ணகியின் அணிகலன்களை ஒவ்வொன்றாக இழந்த அவன், இறுதியில் அவளுடைய காற்சிலம்புடன் ஊர் திரும்புகிறான்.

மாதவியிடம் வாழ்ந்து கெட்ட அவன், வழியற்றுப் போன நிலையில் எஞ்சியிருந்த சிலம்பை விற்றாவது பிழைக்க முயல்கிறான். ஒற்றைச் சிலம்பை விற்க கடைத் தெருவிற்குப் போனவன்மீது அரண்மனைச் சிலம்பைக் களவாடிவிட்டான் என்னும் அடாப்பழி விழுகிறது. அதுநிமித்தம், அரசனின் ஆணையால் அவன் கொலையுறுகிறான். கண்ணகியோ, கணவன் கொலையுண்ட சேதி கேட்டு, அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீருடன் நீதி கேட்கக் கிளம்புகிறாள். தலைவரி கோலமாக அவள் கிளம்பிய காட்சியை,

'உற்று ஆற்றாது அழுவாளைக் கண்டிரங்கி
மல்லல் மதுரையார் எல்லாம் தாம் மயங்கி'.

என்றே இளங்கோவடிகள் வருணிக்கிறார். எனக்கு அவ்வரிகளை வாசித்தவுடனே வள்ளுவரின் தாக்கமே அவ்வரிகள் உதிப்பதற்குக் காரணம் என்று தோன்றியது. வள்ளுவர் தனக்குப் பின்னே வந்த அத்தனை பேரையும் ஏதோ ஒருவிதத்தில் பாதித்திருக்கிறார். சங்கப் பாடல்களின் தாக்கத்தில் அவர் எப்படிச் சொற்களைத் தேர்ந்துகொண்டாரோ அதுபோலவே அவருக்குப் பின் வந்தவர்கள் அவரைத் தொடர்ந்திருக்கிறார்கள்.

தமிழின் ஆகப்பெரும் சிறப்பு என்னவெனில் வழிவழியாக வரும் மரபையும் பண்பாட்டையும் அடுத்தடுத்து வருபவர்கள் வழிமொழிவதுதாம். காலம் புறந்தள்ள எண்ணுவதை ஒருவர்கூட உயர்த்திப் பிடிக்க நினைப்பதில்லை. கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல், பிறர்மனை நோக்காமை, இல்லறவியல், ஒழுக்கம் ஆகியவை மேலெழுந்து வரும்போது அவற்றைக் கருத்திற் கொண்டிருக்கின்றனர்.

வள்ளுவரின் 'பன்மாயக்கள்வன்' என்கிற பதமே என்னை ஆச்சரியப்படுத்துவது. பண்பாட்டு ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன் அதையே தலைப்பாக வைத்து ஒரு நூலைத் தந்திருக்கிறார். 'பல மாயங்களைச் செய்யக்கூடிய காதல் கள்வனின் பணிவான மொழி, பெண்மையையே உடைக்கும் படை' என்னும் பொருளைத் தரக்கூடிய குறள் அது. ஒருநாள், 'என்னுள்ளத்தில் நீ நிலையாகக் குடிபுகுந்துவிட்டாய்' என்கிறான். மறுநாளே, 'என்னை நீ உன் மனத்தில் சிறைபிடித்துவிட்டாய்' என்கிறான். எல்லாமே பொய்யான புகழுரைகள்.

காதலிக்கோ சந்தேகம் வந்துவிடுகிறது. 'உன்னுள்ளத்தில் குடிபுகுந்த நானெப்படி உன்னைச் சிறைபிடிக்க முடியும்' எனக் கேட்கிறாள். 'முதல்நாள் சொன்னது உண்மையென்றால் அடுத்தநாள் சொன்னது பிழையாக இருக்க வேண்டும். ஒருவேளை, இரண்டாவது சொன்னது உண்மையென்றால் முதல்நாள் தெரிவித்தது தவறு' எனக் கடிந்து கொள்கிறாள். அத்துடன், இருவரும் ஒருவரை ஒருவர் விழுங்கிக் கொள்ளாமல் இது சாத்தியமே இல்லை எனவும் கண்டிக்கிறாள். கண்டித்ததுடன் நில்லாமல், 'ஏன் இப்படி மாறிமாறி பொய்சொல்லி என்னை மயக்கவும் மடக்கவும் முயற்சிக்கிறாய்?' என்கிறாள். அதற்கும் அவனிடம் பதில் இருக்கிறது. 'ஏன் சாத்தியமில்லை. நாம் ஒருவரை ஒருவர் நினைவுகளால் விழுங்கிக்கொள்ள முடியுமே' என்கிறான்.

அது எப்படி முடியும் என்றதற்கு, ''மீன் ஒன்றை ஒன்று விழுங்கிக் கொள்கிறதே அதுபோல்'' என்கிறான். அவளும் விடாமல், 'ஒரு மீன் இன்னொரு மீனை விழுங்கினால் விழுங்கப்பட்ட மீன் மரித்துவிடுமே' என்கிறாள். அதைக் கேட்டும் அவன் பின்வாங்கவில்லை. ஒரு மீன் இன்னொரு மீனுக்குள் இருப்பதை ஏற்கவில்லை என்றால் ஒரு பழத்தில் இன்னொரு பழம் இருப்பதாக எண்ணிக்கொள்' என்கிறான். மேலும், 'ஒவ்வொரு பழத்தின் விதையுள் இன்னும் சில மரங்களேனும் உண்டென்பதை நம்புகிறாயா' என்கிறான். அவள் மதிமயங்கி மனத்தைக் கொடுத்துவிடுகிறாள்.

ஒரு பொய்யன் அல்லது மாயக்காரன் இப்படித்தான் காதல் சொற்களில் ஒருபெண்ணைக் கவர்ந்துவிடுகிறான் என்பதை 'பல்மாயக் கள்வன்' என்னும் ஒரு பதத்தில் வள்ளுவர் வரைந்துவிடுகிறார். 'பெண்மையுடைக்கும் படை' எனும் தொடர் மேலதிக விளங்கங்களை உடையது. ஒரு குறளில் சிலவற்றை மட்டுமே வள்ளுவர் காட்டுகிறார். மீதியை நாமே இட்டுக்கொள்ள இடமளிக்கிறார். 'நெருநல் உளனொருவன் இன்றில்லை' என்பதுதான் இந்த உலகத்தின் சிறப்பே என்கிறார். உண்மையில், ஏகப்பட்டவை இருப்பதால்தான் உலகம் சிறப்புறுகிறது என நாம் கருதுகிறோம். வள்ளுவரோ இன்மையில்தான் உலகமே இருக்கிறது என்கிறார்.


குறளில் சில இடங்கள், மேலோட்டமான வாசிப்பில் பிடிபடுவதில்லை. நேரடியாகப் பொருள் தராதவற்றை உரையாசிரியர்களும், வாசகர்களும் தமக்குரிய வகையில் புரிந்துகொள்கிறார்கள். எதிரே உள்ளவர்கள் எப்படி எடுத்துக்கொள்கிறார்களோ அதுபடியே தம் எழுத்துக்கள் இருந்துவிட்டுப் போகட்டும் என்னும் தெளிவே அவருடையது.

ஒரு சொல் அல்லது ஒரு தொடர் அடுத்தத் தலைமுறையை அடைய வேண்டுமென்றால் அது திரும்பத் திரும்ப வாசிக்கப்படவும், யோசிக்கபடவும்வேண்டும். திருக்குறள் இன்றுவரை தமிழ்ச்சமூகத்தால் வாசிக்கப்பட்டு வருகிறது. காரணம், வள்ளுவர் சொல்லாமல் விட்ட இடங்களில் இலக்கியமும் வாழ்க்கையும் இரண்டறக் கலந்திருக்கின்றன.

எல்லாக் கேள்விகளுக்கும் வள்ளுவரிடம் பதில்கள் இருக்கின்றன. வள்ளுவத்தின் வெற்றி, சொல்லப்பட்ட பதில்களில் இல்லை. கேட்கப்படாத அல்லது முன்வைக்கப்படாத கேள்விகளில்தான் தொக்கி இருக்கின்றன.

ஒருவர் நிலை பெற்றார் என்பதை நிரூபிக்கவே சிலை வைக்கப்படுகிறது. எத்தனையோ சொற்களைத் தம் குறளில் எடுத்தாண்ட வள்ளுவர், சிலை என்னும் சொல்லைத் தவிர்த்திருக்கிறார். கடைசியில் அவரே அதுவாக மாறுவார் என்று நினைத்திருப்பாரோ?





வீரமாமுனிவரின் திருக்குறள்...



வரலாற்றாசிரியர்
எஸ். ஜெயசீல ஸ்டீபன்

ஐரோப்பாவிலிருந்து தமிழகத்திற்கு வந்த சமயப்பரப்பாளர்கள் தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டனர். பலர் ஒவ்வொரு இடமாகச் சென்று நற்செய்தி போதனைகள் வழங்குவதற்கு பேச்சுத்தமிழ் மொழி போதுமானதாக இருந்ததால் அதோடு திருப்தியடைந்தனர். சிலர் மட்டுமே இலக்கியத் தமிழில் புலமை பெற முனைந்தனர். அவர்களில் கொஸ்தான்சொ ஜோசப்பொ யுசெபியு பெஸ்சி (இத்தாலிய உச்சரிப்பில் பெஸ்கி அல்ல) என்ற வீரமாமுனிவர் (1680-1747) தமிழ் மொழிபெயர்ப்பு வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்து கொடுத்தார்.

1724-25ம் ஆண்டில் 1726இல் மயிலாப்பூரிலும் திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர்ப் பகுதியில் உள்ள பல இடங்களிலும் பெஸ்சி மதப்பரப்புப் பணி செய்தார்.[1] அப்போது நான்கு சொற்கள் முதல் வரியிலும், மூன்று சொற்கள் இரண்டாவது வரியிலும் ஆக ஏழுச் சொற்களை கொண்ட இரண்டு அடிகளால் ஆன திருக்குறளின் நீதி போதனைகள் கவனத்தை ஈர்த்தன. அவர் திருக்குறளின் அதிகாரங்களை இலத்தீன் மொழிக்கு மொழிபெயர்க்கத் தொடங்கினார்.

I

திருக்குறள் மொழிபெயர்ப்புப் புலமை இலத்தீனில் காணப்படுவது, 1730.

செந்தமிழ் இலக்கணம்: Grammatica Latino Tamulica Ubi de elegantiori Linguae Tamulicae என்ற தலைப்பில் இலத்தீன் மொழியில் இயற்றினார். இந்நூல் இலக்கியத் தமிழைக் கையாள்வதோடு 13 செப்டம்பர் 1730இல் அவரால் எழுதி முடிக்கப்பட்டது.[2] குறளை 18 முறை மேற்கோள் காட்டியுள்ளார். மொழிபெயர்ப்பு இலத்தீன் மொழியில் பின்வருமாறு உள்ளது (காண்க பக்கம் 3 பத்தி 6; பக்கம் 23 பத்தி 33; பக்கம் 75 பத்தி 101; பக்கம் 35 பத்தி 50; பக்கம் 1 பத்தி 5; பக்கம் 1 பத்தி 1; பக்கம் 55 பத்தி 70; பக்கம் 6 பத்தி 14; பக்கம் 54 பத்தி 69; பக்கம் 59 பத்தி 73; பக்கம் 16 பத்தி 23; பக்கம் 47 பத்தி 62; பக்கம் 26 பத்தி 37; பக்கம் 27 பத்தி 37; பக்கம் 4 பத்தி 8; பக்கம் 75 பத்தி 101; பக்கம் 35 பத்தி 50; பக்கம் 13 பத்தி 21).

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின். (2)

Quid prodest scientiarum, nisi ad cultum Dei summi sapientissmi.

செயற்கரிய செய்வார்பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். (26)

Magnanimi ardua faciunt, ignavi vero ardua defugiunt.

அறத்தினூஉங் காக்கமும் இல்லை யதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. (32)

Nec majus virtute lucrum, nec ea amissa, majus damnum (oblivione).

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை. (57)

Quid proderit exterior custodia, nisi mulier, quod praecipua cura est, se ipsam custodiat.

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர். (66)

Tibias citharasque laudabunt, qi filios suos balbuire non audierunt, ac si diceret horum vocem parentum auribus omni symphonia dulciorem esse.

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. (80)

Ex amore quo proximo auxilum praestamus fit ut corpus sit animae basis: Corpus vero eorum qui charitatem non habent, non animae basis sed pelle cooperta ossa dicendum est.

மோப்பக் குழையு மனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (90)

Hic anicciam genus floris, est admodum tenuis; quare dicit ipse; ex olfactu corrumpitur flos anicham et ex obtorto vultu infuscatur paratum convivium, docet enim hilari vultu excipiendes hospites.

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. (151)

Non secus ac terra sustinet qui ipsam vomere scindunt, sic virtutis caput est convitiatoribus ignoscere.

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று. (208)

Perditio impiorum sequetur eos ut corpus umbra.



அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா. (366)

Virtutis tomir et timoris amor, ubi orum bis repetitur et nunquam significant.

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு. (408)

Pejor est opulentia apud ignores quam paupertas apud doctos.

வியவற்க எஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை. (439)

Nunquam aestimes te ipsum, nec gaudeas de opera inutili.


பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். (450)

Decies pejus est amittere amicittam bonorum quam a pluribus aliis odio haberi.

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. (513)

Amor erga regem, scientia legis, firmitas in judicio ac amoris propril abnegation, quatuor virtutes sunt quas qui habet, apud eum optimum consilium invenitur.





சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். (664)

Docere amnibus facile quidem, difficile autm exsequi quae docemur.

உருவுகண் [illegible] மை வேண்டும் உருள்பெருந்தேர்க்
[illegible] உடைத்து. (667)

Nec sperna[illegible] hominem visu, sunt quipped quadrigae quae axia clavo [illegible] esse leves, scilicet sunt aliqui aspect despectablies quidem tamen [illegible] admodum utiles et necessaili.

ஓலித்தக்கண் [illegible] ன்னாம் உவரி எலிப்பகை
[illegible] உயிர்ப்பக் கெடும். (763)

[illegible] boatu fremat mare quid erit ulterius, quasi diceret quae a capite [illegible].



தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. (964)
Avulses a capite capillis assimilatur homo a suo statu dejectus.

திருக்குறளின் முதல் மற்றும் தொடக்கக்கால மொழிபெயர்ப்பு என்பது பெஸ்சியால் இலத்தீனில் மொழிபெயர்க்கப்பட்டதேயாகும். திருக்குறளை உலகில் அப்போது பேசப்பட்ட எந்த மொழியிலும் மொழிபெயர்க்க முயற்சிக்கவோ அல்லது மொழிபெயர்க்கவோ வேறு யாரும் இல்லை.

II

திருக்குறள் மொழிபெயர்ப்பின் தொடர்ச்சி காணப்படுவது, 1732.

தொன்னூல் விளக்கம் தமிழில் 1731இல் பெஸ்சியால் ஐரோப்பியர்களின் பயன்பாட்டிற்காக இயற்றப்பட்டது. இது Clavis Humaniorum Litterarum Sublimioris Tamulici Idiomatis என்ற தலைப்பில் இலத்தீன் மொழியில் பெஸ்சியால் மொழிபெயர்க்கப்பட்டது. அவர் அதை 1732இல் முடித்தார். இந்தப் படைப்பு உயரிய தமிழ் மொழியின் செம்மையான இலக்கியத்திற்கு ஒரு திறவுகோலாக இருந்தது.[3] பெஸ்சி இதில் 12 குறள் மொழிபெயர்ப்புகளை (காண்க பத்தி 1.13; 2.41; 2.48; 2.50; 2.55; 2.56; 2.59; 5.3; 5.15; 5.41) மேற்கோள் காட்டியுள்ளார்.[4] குறளின் ஈரடிச் செய்யுட்களை இலத்தீன் மொழிபெயர்ப்பில் சிலவற்றைக் காண்போம்:

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (1)
Alphabeti literae omnes incipient ab A et orbis universus a DEO initium sumit.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின். (2)
Quid didicisse prodest, si sapientissimum i.e., Deum non adorant.

கிளாவிஸில் (பத்தி 2.59) மற்றும் (பத்தி 1.13) காணப்படும் குறளின் மேலே கூறப்பட்ட இலத்தீன் மொழிபெயர்ப்புகள் முந்தைய மொழிபெயர்ப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. அவருடைய படைப்பு செந்தமிழில் காணப்படுகிறது. இவ்வாறு ஒரே குறளுக்குப் பல்வேறு மொழிபெயர்ப்புகளைப் பெஸ்சி அவர்கள் ஒரே காலத்தில் பரவலாகச் செய்திருப்பதைக் காண்கிறோம். மனமகிழ்வோடு நாம் கண்டது என்னவென்றால், சொற்கள் அவரால் மட்டுமே மாற்றப்படுகின்றன. ஆனால் அதன் பொருள் ஒரே வகையாக இருந்தது. மொழிபெயர்ப்பாளராக வெவ்வேறு ஆண்டுகளில் வெளிப்பட்ட அவருடைய சிந்தனை மற்றும் கருத்துக்களின் முன்னேற்றம், முதிர்ச்சி ஆகியனவற்றை இது உறுதியாகக் காட்டுகிறது.

III

திருக்குறளின் அறத்துப்பால் மற்றும் பொருட்பால் பெஸ்சியால் இலத்தீன் மொழியில் முழு மொழிபெயர்ப்பு, 1733.

1725லேயே பெஸ்சி தொடங்கிய பல்வேறு படைப்புகளில் குறளை மேற்கோள் காட்டி, 1729இல் இலத்தீன் மொழியில் திருக்குறளை கொஞ்சம் கொஞ்சமாக மொழிபெயர்த்ததன் மூலம், 1732இல் திருக்குறளின் முழு மொழிபெயர்ப்பையும் செய்ய வேண்டும் என பெஸ்சி உணர்ந்தார்.

எனவே, அவர் 1733இல் முடித்த அறத்துப்பால் (அறம்) மற்றும் பொருட்பால் (செல்வம்) ஆகியனவற்றிலிருந்து 1080 குறள்களின் முழுமையான மொழிபெயர்ப்பைத் தேர்ந்தெடுத்து மேற்கொண்டார். திருக்குறள் மொழிபெயர்ப்பை மேற்கொள்வதில் சிறிது காலத்தாழ்த்தம் ஏற்பட்டதற்குக் காரணம் அவர் இலத்தீன் மொழியில் *(Thesaurus linguae ad pleniorum planioremque scriptorium Tamulensium intelligentiam collegit ac quatuor in partes digessit)* என்ற தலைப்பிலான சதுரகராதியின் வேலையில் சுறுசுறுப்பாக இருந்ததேயாகும். இதை அவர் 21 நவம்பர் 1732இல் முடித்தார்.


அதன்பிறகு அவர் திருக்குறள் மொழிபெயர்ப்பில் கவனம் செலுத்தினார். ஆனால், அவர் கத்தோலிக்க மதப்பரப்புநர் என்றதன் காரணமாக, காமத்துப்பாலின் மொழிபெயர்ப்பைத் தவிர்த்தார். இதை அவரே 1731இல் தொன்னூல் விளக்கம் என்ற நூலில் விளக்கினார்.[5] 1726இல் தன் தேம்பாவணிக் காவியத்திலும் 1731இல் தொன்னூல் விளக்கத்திலும் காமத்துப்பால் குறளை மேற்கோள் காட்டியுள்ளார் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

மொழிபெயர்ப்பின் பயிற்சியானது அவருக்கு தமிழ் மற்றும் இலத்தீன் மொழியின் மீது அதிகப் புலமையும் தேவையான அளவு திறமையும் பெற்றிருந்ததால், இலத்தீன் மொழியில் தமிழ் கவிதைப் படைப்பை உருவாக்குவது கடினமான ஒன்றாக இருக்கவில்லை. அவர் அதை 1733இல் வெற்றியுடன் முடித்தார்.

IV

ஐரோப்பிய மக்களுக்கு பெஸ்சி குறளை அறிமுகப்படுத்தினார். ஒரே குறளை (காண்க: குறள் 26, 32, 66, 67, 80, 90, 151, 208, 366, 408, 439, 450, 513, 660, 664, 763, 964) இரண்டு வெவ்வேறு முறையில், வெவ்வேறு கால இடைவெளியில் அவரே மொழிபெயர்த்துள்ளார் என்பது கவனிக்கத்தக்கது. ஏனெனில் தமிழ் மொழியில் ஒரு சொல், சொற்பிறப்பியல் மற்றும் கருத்துத் தொடர்பு ஆகியனவற்றின் மூலம், வெவ்வேறு வகையான பொருள்களைக் கொண்டிருந்தது காரணமாகும்.


பெஸ்சி அவர்கள், குறளின் முதல் மொழிபெயர்ப்பில், செந்தமிழில் நேரடியாகக் கொண்டு வந்தார். அவர் மூலத்தில் உருவகத்தை நீக்கினார். பிறகு திருக்குறளின் முழு மொழிபெயர்ப்பையும் அவர் செய்யத் தொடங்கினார். ஒரு மொழிபெயர்ப்பாளராகத், தமிழில் செயல்பாட்டிலுள்ள குறள் உரையை, இலத்தீன் மொழியில் மீண்டும் செயல்படுத்துவதே



அவருடைய பணி என்று உணர்ந்தார். இதன் விளைவாக, சில நேரங்களில் பெஸ்சியின் குறள் மொழிபெயர்ப்பானது மூலத்திற்கு மிகவும் நெருக்கமாக இருப்பதை நாம் கவனிக்கிறோம். மொழிபெயர்ப்பில் ஈடுபட்டிருந்தபோது, குறள் உரையை பல்வேறு கோணங்களிலும், கண்ணோட்டங்களிலும் பெஸ்சி அணுகினார் என்பதும் கவனிக்கத்தக்கது.

திருக்குறள் மொழிபெயர்ப்பு கைப்பிரதிப் படி 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டது.[6] இலத்தீன் மொழிபெயர்ப்பில் குறளுக்கு தகுந்தவாறு தமிழிலும் கொடுக்கப்பட்டுள்ளது. இலத்தீன் மொழி தெரியாதவர்கள் இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட பெஸ்சியின் சொந்தக் கருத்துகளின் சிறு வேறுபாடுகளை இலத்தீன் மொழிபெயர்ப்பு குறளில் படித்து ரசிக்க முடியாது.

குறளைத் தமிழில் இருந்து இலத்தீன் மொழியில் மொழிபெயர்ப்பது பெஸ்சிக்கு கடினமாக இருந்தது. ஏனெனில் தமிழ்ச் செய்யுள் படைப்பு, அழகியல் மற்றும் வெளிப்பாட்டின் குறிப்பிட்ட மதிப்புகளைக்



கொண்டிருந்தது. சொற்களின் அழகை (சொல்வளம்), உருவமொழியை உருவகங்களின் அழகை வலியுறுத்தும், அழகியற் செயற்பாட்டுடன் பெஸ்சி தன் மொழிபெயர்ப்புப் பணியைப் போற்றத்தக்க வகையில் செய்தார். குறளின் இலத்தீன் மொழிபெயர்ப்பில் பெஸ்சி தமிழில் உள்ள பெயர்ச்சொற்களை அப்படியே பயன்படுத்தியிருப்பது ஆய்வில் கண்டறியப்படுகிறது. ஓர் இலக்கிய மொழிபெயர்ப்பாளராக அவர் சவால்களை எதிர்கொள்ளும்போது அவ்வாறு செய்தார். பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதற்குப் பொருந்தும்:

குறள்	இலத்தீனில் உள்ள சொல் (பொருள்)
25	இந்திரேனிஸ் (இந்திரன்)
30	அந்தணோர் (அந்தணர்)
84	லக்சிமி டிய (லட்சுமி இறைவி)
90	புளுஸ் அனிச்சம் (அனிச்சம் பூ)
617	மூதேவி (மூதேவி இறைவி)
899	தேவேந்திரன் (தேவேந்திரன்)
906	அருந்தினிஸ் மூங்கில் (மூங்கில்)

965 பர்வோ செமினி குன்றி (குன்றிமணி, ஒரு விதை)

969 அனிமாலி கவரி (கவரி மான், ஒரு வகை மான்)

குறள் மொழிபெயர்ப்பைச் செய்யும்போது நேரடி மொழிபெயர்ப்பு, தழுவல் மொழிபெயர்ப்பு மற்றும் மொழிமாற்ற மொழிபெயர்ப்பு ஆகியனவற்றைப் பயன்படுத்தி அவர் தன் நிலையிலிருந்து சிறப்பாக முயற்சித்திருக்கிறார். எனவே, இதை இலக்கிய மொழிபெயர்ப்பின் வேறொரு துணைப்புலமாகக் குறிப்பிடலாம்.

ஐரோப்பிய இலக்கியத் தளத்திற்கு திருக்குறள் மொழிபெயர்ப்பின் மூலம் இலக்கியத்தின் தனித்துவத்தை பெஸ்சி வெளிப்படுத்தியுள்ளார். இதன் மூலம் இதர ஐரோப்பிய மொழிகளான ஜெர்மன் மற்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற்கு வழிகோலியது. எந்த ஒழுக்கவியலிடமும் ஒப்புமை செய்ய முடியாத பேரார்வத்தை திருக்குறள் என்ற புனித நூல் ஐரோப்பியர்களை மிகவும் ஈர்த்தது. இதனால் பல ஐரோப்பிய மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டது.

அடிக்குறிப்புகள்

1. *Archivum Romanum Societatis Iesu, Roma, MSS Goa, vol. LIV, fls.310-316, Letter of Beschi from Santhome of Mylapore dated 19 December 1726 to the Cardinal in Rome; S. Jeyaseela Stephen, The Translation that Matters: The Thirukural-Latin Rendering by Costanzo Gioseffo Eusebio Beschi, 1733, Thirukural-Versione Latina, Puthucherry, 2020, p. 15.*

2. *British Library, London, MSS Or.13044; Church Mission Society Library and Archives, Birmingham, A Grammar of the High Dialect of the Tamil Language Termed Shen-Tamil to which is added an Introduction to Tamil Poetry: Translated from the Original Latin by Benjamin Guy Babington, Printed at the College Press, Madras, 1822; Leon Besse, A Grammar of High-Tamil', St. Joseph's Industrial School Press, Trichinopoly, 1917.*


3. *British Library, London, MSS Or.14172; CLAVIS Humaniorum Litterarum Sublimioris Tamulici Idiomatis, Auctroe R.P. Constantio Josepho Beschio Societatis Iesu, In Madurensis regno Missionario, Evangelical Lutheran Mission Press, Tranquebar, 1876.*

4. *S. Jeyaseela Stephen, From Anrique Anriquez to Louis Savinien Dupuis: The Tamil Grammar and Dictionary Quest, Immaculate Generlate, Puthucherry, 2017, p. 86.*

5. *சீனிவாச ராகவாச்சாரியார், ஜி. மெக்கன்சி கோபன், ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம், மூலமும் உரையும், சென்னை, 1891, 149.*

6. *British Library, Oriental and India Office Collection, MSS EUR.C1, The Latin Kural Manuscript. It contains (1) Tamil text (2) A transliteration (3) A Latin translation (4) A word by word explanation (5) Exclusively a further note. Bibliotheque Nationale de France, Paris, Manuscripts Indien, no. 57, Moralia Tiruvalluveni RRP C.J. Beschius.*





நிற்கிறார் திருவள்ளுவர்



முனைவர் ஸ்தபதி
க. தட்சிணாமூர்த்தி

எனது தாய்மாமா திரு. கணபதி ஸ்தபதியிடம் கலைச்சோறு உண்டு அவரது இல்லத்தில் வளர்ந்தவன் நான். தனது சொத்துக்களை அவரது அறக்கட்டளைக்கு சொந்தமாக்கி, சிற்பக்கலை தழைக்க உலகமே வியக்கும் உயில் சாசனம் கொடுத்துவிட்டு மறைந்திருக்கிறார்.

அவரது வாழ்வின் இறுதி ஆண்டுகளில் அவரோடே வாழ்ந்த என்னிடம் மூச்சுக்கு முன்னூறு தடவை கலைஞர் அவர்களையும் திருவள்ளுவர் அமைத்த பணியையும் சொல்லிக்கொண்டே இருப்பார். அவர் சொல்லியவற்றை திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா மலரில் பதிவு செய்ய வாய்ப்பு நல்கிய தமிழக அரசுக்கும், முதலமைச்சர் மாண்புமிகு திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றிகள்.

சிற்பிகளின் மீது அன்புள்ளம் கொண்ட கலைஞர் அவர்களின் பூம்புகார் கலைக்கூடங்கள், வள்ளுவர் கோட்டம் போன்ற கனவுத் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்த கணபதி ஸ்தபதிக்கு கலைஞர் அவர்கள் கொடுத்த கலைப்பணிதான் 25 ஆண்டு கால சரித்திரம் பேசும் அய்யன் திருவள்ளுவர் சிலைப்பணி.

முழுவதுமாக கற்களாலேயே 133 அடி உயரத்துக்கு தென்குமரிக்கடல் நடுவே தமிழின் தொன்மையையும் அதன் பெருமையையும் நின்று பேசும் வள்ளுவர் சிலை அமைத்த பெருமை கலைஞர் அவர்களையேச்சாரும்.

அலையும், மலையும் உள்ள காலம் வரை இன்னும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு நிலைத்து நிற்கும் வண்ணம் வள்ளுவர் சிலையை வடிவமைத்து கலைஞர் அவர்களால் யாருக்குமே கிட்டாத மாபெரும் வாழ்த்தினைப் பெற்ற கணபதி ஸ்தபதி அவர்களும் நினைவில் கொள்ளத்தக்கவர்.

தன்னை அர்ப்பணித்து கடின உழைப்பால் கலைச்சின்னங்களை உருவாக்கும் சிற்பியரை இந்தளவுக்கு எந்த மன்னனாலும் வாழ்த்திய கல்வெட்டோ, இலக்கியமோ இதுவரை வரலாற்றில் இல்லவே இல்லை. ஒரு கலைஞனை கலைஞர்தான் அறிய

சிற்பச் சித்தருமான கணபதி ஸ்தபதியார் அவர்கள் மூன்றாண்டு காலத்திற்கு மேலாக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு, நமது அய்யன் வள்ளுவனுக்கு, காலத்தால் அழியாத நினைவுச் சின்னத்தை என் இதயம் இறக்கைகள் பெற்றுப் பறந்து மகிழ்கிற அளவுக்கு, என் இரத்த நாளங்களில் இன்ப அருவி பாய்ந்து பரவுகின்ற அளவுக்கு, என் மேனியில் சல்லி நரம்புகளும் துள்ளிச் சதிராடும் அளவுக்கு, என் சுவாசக் கோசங்கள் ஆனந்தப் பெருமூச்சால் நிரம்பிப் பிதுங்குகின்ற அளவுக்கு, வடித்தெடுத்து நிலைநாட்டி விட்டார்'.

முடியும். அந்த அளவுக்கு 20.12.1999 முரசொலி இதழில் கலைஞர் அவர்கள் கணபதி ஸ்தபதியை வாழ்த்தி எழுதியதை சிற்பியர்களும், தமிழினமும் பல்லாண்டு காலம் எண்ணியெண்ணி மகிழ்ந்து நம் அன்புக்குரிய கலைஞர் அவர்களுக்கும் மிகச் சிறப்பாக வள்ளுவர் சிலைக்கு வெள்ளி விழா நடத்தும் கலைஞரின் திருமகனார் நம் அன்புக்குரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் பெரிதும் நன்றிக் கடன் பட்டவர்கள்.

கலைஞர் அவர்கள் ஸ்தபதி அவர்களை வாழ்த்திய முக்கியமான வரிகள்:

'சிற்பச் சித்தருமான கணபதி ஸ்தபதியார் அவர்கள் மூன்றாண்டு காலத்திற்கு மேலாக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு, நமது அய்யன் வள்ளுவனுக்கு, காலத்தால் அழியாத நினைவுச் சின்னத்தை என் இதயம் இறக்கைகள் பெற்றுப் பறந்து மகிழ்கிற அளவுக்கு, என் இரத்த நாளங்களில் இன்ப அருவி பாய்ந்து பரவுகின்ற அளவுக்கு, என் மேனியில் சல்லி நரம்புகளும் துள்ளிச் சதிராடும் அளவுக்கு, என் சுவாசக் கோசங்கள் ஆனந்தப் பெருமூச்சால் நிரம்பிப் பிதுங்குகின்ற அளவுக்கு, வடித்தெடுத்து நிலைநாட்டி விட்டார்'.

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்'.

என திருவள்ளுவரின் வாக்கினையேச் சொல்லி வாழ்த்தி, ஸ்தபதியாருக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் கலைஞர் அவர்கள்.

133 அடி உயரத்துக்கான திருவள்ளுவர் சிலைப் பணி 06.09.1990இல் கலைஞர் கரங்களால் துவக்கப்பட்டது. சிலைக்கான பணிகள் சோழிங்கநல்லூர், அம்பாசமுத்திரம் மற்றும் கன்னியாகுமரியில் நடைபெற்றன. சிலைக்கான கற்கள் வாலாஜாபாத் அருகிலும், அம்பாசமுத்திரத்திலும் இருந்து தருவிக்கப்பட்டன.

பீட உயரம் 38 அடியும் 95 அடி உயர உருவமும் கொண்டு மொத்தத்தில் 133 அடி உயர்ந்து 3681 கற்களைக்கொண்டு சுமார் 7000 டன் எடையோடு நிற்கும் அய்யன் திருவள்ளுவர் சிலை பூம்புகார் படைத்த பெருந்தச்சன் என்று சிற்பிகளால் அன்புடன் அழைக்கப்பட்ட கலைஞர் அவர்கள் தமிழினத்துக்குக் கொடுத்துச்சென்ற மாபெரும் கொடையாகும்.

இது ஒரு சிற்பமா அல்லது கட்டடச் சிற்பமா என்று வியக்கும் வண்ணம் விண்ணை முட்டி வள்ளுவம் என்ற



முப்பாலின் மொத்த உருவமாக 13 அடுக்கு மாளிகை உயரத்துக்கு தென்குமரிக் கடல் நடுவே உயர்ந்து நிற்கிறார் திருவள்ளுவர்.

முப்பாலுக்கும் அறமே அடித்தளம் என்பதைச் சுட்டிக்காட்டிட 38 அதிகாரங்களைக் கொண்ட அறத்தின் மீது பொருளும் இன்பமும் சேர்ந்து 95 அதிகாரங்களைக் குறிக்கும் 95 அடி உயர உருவமாக வள்ளுவப்பெருந்தகை திருக்குறளைச் சொல்லிக்கொண்டு நிற்கிறார்.

வலதுகாலை ஊன்றி நிற்பது அறத்தின் மீதே வாழ்வு ஊன்றி நின்றிடல் வேண்டும் என்பதே வள்ளுவத்தின் தனித்துவம் என்பதை இச் சிற்பக்கட்டடம் கடல் நடுவே உயர்ந்து நின்று வலியுறுத்துகிறது.

'அறத்தின் மீதே பொருளும் இன்பமும் ஊன்றி நிற்பது' என்பதை சிற்பத்தில் காட்ட வேண்டுமெனில் ஒரு காலை ஊன்றிய நிலையிலும் மறு காலை தூக்கி மிதமாக மடக்கி முன் வைத்துச் செய்வதும் உடல் சற்று வளைந்து நிற்பதும் சிற்பத்தின் அழகியல் கோட்பாடுகள் என்பதைச் சிற்பத்தில் தெளிவுறக் காட்டியுள்ளார் சிற்ப சித்தர் கணபதி ஸ்தபதி.

தாளம் என்ற அளவு இலக்கணம் எவ்வாறு வள்ளுவர் சிற்பத்தில் கையாளப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். முதலில் தாளம் என்ற சொல் மொழியில் யாப்பு என்பதைக் குறிக்கும்.

இந்த யாப்புதான் ஒரு பாடலை இயற்ற பெரிதும் பயன்படுவது. இந்த யாப்பு என்ற தாளம் இசையிலும் உண்டு, நாட்டியத்திலும்

> கலைஞர் அவர்களிடம் நேரில் சென்று 'நிற்கிறார் திருவள்ளுவர்' என்று சொல்லியதையும் அப்போது கலைஞர் அவர்களின் முகத்தில் கோடி சூரியனுக்கும் அதிகமான பிரகாசத்தை தான் பார்த்ததாகச் சொல்லி சொல்லி மகிழ்ந்திருக்கிறார் கணபதி ஸ்தபதி அவர்கள்.

உண்டு. தமிழர் கட்டடக்கலையும், சிற்பக்கலையும் இந்த தாள அளவில்தான் எழும்பி நிற்கிறது.

ஆம் பத்து செய்யுள் கொண்ட திருக்குறள் ஒரு அதிகாரம் ஆகும். இதனையே கணபதி ஸ்தபதி ஒரு அதிகாரத்தை ஒரு தாளமாக சிற்பத்தில் கையாண்டு வள்ளுவரை கடல் நடுவே எழுப்பியிருக்கிறார்.

ஆம்! இச்சிற்பத்தில் ஒரு தாளம் 10 அடியாகும். இதுவே சிற்பம் இயற்ற பயன்பட்ட ஆதாரக் கணக்காகும். சரியான அளவுகளால் செய்யப்படும் எந்த ஒரு வடிவுக்கும் வசீகரம் தானாகவே வந்துவிடுகிறது என்பதை பண்டைய சிற்ப நூல்கள் சொல்வதை உணர்ந்தே வள்ளுவரை செதுக்கியிருக்கிறார் ஸ்தபதி.

ஒன்பது தாளம் என்பது சிற்ப இலக்கண நூல்கள் சொல்லும் பத்து வகையான தாளங்களில் ஒன்று. இந்த ஒன்பது தாள அளவுதான் வள்ளுவர் சிலை செய்ய பயன்படுத்திய தாளம் ஆகும்.

இப்படியாக வள்ளுவரின் பீட உயரம் 38 அதிகாரம் என்ற அறத்துப்பாலைக் குறிக்கும் அளவிலும் முகம் 10 அதிகாரம் கொண்ட ஒரு தாளமும், மார்பு, தொப்புள், குய்யம் 30 அதிகாரம் கொண்ட 3 தாளமும், தொடை 20 அதிகாரங்களைக் குறிக்கும் இரு தாளத்தையும் முன்கால் இரு தாளத்தையும் தலை உச்சி, கழுத்து, முழங்கால், பாதம் இந்நான்கும் மொத்தமாக ஒரு தாளமும் கொண்ட அளவே ஒன்பது தாள அளவாகும் அல்லது ஒன்பது அதிகாரம் கொண்ட அளவாகும்.

திருமுடி அரை தாள உயரம் சேர்த்து 38 அதிகாரம் கொண்ட பீடம் முதல் வள்ளுவர் சிலையின் திருமுடி மேல்வரை உள்ள அளவைக் கூட்டினால் 133 அதிகாரங்கள் கொண்ட 133 அடி திருவள்ளுவரின் மொத்த உயரம் என்பது புலப்படும்.

வள்ளுவர் சிலையின் உயரம் மட்டுமின்றி அதன் தரைப்படமும் தாளம் என்ற வள்ளுவரின் அதிகாரம் என்ற நுட்பத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக பீடமானது உள்பீடம் மற்றும் வெளிப்பீடம் என்ற இரு சுவர் அமைப்புகளைக்கொண்டு வெளிப்பீடம் நீளம் 6 தாள அளவும் அகலம் 5 தாள அளவும் கொண்டதாகும்.

அதாவது 60 அடி நீளமும் 50 அடி அகலமும் வெளிப்பீட அளவாகும். அவ்வாறே 3 தாளம் நீளம் 2 தாளம் அகலம் கொண்டது (30'x20') உள் பீட சுவர் அளவாகும். இச்சுவரே வள்ளுவரின் மொத்த எடையையும் தாங்கி நிற்கும் தாய்ச்சுவராகும்.

திருக்குறள், திருவள்ளுவர் சிலை இவற்றோடு தமிழரின் தொன்மைக் கட்டட சிற்பக்கலையையும் பத்து திசையும் பறை சாற்றும் வண்ணம் பத்து யானைகளை படைத்திருப்பதும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

தஞ்சை பெருவுடையார், கங்கை கொண்ட சோழபுரம் போன்ற விண்ணை தொடும் தொன்மை விமான கட்டட அமைப்புகள் தமிழரின் கட்டடக்கலை



அறிவியலையும், பொறியியல் நுட்பத்தையும் 1000 ஆண்டுகள் நிலைத்து நின்று உலகிற்கு பறைசாற்றும் அமைப்புகளாகும்.

கணபதி ஸ்தபதி அந்த பொறியியல் நுட்பத்தையும், கலை இலக்கணத்தையும் கையாண்டு இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் நிலைபெற்றிடும் வகையில் வள்ளுவர் சிலையை வடித்திருக்கிறார் என்பதும் நாம் அறிய வேண்டிய ஒன்று.

தஞ்சைக் கட்டடம் உள்சுவர் மற்றும் வெளிச்சுவர் என்ற இரு சுவர் அமைப்பில் உருவாக்கப்பட்டது போலவே வள்ளுவர் சிலையும் அவ்வாறே இரு சுவர் அமைப்பிலே உருவாக்கப்பட்டிருக்கிறது. இதுவே காலத்தை வென்று நிற்கும் அமைப்பு என்று கடல் நடுவில் சாதித்துக்காட்டியிருக்கிறார் ஸ்தபதி அவர்கள்.

எனவேதான் 2004ஆம் ஆண்டு சுனாமி அலை வள்ளுவர் சிலையை அசைத்துப் பார்க்க முயன்று சிலைமீது சீறிப்பாய்ந்து தோற்றிருக்கிறது. இவர்தான் திருவள்ளுவர் என்று சுனாமியை வென்றெடுத்திருக்கிறது என்று தமிழர் கட்டடக் கலையையும் வாழ வைத்திருக்கிறார் ஸ்தபதி அவர்கள்.

திருவள்ளுவர் சிலையின் முகத்தின் உயரம் அதன் உச்சிவரை 126 அடியாகும். திருமுடி 5 அடிகள் முகத்தின் மேலே அமைக்கப்பட்டது. சிலையின் தோள் மேம்பட்ட பரப்பளவு 169 சதுர அடிகள். அதன்மீது 144 சதுர அடிகள் பரப்பு கொண்ட முகத்தின் கற்களை வைப்பதும் முகத்தின் மேலே திருமுடிக்கான கற்களை அடுக்குவதும்தான் பொறியியல் சவாலானதாய் அனைவரும் ஐயமுற்றிருந்தனர் என்று கணபதி ஸ்தபதி அவர்கள் அடிக்கடி கூறுவார்.

அச்சவாலான, காரியத்தை இலகுவாகவும் வெற்றிகரமாகவும் தமிழர் சிற்பக்கலையின் தொன்மை இலக்கணம் மூலம் செய்து முடித்த உடனேயே கலைஞர் அவர்களிடம் நேரில் சென்று 'நிற்கிறார் திருவள்ளுவர்' என்று சொல்லியதையும் அப்போது கலைஞர் அவர்களின் முகத்தில் கோடி சூரியனுக்கும் அதிகமான பிரகாசத்தை தான் பார்த்ததாக சொல்லி சொல்லி மகிழ்ந்திருக்கிறார் கணபதி ஸ்தபதி அவர்கள். கலைஞரும் கணபதி ஸ்தபதியாரும் என்றென்றும் தமிழர் மனதில் வாழ்வார்கள்.



திருவள்ளுவர் சிலை அமைத்த நாள்



தமிழ் நெஞ்சங்களெல்லாம் பூரிக்கும் நாள்...



பொழிலன்

பழந்தமிழ் இலக்கியப் பரப்பில் திருக்குறள் மட்டுமே அதிகமாகப் பேசவும், திறனாயவும் செய்யப்படுகிற வகையில் பெருந்திறத்தினது...

திருக்குறளுக்கும், திருவள்ளுவருக்கும் உலகெங்கும் பல்லாயிரக் கணக்கில் மன்றங்கள், இயக்கங்கள் உள்ளன. உலகில் வேறு எந்த நூலுக்காகவும் இந்தளவு இயக்கங்கள் உருவாக்கப்பட்டு இயங்குவதாக அறிய முடியவில்லை.

அதற்கு இரண்டு பெருங் காரணங்களுண்டு. ஒன்று, அதன் பொருளாழமும், கருத்துப் பரப்பும். மற்றது, அதன் சமய மறுப்பும் சமன்மை அற நோக்கும். அவற்றின் காரணமாக ஆரிய அதிகாரங்களுக்கு அது சம்மட்டி அடி கொடுக்கிறது.

அதன் ஆழம் உணர்ந்தே ஆரியக் கருத்தினரும், சமய நெறியினரும் அதை மாற்றித் தங்கள் தங்கள் கருத்துகளுக்கு ஏற்பப் பொருள்திரித்து அடையாளப்படுத்தத் தொடங்கினர்.

எனவே, அவ்வகைப் பொருள் திரிபை மறுத்து உண்மைப் பொருளை, மெய்ப்பொருளை அடையாளப்படுத்த வேண்டுமான நோக்கிலேயும் திருக்குறள் நிறைய ஆய்வுக்குட்படுத்தப்படுகிறது.

பழந்தமிழ் இலக்கியங்கள் எவையும் இந்த அளவு விரிந்த பரப்புடையன அல்ல. தொல்காப்பியம் ஆழமான விரிவு கொண்டதே ஆயினும் திருக்குறள் போலும் புதிய குமுகம் காணும் நோக்கங் கொண்டதாக அது இல்லை.

திருக்குறள் எழுதப்பட்டு ஈராயிரத்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன என்பதில் தமிழர்கள் பெருமைப்படுகிறோம்.

திருக்குறள் ஒரு பழந்தமிழ் இலக்கியம் என்பதற்காக மட்டுமன்று; அது உலக மாந்தர் இனத்திற்கே வழிகாட்டி! தமிழர்க்கு ஓர் இனக்காப்பு; அறநெறி காட்டி என்பதற்காகவுந்தாம்.

இந்தக் கணிப்பொறியியல் காலத்திலுமா... திருக்குறளிலிருந்தா... என்று சிலர் எழுப்பும் கேள்விகளும் கேட்கின்றன...



கணினி வழி அறிவுகளும், பிற அனைத்து அறிவியல் கூறுகளும் வானிலிருந்து திடுமெனப் பொத்தென்று நம் கைகளுக்குள் வந்து விழுந்துவிடவில்லை...

தமிழின் வளர்ச்சிக்குள் திருக்குறள் இருக்கிறது. தமிழ்க் குமுகத்தின் வளர்ச்சிக்குள் வள்ளுவம் இருக்கிறது.

உழவுக்குள், தொழிலுக்குள், அறிவுக்குள், அதிகாரத்திற்குள், அதிகார இழப்புக்குள் என அனைத்திற்குள்ளும்... உயிரணுக் கூறுகளாய் வள்ளுவமும் உயிர்த்திருக்கிறது...

வள்ளுவம் காட்டும் அற வாழ்க்கை என்பது பொதுமை நல நோக்கினது, ஏற்றத் தாழ்வை மறுப்பது... சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை உள்ள நிலைகள் அறமற்றவை என ஓங்கி அறைவது...

முகத்தான் அமர்த்த மறுக்கும் திமிரைச் சாடுவது... புறத்தாற்றிப் போகும் பொய்ம்மையை அறமற்றது எனக் காட்டுவது... நோற்பார் நோன்மையினும் அறனிழுக்கா இல்வாழ்க்கைச் சிறப்பென்பது... பொய்யாமை யாற்றுவது... மனத்துக்கண் மாசிலாது ஒழுகுவது... என்றெல்லாம்.. குடும்பத்திற்குள் மட்டுமல்லாது குமுகத்திற்குள்ளும் உயர்வு தாழ்வை மறுப்பது.

உயர்வு தாழ்வை வலியுறுத்துவதுதான் வருண தர்மம். ஆரிய வருணாசிரமத் தர்மத்தினை அடையாளப்படுத்திக் காட்டிக் கொண்டிருக்கும் போதுதான்.., மக்களை உயர்ந்தவர், தாழ்ந்தவர் எனப் பகுக்கும் சாதிய, வருணத் திமிர்களை மறுப்பதற்கு அறம் என்று திருக்குறள் அடையாளப்படுத்தியது...

கணிப்பொறிக் காலத்திலும்கூட ஆரியத்திற்குச் சாதி தேவைப்படுகிற போது, மதம் தேவைப்படுகிறபோது, அவற்றை மறுப்பதற்கும் எதிர்ப்பதற்கும் திருக்குறள் காட்டும் அறநெறி நமக்கு அடிப்படையாய்த் தேவைப்படத்தான் செய்கிறது. ஏற்றத்தாழ்வுகள் இருக்கிற காலம் வரை..., இரத்தல், இன்னா செய்தல் இருக்கின்ற காலங்கள் வரை, திருவள்ளுவம் இருக்க வேண்டிய தேவையும் இருக்கத்தான் செய்யும்.

திருக்குறளை ஆரியத்திலிருந்து.. ஆரியக் கருத்திலிருந்து விடுவித்துப் பார்க்கப் பழக்கினர் வள்ளலார், வ.உ.சி. உள்ளிட்ட எண்ணற்ற அறிஞர்கள்,...

ஆரியத்தை வீழ்த்த சரியான மருந்தும் திருக்குறள்தான் என்றார் பெரியார்.

தமிழ் அறிஞர்கள் பலரின் முயற்சிகளால், பெரியார் நடத்திய அன்றைய மாநாட்டால் ஆரியப் பொறி கலங்கியது... உங்கள்மதம் குறள்மதம் என்று கூறுங்கள்; உங்கள்நெறி குறள்நெறி என்று சொல்லுங்கள்! என்று தி.பி.1980 (கி.பி.1949)இல் சொன்னவர் பெரியார்.

அதேநேரத்தில் திருக்குறளை உயர்த்தி நிறுத்துவதன் தேவையுணர்ந்து தொடர்ந்து எண்ணற்றோர் செயல்படத் தொடங்கினர். வள்ளுவத்தைப் பரப்புகிற முயற்சிகள், திருவள்ளுவரை அடையாளப்படுத்துகிற முயற்சிகள் படிப்படியாக நடக்கத் தொடங்கின.

திருக்குறள் வகுப்புகளை நடத்தினார் வள்ளலார்..

திருக்குறள் மாநாடுகளை நடத்தினார் பெரியார்..

வ.உ.சி., பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார், புலவர் குழந்தை, நாவலர், கலைஞர் எனத் தொடர்ந்து திருக்குறளுக்கு ஆய்வுரை தந்திருக்கும் நிலையில், திருக்குறளைத் திரித்துரைக்கும் ஆரியச் சூழ்ச்சிகளை வேறுபடுத்தி விளக்கப்படுத்தும் முயற்சிகள் நடந்து வருகின்றன..

கோயில்கள்கட்டி ஆரிய கால்பரப்ப வழி வகுத்த ஆரிய அடிமை அரசுகளின் நடைமுறைகளை மாற்றி வள்ளுவருக்குக் கோட்டம்(1976இல்) கட்டித் திருவள்ளுவ அறத்தை அடையாளப்படுத்தினார் கலைஞர். கல்வி நிறுவனங்களின் பாடப்புத்தகங்களில், பேருந்துகளில் (1967) என எங்கும் திருக்குறளும் திருவள்ளுவமும் பரப்பப்பட்டன. திருவள்ளுவர் நாள் (1970) என அரசு அறிவிப்பால் கொண்டாடப்பட்டது..

இது நாள் வரை எழுதப்பட்டிருக்கும் ஆயிரக் கணக்கான உரைகளுள் முக்கால் பகுதிக்கும் மேற்பட்டவை ஆரிய வைதீகச் சார்புடையவையே என்றால் எப்படியான கொடுமைகள் நடந்து வருகின்றன என உணரமுடியும். இதற்கிடையில்தான் திருவள்ளுவத்தை உயர்த்தி நிறுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தனித்தமிழ் அறிஞர்கள் அறிவு சார் முயற்சிகளை இளைய தலைமுறைகளிடம் பரப்பினர்.


அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபின்தான் அரசு முயற்சிகளில் திருவள்ளுவரும் திருவள்ளுவமும் பரப்பப் பெற்றன. எல்லாவற்றையும் கடந்து கி.பி.2031 (தி.பி. 2000 ஆண்டின் முதல் நாள்) வானுயர்ந்த அற அய்யன் வள்ளுவரை நிலை நிறுத்தி அமைத்தார் கலைஞர்..

இந்நிலையில்தான் எதிர்வரும் திசம்பர் 31ஆம் நாளும், சனவரி 1ஆம் நாள்- தென்புலத் தெய்வப்புலவர் அய்யன் திருவள்ளுவர் சிலை எழுப்பப்பெற்று 25ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாட அழைப்பு விடுத்திருக்கிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர். தமிழ் நெஞ்சங்களெல்லாம் பூரிக்கும் அச்செய்தியைத் தமிழுலகம் மட்டுமின்றி, உலகில் தமிழ் அறவோர் உறையும் இடங்களெல்லாம் பரப்புவோம்.


திருவள்ளுவப் பொதுமை அறத்தை ஓங்கி உயர்த்திக் கொண்டாடுவோம்.

வருணாசரம வன்மக் கொடுமைகள் தமிழ் அறத் தீயில் பொசுங்கட்டும்.





வள்ளுவச் செல்வாக்கில் பாரதியார்



புலவர்
செந்தலை ந. கவுதமன்

பாரதி படைப்புகளோடு வள்ளுவச் செல்வாக்கு கலந்து நிற்பதையும் அதற்கான காரணங்களையும் ஊன்றிப் பார்த்தால் உணரமுடியும். திருக்குறள் பற்றும் பயிற்சியும் உடையவராகக் காசியில் பயின்ற பாரதியிருந்தது சற்று வியப்பான செய்திதான்! அவரின் நெல்லை மாவட்டத் தொடர்பே இதற்கு முகாமையான காரணம் எனக் கருத இடமுண்டு. தமிழ்க்கல்வி பயிற்றுவிக்கும் கவிராயர்கள் மிகுந்த மாவட்டம் நெல்லை. 'நல்லதமிழ் நெல்லை உடைத்து' எனத் திராட மொழிநூல் ஞாயிறு பாவாணர் வியந்து பேசுவார்.

தமிழ் நூல்களில் முதன்முதல் அச்சேறிய நூல் திருக்குறள்தான்! அதற்குக் காரணமான ஆங்கிலேயர் எப்.டபிள்யு. எல்லீசு. அச்சேற்றியவர் தஞ்சை ஞானப்பிரகாசர். திருக்குறள் சுவடிகள் பலவற்றையும் ஒப்பிட்டுப்பார்த்து 1812இல் நூலாக்கம் பெறத் துணைநின்றவர் திருநெல்வேலி அம்பலவாணக் கவிராயர். திருக்குறள், நாலடியார், திருவள்ளுவமாலை மூன்றும் ஒரே நூலாக அச்சிடப்பட்டு அப்போது வெளிவந்துள்ளது. மூலபாடத்தைத் தீர்மானிப்பதற்குத் தாம் எடுத்துக்கொண்ட முயற்சியையும், வகுத்துக்கொண்ட நெறிமுறையையும் குறித்து நூலின் பதிப்புரையில் அம்பலவாணக் கவிராயர் தெளிவுபடுத்தியுள்ளார்.

"இந்தப் பொத்தகத்திலெ முதிய தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரளிச் செய்த திருக்குறள் மூலபாடமும், நாலடியார் மூலபாடமும், திருவள்ளுவ மாலையும் ஆக மூன்று சுவடியும்... ஒரே முத்து ஒருசொல் நூதனமாகக் கூட்டாமற் குறையாமல் அனேக மூலபாடங்களுரை பாடங்களுக்கு இணங்கரிதாகத் தீர்மானம் பண்ணிய சுத்தபாடம் பார்த்தெழுதிச் சரவை பார்த்த பாடமாகையாலும்... பாடங்களில் எள்ளளவேணும் சங்தேகப்பட வேண்டுவதின்று. இப்படிக்குத் திருநெல்வேலி அம்பலவாணக் கவிராயர்."

திருக்குறள் பதிப்பிக்கப் பெற்ற தொடக்கநாள் வரலாற்றில், நெல்லையின் பங்கு இதனால் தெளிவுபெறுகிறது. நெல்லை மாவட்டத்தில் பிறந்தவரும் அம்மாவட்டத்திலேயே பெண்

பாரதியின் பாடல் பலவற்றையும் உற்றுநோக்கினால்
உள்ளே திருவள்ளுவர் தெரிவார். தனிஒருவனுக்கு உணவில்லை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம் எனும் பாரதி பாடலுக்குள் தெரிவது

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான். (திருக்குறள்: 1062)

என்னும் வள்ளுவர் நெஞ்சம்.

கொண்டவருமான பாரதியாரின் திருக்குறள் ஈடுபாடு அவரின் 23ஆம் வயதில் 1905இல் வெளிப்படத் தொடங்கியது.

சக்கரவர்த்தினி

மகளிர் மேம்பாட்டிற்காகப் பாரதியை ஆசிரியராகக் கொண்டு ஆகஸ்டு மாதம் 'சக்கரவர்த்தினி' திங்களிதழ் வெளிவரத் தொடங்கியது. அக்காலத்தில் வெளிவந்த இதழ்கள் பலவும் திருக்குறளை முகப்பில் தாங்கி வெளிவந்து கொண்டிருந்தன.

ஜீவானந்தபோதினி, தமிழர், விவேகபாநு இதழ்களின் முகப்பில் 'அகரமுதல' திருக்குறள் இடம்பெற்றிருந்தது.

ஜீவரட்சகன், செந்தமிழ்க் களஞ்சியம் இதழ்கள் 'மலர் மிசை ஏகினான்' குறளைத் தாங்கி வெளிவந்து கொண்டிருந்தன.

'முல்லைக்கொடி' இதழின் முகப்புக் குறள் 'அறிவுடையார் எல்லாம் உடையார்' விவேக திவாகரன் இதழ், முகப்பில் இடம் பெற்றிருந்த குறள் 'தொட்டனைத்து ஊறும்' 'சன்மார்க்கன்' இதழ் 'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும்' குறளை முகப்பில் தாங்கி வெளிவந்துகொண்டிருந்தது.

பாரதியை ஆசிரியராகக் கொண்ட 'சக்கரவர்த்தினி' இதழும் இதே முறையில் முகப்பில் திருக்குறள் தாங்கி வெளிவர வேண்டும் என்று தீர்மானித்தனர். ஆனால் இடம் பெற்றது திருக்குறள் அன்று, திருக்குறள் போல பாரதியே எழுதிய குறள்வெண்பா:

பெண்மை அறிவுயரப் பீடுயரும் பெண்ணேதான்
ஒண்மையுற ஓங்கும் உலகு.

பாட்டெழுதும் திறனுடைய பாரதி. தம் பாடலைத் திருக்குறள் தோற்றத்தில், இதழ் முகப்பில் இடம்பெறச் செய்து விட்டார்.

'சக்கரவர்த்தினி' இதழுக்கு ஓராண்டுக் காலம் ஆசிரியராக இருந்தார். மாத இதழ் என்பதால் ஒவ்வொரு மாதமும் ஒரு குறட்பாவை எழுதி முகப்பில் இடம் பெறச் செய்துவந்தார். குறட்பாவைக் கவனிக்காமல் விட்டுவிடுவார்களோ என்ற கவலையும் அவருக்கு இருந்துள்ளது. "நமது பத்திரிகையின் முதற்பக்கத்திலே மாதந்தோறும் எழுதப்பட்டிருக்கும் குறளை நேயர்கள் கவனித்திருப்பார்கள் என்றே நம்புகிறோம்." இப்படி ஒரு கட்டுரையில் எழுதி முகப்புக்குறளை நினைவுபடுத்தியுள்ளார் பாரதி. பாரதியின் திருக்குறள் பற்று, அவரைப் புதுப்புதுக் குறட்பாக்களைப் பெண்கள் மேம்பாடு குறித்து எழுத வைத்துள்ளது.

'சக்கரவர்த்தினி' 1906 சனவரி இதழில் 'ஒரு பஞ்சாபி மாது' எனும் தலைப்பில் கட்டுரை எழுதிய பாரதி, பெண்கல்வியை வலியுறுத்துவதற்கு எடுத்தாண்ட குறள் இது

தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். (குறள்: 399)

அதே இதழில் 'பாமர குமாரிகள்' எனும் கட்டுரையையும் அவரே எழுதியுள்ளார்.

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் (குறள்: 69)

என்னும் குறளின் பெருமையை அக்கட்டுரை பேசுகிறது. 'சக்கரவர்த்தினி' முதலாவது இதழில் (1905ஆக.) அனைத்து

வளத்திற்கும் அடித்தளம் கல்வியே எனக் குறிப்பிடும் பாரதி

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர் (குறள்:410)

என்னும் குறட்பாவை இனைத்துப் பேசுகிறார்.

சுதேசமித்திரன்

சக்கரவர்த்தினியைத் தொடர்ந்து பாரதி பணியாற்றிய இதழ் 'சுதேசமித்திரன்'. வாய்ப்பு நேரும்போதெல்லாம் திருக்குறள் இன்பத்தைக் கட்டுரைகளில் கலந்து வழங்கும் பாரதியைச் சுதேசமித்திரன் கட்டுரைகள் காட்டுகின்றன. பல கட்டுரைகளில் பாரதி கையாண்டுள்ள குறள் என்பதால், அவரின் மனம் கவர்ந்த குறளாக இதனைச் சொல்லலாம்:

கண்ணுடையர் என்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (குறள்: 393)

குறளின் குரலானவர்

வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு.

பாரதியின் இந்தப்பாடல் வரிகள் எல்லோராலும் அறியப்பட்டவை. திருக்குறள் பற்றிப் பரவலான கவனம் பெறாத பாரதி பாடல்களும் உள்ளன.

'தமிழ்ச்சாதி' என்னும் பாடல் குறளின் பெருமைகளைக் கூறுகிறது:

சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்,
திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்.
ஆழமும் விரிவும் அழகும்

என விரிந்து நடக்கிறது அந்தப் பாடல்.

நம்நாட்டு மக்கள் பெருமையையும் நமது பண்பாட்டுச் சிறப்பினையும் அறிய வொட்டாமல் தடுத்துவிட்டது ஆங்கில வழிக் கல்வி என்பது பாரதியின் உறுதியான கருத்து. வள்ளுவப் பெருமை அறியாமல் ஒரு கல்வியா என அந்தப்பாடல் சீறுகிறது:

சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பார ளித்ததும் தர்மம் வளர்த்ததும்
அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்து
ஆங்கி லம்பயில் பள்ளியுள் போகுநர்.

பாரதி உள்ளே வள்ளுவர்

சில குறட்பாக்களுக்குப் பாட்டிலேயே விரிவுரையும் எழுதியுள்ளார் பாரதி.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல்' என்னும் குறளைப் போற்றுகிறார்.

அறம்ஒன் றேதரும் மெய்யின்பம் என்றநல்
அறிஞர் தம்மை அனுதினம் போற்றுவோம்.

என அந்தக் குறளைப் பாரதி விரிவு படுத்திப் பாடுகிறார்.

பாரதியின் பாடல் பலவற்றையும் உற்றுநோக்கினால் உள்ளே திருவள்ளுவர் தெரிவார்.

தனிஒருவனுக்கு உணவில் லைஎனில் ஜகத்தினை அழித்திடுவோம்.

எனும் பாரதி பாடலுக்குள் தெரிவது

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (திருக்குறள்: 1062)

என்னும் வள்ளுவர் நெஞ்சம்.

பாரதி முதலிய பலரும் திருவள்ளுவரை விளங்கிக் கொண்டாலும் விளக்கிச் சொன்னாலும் பெருமை கூடுவது தமிழருக்கே!

பயன்பட்டவை:

1. *சீனி விசுவநாதன், மகாகவி பாரதி வரலாறு, 1996, பக்.83.*
2. *வீ.கோபால், 'தமிழ் இதழ்களின் முகப்பில் திருக்குறள்', வள்ளுவம் (1999 மே சூன் இதழ்) விருத்தாசலம், ப.69.*
3. *பெ.சு.மணி, 'குறள் நெறி பரப்பிய தேசிய இயக்கச்செம்மல்கள்' வள்ளுவம் (1999 நவம் திசம்) இதழ், ப.31.*
4. *சி.பாலசுப்பிரமணியன், 'வள்ளுவர் வழியில் பாரதி' மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா மலர், 1982, அண்ணாமலை பல்கலைக்கழகம், ப.319.*



சனாதனத்திற்கும் சாணக்கியத்திற்கும் எதிரானவர்!



பேராசிரியர்
அருணன்

குமரி முனையில் வள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு இருபத்தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன.

குமரிக் கடல் என்றால் விவேகானந்தர் பாறை என்றிருந்ததை வானுயர் வள்ளுவர் என மாற்றினார் முத்தமிழறிஞர் கலைஞர். இருந்த கோட்டுக்குப் பக்கத்திலே பெரிய கோடு போட்டார்; காரியம் கச்சிதமாக முடிந்தது.

இதனால் அதிர்ந்து போனவர்கள் திருவள்ளுவரையே திருடப் பார்க்கிறார்கள். அவரும் சனாதனியே என்று பெரும்போடாகப் போடுகிறார்கள். பெரிய இடத்து மனிதர்கள் சிலர் வள்ளுவருக்கு காவிச் சாயம் பூசுகிறார்கள்.

தமிழ்நாடு அரசின் அதிகாரபூர்வமான வள்ளுவர் படத்தை ஒதுக்கித்தள்ளி தங்களது சனாதனத்திற்கு ஏற்ப படம் போடுகிறார்கள். எனவே இந்த வெள்ளி விழாக் கொண்டாட்டம் காலத்தின் கட்டாயம்.

இந்த வேளையில் மக்களுக்கு நாம் நினைவுபடுத்த வேண்டியது இவர்களது சனாதனத்திற்கும் வள்ளுவருக்கும் எள்ளளவும், எள்ளின் முனையளவும் சம்பந்தம் இல்லை என்ற உண்மையை, கொடூர வருணாசிரமத்தின் கவர்ச்சிப் பெயராக இருக்கும் இந்த சனாதனத்தின் பரம எதிரி அவர் எனும் யதார்த்தத்தை.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

என்றதன் மூலம் செய்யும் தொழிலில் உள்ள வேற்றுமையை ஏற்றாரே தவிர பிறப்பின் அடிப்படையில் சனாதனம் வகுத்த பாகுபாட்டை ஏற்கவில்லை. வருண பேதத்தின் அடிப்டையில் எழுதப்பட்டதே மனுதர்ம சாஸ்திரம். அதுவே வெகு காலமாய் நடப்பிலிருந்த சட்ட நூல். அந்த அநீதி நூலுக்கு நேர்எதிரான நீதி நூல் வள்ளுவர் பாடியது.

சனாதனத்தின் மற்றொரு முக்கிய கூறு தெய்வீகப்படுத்தப்பட்ட யாகம் வளர்த்தல். அதன் பெயரில் சமஸ்கிருத புரோகிதர்கள் மக்களின் மனங்களை ஆட்டிப் படைத்தார்கள்.

வள்ளுவரோ வேள்வி எனப்பட்ட யாகத்தை சர்வசாதாரணமாக இரண்டாம் நிலைக்குத் தள்ளினார்.

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று."
என்றார்.

சனாதனம் ஒரு போதும் அகிம்சை பேசியது இல்லை. இலக்கை அடைய எதையும் செய்யலாம் என்பதே அதன் போதனை. அது துதிக்கும் பல ஆண் பெண் கடவுள்கள் கரங்களில் ஆயுதங்களைக் கொடுத்தது. வள்ளுவரோ "கொல்லாமை" என்றே ஓர் அதிகாரம் பாடினார்!

அதில் உள்ள ஒரு குறளைக் கேளுங்கள்:

"நன்றாகும் ஆக்கம்பெரிது எனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை".

கொலையால் கிடைக்கும் வளமான செல்வம் பெரிது என்றாலும் சான்றோர் அதை இழிவாகவே கருதுவர் என்பது நேரடியான உரை. குறளுக்கு கிடைக்கும் பழமையானது மணக்குடவர் உரை. அவர் இந்தக் குறளுக்கு "வேள்வியில் வரும் கொலையும் ஆகாது என்றது" என விளக்கினார்.

அவர் மட்டுமா? பரிமேலழகரும் இதையே வேறு விதமாகச் சொன்னார்:

"தேவர் பொருட்டு வேள்விக்கண் கொன்றால் இன்பம் மிகும் செல்வம் பெரிதாம் எனப்பட்டது". வேள்வியில் உயிர்ப்பலி நடந்தது, அதனால் செல்வம் கிடைக்கும் எனப்பட்டது. அதுவும் இழிவானதே என்றார் வள்ளுவர் என விளக்கினார்.

கொல்லாதே என்று சொன்னது மட்டுமல்லாது, காப்பாற்று என்றும் அதே அதிகாரத்தில் சொன்னார். அது:

"பகுத்துஉண்டு பல்உயிர் ஓம்புதல்
நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை".

கிடைத்ததை பகிர்ந்து கொடுத்து, தானும் உண்டு, பல உயிர்களையும் காப்பாற்றுதல் அறநூலார் கூறிய அறங்களில் எல்லாம் சிறந்தது என்பது உரை.

இந்த மகத்தான சமத்துவச் சிந்தனைக்கும் சனாதனத்திற்கும் என்ன சம்பந்தம்? அது அன்னதானத்தையும் ஒரு குறிப்பிட்ட வருணத்தவருக்குச் செய்தால்தான் புண்ணியம் என்று நியதி வகுத்தது! ஆக, கொல்லாமையை வலியுறுத்தியதும் சனாதனத்திற்கு எதிராக இருப்பதை நோக்குங்கள்.

இப்படி வருணாசிரமத்தை, யாகத்தை எதிர்த்தவர், சமத்துவத்தை வலியுறுத்தியவர் எப்படிச் சிலர் கூறுவது போல "பாரதிய சனாதன பாரம்பரியத்தின் பிரகாசமான துறவி" ஆவார்?

கேட்டால் அறத்துப்பாலில் வரும் "புலால் மறுத்தல்", "ஊழ்" போன்ற அதிகாரங்களைக் காட்டித் தங்களது கூற்றை நியாயப்படுத்தப் பார்க்கிறார்கள்.

ஆனால், அவை அன்று தமிழ்நாட்டில் நிலவிய சமண சமயத் தாக்கத்தால் எழுந்த சிந்தனைகளே தவிர சனாதனத்தால் வந்தவை அல்ல. சொல்லப்போனால், சமணமானது சனாதன வேத சமயத்தை எதிர்த்து நின்றது. அதனாலேயே அதைக் கடுமையாகத் தாக்கிப் பாடினார்கள் நாவுக்கரசரும், சம்பந்தரும். எனவே எப்படிப் பார்த்தாலும் சனாதனத்தின் மகா எதிரியே நமது வள்ளுவர்.

இதிலே சில பேர் வள்ளுவரது பொருட்பால் சாணக்கியரின் அர்த்தசாஸ்திரத்தின் தாக்கத்தால் எழுந்தது என்று அடித்து விடுகிறார்கள். அர்த்தசாஸ்திரமானது வருணாசிரமத்திற்கு ஏற்ப அரசியல் - பொருளாதாரம் பேசியது.

சாணக்கியர் கூறினார்: "தனது சொந்தக் கடமையைச் செய்பவன், ஆரியர்களின் பழக்க வழக்கங்களைப் பற்றி நிற்பவன், சாதிய விதிமுறைகளையும் மதவாழ்வின் பிரிவுகளையும் விடாது பின்பற்றுபவன் இவ்வுலகிலும் மறுவுலகிலும் ஆனந்தமாக இருப்பான்" (பகுதி1 அத்தியாயம் 3). இப்படி எங்கும் ஆரியர் புகழ் பாடவில்லை, சாதிய விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று சொல்லவில்லை வள்ளுவர்.

"மது கண்காணிப்பாளர்" எனும் பதவியை உருவாக்கி, அதன் விற்பனையை அரசன் சிறப்பாக நடத்திவர வேண்டும் என்று ஒரு தனி அத்தியாயத்தில் (பகுதி2 அத்தி.25) விரிவாகப் பேசியுள்ளார் சாணக்கியர். ஆனால் வள்ளுவரோ "கள் உண்ணாமை" பற்றித் தனி அதிகாரம் பாடியிருக்கிறார்!

"கணிகையர் கண்காணிப்பாளர்" எனும் பதவியை உருவாக்கி அத்தொழிலை அரசன் சிறப்பாக நடத்திவர வேண்டும் என்று ஒரு தனி அத்தியாயத்தில் (பகுதி 2 அத்தி.27) விரிவாகப் பேசியுள்ளார் சாணக்கியர். "அரசவையில் ஆண்டுக்கு ஆயிரம் பணம் சம்பளத்தில் ஒரு கணிகையை நியமிக்க வேண்டும். ஒரு பிரதி (மாற்று) கணிகையையும் பாதி சம்பளத்தில் நியமிக்க வேண்டும்" என்றார்.

ஆனால், வள்ளுவரோ கணிகையர் உறவு கூடாது என்று "வரைவுஇல் மகளிர்" அத்தியாயம் பாடியிருக்கிறார்! அதாவது சனாதனிகள் போற்றும் சாணக்கியரைப் பின்பற்றியல்ல, அவருக்கு எதிராகப் பாடியிருக்கிறார் நமது வள்ளுவப் பெருந்தகை.

பொருட்பாலுக்கு சாணக்கியரைக் காட்டியவர்கள் காமத்துப்பாலுக்கு வாத்ஸ்யாயனாரைக் காட்டுகிறார்கள்.

ஆனால், அதற்குள் புகுந்து பார்த்தால், அது முன்வைக்கும் கருத்தியலுக்கும் வள்ளுவரின் கருத்தியலுக்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிகிறது.

வள்ளுவரோ "பிறன்இல் விழையாமை" என்று தனி அதிகாரம் பாடியிருக்கிறார். புத்தகம் ஆறு, கணிகையர் பற்றியது. அதை வாழ்வின் இயல்பான பகுதி போல விவரித்துச் செல்கிறது. இதை வள்ளுவர் ஏற்கவில்லை என்பதை ஏற்கெனவே கண்டோம்.

காமத்துப்பால் ஊடல், கூடல் பற்றிப் பேசுகிறது. ஊடலுக்கும் கூடலுக்கும் இடையிலான மனப் போராட்டம் மிகப் பிரமாதமான இலக்கியமாக எழுந்திருக்கிறது. அதிலும் தலைவனின் பிரிவால் தலைவி அடையும் வேதனையை அவள் பக்கம் நின்று பேசுகிறது.

"பிரிவு ஆற்றாமை" அதிகாரத்தில் வரும் இந்தக் குறளைக் கேளுங்கள்:

"அளித்தஞ்சல் என்றவர் நீப்பின்
தெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு".

'பிரியேன் அஞ்சாதே' என்று சொன்னவரும் பிரிந்து போனால் அவரது பேச்சை நம்பியவள் மீது தவறு உண்டோ?என்பது உரை. பிரிய மாட்டேன் என்று சத்தியம் செய்தவரும் பிரிந்து போனார்! சத்தியத்தை நம்பியது குற்றமா? அப்பாவிப் பெண்ணின் பரிதாப நிலையைச் சொன்னார் வள்ளுவர்.

தலைவனின் பிரிவால் தலைவிக்கு ஏற்படும் இயல்பான தவிப்பையும் அதே அதிகாரத்தில் சொன்னார்:

"தொடில்சுடின் அல்லது காமநோய் போல
விடில்சுடல் ஆற்றுமோ தீ".

சுட்டால் சுடும் தீயானது காம நோய் போல விட்டாலும் சுடுமோ? என்பது உரை. காமத்தோடு ஒப்பிடும்போது தீயின் சக்தி குறைவுதான்!

வள்ளுவரின் காமத்துப்பாலோடு முடிச்சுப் போடுவது சகலத்திலும் வேத சமய சாஸ்திரங்களைக் காணத் துடிப்போரின் விபரீத முயற்சியாகும்.

தங்களுக்கு எதிரான படைப்பையும் தங்களது என திருதராஷ்டிர ஆலிங்கனம் செய்யும் வேலை அந்தக் காலத்தில் வேண்டுமானால் வெற்றிகரமாக நடந்திருக்கலாம். இந்தக் காலத்தில் நடக்காது.

இப்போது இருப்பது விழித்துக்கொண்ட தமிழ்நாடு. கால வெள்ளத்தில் உருண்டு வந்து இன்று நம் கையில் கிடைத்துள்ள ஒரு ஞானப் பெட்டகம் திருக்குறள். அதை எதிரிகள் கைப்பற்ற ஒருபோதும் அனுமதிக்க மாட்டான் தமிழன்.

ஆதாரம்:

1. *Kautilya's Arthashastra -Translated by R. Samasastry,1915.*
2. *Kama Sutra of Vatsyayana-Edited by Mulk Raj Anand and Lance Dane, 1982.*





உள்ளிருள் நீக்கும் ஒளி



ஆய்வாளர்
பழ. அதியமான்

முக்கடலும் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் திருவள்ளுவரின் சிலை அமைந்து கால் நூற்றாண்டு ஆகிறது. இந்தியாவிலேயே அது மூன்றாவது பெரிய சிலை. நின்றகோலச் சிலைகளில் உலகத்திலேயே 32வது இடத்தைப் பெறுகிறது. உலகம் முழுவதும் அரசர்களும், இறைவர்களும், மதத்தலைவர்களும், சிலைகளாய் காட்சிதர, இலக்கியவாதி ஒருவர் எழிலோடு உயர்ந்து, கடலில் நிற்கும் உலகின் ஒரே பெரிய சிலை கன்னியாகுமரியின் வள்ளுவர் சிலை.

நீர்மட்டத்திலிருந்து 30 அடி உயரமுள்ள பாறை மீது சிலை அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலேயே மிக உயரமான 133 அடி அளவுள்ள சிலை அது. அச்சிலை அமைக்கும் பணி 1990இல் தொடங்கப்பட்டு 2000 ஜனவரி முதல் தேதியன்று திறக்கப்பட்டது. பாறையாலும் பைஞ்சுதையாலும் சிலை இயன்றுள்ளது. தந்தை கலைஞரின் மன எண்ணத்தில் உருவாக்கப்பட்ட அச்சிலை மகன் முதல்வரின் முயற்சியில் 2025ஆம் ஆண்டு வெள்ளி விழா காண்கிறது.

"High-class Malabaris often make it their handbook and whenever one enters into a discussion with them they are always ready to quote a few verses from it to prove the validity of their words". இது ஜெர்மானியப் பாதிரியார் சீகன்பால்கு (1682-1719) தமிழ்நாட்டைப் பார்த்து எழுதிவைத்த திருக்குறள் பற்றிய குறிப்புகளுள் ஒன்று. அவர் 'handbook' என்று குறிப்பிடுவது திருக்குறள் நூலை. தமிழர்கள் தம் கருத்தை அரண் செய்ய குறளைப் பயன்படுத்தும் இந்தச் சிறப்புநிலை இன்றுவரை தொடர்கிறது.

மேலும் தமிழர்கள் தவிர இந்திய நாட்டின் தலைமை அமைச்சருமே தம் கருத்தை வலியுறுத்த பயன்படுத்தும் அளவிற்கு குறள் பரவி வளர்ந்து உள்ளது. இக்குறிப்பில் 'மலபாரிகள்' என்று சீகன்பால்கு குறிப்பது தமிழர்களையே. அப்படி விளிப்பது ஐரோப்பியரது அக்கால வழக்கம். இன்னொரு ஜெர்மானியப் பாதிரியாரான ஜெ.பி.பெப்ரீஷியஸ் தயாரித்த தமிழ் - ஆங்கில அகராதிக்குப் பெயரே "A Malabar and English Dictionary"(1779) என்பதுதான். திருக்குறள் காலத்தை வென்ற பார்வை நூலாக நீடிக்கிறது.

தமிழ் கற்ற புலவர்களாலும் தமிழ் அறிந்த பிரித்தானிய ஆட்சி மற்றும் சமயப் பணியாளர்களாலும் திருக்குறள் மீள் கண்டுபிடிப்பு செய்யப்பட்டு முதலில் பதிப்பிக்கப் பெற்றது. பின்னர் ஆங்கிலம் கற்ற தமிழர்களாலும் அது போற்றப்பட்டது. தொடர்ந்து தமிழ் பெற்ற மறுமலர்ச்சியின் ஊடாகத் திருக்குறள் தமிழில் முக்கிய இடத்தைப் பெற்றது. தமிழ்ப் புலவர்கள் எந்தச் சிணுங்கலுமின்றி அதை ஏற்றனர்.

ஆனால் சீர்திருத்தவாதிகள் சற்று தயக்கத்துடன்தான் ஒப்புக்கொண்டனர். திருக்குறளைப் பல சரக்கு கடையோடு ஒப்பிட்டு மளிகைக் கடையில் பலவும் தான் இருக்கும், வேண்டியதை மட்டும் நாம் எடுத்துக் கொள்ளலாம் என்றார் பெரியார்.

பௌத்த சமயக் கருத்துகள் கொண்ட 'திரிபீடகம்' என்ற நூலாகத் திருக்குறளைக் கருதிய அயோத்திதாசர் அதைத் 'திரிக்குறள்' என்றார். இந்த எண்ணத்தில் அவரும் திருக்குறளை ஏற்றார்.

பரிமேலழகர் உரையைத் தவிர்த்துவிட்டு திருக்குறளை ஏற்கலாம் என்றார் புலவர் குழந்தை. திராவிட இயக்கத்தின் செல்வாக்கு பரவிய தமிழ்ச் சமூகத்தில் அரசியல் சார்ந்த ஆதரவும் திருக்குறளுக்கு அதிகரித்தது.

பல பதிப்புகள்,மொழிபெயர்ப்புகள் போன்ற இலக்கியமுயற்சிகள் தவிர கோயில், கோட்டம், சிலை, நூலகம், பல்கலைக்கழகப் பெயர், தபால் தலை, விருதுப் பெயர் என்று பலவாறெல்லாம் அதற்குப் பெருமை சேர்க்கப்பட்டு திருக்குறளின் செல்வாக்கு 21 ஆம் நூற்றாண்டில் நின்று நிலைத்தது. அதனுடைய பௌதீகவடிவம்தான் கன்னியாகுமரியில் நிற்கிற நூல்உயரச் சிலை.

ஆம்... திருவள்ளுவருக்கு நாம் சிலை அமைத்திருக்கிறோம். ஆனால் அவரோ திருக்குறளில் 'சிலை' என்கிற சொல்லைக் கூட வைக்கவில்லை. "மலை"யை ஒன்பது இடங்களில் உருவாக்கியவர், சிலையைத் தொடவில்லை, சிற்பத்தையும் கூட.

திருக்குறளின் 14,000 சொற்களில் ஒரு இடத்தில் கூட 'சிலை' என்று எழுத்தில் வரவில்லை. சிலை என்ற கருத்தாக்கம் அவர் காலத்தில் இல்லையோ என்ற சந்தேகம் வருகிறது. இருந்தும் பயன்படுத்தாது கூட விட்டிருக்கலாம். "ஔ" என்ற உயிர் எழுத்தை அவர் பயன் கொள்ளவில்லை என்பதால் அது தமிழ்நெடுங்கணக்கில் இல்லை என்றாகிவிடுமா! இராமாயணத்தில் அதாவது இதிகாச காலத்திலேயே, காணாமல் போன சீதையின் உருவம் செய்து பிரார்த்தித்ததாகக் கதை உண்டு.

சிலை, சிற்பம், பொம்மை:

சிலாசாசனம் என்பதற்கு கல்வெட்டு என்று பொருள். சிலாலிகிதம்,சிலாலேகை என்பனவும் இதே பொருளைக் குறிப்பன. சிலாவட்டம் என்பது வட்டக் கல். சிலோச்சியம் என்பது கல்லாலான மலை. சிலை என்கிற சொல் சிலா என்பதினின்று பிறந்திருக்கலாம். எனவே சிலை என்கிற சொல்லுக்கு அடிப்பொருள் கல் எனலாம்.

சிலையும் தமிழும்:

சிலைக்குச் 'சிலை' (statue) என்ற பொருள் தமிழில் வழக்கில் முன்பு இல்லை. சிலைக்கு வில் என்பதே பழம் பொருள். "சிலை எழுபது" என்று கம்பர் எழுதியதாகக் கூறப்படும் நூல், வில் பற்றியதே. வில்லின் வளைவுகள், வில் பிடித்தலின் சிறப்பு போன்றவையே அந்நூலில் பேசப்படுகின்றன.

சமீபத்திய பாரதியும் வில் என்கிற பொருளிலே தான் சிலை என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். "வெஞ்சிலை வீரன் பல்சொல் விரித்தான்" (ஆரிய தரிசனம்) என்றும், "முந்தை அச்சிலை ராமன் செய்த முடிவினை நம்மவர் மறப்பது போல் நொந்தது செய்ய மாட்டோம்" (பாஞ்சாலி சபதம்) என்றும் வில் என்கிற பொருளில்தான்

சிலை பயன்பட்டுள்ளது. வில் மட்டுமல்ல, தனுராசி, மார்கழி, வானவில், ஒளி, கல், மழை, அம்மி, கலுவம், உருவம், கோபம், மரவகை, ஒலி, கோபி, பின்வாங்கு எனப் பல பொருள்களையும் பல அகராதிகள் வழங்குகின்றன. இதில் 'உருவம்' 'கல்' போன்ற பொருள்களே இன்று சிலைக்காகி வந்துள்ளன எனச் சொல்லி இந்தப் பத்தியை முடிவுக்குக் கொண்டு வருவோம்.

சிற்பி, சில்பி என்றும் உச்சரிக்கப்படுகிறது. சில் என்பதற்குச் சிறியது என்று பொருள். சில்லு சிறியது. "அல்லு சில்லு" என்பது சமீபத்திய பிரபல வசனம். சிற்பம் என்பது நுண் தொழிலையும் வினைத்திறனையும் குறித்தாலும் குறுமை அதாவது அளவில் சிறியது என்பதையே குறிப்புணர்த்துகிறது. பொம்மை என்பது பொய்மை என்பதினின்று பிறந்திருக்கலாம். சிற்பத்தின் அடுத்த நிலை, சிலை எனலாமோ. கன்னியாகுமரியில் பொலிவது பேருருவாய் விளங்கும் சிற்பம்.

தென்னாடும் சிலையும்:

திராவிட நாட்டில் ஒரு இலக்கியவாதிக்கு இவ்வளவு உயரச் சிலை தமிழ்நாட்டில் தான் எழுப்பப்பட்டுள்ளது. கேரளத்தில் திருவள்ளுவருக்கு இணையாகப் புகழ்படைத்த எழுத்தச்சனுக்குத் துஞ்சன் பரம்பில் உட்கார்ந்த நிலையில் ஒரு சிலை உண்டு. உள்ளூர் பரமேஸ்வரர், வள்ளத்தோள் நாராயணன், குமாரன் ஆசான் ஆகிய மூன்று கேரள மகாகவிகளுக்கும் சிலைகள் இருக்கின்றன. ஆனால் அவை பெரியவை அல்ல.

கேரளத்தில் நான் பார்த்த அளவில் திருச்சூரில் கொச்சி மகாராஜா, திருவனந்தபுரத்தில் திவான் மாதவராவ், வைக்கத்தில் மன்னத்து பத்மநாபன் சிலைகள் சற்று பெரியன. கருனாடகத்தில் சரவணபெலகோலாவில் சமணமுனிவரின் பெருஞ்சிலை(57அடி) உண்டு. மதச் சிலைகளைத் தவிர இலக்கியவாணரின் பெருஞ்சிலை ஏதும் கருனாடகத்தில் இருப்பதாக விசாரித்தவரை தெரியவில்லை.



1968இல் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது கடற்கரைச் சாலையில் கம்பர், இளங்கோ, பாரதி, கண்ணகி, வள்ளுவர், ஔவையார், ஜி.யு. போப், பாரதிதாசன், வீரமாமுனிவர், கால்டுவெல் ஆகியோர் சிலைகள் அமைக்கப்பட்டன. இச்சிலைகளுக்குக் கிடைத்த வரவேற்பும் பெறுமதியும் பேரருவ வள்ளுவருக்கு வழி சமைத்திருக்கலாம். அதற்கு முன்பே உழைப்பாளர் சிலையும் காந்தி சிலையும் அமைந்துவிட்டிருந்தன.

திருவள்ளுவருக்கு ஈடாக நாம் பரிமாறிக் கொண்ட சர்வக்ஞருக்கு இவ்வளவு பெரிய சிலை இல்லை. இன்னொரு கன்னட ஆளுமையான பசவண்ணாவுக்குப் பெங்களூருவில் சிலை உண்டு என்றாலும் அது பெரியது அல்ல. தெலுங்கு தேசத்தில் சமுதாயவாதி அம்பேத்கருக்கும் (125 அடி) ஹுசைன் சாகர் நீர் நிலை நடுவில் சமயவாதி புத்தருக்கும்(58அடி) அழகிய சிலைகள் அமைந்துள்ளன. என்றாலும் வள்ளுவரைப் போல் இலக்கியவாதிகளுக்குப் பெருஞ் சிலைகள் தெலுங்கு தேசத்தில் இல்லை. திருப்பதியில் உள்ள எம். எஸ். சுப்புலட்சுமி, அன்னமையா சிலைகள் இசைக்கலைஞர் என்ற வகைப்பாட்டில் வருவன; மேலும் ஒப்பீட்டளவில் சிறியவை. தமிழ்நாட்டில் தான் இலக்கியவாதிக்குப் பெருஞ்சிலை ஒன்று இயன்றிருக்கிறது.

தென்னாட்டின் மற்ற மூன்று மாநிலங்களில் வள்ளுவரைப் போன்ற பேராளுமைகள் பத்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர் தான் தோன்றுகின்றனர் என்பது காரணமாய் இருக்கலாம். மண் உருவாகி செழுமை பெற்ற பின்னர் தானே பயிர் செழிக்க முடியும்.

தலைநகரில் வள்ளுவர் சிலைகள்:

சென்னையில் வள்ளுவர் கோட்டத்தில் உள்ளதைத் தவிர வேறு மூன்று வள்ளுவர் சிலைகள் குறிப்பிடத்தக்கன. இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி 1968இல் கடற்கரைச் சாலையில் உருவான தமிழறிஞர்கள் சிலைகளுள் ஒன்று வள்ளுவர். அச்சிலை சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்கு நேர் எதிரே நின்றகோலத்தில் அமைந்துள்ளது.

அதன் உயரம் சிலபல அடிகள் இருக்கலாம். இன்னொன்று மயிலாப்பூர் சமஸ்கிருதக் கல்லூரிக்கு எதிரில் அமர்ந்த வடிவிலான ஒரு சிலை. மயிலாப்பூரில் திருவள்ளுவருக்கு ஒரு கோயில் உள்ளது. அதில் அமர்ந்த நிலையில் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு சிலை உண்டு. ஆனால் அது பாந்தமற்றது. தாகூர் கூட அந்தக் கோயிலுக்கு வந்துள்ளார்; சிலையைப் பார்த்துள்ளார். என்ன நினைத்தாரோ? எவ்வகையிலும் பார்க்க கன்னியாகுமரியில் திகழ்வது எழில் கசியும் கம்பீரமான சிலை!!

தலைநகரச் சிலைகள் தவிர தமிழகம் முழுக்கவும் வள்ளுவர் சிலைகள் பரவியுள்ளன. அதிலும் கரூரில் ஒரு கல்லூரியின் கட்டடத்தின் உச்சியில் அமர்ந்த நிலையில் வள்ளுவர் சிலை ஒன்று காட்சி தரும். கரூர் - திண்டுக்கல் நெடுஞ் சாலையில் பயணிப்போரின் கண்ணிலும் பின் கவனத்திலும்பட்டு கவரக்கூடியது; தமிழர்க்குப் பெருமிதம் தருவது.



தெய்வச்சிலைகளே வழமை:

மேற்கைப் போலல்லாமல் இந்திய சிற்பங்கள் புறத்தோடு அகத்தையும் வடிப்பன. தொடக்கத்தில் சிலைகள் அரசர்களுக்கும் தெய்வங்களுக்குமே உருவாக்கபட்டன. தெய்வச் சிலையார்(15ஆம் நூற்றாண்டினர்) என்ற பெயரிலேயே ஒரு உரையாசிரியரும் கூட தமிழில் உண்டு. "நினைவாலே சிலை செய்து உனக்காக வைத்தேன்" என்று உருகும் திரைப்படக் காதலனும் "திருக்கோயிலே ஓடி வா" என்று காதலியின் நினைவைக் கோயில் சிலையாகவே பார்க்கிறான்.

நவீன காலச் சிலைகள்:

தெய்வங்களுக்குப் பிறகு மனிதர்களுக்குச் சிலைகள் உருவாயின. தெய்வ நம்பிக்கை அற்று மனிதர்களை நம்பியவர் ஆயினும் நேரு உயிருடன் உள்ள மனிதர்களுக்குச் சிலை வைக்க விரும்பாதவர். எனினும் தன் கொள்கையைக் கொஞ்சம் தளர்த்திக் கொண்டு கர்மவீரர் காமராசருக்குச் சென்னையில் சிலை திறந்தார். சென்னை ஜிம்கானா கிளப் அருகில், குதிரை ஏறிய மன்ரோ சிலைக்கு எதிரில் வேட்டியுடன் கம்பீரமாக நிற்கும் சிலை நேரு திறந்தது தான். அந்த இடத்தில் "புகழ் விரும்பி" வெலிங்டன் பிரபுவின் சிலைதான் முன்பிருந்தது. முதல் இந்திய விடுதலைப் போரின் நூற்றாண்டை ஒட்டி ஏகாதிபத்திய பிரதிநிதிகளின் சிலைகள் இந்தியாவில் பொது இடங்களில் இருக்கவேண்டாம் என்று காங்கிரஸ் கருதியது. அந்த அடிப்படையில் 1937இல் இருந்து அவ்விடத்தில் விளங்கிய வெலிங்டன் சிலை 1957இல் கோட்டை மியூசியம் சென்றது. அந்தச் சிலை இருந்த பீடத்தில் தான் 1961இல் காமராசர் வந்து நின்றார்.

இடம் மாறும் சிலைகள்:

சிலைகள் உருவாவதும் இடம் பெயர்வதும் மக்களின் கருத்து மாறுவதற்கும் நகரம் வளர்வதற்கும் சாட்சிகள். புதுச்சேரி கடற்கரையில் காந்திக்கு முன்னே நின்று கொண்டிருந்தவர் தான் டியூப்ளே (Dupleix). அவர் இப்போது கடற்கரைச் சாலையில் தெற்குத்திசையில் ஓரங்கட்டப்பட்டு விட்டார். அதைப்போல் சென்னைக் கடற்கரையில் இருந்த கண்ணகி சிலை எழும்பூர் மியூசியம் போய், நின்ற களைப்பாறிவிட்டுப் பின் கலைஞரின் முயற்சியில் அதேயிடம் மீண்டது அண்மைக் கதை. அது ஒரு மூடநம்பிக்கையின் விளைபயன். சென்னையில் ராஜா அண்ணாமலை மன்றத்திற்கு எதிரில் முன்பிருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக அலுவலகத்திற்கு அருகில் இருந்தது திருவனந்தபுரம் சித்திரைத் திருநாள் மகாராஜாவின் சிலை. நகர வளர்ச்சி காரணமாக அடையாறு அனந்த பத்மநாபசுவாமி திருக்கோவிலுக்கு மகாராஜா குடிபெயர்ந்தார். கன்னியாகுமரியில் பேருருவாய் நிற்கும் திருவள்ளுவரோ, இயற்கையின் சவாலான சுனாமிக்கு வணக்கம் சொல்லித் திருப்பி அனுப்பியவர். நிலைபெயராக் கடலில் காலூன்றி நிற்கும் திருவள்ளுவருக்கு இடமாற்றப் பிரச்சனை ஏதும் நேர வாய்ப்பில்லை.

சிலைகள் உருவாவதின் சிரமம்:

வைக்கலாம் என்று இன்று இரவு முடிவு செய்து மறுநாள் காலையில் பிரதிஷ்டை செய்யப்படுவன அல்ல சிலைகள். கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை 1990இல் செய்யத் தொடங்கி 1999 இல் தான் வடித்து முடிக்கப்பட்டது. எந்தச் செய்யப்பட்ட சிலையும் ஜல வாசம், தானிய வாசம், ரத்ன வாசம், தன வாசம், வஸ்திர வாசம், சயன வாசம் எனப்படும் பல சோதனைகளைக் கடந்தே ஒரு முடிவான சிலையாகிறது. இந்தச் சோதனைகள் காலத்தை வென்று நிற்க, விரும்பிச் செய்யப்படும் எந்தச் சிலைக்கும் உகந்தது தான்.

தண்ணீரில் சிலையை 48 நாட்கள் மூழ்க வைத்திருப்பது என்பது கண்ணுக்குத்



தெரியாத துளைகள் ஏதேனும் சிலையில் இருந்தால் அச்சோதனையில் அவை தெரிந்துவிடும். தேர்ந்தெடுக்கப்பட்ட பலவகை தண்ணீரையே இந்த நீர் முழுக்காட்டலுக்குப் பயன்படுத்துவர். அதைப்போல் பலவகை தானியங்களின் சூழ்நிலையில் சிலை வைக்கப்படுவது தானியவாசம். தானியம் தரும் வெப்பத்திற்குப் பிறகும் சிலை சிதைவின்றி நீடிக்கின்றனவா என்பது அச்சோதனையில் சோதிக்கப்படும்.

இத்தகைய ஆறு சோதனைகள் 288 நாட்கள் நிகழ்த்தப்படும். இதன்மூலமாக பொருத்தமான கல்லில் தான் சிலை உருவாகியுள்ளது என்பது உறுதியாகும். அதற்குப் பிறகுதான் அது சரியான சிலை என்று முடிவு செய்வர். அனுபவமும் திறமையும் மிக்க கணபதி ஸ்தபதி என்ற பெருந்தச்சரால் உருவாக்கப்பட்டதால் இத்தகைய சோதனைகளை வள்ளுவரும் கடந்திருப்பார் என்று நம்பலாம். தச்சன், வர்தஹி, சூத்ரகாரி என்ற மூன்று நிலைகளைக் கடந்து நான்காவது பெரு நிலையில் உள்ள பெருந்தச்சரே ஸ்தபதி எனப்படுகிறார்.

பல்வித சிலைகள்:

சிலை (statue), சிற்பம்(sculpture), உருவபொம்மை (effigy) என வடிவங்கள் மூன்று விதங்கள். சிலைகள், வார்த்தல், சித்திர உலோகவேலை (repousse), செதுக்குதல் முதலிய முறைகளில் செய்யப்படுகின்றன. முழு உருவச் சிலைகள் (நின்ற கோலம், அமர்ந்த கோலம்) ஒருவகை எனில் மார்பளவுச் சிலைகள் (bust) இன்னொரு வகை. மார்பளவுச் சிலைகள் உயர்ந்த பீடங்களில் வைக்கப்படுகின்றன. கோவையின் ஆதியோகி சிவன் உலகிலேயே பெரிய மார்பளவுச் சிலை என்கிறார்கள். வெண்கலம், செம்பு ஆகிய உலோகங்களிலேயே பெரும்பாலும் சிலைகள் வடிக்கப்படுகின்றன. செம்பு, வெள்ளி, தங்கம், துத்தநாகம், ஈயம் ஆகிய ஐந்து உலோகக் கலவையால் செய்யப்படும் சிலைகள் பஞ்சலோக சிலைகள். சிலைகள் செய்யப்படும் முறைகள் சில்பசாஸ்திரம், மானசாரா, அபிநய சித்தார்த்தா சிந்தாமணி போன்ற வடமொழி நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள், தூண்களில் செதுக்கப்படும் யாழி போன்ற வடிவங்கள் எனச் சிற்பங்கள்

பல வகையின. கல், மரம், உலோகம், சுதை, தந்தம், சுடுமண் இவைகளால் சிற்பங்கள் உருவாகின்றன. சிற்பங்கள் சிறியன என்பதால் அவற்றைச் செய்வது மிகவும் சிரமம். அதுவும் கண்ணாடிச் சிற்பங்கள் சிறப்புமுறையில் உருவாவன.

சிலை மோகம்:

சிலைகள் மீது நவீனத் தமிழர்களுக்கு ஒரு மோகம் உண்டு. அது எப்போது தொடங்கியது என்று தெரியவில்லை. சென்னையில் அதிக சிலைகள் இருப்பதை மனத்தில் வைத்து, தலைநகரம் அல்ல இது சிலை நகரம் என்றார் ஒரு கவிஞர். 1968இல் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது கடற்கரைச் சாலையில் கம்பர், இளங்கோ, பாரதி, கண்ணகி, வள்ளுவர், ஔவையார், ஜி.யு. போப், பாரதிதாசன், வீரமாமுனிவர், கால்டுவெல் ஆகியோர் சிலைகள் அமைக்கப்பட்டன. இச்சிலைகளுக்குக் கிடைத்த வரவேற்பும் பெறுமதியும் பேருருவ வள்ளுவருக்கு வழி சமைத்திருக்கலாம். அதற்கு முன்பே உழைப்பாளர் சிலையும் காந்தி சிலையும் அமைந்துவிட்டிருந்தன.

பெற்றால் தான் பிள்ளையா என்று குழந்தைகளை அணைத்து நிற்கும் காமராசர் சிலையும், வங்கத்தின் சிங்கமென இராணுவ உடையுடன் கர்ஜிக்கும் நேதாஜி சிலையும் பின்னர் அமைந்தவை. கடற்கரையின் எதிர்ப்புறத்தில் உள்ள அன்னிபெசன்ட், விவேகானந்தர், சாமிநாதர், தொல்காப்பியர், ஜெயலலிதா, தாகூர், வி.பி. சிங் ஆகியோர் சிலைகள்(ஒன்றிரண்டு தவிர மற்றவை) அண்மையில் கல்வி வளாகங்களில் நாட்டப்பட்டவை. சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பெரும்பான்மையான சிலைகள் காலனிய காலத்தவை.

பெயர் பெறட்டும் சிலைகள்:

அமெரிக்காவின் சுதந்திரதேவி, 'உலகை அறிவூட்டும் சிலை' எனப்படுகிறார். தெலுங்கு தேசத்தில் எழுப்பப்பட்டிருக்கிற அம்பேத்கர் சிலையைச் 'சமூகநீதி சிலை' என்று புகழ்கின்றனர். எல்லோரையும் சமப்படுத்த முயன்ற ராமானுஜருக்கு எழுப்பப்பட்டிருக்கிற சிலையைச் 'சமத்துவ சிலை' என்றழைத்து மகிழ்கின்றனர். இந்தியாவில் சமஸ்தானங்களை இணைத்த வல்லபாய் பட்டேலின் சிலையை 'ஒற்றுமைச் சிலை' என்று முழங்குகின்றனர்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என உலகத்துக்கு நீதி சொன்ன, கன்னியாகுமரியில் எழுந்திருக்கிற வள்ளுவர் சிலையையும் இங்ஙனம் ஒரு பொதுப்பெயரிட்டு அழைக்கலாமே என்று தோன்றுகிறது. புகழ்பெற்ற வள்ளுவர் ஒரு சிலைப்பெயரையும்பெறவேண்டாமா? பிறந்த குழந்தைக்குத் தான் பெயர் வைப்பார்கள், வளர்ந்த குழந்தைக்கு யாராவது பெயர் வைப்பார்களா என்று கேட்கலாம். மன்னர்கள் அரியணை ஏறும்போது வம்சப்பெயருடன் பொலிவதில்லையா? துறவிகள் மடத்துத்தலைமை ஏற்கும்போது புதியபெயர் தரிப்பதில்லையா?

இந்தியா முழுமைக்கும் தமிழ்நாடு உணர்த்த விரும்பும் செய்தியாக வள்ளுவர் சிலையின் புதிய பெயர் அமையலாம். உலகத்தின் புகழ்பெற்ற சிலைகள் எல்லாம் பெயர் பெற்றிருப்பது போல கன்னியாகுமரி அய்யன் வள்ளுவரும் புகழ்ப்பெயர் பெறலாம் என்று தோன்றுகிறது.

இக்கட்டுரைக்குத் தலைப்பாக அமைந்தது மதுரை பாலாசிரியனார் எழுதிய வெண்பாவின் ஈற்றடி (திருவள்ளுவமாலை 52)




திருக்குறள்
உயர் சிந்தனை

காப்பியங்களில் திருக்குறள் கருத்துகள்



கவிஞர்
தி. பரமேசுவரி

சங்க இலக்கியத் தொகுதியைத் தன் முன்வழியாகக் கொண்டு, புதிய யாப்பு வகைமையில், சமூக முன்னேற்றத்தையே தன் முதன்மைக் குறிக்கோளாய், குறைந்த சொற்களில் பெருகிய பொருளுடன் எழுதப்பட்ட ஒப்புயர்வற்ற நூல் திருக்குறள். வாழ்வின் வெவ்வேறு நிலைகளில், மாந்தர் அறிந்து கொள்ளவும் வாழ்ந்து காட்டவும் கற்பிக்கத் தோன்றிய, எளிய நடையில் அனைத்து மக்களுக்காகவும் இயற்றப்பட்ட பனுவலே இந்நூல்.

எனவேதான் திருக்குறள் இப்போதும் பல உலக மொழிகளில் தொடர்ந்து மொழிபெயர்க்கப்பட்டு, உலகப் பொதுமறையாகப் போற்றப்படுகிறது. தனிமனித வாழ்வுக்கு மட்டுமின்றி, சமூகம், அரசு என ஒட்டுமொத்தச் சமுதாயத்தையும் குடிமைப் பண்பு நோக்கிச் செலுத்திச் சான்றாண்மையுடன் வாழக் கற்பிப்பதே திருக்குறளின் நோக்கமாகும்.

திருக்குறள், அழகிய குறள் வெண்பாக்களால் ஆகிய நூல். இந்நூலின் ஒவ்வொரு குறட்பாவுக்கும் 'திரு' என்னும் அடைமொழி சிறப்பித்து நிற்கும். நன்னூலின் நூல் இலக்கணத்துக்குப் பொருந்த, சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தல் முதலிய அழகுகள் விளங்க இயற்றப்பட்ட நூலிது. ஏழே சீர்களில் எதுகையும் மோனையும் இலக்கியச்சுவையும் கவித்துவமும் கவினுற நூலில் இலங்குகிறது.

பாட்டும் தொகையும் சேர்ந்து பதினெண்மேற் கணக்கு நூல்களானது போல், வேறு சில கணக்குகளின் வழி பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் தொகுக்கப்பட்டன. இதனுள் நீதிநூல்கள் 12. கீழ்க்கணக்கு நூலின் தொகுப்புமுறையே தவறெனச் சில ஆய்வாளர் கருதுகின்றனர். யாப்பு வகை, கருத்து ஆகியவற்றின் அடிப்படையில் திருக்குறளை நீதிநூலாக மட்டுமே கருதி இத்தொகுப்பில் சேர்த்துவிட்டனர். குறள், ஏனைய நூல்களை விடவும் காலத்தால் முற்பட்டது. திருக்குறளின் உள்ளார்ந்த மெய்ப்பொருளும் புதுமையும் பொருட்படுத்தப்படாது, அதனைச் சிற்றிலக்கியமாக மட்டுமே கருதுவதென்பது தமிழுக்குச் செய்யும் அநீதி.

ஏழே சீர்களில் வள்ளுவர் எழுதிய ஈரடிப் பாக்கள் ஒவ்வொன்றும் ஈராயிரம் ஆண்டுகள் கடந்தும் மனித வாழ்வுடன் பொருந்திச் செல்வதும் மனிதர்க்கு ஊன்றுகோலென நிற்பதும் வியப்பிற்குரியது. எழுதப்பட்ட காலத்திலிருந்தே புலவர்களை ஈர்த்ததுடன் அவர்களை எடுத்தாளச் செய்து பரவலாகப் பரந்ததுடன் இன்று வரையிலுமே உலக மொழிகளில் தொடர்ந்து மொழிபெயர்க்கப்பட்டுவரும் திருக்குறளின் பெருமை, தமிழின் அத்தனைச் சொற்களை எடுத்தாண்டாலும் சொல்லி முடியாது.

வடநூலார் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களைச் சொல்வர். தமிழ் மரபு, அறம், பொருள், இன்பம் என்ற மூன்றை மட்டுமே பேசும். நம்முடைய இலக்கிய மரபும் அகம், புறம் என்னும் இரண்டை மட்டுமே விரிவுபடுத்தியிருக்கும்.

"அறமும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்" (புறம் 28)

என்று புறநானூறும்

"அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கு முரிய வென்ப"
(தொல். செய்.105)

என்று தொல்காப்பியமும் சொல்வது இதனை உறுதிப்படுத்தும். இவற்றின் விரிவான திருக்குறள் நமக்கு அளிக்கும் நுண்மாண் நுழைபுலத் திறப்புகள், அதில் விரவியிருக்கும் அறிவுக் கோட்பாடுகள் ஆகியவை நமக்கு அளிக்கப்படவேயில்லை. எனவே திருக்குறளைத் தொகுப்புக்குள் அடக்காது, தனி நூலாகப் பார்ப்பதே ஏற்புடையதாகும்.

தாம் எழுத வந்த பொருளும் அதைச் சொல்லத் தேர்ந்தெடுக்கும் வடிவமும் படைப்பின் சுதந்திரம். திருக்குறள் முழுமையும் எழுசீர் குறட்பாவால் ஆனது. சிற்சில இலக்கியங்கள் இவ்வகையில் எழுதப்பட்டிருப்பினும் திருக்குறளன்றி வேறு பெரிய இலக்கிய நூல் எதுவும் இவ்வடிவில் இல்லை. ஒவ்வொரு குறளும் முப்பதுக்குட்பட்ட எழுத்துகளால் ஆனது. எளிய மக்களுக்கும் இக்கருத்துகள் சென்று சேர வேண்டும் என்னும் உயரிய நோக்குடனே இவ்வகை யாப்பு வடிவம் வள்ளுவரால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது எனக் கருத இடமுண்டு.

"மிக எளிய நடை; பளிங்கு போலத் தெளிவாகத் தோன்றும் சிந்தனை, பொருத்தமும் அழுத்தமுமான தேர்ந்த சொல்லாட்சி, தேவையானவற்றைத் தேர்ந்து தரும் திறம் ஆகிய அனைத்தும் சேர்ந்து, அவரை எக்காலத்திலும் தொழத்தக்கவராய் ஆக்கியுள்ளன; தமிழ் மக்களின் மறைநூலாக அவரது நூல் மதிக்கப்படுகிறது." என்று எஸ். வையாபுரிப் பிள்ளை குறளுக்கு ஒரு தெளிவான திறனுரை தந்துள்ளார்.

இந்நூலின் அமைப்பொழுங்கும் குறிப்பிடத்தக்கது. நூல் 1, பால் - 3 (அறம், பொருள், இன்பம்), இயல் - 13, அதிகாரம் - 133, பாக்கள் 1330. ஒழுக்கம் பற்றிய அறம், பொருளீட்டுதல் குறித்த அறம், இன்பத்தை நுகர்வதிலுள்ள அறமே மூன்று பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளதாகவும் கருதுவர்.

சங்கத்திற்குச் சற்றே பின்னெழுந்த நூலாகக் கருதப்படும் திருக்குறள்,

அதற்குப் பின் வந்த நூல்களில் இன்றளவும் எடுத்தாளப்பட்டு வருவதை நாம் காண்கிறோம். அவற்றுள் காப்பியங்களில் கையாளப்பட்ட திருக்குறள் வரிகளையும் கருத்துகளையும் தேடியெடுப்பது மலைத்தேனை, அதன் சிரமம் கருதாது எடுத்துச் சுவைப்பதையொக்கும்; செய்வோம்.

"தெய்வம் தொழாஅள் கொழுநற் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை."

எனும் குறள், தெய்வத்தையும் வணங்காது தன் கணவனை மட்டுமே கருதும் பெண் கட்டளையிட்டால் மழையும் பொழியும் எனும் கருத்துடையது. இக்கருத்து, பிற்போக்கானது எனினும் இயற்றப்பட்ட காலத்தைக் கருதி, அதன் பின்னெழுந்த சிலப்பதிகாரத்திலும் அக்குறளினை அப்படியே இளங்கோவடிகள் எடுத்தாண்டிருக்கின்றார்.

"தெய்வம் தொழாஅள் கொழுநற் தொழுவாளைத் தெய்வம் தொழுந்தகைமை திண்ணிதால்."

எனும் இவ்வரிகள், கணவனை வணங்குபவளைத் தெய்வமே கைதொழும் என்று கூறுகிறது. வாணிகம் எழுச்சி பெற்று, பொருள் பெருகிய அக்காலத்தில், கற்பு, பத்தினித்தெய்வம் போன்ற கோட்பாடுகளுக்கான தேவை எழுந்திருக்கக் கூடுமென்று கொள்ளலாம். இதே திருக்குறளை எடுத்துக்காட்டி, மணிமேகலைக் காப்பியத்தில்,

"தெய்வம் தொழாஅள் கொழுநற்தொழு தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப் பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்."

என்று சீத்தலைச் சாத்தனார் வள்ளுவரையும் குறளையும் பாராட்டி மகிழ்கிறார். ஐம்பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று போற்றப்படுவன.இந்தஇருகாப்பியங்களுமே இந்தக் குறளை எடுத்தாண்டிருப்பதுடன் இணையில்லா இலக்கியமாம் திருக்குறளைப் போற்றியுமிருக்கின்றன.

விசுவாமித்திர முனிவர் பலமுறை யாகம் தொடங்கி, அரக்கர் தொந்தரவால் அதனை முடிக்க இயலாது, முடிந்தும் முடியாது, தசரதரிடம் வேண்டி இராம இலக்குவனைத் தன்னுடன் அழைத்துச் செல்கிறார். யாகசாலையை அடைகையில், அதன் பெருமையைச் சகோதரர் இருவருக்கும் விசுவாமித்திரர் எடுத்துரைக்கின்றார். இதனை,

"தங்கள் நாயகரின் தெய்வம் தவம்பிறி திலவென் றெண்ணும் மங்கைமார் சிந்தை போலத் தூயது மற்றுங் கேளாய் எங்கள்நான் மறைக்குந்த தேவர் அறிவிற்கும் பிறர்க்கு மெட்டாச் செங்கண்மா லிருந்து மேனாள் செய்தவஞ் செய்த தன்றே."

என்று கம்பரும், 'தங்கள் கணவனே தெய்வம், அவருக்குச் செய்யும் தொண்டே தவம் எனக் கருதி வாழும் கற்புடைய மங்கையரின் எண்ணங்களைப் போலத் தூய்மையானது இந்த யாகசாலை' என்று சொல்லி, அதே திருக்குறளை எடுத்தாண்டும் பாராட்டியும் பேசுகின்றார்.

ஏழே சீர்களில் வள்ளுவர் எழுதிய ஈரடிப் பாக்கள் ஒவ்வொன்றும் ஈராயிரம் ஆண்டுகள் கடந்தும் மனித வாழ்வுடன் பொருந்திச் செல்வதும் மனிதருக்கு ஊன்றுகோலென நிற்பதும் வியப்பிற்குரியது. எழுதப்பட்ட காலத்திலிருந்தே புலவர்களை ஈர்த்ததுடன் அவர்களை எடுத்தாளச் செய்து பரவலாகப் பரந்ததுடன் இன்று வரையிலுமே உலக மொழிகளில் தொடர்ந்து மொழிபெயர்க்கப்பட்டுவரும் திருக்குறளின் பெருமை, தமிழின் அத்தனைச் சொற்களை எடுத்தாண்டாலும் சொல்லி முடியாது.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்."

என்பதொரு திருக்குறள். இதன் அடியொற்றி, தாய்க்குப் பதில் தந்தை சொல்வதுபோல,

"மற்றவன் சொன்ன வாசகம் கேட்டலும், மகனைப் பெற்ற அன்றினும், விஞ்ஞகன் பிடித்த அப்பெருவில் இற்ற அன்றினும், எறிமழு மாளவன் இழுக்கம் உற்ற அன்றினும் பெரியதோர் உவகைய னானான்."

என்று தசரதன் தன் மகிழ்ச்சியின் உச்சத்தைச் சொல்வதற்குக் கம்பர்



பயன்படுத்திக் கொள்கின்றார். தயரதனின் அவையிலுள்ள சான்றோர் பெருமக்கள், அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவரும் இராமனின் புகழைச் சொல்லக் கேட்ட தசரதன், அவனைப் பெற்ற காலத்தை விடவும் பெரிய இன்பத்தை அடைந்தான் என்று இப்பாடல் கூறுகின்றது.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை."

- என்ற குறளில், குடிமக்களின் கண்ணீரே அவர்களை அழிக்கும் கருவி என்று கூறியிருப்பார் வள்ளுவர். சிலப்பதிகாரத்தில், கண்ணகி கோவலனுக்கு நிகழ்ந்த கொடுமையைக் கேட்டுக் கண்ணீர் உகுத்தபடியே மதுரை நகரத்தின் வீதிகளில், ஒற்றைக் கையில் சிலம்பேந்தி வருகின்றாள். அவள் அத்தகைய தோற்றத்துடன் வருவதைக் கண்ட மதுரை மக்கள்,

"அல்லலுற்று ஆற்றாது அழுவாளைக் கண்டேங்கி
மல்லல் மதுரையார் எல்லாரும் தாம்மயங்கிக்
களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது இதுவென்கொல்?"

- எனச் செய்வதறியாது திகைத்தனர்; வளையாத மன்னனின் செங்கோல் வளைந்ததே என்று வருந்தினர். அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரின் தொடர்ச்சியே சிலம்பின் அல்லலுற்று ஆற்றாது கண்ணகி அழுதது.

'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்.'

- என்று சிலம்பு வலியுறுத்தும் மூன்று உண்மைகளுமே திருக்குறளில் பேசப்பட்டவை தாம். எனவே, இவற்றை நிறுவுவதற்கு, இளங்கோவடிகள் தெய்வப்புலவர் வள்ளுவரின் சொற்களைப் பல இடங்களில் தோன்றாத்துணையாகக் கொண்டிருக்கிறார். அறம் வலிமையுடையது; அதனால்தான் வள்ளுவர், அறனைத் தொடர்ந்து வலியுறுத்தியிருப்பார். மானுடம் அறத்தைச் சிக்கெனப்பிடித்துக்கொண்டால், வாழ்வில் துன்பமில்லை. அத்தகைய அறம், மன்னனுக்கு மிகவும் முக்கியமென்று போற்றப்படுகின்றது. மக்கள் தவறு செய்தால், மன்னனிடம் முறையிடலாம்; மன்னன் தவறு செய்தால் அறமே கூற்றாக மாறித் தண்டிக்கும். ஆராய்ந்து நீதிநெறியின்படி ஆட்சி செலுத்தாத மன்னன், தாழ்நிலையில் நின்று தானே கெடுவானென்பதே வள்ளுவம் வகுத்த நெறி. இக்கருத்தினை,

"அல்லவை செய்தார்க்கு அறம்கூற்றம்ஆம் என்னும் பல்லவையோர் சொல்லும் பழுதன்றே!"

எனச் சிலம்பில் குறள் எடுத்தாளப்பட்டுள்ளது. அறமல்லாதன செய்வோரை, அறமே எமனாக இருந்து தண்டிக்கும்.

"எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன் தண்பதத்தான் தானே கெடும்."

என்பது குறள் நெறி.

"அறத்தின்ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை மறத்தலின் ஊங்குஇல்லை கேடு" (குறள்: 32)

என்னும் குறளும் இதனையே வலியுறுத்தும். தமிழின் இனிமையும் வளமும் செறிந்த திருக்குறளின் ஆழமும் அகலமும் சொல்லச் சொல்ல விரியும். ஏழே சீர்களில் அணிகளும் உவமைகளும் குறிப்புப் பொருள்களுமெனப் பல உத்திகளையும் பொருந்த வைத்து என்றைக்குமான தமிழ்ப் பொதுமறையாய் நெடிதுயர்ந்து நிற்கும் திருக்குறளை நமக்கு வழங்கி 'வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று போற்றுகின்றார் பாரதி. அதில் மிகையில்லை;


"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை."

எனும் பாரதியின் உண்மையான சொற்களை எண்ணி வணங்குவோம். மனித வாழ்வின் பல்வேறுநிலைகளில் தேவைப்படும் கருத்துகளைக் கவிச்சுவையோடு பொழியும் வாழ்வியல் நூலே திருக்குறள். அது, சமயம், காலம், இடம், இனம் என்ற வேறுபாடுகளுக்கெல்லாம் அப்பால் நின்று மானுட வாழ்வின் அடிப்படை உண்மைகளைப் பேசுகிறது. எனவே பொருளாலும் யாப்பாலும் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி விஞ்சி நிற்கும் நூலே திருக்குறள்.

"எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்."

என்னும் திருவள்ளுவமாலையின் கருத்தினைச் சிந்தையில் கொள்வோம். அதன் பெருமை உணர்வதோடு அதன் அறக்கோட்பாடுகளை மக்களிடம் கொண்டு சேர்க்க உறுதி பூணுவோம். திருக்குறளுக்குப் பின்னர் வந்த தமிழ்ப்புலவர் அனைவரும் அதனைத் தங்கள் நூல்களில் எடுத்தாண்டிருப்பதை உணர்ந்தால், அந்நூல்களுக்கெல்லாம் திருக்குறளே வழிகாட்டிய நூலென்றும் முதல் நூலென்றும் அறியலாம்.





அய்யன் திருவள்ளுவரும் முத்தமிழறிஞர் கலைஞரும்



புலவர்
முத்து. வாவாசி

அய்யன் திருவள்ளுவர் மனித சமுதாயத்தில் அமைதியான வாழ்விற்கு மனித நேயத்தை வலியுறுத்தும் மகத்தான வாழ்வியல் நெறிகளை வகுத்துத் தந்துள்ளார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே 1,330 திருக்குறள்களை எழுதி உலகில் மனிதப் பண்புகள் வளர - வளர்க்கப்பட வழிகாட்டியுள்ளார். உலகில் பிறந்த மனிதருள் எவரும் எவருக்கும் உயர்ந்தவர் இல்லை. எவரும் எவருக்கும் தாழ்ந்தவரும் இல்லை, எல்லோரும் சமம் எனும் சிந்தனையை,

" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

எனும் திருக்குறள் வாயிலாக உரைத்து உணர்த்தியுள்ளார். இதுபோல் ஒவ்வொரு திருக்குறளும் மனித இனத்தின் உள்ளங்கள் செம்மைப்பட பிறரை அரவணைத்து அன்பு காட்டத் துணைபுரியும்.

இத்தகைய பெருமைகள் பொதிந்துள்ள திருக்குறளைப் பள்ளி மாணவப் பருவம் முதலே விரும்பிப் படித்து அதன்மேல் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு அய்யன் திருவள்ளுவரையும், அவருடைய திருக்குறளையும் பரப்பும் திருநெறியில் ஆர்வம் கொண்டிருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேரவை எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தபோது, வைத்த கோரிக்கையின்படி தமிழ்நாடு சட்டப் பேரவையில் அய்யன் திருவள்ளுவர் படம் திறந்து வைக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சியைத் தி.மு.கழகம் கைப்பற்றியபின் மாநகராட்சி மூலம் மயிலாப்பூரில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த போது அரசுப் பேருந்துகளில் அய்யன் திருவள்ளுவர் திருவுருவப் படம் அமைத்து, ஒரு திருக்குறளை ஒவ்வொரு பேருந்திலும் எழுதச் செய்தார்.

தமிழ்நாடு சட்டப் பேரவையில், தினமும் ஒரு திருக்குறள் கூறி, அவை தொடங்கும் பழக்கத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தது கழக அரசு.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்னின்று நடத்திய இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டினையொட்டி, அய்யன் திருவள்ளுவர் சிலை திறந்து வைக்கப்பட்டது.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தலா 3 இலட்ச ரூபாய் நிதி வழங்கி திருக்குறள் ஆராய்ச்சிப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆண்டுதோறும் பொங்கல் விழா நாளுக்கு அடுத்த நாள், 'திருவள்ளுவர் திருநாள்' என்றும், அந்நாள் அரசுப் பொது விடுமுறை நாள் என்றும் அறிவித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காவல்துறையில் பணியாற்றும் காவலர் முதல் உயர் அதிகாரிகள் வரை அனைவருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாள் அன்று "அண்ணா பதக்கம்" வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

1971ஆம் ஆண்டு ஜனவரி முதல் தமிழ்நாடு அரசின் நாள்குறிப்பிலும், 1972ஆம் ஆண்டு ஜனவரி முதல் தமிழ்நாடு அரசிதழிலும் திருவள்ளுவராண்டு குறிக்கப்படும் நடைமுறையை உருவாக்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மயிலாப்பூரில் உள்ள பழமையான திருவள்ளுவர் நினைவாலயத்தைப் புதுப்பித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கனவுத் திட்டமாக வள்ளுவர் கோட்டம் கட்ட 18.09.1974 அன்று சென்னையில் நுங்கம்பாக்கத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு ஆளுநர் ஆட்சியில் 15.04.1976 அன்று குடியரசுத் தலைவர் பஃருதீன் அலி அவர்களால் வள்ளுவர் கோட்டம் திறந்து வைக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் படைத்த குறளோவியம் எனும் காவிய நூல் 17.02.1985 அன்று வெளியிடப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அய்யன் திருவள்ளுவருக்கு ஓவியத்தின் மூலம் வடிவம் தந்த வேணுகோபால் சர்மா அவர்களுக்கு, குறளோவியம் நூல் விற்பனை மூலம் கிடைத்த தொகையில் 10 ஆயிரம் ரூபாயைப் பொற்கிழியாக வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முன்னெடுப்பால் ஓவியர் வேணுகோபால்சர்மா அவர்களால் வரையப்பட்ட அய்யன் திருவள்ளுவர் ஓவியம் நாட்டுடைமையாக்கப்பட்டு, 07.04.1990 அன்று அவரது குடும்பத்தாருக்கு 3 இலட்ச ரூபாய் நிதியுதவி வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1,330 அருங்குறளுக்கும் எளிய உரை எழுதி, அந்த உரை நூல், கலைஞர் உரை நூல் எனும் பெயரில் 15.04.1996 அன்று சென்னையில் வெளியிடப்பட்டது.

அனைத்திற்கும் முத்தாய்ப்பாக குமரிமுனையில் 133 அடி உயரமுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை புத்தாயிரம் ஆண்டின் முதல் நாளான 01.01.2000 அன்று திறந்து வைக்கப்பட்டது.

அன்று திறக்கப்பட்ட அந்த அய்யன் திருவள்ளுவர் சிலையின் 25ஆம் ஆண்டு விழாவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 31.12.2024, 01.01.2025 ஆகிய இரண்டு நாள்களிலும் மாபெரும் கலைவிழாவாகக் கொண்டாடுகிறார்கள்.

1986ஆம் ஆண்டு முதல் சிறந்த தமிழறிஞர் ஒருவரைத் தேர்வுசெய்து ஆண்டுதோறும் அய்யன் திருவள்ளுவர் பெயரில் விருது வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு, தற்போது விருதுக்கான பொற்கிழி ரூ.2 இலட்சம் என உயர்த்தி வழங்கப்படுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் மொரீசியஸ் நாடுவாழ் தமிழ் மக்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று 3 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அய்யன் திருவள்ளுவர் சிலை ஒன்றை நன்கொடையாக அனுப்பிவைத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வள்ளுவர் கோட்டம் குறள் மணிமாடத்தில் 12 இலட்ச ரூபாய்ச் செலவில் குறளோவியக் கண்காட்சி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

செம்மொழித் தமிழாய்வு ஒன்றிய நிறுவனத்தின் வாயிலாக 5 இலட்சம் ரூபாய் பொற்கிழியுடன் கூடிய குடியரசுத் தலைவரின் குறள்பீட விருது நிறுவப்பட்டு ஆண்டுதோறும் திருக்குறள் நெறிபரப்பும் அறிஞர் ஒருவருக்கு வழங்கப்படுகிறது.

புதுடெல்லி தமிழ்ச் சங்கம் விடுத்த வேண்டுகோளை ஏற்று அந்த அய்யன் திருவள்ளுவர் சிலையை 04.12.2008 அன்று தில்லித் தமிழ்ச் சங்க வளாகத்தில் நிறுவித் திறந்துவைத்தார்.

கருநாடக மாநிலத் தலைநகர் பெங்களூருவில் அய்யன் திருவள்ளுவர் சிலை திறக்கப்படாமல் 18 ஆண்டு காலம் அழுக்குத் துணியால் மூடி வைக்கப்பட்டிருந்தது. தமிழ்நாட்டில் ஐந்தாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெங்களூரு அய்யன் திருவள்ளுவர் சிலையைத் திறந்திட கருநாடக மாநில முதலமைச்சர் திரு. எடியூரப்பா அவர்களுடன் பேசி, கன்னட மொழிக் கவிஞர் சர்வக்ஞர் அவர்களின் திருவுருவச் சிலையைச் சென்னை அயனாவரத்தில் நிறுவி, 18 ஆண்டுகளுக்குப்பின் 09.08.2009 அன்று அய்யன் திருவள்ளுவர் சிலையை திறந்து வைத்தார்.

150 ஆண்டுகாலமாக நிறைவேற்றப் படாத தமிழ் செம்மொழி எனும் கோரிக்கை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 2005ஆம் ஆண்டில் ஒன்றிய ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அரசினால் ஏற்கப்பட்டு தமிழ் செம்மொழி என பறைச்சாற்றப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கோவையில் 2010 ஜூன் திங்களில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திச் சாதனை படைத்தார்.

இப்படி, பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் இன்றைய தமிழ்நாடு அரசின் மாண்புமிகு முதலமைச்சர் திராவிட நாயகர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களும் அய்யன் திருவள்ளுவர் புகழ்போற்றிப் பல்வேறு பணிகளை நிறைவேற்றி வருகிறார்கள்.

உலகப் பொதுமறை எனும் புகழுக்கு ஏற்ப சாதி, மத, இன மொழிகளைக் கடந்து மனித நேயத்தை வலியுறுத்தும் ஓர் உன்னதமான ஒப்பில்லாத ஒரு தனிப்பெரும் நூல் எனப் புகழ்வடிவம் கொண்டுள்ளது அய்யன் திருவள்ளுவர் படைத்துள்ள திருக்குறள்.

ஓங்குக அய்யன் திருவள்ளுவர் புகழ்!
உயர்க திருக்குறளின் பெருமைகள்!





சிந்தனைச் சித்திரத்தை சிலையாக்கிய சிற்பி



பத்திரிகையாளர்
கோவி.லெனின்

புத்தாயிரம் எனும் மில்லினியம் பிறந்த நாளில் (1.1.2000) இந்தியாவின் தென் முனையான, தமிழ்நாட்டின் கன்னியாகுமரியில் கடல் மீதான பாறையில் 133 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்தார் மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர். இந்திய அளவிலானத் தலைவர்கள், தமிழ்நாட்டின் அரசியல் பிரமுகர்கள், தமிழறிஞர்கள், கலைத்துறையினர், பொதுமக்கள் பங்கேற்ற விழாவில் மின்னொளியில் வண்ணமயமாகத் திகழ்ந்தார் அய்யன் திருவள்ளுவர். குமரி முனையில் வானுயர வள்ளுவர் சிலை என்பது கலைஞரின் பெருங்கனவு. அதனை உளியால் நனவாக்கினார் சிற்பி கணபதி ஸ்தபதி.

குமரியில் வள்ளுவர் சிலை திறக்கப்பட்டு 10 ஆண்டுகள் கழித்து (2010), தஞ்சையில் மாமன்னன் இராஜராஜ சோழன் கட்டியெழுப்பிய பெரிய கோவிலின் ஆயிரமாவது ஆண்டு விழா. அப்போதும் கலைஞர்தான் தமிழ்நாட்டை ஆண்டார். விழாவைத் தொடங்கி வைத்து, கலை நிகழ்ச்சிகளை ரசித்தார்.

மலைகளோ, பாறைகளோ, கருங்கற்களோ இல்லாத வண்டல் நிலமான தஞ்சைக்கு, வெளியிடங்களிலிருந்து கற்களை எடுத்து வந்து, நெடுங்கோபுரம் கொண்ட பெரியகோவிலை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அமைத்தான் சோழமன்னன் அருள்மொழிவர்மன் என்கிற இராஜராஜன். அந்தக் கோவிலின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டவர் இராஜராஜ பெருந்தச்சன் எனப் பட்டம் பெற்ற தலைமைச் சிற்பி குஞ்சரமல்லன். அவரது வழித்தோன்றல்களின் வரிசையில் வந்த கணபதி சிற்பியைக் கொண்டுதான் கன்னியாகுமரியில், ஒரு சின்ன மொட்டைப் பாறையில் நெடிதுயர்ந்த திருவள்ளுவர் சிலையை அமைத்தார் கலைஞர்.

கலைஞரின் சிந்தனைச் சித்திரத்தை உயிரோட்டமுள்ள சிலைகளாக, கலை வடிவங்களாக வடிப்பது கணபதி சிற்பியின் வழக்கம். குமரி முனையில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலைக்கு முன்பாக, தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் வள்ளுவர் கோட்டத்தை அமைத்தவரும் கணபதி சிற்பிதான். உலகப் பொதுமறையாம் திருக்குறளைத் தந்த தமிழ்ப்



புலவருக்குத் தமிழகத்தின் தலைநகரில் உலகத் தரத்திலான ஒரு நினைவுச் சின்னம் அமைக்கவேண்டும் என்பது முத்தமிழறிஞர் கலைஞரின் எண்ணம்.

தன் சிந்தனையை சித்திரக் கோடுகளாக வரைந்து சிற்பியிடம் காட்டினார் கலைஞர். கல்லிலே வடிக்க வேண்டியதை கைகளால் வரைந்த கலைஞரின் திறன் கண்டு வியந்தார் கணபதி சிற்பி. தன்னை வளர்த்த திருவாரூரில், பல ஆண்டுகளாக ஓடாமல் இருந்த ஆழித் தேரை நவீன அறிவியல் தொழில்நுட்பத்துடன் ஓட்டிக்காட்டியவர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர். அந்த மரத்தேரின் வடிவத்தில் கல்லிலே ஒரு தேரினை தலைநகரத்தில் அமைக்க வேண்டும் என்கிற அவரது சிந்தனைதான் சித்திரக் கோடுகளாக அமைந்தன.

ஆழித் தேர் என்பது எண்கோண வடிவில் அமைந்தது. மரத்தில் செய்யப்பட்ட அடிபீடத்தின் மீது மூங்கில் கழிகளையும், வண்ணத்துணியையும் கொண்டு அலங்காரமான கோயில் தேர் அமைக்கப்படும். அதனைக் கல்லில் வடிப்பது என்பது சவாலான பணி என்பதை கணபதி சிற்பி அறிவார். அடிப்பகுதி அகலமாகவும், அதன்பின் குறுகியும், மீண்டும் அகலமாக எண்கோண வடிவிலும், அதன்பின் குறுகலாகி, கலசத்தைத் தாங்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும். சாத்தியப்படுமா என நினைத்ததை, கச்சிதமாக நிறைவேற்றி முடித்தார் கணபதி சிற்பி. கல் தேரில் தெய்வச் சிலைக்குப் பதில் தெய்வப்புலவர் திருவள்ளுவரின் சிலை வைக்கப்பட்டது.

கல்லில் தேர் உருவாகிவிட்டது. ஆனால், மரத்தேர் போல அது எப்படி அசையும்? அங்கேதான் கலைஞர்-கணபதி சிற்பியின் கூட்டணியின் கலை நுணுக்கம் வெளிப்பட்டது. மரத்தேர் போலவே துணிகளால் ஆன தோரணங்களை (தொம்பைகள்) கல் தேரிலும் தொங்க விட்டனர். காற்றில் அந்தத் தொம்பைகள் அசையும்போது தேர் அசைவது போலவே தோற்றமளிக்கும். இன்றைய பொறியியல்

தொழில்நுட்ப வசதிகள் இல்லாத 1974-76 காலகட்டத்தில், இரண்டாயிரம் பேர் அமரக்கூடிய தூண்களே இல்லாத அரங்கம், 1330 குறள்களையும் கல்லில் செதுக்கிய குறள் மணி மண்டபம் ஆகியவை தேருடன் கூடிய கூடுதல் சிறப்புகள். கலைஞரின் கோடுகளை, அவர் நினைத்தபடியே கோட்டமாக உயர்த்திக் காட்டினார் கணபதி சிற்பி.

சோழர்களின் துறைமுகத் தலைநகரமாக விளங்கிய பூம்புகார் எனும் காவிரிப்பூம்பட்டினம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஏதேன்ஸ், ரோமாபுரி போன்ற தொலைதூர பகுதிகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. அந்த பழம்பெரும் நகரங்கள் இன்றும் இருக்கின்றன. தமிழரின் பெருமைகூறும் அன்றைய பூம்புகார் கடலில் மூழ்கிவிட்டது. கடல் கொண்ட பூம்புகாரை கரையில் உருவாக்க வேண்டும் என்பது கலைஞரின் சிந்தனை. அதனை சித்திரக் கோடுகளாக்கி சிற்பியிடம் தந்தார்.

புதிய பூம்புகார் உருவாகத் தொடங்கியது. சிலப்பதிகாரமும் பட்டினப்பாலையும் விளக்குகின்ற கண்ணகி - கோவலன் உலவிய பகுதிகள், எழுநிலைமாடம், நெடுங்கல் மன்றம், பாவை மன்றம், இலஞ்சி மன்றம், சிலம்பு மண்டபம், முத்துக் குடில், சங்கு குடில் என கலைநயத்துடன் உருவாக்கினார் கணபதி சிற்பி. தமிழரின் பெருமை மிக்க நகரத்தை மறுகட்டமைப்பு செய்து தந்தது கலைஞர் - கணபதி சிற்பி கூட்டணி. பூம்புகார் கலைக்கூடத்தில் சேரன் செங்குட்டுவன், இளங்கோ அடிகள், கண்ணகி, மாதவி உள்ளிட்ட சிலைகள் இடம்பெற்றுள்ளன. இதில் மாதவி சிலை தனி அழகுடன் ஈர்க்கும். கணபதி சிற்பி மாதவியைத் தன் மகளாக நினைத்து சிலையாக வடித்திருக்கிறார்.

மாமல்லபுரம் சிற்பக் கல்லூரியில் 27 ஆண்டுகள் முதல்வராக இருந்த



கணபதி சிற்பிதான் தமிழ்த்தாய்க் கோயில், தமிழ்ப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பலவற்றையும் திராவிடக் கட்டடக் கலை வடிவத்தில் அமைத்தவர். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பாரம்பரிய முறையில் பல கோயில்களைக் கட்டியவர். தென் அமெரிக்காவின் மயன் கட்டடக் கலைக்கும், திராவிடக் கட்டடக் கலைக்குமானத் தொடர்புகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டவர். சிற்பச் செந்நூல் என்கிற அவரது ஆய்வு நூல் அவரது நுண்மான் நுழைபுலத்தைக் காட்டக் கூடியதாகும். கலைஞருடன் இணைந்து அவர் உருவாக்கிய கலைப்படைப்புகளில் தனித்துவமானது குமரி முனை வள்ளுவர் சிலை.

கன்னியாகுமரி கடலில் உள்ள பாறையில், கட்டப்பட்ட 38 அடி பீடத்தின் மீது 95 அடி உயர சிலை நிறுவப்பட்டது. மொத்த உயரம் 133 அடி. திருக்குறளில் அறத்துப்பால் என்பது 38 அதிகாரங்களைக் கொண்டது. பொருட்பாலும்(70) இன்பத்துப்பாலும்(25) சேர்த்து 95 அதிகாரங்கள். அறத்தை வலுவான அடித்தளமாகக் கொண்டால் அதன் மீது பொருளும், இன்பமும் உயர்ந்து நிற்கும் என்ற வகையில் பீடமும் சிலையும் வடிவமைக்கப்பட்டு, புத்தாயிரம் ஆண்டு தொடக்கத்தில் திறந்து வைக்கப்பட்டது.

தஞ்சை கோவிலில் பீடம், கோபுரக் கட்டுமானம், கலசத்துடன் கூடிய சிகரம் (விமானம்) என மூன்று பகுதிகள் உண்டு. திருவள்ளுவர் சிலையிலும் தஞ்சை கோவிலைப் போலவே பீடம் உண்டு. அதன் மேல் வள்ளுவர் சிலையின் கால் முதல் கழுத்து வரையிலானப் பகுதி என்பது தஞ்சை கோவிலின் கோபுரத்திற்கு இணையான கட்டுமானம் கொண்டது. சிலையின் தலையும் வள்ளுவரின் கொண்டையும் தஞ்சை கோவிலின் கோபுரத்தின் உச்சிப் பகுதியான சிகரம்+கலசத்தைப் போன்றது. தஞ்சை கோவில் கோபுரம் உட்புறம் கூடாக அமைக்கப்பட்டது போலவே திருவள்ளுவர் சிலையின் உட்புறமும் கூடாக உருவாக்கப்பட்டது.

பெரியகோவில் போலவே வள்ளுவர் சிலையின் தொழில்நுட்பமும் மனித உடலைப் போன்றது என்று விளக்கிப் பதிவு செய்திருக்கிறார் கணபதி சிற்பி. அதாவது, ஒரு மனிதன் தனது இரு கால்களையும்



தஞ்சை கோவிலில் பீடம், கோபுரக் கட்டுமானம், கலசத்துடன் கூடிய சிகரம் (விமானம்) என மூன்று பகுதிகள் உண்டு. திருவள்ளுவர் சிலையிலும் தஞ்சை கோவிலைப் போலவே பீடம் உண்டு. அதன் மேல் வள்ளுவர் சிலையின் கால் முதல் கழுத்து வரையிலானப் பகுதி என்பது தஞ்சை கோவிலின் கோபுரத்திற்கு இணையான கட்டுமானம் கொண்டது.

ஊன்றி நிற்பதுபோலத்தான் கோபுரமும் சிலையும் வடிவமைக்கப்பட்டுள்ளன. கால்களை மனிதன் ஊன்றி நிற்கும்போது, புழைவழியாக நுழையும் காற்று, மனித உடலுக்குள் புகுந்து உச்சந்தலை வரை செல்லும். இதுதான் புவிஈர்ப்பு விசையை எதிர்கொண்டு மனிதனை நிற்க வைக்கிறது என்கிற கணபதி சிற்பி, "இதைத்தான் சிற்ப இலக்கணத்திலும் கடைப்பிடிக்கிறோம்" என்கிறார்.

மனித உடலைப்போலவே கோபுரத்திலும், சிலையிலும் அதன் கீழ்ப்பகுதியில் புகும் காற்று, உட்புறமாக உச்சிவரை செல்கிறது. அதனால்தான் வெளிப்புறத்திலிருந்து இயற்கைத் தாக்குதல்கள் ஏற்பட்டாலும் அவற்றை இவையிரண்டும் எதிர்கொண்டு நிற்கின்றன என கணபதி சிற்பி கூறியுள்ளார். இயற்கை சீற்றங்களைக் கடந்து ஆயிரம் ஆண்டுகளாக உயர்ந்து நிற்கிறது, ராஜராஜசோழன் உத்தரவில் குஞ்சரமல்லன் அமைத்த பெருங்கோவில். ஆயிரம் ஆண்டுகளில் காணாத சுனாமி எனும் ஆழிப்பேரலையை எதிர்கொண்டு வலிமையோடு நிற்கிறது கலைஞரின் எண்ணப்படி கணபதி சிற்பி வடித்த நெடுஞ்சிலை.

தலைமைச் சிற்பி குஞ்சரமல்லனின் வழித்தோன்றலாக சிற்பக்கலையை வளர்த்தவர் கணபதி சிற்பி. ஆனால் கலைஞரோ ராஜராஜசோழனின் வழித் தோன்றல் அல்ல. மன்னர் பரம்பரையில் வந்தவருமல்ல.

மிக மிக பிற்படுத்தப்பட்ட ஆதிக்க வாதிகளால் புறக்கணிக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து, ஜனநாயக நாட்டில் மக்களின் நம்பிக்கைக்குரியத் தலைவராக 5 முறை முதல்வரானவர். நிர்வாகத் திறனிலும் கலையாற்றலிலும் மாமன்னர்களை விஞ்சியவர். அவர்தான், இந்தியாவின் தென்முனையில் தமிழின் அடையாளமாக தமிழரின் பெருமையாக அய்யன் திருவள்ளுவர் சிலையை உயர்ந்து நிற்கச் செய்தார். வெள்ளி விழா என்பது ஒரு தொடக்கம். கலைஞர் - கணபதி சிற்பி கூட்டணியின் கலை வடிவம் கடல் உள்ளளவும் அதில் அலை உள்ளளவும் நீடித்து நிற்கும்.





வள்ளுவர் பத்தும்... கலைஞர் பத்தும்...



ஊடகவியலாளர்
ப.திருமாவேலன்

அந்தப் படத்துக்கு கதை வசனம் கலைஞர். பாடல்கள் எழுதியவர் கண்ணதாசன். பாடி நடித்தவர் கலைவாணர். அந்தப் பாடல்...

"தீனா... மூனா... கானா... எங்கள்
திருக்குறள் முன்னேற்றக் கழகம்
தீனா... மூனா.... கானா
அறிவினைப் பெருக்கிடும்
பகுத்தறிவோடு நாட்டினர் வாழ
திருக்குறள் தந்தார் பெரியார் - வள்ளுவப்
பெரியார் - அந்தப்
பாதையிலே நாடு சென்றிடவே - வழி
வகுப்பதையும் அதன்படி
தீனா... மூனா... கானா...

நடப்பதும் எங்கள்
கறுப்பு சிவப்பு என்ற
பேதத்தை நீக்கும் - தலை
கனத்தை குறைத்து நல்ல
தன்மையை உண்டாக்கும்..."

என்று போகும் அந்தப் பாடல். சிலரின் பொழிப்புரைகளுக்குச் சிக்கியிருந்த திருக்குறளை மீட்டு வந்து பாமரர்களது சிந்தனைக்கு பந்தி வைத்தது திராவிட இயக்கம். 'நாம் குறள் மதத்தைச் சேர்ந்தவர்கள்' என்று அறிவித்து திருக்குறள் மாநாடு நடத்தத் தொடங்கினார் பெரியார். அதற்குப் போட்டியாகச் சிலர் கம்பராமாயணத்தையும் சிலப்பதிகாரத்தையும் தூக்கிச் செல்லத் தொடங்கினார்கள். குறள் என்பது இலக்கியம் அல்ல, அதுவே தமிழர் மெய்யியல் என்பதைச் சொன்னது திராவிட இயக்கம். முத்தமிழறிஞர் கலைஞர்,

திருவள்ளுவரின் தீபம் ஏந்திச் செல்லும் முதல்வராகவே ஆனார். அவரது வாழ்நாளில் குறள் தீபத்தை அணைய விடவில்லை.



சென்னை மருத்துவக் கல்லூரியின் தமிழ் மன்றத்தை தொடக்கி வைக்கப் போனார் கலைஞர். அவர் அமைச்சராகக் கூட ஆகாத காலம். 'உங்களுக்கு நான் புதிய மாத்திரைகளை அறிமுகப்படுத்த வந்துள்ளேன்' என்று தொடங்கினார். மருண்டு பார்த்தார்கள் மருத்துவர்கள். 'ஒரு மாத்திரை அல்ல, 1330 மாத்திரைகள். அதைப் பயன்படுத்தினால் எந்த நோயும் வராது. மேட் இன் தமிழ்நாடு' என்று சொல்லிக் கைதட்டலை அள்ளினார்.

ஒவ்வொரு அதிகாரத்துக்கும் பத்துக் குறள் தீட்டிய வள்ளுவப் புலவனுக்கு கலைஞரெனும் புலவர் அரசாட்சியில் இருந்தபோதும் தமிழாட்சியை நடத்தியபோதும் உருவாக்கியவையும் பத்து!

1. சட்டமன்றத்தில் குறளோன்!

நிலாவைப் பார்த்து நடந்து செல்வோர் அனைவர் கூடவும் அது வரும். அதைப் போலத்தான் வள்ளுவனும். எல்லார்க்கும் பொதுவானவர். அந்தப் பொதுமையை விளக்கும் வண்ணம் வேணுகோபால் சர்மா தீட்டிய ஓவியம் தான் இன்று காட்சிக்கு இருக்கிறது. இந்தப் படத்தை, தமிழ்நாடு சட்டமன்றத்தில் வைக்க நினைக்கிறார் கலைஞர். அது பக்தவத்சலம் ஆட்சி. 'திருவள்ளுவர் படத்தை மன்றத்தில் வைக்க கனம் முதலமைச்சர் அனுமதிக்க வேண்டும்' என்றார் கலைஞர். 'கனம் உறுப்பினர் தனது சொந்த செலவில் கொடுத்தால் வைக்கலாம்' என்றார் முதல்வர். 'நானே செய்து தருகிறேன்' என்றார் கலைஞர். மறுநாள் காட்சிகள் மாறியது. 'அரசே வைக்கும்'

என்றார் முதல்வர். 'யார் வைத்தால் என்ன? வள்ளுவர் உள்ளே வர வேண்டும்' என்றார் கலைஞர். அப்படித்தான் மன்றத்துக்குள் வந்தார் குறளாசான்!

2. ஓடுகிறார் வள்ளுவர்!

பொதுப்பணித் துறையோடு சேர்த்து போக்குவரத்துக்கும் அமைச்சராக ஆனார் கலைஞர். தமிழகத்தில் ஓடும் பேருந்துகளில் திருவள்ளுவர் படத்தையும், குறளையும் எழுதி வைக்க உத்தரவிட்டார். இது அந்தக் காலத்தில் அதிகமாக கிண்டலடிக்கப்பட்டது. 'யாகாவாராயினும் நா காக்க என்று எழுதப்பட்டுள்ளது யாருக்காக?" என்று ஒரு உறுப்பினர் கேட்டார். 'நாக்கு இருப்பவர் அனைவருக்கும்' என்றார் அமைச்சர் கலைஞர்!

3. வள்ளுவர் கோவில்!

முதல்வர் கலைஞரும் அமைச்சர் கண்ணப்பனும் திடீரென மயிலாப்பூர் திருவள்ளுவர் கோவிலுக்கு வந்தார்கள். சைவ மணம் கமழும் திருவள்ளுவர் அவர். இதனை மொத்தமாக மாற்றி மாபெரும் கோவிலாக எழுப்ப நினைத்துத்தான் வந்தார் முதல்வர். ஆனால், அந்த இடம் மிக மிகக் குறுகலானது. நடைமுறைச் சிக்கல்களும் இருந்தன. இருக்கும் கோவில் அப்படியே இருக்கட்டும், அதற்கு முழுமையான சீரமைப்புச் செய்வோம் என்று தொகையை ஒதுக்கி குன்றக்குடி அடிகளார் தலைமையில் சீரமைத்தார். இப்படி ஒரு கோவில் இருப்பதே நாட்டுக்கு அப்போது தான் தெரியும்.

4. வள்ளுவர் கோட்டம்!

மயிலை கோவிலை விரிவுபடுத்த முடியாத வருத்தத்தில் விரிவான இடம் பார்த்து அவர் கண்டுபிடித்ததுதான் நுங்கம்பாக்கம். 15 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி எழுப்பினார் கோட்டம். 500 சிற்பிகள், 1000 ஊழியர்கள் இரவு பகல் பாராது 14 மாதங்களில் எழுப்பிய மாபெரும் கோட்டம் அது. மொத்தச் செலவு 50 இலட்சம். 101 அடி உயரமுள்ள தேர் செய்து, அதில் கொண்டு போய் வள்ளுவரை உட்கார வைத்தார்.

'சேர, சோழ, பாண்டியர் மூவேந்தர் மூளையில் உதிக்காத சிந்தனை இது' என்று சொன்னவர் கவிஞர் சுரதா. 1976 சனவரி 23 ஆம் நாள் கட்டுமானப்பணி மொத்தமும் முடிந்தது. பிப்ரவரியில் திறப்பு விழா. சனவரி 30 ஆட்சி கலைக்கப்பட்டது. 10 யானைகள், 133 குதிரைகள், 1330 தமிழாசிரியர்கள், தமிழ்ப் பேராசிரியர்கள் நடந்து வர ஊர்வலம் நடத்த திட்டமிட்டிருந்தார். சர்வாதிகாரம் அனைத்தையும் வீழ்த்தியது. கலைஞர் இல்லாமல் திறப்பு விழா நடந்தது. மொத்தமே ஐந்து நிமிடங்கள். பேசிய இரண்டு பேரும் ஆங்கிலத்தில் பேசினார்கள். கலைஞர் வைத்த அடிக்கல்நாட்டு கல்வெட்டும் வெளியில் வீசப்பட்டது. 'கல்லணை கட்டிய கரிகாலன் கல்வெட்டு வைக்கவில்லை. ஆனால் கல்லணை கட்டியவன் என்றால் கரிகாலனைத்தான் சொல்கிறது' என்று அன்று எழுதினார் கலைஞர்!

5. குறளோவியம்!

குறையோவியம் பாடிக் கொண்டு இருப்பதை விட குறளோவியம் தீட்டுவதே காலத்தின் தேவை என்பதை உணர்ந்து 1956ஆம் ஆண்டுமுதல் 'முரசொலி'யில் 'குறளோவியம்' தீட்டத் தொடங்கினார். தினமணிக் கதிர், தமிழரசு, குங்குமம் என பல இதழ்களில் தொடராக வெளியானது. 1330இல் 354 குறளை கருத்தோவியமாகத் தீட்டினார். கவிதையும்,கட்டுரையும், கதையும், தத்துவ விசாரணையுமான புதுநடையில் இருக்கும். அந்தத் தமிழ் நடை தொடக்கம் முதல் இறுதிவரை மாறாதது தான் கலைஞரின் சிறப்பு. 'அவளையறியாமல் ஆடைகள் தங்களைத் திருத்திக் கொண்டன' என்பது அவரது எழுத்துநடனம்!

எந்த மேடையில் நின்றாலும், எது குறித்து எழுதினாலும் அவர் மேற்கோளில் நிச்சயம் ஒரு குறள் இருக்கும். 'திருக்குறள் ஓர் இன்பச் சோலை, அது பாலை அல்ல, சோலை; அந்த சோலைக்குள் நுழைந்தால்-கருத்துமயில் ஆடும், கொள்கைக் குயில் கூவும், சிந்தனை மான் துள்ளும், அரசியல் தென்றல் வீசும்' என்றார்.அதனால் தான் அந்தச் சோலைக்குள் தமிழ்ப் பறவையால் கூடுகட்டி வாழ்ந்தார் கலைஞர்!

6. கலைஞர் உரை

'திருக்குறளுக்கு உரை எழுதுவது என்பது இமயமலைக்கு போர்வை போர்த்துவது' என்றார் கலைஞர். ஆனால் அவரும் வானளவுச் சிந்தனையை எடுத்து வந்து போர்வையாகப் போர்த்தினார் 1996ஆம் ஆண்டு. 'முரசொலி'யில் தினமும் தீட்டினார் உரை. குறளுக்கு உரை எழுதியோர் தொகை குறளின் அதிகாரத் தொகையை விட அதிகம். உரை எழுதுகிறோம் என்ற பெயரால் திரித்து எழுதியவர்களும் உண்டு. வள்ளுவரின் தமிழ் மனம் அறிந்து மட்டுமல்ல, உரையையும் ஒரு வகை இலக்கியமாக ஆக்கி இருப்பார் கலைஞர். இது உரைநடனம்!

7. குமரியில் சிலை

தலைநகரில் கோட்டம் கட்டியதுமே குமரி முனையில் சிலை அமைக்க நினைத்தார் கலைஞர். அரசியல் அவரை அதிகமாக அலைக்கழித்த காரணத்தால் அமைதியாக இருந்தார். 2000ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அவரது கனவுச் சிலை குமரி முனையில் எழுந்தது. 'என் வாழ்நாளில் மிகப்பெரிய ஆசையொன்று நிறைவேற்றப்பட்டுவிட்டது. இருபத்தைந்து ஆண்டுகளாக எண்ணி எண்ணி விடுத்த பெருமூச்சு வீண் போகாமல் விண் முட்டும் சிலை விரிகடல் பரப்பின் எல்லையில் எழும்பிவிட்டது' என்று எழுதினார்.


8. திருவள்ளுவர் ஆண்டு

திருவள்ளுவர் பிறந்த காலத்தை கி.மு.31 என்று கணித்தார் மறைமலையடிகள். அதனை அறிஞர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதன்படி பார்த்தால் இன்று 2020 என்பதுடன் 31ஐ கூட்டினால் 2051 என்று வரும். இதுதான் திருவள்ளுவர் ஆண்டு. தமிழறிஞர்களின் இந்த ஆண்டுக் கணக்கை முதல்வர் கலைஞர் 1971 இல் ஏற்றுக் கொண்டு தமிழக அரசின் அரசாணையாக வெளியிட்டார். அதுவே இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகிறது.

9. அரசியல் ஆயுதம்!

'வள்ளுவன் செய் திருக்குறளை மறுவற நன் குணர்ந்தோர்
உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி'

என்று எழுதினார் மனோன்மணீயம் சுந்தரனார். இதனை மையப்படுத்தி எழுதிய கலைஞர், 'நமக்கு குறளே முக்கியம்' என்றார். கீதைக்கும் குறளுக்குமான வேறுபாட்டை சுட்டிக் காட்டினார். உடனே, கீதையுடன் வந்துவிட்டார் இராமகோபாலன். அவருக்கு கீதையின் மறுபக்கம் நூலைக் கொடுத்தார் கலைஞர். எப்போது எந்த ஆயுதத்தைத் தூக்க வேண்டும் என்பதை எதிரி தீர்மானிக்கிறார் என்பதை உணர்ந்தவர் மட்டுமல்ல, சரியான ஆயுதத்தை சரியான நேரத்தில் பயன்படுத்துபவர் அவரே!



10. மூச்சு முழுவதும் முப்பாலே!

எந்த மேடையில் நின்றாலும், எது குறித்து எழுதினாலும் அவர் மேற்கோளில் நிச்சயம் ஒரு குறள் இருக்கும். 'திருக்குறள் ஓர் இன்பச் சோலை, அது பாலை அல்ல, சோலை; அந்த சோலைக்குள் நுழைந்தால் கருத்துமயில் ஆடும், கொள்கைக் குயில் கூவும், சிந்தனை மான் துள்ளும், அரசியல் தென்றல் வீசும்' என்றார். அதனால் தான் அந்தச் சோலைக்குள் தமிழ்ப்பறவையால் கூடுகட்டி வாழ்ந்தார் கலைஞர்!

அவர் கட்டிய மாபெரும் கூடுதான் குமரியில் அமைந்திருக்கும் சிலை. அந்தச் சிலைக்கு வெள்ளி விழா காண்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

குமரியில் நின்று நிலைத்திருப்பது வெறும் சிலை? இல்லை. ஈராயிரம் ஆண்டு தமிழ்ச்சிந்தனையின் வடிவம் அல்லவா இது!

உலகில் எந்த மொழிக்கு உண்டு, திருக்குறளைப் போன்ற நூல்? தமிழுக்குத் தான் உண்டு!

உலகில் எந்த இனத்துக்கு உண்டு, திருவள்ளுவரைப் போன்ற மனிதர்? தமிழினத்துக்குத் தான் உண்டு!

"கண்ணொளி கொண்ட தமிழரெல்லாம் கண்டுகளித்த காட்சி! செவிப்பறை சிறிதும் பழுதுபடாத தமிழனெல்லாம் கேட்டு இன்புற்ற நிகழ்ச்சி! இதயமுள்ள தமிழனெல்லாம் உணர்ச்சியால் உந்தியெழுந்து குதித்திட்ட காட்சி" என்று இதைப் பற்றி தலைவர் கலைஞர் எழுதி இருக்கிறார்கள். கலைஞருக்கு அப்போது எப்படி இருந்தது?

"அந்தச் சிலை திறப்பதற்கான பொத்தானை அழுத்தியபோது என் விரல் என்னை அறியாமல் அசைவற்றுப் போனது மட்டுமல்ல - என்னையே நான் மறந்துவிட்டேன். நாதஸ்வர இசைவாணர்களும், தவில் வித்வான்களும் அவர் தம் பக்க வாத்தியக்காரர்களுமாக சுமார் முன்னூறுக்கும் மேற்பட்டோர், அய்யனின் சிலை திறக்கப்பட்டபோது இசை முழக்கம் திக்கெட்டும் எட்டிடச் செய்தார்களாம். மறுநாள் காலையில் மற்றவர்கள் சொல்லக் கேட்டுத்தான் 133 நாயன இசை ஒலித்த செய்தியே எனக்குத் தெரியும். அந்த அளவுக்கு மெய்மறந்து போயிருந்திருக்கிறேன். சுமார் முக்கால் மணி நேரம் பேசியிருக்கிறேன்" என்று எழுதி இருக்கிறார் கலைஞர். இந்த உணர்ச்சிக்குப் பின்னால் இருப்பது தமிழ் உணர்ச்சி, தமிழன் எழுச்சி, தமிழ்நாட்டின் மறுமலர்ச்சி ஆகும்.

இவை மூன்றும் தோன்ற வெள்ளி விழா நடக்கிறது.





கலைஞர் கலையும் திருவள்ளுவர் சிலையும்!



முனைவர்
பிரபாகரபாபு

சிலைகள் என்பவை வடிவங்கள், குறியீடுகள், அடையாளங்கள், வரலாற்றுச் சின்னங்கள். அவை ஏதேனும் உருவத்தை வரித்துக் கொண்ட திடப் பொருள்கள் அல்ல. எண்ணற்ற வரலாற்றுச் செய்திகள் பொதிந்த உருவங்களாக, தரவுகள் விளைக்கும் கருவிகளாக, ஆற்றல் பெருக்கும் அரும்பொருள்களாக, கருத்துச் செறிவை உள்ளடக்கிய கருவூலங்களாக, கற்பனையைப் பெருக்கும் களஞ்சியங்களாக, உள்ளத்தில் உரமேற்றும் ஊக்கிகளாக இயக்கத்தை விளைவிக்கும் இணையற்ற செயலிகளாக, கடந்த காலத்தின் அருமைமிகு சான்றுகளாக, புதியன தோற்றுவிக்கும் புத்தொழில்களாக நிலைத்து நிற்பவை.

அவை எண்ணற்ற கோணங்களில் வெளிப்பாடுகளைக் கொண்டு அறிவார்ந்த தகவல்களை மொழிந்து கொண்டிருக்கும் விந்தைகள். அசையாமல் நின்றே ஓராயிரம் கதைகளைக் கூறி உள்ளங்களை அசைத்து நெகிழ வைக்கும் வித்தகங்கள். சமூகத்தின் மாறிவரும் நிலைப்பாடுகளைக் கடந்த காலங்களோடு பொருத்திக் கவிதைகள் மொழியவல்லவை சிலைகளின் தோற்றங்கள்..

ஒரு பார்வையிலேயே கடந்த காலத்திலிருந்து நிகழ்காலம் வரையிலான மாற்றங்களையும் வருங்காலத்திற்கான கருத்தியல்களையும் அறியச் செய்பவை. சிலைகள் உண்மைகளை உள்ளவை உள்ளபடி எடுத்துக் கூறுகின்றன. பேசாமலே பேசுகின்றன. ஒரு மனிதனின், ஒரு ஊரின், ஒரு மாநிலத்தின், ஒரு நாட்டின், உலகின் அடையாளமாகவோ இவற்றில் எதுவொன்றாகவோ விளங்கி கோட்பாடுகள், போராட்டங்கள், துயரங்கள், மகிழ்ச்சிகள் என எல்லாவற்றையும் ஒரே நோக்கில் சொல்கின்றன.

பார்ப்பவரின் உள்ளத்தோடு சுமுக்கமாக உரையாடுகின்றன. பார்ப்போர் கொண்ட கருத்தியலுக்கேற்ப மனமாற்றங்களை ஏற்படுத்துகின்றன. பல பக்கங்கள் கூறும் பல்வகைச் செய்திகளை ஒரு காட்சியில் வெளிப்படுத்திக் கொண்டு நிற்கின்றன.

உலகின் பல நாடுகளில் பல்வேறு காரணங்களுக்காகச் சிலைகள் நிறுவப்பட்டுள்ளதைக் காணலாம். நாட்டின் விடுதலைப் போராளிகள், சமூகச் சிற்பிகள், மக்கள் நலனுக்காகப் போராடிய உயர்நெறித் தலைவர்கள், மறக்கப்படக் கூடாத நிகழ்வுகள், பண்பாட்டுச் சின்னங்கள், அழகியல் காட்சிகள், தனித்தன்மை வாய்ந்த காட்சிகள் போன்றவற்றை மக்களுக்குத் தொடர்ந்து நினைவூட்டும் வகையில் நினைவுச் சின்னமாக அமைக்கப்படும் சிலைகள் எண்ணற்றவை. அறிவு, அறம், உழைப்பு, அவலம், செயலாற்றப்பட வேண்டியவை, செய்யக் கூடாதவை என எதுவாகவும் உருவகப்படுத்திச் சிலைகள் அமைக்கப்படுகின்றன.

சிலைகள் நிறுவும் வரலாறுகள், அவற்றின் சமூக மதிப்புகள், விளைவிக்கும் பயன்பாடுகள் போன்றவற்றை ஊன்றிக் கற்று நன்மை அடைதல் நன்று. சிறப்பான சிலைகள் தமக்கான தனித்த வரலாறுகளைக் கொண்டிருப்பதோடு அரசியல், அழகியல், அறக்கொள்கைகள், பொருளாதார நிலைப்பாடுகள், பண்பாட்டுக் கூறுகள் போன்றவற்றை உணர்த்தி வாழ்வுக்குச் செழுமை கூட்டுகின்றன.

சிலை என்பது ஒரு வடிவம். ஒரு ஒப்பற்ற மனிதரை அல்லது கடந்த கால நிகழ்வினைக் காலம் கடந்தும் நினைவூட்டும் வகையில் உருவப்படுத்தி நிறுவப்படுபவை. அவற்றின் பின்புலத்தில் அடுத்துவரும் தலைமுறைகளுக்கான வரலாற்றுச் செய்திகள் பொதிந்துள்ளன. இனி தனிச்சிறப்பு கொண்ட மாந்தர்களின் சிலைகள் பற்றிய உண்மைகளை உலகளாவி ஆய்ந்து பார்ப்போம்.

உலகில் நிறுவப்பட்ட சிலைகளில் மார்பளவுச் சிலைகள், அமர்ந்த சிலைகள், குனிந்த சிலைகள் ஆகியவற்றைத் தவிர்த்து முழு உருவச்சிலைகள் சிலவே உள்ளன. அவற்றுள் அறம் சார்ந்த ஒரே சிலை திருவள்ளுவர் சிலை.

உலகப்புகழ் பெற்ற சிலைகள்

ஒவ்வொரு சிலைக்கும் ஒரு தனித்தன்மை உண்டு. பெரும்பாலான சிலைகள் நிறுவப்பட்ட இடத்துக்கு அல்லது நகருக்கு அல்லது நாட்டுக்குப் புகழ் சேர்ப்பவை. நிறுவப்பட்ட இடத்தின் அல்லது நகரின் அல்லது நாட்டின் புகழ் பாடுபவை. அவற்றுள் நின்றபடியாக வடிவமைக்கப்பட்ட சிலைகளில் கட்டுமானச் சிறப்புக்காகக் குறிப்பிடத்தக்கவை 1.நியூயார்க்கின் லிபர்ட்டி சிலை 2.ரியோடிஜெனீரோவின் மீட்பர் கிறித்து சிலை 3.சீனாவின் புத்தர் சிலை ஆகியவை. உதாரணத்திற்கு, அமெரிக்காவின் விடுதலை மங்கைச் சிலையின் வரலாறும் கட்டுமானமும் மாறுபட்டவை.

விடுதலை மங்கைச் சிலை, அமெரிக்கா

குமரிமுனையில் நெடிதுயர்ந்து நிற்கும் திருவள்ளுவர் சிலைக்கு சற்றே ஒப்பிட்டுக் கூறும்படி நிற்பது கலை நுட்பம் மிக்க அமெரிக்காவில் உள்ள லிபர்ட்டி சிலை (உரிமைச்சிலை/ விடுதலைச் சிலை). முற்றிலும் அழகியல் நோக்கிலான விடுதலை மங்கையின் வலது கையில் தீப்பந்தம் உள்ளது. இது அமெரிக்க விடுதலைப் போரின் சரித்திரத்தைக் குறிப்பிட்டு இடது கையில் ஜூலை 4, 1776 என்று எழுதப்பட்ட புத்தகம் இருக்கிறது. தலையில் 7 முனைகள் கொண்ட கிரீடம் இருக்கிறது. இந்த 7 முனைகள், 7 கண்டங்களையும், 7 கடல்களையும் குறிக்கின்றன. பீடத்திலிருந்து சிலையின் உயரம் 93 மீட்டர். சிலையின் உயரம் மட்டும் 34 மீட்டர் ஆகும். சிலையில் பயன்படுத்தப்பட்ட மொத்தத் தாமிரத்தின் எடை 27.2 டன். இரும்பின் எடை 113.4 டன். சிலையின் மொத்த எடை 204.1 டன் ஆகும். புறத்தே தாமிர மாழைத் தகடு வேயப்பட்ட சிலை. அமெரிக்க துறைமுகத்தில் உள்ள ஒரு புகழ்பெற்ற சிலை என்பது உலகறிந்தது.

அமெரிக்க புரட்சியின்போது ஐக்கிய அமெரிக்காவிற்கும், பிரான்சிற்கும்



இடையே நிலவிய நட்புறவின் வெளிப்பாட்டினை எடுத்தியம்பும் முகமாக 1886 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டினால் ஐக்கிய அமெரிக்காவிற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது இந்தச் சிலை. இது சர்வதேச அளவில் நட்பையும், விடுதலையினையும், மக்களாட்சியினையும் வெளிப்படுத்தும் சின்னமாக விளங்குகின்றது.

1875 ஆம் ஆண்டு கட்டுமானம் தொடங்கப்பட்டு 1884ஆம் ஆண்டு முழுமை அடைந்து பிரான்சில் இருந்து கப்பல் மூலம் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 1886 ஆம் ஆண்டு அக்டோபர் 28 ஆம் தேதி அமெரிக்க மக்களுக்குச் விடுதலை மங்கையின் சிலை அர்ப்பணிக்கப்பட்ட பின், 1924ஆம் ஆண்டு தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது. விடுதலை மங்கையின் சிலையை வடிவமைப்பதில் உருவாக்குவதிலும், நிறுவுவதிலும் உள்ள கலைத்திறன், சிற்பக்கலைத் திறன், தொழில்நுட்ப அறிவு, கட்டுமானப் பேராற்றல், அளவீடுகள், கணக்கியல், வேதியியல் நோக்குகள் போன்றவற்றை வியக்காமல் இருக்க முடியாது.

எண்ணற்ற கட்டுமானக் கலை வல்லுநர்கள், கலைஞர்களின் ஒருங்கிணைந்த பங்களிப்புடன் ஒன்பது ஆண்டுகள் ஆனதாகத் தரவுகள் கூறுகின்றன. ஒரு சிலையை உருவாக்குவதில்தான் எத்தனைக் கடின உழைப்புகள் என்று இன்றளவிலும் உலகம் போற்றிக் கொண்டிருக்கிறது.

திருவள்ளுவர் சிலை

உலகச்சிலைகளிலிருந்து மாறுபட்டு வாழ்வியல் அறங்களை முன்னிறுத்தி வானோங்கி நிறுவப்பட்டது திருவள்ளுவர் சிலை. தமிழ்நாட்டின் திருவள்ளுவர் சிலை உலகில் போற்றப்பட்ட உயர்ந்த சிலைகளிலிருந்து எவ்வகையில் மாறுபட்டுள்ளது என்பதை நோக்கினால் அதனைத் திட்டமிட்டு நிறுவிய தமிழக அரசின் அருமை மிக்க செயல்பாட்டின் சிறப்பினைப் புரிந்து கொள்ள முடியும். கலைநுட்பமும் சிலைநுட்பமும் மிக்க திருவள்ளுவர் சிலையின் பெருமை பெரிது. அந்தப் பெருமையைத் தமிழ்நாட்டிற்கு ஏற்படுத்தித் தந்தவர் அன்றைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் கருணாநிதி.

குமரிமுனையில் அமைந்த தீவினில் தெய்வப்புலவர் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டது. 133 அடிகள் உயரம் கொண்ட சிலை கருங்கல் கொண்டு செம்மையாகச் செதுக்கப்பட்டது. அறத்தினைப் பின்பற்றியே வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தித் திருவள்ளுவரால் இயற்றப்பட்ட முப்பால் இலக்கியம் திருக்குறள்.

தமிழில் தமிழர்களின் பயனுக்காக இயற்றப்பட்டது போலத் தோன்றினாலும் திருக்குறள் உலகத்துக்கானது. உலகளாவிய அமைதிக்கும் நல்லிணக்கத்துக்கும் பொதுமையான இலக்கியமாக விளங்கும் இரண்டடி குறள் வெண்பாக்களால் ஆனது. அறத்துப்பால் (38), பொருட்பால் (70), காமத்துப்பால் (25) எனப் பகுக்கப்பட்ட 133



அதிகாரங்களில் 1330 குறட்பாக்கள் கொண்டது. உலகின் எந்த மூலையில் வாழும் மாந்தருக்கும் பொருந்தக் கூடிய அறத்தினை உணர்த்துவது திருக்குறள்.

திருவள்ளுவரின் புகழ் உலகெங்கிலும் பரவ வேண்டும் என்ற நோக்கில் ஒரு உயர்ந்த நினைவுச் சின்னமாக உலகமே பார்த்து வியக்கும் வகையில் உருவாக்கி நிறுவப்பட்டது. வங்கக்கடலும் அரபுக்கடலும் இந்துமாக்கடலும் சந்திக்கும் இடத்தில் அமைந்த திருவள்ளுவரின் காட்சி அங்கிருந்தே அறத்தினை உலகினருக்கு எடுத்துச் சொல்வதுபோல் இருக்கும்.

இந்தியாவின் ஒப்பற்ற சிற்பி என்று கருதப்படும் கணபதி எனும் கலைச்சிற்பியால் செதுக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை மேனாள் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களால் 01.01.2000 அன்று நிறுவப்பட்டது. இந்தியாவின் உயர்ந்த சிலைகளில் ஒன்றாகப் பெருமிதமாகக் குமரி முனையில் நிலைத்திருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் செழுமையான வாழ்வியல் அறங்களை வெளிப்படுத்தி நிற்கும் உயர்ந்த சிலை குமரிப் பாறையில் நிற்கும் திருவள்ளுவர் சிலை மட்டுமே. வானளாவிய திருவள்ளுவர் சிலை, தொன்மையான தமிழினத்தின் அடையாளம்.

சிலைக்கான பீடத்தின் உயரத்தோடு 133 அடிகள் கொண்ட சிலை, திருக்குறளின் 133 அதிகாரங்களைக் குறிப்பிட்டு நிற்பதாக உள்ளது. 95 அடி திருவள்ளுவர் சிலைக்கு அமைக்கப்பட்ட 38 அடி பீடம் அறத்துப்பாலின் 38 அதிகாரங்களைக் குறிப்பிடுவதாக உள்ளது. அறத்தின் மீது நிற்கும் திருவள்ளுவர் சிலை பொருளறம் கொண்ட பொருட்பால், இல்லறத்துக்கான நல்லறத்தைத் தெரிவிக்கும் காமத்துப்பால் ஆகியவற்றை உணர்த்துவது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் சிறந்த அறங்களின் அடிப்படை அமைந்த வாழ்வில் பொருட்செல்வத்தையும் அன்புமிக்க காதல் இன்பத்தையும் பெற்று வாழ்வதைக் கோட்பாடாக வெளிப்படுத்துவது. வலது கையில் வானை நோக்கிக் காட்டும் திருவள்ளுவரின் 3 விரல்கள் முப்பாலை உணர்த்துவன. சிலையில் உள்ள திருவள்ளுவரின் தலை, கடல் மட்டத்திலிருந்து 200 அடி உயரத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சிலையின் எடை 7000 டன்கள். இந்திய நாட்டின் சிற்பக்கலையின் அனைத்து நுட்பங்களையும் உள்ளடக்கி நிறுவப்பட்ட சிலையின் உட்புறம் 130 அடிகள் வரையில் உள்ளீடற்ற பகுதியைக் கொண்டது.

வியக்க வைக்கும் சிலை வரலாறு

1975ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. 1979ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் தேதி அப்போதைய ஆளுநர் தலைமையில் அன்றைய முதல்வர் கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்க அடிக்கல் நாட்டினார்.

1990-1991இல் நிதி நிலையில் சிலை அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1990 செப்டம்பர் 6ஆம் நாள் சிலை அமைக்கும் பணி துவங்கப்பட்டு பிறகு அப்பணி முடங்கியது. 1997இல் மீண்டும் முன்னெடுத்து பணி விரைவு படுத்தப்பட்டது. சிலை அமைக்க கற்களை எடுத்து செல்ல 'பாண்டூன்' என்ற படகு ஒன்று வாங்கப்பட்டது. மொத்தம் 3,681 கற்கள் பயன்படுத்தி ஆதாரப் பீடம் அமைக்கப்பட்டது. முகம் 10 அடி உயரம், 40 அடி உயரத்தில் கழுத்து இடுப்பு பகுதிகள், 40 அடி உயரத்தில் இடுப்பு முதல் கால்பாதம் வரையும், கொண்டை பகுதி 5 அடியிலும் அமைக்கப்பட்டு திருவள்ளுவர் சிலை 133 அடி உயரத்தை எட்டியது. மொத்தம் ரூ.6.14 கோடி செலவில் பணியாளர்கள், சிற்பிகள், உதவியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் என 150க்கும் மேற்பட்டவர்கள் நாளொன்றிற்கு 16 மணி நேரம் உழைப்பில் உருவானது.

சிலையின் இடுப்பு வளைவு சற்று சவாலாக இருந்தாலும் நவீன அறிவியல் துணையோடு இதனை மர மாதிரி உருவாக்கி அதன் எடை மையத்தை அளந்து அதன் பின்னர் கட்டப்பட்டது. கன்னியாகுமரி, அம்பாசமுத்திரம் மற்றும் சோழிங்கநல்லூர் என மூன்று சிலைக்கூடங்களில் பணிகள் நடைபெற்றன. அம்பாசமுத்திரத்திலிருந்து 5000 டன் எடை கொண்ட கற்களும், சோழிங்கநல்லூரிலிருந்து 2000 டன் தரமான கற்களும் வந்தன. 13 அடி நீளமும் 15 டன் எடையும் கொண்ட பெரிய கற்கள் மட்டும் 3,681 ஆகும் மற்றவை மூன்றிலிருந்து எட்டு டன் எடை கொண்டவை.

காது, மூக்கு, கண், வாய், நெற்றி பகுதிகளுக்கான கற்கள் கையால் செதுக்கப்பட்ட ஒரே கற்களாகும். பனைமரமும், சவுக்கு மரமும், இரும்புக் கம்பிகளும் கொண்ட சாரங்கள் கட்டப்பட்டன. மொத்தம் 18,000 சவுக்கு மரங்கள் இரண்டு சரக்குந்து கொள்ளளவு கொண்ட கயிற்றால் முழு சாரமும் கட்டப்பட்டது. சாரங்கள் எதுவும் சிலையின் எப்பகுதியிலும் படக்கூடாது என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதியாக 2000 ஜனவரி 1ஆம் தேதி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிலையைத் திறந்து வைத்தார். ஆக, தமிழ்நாட்டின் அடையாளச் சின்னமான வளமார்ந்த திருவள்ளுவர் சிலை தொன்மையான தமிழினத்தின் அழியாத அடையாளமாகத் திகழ்கிறது.

சிலை மற்றும் மண்டப அமைப்பை அறிதலும் பயனுள்ளது

சிலை பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட பல மாடிக் கட்டடம் போன்ற அமைப்பு கொண்டதாகும். உலகில் இதுபோன்ற கருங்கற்களால் ஆன சிலை கிடையாது.

- சிலையினுள் 130 அடி உயரம் வரை வெற்றிடம் உள்ளது. இந்த வெற்றிடம் சிலையின் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்தும் நுட்பமுடையது. கல்லால் ஆன உத்திரங்களும், கட்டடங்களும் பரவப்பட்டு சிலை எப்பக்கத்திலும் சாய்ந்து விடாது நேரே நிற்குமாறு உறுதி செய்யப்பட்டுள்ளது.
- பீடத்தின் 38 அடி உயரமானது திருக்குறளின் அறத்துப்பாலின் 38 அதிகாரங்களையும், பீடத்தின் மேல் நிற்கும் 95 அடி உயரச் சிலையானது திருக்குறளின் பொருள் மற்றும் இன்பத்துப்பாலின் 95 அதிகாரங்களையும் குறிப்பதாகத் திகழ்கின்றது.

- மண்டபத்தின் உட்புறச் சுவற்றில் ஒவ்வொரு அதிகாரத்திலிருந்து ஒரு குறள் வீதம் 133 குறட்பாக்கள் தமிழிலும் அவற்றுக்கு நிகராக ஆங்கில மொழி பெயர்ப்பிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

இதிலிருந்தே, உலகில் கொண்டாடப்படும் சிலைகளிலிருந்து திருவள்ளுவர் சிலை எத்தகைய கட்டுமானச் சிறப்பு கொண்டது என்பதை ஒப்பிட்டுத் தெரிந்து கொள்ள முடியும்.

கலைஞரும் வள்ளுவரும்

கலைஞர் கருணாநிதியின் திருக்குறள் ஈடுபாட்டினைச் சிறப்பாக வெளிக்காட்டுவதற்கு இரண்டு திரைப்பட உதாரணங்களைக் கூறலாம். படத்தில் தனது மகனின் அறிவுத் திறமையை உணராத தந்தையாக வரும் பெரியவர் வேலையாளிடம் (மகனின் நெருங்கிய நண்பன்) கேட்பார், "இந்த நாடகத்தை எழுதியது யாரு?" என்று கேட்டுத் தனது மகனையே ஏளனம் செய்து "அவன் பள்ளிக்கூடத்தைப் பார்த்ததே கிடையாது" என்று கேட்டுத் தொடரும் உரையாடலில் தனது மகனை ஏளனம் செய்யும் அப்பாவிடம் வேலைக்காரன் கூறும் உரையாடல் இனியது. "பள்ளிக்கூடத்தில் படிச்சாதான் படிப்புங்களா? அவன்தான் உலகத்தையே படிச்சுக்கிட்டிருக்கானே! ஒரு புத்தகத்தை மடியில் வச்சிருக்கானுங்க. சாப்பிட மறந்தாலும் அந்தப் புத்தகத்தைப் படிக்க மறக்கிறதில்ல. "அது என்னடா புத்தகம்" என்று தந்தை கேட்க, "அதுதாங்க திருக்குறள்" என்று கூறுவதாக முடித்திருப்பார் கலைஞர்" திருக்குறளை முழுமையாகக் கற்றால் உலகத்தையே புரிந்து கொள்ளலாம் என்று உணர்த்தியிருப்பார் கலைஞர்.



கண்ணாடி பற்றிய பேச்சில், "கண்ணாடி இல்லாத வீடே கிடையாது... முகத்துல இருக்கிற அழுக்கை நீக்கி அழகு பார்ப்பதற்கு இருப்பது கண்ணாடி. அது மாதிரி அகத்தில் உள்ள அழுக்கை நீக்கறதுக்கு, அந்த அழுக்கைப் பார்க்கிறதுக்கு ஒரு கண்ணாடி இருக்கு" என்று ஒருவர் கூற, "அது என்ன கண்ணாடிங்க?" என்று மற்றவர் கேட்க, அவர் கையடக்கத் திருக்குறள் புத்தகத்தைக் காட்டி, "இதுதான் அந்தக் கண்ணாடி" என்பதாகக் கூறுவார். "அந்த கண்ணாடி விலை இரண்டணா. இந்தக் கண்ணாடி விலையும் இரண்டணாதான்" என்று முடியும். இவ்வாறு மக்களைத் திருக்குறளை நோக்கித் திருப்புவதற்கு இன்றைக்கு 75 ஆண்டுகளுக்கு முன்பே

மிக நேர்த்தியாக தனது எளிய உரையாடல்களாலேயே வளைத்துக் கொண்டு வந்து காட்டுகிறார் கலைஞர்!

கலைஞர் ஆள வந்ததும் அவரது நோக்கம் வள்ளுவர் கோட்டம் நிறுவுவதில் இருந்தது. வள்ளுவர் கோட்டம் அடிக்கல் நாட்டப்பட்டு, 1976ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது.

220 அடி (67 மீட்டர்) நீளமும், 100 அடி (30.5 மீட்டர்) அகலமும் கொண்ட இங்குள்ள அரங்கம் 4000 மக்களைக் கொள்ளக்கூடியது என்று கூறப்படுகின்றது. அரங்கத்தின் வெளிப்புறமாக 20 அடி (6 மீட்டர்) அகலம் கொண்டுள்ளன. அரங்கத்தின் ஒரு பகுதியில் மேற் தளம் அமைக்கப்பட்டுள்ளது. இது குறள் மணிமாடம் எனப் பெயரிட்டு அழைக்கப்படுகின்றது, திருக்குறளில் உள்ள 1330 கற்பலகைகளில் செதுக்கப்பட்டுள்ளன. அறத்துப்பாலைச் சேர்ந்த குறள்கள் கருநிறப் பளிங்குக் கற்களிலும், பொருட்பால், காமத்துப் பால் பாடல்கள் முறையே வெள்ளை, செந்நிறப் பளிங்குக் கற்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன. குறள்களில் உள்ள கருத்துக்களைத் தழுவி வரையப்பட்ட, நவீன, மரபுவழி உள்ளன.

ஒரு சிறந்த கவிஞரான கலைஞரின் தனது தேர்ந்த கற்பனைத்திறனை வெளிப்படுத்தி அதனை கலைஞர்கள் மூலமாக நிறைவேற்றச் செய்து தமிழ்நாட்டுக்கு ஓர் ஒப்பற்ற அடையாளச் சின்னமாக வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கித் தந்திருப்பதைக் காண முடியும். கலைஞர் கருணாநிதியின் தணியாத வேட்கையால் உருவாக்கப்பட்டதே திருவள்ளுவர் சிலை.

பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல். (975)

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். (26)

எனும் குறள் நெறிகளில் பொருந்தி தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் என அனைத்து வகை இலக்கியங்களிலும் அரசியல் களங்களிலும், ஆட்சித் திறமையிலும், திரைக்கலைகளிலும், ஊடகத்துறையிலும் வல்லுனரான கலைஞர் கருணாநிதி, தமிழ் மொழியைச் செம்மொழி நிலையினைப் பெறச்செய்தலிலும், தமிழின் புகழ் உலகில் ஓங்கச் செய்தலிலும் இன்றளவும் ஒரு இணையற்ற முன்னோடியாகத் திகழ்கிறார்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

என்ற குறளுக்கிணங்கத் தனது கூரிய அறிவாற்றல் துணை கொண்டு செயல்திறனில் சிறந்து விளங்கிய கலைஞர், கலைநயம் குன்றாமல் திருவள்ளுவர் சிலையினைச் செய்வதற்கு நுட்பமான சிற்பக்கலையில் சிறந்தவரான கணபதி சிற்பி அவர்களிடம் இப்பணியை ஒப்படைத்ததோடு சிலையினைச் செய்து முடிக்கும் வரை, தனது பல்வேறு இறையாண்மைப் பணிகளுக்கிடையிலும் கவனம் செலுத்தி மேற்பார்வை செய்து, உலகின் ஈடு இணையற்ற திருவள்ளுவர் சிலையை நிறுவியது போற்றற்குரியது. வலிமையான கருங்கற்களால் எழிலுடன் உருவாக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை ஆயிரமாயிரம் ஆண்டுகள் போயினும் அடுத்துவரும் தலைமுறைகளுக்கு அறத்தைப் புகட்டி நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.





கலைஞரின் திராவிடக் கலை நூட்பம்



மேனாள் தலைமைப் பொறியாளர்
செ. செல்வின் செளந்தரராஜன்

இயல், இசை, நாடகம் மூன்றிலும் ஆளுமை பெற்றவர்களை கலைஞர் என பொருள் கொள்வோம். அதையும் தாண்டி, அரசியல், சமுதாயம் கட்டட கலையிலும் ஆளுமைக் கொண்டு திராவிட சின்னங்களான வள்ளுவர் கோட்டமும், முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரி கடலில் அலைகள் மோதும் பாறையிலே வான்புகழ் வள்ளுவர்க்கு வானுயுர சிலையை நிறுவிய முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்தான் கலைஞர் ஆவார். கலைஞர் என்னும் வார்த்தைக்கு இலக்கணம் நமது கலைஞர் தான்.

இலக்கியம், அரசியல், சமுதாயம் இம்மூன்றிலும் சிறந்து விளங்கிய கலைஞரை எல்லோரும் அறிவார்கள். ஆனால் கட்டட கலையில் பெரும் புலமைப் பெற்ற கலைஞரை யாருக்கும் தெரியாது. அவருடைய கட்டட புலமைக்கு ஆதாரம் சென்னையில் அமைந்துள்ள வள்ளுவர் கோட்டம் மற்றும் குமரி கடல் நடுவே நிறுவப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலை. வள்ளுவர் கோட்டம் நிலப்பகுதியில் கட்டப்பட்டது. அய்யன் திருவள்ளுவர் சிலையோ ஆர்ப்பரிக்கும் அலைகடல் மத்தியில் அமைந்திருந்த ஓர் சிறிய பாறையில் கட்டப்பட்டதாகும்.

முக்காலத்தையும் உணர்ந்த நமது கலைஞர் ஏன் கட்டினார், எப்படி வடிவமைத்தார், எவ்வளவு சிரமங்களில் கட்டி முடித்தார் என்பதை விவரிக்கிறது இக்கட்டுரை.

விவேகானந்தர் மண்டபம்

1970ஆம் வருடம் செப்டம்பர் 2ம் நாளில் கன்னியாகுமரியில் ராமகிருஷ்ணா மடத்தின் மூலமாக அமைக்கப்பட்ட Vivekananda Rock Memorial கமிட்டி நிறுவிய விவேகானந்தர் நினைவு மண்டபத்தை திறக்கும் விழா நடைப்பெற்றது. விழா மேடை கன்னியாகுமரி கடற்கரையில் (சங்கிலித் துறை எதிரில்) அமைக்கப்பட்டு, தமிழகத்தின் அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில், இந்திய திருநாட்டின் அன்றைய ஜனாதிபதி வி.வி.கிரி அவர்கள் திறந்து வைத்தார். திறக்கப்படவிருந்த விவேகானந்தர் மண்டபத்தை பார்க்கும் விதமாக விழா மேடை அமைக்கப்பட்டிருந்தது.

மேடையிலிருந்து பார்த்தால் இரண்டு பாறைகள் தெரியும் ஒன்று பெரிய பாறை அதில்தான் விவேகானந்தர் நினைவு மண்டபம் நிறுவப்பட்டு திறக்கப்பட்டுள்ளது. மற்றொன்று, பெரிய பாறைக்கு அருகில் ஓர் சிறிய பாறை அதன் அருகே இருந்தது.

வள்ளுவர் சிலை உருவாக்கும் பணி

வள்ளுவர் சிலை அமைக்க கலைஞர் தேர்வு செய்தது விவேகானந்தர் மண்டபம் அமைந்த பாறைக்கு அருகிலிருந்த ஒரு சிறிய பாறை. பரப்பளவிலும் உயரத்திலும் விவேகானந்தர் பாறையை விட மிக மிகச் சிறியது. சிலை அமைக்க வேண்டிய துறையான பொதுப்பணித்துறையிடம் சிலை அமைக்க அவர் தேர்வு செய்த பாறையை ஆய்வு மேற்கொள்ளும் படி ஆணையிடுகிறார். தேர்வு செய்யப்பட்ட பாறை வெடிப்புகள் அதிகம் உள்ள பாறை என்றும் 22000 சதுர அடி பரப்பளவுக் கொண்ட பாறை என்றும், கட்டுமானத்திற்கு தகுதியான பாறை இல்லை என்றும் கூறினார்கள்.



ஆனால் கலைஞர் விடவில்லை "முடியாததை முடித்து வைப்பவர்தானே கலைஞர்" அரசுத் துறையை முடுக்கி பல ஆய்வுகளுக்குப்பின் ரசாயன கலவைக் கொண்டு வெடிப்புகளை "grouting" மூலமாக அடைந்து வரப் போகும் சிலையின் பாரத்தை, 22000 சதுர அடி பரப்பளவுக் கொண்ட பாறையை தாங்கும் அளவிற்கு பலப்படுத்தப்பட்டது. கலைஞரின் வழிகாட்டுதலோடு அய்யன் திருவள்ளுவர் சிலையை வடிவமைக்கும் பணி டாக்டர் வை.கணபதி ஸ்தபதி அவர்களிடம் அளிக்கப்படுகிறது.

வடிவமைப்பில் முப்பாலான அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை விளக்கும் வகையிலே சிலை வடிவமைக்கப்படுகிறது. 38 அதிகாரங்களை கொண்ட அறத்தை உணர்த்தி மீதமுள்ள 95 அதிகாரங்களில், பொருள் மற்றும் இன்பம் ஆகியவற்றை உணர்த்தும் வகையிலே, 38 அடி உயரத்தில் 60x50 அடிகள் அளவில் அறப்பீடமும் (Basement) 95 அடி உயரத்தில் 35x25 அடிகள் அளவில், அறப்பீடத்தின் மேல் அய்யன் திருவள்ளுவர் சிலையும், மொத்தில் 133 அடி உயரத்தில் சிலை வடிவமைக்கப்படுகிறது.

சிலை வடக்கு திசை நோக்கி இருக்க வேண்டும் என்பதை தீர்மானித்ததும் கலைஞரே. வடக்கு

வடிவமைப்பில் முப்பாலான அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை விளக்கும் வகையிலே சிலை வடிவமைக்கப்படுகிறது.

சிலை வடக்கு திசை நோக்கி இருக்க வேண்டும் என்பதை தீர்மாணித்ததும் கலைஞரே. வடக்கு எப்போதும் திராவிடர் பார்வையில் இருக்க வேண்டும் என்ற சித்தாந்த பார்வையாக இருக்கலாம்.

எப்போதும் திராவிடர் பார்வையில் இருக்க வேண்டும் என்ற சித்தாந்த பார்வையாக இருக்கலாம். சிலை வடிவமைப்பு செய்து வரைபடங்கள் தயார் செய்து பணிகள் ஆரம்பிக்கும் வேளையில் 1976ல் தி.மு.க. ஆட்சி கலைக்கப்படுகிறது. மீண்டும் 1989ல் ஆட்சி அமைந்தப்போது சிலை நிறுவும் பணிகள் மீண்டும் தொடங்கிய தருவாயில் 1976இல் துரத்திய சோதனை 1991இல் ஆட்சி கலைந்தது.

கலைஞரின் கைவண்ணத்தில் வள்ளுவர் சிலை

தி.மு.க. ஆட்சி மீண்டும் 1996இல் மலர்ந்த போது அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவும் பணி புத்துணர்வு பெற்று பணிகள் ஆரம்பமாயிற்று. அப்பணி பொறியாளருக்கு ஓர் சவாலானப் பணியாகும். சுமார் 22,000 சதுர அடி பரப்பளவுக் கொண்ட பாறையில் ஆர்ப்பரிக்கும் அலைகடலின் நடுவே, கம்பியோ, கான்கிரிட்டோ, பொருட்கள் தூக்கும் பாரம் தூக்கிகள்(Crane) வேலை செய்ய போதிய இடம் இல்லாமல் 133 அடி உயரத்துக்கு வெறும் கற்களாய் கட்டுமானம் கட்டுவது சிரமம்தானே.

4 ஏக்கர் பரப்பளவுக் கொண்ட விவேகானந்தர் பாறையில் வெறும் தரைத்தளம் கட்டுவதைக் காட்டிலும் கடினம்தானே. விவேகானந்தர் நினைவு மண்டபத்தை கட்டப் பயன்படுத்திய கற்களின் மொத்த எடை 6000 டன். 133 அடி (13 Floors அளவு) உயரத்தில் எழுப்பப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலையில் பயன்படுத்தப்பட்ட கற்களின் எடை சுமார் 7000 டன் ஆகும்.

அய்யன் திருவள்ளுவரின் சிலை மட்டும் 20 அடி உயரம் (2 Floors height) இதில் ஓர் செய்தி பொறியாளர்களுக்கு கூட எழாத சந்தேகம் கலைஞருக்கு வந்ததாம். வள்ளுவரின் தலையை எப்படி நிறுத்துவீர்கள் என கணபதி ஸ்தபதியிடம் கேட்டாராம். அவர் யோசித்து கொண்டிருக்கையில் "வாழை மரம் எப்படி வாழை குலையை தாங்கி நிற்கிறதோ அப்படி நிற்க வையுங்கள்" என கலைஞரே பதில் கூறினாராம். அதையே மூலமாக வைத்துக்கொண்டு கணபதி ஸ்தபதி, அரசுப் பொறியாளர்கள் துணையோடு 2000இல் அய்யன் திருவள்ளுவருக்கு வானுயர சிலை நிறுவும் பணி கலைஞரின் எண்ணப்படி முழுமையாக முடிக்கப்பட்டு, 2000ல் ஜனவரி 1ம்நாள், திறக்கப்பட்டு திராவிடத்தின் தனிப்பெரும் பெருமையை கலைஞர் நிலை நாட்டினார்.

கட்டடக் கலையில், ரோமானியக்கலை, கிலீஜீக்கலை, கொலீஜீந்தியன்கலை, திராவிடக்கலை என்று பல கலைகள் உள்ளன. அதில் வள்ளுவர் கோட்டம், அண்ணா அறிவாலயம் முதற்கொண்டு முக்கடல் சங்கமிக்கும் குமரிக்கடலில் அய்யன் திருவள்ளுவருக்கு 133 அடி உயரத்தில் சிலை அமைத்து திராவிடக்கலையை நிலை நாட்டிய கலைஞரின் மதிநுட்பம் உலகையே பிரமிக்க வைக்கிறது.





திராவிட இயக்கமும் திருக்குறள் எழுச்சியும்



முனைவர்
தி.தாமரைச்செல்வி

உலக அரங்கில் தமிழனை தலைநிமிரச் செய்த ஒப்பற்ற நூல் திருக்குறள். திராவிட இன மக்களுக்குத் தனித்த அடையாளத்தை தந்த நூல், பகுத்தறிவுச் சிந்தனையாளர்களைக் கற்கத் தூண்டிய நூல், திராவிடர்க்குரிய நூல் என்ற பெருமையை கொண்டது. இங்கு பாரதிதாசன் 'என் கருத்தில்' என்னும் தலைப்பில் அமைந்த கவிதையில் திருக்குறள் குறித்த தன் எண்ணங்களைப் பின்வருமாறு பாடுவது உடன் எண்ணத்தக்கது.

"வள்ளுவர்க்கு நிறமில்லை மதமும் இல்லை
மதங்கட்கு அப்பாலிருந்தே குறள்செய் துள்ளார்
உள்ளசிறு மதங்குறிக்கும் சொற்கள் கொண்டே
உவகையொடு தத்தமது மதத்தில் சேர்த்து
தெள்ளிவைத்த நீறிடுதல் திருமண் சார்த்தல்
செழும்பிண்டி அமர்ந்தானைச் சேர்ந்தா னென்னல்
தள்ளிவைத்த மரபென்று பேசல் யாவும்
சரியென்று தோன்றவில்லை என்கருத்தில்"

(பாரதிதாசன் கவிதைகள்)

மதங்கட்கு அப்பாலிருந்து செய்த குறளை திராவிட இயக்கத்தார் எதிரிகளை அழித்தொழிக்கும் (ஆரிய மதச் சார்புடைய நூல்கள்) போர்வாளாக தன் கையில் எடுக்கின்றனர்.

ஐரோப்பியர்கள் 16, 17, 18ஆம் நுற்றாண்டுகளில் இந்தியாவிற்கு வருகை தந்த பிறகு இந்திய வரலாறும், தமிழ் இலக்கியங்களும் மிகப்பெரும் மாற்றத்தை அடைந்தன. இவர்களின் வருகையினால் தமிழகத்திற்கு அச்சு இயந்திரங்கள் கிடைத்தன. பனை ஓலைகளில் முடங்கிக் கிடந்த தமிழ் இலக்கியங்கள் அச்சு வடிவம் பெற்றன. தமிழ் இலக்கிய நூல்களின் பதிப்பு வரலாறில் முதலில் அச்சு வடிவம் பெற்ற நூல் 'திருக்குறளே' ஆகும். 1812இல் மூலம் மட்டும் முதல் பதிப்பு நுலாக வெளிவந்தது.

தமிழகத்திற்கு வருகை தந்த ஐரோப்பிய பாதிரிமார்களும் திருக்குறளில் கூறப்பட்டுள்ள அற ஒழுக்கச் சிந்தனைகளில்



தம் கருத்தினை செலுத்தினர். அதன் விளைவாக ஐரோப்பிய மொழிகளில் மொழியாக்கம் செய்ய முன் வந்தனர். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் 20ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் தமிழக வரலாற்றில் சில நிகழ்வுகள் அரங்கேறின. காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். இளைஞராக இருந்த அண்ணாவின் மனதை இவ்வியக்கக் கொள்கைகள் ஈர்த்தன. இவ்வியக்கத்தில் இணைந்து தொண்டாற்றத் தொடங்கினார்.

அன்றைய சூழலில் 'திராவிடம்' என்றத் தனித்த அடையாளத்தை தென்னாட்டுப் பகுதிகளுக்கு ஐரோப்பியர்களின் ஆய்வின் மூலம் புதிய வெளிச்சம் கிடைத்தது. மனோன்மணியம் சுந்தரனார், அயோத்திதாசப் பண்டிதர் போன்றோர் இச்சொல்லின் ஆழத்தை, வலிமையை மக்கள் மத்தியில் எடுத்துரைத்தனர். இதன் பிறகு அண்ணாவின் முயற்சியால் சுயமரியாதை இயக்கம் திராவிட இயக்கமாகப் பெயர் மாற்றம் பெற்றது. தந்தை பெரியார் தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள ஆரியச் சார்புக் கருத்துக்களை எதிர்த்துப் பேசிவந்தார்.

அத்தகு சூழலில் தான் திருக்குறளின் பெருமையையும். அதன் உயர்வினையும் புரிந்து கொண்டு வள்ளுவரை "திராவிடப் பெரியார்" என்றும் "குறள் சாதி", "குறள் மதம்" என்றும் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மேடைகளில் பேசத் தொடங்கினார். அதற்கானத் தொடர் பயணத்தையும் தொடங்கினார்.

புலவர்களின் வீட்டுப் பரணைகளில் மறைந்துக் கிடந்த குறள் நூலை மக்கள் மன்றத்திற்கு கெண்டு வர பெரும் முயற்சி செய்தார். அப்போது தான் தன்னுடைய சொற்பொழிவுகளில் "திருக்குறள் பக்தி நூலல்ல கடவுளைக் காட்டும் எந்த விதமான மத நூல் அல்ல. உண்மையான ஒழுக்கத்தைப் போதிப்பதாக இருக்கிறது

குறள்" என்னும் கருத்துக்களைப் பேசினார்.

திருக்குறள் நூல் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று நினைத்துச் செயல்பட்டவர் பெரியார். "எட்டணாவுக்குத் திருக்குறள் (மூலநூல்) திராவிடன் பதிப்பகம் 14, மவுண்ட் ரோட், சென்னை என்னும் முகவரியில் கிடைக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. (குடி அரசு 24.12.1929) அதுபோன்றே, "1953 சனவரி வாக்கில் திருக்குறள் மலிவுப் பதிப்புக் கிடைக்கும்" என்று விளம்பரம் செய்தார் பெரியார்.

1953இல் "170 பக்கமுள்ள 'பாக்கெட் சைஸ்' திருக்குறள் புத்தகம் திராவிடன் அச்சகத்தில் பதிப்பித்தது. விலை அணா 6. தேவை உள்ளோர் முந்திக் கொள்ளவும்" என்னும் விளம்பரம் விடுதலை செயலகம் எனும் பெயரில் வெளியானது (விடுதலை 07.01.1953) பத்து நாள் சென்று குறிப்பு எனப்போட்டு விடுதலையில் வெளிவந்த விளம்பரம் புதிய செய்தியொன்றை அறிவித்தது.

நேற்று வரையில் விளம்பரத்தில் குறள் விலை 6 அணா என்று போடப்பட்டிருந்தது. பிறகு கொள்முதல் பார்த்ததில் விலையில் சிறிது குறைக்கலாம் என்று தெரிய வந்தது. ஆகவே விலையை இப்போது 4 அணாவாகக் குறைத்திருக்கிறோம். 5 அணாவுக்குத்தான் ஏஜெண்டுகள் விற்க வேண்டும்' என்பதே அது.

சான்றாண்மை நிரம்பிய இவ்விந்தைச் செய்தி, பெரியார் எத்துணை சிறந்த இதழாளர் என்பதாக நம்மை மலைக்க வைக்கிறது!"

திருக்குறள் மாநாடுகள் நடத்தல்:

தமிழக வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வாக குறிக்கத்தக்கது சென்னை பிராட்வேயில் பெரியார் நடத்திய திருக்குறள் மாநாடு. 1949ஆம் ஆண்டு சனவரி 15, 16ஆம் நாட்களில் நடைபெற்றது. இதனை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடான செந்தமிழ்ச் செல்வி பிப்ரவரி மாத இதழில் தலையங்கக் கட்டுரை வெளியிட்டது.

இம்மாநாட்டின் தொடர்ச்சியாகத் திருக்குறளுக்குப் புத்துரை எழுதுவதற்கான ஐவர் அடங்கிய புலவர் குழு ஒன்று உருவாக்கப்பெற்றது. அதில் சுயமரியாதைக் கொள்கைப் பற்றாளர் புலவர் குழந்தையும் ஒருவர். அவரின் சீரிய முயற்சியால் திருக்குறளுக்கு பகுத்தறிவு நோக்கோடு புத்துரை எழுதப்பெற்றது. அவ்வுரை புலவர் குழந்தை உரை என அழைக்கப் பெற்றது. 1949இல் வெளிவந்தது. இந்நூலே திருக்குறள் உரை வரலாற்றில் பல திருப்பங்களை உருவாக்கக் களம் அமைத்துத் தந்தது. தமிழகமெங்கும் திருக்குறள் இயக்கங்களும், மாநாடுகளும், நடைபெற்றன. ஏராளமான திருவள்ளுவர் கழகங்கள் தோற்றம் பெற்றன.

விருது நகரில் 03.04.1949 இல் சி.இலக்குவனார் தலைமையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் பெரியார் உட்பட பலர் உரை நிகழ்த்தினர். இதில் முன்மொழியப்பட்ட தீர்மானங்களின் வழியாகத் தமிழ்நாட்டில், பள்ளிக் கல்லூரிகளில் திருக்குறள் கட்டாயப் பாடமாக்கப்படுவதற்கான அரசாணை வெளியிடப்பட்டது. அன்றைய கல்வி அமைச்சர் அவிநாசிலிங்கச் செட்டியார் கல்வி அமைச்சராக இருந்த போது இவ்வாணைப் பிறப்பிக்கப்பட்டது. நடைமுறைக்கும் வந்தது.

இங்ஙனம் தந்தை பெரியார் அவர்கள் திருக்குறள் நெறியினை சொற்பொழிவு. இதழ்கள், அறிக்கைகள், மாநாடுகள் வழியாக மக்கள் மன்றத்திற்குக் கொண்டு சென்றார். திருக்குறளின் உயரிய கருத்துகள் பாமர மக்களுக்கும் சென்றடைய மிகப்பெரும் வழித்தடத்தை உருவாக்கிப் பெருமை பெற்றார்.

சி.என். அண்ணாதுரையும் குறளும்:

திராவிடக் கழகத்தின் பெரும்

தலைவர்களில் ஒருவர் அறிஞர் அண்ணா அவர்கள். பெரியாரின் அடியொற்றி அவரின் பாசறையில் வளர்ந்தவர். இவரும் திருக்குறள் பணியினை மேற்கொண்டார். திராவிட நாடு என்னும் இதழில் வெளி வந்த 'திருக்குறள் திருப்பணி' என்ற கட்டுரை குறிப்பிடத்தக்கதாகும்.

அண்ணாவின் உள்ளம் கவர்ந்த உயரிய நூல் திருக்குறளே ஆகும். திராவிட நாடு, முரசொலி இதழ்களில் திருக்குறளின் கருத்துக்களை எடுத்துரைத்தார். தன்னுடைய ஆட்சிக் காலத்தில் சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டினைச் சிறப்பாக நடத்தினார். (1968 சனவரி 3-10) அம்மாநாட்டினை ஒட்டி வள்ளுவர்க்கு காலத்தால் அழியாத சிறப்புகளை செய்தார். சென்னை மெரினாக் கடற்கரையில் வான்புகழ் வள்ளுவர்க்கு சிலை வைக்கப்பட்டது.

அம்மாநாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதியில், மாநாட்டு செலவு போக எஞ்சிய ரூபாய் ஒன்பது இலட்சத் தொகையை, சென்னை, அண்ணாமலை, மதுரை ஆகிய மூன்று தலையாய பல்கலைக் கழகங்களுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் நிதியை வைப்பு நிதியாக வைத்து "திருக்குறள் ஆய்வு இருக்கையை" உருவாக்கினார்.

அறிஞர் அண்ணாதுரையின் முயற்சியினாலும் கவிஞர் பாரதிதாசன் உறுதுணையுடன் ஓவியர் வேணுகோபால் சர்மா மூலம் திருவள்ளுவர்க்கு சமயச் சார்பற்ற வள்ளுவர் ஓவியம் தீட்டப்பெற்றது. பின்னர் நடுவணரசின் ஒப்புதல் பெற்று அஞ்சல் தலை (1960) வெளியிட்டனர். அவ்வுருவப் படமே அரசின் ஒப்புதல் பெற்று ஏற்றுக்கொள்ளப்பெற்றது. இன்று நாம் காணும் திருவள்ளுவர் உருவப்படம் அதுவே.

அண்ணாவின் உயரிய குறிக் கோள்களில் ஒன்று திருக்குறளை வாழ்வியல் நூல் ஆக்குவதே. திருவள்ளுவர்/ திருக்குறள் உலகப் பேராசான் என்பதை உலகிற்குச் சொன்னார். திருக்குறள் நூல் ஒவ்வொரு தமிழர் இல்லங்களிலும், உள்ளங்களிலும் என்றும் வாழ வேண்டும் என்றும் அயராது பாடுபட்டார்.

இங்ஙனம் பெரியார் பாசறையில் உருவான பேரறிஞர் அண்ணா அவர்கள் திருக்குறள் நெறி உலகில் பரவுவதற்குப் பெரும் பங்காற்றியுள்ளார் என்பது நாடறிந்த உண்மை.

கலைஞர் கருணாநிதியும் குறளும்:

திராவிடப் பாசறையில் பெரியாரிடம் பயிற்சிப் பெற்றவர். பின்னாளில் அறிஞர் அண்ணாவின் அரவணைப்பில் வளர்ந்தவர். தமிழகத்தில் திராவிட ஆட்சியை அண்ணாவின் மறைவிற்குப் பிறகு தலைமையேற்று வழி நடத்தியவர். தமிழக அரசியல் வரலாற்றில் தனக்கென்ற ஓரிடத்தைத் தக்க வைத்துக் கொண்டவர். இவரும் திராவிடக் கொள்கைகளில் பற்றுக் கொண்டு தன் முன்னைத் தலைவர்களின் அடியொற்றி தமிழகத்தில் திருக்குறள் நெறி பரப்பும் பணியில் பங்காற்றியவர். இவரது ஆட்சியில் திருவள்ளுவருக்கு/ திருக்குறளுக்கு செய்த சிறப்புகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

1967இல் தமிழகத்தில் அண்ணாவின் தலைமையில் ஆட்சி அமைந்தது. இவ்வமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சராக கருணாநிதி பொறுப்பேற்றார். அச்சமயம் தமிழகத்தில் உள்ள அனைத்து பொதுப்பணித்துறை அலுவலகங்களிலும் திருவள்ளுவர் உருவப்படம் வைப்பதற்கு ஆணை பிறப்பித்தார். இவரே, தமிழக அரசு பேருந்துகளில் வள்ளுவர் படமும் குறட்பா ஒன்றையும் இடம் பெயரச் செய்தார்.

- திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு நிறைவினை ஒட்டித் (1969) தமிழக தலைநகர் சென்னையில் மிகப்பெரிய வள்ளுவர் கோட்டம் ஒன்றினை எழுப்புவதற்குரிய விதை ஊன்றப்பட்டது.

நுங்கம்பாகத்தில் 1974ஆம் ஆண்டு அதற்கான கால்கோள் விழா நிடைபெற்றது. இப்பணி நிறைவு பெற்று 15.04.1976இல் அன்றைய மாண்புமிகு குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அவர்கள் திறந்து வைத்தார். மிக பிரமாண்டமான இக்கோட்டம் கலைஞருக்கு பெரும் புகழை தேடித் தந்தது.

- திருவள்ளுவருக்கு கற்கோட்டம் அமைத்ததோடு அல்லாமல் 'குறளோவியம்' என்ற சொற்கோட்டமும். குறள் நூலுக்கு 'கலைஞர் உரை' என்னும் பெயரில் உரை நூல் ஒன்றையும் வெளியிட்டார்.

பின்னர் கலைஞர் 2000 ஆண்டின் தொடக்கத்தில் குமரிமுனையில் விவேகானந்தர் மண்டபத்திற்கு அருகில் பிரமாண்டமான 133 அடி உயர வள்ளுவர் சிலை ஒன்றை நிறுவி, உலகமெங்கும் வியக்கும்வண்ணம் காலத்தால் அழியாத ஒரு பெரும் பணியைச் செய்தார்.

இந்நிகழ்வின் தொடர்ச்சியாக கலைஞரின் அரசியல் வாழ்வின் மற்றொரு மைல் கல் வள்ளுவர் சிலை திறப்பு விழாவின் சிறப்பு வெளியீடாக இரண்டு நூல்கள் தமிழ் வளர்ச்சித் துறையின் வெளியீடாக வெளியிடப்பட்டது. ஒன்று, மேனாள் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தியினால் தொகுத்த 'குறளமுதம்' என்ற நூலாகும். தமிழகத்தில் சிறந்த நாற்பது தமிழ் அறிஞர்களின் குறள் குறித்த ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகும். மற்றொன்று, தமிழகத்தில் உள்ள ஒன்பது நூலகங்களில் உள்ள குறள் நூல்களின் பட்டியல் அடங்கிய நூல் ஒன்று. இவ்விரண்டு பணிகளுமே காலத்தால் அழியாதவை ஆகும்.

திருவள்ளுவராண்டு 2050ஆம் ஆண்டின் நிறைவினை (2019) யாரும் சிந்தித்துப்பார்க்காத சூழலில், சென்னையில் பெரியாரிய உணர்வாளர்களின் கூட்டமைப்பினர் திருவள்ளுவர் 2050 - ஆய்வுகள்... அடைவுகள் என்னும் நூலினை 984 பக்கங்களில் (அரசரளவு- ராயல் சைசு) வெளியிட்டுள்ளனர். வெளியீடு பாவலரேறு தமிழ்க்களம், சென்னை.


இந்நூல் தொகுப்பு முயற்சியினால் நாம் அறிந்து கொள்வது பெரியார் கொள்கையில் பற்றுடைய கூட்டமைப்பினர் அவர் 'திராவிடர்க்குரிய நூல் திருக்குறள்' என்று முழுக்கமிட்டதை நினைவு கூர்ந்து இன்றைய தலைமுறையினர்க்கு கொண்டு சேர்க்கும் அறிய முயற்சியின் வெளிப்பாடே இவ் ஆவண நூல்.

இறுதியாக, தமிழ்ச் சமூகத்தில் மண்டிக் கிடந்த ஆரியச் சிந்தனைகளும், பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துக்களையும் தூக்கி எறிவதற்காக, தமிழ் இன மக்களை முன்னேற்றமடையச் செய்வதற்காக தொடங்கப்பெற்றது சுயமரியாதை இயக்கம்.

தமிழ்ச் சமூகத்தில் தான் காலூன்றுவதற்காக தமிழ் இலக்கியங்களில் ஒப்புயர்வற்ற இலக்கியமாகத் திகழும் திருக்குறளையும், அதன் ஆசிரியர் திருவள்ளுவரையும் தனக்குரிய கருவியாக எடுத்துக் கொண்டது. தம் கொள்கைகளை மக்கள் மன்றத்துக்கு கொண்டுச் செல்வதற்காக அந்நூலைப் பயன்படுத்திக்கொண்டனர். அதனால் ஏற்றமும் கண்டனர்.

திருக்குறள் நூலும் தமிழக மக்களிடையே செல்வாக்குப் பெற்ற இலக்கியமாகத் திகழ்ந்தது, திகழ்கிறது.





திருவள்ளுவரின் நூற்றாண்டுப் பயணம்



முனைவர்
பா. இளமாறன்

தொன்மைமிக்க தமிழ்ச்சமூகத்தின் தொல் அடையாளமாக அறக்கோட்பாடுகளின், ஒழுக்கவியலின் நெறிமுறைக் களஞ்சியமாகத் திருக்குறள் திகழ்கிறது. கால ஓட்டத்தில் எழுதப்பட்ட எத்தனையோ பனுவல்கள் மறைந்து போக, திருக்குறள் வடிவத்தாலும் உலகம் தழுவிய சிந்தனையாலும் சமயம் கடந்த அறவியலாலும் நூற்றாண்டுகள் கடந்து நிலைபேறடைந்துள்ளது.

திருக்குறள் எழுதப்பட்ட காலம் தொடங்கிப் பதினெட்டாம் நூற்றாண்டு வரை தொடர்ந்து பலநிலைகளில் பயணித்து வந்துள்ளது. திருக்குறளின் சிந்தனைகளைப் பின்வந்த இலக்கிய ஆசிரியர்கள் தழுவியும் உள்வாங்கியும் எடுத்துரைத்தனர். இலக்கண, இலக்கிய உரையாசிரியர்கள் தமது உரைகளின் பொருள் தெளிவிற்காக, மேல் விளக்கத்திற்காகத் திருக்குறளை மேற்கோள்களாகப் பயன்படுத்தினர். கால இடை வெளியில் திருக்குறளின் சொற்கள் ஏற்படுத்திய தடையினை நீக்கவும் தர்க்க ரீதியாக, கோட்பாட்டு ரீதியாகப் புரிந்து கொள்ளவும் உரையாசிரியர்கள் உரைகளை உருவாக்கினர். திருக்குறளின் பெருமைகளை, சிறப்புகளைத் திருவள்ளுவமாலை போன்ற சிறந்த நூல்களின் மூலம் அடுத்த தலைமுறைகள் உணர வழிவகை செய்தனர்.

இந்தத் தொடர்ச்சி தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்ற நூல்களுக்கு இருந்திருந்தாலும் பல்வேறு காரணங்களால் குறிப்பிட்ட காலங்களில் அவை வாசிப்பில் இருந்து பின்தள்ளப்பட்டிருந்தன. இதனை இலக்கணக்கொத்து நூலையும் உரையையும் எழுதிய சாமிநாத தேசிகரின் கூற்று வழியாகவும்[1], சி.வை. தாமோதரம் பிள்ளையின் கூற்று வழியாகவும்[2] அறியமுடிகிறது.

தொல்காப்பியத்திற்கும், சங்கஇலக்கியத்திற்கும் நேர்ந்த இந்த நிலை திருக்குறளுக்கு ஏற்படவில்லை. சாமிநாத தேசிகர் பதினெண்கீழ்க்கணக்கு படித்து வாழ்நாள் வீணாக்குவர் என்று கூறினாலும் திருக்குறளை அவர் கூறவில்லை என்பதை அவரின் வேறொரு கூற்று மூலமாக அறியமுடிகிறது.

"இலக்கணமாவது தொல்காப்பிய மொன்றுமே; செய்யுளாவது திருவள்ளுவ ரொன்றுமே; (திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், வடிவேலு செட்டியார், திருக்குறளின் மாட்சி என்னும் தலைப்பிலான முன்னுரை, 1919)

என்னும் கூற்று வழி 18ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு முறைமைகளில் திருக்குறள் தமிழ்ச்சமூக வரலாற்றின் வாசிப்பு மரபில் பின்தங்கிப் போகாமல் தொடர்ந்து நிலை பெற்றிருந்த தன்மையினை அறியமுடிகிறது. வைதீக அடிப்படையிலும் அவைதீக அடிப்படையிலும் சமய எல்லைகளைக் கடந்தும் எல்லோருக்கும் நெருக்கமான, புறந்தள்ள முடியாத பனுவலாகத் திருக்குறள் மாறிப் போயிருந்ததையும் 18ஆம் நூற்றாண்டு வரை கிடைக்கும் பல்வேறு தரவுகளின் வழியாக அறிந்துகொள்ள முடிகிறது. 18ஆம் நூற்றாண்டு வரை இத்தகைய சிறப்பான தன்மைகளில் எல்லாம் வாசிப்புக்குள்ளாகி வந்த திருக்குறள் பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சமூக வரலாற்றில் எத்தகைய வாசிப்பிற்குள்ளானது என்பதை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

திருக்குறள் முதல் மூலப் பதிப்பின் உருவாக்கப் பின்புலம்

தமிழின் பேரிலக்கியங்களில் முதன் முதலாக அச்சிடப்பட்டது, மொழிபெயர்க்கப் பட்டது என்னும் பெருமை திருக்குறளுக்கே கிடைத்திருக்கிறது. 1835ஆம் ஆண்டு முதலாக சுதேசிகள் அச்சுக்கூடம் வைத்துக் கொள்ளலாம் என்று கொண்டு வரப்பட்ட அச்சுப் பரவலாக்கச் சட்டத்திற்கு முன்பாகவே திருக்குறள் மூன்று, நான்கு பதிப்புகளைக் கண்டிருந்தது அதன் தனிச்சிறப்பு.

1812ஆம் ஆண்டு திருக்குறள் மூலபாடம் என்னும் தலைப்பில் திருநெல்வேலி அம்பலவாணக் கவிராயர் பதிப்பித்து[3] தொண்டை மண்டலம் சென்னைப் பட்டினத்தில் மலையப்ப பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால் மாசத் தினச் சரிதையின் அச்சுக் கூடம் வழியாகத் திருக்குறள் வெளிவந்தது. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் பதிப்புகள் முறைமைகள் குறித்து எவ்வித முறையியலும் உருவாகாத காலகட்டத்தில் உருவான இப்பதிப்பு பல்வேறு நெறிமுறைகளைக் கொண்டு பதிப்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. திருக்குறள், நாலடியார் ஆகியவற்றின் மூலபாடப்பதிப்பானது இலக்கண இலக்கிய ஆராய்ச்சியுடையவர்களால் பிழையற ஆராய்ந்து சுத்தபாடமாக வெளியிடப்பட்ட பதிப்பு, மரவெழுத்தால் அச்சடிக்கப்பட்ட பதிப்பு, பதிப்பு முகவுரை எழுதப்பட்ட பதிப்பு எனப் பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டு திகழ்கின்றது. திருநெல்வேலி அம்பலவாணக் கவிராயர் அவர்களால் எழுதப்பட்ட முன்னுரையில் இப்பதிப்பு உருவாக்கப்பட்ட முறை குறித்த தரவுகள் கிடைக்கின்றன. இதனை மா.சு. சம்பந்தன் அவர்கள் தமது நூலில் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்.

கற்றுணர்ந்த தமிழாசிரியர்களருமை யியற்றிய இலக்கண இலக்கியங் களாகிய - அரிய நூல்களெல்லாம் - இந்நாட்டில் - அச்சிற் பயிற்சியின்றிக் கையினாலெழுதிக் கொண்டு வருவதில்- எழுத்துக்கள் குறைந்தும் மிகுந்தும் மாறியுஞ் சொற்கடிரிந்தும் பொருள் வேறுபட்டும் பாடத்துக்குப் பாடம் ஒவ்வாது பிழைகள் மிகுதியுமுண்டாகின்றவால்- அவ்வாறு பிழைகளின்றிச் - சுத்த பாடமாக நிலைக்கும்படி அச்சிற்பதித்தலை வழங்குவிப்பதற்கு உத்தேசித்து - நூலாசிரியர்களுள் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரருளிச் செய்த அறம் பொருளின்ப மென்னும் முப்பாலையும் நுட்பமாக விளங்க உணர்த்துந் திருக்குறள் மூலபாடமும் - முனிவர்களருளிச் செய்த நீதிநூலாகிய நாலடி மூலபாடமும் - இப்பொத்தகச்சிற் பதிக்கப்பட்டன. இவை அச்சிற் பதிக்குமுன் தென்னாட்டில் பரம்பரை ஆதினங்களிலும் வித்துவ செனங்களிடத்திலுமுள்ள சுத்த பாடங்கள் பலவற்றிற்குமிணங்கப் பிழையற இலக்கண

விலக்கிய வாராய்ச்சி யுடையவர்களா லாராய்ந்து சுத்த பாடமாக்கப்பட்டன. (அச்சும் பதிப்பும், ப. 320, 321.) என்பதன் வழி அறியமுடிகிறது. முகப்புப் பக்கம் தொடங்கி நூல் முடியும் வரை ஓலைச் சுவடியில் இருப்பது போன்றே இந்தப் பதிப்பிலும் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியில்லை. நெடிற் கொம்பு சுழிக்கப்படவில்லை. குறியீடு, புள்ளி, சொற்களுக்கு இடையே இடைவெளி ஆகியவை விட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. சுத்த பாடத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட சுவடி விவரங்கள் முன்னுரையில் குறிப்பிடப்படவில்லை. பதிப்பு நெறிமுறைகள் வளர்ச்சிபெறாத காலத்தில் இவற்றைக் குறைகள் எனச் சுட்டமுடியாது. அப்படியொரு காலத்தில் இப்படி ஒரு சுத்தபாடப் பதிப்பு உருவாக்க வேண்டுமே என்று நினைத்த பெரியோர்கள் திருக்குறள் மீது எத்தகைய பற்றும் மதிப்பும் கொண்டிருந்தார்கள் என்பதையே மேற்சொல்லப்பட்ட முன்னுரை வழி அறியமுடிகிறது. அச்சுப் பரவலாக்கச் சட்டம் இல்லாத காலத்தில் இந்த மாச தினச்சரிதை அச்சுக்கூடம் மட்டும் திருக்குறள் பதிப்பு வெளியிட்டிருக்கிறது என்றால் ஆங்கிலேயர்களின் எவ்விதத் தடையும் திருக்குறளுக்கு இல்லை என்பதை உறுதிப்படுத்த முடிகிறது.

எல்லிஸ் துரையவர்களின் திருக்குறள் பற்றும் மொழிபெயர்ப்பும்

1812ஆம் ஆண்டு புனித ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியினை (சென்னைக் கல்விச் சங்கம்) நிறுவியதில் முதன்மையராக இருந்த எல்லிஸ் துரை அவர்கள் திருக்குறளின் அறத்துப்பாலில் 304 குறள்களை மொழிபெயர்ப்பு செய்து ஆங்கிலத்தில் உரையெழுதி அச்சிட்டுப் பதிப்பில் வெளிக்கொணர்ந்து இருந்தார். (இவர் வாழ்ந்த காலம் 1777 - 1819, இந்த மொழிபெயர்ப்பு 1812, 1816, 1819 ஆம் ஆண்டுகளில் வெளிவந்திருக்கலாம் என்று ஆய்வாளர் கூறுவர்) அதோடுமட்டுமல்லாமல் அன்றைய அரசாங்கத்தின் தங்கசாலையில் திருவள்ளுவர் உருவம் பொறித்த இரண்டு வராகன் தங்கநாணயங்களை வார்த்து திருவள்ளுவருக்கு ஓர் அழகிய வடிவத்தை உருவாக்கிய பெருமையை எல்லிஸ் அவர்கள் தக்கவைத்துக் கொண்டார். அந்த நாணயத்தில் இடம்பெற்றிருந்த ஓவியம் தான் திருவள்ளுவர் குறித்த ஓவிய மரபில் முதல் ஓவியமாகப் பதிவு பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நாணயத்தில் இடம்பெற்றிருந்த ஓவியம் திருவள்ளுவரைச் சமணராக முன்னிறுத்தியது. இந்த ஓவியம் குறித்து, வள்ளுவரின் இடக்கை 'சின்முத்திரை' கொண்டது என்று முதலில் கருதிய பேராசிரியர் மகாதேவன், இடக்கையில் சின்முத்திரை அமைவதில்லை என்றும், அது ஏட்டுச் சுவடியை ஏந்தியிருக்கும் பாவனையே என்றும் இப்பொழுது கருதுகிறார். மேலும் வள்ளுவர் காலடியில் இருப்பது முன்பு கருதியது போல் சிக்குப்பலகையல்ல என்றும் அது தீர்த்த பாத்திரமாகும் என்றும் முடிவு செய்துள்ளார். (ஆ. இரா. வேங்கடாசலபதி, எல்லீசன் என்றொரு அறிஞன், திராவிடச் சான்று நூலுக்கான முன்னுரை, ப. 13)

என்னும் கூற்றின் வழி அறியமுடிகிறது. எல்லிஸ் அவர்களுக்குத் திருக்குறள் ஓலைச் சுவடிகளை வழங்கியவர் அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் தாத்தா கந்தப்பனென்பவர்.

இது குறித்து ஆ.இரா. வேங்கடாசலபதி அவர்கள்,

ஜார்ஜ் ஆரிங்டன் என்ற வெள்ளை அதிகாரியிடம் பரிசாரகராகப் (பட்லர்) பணியாற்றிய 'எனது பாட்டனார்' கந்தப்பனென்பவர் ஓலைப்பிரதியிலிருந்து திருக்குறளையும், நாலடி நானூறையும் ஈஸ்ட் இன்டியா கம்பெனியார் காலத்தில் தமிழ்ச் சங்கங் கூட்டிவைத்த கனம் எலீஸ் துரையவர்களிடம் கொடுத்து அச்சுக்கு வெளிவந்திருக்கிறது. (மேலது, மி.ப.723) என்று குறிப்பிடுகின்றார். (எல்லீசன் என்றொரு அறிஞன், திராவிடச் சான்று நூலுக்கான முன்னுரை, ப. 14)

என்று அயோத்திதாசப் பண்டிதர் எடுத்துக்கூறிய மேற்கோளின் வழி விவரிக்கிறார். இந்த மூலச்சுவடியைக் கொண்டே எல்லிஸ் அவர்கள் தமது மொழிபெயர்ப்பைச் செய்திருக்கிறார் என்பதை அறிய முடிகிறது. எல்லிஸ் அவர்கள் திருக்குறள் மீதும் திருவள்ளுவர் மீதும் பெரும் பற்று கொண்டிருந்தார் என்பதை வேறு பல தரவுகளின் வழியாகவும் அறிய முடிகிறது. 1810ஆம் ஆண்டுகளில் சென்னையில் ஏற்பட்ட தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க எல்லிஸ் அவர்கள் பல கிணறுகளை வெட்டினார். அதில் 1818ஆம் ஆண்டில் இராயப்பேட்டை பெரிய பாளையத்தம்மன் கோயிலில் வெட்டப்பட்ட கிணற்றின் கைப்பிடிச் சுவரில் நீண்டதொரு கல்வெட்டைப் பதித்திருந்தார். அதில்,

நெடுநிலந் தாழ நிமிர்ந்திடு சென்னப்
பட்டணத் தெல்லீச னென்பவன் யானே...
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
திருக்குற டன்னிற் றிருவுளம் பற்றிய
"இருபுலனும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு"
என்பதின் பொருளை யென்னுளாய்ந்து...
சுப திநத்தி லிதனோ டிருபத்தேழு
துரவு கண்டு புண்யாஹவாசநம்
பண்ணுவித்தேன்.

(ச.கிருஷ்ணமூர்த்தி, (ப ர்) திருக்குறள் பழைய உரை, தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1993)

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எல்லிஸ் அவர்கள் இந்தத் திருக்குறளின் பொருளை ஆராய்ந்து உணர்ந்து கொண்டதன் வழி சென்னையிலிருந்த தண்ணீர் பிரச்சினையை 27 பெருங்கிணறுகள் வெட்டித் தந்து தீர்த்துள்ளார் என்பதை அறியமுடிகிறது. ஆங்கிலேயர் ஒருவரின் சிந்தனைக்குள்ளாக எந்த மொழி இலக்கியமோ சிந்தனைவாதிகளின் தத்துவமோ செய்யாத மாற்றத்தைத் திருவள்ளுவர் என்னும் சிந்தனாவாதியின் திருக்குறள் மட்டும் நின்று செய்துள்ளதன் வழி 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருக்குறள் செலுத்திய தாக்கத்தினை அறியமுடிகிறது. எல்லிஸ் அவர்கள் மறைந்த பிறகு திண்டுக்கல் கல்லறைக் கல்வெட்டில் உள்ள குறிப்பு[4] எல்லிஸ் அவர்களுக்குத் திருக்குறள் மீது இருந்த பற்றினையும், அவர் திருக்குறளுக்கு செய்த மொழிபெயர்ப்பினையும் எடுத்துரைக்கிறது. திருக்குறளுக்குப் பதிப்பு, ஆங்கில மொழி பெயர்ப்பு, ஆங்கில உரை, தொல்காப்பியம், புறநானூறு உள்ளிட்ட 63 தமிழ்நூல்களும் ஒட்டுமொத்தமாக 300 நூல்களின் மேற்கோள்களும், பரிமேலழகர், கவிராயர் திருக்குறள் உரை மேற்கோள்கள், மேற்கோள் காட்டப்பட்டவற்றின் மொழி பெயர்ப்பு, அச்சிலேறாத அனைத்து நூல்களையும் வாசித்த சுவடிப்பயிற்சி என அனைத்தையும் உள்ளடக்கிய ஆவணமாக எல்லிஸ் அவர்களின் இந்தப் மொழிபெயர்ப்புப் பதிப்பு[5] அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

எல்லிஸ் கட்டளையும் தாண்டவராயர் பதிப்பும்

1831ஆம் ஆண்டில் சென்னைக் கல்விச் சங்கத்தின் தமிழ்த் தலைமைப் புலவராக இருந்த தாண்டவராயர், முத்துச்சாமி இணைந்து சர்ச்சிமிசியோன் அச்சுக்கூடத்தின் வழியாக ஒரு பதிப்பை வெளியிட்டனர். திருவள்ளுவமாலை, திருக்குறள், நாலடியார் ஆகியமூன்றினையும் இணைத்துப் பதிப்பித்த முதல் பதிப்பு இப்பதிப்புதான் என்பதை அறியமுடிகிறது. இந்தப் பதிப்பின் முகப்பில் இந்தப் பதிப்பினைப் பதிப்பிக்கக் கட்டளையிட்டவர் என்று "சென்னைக் கல்விச்சங்கத் ததிபராகிய மேம்பட்ட துரையவர்கள்" என்ற குறிப்பு ஒன்று உள்ளது. இக்குறிப்பில் உள்ள மேம்பட்ட துரையவர்கள் என்பது எல்லிஸ் துரையவர்களைக் குறிப்பிடுவதாகவே கருதமுடிகிறது. ஆனால் இப்பதிப்பு வெளிவந்த ஆண்டில் எல்லிஸ் துரையவர்கள் (மறைவு - 1819) உயிருடன் இல்லை. எனவே எல்லிஸ் துரையவர்கள் முன்பே சொன்ன கட்டளையினை

மனதில் வைத்து இவர்கள் இப்பதிப்பினை வெளியிட்டதாக அறியமுடிகிறது.

எல்லிஸ் அவர்கள் திருக்குறளுக்கு மொழிபெயர்ப்பு ஒன்றை மட்டுமே செய்திருந்தார் என்றிருந்த பதிவு மட்டுமே இருந்ததிலிருந்து இந்தப் பதிப்பின் வழி எல்லிஸ் கட்டளையின்படி மேலும் ஒரு பதிப்பு வெளிவந்திருக்கிறது என்பது புதிய பதிவாக அமைகிறது.

இந்த மூன்று பதிப்புகளைத் தொடர்ந்து 19 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை திருக்குறளுக்கு மூலப்பதிப்புகள், உரைப்பதிப்புகள், புத்துரைப் பதிப்புகள், மொழி பெயர்ப்புப் பதிப்புகள் எனப் பல்வேறு வகையான பதிப்புகள் பல்வேறு தன்மைகளில் வெளிவந்தன. பதிப்புகளைப் போலவே உரைகளும், மொழிபெயர்ப்புகளும், திருக்குறள் சாரங்களும் சுருக்கங்களும் எனப் பன்முகப்பட்ட தளத்தில் வெளிவந்தன. இதன் விரிவஞ்சி ஒட்டுமொத்தமாகத் திருக்குறள் 19 ஆம் நூற்றாண்டில் அணுகப்பட்டதைப் பின்வரும் தரவுகளின் மூலம் தொகுத்துக்கொள்ள முடியும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பதிப்பு, உரை, மொழிபெயர்ப்பு வழியாகத் திருக்குறள் கருத்தாடல்கள்

திருக்குறளுக்குப் 18ஆம் நூற்றாண்டு வரை பத்து உரைகள் எழுதப்பட்டது குறித்த பழம்பாடல் இருந்தாலும் இன்றுவரை ஐந்து உரைகளே கிடைத்துள்ளன. இதில் 19ஆம் நூற்றாண்டில் பரிமேலழகர் உரை மட்டுமே முழுமையாகவும், தழுவப்பட்டும், சுருக்கப்பட்டும், இலக்கணவுரை எனக் குறிப்பிடப்பட்டும், விளக்கக் குறிப்புகளுடன் விரிவாக்கப்பட்டும் பல்வேறு வடிவங்களில் திரும்பத் திரும்ப அச்சிடப்பட்டுள்ளது. வேறு உரைகள் எவையும் இக்காலகட்டத்தில் அச்சில் நிலைபெறவில்லை.

திருக்குறளின் முதல் பதிப்புத் தொடங்கி 19ஆம் நூற்றாண்டு இறுதிவரை வெளிவந்த பெரும்பான்மையான பதிப்புகளில் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் என்றும் தமிழ் வேதம் என்றும் அடைமொழிகள் தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளன. 1840ஆம் ஆண்டு வெளிவந்த பரிமேலழகர் உரையும், இராமாநுசக் கவிராயர் வெள்ளுரையும் துறு ஐயர் மொழிபெயர்ப்பும் என்னும் பதிப்பிலேயே இவ்வித அடைமொழி இல்லாமல் குறள் என்றும் திருவள்ளுவர் என்றும் மட்டுமே இடம்பெற்றுள்ளது. 1847ஆம் ஆண்டு வெளிவந்த தொல்காப்பியத்தின் முதல் பதிப்பில் தொல்காப்பிய மகாரிஷி என்றே குறிப்பிடப் பட்டிருந்தது. இந்த மகாரிஷி என்னும் பின்னொட்டு அவரது பெயரிலிருந்து அடுத்தடுத்து வெளிவந்த பதிப்புகளில் காரண காரிய அடிப்படையில் இடம்பெறாமல் போயிற்று. ஆனால் திருவள்ளுவருக்கு 1950கள் வரை தெய்வப்புலமையும், நாயனாரும் தொடர்ந்து இடம்பெற்று வந்திருப்பது கவனிக்கத்தக்கது.

1831ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தாண்டவராயர் முதலியார் பதிப்பைத் தொடர்ந்து நாலடியார் நீக்கப்பட்டு திருவள்ளுவமாலை மட்டும் தொடர்ந்து திருக்குறளோடு இணைத்து அச்சிடப்பட்டது. அதற்குப் பிறகு 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை நாலடியார் பெரிதும் இணைத்து அச்சிடப்படவில்லை. திருவள்ளுவமாலை திருக்குறளின் பாயிரமாகத் திருக்குறளுக்கு முன்பாகவோ அல்லது பின்பாகவோ தொடர்ந்து இடம் பெற்று வந்துள்ளது. திருவள்ளுவமாலையோடு திருவள்ளுவ நாயனார் குறித்த சரித்திர மொன்றும் 1838ஆம் ஆண்டுத் தொடங்கித் தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளது. மிக நீண்டதாக வைதீக அடிப்படையில் எழுதப்பட்டிருந்த திருவள்ளுவர் குறித்த இந்தச் சரித்திரம் 20ஆம் நூற்றாண்டு ஆய்வாளர்களால் பல்வேறு விவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

19ஆம் நூற்றாண்டிற்கு முன்புவரை திருக்குறளைப் பல சமயத்தவர்கள் தத்தமக்கு உரிய பனுவலாகக் கருதி வாசித்திருந்தாலும் 19 ஆம்

நூற்றாண்டில் திருவள்ளுவரைப் பெரிதும் வைதீக சமயத்தின் பின்புலத்திலேயே பதிப்பாசிரியர்கள் கட்டமைத்து வந்துள்ளனர். அதனாலேயே திருக்குறளுக்குச் சமணராகிய மணக்குடவர் எழுதிய உரை கவனத்தில் கொள்ளப்படாமலே போனது.[6] இதனைத் திருவள்ளுவருக்குப் 19ஆம் நூற்றாண்டு தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை வரையப்பட்ட ஓவியங்களின் வழியாகவும் அறிந்து கொள்ளமுடிகிறது.[7]

19ஆம் நூற்றாண்டில் வெளிவந்த ஒரு சில பதிப்புகள் தவிர்த்து மற்ற அனைத்திலுமே காமத்துப்பால் என்றே இடம்பெற்றுள்ளது. ஆனால் காமத்துப்பாலின் முடிவில் பதிப்பாசிரியர்களில் பெரும்பாலானோர் குறிப்பொன்றை வழங்கியுள்ளனர். அதில்,

இக்காமத்துப் பாலுக்குக் காமத்தைக் குறித்துச் செம்பொருளாகச் சொல்லப்பட்ட இச்சிற்றின்பப் பொருளன்றி மோக்ஷத்தைக் குறித்துக் குறிப்புப் பொருளாகச் சொல்லப்பட்ட பேரின்பப் பொருளும் உண்டு. (களத்தூர் வேதகிரி முதலியார் பதிப்பு, 1850)

- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. திருக்குறளின் காமத்துப்பாலினை எவரொருவரும் சிற்றின்பமாக நினைத்துவிடக்கூடாது என்று கருதிய பதிப்பாசிரியர்களின் சிந்தனையாகவே இதனைக் கருதமுடிகிறது. 19ஆம் நூற்றாண்டில் திருக்குறளுக்கு வெளிவந்த பெரும்பாலான பதிப்புகளில் பதிப்பு முகவுரைகள் இடம்பெறவில்லை. இதனால் இந்தப் பதிப்புகள் எந்தச் சுவடிகளை மூலமாகக் கொண்டு அச்சிடப்பட்டன என்பதை அறிவதற்கில்லை. சில பதிப்புகளில் இடம்பெற்றுள்ள முகவுரைகளும் சுருக்கமாகவே எழுதப்பட்டுள்ளன. 1886ஆம் ஆண்டு வெளிவந்த ஜி.யூ.போப் அவர்களின் பதிப்பு முகவுரையே திருக்குறளுக்கு எழுதப்பட்ட முன்னுரையில் விரிவானதாகவும் பல்வேறு தரவுகளை உள்ளடக்கியதாகவும் அமைவது குறிப்பிடத்தக்கது.

திருக்குறள் அடியமைப்பின் யாப்பமைப்பைத் திருத்தம் செய்ததில் முன்னோடியாகத் திகழ்பவர் வீரமாமுனிவர். இவர் 1730ஆம் ஆண்டு எழுதிய செந்தமிழ் என்னும் நூலில் திருக்குறளை எதுகை அடிப்படையில் மூன்று வகைகளாகப் பகுத்துச் சான்றுகளுடன் விளக்குகிறார். இவரைத் தொடர்ந்தும் இவரைப் பின்பற்றியும் 19ஆம் நூற்றாண்டில் திருக்குறளை ஜி.யூ. போப் அவர்கள் தமது பதிப்பில் மாற்றம் செய்கிறார். அதில் முதலடி நான்கு சீர், இரண்டாமடி மூன்று சீராக என ஒரு வகையிலும் முதலடி மூன்று சீர் இரண்டாமடி நான்கு சீராக என மற்றொரு வகையிலும் பகுத்து எண்ணிக்கை அடிப்படையில் முன்னுரையில் குறிப்பிட்டுச் சென்றுள்ளார். திருவள்ளுவரின் குறள் வெண்பா அடி அடிப்படைக்கு முரணாக இந்த முறை இருந்ததால் எவரும் இந்த அமைப்பை ஒத்துக்கொள்ளவில்லை. ஆனாலும் ஜி.யூ. போப்பின் இந்தத் திருக்குறள் மொழிபெயர்ப்பு பதிப்பு தமிழ்ச்சூழலில் தவிர்க்கமுடியாத இடத்தினைப் பெற்று நிலை பெற்றுள்ளது.[8]

ஜி.யூ. போப்பைத் தொடர்ந்து 1889 ஆம் ஆண்டு திருக்குறளுக்கு சுகாத்தியர் என்பவர் எழுதிய உரைப் பதிப்பில் திருக்குறளின் இயல், அதிகாரம் என அனைத்தையும் மாற்றியதோடு திருக்குறளையே மாற்றியும் தமது பதிப்பினை வெளியிட்டார். இந்த மாற்றம் குறித்து அவர் தமது முன்னுரையில்,

திருவள்ளுவர் தெய்வப்புலவ ராதலாலும் அவர் தம்மையேற்றுக் கொள்ளாத சங்கத்தி லரங்கேற்றியிருத்தலாலும் இந்நூலய்த் தமிழ் வேதமென முன்னையோ ரேற்றிருத்தலாலும் அவரருளிய திருக்குறள்களில் எவ்வித வழுவும் இராவென்னும் நிச்சயத்தாலும் எதுகய்மோனய் வழுவாதிருந்த அநேகங் குறள்களுக்கு மொப்பமற்றய குறள்களுக்கு எதுகய்மோனய் திருத்தி சுத்த மூலங்கண்டு வெளியிடப்பட்டது. (முன்னுரை, பக். 4,5)

இவ்வாறு காரணங் கூறப்பட்டு திருத்தப்பட்ட இப்பதிப்பு அப்போதே

பலராலும் ஏற்றுக் கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டதோடு, பாண்டித்துரைத் தேவர் அவர்களால் அச்சிடப்பட்ட பிரதிகள் தீயிட்டு எரிக்கப்பட்டதாகவும் சான்றுகள் கிடைக்கின்றன.

தமிழ்க் கல்விப் புலத்தில் 19ஆம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய பெரும்பாலானோர் திருக்குறளைப் பதிப்பித்திருக்கின்றனர் என்பதன் வழி திருக்குறள் கல்விப் புலத்தில் எவ்வாறு தொழிற்பட்டிருந்தது எனபதை அறியமுடிகிறது. சென்னைக் கல்விச் சங்கத்தின் நிறுவனர் எல்லிஸ் துரையவர்கள், தலைமைத் தமிழ்ப் புலவர் தாண்டவராய முதலியார், மானேசர் முத்துச்சாமிப்பிள்ளை, விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர், இராமானுசக் கவிராயர், துறு, சகல சாஸ்திர சாலைத் தமிழ்த் தலைமைப் புலமை மழைவை மகாலிங்கையர், புதுவை பொன்னுசாமி முதலியார், யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலர், களத்தூர் வேதகிரி, திருமயிலை முருகேசர், காரல் கிரால், கல்விப்புலத்தின் பெரும் பொறுப்புகளில் இருந்த ஜி.யூ.போப், ஜான் லாசரஸ் என இன்னும் பலராலும் பதிப்பிக்கப்பட்டும், உரை வகுக்கப்பட்டும், மொழிபெயர்க்கப்பட்டும் திருக்குறள் கல்விப் புலங்களில் பெரும் வாசிப்பிற்குள்ளாக இருந்ததை அறியமுடிகிறது.

19ஆம் நூற்றாண்டுக் கல்விப்புலத்திலும் பொதுத்தளத்திலும் திருக்குறள் முந்தைய காலங்களில் இல்லாத அளவு பரவலாக வாசிக்கப்பட்டது என்பதை 1869ஆம் ஆண்டு வெளிவந்த "நூறு குறள்" என்னும் திருக்குறள் பதிப்பின் வழியாக அறியமுடிகிறது. முதல் பதிப்பே மூவாயிரம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு விற்பனைக்கு வெளிவந்ததைப் பதிப்பின் முகப்புப் பக்கமே தெரிவிக்கின்றது. சி.வை.தாமோதரம் போன்றோர் தமது பதிப்புரைகளில் நூல்கள் அச்சிட்டு விற்பனையாகாமல் அழிந்துபோவது குறித்து அதிகமாக எழுதிய காலகட்டத்தில் திருக்குறள் பல பதிப்புகளாக அச்சிடப்பட்டு ஆயிரக்கணக்காக விற்றுத் தீர்ந்திருப்பதை அறியமுடிகிறது.

தமிழின் முதன்மையான பல இலக்கண, இலக்கியங்கள் கண்டெடுக்கப்படாமலும், அச்சில் ஏறாமலும் இருந்த காலகட்டத்தில் திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகநாடுகளின் திசைகளில் பயணிக்கத் தொடங்கிவிட்டது. உலக நாடுகளிலிருந்து இங்கு வந்த முதன்மையான அறிஞர்கள் பலரின் சிந்தனைகளையும் தன்வயப்படுத்தி ஆளுமை செலுத்திய பனுவலாகத் திருக்குறள் திகழ்ந்திருப்பதை அறியமுடிகிறது.

நிறைவாக

18ஆம் நூற்றாண்டு வரை வெவ்வேறு முறைமைகளில் உள்வாங்கப்பட்ட திருக்குறள் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமூக வரலாற்றில் புதிய பாதைகளை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது. பதிப்புகள், உரைகள், மொழிபெயர்ப்புகள், புலமைசார் அறிஞர்கள், கல்விப்புலங்கள் எனத் திருக்குறளின் வாசிப்பு எல்லை விரிவடைந்து முந்தைய காலங்களை விடக் கூடுதல் செல்வாக்கோடு நிலைபெற்றிருந்தது.

தமிழின் முதன்மை இலக்கண, இலக்கியங்கள் பலவும் வெளிவருவதற்கு முன்பாகவே அச்சில் நிலைபெற்றமை, அச்சுப்பரவலாக்கச் சட்டம் வருவதற்கு முன்பாகவே பல பதிப்புகள் பெற்றமை, முதல் பதிப்பே சுத்த பாடமாக வெளியிடப்பட்டமை, எல்லீஸ் துரை போன்ற மேலை நாட்டுக் கல்வியாளர்களின் களப்பணிக்கு ஆதாரமாக, வாழ்வியல் வழிகாட்டியாகத் திகழ்ந்தமை, தமிழின் முதல் இலக்கியமாக உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டமை, கல்விப்புலங்களின் அறிஞர்கள் பலரின் சிந்தனைகளில் ஊடுருவியமை, எதிர்காலத் தலைமுறைகளின் வாழ்வியல் வழிகாட்டியாக முன்னிறுத்தியமை எனத்

திருக்குறள் பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதுமாக நிறைந்திருந்தது.

சமய அடிப்படையிலும், திருக்குறளைப் பதிப்பித்த முறைமையிலும், திருவள்ளுவரின் வரலாற்றை எழுதிய முறையிலும் பல்வேறு விவாதங்கள் நடைபெற்று இருந்தாலும், அவையெல்லாம் திருக்குறளின் வாசிப்பு மரபிற்கு ஏதோவொரு நிலையில் துணை செய்தே இருக்கின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் திருக்குறள் பதிப்புகள் வழியாகக் கற்பிதங்கள் செய்யப்பட்ட பலவும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே மாற்றம் பெறத் தொடங்கின. ஒவ்வொரு காலத்திலும் தோன்றும் சில புதிய கோட்பாடுகள் ஏதோ ஓர் அசைவியக்கத்தை அந்தக் காலகட்டச் சமூகத்தில் நிகழ்த்திவிட்டுத்தான் போகின்றன. அந்த வகையில் புதிதாக உருவாக்கம் பெற்ற தமிழ்த்தேசியம், திராவிடம் முதலான கோட்பாட்டுச் சிந்தனைகளும், சுதந்திரம், சமத்துவம் என்னும் வாழ்வியல் கோட்பாடுகளும், சமயம் கடந்த அறிஞர்களின் சிந்தனைகளும் திருவள்ளுவரின் திருக்குறள் வெளியீடுகளிலும், ஆய்வுகளிலும் பிரதிபலித்தன.

திருவள்ளுவ நாயனார் திருவள்ளுவர் ஆனார். தெய்வப்புலவர், தமிழ்வேதம் என்னும் அடைகள் பதிப்புகளின் முகப்பில் இல்லாமல் போயின. பரிமேலழகரோடு பிற உரையாசிரியர்களும் அச்சில் நிலைபெற்றனர். சிற்றின்பம், பேரின்பம் இல்லாமல் போனது. சைவ, சமண அடையாளக் குறியீடுகளுடன் வரையப்பட்ட திருவள்ளுவர் பொதுமைச் சமூகத்தின் குறியீடாக மாற்றப்பட்டு வரையப்பட்டதோடு சிலைகளாகவும் செதுக்கப்பட்டார். மொழி உச்சரிக்கத் தெரிந்த குழந்தை தொடங்கி மூப்படைந்த முதியவர் வரையிலும் படித்தவர் தொடங்கி எழுத்துக் கூட்டிப் படிக்காதவர் வரையிலும் என எல்லோரின் சிந்தனையிலும் திருவள்ளுவர் நிலைபெற்றார்.

தமிழர்கள் எல்லாரும் வள்ளுவர் குறளை உரையுடன் அறிந்து செய்தல் வேண்டும். 1330 குறளையும் பொருளுடன் உணர்ந்திலாத தமிழர் முற்றுந் துறந்த முனிவரே யாயினும், என்னைப் பெற்ற தந்தையே யாயினும் மக்களேயாயினும் யான் அவரைப் பூர்த்தியாக மதிப்பதுமில்லை; நேசிப்பதுமில்லை (வ.உ.சி. கர்மயோகி, மார்சு மாத இதழ், 1910)

என்னும் அளவிற்குத் திருக்குறள் ஆழ வேரூன்றியிருந்தது. அறிவியல் பெருவளர்ச்சி பெற்று மனித வாழ்வு பல்வேறு சிதறல்களுக்குள்ளாகிக் கொண்டிருக்கிற இன்றைய நவீன வாழ் முறையில் மனிதர்களின் அமைதிக்கும், ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்திற்கும் ஒளிவிளக்காய் திருவள்ளுவரின் திருக்குறள் திகழும் என்பதை இத்தனை நூற்றாண்டுகளாய்ப் பயணித்து தமிழ்ச் சமூகத்தை நேர்ப்படுத்திய அதன் வழிப்பாதைகளை வைத்தே அறியமுடியும்.

சான்றெண் விளக்கம்:

1. இறையனார் அகப்பொருள் முதலான இலக்கணங்களையும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், பட்டணத்துப்பிள்ளையார் பாடல் முதலிய இலக்கியங்களையும் ஓர் பொருளாக எண்ணாது நன்னூல், சின்னூல், அகப்பொருள், காரிகை, அலங்காரம் முதலிய இலக்கணங்களையும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, இராமன் கதை, நளன்கதை, அரிச்சந்திரன் கதை முதலிய இலக்கியங்களையும் ஓர் பொருளாக எண்ணி வாணாள் கழிப்பர். அவர் இவைகள் இருக்கவே அவைகளை விரும்புதல் என்னெனின், பாற்கடலுள் பிறந்து அதனுள் வாழும் மீன்கள் அப்பாலை விரும்பாது, வேறு பலவற்றை விரும்புதல் அவரது இயற்கை (சாமிநாத தேசிகர், இலக்கணக் கொத்து உரை).

2. வரதப்பமுதலியார் ஒருவரே பின்பு அதனைத் தந்தைபாற் கேட்டறிந்த வரென்பதனாலும், அது காரணமாக அவருக்குத் தொல்காப்பிய வரதப்ப முதலியாரென்று பெயர் வந்தமையானும், பின்பு அவர் காலத்திருந்த வித்துவான்கள் தமக்கு யாதாயினும் இலக்கண சமுசயம் நிகழ்ந்துழி அவரையே வினவி நிவாரணஞ் செய்தமையானும் நிச்சயிக்கலாம் (ப. தாமரைக்கண்ணன், சி.வை.தா. பதிப்புரை களின் தொகுப்பு, ப. 144).

3. ஆ.மணி, திருக்குறளின் முதற் பதிப்பாசிரியர் யார்?, இனம் இணைய இதழ், பிப்ரவரி, 2016.

4. ச.கிருஷ்ணமூர்த்தி, (ப ர்) திருக்குறள் பழைய உரை, தமிழ்நாஷ்டு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1993

5. இரா. வெங்கடேசன், எல்லீஸின் திருக்குறள் மொழிபெயர்ப்பு, புதிய புத்தகம் பேசுது, ஜூலை, 2014.

6. வ.உ.சி. அவர்கள்தான் திருக்குறளின் மணக்குடவர் உரையை முதன்முதலில் 1917 ஆம் ஆண்டு பதிப்பித்து வெளிக் கொணர்ந்தார்.


7. திருக்குறளுக்கு அச்சில் வெளிவந்த முதல் ஓவியமாக 1850ஆம் ஆண்டு களத்தூர் வேதகிரி முதலியார் பதிப்பில் இடம்பெற்றிருக்கக்கூடிய ஓவியத்தினையே சுட்டமுடிகிறது. சைவ அடையாளம் கொண்ட இந்த ஓவியம் தொடங்கிப் பல பதிப்புகளின் வழியாகக் கிடைக்கின்ற திருவள்ளுவர் படங்களும் சைவ சமயப் பின்புலத்திலேயே வரையப்பட்டுள்ளன.

8. ப. திருஞானசம்பந்தம், பதினெண் கீழ்க்கணக்கின் யாப்பமைதி, ப. 240.

பயன்பட்ட நூல்களும் நூலகங்களும்

1. அமரேசன்,க., பாத்திமா,சா., பிரகாஷ்,கு., தேவேந்திரன்,வி., (தொகுப்பாசிரியர்கள்) நொச்சி (அறியப்படாத தமிழ்ப் பதிப்பாளுமைகள், ஆய்வு ஆவணம்), பரிசல் வெளியீடு, 2014.
2. அரவிந்தன்,மு.வை. உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், மூ.ப.1995.
3. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, (9ஆம் நூ.முதல் 16 நூ. வரை) தி பார்க்கர், சென்னை, 2005.
4. இளமாறன், பா. இருநூற்றாண்டுப் பதிப்பு வரலாற்றில் தொல்காப்பியம், இராசகுணா பதிப்பகம், சென்னை, 2011.
5. சம்பந்தன், மா.சு., அச்சும் பதிப்பும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மறு. ப. 1997.
6. சரவணன்,ப., (பர்), சாமிநாதம் (உ.வே. சா.முன்னுரைகள்), காலச்சுவடு பதிப்பகம், 2004
7. சிவசூரியன், அ., திருக்குறள் உரை வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், 2001.
8. சுந்தரமூர்த்தி, இ., பதிப்பியல் சிந்தனைகள், சேகர் பதிப்பகம், சென்னை, 2005.
9. தாமரைச் செல்வி, தி., திருக்குறள் பதிப்பு வரலாறு, செயராம் பதிப்பகம், புதுச்சேரி, 2012.
10. தாமஸ் டிரவுட்மன், திராவிடச் சான்று, எல்லிஸும் திராவிட மொழிகளும், தமிழில் இராம சுந்தரம், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் காலச்சுவடு பதிப்பகம், 2007.
11. திருஞானசம்பந்தம்,ப., பதினெண்கீழ்க்கணக்கின் யாப்பமைதி, சந்தியா பதிப்பகம், 2015.
12. நஜ்மா,மு., கஸ்தூரி,மு., மோகனா,அ., காமாட்சி, மு., (தொகுப்பாசிரியர்கள்), காஞ்சி (ஐரோப்பிய அமெரிக்கத் தமிழ் அறிஞர்கள்), பரிசல் வெளியீடு, 2012.
13. பெருமாள் முருகன், பதிப்புகள் மறுபதிப்புகள், காலச்சுவடு பதிப்பகம், 2011.
14. மீனாட்சிசுந்தரம், கா., ஐரோப்பியர் தமிழ்ப்பணி, சென்னைப் பல்கலைக்கழகம், 2003.
15. வெங்கடேசன், இரா., தமிழ்ப் பதிப்பு வரலாற்றில் செவ்வியல் நூல்கள், இராசகுணா பதிப்பகம், 2011.
16. வேங்கடசாமி, மயிலை. சீனி., 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், சாரதா பதிப்பகம், சென்னை, 2003.
17. வேல்சாமி, பொ., பொற்காலங்களும் இருண்ட காலங்களும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2006.
18. பிரகாஷ், வெ. திருக்குறள் பன்முக வாசிப்பு, மாற்று வெளியீடு, 2009.
19. The internet Archive, archive.org., திருக்குறளின் அரிய பதிப்புகளை உள்ளடக்கிய இணைய ஆவணக் காப்பகம்.
20. சென்னை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் இருந்த திருக்குறள் அரிய பதிப்புகள்.





திருவள்ளுவர் திருவுருவ வரலாறு



எழுத்தாளர், இயக்குனர்
ஸ்ரீராம் சர்மா

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆழி சூழ் உலகைத் தன் தமிழ் கொண்டு அளந்தவர் திருவள்ளுவர். மானுடத்தைக் குறித்த அவரது நிதர்சனங்கள் அனைத்தும் கால தேச வர்தமானங்களைக் கடந்து வென்றவைகளாகப் பொலிகின்றன.

உலகில் அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட மதம் சாரா நூல் என்னும் பெருமை திருக்குறளுக்கு மட்டுமே உண்டு.

அன்றும் இன்றும் என்றும் உலகளாவிய மனிதர்களை எடைபோட வல்ல 1330 திருக்குறள்களை படைத்த அந்த திருவள்ளுவர் எப்படி இருந்திருப்பார் என்ற சிந்தனை அந்த நாட்களில் பலருக்குள் எழுந்திருக்கிறது. தங்களின் சிந்தனை வழியே திருவள்ளுவருக்கு உருவம் கொடுக்கலாயினர்.

திருவள்ளுவர் கொண்டாடியது மானுடத்தை மட்டுமே. அவர் சொல்ல வந்த சேதி எல்லோருக்கும் நான் பொதுவானவன் என்பதே.

அப்படியென்றால், உலகப் பொதுமறை தந்தவரின் திருவுருவம் உலகளாவியப் பொது உருவமாகத்தானே இருக்க முடியும் என்று சமதர்ம நோக்கில் சிந்தித்தவர் "ஓவியப் பெருந்தகை" கே.ஆர். வேணுகோபால் சர்மா அவர்கள்.

ஏறத்தாழ 40 ஆண்டுகள் தொடர்ந்து திருவள்ளுவர் திருவுருவம் குறித்த சிந்தனையோட்டத்திலேயே இருந்திருக்கிறார். தன் வாழ்வை மைசூர் சமஸ்தானத்துக் கலைஞராகத் துவங்கியவர் 1950 களில் தன்னுடைய க்ரீன் பிக்சர்ஸ் நிறுவனத்தின் வழியே மூன்று திரைப்படங்களை தயாரித்து இயக்கியிருக்கிறார் என்பது சுவையான துணைச் செய்தி.

அவ்வப்போது திருவள்ளுவரை வரைந்து பார்ப்பதும், தனக்கே நிறைவு வராத நிலையில் அதனை விட்டுவிட்டு வேறொரு வடிவத்தை முயன்று பார்ப்பதுமாகவே இருந்திருக்கிறார்.

சொல்லப் போனால் திருவள்ளுவரின் மற்ற அங்க அவயங்களை அவரால் வரைய முடிந்து விட்டது. ஆனால்,





திருவள்ளுவரின் முகம் அமையத்தான் அவருக்கு நீண்ட நெடுங்காலம் தேவைப்பட்டிருக்கிறது.

இன்று தமிழ் கூறு நல்லுலகமெங்கும் பரவி நிலைத்திருக்கும் அவர் வரைந்த அந்த திருவள்ளுவர் திருமுகத்தைப் பாருங்கள்.

அவர் இந்தியரா, கிரேக்கரா, அமேரிக்கரா, ஐரோப்பியரா, மங்கோலியரா பௌத்த துறவியா, சீனத்து ஞானியா என எத்தனைக் கேட்டாலும் அத்தனைக்கும் "ஆம்..." என்பது போலவே ஒரு உலகளாவிய முகமாக பொதுத் தோற்றம் கொண்டதாகவே திருவள்ளுவர் திருமுகம் நமக்குத் தெரிகிறது.

"அப்படி ஓர் பொதுத் தோற்றத்தை அமைப்பது எளிதல்ல. அது வித்தை கடந்த விஷயமாகும். ஓயாத தவத்தின் பால்தான் அது அமையும்" என்றார் திருவள்ளுவர் வெளியீட்டு விழாவில் பேசிய தமிழறிஞர் மு.வ. அவர்கள்.

திருவள்ளுவர் வெளியீட்டு விழாவில் பேசிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்...

"நண்பர் வேணுகோபாலர் நினைத் திருந்தால் மாட மாளிகைகளை ஒய்யாரக் காட்சிகளைத் தீட்டியிருக்கலாம். ஆனால், அவர் முழு மூச்சாக இருந்து திருவள்ளுவரை நமக்கு தீட்டிக் கொடுத்திருக்கிறார். தமிழகம் உள்ளவரை திருக்குறள், திருவள்ளுவர், திரு. வேணுகோபால் சர்மா எனும் இந்த மூன்று பெயர்களும் என்றும் நிலைத்திருக்கும்" என வாழ்த்திப் பேசினார்.

திருவள்ளுவர் திருவுருவ வெளியீட்டு விழாவில் பேசும் போது கவியரசர் கண்ணதாசன்...

"உலகின் புகழ் பெற்ற எந்த ஒரு ஓவியரின் படைப்பிலும் அவர் சார்ந்த மண்ணின் மணம் வீசிவிடும். இந்த ஓவியத்தை வரைந்தவர் இந்த இனத்தை




அல்லது இந்த நாட்டை சேர்ந்தவராகத்தான் இருக்கக் கூடும் என்னும் முடிவுக்கு நம்மால் வந்துவிட முடியும். ஆனால், திருவள்ளுவர் திருவுருவத்தினை வைத்து அதை வரைந்த வேணுகோபால சர்மா எந்த நாட்டினர் என்பதை கூறிவிடுதல் கடினம். இப்படி ஒரு பொது முகத்தை எப்படி சமைத்தார் என்று நம்மால் எண்ணிப் பார்க்க முடியவில்லை" என்றார்.

ஓவியப் பெருந்தகை கே.ஆர். வேணுகோபால் சர்மா அவர்களால் வரையப்பட்ட திருவள்ளுவர் திருவுருவம் இந்திய சிந்தனையும், ஐரோப்பிய உபகரணங்களும் கை கோர்த்துக் கொண்ட அழகிய அழியாப் படைப்பு என்றே சொல்லி விடலாம்.

திருவள்ளுவர் திருவுருவத்தை வரைய வேணுகோபால் சர்மா அவர்கள் பயன்படுத்திய விலையுயர்ந்த தூரிகைகள், வர்ணங்கள், ஓவியக் கலைக்கு உதவும் நுண்ணிய உபகரணங்கள் அனைத்தும் இங்கிலாந்து ஜெர்மன் போன்ற ஐரோப்பிய நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்டவைகளாகும். அவற்றின் மீதங்கள் இன்னமும் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

திருவள்ளுவர் திருவுருவத்துக்கான ஓவியப் பெருந்தகையின் தீராத் தேடல் முடிந்தது மாயவரம் மதீனா லாட்ஜில்தான் என்னும் சுவையான வரலாற்று தகவலை நமக்கு சொல்கிறார் அன்று ஓவியப்பெருந்தகைக்கு உதவியாக இருந்து இன்றும் நம்மிடையே நிறைந்து வாழும் பெரியவர் மாயவரம் பதி ஐயா அவர்கள். .

அதன் பின், பேரறிஞர்கள் தெ.பொ.மீனாட்சி சுந்தரம், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர் தலைமையில் தஞ்சை தமிழ்ச்சங்கத்திலும் பின்பு புதுச்சேரி தமிழ்ச்சங்கத்திலும்



சபை நிறைந்த புலவர்கள் மத்தியில் கே.ஆர்.வேணுகோபால் சர்மா அவர்களால் கண்டடையப்பட்ட திருவள்ளுவர் திருவுருவம் சமர்ப்பிக்கப்பட்டு அனைத்து அறிஞர்களின் ஏகோபித்த வாழ்த்தையும் ஆதரவையும் பெற்றது.

பெரியவர் பக்தவத்சலம், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர், முத்தமிழறிஞர் கலைஞர், பாவேந்தர், டாக்டர் பி. சுப்பராயன், கிருபானந்த வாரியார், கவியரசு கண்ணதாசன், குமுதம் ஆசிரியர் எஸ்.ஏ.பி, கா.சா. சுப்பாராவ், சாண்டில்யன், கல்கி, ஈ.வெ.கி. சம்பத், ம.பொ.சி,

பழம்பெருந்தலைவர் தோழர் ஜீவா, கக்கன், பேராசிரியர் க. அன்பழகன், நாவலர், பன்மொழிப்புலவர் அலமேலு அப்பாதுரையார், ஐ.நா. சபை அதிகாரி மோனிகா ஃபெல்டன் எனப் பல்துறை அறிஞர் பெருமக்களும்

சென்னையிலிருந்த ஓவியப் பெருந்தகையின் இல்லத்துக்கு வருகை தந்து திருவள்ளுவரைக் கண்டு மெய்சிலிர்த்து உரையாற்றினார்கள். அந்த ஒலி நாடாக்கள் அனைத்தும் சென்னை ரோசா முத்தையா நூலகத்தாரால் டிஜிட்டலைஸ் செய்யப்பட்டு பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

ஏன் திருவள்ளுவர் திருவுருவம் இவ்வாறு அமைந்திருக்கின்றது என்பதை விளக்கும்வகையில் கே.ஆர்.வேணுகோபால் சர்மா அவர்கள் எழுதிய "திருவள்ளுவர் திருவுருவப்பட விளக்கம்" என்னும் சிறு நூலை பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டார்.





ஆண்டு அது 1959. அன்றைய ஒன்றிய மாநில அரசாங்கங்கள் கே.ஆர். வேணுகோபால் சர்மா வரைந்த திருவள்ளுவர் திருவுருவத்தை அங்கீகரிக்கப்பட்ட திருவள்ளுவர் ஓவியமாக அறிவித்தன.

அந்தத் திருவள்ளுவர் திருவுருவத்தை தமிழ்நாடு சட்டசபையில் நடு நாயகமாக வைக்க வேண்டும் என முதல் குரல் கொடுத்தவர் போற்றுதலுக்குரிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அதன்பின் 1964 ல் தமிழக சட்டசபையில் பெரியவர் பக்தவத்சலம் அவர்களது ஆட்சியில் அன்றைய துணை ஜனாதிபதி திருமிகு ஜாகீர் உசேன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

1967 ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்த மூன்றே மாதங்களில் அரசாங்க ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டு (G.O.M.S. 1193) அதன்படி தமிழ்நாட்டில் இருக்கும் அரசாங்க அலுவலகங்கள், போலீஸ் நிலையங்கள், நீதி மன்றங்கள், பள்ளி கல்லூரிகள், போக்குவரத்து ஊர்திகள் என சகலவற்றிலும் அங்கீகரிக் கப்பட்ட அந்த திருவள்ளுவர் திருவுருவம் பொருத்தப்பட்டது.

அதன் வழியே "இது குறள் வழி நடக்கும் ஆட்சி" எனும் நற்செய்தி மக்கள் மனதில் நிலை நிறுத்தப்பட்டது.

1989ல் முத்தமிழறிஞர் கலைஞரது ஆட்சியில் கே.ஆர். வேணுகோபால் சர்மா அவர்கள் வரைந்த திருவள்ளுவர் திருவுருவ ஓவியம் நாட்டுடைமை ஆக்கப்பட்டது. நாட்டுடைமை ஆக்கப்பட்ட ஒரே ஓவியம் எனும் பெருமையை திருவள்ளுவர் திருவுருவம் கொண்டது.

இடையில் சில காலங்கள் திருவள்ளுவர் திருவுருவம் காணாமலடிக்கப்பட்டு விட்டது.

ஆனால், நமது இன்றைய முதல்வர் போற்றுதலுக்குரிய மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் பதவி ஏற்ற சில மாதங்களிலேயே அண்ணா, கலைஞர் காலம் போலவே எங்கெணும் திருவள்ளுவர் திருவுருவம் இடம் பெற வேண்டும் எனும் உத்தரவினைப் பிறப்பித்தார்.

நமது முதல்வரின் அந்த வரலாற்று உத்தரவின் படி மீண்டும் எங்கெணும் திருவள்ளுவரின் திருவுருவம் இடம்பெற்று ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.

குறள் வழி ஆட்சியும் தொடர்கிறது!



இன்பம்







சமுதாயப் புரட்சி செய்யும் தத்துவப் பெருஞ்ஞானி மகத்துவம் மிகக் கொண்ட மனிதகுலத் திருவிளக்கு

31.12.1999 அன்று திருவள்ளுவர்
சிலைத்திறப்பு விழாக் கவியரங்கில் மாண்புமிகு
முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமைக் கவிதை.


திருவள்



அடலேறு மொழித் தமிழே - இன்பக்
கடலேறு தனித் தமிழே - சோலை
மடலேறு சுவைத் தமிழே - நீ என்
உடலேறி உயிரேறி வாழ்விக்கின்றாய்,
வணங்குகின்றேன்.
பேரன்பு கொண்டோரே
பெரியோரே
பெற்ற தாய்மாரே
நல் இளஞ் சிங்கங்காள்
பேராசிரியப் பெருந்தகையீர்
பேரவையின் அருந்தலைவ
ஒளிமிகுந்த கருத்தளித்து எமை மகிழ்விக்க
வெளிநாட்டிலிருந்தும் வந்துள்ள உறவினர்காள்

அமைச்சர் பெருமக்காள்
அவை சிறக்க வந்திருக்கும்.
ஆன்றோரே, சான்றோரே,
நமை வளைத்திருக்கும் முக்கடலின்
வயிற்றுக்குள் இருக்கின்ற முத்தைப் போல்
வாரி வழங்கத் தமிழ்க் கவிதை
வடித்தெடுத்து வந்துள்ள பாவலர்காள்!

கடற்கரையின் மென்காற்றும், நும்
கவிதையெனும் இளங்காற்றும் - எம்
துன்பமெல்லாம் நொடியில் ஆற்றும்
தூய தமிழ்ப் புகழைச் சாற்றும்
குருட்டு மதியை மாற்றும்
குறளைப் போற்றும் -
குவலயத்தின் மத்தியிலே
குன்றா விளக்கை ஏற்றும்
அறம் பொருள் இன்பமெனும்
அறிவுப் பதாகைதனைப் பிடிப்போம்
ஆதி பகவன் மைந்தன் ஆணை வழி நடப்போம்
அதைத் தடுக்க முனைவோரின் செயல்களையே முடிப்போம்.

இலக்கணத்தை எதிர்க்கும் எண்ணம் என்பால் இல்லை
இலக்கணம்தான் என்னோடு ஊடல் செய்யும் அன்புக்கிள்ளை
ஒருபாட்டும் இலக்கணமுடன் ஒருப்பட்டு வராவிடினும் நான்
தரும்பாட்டு தமிழ் உணர்வைக் கொல்லாதெனும் துணிவுடனே
கரும்பாட்டும் ஆலையிலே வேம்பொன்று புகுந்தது போல்
கவிக்கூட்ட மேடையிலே வீரமாய்ப் புகுந்துவிட்டேன் - தென்றல்

அரும்பாட்டும் பூங்காவில் உங்கள்
அரும் பாட்டு, தமிழ் மாலையிலே பூவாம்
அந்தப் பூவாடும்
கரும்பாட்டம் இருக்கின்றீர் நீங்கள், நானோ
துரும்பாட்டம் இருக்கின்றேன் உம்மிடையே
எறும்பு ஆட்டும் இரும்புத் தூண் என்றால், என்
வெறும் பாட்டும் வென்று விடும் நும்மை

சோலைக்குயில் பாடும்
கோலமயில் ஆடும்



ஞானக்கிளி
மோனத் த
வானத் திரு
வண்ணப்பெ
வானவில்லு
காலைக்கதி
நீலக் கடலே
நித்தம் தவ
குமரி எல்ல
குதிகுதித்து
வான் முட்டு
வள்ளுவர்க்
வருக நீவிர்
வாஞ்சையுட

குமரிக்கடல்
குன்றங்கள் [illegible]
அய்யன் வள்ளுவனின் அடிதொடர சூளுரைப்பீர்...
உய்ய வழி வேறில்லை குறளைத் தோள் சுமப்பீர்.
ஓவியம் வரைந்தேன் குறட்பாக்களுக்கு - உரைக்
காவியம் வரைந்தேன் திருக்குறள் முழுமைக்கும்.
இன்னும் இன்னும் எண்ணிப் பார்க்கின்றேன்
என்ன இல்லை எதை எழுத விட்டு விட்டான் அய்யன் என்று
கன்னத்தில் கை வைத்துச் சிந்திக்கின்றேன்.
அன்னத்தின் தூவியிலே கறுப்பின்
சின்னத்தைக் காணப்போமோ?
அதனால் தான் குறையிலாக் குறள் என்றும்
அணுக்கூட கறையில்லா மறை என்றும் கூறுகின்றோம்...
சமத்துவப் பேரொளியாய்
சமுதாயப் புரட்சி செய்யும்
தத்துவப் பெரு ஞானியாய்
மகத்துவம் மிகக் கொண்ட மனித குலத் திருவிளக்காய்
பூமிக்கே புனித உரை வகுத்தளித்து
புத்தெழுச்சி பெற்றுத் தந்த புனிதனவன்.
அருளாதாரம் வழங்கி அனைத்துயிரும் போற்றியவன் - அரசியல்
பொருளாதாரம் என ஆய்வுரையை ஆற்றியவன் - ஆளும்
கலாச்சாரம் எதுவெனக் காட்டியவன்! வள்ளுவன்!
வள்ளுவன்! வள்ளுவன்!

அறத்துப் பால் முப்பத்திஎட்டு அதிகாரம்
அதுதான் இங்கே வள்ளுவன் சிலைக்கு அடிபீடம்
அதிகாரத்திற்கொரு குறளை அடியேன் எடுத்து
அதி - காரயின்றி படைக்கின்றேன் தொகுத்து!
ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனின்
உயர் அடியொற்றி நடப்பவரை
வாட்டும் தொல்லை வருத்துவதில்லையெனக் குறளில்
காட்டுவதும் வள்ளுவன் தானே!

(தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது!)

மழைதான் அமிழ்தமென்றும் உயிர் வாழ
மருந்தும் அதுவே என்றும் மொழிவதும் குறட்பா தானே!

(வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று)

ஐம்புலப் பசியை அடக்க முடியாமல்
அவதிப்பட்டான் இந்திரன் என்று
பொல்லாதார்க்கும் புலன் அடக்கப்
புத்தியைத் தீட்டுவதும் வள்ளுவம்தானே!

(ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி)

மனத்தூய்மைதான் நல் அறமென்றும்
மற்றவை எல்லாம் மன்பதையில்
ஆரவார கோஷங்களே என்றும்
அறிவுறுத்துவதும் குறள் நெறி தானே!

(மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற)

பளிங்கு எனப்படுமே
பழிப்பதற்கு இடமில்லா மனைமாட்சி
இல்லறம் என்பது அதுவே என்று
இசைப்பதும் இனிய குறள் தானே!

(அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று)

பெய் எனச் சொன்னதும் பெய்யும் மழையாய்
பெண் குலம் அடிமைப்படுவதை விடுத்து
மெய்யுரை கண்டு மெல்லியல் நிமிர்ந்திட
அய்யன் படைத்தது அருங்குறள் என்போம்...

(தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை)



ஏழேழு தலைமுறைக்கும்
எந்தத் தீமையும் தீண்டாதிருக்க
சீரோடு புதல்வரை வளர்த்தல் நன்றா
செப்பிடும் உரையும் செந்நூல் குறள்

(எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிர
பண்புடை மக்கட் பெறின்)

என்பும் பிறர்க்கு ஈவார் அன்புடையார்
எல்லாம் தமக்கென்பார் அன்பில்லார்
குணக்கேடர் செயல் தோலுரித்து
கொடையுள்ளம் போற்றுவதும் குறள்வழி தானே!

(அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு)

விருந்தினர்க்கே முதலிடமாம் மிஞ்சியதே வீட்டுக்கென்போன்
விதையைக் கூட நிலத்துக்கன்றி விருந்துக்கே சேர்த்தளிப்பான்
விரிந்து பரந்தவன் மனமென்று
தெளிந்து சொல்வதும் திருக்குறள் தானே!

(வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிக்சில் மிசைவான் புலம்)

பிஞ்சும் காய்களும் ஒரு மரத்தில் குலுங்கிட
பிறிதோர் மரத்தில் கனிக்குலை தொங்கும்
கனி விடுத்துக் காய் பறித்தவனைக் கண்டு
இனிய உளவாக இன்னாத கூறுவார்க்கு
உவமையாக்கியதும் இந்த உலக மறை தானே!

(இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று)

என்றோ செய்த நன்மையை நினைத்து - அவன்
இன்று விளைத்த தீமையை மறந்திடுக என்பதும்

செய்நன்றி அறிதற்கு இலக்கணம் எனச்
செப்பியவரும் செந்நாப்போதார் தானே!

(செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது)

எச்சத்தால் காணலாம் தக்கார் தகவிலரை
என்பதற்கு அவர்தம் மக்களைச் சுட்டின் பொருந்தாதென்று
உச்சத்தில் அவர் கொண்டிருந்த புகழைத்தான் எச்சமென
உரைத்திட்ட உண்மையின் புதையல் குறளேயன்றோ!

(தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்)

"நாகாக்க என்றானே; நாயகன் வள்ளுவன் - அதை
நடுத்தெருவில் போவோர் வருவோர்க்கெல்லாம் சொன்னானா?
துடுக்காக இப்படியொரு வினா எழுப்பியவரை மன்றில்
மடக்கிப் போட்டார் அண்ணா நாக்கு இருப்பவர்க்கு
மட்டும் தான் சொன்னான் என்று



(யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு)

இழிந்த குடியென்று ஒழுக்கம் ஒழிந்ததையும்
சிறந்த குடியென்று ஒழுக்கத்தில் உயர்ந்ததையும்
இரண்டையும் ஒப்பிட்டுக் காட்டியதும்
இரு நிலை உணர்த்தியதும் இந்தப் பொய்யா மொழியன்றோ!

(ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்)

வேறொருவர் மனைவியை நோக்குங்கால்
விழி நோக்கு இழி நோக்கு நோக்காதார்
விரிகடல் ஒழுக்கத்தார் வரிசையிலே
வீற்றிருப்பார் என விளம்புவதும் இந்த வித்தகர் தானே!

(பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ ஆன்ற வொழுக்கு)

நாள்தோறும் தன் தலையில் குப்பை கொட்டிய பெண் ஒருத்தி
நலிவுற்றுப் படுத்திருந்த சேதி கேட்டு - அவள்
நலம் கேட்க ஓடினாராம் நபிகள் நாயகம்!
சிலுவையில் அறைந்த போதும் சிரித்த முகம் இயேசுவுக்கு!

அடக்குமுறை அடுக்கடுக்காய் சகித்துக் கொண்டார் அப்பர் பெருமான்!
அதனால்தான்
அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலையென்றான் என் அய்யன்.

(அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை)

எட்டுத் தலைப்பில் பாட இருக்கின்ற கவிஞர்க்குள்
போட்டியிருக்க வேண்டும் பொறாமை தலைகாட்டக் கூடாது.
காட்டாதென இந்தக் கலைஞனும் அறிவேன்
அழுக்காறு என என்பதென்ன? அது அயலூர்ப் பொருளல்ல;
அது நம் உள்ளத்தின் உற்பத்தி
உடலோடு பிறந்த தீயசக்தி
அப்பாவி நம்மை ஒழிப்பதற்குள்
அப்பாவியாய் இராமல் நாம் அவனை ஒழித்திடுவோம்.
அய்யன் வள்ளுவனின் ஆணையாம் இஃது - இம்
மெய்யுரை கேட்பின் மேன்மை பல உண்டாம்!

(அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்)

பறிப்பதொன்றே பெரும்பணி பிறர்பொருளை என்றே
பழகிக் கொண்ட பகற் கொள்ளைக்காரருக்கு
பகுத்தறியும் நுண்ணறிவு இருந்தென்ன போயென்ன
தொடுத்திடும் இவ்வினாவும் என்அய்யன் வகுத்த குறளே!

(அஃகி யகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்)

சாவது நலமாம் சாற்றுகின்றான் அய்யன் எப்போது?
ஆனது ஆகட்டுமென்று புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்ந்திடும்போது!
சாவது நலமாம் என்று
சாற்றுகின்றான் அய்யன்.

(புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்)

மண்ணில் காணும் தானியத்தில் பதர் உண்டாம்
மனிதரிலும் பதர் உண்டாம் உண்டாம்! பலர்முன்
பயனற்றவை கூறிப் பயன்பெற முனையும்
பகல் வேடதாரியைப் பதர் எனப் பகருகின்றான் அய்யன்!

(பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்)

இருட்டில் இருக்குமிடந் தெரியாமல்
வெளிச்சத்தில் மட்டும் வெளிப்படும் நிழலைப்போல்
தீச்செயல் புரிவோரை விட்டு விலகாமல்
தீமையும் ஒட்டிக் கொண்டே இருக்குமென
உவமை காட்டி உரைத்திட்ட புலமை என்னே;
உலகில் இந்தக் குறள் விளைத்த புதுமை என்னே!

(தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று)

ஒப்புரவு எனும் பிறர்க்கு உதவும் பண்பினை
இன்றைய உலகிலும் இனிவரும் புதியதோர் உலகிலும்
காண்பது அரிது எனக் கண்டறிந்து சொன்ன
கற்கண்டுக் குறளுக்கு ஈடேது இணைதான் ஏது?

(புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற)

ஆதாயத்தை எதிர்பார்த்துக் கொடை வழங்காதே!
ஆகாரத்தை எதிர்நோக்கி ஏங்குவோர் குடலுக்கு ஏதேனும் வழங்கிடுக!
வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று
வள்ளலார் சொன்னது வள்ளுவன் சொன்னது தானே!

(வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து)

தோன்றின் புகழொடு தோன்றுக என்றால் தொட்டதுறையில்
தொடர்புகழ் எய்துக: அல்லால் எத்துறையும் தொடாதே
என்பது. ஆன்றவிந்தடங்கிய ஆசான் அறிவுரை
சான்றுகள் பற்பல இந்த ஜகத்தினில் காணலாம்.

(தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று)

பொருள் இலார்க்கு இல்லறம் சிறக்காதென்பதையும்
அருள் இலார்க்கு துறவறம் நிலைக்காதென்பதையும்
இவ்வுலகம் அவ்வுலகம் என்று காட்டுகின்றான் - இனி
எவ்வுலகம் உதித்தாலும் அவ்வுலகில் காண இயலா அறிவாசான்!

(அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு)

தீராதோ துன்பமென்றும்; வாராதோ கோரிய வரங்களென்றும்;
தீயிலிட்டுப் பொருள்களை வீணே கொளுத்தும்
வேள்விகள் ஆயிரம் செய்வதை விட
பண்ணிய பாவங்கள் தொலைந்திட இனியும்
புண்ணியமென ஒன்றிருந்தால் அது வந்து புகுந்திட
உயிர் ஒன்றைப் போக்காமல் அதனை
உணவாக ஆக்காமல் இருந்தாலே போதுமென
உளமுருகச் செய்கின்ற உபதேசம்: ஊருக்கல்ல -
உனக்குமெனக்கும் சேர்த்துத்தான் என உரைத்தவன்
உத்தமப் பெரியோன் வள்ளுவனன்றோ -
நித்திலமன்றோ அவன் தந்த திருக்குறளு



(அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று)

பொழியும் மழையில் பொல்லாக் கோடை
புற்றுகள் வளரினும் புதர்கள் மூடினும் -
புலப்படும் வரையில் கடுந்தவம் புரிவேன்
பலப்பல சொல்வதெலாம் தவமல்ல என்ட
எந்த உயிருக்கும் தீங்கு இழைக்காதிருப்
எதையும் தாங்கும் இதயம் பெற்றிருப்பது
தவமெனப் படுமென்று தகைவாய்ச் சொல்
தரணிக்கே மறை தந்த தமிழ் மறை ஞா

(உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு)

பச்சைக்கிளிகளையும் பால்நிறப் புறாக்களையும் பிடிப்பதற்கு
இச்சையுடன் கண்ணி வைத்துப் புதரில் மறைந்துள்ள
பொல்லா வேடனைப் போல்
பாவையரைக் காமவேட்டையாட பாழும் துறவியர் சிலர்
பாசறை அமைத்து அதனைப் பக்தி மடமென்று பசப்புகின்றார்
பகல் வேடதாரியிடம் பகவான் பேரால் ஏமாற்றும் எத்தனிடம்
எப்போதும் எச்சரிக்கை என்றுரைப்பதுவும் எங்கள்அய்யன் தானே!

(தவமறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று)

எல்லைக்குள் வாழ்க்கையைச் செம்மையாய் அமைத்திடாதார்,
கொள்ளைப் பொருள் சேர்த்திடவே நாட்டம் கொண்டிடுவார்!
தொல்லை தரும் ஆடம்பரத்தை, போலிப் பளபளப்பை
தொடாமலே விட்டு விடச் சொன்னதுவும்
தொலை நோக்குக் குறள்மொழி தானே!

(அளவின்கண் நின்றொழுக லாற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்)

உண்மை மெய்ம்மை வாய்மை என்பதற்கு எல்லாமே
ஒரு பொருள்தான் என எண்ணத் தோன்றும்...
வாய்மைக்குத் தனியாக வடித்தெடுத்த பொருள் ஒன்றுண்டு
ஆய்ந்திடும் இடத்து "பொய் அல்லாதது" என்ற பொருள்அல்ல
வாய்மை எனப்படுவது யாதெனின் எவருக்கும்
தீமையில்லாத சொல்லைச் சொல்லுதல்
இத்தனை தெளிவாய் இதற்குப் பொருளைப் பிழிந்து தந்திடும்
அத்தன் - அய்யன் - ஆசான் - குறள் ஞானி வள்ளுவன் தானே!

(வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்)

எதற்காக நான் சினம் காக்க வேண்டுமென்று எக்காளச்
சிரிப்பு முழக்கி இளந்தளிர் ஒன்றை
கசக்கிக் கொன்றான் கடுஞ்சினப் பிறவியொருவன் - அக்
கணமே மாமலை மனிதன் ஒருவன் மார்தட்டி அங்கு வந்தான்
"மடையனே மல்யுத்தம் புரிய வருகிறாயா?" என்று
மாமனிதன் கேட்டதுதான் தாமதம்:
சிறுவனைக் கொன்ற சிறுமதியாளன்
சினங் காப்பது என் பண்பு எனச் சொல்லி
சிறகடித்துப் பறந்து விட்டான்.
'செல்லிடத்து சினங்காக்காமல் அல்லிடத்துக்
காத்தால் என்ன காவாக்கால் என்ன' என்று
வள்ளுவன் வாய் மணக்கக் கூறியதை
தெள்ளு தமிழ் வேதமெனல் பொருத்தம்தானே!

(செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்)

தீமை எனக்குச் செய்தவரை தெண்டனிடச் செய்ய வேண்டும்
ஆமை போல அடக்கி ஒடுக்கிப் போட வேண்டும்

அதற்கென்ன வழியென்று ஒரு பிள்ளையாண்டான்
அடர்ந்த மீசையை முறுக்கி விட்டான். அப்போது
அங்கு வந்த வள்ளுவர் அவனைப் பார்த்து
அதற்கு ஒரு வழி சொல்வேன் என்றார்
அதிர்ச்சியுற்று இளைஞன் பார்த்தான்!
"அடலேறே! உனக்கின்னா செய்தவன்
தலை குனிய வேண்டும், அதுதானே உன் ஆசை;
தயங்காமல் இப்போதே அவனுக்கு நன்மை செய்து விடு!"
"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நா
நன்னயஞ் செய்வது தான்" என்ற
இறையன்றோ எங்கள் அய்யன்... ஒரு
குறையுண்டோ இந்தக் குறட் பாவுக்கு!



(இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நா
நன்னயஞ் செய்து விடல்)

சான்றோர் கூடிய சபையொன்றில்
நூலோர் தொகுத்தவற்றில் தலை எதுவென
தர்க்கமொன்று நடந்ததாக ஒரு கற்பனை!
பக்கம் நின்று பல்லோர் பார்த்திருக்க
வர்க்கபேதம் ஏற்காத வள்ளுவன் அங்கே வந்து
வான்புகழ் குறட்பாவால் விளக்கம் தந்தான்
இருப்போர் இல்லாதார் என்றில்லாமல்
இருப்பதை அனைவரும் பகிர்ந்து கொண்டு
எல்லா உயிரும் வாழ வேண்டுமென்ற
சமநிலைக் கொள்கையே நூலோர் தொகுத்தவற்றுள்,
தலை! என்றான்
அந்தத் தலைமகன் வள்ளுவன் குறளைத் தமிழ்மறை
என்பது தவறு,
தரணி முழுமைக்கும் அதுவும் ஒரு மறையன்றோ!

(பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை)

காளை போனவன் இன்னும் திரும்பவில்லையே என
நாளைக் கோடுபோட்டு எண்ணிக் கலங்கி
பாளைச் சிரிப்பழகு பதுங்கிக் கொள்ளும் காதல்
பாவையர் கவலைகள் அன்றைக்கு நடைமுறை!
அப்போதே வள்ளுவன் நாளுக்கும் வாளுக்கும்
உவமை காட்டி உரைத்திட்டான் ஒரு குறள்!

நாள் என்பது ஒருவரின் ஆயுளை அன்றாடம்
வாள் போல அறுத்துக் கொண்டே யிருப்பதென்றான்.
வாளுக்கும் நாளுக்கும் ஒப்பிட்டு
வள்ளுவன் மொழிந்த குறள் தெவிட்டாத தெள்ளமுதமன்றோ!

(நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்)

பூவுலகப் பற்றெல்லாம் துறந்து விட்டு
மேலுலகப் பற்றே தமக்கு மேன்மை யென்று
சூளுரைத்து வாழ்ந்திருந்த துறவியொருவர் - மடத்தில்
எலிகளைப் பிடிக்க பூனையொன்று வளர்க்கலானார்.
"பாவம்: பூனைக்குப் பசி யெடுத்தால்
பால் தர வேண்டுமென்று பசு மாடு வாங்கச் சொன்னார்.
மாடுதனைப் பராமரிக்க மங்கை யொருத்தி வந்துதித்தாள் - பக்தி
ஏடுகளைப் புரட்டும் சாக்கில் பலகணியைத் திறந்து வைத்தார்.
அவளோ பசுவுக்குத் தீனி போட்டாள் துறவிக்கு வைத்த
பாலுக்கும் அருகில் வந்து ஜீனி போட்டாள்
கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்
கரங்களிரண்டும் காதல் கொக்கி...
ஒன்றின் மேல் பற்று வைப்பின் - அது
மென்மேலும் பற்றுகளைப் பெருக்கிடும் என்று
வள்ளுவன் துறவுக்குச் சொன்ன வளமான கருத்து
துறவியொருவர் துறவறம் துறந்த கதையில் முடிந்தது.

(இயல்பாகும் நோன்பிற்கொன்று இன்மை உ
மயலாகும் மற்றும் பெயர்த்து)



வானமும் வசப்படும் என்கின்றோம்
வளர்ந்து வரும் விஞ்ஞான வேகம் கண்டு!
இரண்டாயிரம் ஆண்டின் முன்னே வள்ளுவன்
இதற்கோர் குறளை வரைந்து விட்டான்
ஏற்படும் அய்யங்காள் அனைத்தையும்
ஏற்றதோர் ஆராய்ச்சி செய்து தீர்ப்போம்
வானம் நம்மருகில் வந்துவிட்டதாக
வற்றாத ஊக்கம் பெருகிடப் பார்ப்போம்!
தொலைநோக்குத் திறன் கொண்ட நம்
தொன்மை நூல் குறள் என்பது மெய் தானே!

(ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து)

வற்றாத செல்வம் என்பதற்கு; நம் வள்ளுவ ஞானச் செல்வம்
வழங்குகின்ற விளக்கம்தான் என்ன சொல்வேன்! நன்மைக்குப்
பங்கம் விளைக்கின்ற தீய ஆசைகளை விட்டு விட்டால் அதுவே
சங்க நிதி பதும நிதி எனும் பெறற்கரிய பெருஞ்செல்வமாகும்.

(வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்)

இயற்கை நிலையை மாற்றுதற்கு
எப்பாடு பட்டும் உழைக்கின்ற மனிதர்களை
செயற்கை நிலை சில நேரம் கை விட்டு விடும்போது

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறு" மென
இயற்கை நிலையே முதன்மையாக வென்று நிற்கும்

ஊழ் என்று அதற்கொரு பெயர் உரைக்கின்றோம் - அந்த
ஊழையும் உப்பக்கம் காண்பதற்கு வாரீர்!

உலைவின்றித் தாழாது உஞ்ற்றுபவர் வாரீர்!
நிலைகுலையா நெஞ்சினரே வாரீர்!



வங்கம், இந்து, அராபி எனும்
தங்க மகளிர் தரங்கம் பாடி

அங்க மெலாம் அழகு சூடி
சங்கத் தமிழர் நாடு தேடி,

சிங்க மறவர் தோளினை நாடி
இங்கு வந்தனர் குமரிக் கோடி!

முக்கடல் சங்கமம் - பெண்கள்
நெற்றியில் குங்குமம்
மேனியில் சந்தனம் புனுகு
கினுக்கும் பொன்னகை புன்னகை

அந்தப் புன்னகை புயலென மாறுமுன்னே
கயல் எனும் விழிகளில் கண்ணத் தோன்றுமுன்னே

ஊழையும் உப்பகம் காண்பதற்கு
உலைவின்றித் தாழாது உஞ்ற்ற வாரீர்!



உடன் வாரீர்! உங்கள் உடன்பிறப்பு
அழைக்கின்றேன் உடன்வாரீர்! உடனே வாரீர்!

திருவள்ளுவரும் திருவாரூராரும்



கவிஞர்
மு.மேத்தா

சொற்செறிவால் பொருட்செறிவால்
ஆழங்காண இயலா அறிவால் ஒரு சொல்லில்
பலபொருளை உணர்த்துகிற இயல்பால்
தொட்டவரைக் கெட்டவரைத் தூக்கி நிறுத்துவதால்
திட்டுபவரைக் கூடத் திகைத்து நிற்க வைப்பதனால்
நுண்மாண் நுழைபுலத்தால் நுட்பத்தால்
பற்றற்ற தொண்டர்களைப் பற்றிப் பிடிப்பதனால்
பலரும் பலவிதமாய் உரைசொல்லும் பான்மையினால்
வயதாக வயதாக வாலிபமாய்ப் பொலிவதனால்
திருவள்ளுவர் பெருமானும்
திருவாரூர்க் கலைஞரும் இருவரும் ஒன்றானார்...
திருவள்ளுவர் சிலையைத் திரும்பிப் பாருங்கள்...
வள்ளுவர் முகம்பார்த்து நமக்குள் ஒரு வருத்தம்...
'அவர் இன்னும் அதிக அதிகாரங்களை எழுதியிருக்கக் கூடாதா?' என்ற ஏக்கம்!
133 அதிகாரங்களுக்கு 133 அடியில் சிலை
இன்னும் அதிகமாய் எழுதியிருந்தால்
சிலையின் உயரத்தைக் கலைஞர் உயர்த்தியிருப்பாரே...
எத்தனை அதிகாரம் எழுதினால் தான் என்ன...
'அதிகாரம்' இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் தான் அங்கீகாரம்!
திருக்குவளைச் செல்வர் திறந்துவைத்தத்
திருவள்ளுவர் சிலை பற்றி
இரண்டே வரிகளில் இப்படிச் சொல்லலாம்
"இது திருவாரூர் ஷாஜஹானின் திருக்குறள் தாஜ்மகால்!"
சிறுபான்மை இனத்தின் மீது கலைஞர்க்கு எப்போதும் கருணை உண்டு.
தமிழ்ப் பா இனங்களில் இரண்டே இரண்டடிகள் கொண்ட
குறள் வெண்பா சிறுபான்மைப் பாவினம்!
அதனால்தான் குறளாசான் வள்ளுவரைக்
கலைஞர் ஓங்கி உயரவைத்து உள்ளம் மகிழ்ந்தாரோ?



திருக்குறள்தான்!



பாவலர்
அறிவுமதி

01

ஊஞ்சல் கயிறே
திருக்
குறள்தான்!
உலகை
ஆட்டிப்
பார்ப்பதற்கே!

02

உயிர் விடும்
மூச்சே
திருக்
குறள்தான்!
உயிர்ப்பாய்
வாழ்வை
வாழ்வதற்கே!

03

தொடரிக் கோடே
திருக்
குறள்தான்!
தூரப்
பயணம்
தொடர்வதற்கே!

04
உயரம் ஆழம்
திருக்
குறள்தான்!
உயரிய
வாழ்வை
உணர்வதற்கே!

05
பறவைச் சிறகும்
திருக்
குறள்தான்!
பண்பைத்
தேடிப்
பறப்பதற்கே!

06
நிலவும் கதிரும்
திருக்
குறள்தான்!
நிலவிடும்
இருளை
நீக்குதற்கே!

07
ஆற்றங் கரையும்
திருக்
குறள்தான்!
அறிவுக்
கடலை
அடைவதற்கே!

08
அறமும் பொருளும்
திருக்
குறள்தான்!
அருளால்
இன்பம்
அழைப்பதற்கே!

09
இரு
கை
என்பதும்
திருக்
குறள்தான்!
எல்லா
உயிரையும்
ஏற்பதற்கே!

10
கலைஞர் விழிகள்
திருக்
குறள்தான்!
கடலில்
வள்ளுவர்
காண்பதற்கே!
□



கவிஞர்
பொன்.செல்வகணபதி

இமயம் முதல் என்றே
இயம்பிய உலகை
குமரி முதல் என்று
கூறவைத்த கோமான்.

ஆன்மீகப் பாறையின்
அடுத்த பாறையை
வான்புகழ் வள்ளுவனின்
வாழிடம் ஆக்கியவர்.

தரைமீது அல்ல
தத்துவத்தின் மீது
முறையாக முளைத்த
முத்தமிழ்ச் சிலையிதுவே.

பிறப்பொக்கும் என்று
பேசிய வள்ளுவச்
சிறப்புக்காகவன்றோ
சிலை செய்தார் நம்கலைஞர்.

வாமனக் குறள்வடிவம்
வடிவமோ வான்உயரம் என
தூமன வள்ளுவரைத்
தூக்கி நிறுத்தியவர்.

பூமியையே தூக்கிப்
பூமிமேல் நிறுத்தினாற்போல்
சாமிநம் வள்ளுவரை
சரித்திரத்தில் நிறுத்தியவர்.



வள்ளுவர் முனை

சாமிநம் வள்ளுவரின்
சரியான உயரத்தை
பூமி முழுவதுமே
புரிந்துகொள்ளச் சிலைசெய்தார்.

அருங்குறளின் பொருள்முதலை
ஆராய்ந்த வள்ளுவனை
ஆகாயம் ஆராய
அமைந்ததோஇச் சிலைஉயரம்.

திராவிடம் அங்கே
திரண்டு நிற்கிறது.
உரிமையின் குரலை
ஒலிக்கிறது கடல்அலைகள்.

தமிழ் அங்கே
தலைநிமிர்ந்து நிற்கிறது
அமுதக் கடலலைகள்
அவர்பாதம் தொடுகிறது.

குமரிமுனையைக்
கூர்தீட்டித் தீட்டி
இமய முனைக்கு
எதிர்முனையாய் ஆக்கிவிட்டார்.

தெள்ளுதமிழ்க் குமரிமுனைச்
சிலைதிறந்த நாள்முதலே
வள்ளுவர் முனையென்ற
வழக்குவந்து விட்டதன்றோ?

வானுயர நிறுத்தினார்
வள்ளுவனை நம்கலைஞர்
வான்புகழ் வள்ளுவன் என்ற
வருணனை பலிக்கவோ?

அதிகார எண்ணிக்கை
அளவுக்கு உயரம் ஏன்?
அதிகாரக் குறைப்பு
ஆகாது என்பதாலா?


கல்வெட்டாய் வள்ளுவர்
கனித்தமிழ்க் குறளையெல்லாம்
சொல்வெட்டுக் கோட்டம்கட்டி
சுவற்றில் பதித்தவர் யார்?

கடலில் முளைத்த
கவிதையாய் வள்ளுவனின்
உடலை உயிர்ப்பாக்கி
ஓங்கி நிமிர்த்தியது யார்?

முக்கடல் சங்கமம்
முப்பால் சங்கமமாய்
அக்கடல் இன்றும்
அலைபாய்ந்து மகிழ்கிறதே.

குறள்செய்த கோமானை
குன்றம்போல் நிலை நிறுத்தி
அருள்செய்த கலைஞரின்
அருந்தொண்டே பெருந்தொண்டாம்.

சுனாமிப் புயல்கடந்தும்
சுடர்விடும் அச்சிலைதான்
அனாதிகாலத்திற்கும்
அவர்புகழ் ஒலித்திருக்கும்.





சிலையல்ல... திசைகாட்டி!

கவிஞர்
பழநி பாரதி

அய்யனே!
அறிவனே!
வாலறிவனே!
வள்ளுவனே!

வான்சிறப்புப் பாடியவன் நீ!
அதனால்தான்
மேகங்கள் முத்தமிடும்
வான்தொடும் சிலை உனக்கு!

தமிழின் தலைஞாயிறு நீ!
முக்கடல் கூடலில்
சூர்யோதயம் பார்க்க
வருகிறவர்களின்
முகங்களிலெல்லாம் உன்
வள்ளுவ வெளிச்சம்தான் பரவுகிறது!

உப்பிட்டவரை
உள்ளளவும் நினை என்பார்கள்
கலைஞர் உன்னை
உயிரால் நினைத்தார்!
கடல் நடுவே உன்னழகை
கவிதையாய் வடித்தார்!

அறம் பொருள் இன்பம் என
நீட்டும் உன் மூவிரல்கள்
யோகாசனங்கள் காணாத
வாழ்வியல் முத்திரை
பெரியாரைத் துணைக் கோடச்
சொன்னவன் நீ!
அதனால்தான்
ஒன்றைத் தொடரும்
இன்னோர் அலையாய்
உன்னை
வந்து... வந்து வாழ்த்துகிறார்கள்
அண்ணாவும்
கலைஞரும்!

கடலெல்லாம்
உன் குறளோசை
காற்றெல்லாம்
உன் புகழோசை!

சிலையல்ல நீ
திசைகாட்டி!
தென் கடலலைகள்
தித்திக்கத் தித்திக்க
உன்னைத்தான் பாடுகின்றன
இசை கூட்டி!



பாற்கடல்

கவிஞர்
நெல்லை ஜெயந்தா



அய்யனே!
தமிழ் கிடைத்தபோது
அதிகாரங்களைப்
பாடினாய்
நீ!
அதிகாரம்
கிடைத்தபொழுதெல்லாம்
தமிழைப் பாடினார்
கலைஞர்!

கடலில் உன்னை
நிறுத்தியிருக்கிறார்
கலைஞர்,
எங்களை
கரையேற்றுவதற்காக!

ஈரடி
தந்த உனக்கு
ஈரடியில் சிலை!

தமிழ்க் கவிஞர்களில்
பல அதிகாரங்கள்
படைத்தவன்
நீ!
அதனால்தான்
கடலே
உன் கால்களைத் தொட்டு
வணங்குகிறது!

சங்க
இலக்கியங்களை
சாப்பிட்ட
தென் கடல்
தன்
பாவங்களை
போக்கட்டும்
உன்
பாதங்களை நீராட்டி!

பாற்கடல்
ஆகிவிட்டது
முக்கடல்!
முப்பால் தந்த
நீ
நின்றதாய்!

சிலையாக
நிற்கிறாய்
நீ...
எங்களையும்
செதுக்கியபடி!

வள்ளுவனால்
வானுயர் புகழ்
தமிழருக்கு!
வானுயர்
வள்ளுவனால்
புகழ்
கலைஞருக்கு!

காலம் வெல்லும்
கலைஞர் நாட்டிய அய்யன் சிலை



பல்துறை வித்தகர் பைந் தமிழ்க் கோ! கலைஞர்
வெல்லாச் செயலுண்டோ? வெற்றிஅய்யன் - நல்லதிரு
வள்ளுவருக்கே முக்கடல் வாய்ப்பணிகள் தாலாட்டும்
உள்ளொளி கண்ட சிலை! ஓ!! (1)

ஈராயிரம் ஆண்டின் ஏற்றம்காண் சிந்தனைகள்
பாராயி ரம்கடந்தும் பாலிக்கப் - பேராண்மை
அய்யன் திருக்குறளோன் ஆச்சரிய மீட்சி சிலை
மைய்மைக் கலைஞர் வியப்பு! (2)

உலகமெ லாம் வாழ உயிர்தந்த நூலோ
வலம் வந்தே வையகம் வாழ்த்தும் - இலகுகுறள்
அன்னைத் தமிழ்வடிவம் ஆய்ந்தஉள் ளக்கலைஞர்
முன்னீர் நடுசிலைவைத் தார்! (3)

ஒப்பிலா நம் கலைஞர் ஓங்கு செயல் அந்தநாள்
செப்பு கிபி ஈராயிரம் ஆண்டின் - அப்பிறப்பு
ஒன்றாம் அருள்நாளில் ஓங்கு திருக்குறளை
வென்றுலகு போற்றதந்த வேந்து! (4)

இமிழ் கடல் ஓசை எதிரொலிக்க - ஆற்றல்
நமின்தமிழ் நாட்டுமக்கள் நன்றே - தமின்(ழ்) முழக்கம்
கலைஞர் புகழ்பாட காணற்(கு) அரிய
அலைகடல் ஏற்கும் சிலை! (5)

சான்றோர்கள் ஆன்றோர் அறிஞர்கள் பாவலர்கள்
ஈன்றநற் தாய்மார்கள் எவ்வெவரும் - தான் கூடி
வாரிகரை மற்றோர் அவ் வாரிதான் ஆர்ப்பரிக்கும்
பாரிகலை ஞர்மகிழும் பார்த்து! (6)



பெருங் கவிக்கோ
வா.மு. சேதுராமன்

வையப் பொதுமறை வைத்த சமநீதி
கையமுத மாய்க் கலைஞர் காப்பளிக்க - ஐயின்றி
ஒத்தபிறப்பால் ஒருவராம் தத்துவத்தை
இத்தரணி தந்தமுப்பால் ஏற்று! (7)


கலைஞர் தமிழ்நாட்டின் காப்புடைமைத் தந்தை
கலைஞர் தமிழ்நாட்டின் விந்தை கலைஞர்
கலைக்குரிசில் அன்புக்கடல் பெருக்க எந்தை
கலைஞர்க்(கு) நிகர் கலைஞரே! (8)

காலம் கடந்தும் கடல்நடு உள்ள நம்
ஞாலத் திருவள்ளுவர் சிலை - மேல திக
ஆண்டுகள் தான்நிலைக்கும் ஆளுமை நம் கலைஞர்
மாண்புக ழும் நிலைக்கும் வாழ்த்து! (9)

கலைஞரின் நோக்கில் 'கணபதியர் சிற்பி
கலை நுட்பக் காண் கலைஞர் காட்சி - கலைஞர்
கலைஞானப் பெட்டகத்தார் கண்கொள்ளா மாட்சி
கலைஞர் அறமுப்பால் காப்பு (10)

வாழையடி வாழையாய் வந்ததிருக் கூட்டம் போல்
தாழம்பூ நன்மணம் போல் மாமுதல்வர் - ஏழை
எளிய மக்களுள் வாழும் ஏந் தல்தம் தந்தை
கனிவுகான் மறுவிழாக்காண் கண் (11)

பரம்பரைகள் போற்றுகுடி பண்பா(டு) அய்யன்
கரம் தந்த கொள்கை கருத்துக்கள் - உரம் பெற்றே
கா முதல்வர் ஸ்டாலின் காப்புகுறள் மக்களாட்சி
மாமுதன் மைக்கே வணங்கு! (12)


24

அறுசீர் அதிகாரம்



திரைப்பாடலாசிரியர்
கபிலன்

அகப்பொருளின் இன்பம் யாவும்
அறிவாசான் எழுதி வைத்தான்.
முகத்துக்கு சுவாசம் போல், எம்
முப்பாட்டான் வாழுகின்றான்.
செகத்துக்கு உயர்வாய், என்றும்
நாள் மலரின் பிறப்பு காசு;
சுகதுக்கம் எல்லாம் சேர்த்தே
சொற் கிழவன் யாப்பு ஆகும்!

தமிழ் உலகின் மறையான்: என்றும்
தமிழ்போல் மறையான்: தண்ணீர்
குமிழ் போல உடையா(து) நுண்மான்
கொற்றவர்க்கும் மற்ற வர்க்கும்
கமழ்கின்ற நன்னூல் ஈன்றான்
காலத்தைக் கடந்தான்; தாய்ப்பால்
அமிழ்திற்கு இணையாய் வாழும்
அய்யனுக்கு அவனே சான்று!

குறிஞ்சிக்கும் உயர்வாய்ப் பாட்டு;
குளிருக்குக் கொளுத்தும் வேட்டு;
மறைந்திருந்து வாழா செய்யுள்:
மரபணுக்கள் சேர்ந்த பிள்ளை
நிறைகுடமாய்த் தாகம் தீர்த்த
நிறை நேராய் புலிமா சிங்கம்!
கரை கடந்த பின்னால் கூட
கடவுளையே எதிர்க்கும் காற்று!

அவன்சொல்லில் வானம் உண்டு
அலை வீசும் ஈரம் உண்டு
தவம் இருந்த முனிவன் இல்லை
தாய்ப்பாலில் பிறந்த பிள்ளை!
நவமனிதன் உன்னைப் போல
நானிலத்தில் நாட்கள் இல்லை
கலவைக்குச் சிரிப்பைத் தந்தான்
கனவுக்கு விழிப்பைத் தந்தான்.

அய்யனாரின் முன் பிறந்த
ஆதித்தமிழ் அய்யன் நீயே!
மெய்ப்பொருளைக் கண்டுணர்ந்த
மின்மினியின் சொற்கள் நீயே!
தைமாதத் தொடக்கம்; உம்மைத்
தாலாட்டும் தமிழர் நாங்கள்
கையேந்திப் பிழைக்கா வண்ணம்
காப்பாற்று தமிழே நீயே!



தேர்ந்து போர்வை தந்தார் ஏழுவள்ளல்! கலைஞர்
அய்யனோடு குறளும் தந்த எட்டாம் வள்ளல்
பண்டிதர்கள் பூட்டிவைத்த குறள் செல்வத்தை
எல்லோர்க்கும் தந்த வள்ளல் கலைஞர்தானே?

கடல் நடுவே வள்ளுவரை நிற்க வைத்தார்
கடல் அலையும் திருக்குறளைக் கற்க வைத்தார்
பார்க்கின்ற திசையெங்கும் அய்யன் காட்சி
பேருந்து உள்ளேயும் குறளின் மாட்சி

சேரமன்னன் கொடியினிலே வில் இருக்கும்
சோழ மன்னன் கொடியினிலே புலி இருக்கும்
பாண்டியனின் கொடியினிலே மீன் இருக்கும்
கலைஞரிடம் எப்போதும் குறள் இருக்கும்

வள்ளுவரை அய்யன் என்று பெருமை சொல்லி
தமிழ் மூச்சில் தன்மானம் துடிக்க வைத்தார்
தமிழ்நெறியோ குறள் நெறிதான் என்று சொல்லி
வள்ளுவரை இளையோரும் படிக்க வைத்தார்

பாறையில் பூ எப்படித்தான் பூக்கும் என்று
கேட்டவர்க்குச் செயலாலே பதில் கொடுத்தார்
தமிழ்மொழியின் ஆதிஅந்தம் நம் அய்யனைக்
கடலுக்குள் இமயமாய்ச் செதுக்கி வைத்தார்!

பெருமழையோ பெருங்காற்றோ சுனாமி என்று
எல்லாமே அய்யனிடம் பணிய வைத்தார்
வெறும் உப்புக் கரிக்கின்ற அலைகள் அய்யன்
பாதத்தைத் தீண்டியே இனிக்க வைத்தார்

திருக்குவளை கலைஞர்தான் நவீன அய்யன்
நாம் காணும் வள்ளுவரே என்போம் ஐயா
படைத்தல் காத்தல் அழித்தல் என்கின்ற
முத்தொழிலும் செய்தவர்தான் கலைஞர் ஐயா

திருக்குவளை கலைஞர்தான் நவீன அய்யன்



கவிஞர்
ஆண்டாள் பிரியதர்ஷினி

முப்பாலால் உலகளந்த வள்ளுவருக்கு
வானத்தைத் தொட்டுவிடும் சிலை படைத்தார்
சாதிகள் சமயங்கள் சழக்கு வாதம்
தொட்டுவிடா இனமாக நம்மைக் காத்தார்

பேச்சாலே செயலாலே சிந்தனை யாலே
சனாதனத்தின் காவியைத் தினம் அழித்தார்
புராணத்தின் முத்தொழிலைச் செய்துகாட்டி
பகுத்தறிவு வள்ளுவராய் கலைஞர் நிலைத்தார்

இதிகாசம் தேவபாஷை கட்டுக்கதைகள்
அடக்குதற்குக் குறளோவியம் எழுதித் தந்தார்
திருவள்ளுவர் ஆண்டென்று ஆணை செய்து
ஆரியத்தை நடுங்க வைக்கும் நெருப்பாய் வந்தார்

வள்ளுவர் கோட்டம் படைவீடெனக் கொண்டார்
வள்ளுவர் சிலையோ தமிழ் வீடெனக் கண்டார்
குறள்வேதம் சொல்லி சதுர்வேதம் வென்றார்
ஈரடியால் வைதீக மூவடியை வென்றார்

ஏழே வார்த்தை அதிசயம் அய்யனின்
கற்சிலை அற்புதம் கலைஞர் கண்டது
கலைஞர் கனவாம் அய்யன் சிலைக்கு
வெள்ளி விழாவோ முதல்வர் காண்பது

வல்லினம் மெல்லினம் இடையினம் கொண்ட
தமிழுக்கு வாய்த்த வள்ளுவர் நல்லினம்
கலைஞர் தளபதி உதயத்தி னாலே
உலகை வெல்கிறது நமது தமிழ் இனம்!

வெள்ளி விழாக் காணும் வள்ளுவன் சிலை!





கவிச்சுடர்
கவிதைப்பித்தன்

"முப்பால்" தமிழுக்குப்
பொன்னோவியம்!... குறள்
முனிவன் வழங்கிய
சொல்லோவியம்!... இதோ
முக்கடல் சந்திக்கும்
தென்குமரியில்... நூற்றி
முப்பத்து மூன்றடியில்
கல்லோவியம்!... அது
"முத்தமிழ் அறிஞரின்"
செயல்காவியம்!

சிலைவண்ணம் இதுசிற்பக்
கலைஓவியம்!... எங்கள்
செந்தமிழ்ப் பாட்டனின்
எழிலோவியம்!
கலைஞர் படைத்தது
குறளோவியம்!... அதில்
காணலாம் வள்ளுவன்
உயிரோவியம்!

ஒன்றேமுக் காலடியை
வரைந்து வைத்தான்!...இந்த
உலகே, தன் காலடியை
வணங்க வைத்தான்!
நன்றேமுப் பால்பொழிந்து
விருந்து வைத்தான்!.. எங்கும்
நாடு, மொழி, இனம் கடந்து
அருந்த வைத்தான்!

வெற்றிக்குப் பெருந்துணை
முயற்சி என்றான்!... பிறர்
வேதனை தீர்ப்பதே
மகிழ்ச்சி என்றான்!
கற்ற படியேநீ
நிற்க என்றான்!... புயற்
காற்றிலும் அசையாமல்
நிமிர்ந்து நின்றான்!

அறிவொடு பண்பையும்
சொல்லித் தந்தான்!... வாழ்வில்
அறம், பொருள், இன்பத்தை
அள்ளித் தந்தான்!
பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும் என்றான்!... உயர்
பெரியாரின் துணை நன்மை
பயக்கும் என்றான்!

உள்ளத்தால் பாரதி
பாடி நின்றான்!... இங்கு
உண்டோ?சொல் குறளுக்கே
ஈடு என்றான்!
வள்ளுவன் தன்னை
உலகி னுக்கே... தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்
நாடு என்றான்!

தெள்ளு தமிழ்ஒன்றே
மொழியின்தலை!..அய்யன்
திருவள்ளு வர்சிலை
புகழின்நிலை!
"வெள்ளி விழா"காணும்
வள்ளுவன் சிலை!... கடல்
துள்ளி எழுந்தாட
வாழ்த்துமே!

வைகறைச்சாவி வள்ளுவன் உளிதான்



முனைவர் சொற்கோ
இரா.கருணாநிதி

ஈரடி இமயம்
இறவாப் பிறவி
தந்தையும் மகனும்
தனிப்பெரும் உதவி


வைகறைச் சாவி
வள்ளுவன் உளிதான்
சிகரத்தைச் செதுக்கியது
நம் செம்மொழிதான்

விண்ணுக்கும் மண்ணுக்கும்
வியப்புக் குறிதான்
மண்ணுயிர் உய்விக்க
மானுட நெறிதான்

உலகினைத் தாங்கிடும்
ஒற்றைத் தூணை
உதய சூரியன்
தந்தான் உயர்ந்தவானை

ஆழ்கடலுக்குள்
அமிழ்தும் விசமுமாம்
சிலை உடல் அமிழ்தாய்ச்
செகம் இனிக்க நிற்கிறதே

ஆழ்கடல் ஓரம்
அட்சய பாத்திரம்
அய்யன் பெரும் புகழ்
ஆதவன்போல் நிரந்தரம்!





திருக்குறள் வரலாற்றுக் குறிப்புகள்...

கி.மு.31: திருவள்ளுவரால் முதல் நூற்றாண்டில் திருக்குறள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என 1921ஆம் ஆண்டில் மறைமலையடிகள் தலைமையில் தமிழ் அறிஞர்கள் பலரும் கூடி எடுத்த முடிவை, 1935 மே, 17, 18ஆம் நாள்களில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் மறைமலையடிகளார் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கருத்தரங்கில் திரு.வி.க., தெ.பொ.மீ. உள்ளிட்டு ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்கள் மீண்டும் கூடி இறுதிசெய்து முடிவெடுத்து அறிவித்தனர். அதுநாள் முதல் திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்பட்டு வருகிறது.

கி.பி.1 முதல் கி.பி.2 வரை: இக்காலங்களில் வெளியான பழந்தமிழ் இலக்கியங்களில் திருக்குறள் எடுத்தாளப்பட்டுள்ளது. பெருந்தொகை, பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, ஔவையார் பாடல்கள் ஆகியவற்றில் திருக்குறள் பற்றிய பதிவுகள் உண்டு.

கி.பி. 5: நூற்றாண்டின் இறுதியில் திரமிள சங்கம் தோன்றிய காலப் பகுதியில் திருக்குறள் மறுதொகுப்பு உருவாக்கப்பட்டது.

கி.பி.2 முதல் கி.பி.10 வரை: காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணியுடன், நாலடியார், பழமொழி உள்ளிட்ட பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பலவற்றுள்ளும் திருக்குறள் எடுத்தாளப்பட்டுள்ளது.

கி.பி.10 முதல் கி.பி.13 வரை: தருமர், தாமத்தர், நச்சர், திருமலையார், மல்லர், காலிங்கர், மணக்குடவர், பரிப் பெருமாள், பரிதியார், பரிமேலழகர் ஆகிய பதின்மர் உரைகள் வெளிவந்தன.

கி.பி.10 முதல் கி.பி.14 வரை: கம்ப இராமாயணம், புறப்பொருள் வெண்பாமாலை, வில்லிபாரதம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், சிவவாக்கியப் பாடல்கள் என அக்கால இலக்கியங்கள் அனைத்திலும் திருக்குறள் எடுத்தாளப் பட்டிருக்கிறது.

கி.பி. 1300: சேலம் மாவட்டம் மல்லூரையடுத்த பொன்சொரிமலை அடிவாரத்தில் சமணமுனிவர்கள் தங்கியிருந்த தாமரைப் பாழி என்னும் குகையின் மேற்பகுதிப் பாறையில் தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்/ எங்ஙனம் ஆளும் அருள். என்னும் புலால்மறுத்தல் அதிகாரத் தலைக்குறள் 14ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் வெட்டப்பட்டுள்ளது.

கி.பி. 1400: சென்னை, மயிலாப்பூரில் உள்ள திருவள்ளுவர் கோயிலும், கோயிலின் உள்ளே உள்ள சிலையும் 14-15ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கி.பி.1595: திருக்குறள் மலையாள மொழிபெயர்ப்பு செய்யப்பட்டதான பதிவு உண்டு. அயிக்கரை சிட்டி மாக் கோதை செய்ததாகக் குறிப்பு உள்ளது)

கி.பி.1700: 17ஆம் நூற்றாண்டிலே திருவள்ளுவர் பெயரால் நாமக்கல் மாவட்டம் கபிலக்குறிச்சி கபிலமலை, திருச்செங்கோடு, பழனி ஆகிய ஊர்களில் திருவள்ளுவர் மடம் அமைக்கப்பட்டிருக்கிறது. நாமக்கல் பகுதியைச் சார்ந்த பட்டக்காரர் அல்லாள இளையநாயக்கர் என்பவரின் முயற்சியில் உருவான மடங்களுக்குத் தலைவர் பெயர் திருவள்ளுவர் என்றே சூட்டப்பட்டது.

கி.பி. 1730: வீரமாமுனிவர் - இலத்தீனில் திருக்குறளை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். முதன்முதலில் மொழி பெயர்க்கப்பட்ட மொழிபெயர்ப்பு நூலாகவும் இதுவே அமைந்தது.

கி.பி. 1796: சென்னை மாவட்ட ஆட்சியராக இருந்த எஸ். டபிள்யு எல்லீசு முதன்முதலில் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். அதன்பிறகு இண்டர்ஸ்லி (1794, எட்வர்த் (1873), டபிள்யு எஃப் துரு (1873) லாசரசு (1885). ஜி.யு போப் (1886), டி.எம். ஸ்டீட் (1889) போன்ற ஐரோப்பியர்கள் பலர் ஆங்கிலத்தில் திருக்குறளை மொழிபெயர்த்து வெளியிட்டனர்.

கி.பி. 1812: 'திருக்குறள் மூலபாடம்' எனும் பெயரில் தஞ்சை மலையப்பர் மகன் ஞானப்பிரகாசன் வெளியிட்ட நூலே இன்று கிடைத்துள்ள அச்சிடப்பட்ட முதல் திருக்குறள் நூல்.

கி.பி. 1816: சென்னை மாவட்ட ஆட்சியராக இருந்த எல்லீசு, திருக்குறள் மீது பெரும் ஈடுபாடு கொண்டு திருவள்ளுவர் திருவுருவும், விண்மீனும் பொறித்த இரட்டை வராகன் தங்கக் காசுகளை வார்த்து வெளியிட்டார் அந்தக் காசுகளில் இரண்டு இலண்டன் பிரிட்டீசு அருங்காட்சியகத்திலும், இரண்டு கொல்கத்தா இந்திய அருங்காட்சியகத்திலும் உள்ளன.

கி.பி. 1818: மேற்படி எல்லீசார் சென்னை மாநகரில் நிலவிய குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க 27 துரவு(பெருங்கிணறு)களை ஆங்காங்கே வெட்டினார். அக் கல்வெட்டில் நீர்வளம் குறித்த / இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் / வல்லரணும் நாட்டிற் குறுப்பு' எனும் 737ஆம் குறளை அவற்றில் வெட்டிப் பதித்தார்.

கி.பி.1845-1914: அயோத்திதாசப் பண்டிதர் திருக்குறளுக்கு உரையெழுதினார்.

கி.பி.1861: பரிமேலழகர் உரையை ஆறுமுக நாவலர் வெளியிட்டார்.

கி.பி. 1865: சார்லஸ் கிரௌல் திருக்குறள் இலத்தீன் மொழி பெயர்ப்பைத் தரங்கம் பாடியில் வெளியிட்டார்.

கி.பி.1867: திருக்குறளைப் பரப்பும் முயற்சியில் முதன்முதலில் திருக்குறள்



வகுப்புகள் நடத்தியவர் வடலூர் இராமலிங்க அடிகளே.

கி.பி.1880-82: களபர்த்தி வெங்கட்ரமண வித்தியநாதா தெலுங்கில் திருக்குறளை மொழிபெயர்த்தார்.

கி.பி.1897: திருக்குறளை முகப்பில் போட்டபடி பல இதழ்கள் வெளிவந்தன. ஞான போதினி வெளியானது.

கி.பி.1916: வ.வே.சு ஐயர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

கி.பி.1917: மணக்குடவரின் உரையை முதன்முதலில் வ.உசி வெளியிட்டார்.

கி.பி.1927: திருக்குறட்செல்வர் தி.ப. சுப்பிரமணியதாசு என்பவர் தென்காசியில் திருவள்ளுவர் கழகம் நிறுவித் தொடர்ந்து பணியாற்றி வந்தார்.

கி.பி.1929: மு.சி.பூர்ணலிங்கம் பிள்ளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

கி.பி1932: தமிழகத்தில் முதன்முதலில் திருக்குறள் நாட்குறிப்பை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது.

கி.பி.1935: வ.உ.சி. திருக்குறளுக்கு உரையெழுதி வெளியிட்டார்.

கி.பி.1937: பரிமேலழகர் உரையை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சிறப்புப் பதிப்பாக கந்தசாமியாரின் ஆய்வு முன்னுரையோடு வெளியிட்டது.

கி.பி.1939: திரு.வி.க. திருக்குறள் பாயிரத்திற்கு உரையெழுதி வெளியிட்டார்.

கி.பி.1941: சேலத்தில் திருக்குறள் வீ. முனுசாமி நடத்திய திருக்குறள் மாநாட்டில் தமிழறிஞர்கள் பலரும் பங்குகொண்டனர்.

கி.பி.1943: சேலம் திருக்குறள் அரங்கம் திரு. இராமசாமியால் தொடங்கப்பட்டது.

கி.பி.1945: திருக்குறளுக்கு 1945-இலேயே பண் அமைத்துத் தாளக் குறிப்புகளையும் தந்தவர் மயிலாடுதுறை விசுவநாத சாத்திரி.

கி.பி.1947: சேலம் செவ்வாய்ப்பேட்டையில் திருக்குறள் கழகங்கள் தோன்ற திருக்குறள் வீ. முனுசாமி துணைநின்றார். இராசிபுரம் பாவலர் அரங்கசாமி திருக்குறள் பதிப்பகம் ஒன்றைத் தொடங்கியதோடு, திருக்குறள் ஆட்சி என்றொரு மாத இதழை மூன்றாண்டுகள் நடத்தினார்.

கி.பி.1948: 14.3.1948, சென்னை மயிலாப்பூரில் திருவள்ளுவர் கழகச் சார்பில் சோ. இலட்சுமிரதன் பாரதி தலைமையில் 3வது திருக்குறள் மாநாடு நடைபெற்றது. பெரியார் உரையாற்றினார். திருக்குறள் நாள்காட்டியை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது. திராவிடர் கழக மாநாடுகளில் திருவள்ளுவர் படம் திறந்து வைக்கப்பட்டது.

கி.பி.1949: திருக்குறளுக்கு மு.வரதராசனார், த.சி. கந்தையா, புலவர் குழந்தை, திருக்குறள் வீ முனுசாமி ஆகியோரின் உரைகள் வெளிவந்தன. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட மு. வரதராசனார் உரை

வெளிவந்தது. இதுவரை 470 பதிப்புகள் வரை வெளிவந்துள்ளது. பதிப்பு வரலாற்றில் சிறப்பான பதிவுக்குரியது. பெரியார் அவர்களின் ஒருங்கிணைப்பு முயற்சியில் சென்னை பிரகாசம் சாலை, பிராட்வே திரையரங்கு அருகில் சனவரி 15, 16ஆம் நாள்களில் வள்ளுவர் குறள் மாநாடு (தமிழர் நெறிவிளக்க மாநாடு) சிறப்புற நடைபெற்றது. திரு.வி.க., தெ.பொ.மீ., சக்ரவர்த்தி நயினார், நாவலர் சோம சுந்தரபாரதியார், கந்தசாமி, திருக்குறள் வீ. முனுசாமி, இலக்குவனார், கா. அப்பாத்துரையார், புலவர் குழந்தை, இரா. நெடுஞ்செழியன், டி.கே. சண்முகம், என்.எஸ். கிருட்டிணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு உரையாற்றினார். அண்ணாவின் 'சந்திர மோகன்' நாடகம் இரண்டாம் நாள் நடைபெற்றது. புதுவையிலிருந்து புலவர் சுந்தர சண்முகனாரை ஆசிரியராகக் கொண்டு 'திருக்குறள் தெளிவு' என்கிற இதழ் வெளிவந்தது.

கி.பி1950: 16.6.1950 அன்று நாகர்கோயிலில் திருவள்ளுவர் வாலிபர் கழக ஆண்டுவிழா நடைபெற்றது. பெரியார் கலந்து கொண்டார். திருச்சி வே ஆனைமுத்து, ந.கணபதி, திருக்குறள் வீ.முனுசாமி ஆகியோர் 'குறள்மலர்' ஏட்டைத் தொடங்கினார்.

கி.பி.1951: 6.1.1951 திருச்சி தென்னூரில் குறள் மாநாடு நடைபெற்றது; பெரியார் கலந்துகொண்டார். 3.9.1951 அன்று சென்னை மயிலையில் திருவள்ளுவர் கழகச் சார்பில் அதன் 6ஆம் ஆண்டு விழா நடைபெற்றது. பெரியார் கலந்துகொண்டு உரையாற்றினார்.

கி.பி.1952: பலருடைய உரைகளைத் தொகுத்துப் பதிப்பிக்கும் முறையில் தண்டபாணி தேசிகரின் உரைவளம் வெளியானது. (1951, 52)

கி.பி.1957: திருச்சி வே.ஆனைமுத்து, ந.கணபதி ஆகியோர் 'குறள் முரசு' ஏட்டைத் தொடங்கி நடத்தினர்.

கி.பி.1958: மலேசியா எனும் மலையகத்தில் 1958இல் தொடங்கி திருக்குறள் வகுப்புகள் தொடர்ந்து நடத்தப்பட்டன. உலகெங்கும் தமிழர்கள் வாழும் நாடுகள் எங்கும் திருக்குறள் பரப்பும் முயற்சியில் 'உலகத் தமிழ்மறை திருக்குறள் ஒதுதல்' எனும் தலைப்பில் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் செயல்பட்டு வந்தது. 28.12.1958இல் முக்கூடலில் வள்ளுவர் சங்க விழா நடைபெற்றது. பெரியார் கலந்துகொண்டு உரையாற்றினார்.

கி.பி.1960: திருவள்ளுவர் அஞ்சல் தலையை இந்திய அரசு வெளியிட்டது.

கி.பி.1963: கோவை - இராமக்கிருட்டிணா வித்யாலாயாவின் சார்பில் சிவா. செகந்நாதன் பொறுப்பில் திருக்குறள் ஆராய்ச்சி நூல் 12 ஆண்டுக்கால முயற்சியில் வெளியிடப்பட்டது.

கி.பி.1967: தமிழ்நாடு அரசுப் பேருந்துகள் ஒவ்வொன்றிலும் திருவள்ளுவர் படமும், திருக்குறள் ஒன்றும் இடம்பெறச் செய்தார் அப்போது பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு கலைஞர். அது இன்றும் நடைமுறையில் உள்ளது. தமிழ்நாட்டரசின் சுற்றுலா மாளிகை தோறும் திருவள்ளுவரின் உருவப்படமும் ஒரு குறளும் இடம்பெறச்

செய்ய தமிழக அரசு ஆணை பிறப்பித்தது. தமிழக சட்டமன்றத்தில் நிகழ்ச்சிகள் தொடங்கும் முன் திருக்குறள் ஒன்றைக் கூறித் தொடங்குவது 24.11.1967 அன்று முதல் அன்றைய சட்டப் பேரவைத் தலைவர் ஆதித்தனாரால் தொடங்கிவைக்கப்பட்டது.

கி.பி.1968: சென்னையில் நடந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் தொகை மிச்சமான ரூ. 9 இலக்கத்தைச் சென்னை, சிதம்பரம் அண்ணாமலை, மதுரைப் பல்கலைக்கழகங்களில் திருக்குறள் ஆய்வு நடுவங்கள் அமைக்க முறையே மூன்று இலக்கங்களை அன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர், பேரறிஞர் அண்ணா அவர்கள் அளித்தார். அந்தத் தொகையைத் தொடர்ந்து மூன்று பல்கலைக் கழகங்களும் பலவகை ஆய்வுகளை மேற்கொண்டு வெளியீடுகளைக் கொண்டு வந்தன.

கி.பி.1968: 2.1.1968 அன்று சென்னை-தமிழர் (மெரினா) கடற்கரையில் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டது. 1968 இல் வேணுகோபால் சர்மா வரைந்த திருவள்ளுவர் ஓவியத்தை தமிழக அரசின் அதிகார அளவிலான ஓவியமாக அறிவித்தது.

கி.பி.1969: திருவள்ளுவர் 2000 ஆம் ஆண்டு மலரைச் சைவ



சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது. மிகச் சிறந்த ஆவணப் பதிவாக அது அமைந்தது. 27, 28.12.1969இல் உலகத் தமிழ்க் கழகத்தின் சார்பில் அதன் முதலாம் ஆண்டு நிறைவு மாநாடும் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழா மாநாடும் பறம்புக் குடியில் நடைபெற்றது. தேவநேயப்பாவாணர். பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோர் தலைமையில் தமிழ் அறிஞர்கள் பலரும் பங்கேற்றனர். அதில், பாவாணரின் திருக்குறள் தமிழ்மரபுரை உலகத் தமிழ்க் கழகத்தின் இரண்டாம் மாநாட்டில் வெளியிடப்பட்டது. பாவலரேறு பெருஞ் சித்திரனார் சிறப்புப் பாயிரம் எழுதியிருந்தார். முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்நாட்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பின் பொங்கலுக்கு அடுத்த நாளைத் திருவள்ளுவர் நாளாகக் கொண்டு அரசு விடுமுறை அளிப்பது என்றும் 01.01.1970 முதல் இது நடைமுறைக்கு வருமென்றும் ஆணையிட்டார். தமிழக அரசு காவல்துறையில் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கு வழங்கும் பதக்கங்களில் திருவள்ளுவர் திருவுருவத்தைப் பொறித்து வழங்கியது.

கி.பி.1974: சுறவ(தை)த் திங்கள் இரண்டாம் நாளைத் திருவள்ளுவர் நாள் என்று அரசு 1974 முதல் கொண்டாடி வருகின்றது. திருவள்ளுவர் ஆண்டு முறையை தமிழ்நாடு அரசு ஏற்று 1971 முதல் அரசு நாட்குறிப்பிலும், 1972 முதல் அரசிதழிலும், 1981 முதல் அனைத்து அலுவல்களிலும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. சென்னை நுங்கம்பாக்கத்தில் வள்ளுவர் கோட்டம் தமிழக அரசால் அமைக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சராய் இருந்த முத்தமிழறிஞர் கலைஞரால் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, கட்டி முடிக்கப்பட்டிருந்தாலும் அதற்குமுன் அவரது ஆட்சி கலைக்கப்பட்டது. பின்னர் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டு 15.04.1976இல் திறக்கப்பட்டது.

கி.பி.1975: கேரளம் இடுக்கி மாவட்டத்தில் சேனாபதி என்னும் சிற்றூரில் 'பசுவான் திருவள்ளுவர் ஞான மடம் என்ற அமைப்பு சிவானந்தர் என்பாரின் முயற்சியால் நிறுவப்பட்டது. வழிபாடு செய்யத்தக்க நிலையில் கோயில் போன்றதொரு வடிவத்தில் ஏறத்தாழ 35 இடங்களுக்கும் மேலான ஞான மடங்கள் அமைக்கப்பட்டுச் செயற்பாட்டில் உள்ளன. இலண்டன்வாழ் தமிழர்கள் எல்லாம் ஈசுடர் திருநாள் மேனர் பூங்கா கிறித்தவ தேவாலய மண்டபத்தில் 1975 அக்டோபர் 14ஆம் நாள் கூடித் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி நடத்துவதென முடிவெடுத்து நடத்தி வருகின்றனர்.

கி.பி.1976: தில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் தமிழ்நாட்டரசின் சார்பில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டது.

கி.பி.1980: மலையகத்தில் உள்ள பத்துமலை அடிவாரத்தில் வள்ளுவர் கோட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அங்கு திருவள்ளுவர் சிலை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. குன்றக்குடி அடிகளார் திருக்குறள் பேரவை தொடங்கி நடத்தி வந்தார். பல கிளைகள் அமைத்து, நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். திருக்குறள் மாநாடுகளையும் தொடர்ந்து பல இடங்களில் நடத்தினார். இக்கால பொன்னம்பல அடிகள் தொடர்ந்து அப்பணிகளைச் செய்து வருகிறார்.



கி.பி.1983: திருக்குறள் நெறிபரப்பும் இயக்கம் எனும் தலைப்பில் வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் வீ. முனுசாமியை வைத்து வகுப்புகள் நடத்தப்பட்டன.

கி.பி.1984: ஈரோடை வேலா, அரசமாணிக்கனார் 'குறளியம்' என்கிற இதழைத் தொடங்கி நடத்தினார். அறிஞர் கு.ச. ஆனந்தனோடு இணைந்து 'குறளாயம்' என்கிற அமைப்பையும் தொடங்கி நடத்தினார்.

கி.பி.1986: ஆண்டுதோறும் தமிழ்நாட்டரசின் 'திருவள்ளுவர் விருது' என்றொரு சிறப்பு மிக்க விருது தொடர்ந்து தமிழக அரசால் அளிக்கப்பட்டு வருகிறது.

கி.பி.1990: சென்னையில் உலகத் திருக்குறள் மையம் தொடங்கப்பட்டது.

கி.பி.1994: உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை சார்பில் தமிழ்நாட்டில் உள்ள 50 ஆயிரம் கோயில்களிலும் 'வள்ளுவர் அறிவகம்' ஒன்றை ஏற்படுத்தும்



முயற்சியைப் பினாங்கு நகரைச் சார்ந்த இராம்மோகன் ஏற்பாடு செய்தார். அதன் முதன்முயற்சியாகக் காரைக்குடி அருகே உள்ள கானாடுகாத்தானில் உள்ள சுந்தரமூர்த்தி விநாயகர் கோயிலில் 'வள்ளுவர் அறிவகம்' திறக்கப்பட்டது. குன்றக்குடி அடிகளார் அதைத் திறந்து வைத்தார். திருச்சி அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலை 30.10.1994 முதல் இயங்கத் தொடங்கியது. ஐயா இளங்குமரனார் அவர் பொறுப்பில் தொடங்கப்பட்ட அந்தத் தவச்சாலையில் அரிய நூலகம் ஒன்றும், நிகழ்ச்சிகள் நடப்பதற்கான சூழலும் அமைக்கப்பட்டிருந்தன.

கி.பி.1995: தஞ்சையில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது திருவள்ளுவர் படம் பொறித்த ஐந்து, இரண்டு, ஓர் உருவாக் காசுகள் இந்திய அரசால் வெளியிடப்பட்டன.

கி.பி.1996: உலகத் திருக்குறள் மையத்தின் சார்பில் திருக்குறள்வழித் திருமண முறை உருவாக்கப்பட்டு பன்னூற்றுக்கணக்கான திருமணங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதேபோல் புதுமனை புகுவிழா, வளைகாப்பு, குழந்தையைத் தொட்டிலில் போடும் விழா. பெயர் சூட்டும் விழா, பொன் விழா, மணிவிழா. விடைபெறும் விழா என அனைத்து விழாக்களிலும் திருக்குறள் ஓதப்பட்டு நடந்திடும் வகையில் உலகத் திருக்குறள் மையம் நடத்திவருகிறது. இறுதிச் சடங்குகளையும் திருக்குறள் ஒதியே நடத்திட வேண்டுமாய் வேறு பிற சமயச் சடங்குகளையெல்லாம் தவிர்த்து விட்டு நடைமுறைப்படுத்திப் பலரும் செய்து வந்தனர். ஆயினும் உலகத் திருக்குறள் மையத்தின் திட்ட நடைமுறையாகவே அது பின்பற்றப்படுகிறது.

கி.பி.1997: பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் 1240 குறள்களுக்கு மட்டுமான 'திருக்குறள் மெய்ப்பொருளுரை' நூல்கள் நான்கு வெளிவந்தது.

கி.பி.1999: உலகத் திருக்குறள் மையத்தின் சார்பில் தொடர்ந்து 'திருவள்ளுவர் நாள்காட்டி' வெளியிடப்பட்டு வருகிறது.

கி.பி.2000: கன்னியாகுமரியில் 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை தமிழக அரசால் நிறுவப்பட்டது. முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் பெருமுயற்சி எடுத்து நிறுவினார்.

கி.பி.2001: வள்ளுவர் கோட்டத்தில் மாணவர்களுக்கான திருக்குறள் பயிற்சி வகுப்புகளை கிழமை (வாரந்) தோறும் நடத்துவதற்கும், திருக்குறள் ஆய்வரங்குகள் நடத்துவதற்கும் தமிழக அரசு ஆணையிட்டது. அதன் அடிப்படையில் 2001ஆம் ஆண்டுமுதல் ஒவ்வோர் அறிவன்(புதன்) கிழமையும் பிற்பகல் 3.30 மணியிலிருந்து 5 மணி வரை நடைபெறுகின்றது.

கி.பி.2005: திருக்குறள் தொடர்பான அனைத்துத் தரவுகளையும் திரட்டிப் பாதுகாக்கும் வகையில் 2005இல் பாளையங்கோட்டையில் திருக்குறள் களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட்டது.

கி.பி.2007: திருக்குறள் அரசுக் கழகம் பா.வளன்அரசைத் தலைவராகவும், ஆதிலிங்கத்தைப் பொதுச்செயலாளராகவும் கொண்டு நாகர்கோயிலில்



தொடங்கப்பட்டது.

கி.பி.2015: சனவரி 15ஆம் நாள் திருவள்ளுவர் நாளன்று சென்னை - தமிழர் (மெரினா) கடற்கரையில் 1330 குறள்களையும் 400 அடி நீளப் பதாகையில் பதித்து உயர்த்திப் பிடித்த நிகழ்வு சிறப்புற நடந்தது.

கி.பி.2016: திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால் முழுமையையும் கல்விக்கூடங்களில் இடம்பெறச் செய்ய வேண்டும் என சென்னை உயர்மன்றத்தின் மதுரைக்கிளை தீர்ப்பாணை வெளியிட்டது. உயர்நீதிமன்ற நடுவர் திரு. மகாதேவன் அவர்களின்வழி நீதிப் பேராணை எண். 11999 / 2015 வழி இத்தீர்ப்புரை வழங்கப்பட்டது. மேற்படி இத்தீர்ப்பினை நடைமுறைப்படுத்தும் வகையில் தமிழக அரசு ஆணையும் 51/2017 வெளியிட்டது.

கி.பி.2019: தி.பி.2050 கடகம் 27 (ஆகத்து 12 - 2019) அன்று பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் திருக்குறள் மாநாடு சென்னை காமராசர் அரங்கில் நடைபெற்றது.

கி.பி.2021: தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வாயிலாக 'தீராக்காதல் திருக்குறள்' என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகள் நடத்திட சிறப்பு நிதியாக ரூ.2.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு காசோலையாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் முதல் நிகழ்வாக மாநில அளவில் உள்ள 12,000 பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கென திருக்குறள் 'குறளோவியப் போட்டி' நடத்தப்பட்டு, 365 ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெற்றி பெற்ற மூன்று மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பரிசுத்தொகை வழங்கப்பட்டது. இப்போட்டியில்



தேர்ந்தெடுக்கப்பட்ட 356 ஓவியங்கள் தினசரி நாட்காட்டியாக அச்சிடப்பட்டுள்ளது. மாணவர்கள் வரைந்த ஓவியங்களைப் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பார்வையிடும் வண்ணம் சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்திலும், மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற சித்திரைப் பொருட்காட்சியிலும் காட்சிப்படுத்தப்பட்டது. மேலும், 'குறள் இனிது' என்ற பெயரில் திருக்குறள் நாட்டிய நாடகங்கள் நடத்தப்பட்டுள்ளது.

கி.பி.2021: திருக்குறளின் 1330 குறட்பாக்களையும் முழுமையாக முற்றோதல் செய்யும் மாணவர், மாணவியர்களின் திறமையை ஊக்குவித்துப் பாராட்டும் வகையில் அவர்களுக்கு குறள்பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 2020-2022 ஆகிய நிதியாண்டுகளில் 219 மாணவர்களுக்கு குறள் பரிசுத் தொகை ரூ.10,000/மும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டது.

கி.பி.2022: 124 மாணவர்களுக்கு குறள் பரிசுத்தொகையாக தலா ஒரு மாணவருக்கு ரூ.15,000/(ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

கி.பி.2023: 108 மாணவர்களுக்கு குறள் பரிசுத் தொகை அரசின் சார்பில் வழங்கப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 598 பள்ளி மாணாக்கர்களுக்கு குறள்பரிசுத்தொகையாக ரூ.78,75,000/ (ரூபாய் எழுபத்து எட்டு இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) வழங்கப்பட்டுள்ளது.

கி.பி.2024: 'தீராக்காதல் திருக்குறள்' திட்டத்தின் படி விருதுநகர் மாவட்ட நிர்வாகம்- தமிழ் இணையக் கல்விக் கழகம் சார்பில் மாணவர் 'திருக்குறள் மாநாடு' நடத்தப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் இருந்து 800 மாணவர்கள் பங்கேற்றனர். 200 ஆசிரியர்கள் பங்கேற்றனர். அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலுக்கு தனித்தனியாக மாணவர்களால் வரையப்பட்ட குறள் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தன.


கி.பி.2024: திருக்குறளை மையமாகக் கொண்டு வாழ்வியல் சூழலோடு தொடர்புப்படுத்தி நன்னெறிக் கதைகள், நாடகங்கள் மற்றும் நாட்டுப்புறப் பாடல்கள் வடிவில் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வழிவகை செய்திடும் வகையில் நிகழ்ச்சிகள் நடத்திட அரசால் அறிவிக்கப் பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டம், கணியாம்பூண்டியில் அமைந்துள்ள இந்திய மருத்துவக் கழகம் மரு. முருகநாதன் அரங்கத்தில் 12.09.2024 அன்று நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முத்தமிழறிஞர் கலைஞரின் குறளோவியம் நாட்டிய நாடகம் நடத்தப்பெற்றது. தமிழ்மீதும் திருக்குறள்மீதும் தீராப்பற்று கொண்ட மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் தன்னம்பிக்கையை வளர்க்கும் வகையிலும், அய்யன் திருவள்ளுவரின் பெருமையைப் பறைசாற்றும் வகையிலும் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

கி.பி.2024: டிசம்பர் 31 2025 சனவரி 1 ஆகிய இருநாட்களும் கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலையின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழா கொண்டாடப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

"வள்ளுவம் என்பது வாழ்வியல் நெறியாக மாற வேண்டும். சமுதாயம்-குறள் சமுதாயமாக மலர வேண்டும். வேற்றுமையின் வேர்களைக் கிள்ளியெறிய வள்ளுவ மருந்தே பொது மருந்தாக ஆகுதல் வேண்டும்."- என்று சொல்லி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

வான்புகழ் கொண்டதாக வள்ளுவம் தழைத்து வருகிறது.

(நன்றி: திருவள்ளுவர் 2050)





போற்றி! போற்றி!

திருவள்ளுவர் கண்ட முழுமுதல் இறைமை வழிபாடு

இலக்கியச் செம்மல்
இரா.இளங்குமரனார்

திருக்குறளை ஓதினால் பண்பாடு தானேவரும்.
திருக்குறளை ஓதினால் மனமாசு ஒழியும்.
திருக்குறளை ஓதினால் நோய்நொடி நீங்கும்.
திருக்குறளை ஓதினால் உயிர்தளிர்த்து நீடு வாழலாம்.
திருக்குறளை ஓதினால் தெய்வநிலை எய்தலாம்.

ஆதலால் திருக்குறளை ஓதிச் சீரும் சிறப்பும் பேரும் பெருமையும் வாழ்வும் வளமும் பெற்றுச் சிறப்பெனும் செம்பொருள் கண்டு பேராப் பெருநிலை எய்தலாம்.

இதனை எண்ணிப் பயன்பெற்று வரும் பட்டறிவால் படைக்கப் பெற்றதே இப் போற்றி. ஆதலால், இதனை ஓதியும் உணர்ந்தும் வழிபட்டும் ஒளிமிக்க வாழ்வை ஒவ்வொருவரும் அடைவாராக.

இதனைத்தொகுத்து வழங்குபவர் குறளாய இணை அமைப்பாளரும், திருவள்ளுவர் தவச்சாலை நிறுவனரும் ஆகிய இரா.இளங்குமரனார் ஆவர்.



1. அகர முதலாம் ஆதியே போற்றி
2. மலர்மிசை ஏகும் மாணடி போற்றி
3. தனக்குவமை இல்லாத் தகையடி போற்றி
4. எண்குணத் திலங்கும் இறையே போற்றி
5. அமிழ்த மழையாம் அருளே போற்றி
6. ஐம்பொறி அடக்கும் ஆற்றலே போற்றி
7. நிறைமொழி அருளும் நிறைவே போற்றி
8. குணமெனும் குன்றே குறியே போற்றி
9. மனத்தில் மாசிலா மணியே போற்றி
10. வாழ்வாங்கு வாழும் வாழ்வே போற்றி
11. மங்கல மனையற மாட்சியே போற்றி
12. அறிவறி பண்புப் பேறே போற்றி
13. அன்போ டியைந்த வழக்கே போற்றி
14. வருவிருந் தோம்பும் வளமே போற்றி
15. இன்சொல் வழங்கும் இயல்பே போற்றி
16. செய்யாமற் செய்யும் செழுநலம் போற்றி
17. காலத் துதவும் கனிவே போற்றி
18. நெஞ்சங் கோடா நெறிநிலை போற்றி
19. நிலையில் திரியா மலையே போற்றி
20. ஆஒழுக்கம் குறையா உரமே போற்றி
21. பொறுக்கும் அழியாப் புகழே போற்றி
22. அழுக்கா றில்லா அறனே போற்றி
23. அறனறிந்து வெஃகா அறிவே போற்றி
24. புறஞ்சொலல் அறியாப் பொலிவே போற்றி
25. பயனில பகராப் பண்பே போற்றி
26. பிறன்கே டெண்ணாப் பெருமையே போற்றி
27. ஒத்த தறியும் உயர்வே போற்றி
28. ஊருணி நீராம் உடைமையே போற்றி

29. பயன்மரம் ஆகும் பரிவே போற்றி
30. மருந்து நலமாம் மாண்பே போற்றி
31. வறியார்க் குதவும் வாழ்வே போற்றி
32. பசித்துயர் மாற்றும் பரமே போற்றி
33. வசையிலாப் புகழே வானே போற்றி
34. தன்னுயிர் அஞ்சாத் தகவே போற்றி
35. அல்லல் அறியா அருளே போற்றி
36. உயிரழித் துண்ணா ஒளியே போற்றி
37. தன்னுயிர் தானறு தவமே போற்றி
38. கூற்றையும் வெல்லும் நோற்றலே போற்றி
39. அளவறி நெஞ்சத் தறமே போற்றி
40. உள்ளத்தாற் பொய்யா ஒழுக்கமே போற்றி
41. வெகுளியை மறக்கும் விரிவே போற்றி
42. இன்னாமை எண்ணா இனிமையே போற்றி
43. பகுத்துண் டோம்பும் பரிவே போற்றி
44. நிலைபே றுணரும் நிலையே போற்றி
45. பற்றது பற்றாப் பற்றே போற்றி
46. மெய்ப்பொருள் உணரும் மேன்மையே போற்றி
47. ஐயம் அணுகாத் தெளிவே போற்றி
48. 'சிறப்பெனும் செம் பொருட் செறிவே போற்றி
49. பேரா இயற்கைப் பெற்றியே போற்றி
50. அசையா உறுதி ஆக்கமே போற்றி
51. முறை செய் தருளும் இறையே போற்றி
52. உலகின் புறத்தா னின்புறவே போற்றி
53. நுண்மாண் நுழைபுல நோன்பே போற்றி
54. ஆவ தறியும் அறிவே போற்றி
55. எதிரதாக் காக்கும் இயல்பே போற்றி
56. வருமுன் காக்கும் வாழ்வே போற்றி

57. அறனறி மூத்த அறிவே போற்றி
58. பெரியரிற் பெரிய பேறே போற்றி
59. மன்னுயிர்க் காக்க மனநலம் போற்றி
60. தக்கதே செய்யும் தகைமையே போற்றி
61. அமைந்தாங் கொழுகும் அளவே போற்றி
62. செய்தற் கரிய செய்கையே போற்றி
63. அஞ்சாத் துணிவே துணையே போற்றி
64. திறந்தெரிந் தறியும் தெளிவே போற்றி
65. வாரி பெருக்கும் வகையே போற்றி
66. அளவ ளாவும் அமிழ்தே போற்றி
67. சுற்றம் சுற்றும் சுடரே போற்றி
68. புகழ்ந்தவே புரியும் புகழே போற்றி
69. கோலது கோடாக் கொற்றமே போற்றி
70. குடிபுறங் காக்கும் குணமே போற்றி
71. ஒத்தாங் கொறுக்கும் உரனே போற்றி
72. கண்ணோட்டம் என்னும் கவினே போற்றி
73. உள்ளம் உடைமையாம் உடைமையே போற்றி
74. நீரள வுயரும் மலருளம் போற்றி
75. குடியெனும் குன்றா விளக்கே போற்றி
76. அறிவறிந் தாற்றும் ஆள்வினை போற்றி
77. அடுக்கும் இடுக்கணை அழிப்பாய் போற்றி
78. இன்பத் தின்பம் விரும்பாய் போற்றி
79. மதிநுட்பம் நூலோ டுடையாய் போற்றி
80. உலகத் தியற்கை உணர்வோய் போற்றி
81. நிரந்தினிது சொல்லும் நீர்மையே போற்றி
82. வேண்டிய எலாம்தரும் வினைநலம் போற்றி
83. நடுக்கறு காட்சி நயனே போற்றி
84. சொல்லிய செய்யும் சுடரே போற்றி

85. வீறெய்து மாண்பாம் வினைத்திறம் போற்றி
86. நூலாருள் நூல்வல்ல நுண்மையே போற்றி
87. தூய்மை துணைமை துணிவே போற்றி
88. போற்றிற் கரியவை போற்றியே போற்றி
89. குறிப்பிற் குறிப்புணர் குறிப்பே போற்றி
90. ஒளியார் முன்னுறும் ஒளியே போற்றி
91. கற்றவை செலச்சொல் கலையே போற்றி
92. நாடா வளத்ததாம் நாடே போற்றி
93. அன்பீன் குழவியாம் அருளே போற்றி
94. அருள்வளர் செவிலிப் பொருளே போற்றி
95. நிறைநீர நீரவர் கேண்மையே போற்றி
96. உள்ளம் பெருகுவ உள்ளுகை போற்றி
97. கேளிழுக்கம் கேளாக் கெழுதகை போற்றி
98. இகலெனும் எவ்வம் இல்லாய் போற்றி
99. பகைநட்பாக் கொள்ளும் பண்பே போற்றி
100. அளவறிந் துண்ணும் அறிவே போற்றி
101. செப்பமும் நாணும் சேர்வே போற்றி
102. பெருக்கத்து வேண்டும் பணிவே போற்றி
103. உள்ள வெறுக்கையாம் ஒளியே போற்றி
104. கொல்லா நலத்ததாம் நோன்மையே போற்றி
105. நயனொடு நலம்புரி பயனே போற்றி
106. சீருடைச் செல்வ மாரியே போற்றி
107. கருமத் தால் நாணும் நாணே போற்றி
108. உழுதுண்டு வாழும் வாழ்வே போற்றி

அகர முதலாம் ஆதியே போற்றி போற்றி!





திருவள்ளுவரின் வேண்டுதல்கள்



பெரும்புலவர்
மு. படிக்கராமு

1. “பொய்தீர் ஒழுக்க நெறி நிற்க வேண்டும்”
2. “வான் அமிழ்தம் என்பதை உணர வேண்டும்”
3. “எவ்வுயிர்க்கும் செந்தண்மைபூண்டு ஒழுக வேண்டும்
4. “அன்றறிவாம என்னாது அறம் செய்ய வேண்டும்”
5. “இயல்பினான் இல்வாழ்க்கை வாழ வேண்டும்”
6. “ஏறு போல் பீடு நடை போட வேண்டும்”
7. “அறிவறிந்த நன்மக்கள் பேறு பெற வேண்டும்”
8. “அன்பை அகத்துறுப்பாய்க் கொள்ள வேண்டும்”
9. “முகனமர்ந்து நல்விருந்து ஓம்ப வேண்டும்”
10. “நல்லவை நாடி இனிவை கூறல் வேண்டும்”
11. “நன்றல்லது அன்றே மறக்க வேண்டும்”
12. “நெஞ்சத்துக் கோடாமையை அணியாய்க் கொள்ள வேண்டும்”
13. “யாகாவார் ஆயினும் நாகாக்க வேண்டும்”
14. “உலகத்தோடு ஒட்ட ஒழுகல் வேண்டும்”
15. “பிறன்மனை நோக்காத பேராண்மை வேண்டும்”
16. “பொறையுடைமை போற்றி ஒழுக வேண்டும்”
17. “யார் மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறவேண்டும்”
18. “பிறன்கைப்பொருள் வெஃகாமை வேண்டும்”
19. “ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண வேண்டும்”
20. “சொல்லிற் பயனுடைய சொற்களையே சொல்ல வேண்டும்”
21. “செறுவார்க்கும் தீய செய்யாமை வேண்டும்”
22. “தக்கார்க்கு வேளாண்மை செய்தல் வேண்டும்”
23. “இலனென்னும் எவ்வம் உரையாது ஈதல் வேண்டும்”
24. “தோன்றின் புகழொடு தோன்ற வேண்டும்”


25. “நல்லாற்றான் நாடி அருளாள வேண்டும்”
26. “பிறிதொன்றன புலாஅல் உண்ணாமை வேண்டும்”
27. “உற்றநோய் தோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை வேண்டும்”
28. “உலகம் பழித்ததை ஒழிக்க வேண்டும்”
29. “எனைத்தொன்றும் கள்ளாமை காக்க வேண்டும்”
30. “யாதொன்றும் தீமை இலாத சொலல் வேண்டும்”
31. “தன்னைத்தான் காக்கின் சினம்காக்க வேண்டும்”
32. “பிறிதின் நோய் தந்நோய் போல் போற்ற வேண்டும்”
33. “பகுத்துண்டு பல்லுயிர் ஓம்ப வேண்டும்”
34. “செல்லம் பெற்றால் அற்குப செயல் வேண்டும்”
35. “யான் எனது என்னும் செருக்கு அறுக்க வேண்டும்”
36. “சிறப்பென்னும் செம்பொருள் காண வேண்டும்”
37. “அவர் என்னும் துன்பத்துள் துன்பம் கெட வேண்டும்”
38. “உலகத்து இருவேறு இயற்கையை உணரவேண்டும்”
39. “முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் வேண்டும்”
40. “கேடில் விழுச்செல்வமாம் கல்வி கற்க வேண்டும்”
41. “நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொள்ளாமை வேண்டும்”
42. “எனைத்தானும் நல்லவை கேட்கவேண்டும்”
43. “தீதொரீஇ நன்றின் பால் உயக்க வேண்டும்”
44. “தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண வேண்டும்”
45. “பெரியாரைப் பேணித் தமராக் கொள்ள வேண்டும்”
46. “மனநலம் உடையார்க்கும் இனநல ஏமாப்பு வேண்டும்”
47. “எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும்”
48. “ஆற்றின் அளவறிந்து ஈதல் வேண்டும்”


49. “பருவத்தோடு ஒட்ட ஒழுக வேண்டும்”
50. “எஞ்சாமை எண்ணி இடத்தால் செயல் வேண்டும்”
51. “கருமத்தைக் கட்டளைக் கல்லாய்க் கொள்ள வேண்டும்”
52. “வினை செய்வானை மன்னன் நாள்தோறும் நாட வேண்டும்”
53. “சுற்றத்தால் சுற்றப்பட ஒழுக வேண்டும்”
54. “புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்”
55. “மன்னன் குடிதழீஇக் கோலோச்ச வேண்டும்”
56. “நாள்தொறும் நாடி முறை செய்ய வேண்டும்”
57. “கடி தோச்சி மெல்ல எறிய வேண்டும்”
58. “கருமம் சிதையாமல் கண்ணோட வேண்டும்”
59. “சிறப்பறிய ஒற்றின் கண் செய்யாமை வேண்டும்”
60. “உள்ளுவதெல்லாம் உயர்வே உள்ள வேண்டும்”
61. “மடி கொன்று குடியைக் குடியாக்க வேண்டும்”
62. “அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்”
63. “இடுக்கண் வருங்கால் நக வேண்டும்”
64. “உலகத்து இயற்கை அறிந்து செயல் வேண்டும்”
65. “கற்றது உணர விரித்துரைக்க வேண்டும்”
66. “இடுக்கட் படினும் இளிவந்த செய்யாமை வேண்டும்”
67. “எண்ணிய எண்ணியாங்கு எய்த வேண்டும்”
68. “வினையால் வினையாக்கிக் கோடல் வேண்டும்”
69. “தூதர்க்கு அன்பு அறிவு சொல்வன்மை வேண்டும்”
70. “மன்னர் விழைப விழையாமை வேண்டும்”
71. “ஐயப் படாஅது அகத்தது உணர வேண்டும்”
72. “உணர்வது உடையார்முன் சொல்ல வேண்டும்”

73. “கற்றார்முன் கற்ற செலச்சொல்ல வேண்டும்”
74. “பசியும் பிணியும் பகையும் சேராநாடு வேண்டும்”
75. “ஆற்றுபவர்க்கும் அஞ்சித்தற்போற்றுபவர்க்கும் அரண்வேண்டும்”
76. “பொருள் திறனறிந்து தீதின்றி வர வேண்டும்”
77. “உறுப்பமைந்து ஊறஞ்சாவெல்படை வேண்டும்”
78. “புரந்தார்கண் நீர்மல்கச் சாக வேண்டும்”
79. “உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண் களைய வேண்டும்”
80. “பழிநாணுவானைக் கொடுத்தும் நட்புக் கொளல் வேண்டும்”
81. “கிழமையைக் கீழ்ந்திடா நட்பு வேண்டும்”
82. “பண்பிலார் கேண்மை குன்றல் வேண்டும்”
83. “அகத்தின்னா வஞ்சரை அஞ்ச வேண்டும்”
84. “ஒதி உணர்ந்து பிறர்க்கு உரைத்துத் தானடங்கவேண்டும்”
85. “உலகத்தார் உண்டு என்பதை ஏற்க வேண்டும்”
86. “இகல் என்னும் துன்பத்துள்துன்பம் கெடல் வேண்டும்”
87. “வலியார்க்கு மாறேற்றல் ஓம்ப வேண்டும்”
88. “இளைதாக முள்மரம் கொல்ல வேண்டும்”
89. “கேள்போல் பகைவர்தொடர்புக்கு அஞ்ச வேண்டும்”
90. “ஆற்றுவார் ஆற்றல் இகழாமை வேண்டும்”
91. “பெண்ணேவல் செய்தொழுகா ஆண்மை வேண்டும்”
92. “பொருட் பொருளார் புன்னலம் தோயாமை வேண்டும்”
93. “கட்காதல் கொண்டு ஒழுகாமை வேண்டும்”
94. “வென்றிடினும் சூதினை விரும்பாமை வேண்டும்”
95. “அற்றால் அளவு அறிந்து உண்ண வேண்டும்”
96. “குலம் வேண்டின் யார்க்கும் பணிவு வேண்டும்”

97. “பெருக்கத்துப்பணிவும், சுருக்கத்து உயர்வும் வேண்டும்”
98. “ஆற்றின் அருமை உடைய செயல் ஆற்ற வேண்டும்”
99. “இன்னா செய்தார்க்கும் இனியவே செய்ய வேண்டும்”
100. “பயனுடையார் பண்பு பாராட்ட வேண்டும்”
101. “பொருளானாம் எல்லாம் என்று மருளாமை வேண்டும்”
102. “பிறர் நாணத்தக்கது தான் நாண வேண்டும்”
103. “குற்றமிலனாய்க் குடி செய்து வாழ வேண்டும்”
104. “உழுவார் உலகத்தார்க்கு ஆணி என வேண்டும்”
105. “இன்மையை இன்மை ஆக்க வேண்டும்”
106. “இகழாது எள்ளாது ஈவாரைக் காண வேண்டும்”
107. “இரந்து உயிர் வாழாமை வேண்டும்”
108. “மக்களெல்லாம் மக்களாய் வாழவேண்டும்”


“வள்ளுவம் வாழ்வியல்
ஆக வேண்டும்”







ஓர் பார்வை...


திருக்குறள் மொழிபெயர்ப்புகள்




திருக்குறள்
தமிழ் – ஆங்கிலம்
THIRUKURAL
TAMIL-ENGLISH
தமிழ்
2012


திருவள்ளுவநாயனர் அருளிச்செய்த
திருக்குறள்
THE
'SACRED' KURRAL
OF
TIRUVALLUVA-NAYANAR
WITH
INTRODUCTION, GRAMMAR, TRANSLATION
NOTES LEXICON AND CONCORDANCE
(IN WHICH ARE REPRINTED FR. BESCHI'S
AND F.W. ELLIS VERSIONS)
REV. G. U. POPE
ASIAN EDUCATIONAL SERVICES
New Delhi 1981


வாக்ரிபோலி என்னும் நரிக்குறவர் மொழியில்
திருக்குறள்
TIRUKKURAL
IN
VAAGRI BOLI
the Language of the Narikorava People
DER KÜRAL
TIRUVALLUVER
KARL GRAUL, Dr TH.
LEIPZIG 1856
LONDON 1856


திருக்குறள்
அதிகாரம்: புகழ்
குறள்: 236
தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.






குறள் 1330
ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்
விளக்கம்
ஒருவருக்கொருவர் செல்லமாகச் சினங்கொண்டு
பிரிந்திருப்பது எனப்படும் ஊடல், இருவரும் சேர்ந்த
பிறகு காதல் இன்பத்தை அதிகமாகப் பருகிட
உதவும் எனவே ஊடல் கொள்வதே ஒரு இன்பமான
செயல்தான்
1330



TIRUKKURAL
TAMIL TEXT
WITH HINDI TRANSLATION
Prof. B. D. JAIN, M.A., LL.B.


திருவள்ளுவ நாயனார்
அருளிச்செய்த
திருக்குறள்-பொருட்பால்
சமீக்ஷி மொழிபெயர்ப்பு
by
श्री B. D. ஜைன், M.A., LL.B.
1952


(३६)
(२) अर्थ विभाग
तृतीय भाग—राज्य
उनतालीसवां परिच्छेद
राजा के गुण


TIRUKKURAL
IN MANIPURI
Translated by
SOIBAM REBIKA DEVI


TIRUKKURAL
IN MANIPURI
Text, Transliteration and Translation
Translated by
SOIBAM REBIKA DEVI
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
CHENNAI
2012


1
கடவுள் வாழ்த்து


南インド タミールの聖典

ティルクラル

松永 脩蔵 訳



聖なるクラール

第一部 美徳

I 序文

第一章 神の讃美

1 すべての文字の初めにaがあるように、
世界の始めに一人の神がある。


2 その知識を持つ神の御足をあがめないものに、
生存の日々はない。

3 人々のなかにも偉大で賢えたかず、
天国で、限りない喜びにひたるであろう。

4 欲望も怒りもない神の御足のふかき徳を人のたしろへは、
悪いことは何もしてやってこない。

5 本当に神を讃えることを喜びとするものは、
悲しみから始まった行為の報いが、
生かろうと思うことのない。

1


திருவள்ளுவ நாயனார்
அருளிச்செய்த

திருக்குறள்

The Tirukkural


古臘箴言


古臘箴言

祢倍維魯瓦著

程曦譯

馬來亞大學
印度文學系出版
香港大學出版社發行


卷首——引論

I

神明頌

1 唯羅世上一切言之起始，神羅世上一切存之本原。

2 若人不服從於全智神足之下，則有學識亦別所用也。

3 凡依止於其深心圍示境之神足之下者，將獲長生於世。

4 依止於神足而忘情於愛世者，將永離苦惱。

5 盡脫煩惱神明者，得超脫於善惡因果之外。

6 根本其道而歸乎五欲者，將獲益於世。

7 惟獨依止於蓮萬福上之神足下者，可超離苦，他人未能也。

8 神羅德之海，依止於其神足下者可超得渡，他人未能也。

9 頭首不敬禮於具八德之神前者，則與木之頭官無異也。

10 依止於神足下者，可超超脫於生死之海，他人未能也。



ТИРУКУРАЛ

ПРАВЕДНОСТЬ
МУДРОСТЬ
ЛЮБОВЬ

Избранные афоризмы

Перевод с тамильского
Алека Ибрагимова


*

Бездонное море—и то оскудеет, коль тучи
Его не наполнят водою падучей.

*

Не будет дождя—и замолкнут молебны богам,
Закроется всеми покинутый храм.

*

Не будет дождя—и аскеты прервут подаянье.
Не сможет никто раздавать подаянье.

*

Во всех водоемах иссякнет и бездождье вода—
И жизнь на земле прекратится тогда.

19



திருக்குறள்
இரண்டாம் பொழிவெளியீடு
1991


કુરળ

(તમિળ વેદ)


સંત તિરુવલ્લુવર


યુનિવર્સિટી ગ્રંથ નિર્માણ બોર્ડ


પૂર્વભૂમિકા

અધ્યાય ૧

અદ્વિતીય ઈશ્વરનો





لفظ لفظ گہر


مصنف


تروولور

مترجم

مختار بدری


بدھت




तिरुवळ्ळुवर

हाणें रचिल्लें

तिरुक्कुरळ

वा


श्रीकुरळ

(कोंकणी अणकार)

अणकारपी

सुरेश गुंडू आमोणकार

गीता प्रसार



पयली वांटो

मंगलाचरण


पयली अध्याय


ईशस्तवन



திருக்குறள்
සිංහලානුවාදය
අනුවාදිකා ඒ. චක්‍රපාණි



திருவள்ளுவரின் குரல்
දෙමළ ඡාඡ්‍යෙයි
සිංහලානුවාදය
දෙමළ: එස්. චක්‍රපාණි



පිවිසුම



सुनीतिकुसुममाला
तिरुक्कुरळ् संस्कृतानुवादः
TIRUVALLUVAR'S
TIRUKKURAL
In
Sanskrit Slokas
1983


सुनीतिकुसुममाला
तिरुक्कुरळ् संस्कृतानुवादः
TIRUVALLUVAR'S
TIRUKKURAL
In
Sanskrit Slokas
By
Sri S. A. Chakrapani Aiyar
1983


धर्मः
॥ ईश्वरस्तुतिः ॥


శ్రీ సూక్తులు
మూలము: తమిళ తిరుక్కురళ్


శ్రీ సూ క్తు లు
పంచమ సంపుటము
అ ర్థ ప రి చ్ఛే ద ము
[ధ. రూ. 20-00


శ్రీ సూక్తులు
అర్థపరిచ్ఛేదము



வீரமாமுனிவர் அருளிய

திருக்குறள் இலத்தீன் மொழிபெயர்ப்பு

தமிழாக்கம்:
முனைவர் வி. மி. சூசைமாணிக்கனார், சே. ச.

வீரமாமுனிவர் தமிழ் ஆய்வுக் கழகம்
கருமாத்தூர்-626 514

வீரமாமுனிவர் அருளிய

திருக்குறள் இலத்தீன் மொழிபெயர்ப்பு

[இந்து அதிகாரங்கள்]

தமிழாக்கம்:
முனைவர் வி. மி. சூசைமாணிக்கனார், சே. ச.
முதல்வர்
அருள் ஆனந்தர் கல்லூரி,
கருமாத்தூர் - 626 514

MORALIA TIRUVALLUVENI

அறப்பால் vel அறத்துப்பால்

LIBER I DE VIRTUTIBUS

PROLOGUS

AMPLECTENS TRIA CAPITA QUORUM

CAPUT I

கடவுள் வாழ்த்து

Dei Laus

திருவள்ளுவரின் அறவுரைகள்
அறப்பால் அல்லது அறத்துப்பால்
முதற்பகுதி — தற்பண்புகள்

முன்னுரை
மூன்று அதிகாரங்கள் கொண்டது, அவற்றுள்
முதல் அதிகாரம்
இறைப்புகழ்

1 அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

Litterae omnes caput habent literam A. Mundus caput habet Deum.

எல்லா எழுத்துகளும் 'அ' என்ற எழுத்திலிருந்து தொடங்குகின்றன. உலகம் கடவுளிலிருந்து தொடங்குகின்றது.

2 கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

Plurima didicisse quid amabo proderit, nisi veneris bonos ejus pedes, qui puram scientiam habet, idest, scientiam ab omni errore defaecatam.

TIRUWALLUWAR

TIRU-KURAL

Kural (Polish)

Translated by
WANDY DYNOWSKIEJ

BIBLIOTEKA POLSKA INDYJSKA
1956

Kwestia ta jest tradycyjny sposób „zmuszenia" rodzin
i krewnych dziewczęcia do dania swej zgody i wyrażenia
publicznego wesela; wyjaśniam go w przypisku na str.
60. Te dwie formy „małżeństwo tajemne" i „małżeństwo
prawowierne" lub sakramentalne, były niemal powszechnie
używane w starożytnym Tamilnadzie.

Drugą wedle krytyków specyficzną cechą sztuki miłosnej
tak w pierwszej jak i drugiej formie małżeństwa, czy też w
dziesięciu lub krótszych stosunkach z kurtyzanami – jest
przepełnianie się niemal umyślnie prowokowanych nastrojów
– pełnej harmonii kochanków, to znów „gniewu" czy odwrotnie
go „gniewu" to jednego, to drugiego, lub obojga. Nie
umiałam znaleźć odpowiedniego słowa w naszym języku
zeń angielskie „sulks", ani francuskie „bouderie" nie oddawało
mi się szczęśliwie oddającym ten nastrój, tak powszechnie
w owych, a może i w dzisiejszych czasach, „używany" wśród
kochanków, który Tiruwalluwar nazywa „kochającymi
nawet od widzenia" i „gniew, co znaku przydaje miłości".

Sądzę że ta część będzie może dla wielu czytelników
najciekawszą, najcharakterystyczniej oddającą osobistą kulturę Tamilów z
tych odległych czasach.

Wanda Dynowska



TIRUWALLUWAR

KURAL

Ku chwale Pana.

Jak „A" jest u początku futuru liter i dźwięków, tak
Pra-początków wszechistnienia jest ON.

Cóż warta jest wiedza, jeśli nie oszy nas uwielbienia
dla tych stóp Tego, który jest mądrości absolutnej
[illegible]?

1

तिरुवळ्ळुवराचें

तिरुक्कुरळ

TIRUKKURAL
Konkani Translation of
Tiruvalluvar's Tirukkural



तिरुवळ्ळुवर

हाणें रचिल्लें

तिरुक्कुरळ

वा

श्रीकुरळ

(कोंकणी अणकार)

अणकारपी

सुरेश गुंडू आमोणकार

गीता प्रसार

पयली वांटी

मंगलाचरण

पयलो अध्याय

ईशस्तवन

१. अकार जे चारेन शब्द सुरटीचो आदीं, तेंच परी तो आदी पुरूष चराचराचो आदीं.

२. त्या ज्ञानसरी पामान्याक इंपुजिका जाल्यार दुजें गिन्यान व्यर्थ.

३. भक्तांच्या हृदयकुमळांत राबपी त्या प्रभुच्या चरणांचो आश्रय घेतल्यो अमर जाता.

४. आवड आनी दुस्वास हांचेपैल्यान आसपी त्या प्रभुच्या पांयांचो आसरो घेतिल्ल्यान भवार्णवें चुकूंक केदांच वायना.

५. प्रभुचीं दयाकरां तळमळीत गाबपी भक्त जल्यार भवाच्या कार्मांचीं पळां केदांच भोगिनात.

६. इंद्रियांपैर जैत जोडून ईश्वराच्या मागीत वचपी दीर्घ विवीत जगतात.

७. आशुत अशा ईश्वराच्या चरणांचो आसरो घेतिल्लेच दुखळांतल्यान सुटतात.

८. धर्मचक्र आखिल्ल्या ईश्वराच्या चरणांचो आसरो घेतिल्लेच हो भवसागर तुलतात.

९. अशुतूंची अशा प्रभूकडची चंदिना अनी त्या चरणांपुसार आपलें मनें वागवना, तें मनचेंच नव्हे, तें पळी.

१०. प्रभुच्या चरणांचो आसरो घेतिल्लेच पल्ल्य भवांचो फेरो चुकयतात.

२ तिरुक्कुरळ

பிற மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள்

உலகில் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட அற இலக்கியம் திருக்குறள். கிடைத்துள்ள தகவலின்படி திருக்குறளை முதன்முதல் கிறித்துவத் துறவியான வீரமாமுனிவர் 1730ஆம் ஆண்டு இலத்தீன் மொழியில் பெயர்த்துள்ளார் எனத் தெரிகிறது.

திருக்குறள் இதுவரை 35 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு 132 மொழி பெயர்ப்புகள் வெளிவந்துள்ளன அவற்றுள்:

இந்திய மொழிகளில்

1.	மலையாளம்	1863, 1894	கிருட்டிண வாத்தியன்
2.	மலையாளம்	1875	அழகத்துக்குருவு
3.	மலையாளம்	1915	தீதிபதி கோவிந்தன்
4.	மலையாளம்	1938, 1941	இளமசி
5.	மலையாளம்	1851	நாலோதரன்
6.	மலையாளம்	1957	இராமகிருட்டிணன்
7.	மலையாளம்	1960	கோபாலகுருபு வெள்ளிக்குளம் கோபாலகுருபு
8.	மலையாளம்	1963	பாலகிருட்டிணன்
9.	மலையாளம்	1966	பரமேசுவரன்
10.	மலையாளம்	1968	நாலோதரன் (சிறுவர் பதிப்பு)
11.	மலையாளம்	1998	இரமேசன்
12.	தெலுங்கு	1887, 1894	காடபத்தி வேங்கடராம வித்தியாதத்தாதர
13.	தெலுங்கு	1892	சோக்கம் நரசிங்கலு
14.	தெலுங்கு	1906	இலக்குமி நாராயணர்
15.	தெலுங்கு	1948	சீராமுலு
16.	தெலுங்கு	1952	சக்கண்ணன்
17.	தெலுங்கு	1954	இராதாகிருட்டிணசர்மா சல்வா
18.	தெலுங்கு	1955	சலம்மா
19.	தெலுங்கு	1966	சிரபதி கோபலராவ் எல்லூர் சீதாமல்லா சத்தியநாராயண சீரமலிங்கச்சர்மா
20.	கன்னடம்	1940	பி.எம்.சிகந்தையா



21.	கன்னடம்	1956, 1960	ப.குண்டப்பா
22.	கன்னடம்	1981	சீனடகையா
23.	கன்னடம்	1982	பி.எஸ். சிதிவாசன்
24.	சமஸ்கிருதம்	1922, 1927	அப்பா வசபேயின்
25.	சமஸ்கிருதம்	1937, 1940	சங்கர சுப்பிரமணியர்
26.	சமஸ்கிருதம்	1942	கல்கி கோவிந்தராய் செயின்
27.	சமஸ்கிருதம்	1952	குருட்காலியம்
28.	சமஸ்கிருதம்	1962	சீராமதேசிகன்
29.	இந்தி	1924,1969	கோனந்த ராக்கல்
30.	இந்தி	1942	கோவிந்தராய் சாரி
31.	இந்தி	1942	கோவிந்தராச செயின்
32.	இந்தி	1958	சங்கராச்
33.	இந்தி	1961	பி.டி. செயின்
34.	இந்தி	1964	எம்.சி. வெங்கடகிருட்டிணன்
35.	இந்தி	1962	சோத்திரி
36.	உருது	1956	அசாத் சாலவாத்தி
37.	உருது	1976	முகம்மது யூசுப் கோகன்
38.	குசராத்தி	1931	நகக்கலல் கோக்கி
39.	குசராத்தி	1971	காந்திலால் கலனி
40.	வங்காளம்	1939	சன்மால் நளினி மோகன் எ.கி. சத்திரி
41.	மொராட்டிரம்	1960	எ.எ. இராம் எல்.ஆர். காரினமன்
42.	மராத்தியம்	1948	சேன்குருசி
43.	இராசஸ்தானி	1982	கமலா கூச்சு
44.	பஞ்சாபி	1983	இராமமூர்த்தி
45.	ஒரியம்	1985	நேக கிக நோத்து
46.	வர்போலி (நுகிக்குறவர் மொழி)	1979	கிட்டு சிரோமனி



ஆசிய மொழிகளில்

47.	பர்மியம்	1964	யு. தியோதான்ட்
48.	சீனம்	1967	சிங்க உசி குலா செல்லயன்
49.	சீனம்	1978	புலிமா
50.	அரபியம்	1979	முகமது யுசுப் கோன்
51.	ஐப்பானியம்	1981	மாத்சுகசா
52.	சிங்களம்	1961	மிசிகமி
53.	சிங்களம்	1984	சால்ஸ் தேசில்வா
54.	உருசியம்	1963	யூரி கிலோ சோவ், கிருட்டிணமூர்த்தி
55.	உருசியம்	1974	அராப் இப்ராகி சோவ்
56.	மலாய்	1964	இராம்லி பதைக்கீ
57.	மலாய்	1967, 1977	உசேன் இசுமாயில்




ஐரோப்பிய மொழிகளில்

58.	போலிஷ்	1958	உமாதேவி வாண்டி, சைனோவுகி
59.	கவீடிஸ்	1972	ஓ. எங்கிய பிகோம்
60.	இத்தாலியன்	1985	அந்தோனியா சோரென்டி
61.	பிஜு	1984	சாமுவேல் பெல்பிக்
62.	செக்கு மொழி	1952 - 54	கபில் கவலபில்
63.	டச்ச	1964	காத்து
64.	பின்னிக	1972	பெண்டி ஆல்தோ
65.	இல்பானிஸ்	1968	சி. அருள்
66.	இலத்தீன்	1730	வீரமாமுனிவர்
67.	இலத்தீன்	1856	சால்க கிரால்
68.	இலத்தீன்	1960	
69.	செர்மனியம்	1803	காமர்க
70.	செர்மனியம்	1847	பிரமரிக் ருக்கெர்த்
71.	செர்மனியம்	1856	66 வில்லியம் & நார்கேற்று
72.	செர்மனியம்	1865	கார்ல்கிரால்
73.	செர்மனியம்	1977	ஆல் பிரெக் & லலிதாம்பாள்
74.	பிரெஞ்ச	1767	----
75.	பிரெஞ்ச	1848, 52	ஏரியல்



76.	பிரெஞ்ச	1854, 59	துமாக
77.	பிரெஞ்ச	1867	வெடிர
78.	பிரெஞ்ச	1867	இலமாயிக
79.	பிரெஞ்ச	1867, 76	இதுமி எகேயெர்து
80.	பிரெஞ்ச	1889	பாரிபிதே பத்தேமிது
81.	பிரெஞ்ச	1889	தே பாரிக் தே போர்தேயின்
82.	பிரெஞ்ச	1942	ஞானவு தியாசே
83.	பிரெஞ்ச	1942	திக்கன்
84.	ஆங்கிலம்	1974	தின்டர்கி
85.	ஆங்கிலம்	1812, 1955	எல்லீ
86.	ஆங்கிலம்	1840	ட்ரு
87.	ஆங்கிலம்	1972	சல்லஸ் கோவா
88.	ஆங்கிலம்	1878, 1956	எட்வர்ட்
89.	ஆங்கிலம்	1885, 1956	எட்வர்ட் லெவிட் இராபின்சன்
90.	ஆங்கிலம்	1885	இலாரன
91.	ஆங்கிலம்	1885	கே.சே. இராபின்சன்
92.	ஆங்கிலம்	1860, 1960	சியர்ச புக்சே போப்
93.	ஆங்கிலம்	1915, 1961	வ.வே.சு. ஐயர்
94.	ஆங்கிலம்	1916	திருமதி. திருநாவுக்கரசு
95.	ஆங்கிலம்	1919, 72, 76, 80	வடிவேலு
96.	ஆங்கிலம்	1920	சபாத்தினம்
97.	ஆங்கிலம்	1925	எஸ்.எம். மைக்கேல்
98.	ஆங்கிலம்	1926	மாதவையா
99.	ஆங்கிலம்	1928	பரமேசுவரன்
100.	ஆங்கிலம்	1928, 1942	எஸ்.எஸ். பூரணலிங்கம், வி.ஆர். ராமச்சந்திரர்
101.	ஆங்கிலம்	1933, 1949	அரங்கதாதர்
102.	ஆங்கிலம்	1937, 65, 73	இராசரி
103.	ஆங்கிலம்	1949	வி.ஆர். இராமச்சந்திரர்
104.	ஆங்கிலம்	1950	பரமேசுவரனார்
105.	ஆங்கிலம்	1950	எம்.ஆர். இராமகோபாலர்
106.	ஆங்கிலம்	1951	பாப்பி
107.	ஆங்கிலம்	1953	சுக்லவர்த்தி நயினர்
108.	ஆங்கிலம்	1954	தங்காமி
109.	ஆங்கிலம்	1955	நாகராசுகையா
110.	ஆங்கிலம்	1955	எல்லீ
111.	ஆங்கிலம்	1956	ட்ரு & லாரன
112.	ஆங்கிலம்	1958	எச்.ஏ. பாப்லே
113.	ஆங்கிலம்	1962	கே.எம். பாலகப்பிரமணியன்
114.	ஆங்கிலம்	1963	ஆர். முத்துச்சாமி
115.	ஆங்கிலம்	1967	வி. சின்னாரச
116.	ஆங்கிலம்	1967	சி. வண்மீகநாதன்
117.	ஆங்கிலம்	1968, 70	சுத்தானந்தபாரதி
118.	ஆங்கிலம்	1969	சுத்தானி சீனிவாசன்
119.	ஆங்கிலம்	1975, 82	இ.வி. சிங்கன்
120.	ஆங்கிலம்	1976	ஓவிட் எமோன்ச
121.	ஆங்கிலம்	1982	எ.எம். ரமண
122.	ஆங்கிலம்	1984	எஸ். கப்ரமணியன் ஆர். ராஜலட்சுமி
123.	ஆங்கிலம்	1994	டாக்டர் வ.சே. குழந்தைசாமி
124.	ஆங்கிலம்	1994	கே.ஆர். சீனிவாசனார்
125.	ஆங்கிலம்	1994	கே. செல்லப்பன்
126.	ஆங்கிலம்	1999	எம்.எ. பூர்ணலிங்கம்
127.	ஆங்கிலம்	1999	கே.சி. அழகுடைதம்பி
128.	ஆங்கிலம்	2000	எ.எம். டயச
129.	ஆங்கிலம்	2000	அழகப்பா ராமமோகன்

திருக்குறள் - மூலமும் உரையும்



அறபபால

ON VIRTUE.

CHAP. 1. REFERENCE

கடவுளவாழ்த்து The praise of God.

The literal meaning of the title of this Chapter is preserved in the translation. According to established rule all Tamil compositions ought and, with few exceptions, all do commence by an invocation of the Deity, varying according to the sect of the writer. Tiruvalluver has devoted the whole of this Chapter to this subject.

I.

அ/கர்முதலவெழுத்தெனினாதி
பகவன்முதற்றேயுலகு (க)

As ranked in every alphabet the first
The self-same vowel stands, so in all worlds,
Th' eternal God is chief.

Literally *As A is the first letter &c*: the first of our vowels, when pronounced short, is here intended, which is actually the first letter in all alphabets and the meaning of the distich, therefore, is, that, as this letter, however varying in form, is the first in all alphabets, so the same Deity, however varying in his energies and attributes, governs all nature. By translating the word எழுத்து letters instead of "alphabet" the sense of this couplet would be—*As the vowel A stands first among the letters* (of the Tamil alphabet) *so the eternal God stands first in the world*—and this in fact, is the meaning given to it in the Latin Commentary. The foregoing version, however, agrees with the reading of Parimêl-azhager, who commenting on it says—தமிழெழுத்துகளெல்லாவற்றிற்கும் இது முதலாயிருத்தலினாலே என்றார் It is not confined to the Tamil alphabet alone: seeing it to be the first, also, in the Northern



திருகுறள

மூலபாடம

தெயவபுலமைத திருவளளுவநாயனார
அருளிசசெயதது.

இலகனவிலகியவாராயசசி யுடையவாதனாலிதப
பிழையறவாராயாது சுததபாடமாகபபடடது.

இச

பொதுதகம

கலியுகாபதம சதஸ்ரா ஏ. கரு ஆயிரே ஸ்ரு
தொனடமணடலம செனமிப படடினதநில
தருசைகரம-மவியபப பிளவிர குமாரன
ஞானபபிறகாசஞல
அசசிறபபிகபபடடது.

மாசதினசசிதையின அசசுகூடம
இ. ஆணடு தீ அவ.



திருவள்ளுவ நாயனர்
அருளிசசெய்த
தமிழ்மறையான
திருக்குறள் மூலமும்,
பரிமேலழகருரையும்
இவ்வுரைக்கியையுமாற
லோகோபகாரி பத்திராதிபர்
பண்டிதர்
கோ.வடிவேலுசெட்டியாரவர்கள்
இயற்றிய
தெளிபொருள் விளக்கமும், கருத்துரையும்,
குறிப்புரையும்.
ஆங்கில மொழிபெயர்ப்புடன்
இவை
ஆ. சொக்கப்ப வண்ணகரம்
மங்களம் - ஆறுமுகமுதலியார் ஏவல்கொண்டு
சென்னை, சோமசுந்தரம்
பதிப்பிக்கப்பட்டன.
1919.
Copy Right Registered.



திருவள்ளுவ நாயனர்
அருளிசசெய்த
தமிழ்மறையான
திருக்குறன் மூலமும்,
பரிமேலழகருரையும்
இவ்வுரைக்கியையுமாற
லோகோபகாரி பத்திராதிபர்
பண்டிதர்
கோ.வடிவேலுசெட்டியாரவர்கள்
இயற்றிய
தெளிபொருள் விளக்கமும், கருத்துரையும்,
குறிப்புரையும்.
திருத்தமான இண்டாவது பதிப்பு
ஆங்கில மொழிபெயர்ப்புடன்
இவை
ஆ. சொக்கப்ப வண்ணகரம்
மங்களம் - ஆறுமுகமுதலியார் ஏவல்கொண்டு
சென்னை, சோமசுந்தரம்
பதிப்பிக்கப்பட்டன.
1919.
Copy Right Registered.



திருவள்ளுவனார் திருவடிகளே.

திருக்குறள் அதிகார வொருபாகமும்,
குறளாகமும் - கருத்துரையுஞ்சேர்ந்த
ஆதிமூழு - கொண்மூவேந்தன்
மூலமும்-உரையும்.

இவை
மிதுனமிலி எச்சுவரானை யெழுத்தருளிய
திருவள்ளுவ நாயனர்
சந்நிதி கமிகின்ன வதிசய சன்பபாரையே
மெய்யூர்-அப்பாவுமுதலியார் குமாரர
குருசாமிமுதலியார் முதலானவரிகள் கருணைபடி
பச்சையபபதியிலுள்
ஐந்தாந்திருவேப்படையிலிருக்குஞ்
அறமாவூர் - தாண்டவராயமுதலியார்
குமாரர்
கந்தசாமிமுதலியாரானும்,
தொழுதகாதரொருபாகமிபபதற்ப
திருவல்லிக்கேணி
வாதபபுரமுதலியாரானும்
முறைமையினால்
சபாபதிமுதலியார்
முன்னிலையிற் பரிசோதித்து,
சித்தாந்தியிற்பெட்டையிலிருஞ்சு
சு—முனிசாமி முதலியாரது
மெய்ஞ்ஞான குரியொரு விளக
அச்சுக்கூடத்தி
பரிபூரணமாக்கப்பட்டன
சென்னை,
ஏழாந்திருத்தேரினும் வசந்தினலை.
REGISTERED 1885.

திருக்குறள் தீபாலங்காரம்



கி. க. வி. இலட்சுமி அம்மணி

திரிச்சிநாப்பள்ளி ஜில்லா குளித்தலை தாலுகா
மருங்காபுரி ஜெமீன்தாரிணி
ஸ்ரீமதி கி. க. வி. இலட்சுமி அம்மணி அவர்களால்
இயற்றப்பட்டது.

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.

1929

உரிமை
பதிவு செய்யப்பட்டது.

விலை ரூ. 3.

உரிமை உரை

அடியேன் மனத்தின்கண் அல்லும் பகலும் அகலாத் துணையாயிருந்து அருள் புரியும் எமது ஆண்டவனும் கலியுக வரதனுமாகிய முருகவேளின் திவ்ய பாத கமலங்கட்குத் திரிகரண சுத்தியுடன் இந்நூலை அர்ப்பணம் செய்திருக்கின்றனன்.

கி. க. வி. இலட்சுமி அம்மணி,
ஜமீன்தாரிணி, மருங்காபுரி.



உ
ஸ்ரீமதி துணை.
தெய்வப்புலமைத்
திருவள்ளுவநாயனரு
அருளிச்செய்த
தமிழ்வேதமாகிய
திருக்குறண்மூலமும்,
பரிமேலழகருரையும்.
இவை
இராமநாதபுரஸ்தானம் மகாராஜஶ்ரீ
பொன்னுச்சாமித்தேவரவர்கள்
வேண்டுகோள்படி,
மாற்பாணர்மரபுதோன்ற.
ஆறுமுகநாவலரால்
பலபிரதிகளுங்கொண்டு பரிசோதித்து,
சிதம்பரஸைவசிகாமணிவாணிக தருமபரிபாலன்
பொன்னம்பலபிள்ளையால்
சென்னபட்டணம்
வித்தியாநுபாலனயந்திரசாலே
அச்சிற்பதிப்பிக்கப்பட்ட
இரண்டாம் பதிப்பு.
சர்வதாரிஞ் வைத்திலை.



நன்மை. 0,105:21
தெய்வப்புலமைத்
திருவள்ளுவநாயனரால்
அருளிச்செய்யப்பட்ட
திருக்குறள் மூலமும்
இதன்பழையவுரைகளிலுள்ள
பரிமேலழகருமல்லரியூர்-பலர்க்கும்
பயன்படத்தெரிவுபலவுந்தழுவிவெளிப்படவாய்ந்த
திருத்தவவுரைக்
கர்த்தரான
சரவணப்பெருமாளையரால்
செய்யப்பட்டகுரையும்,
தெளிபொருள்விசக்கமும்,
திருவள்ளுவமாலையும்,
தொழுபரான்முன்பதிப்பித்தபிரதிகளைக்
சோமசுந்தரபாரதியாரா
பரிசோதிக்கப்பட்டுச்
சென்னபட்டணத்தில்
பாரதிவிலாசதர்சுக்கூடத்தில்வைத்திப்பிக்கப்பட்ட
1897
பிலவங்ஞ ஆவணியீ
இரண்டாம்-பதிப்பு.



குறள்
மூலமும் உரையும்.
இதிலே
புறத்துபபாலும் பொருட்பாலும்
அடங்கியிருக்கிறது.
TRANQUEBAR,
PRINTED BY V. P. HOBUSCH AT THE E. L. M. PRESS.
1873.

திருவள்ளுவர்


இதழ்கள்

திருவள்ளுவர்

277
1961

ஆசிரியர் : வள்ளுவன்

MADRAS



விலை 25-காசுகள்


விலை 25-காசுகள்

15-10-61


15-10-61

5L
M211, N61 TV
N61
199052

N61
199052


குறள் மலர்
KURAL MALAR


திருவள்ளுவர்
ஆசிரியர்: வள்ளுவன்



திருவள்ளுவர்
ஆசிரியர்: வள்ளுவன்


திருவள்ளுவர்
ஆசிரியர்: வள்ளுவன்


திருவள்ளுவர்
ஆசிரியர்: வள்ளுவன்



திருவள்ளுவர்


திருவள்ளுவர்
ஆசிரியர்: வள்ளுவன்


குறள் மலர்
திருக்குறள்
11
செய்ந்நன்றி அறிதல்.


குறள் மலர்
KURAL MALAR


கல்வெட்டு எழுத்துகளில் திருக்குறள்



TIRUKKURAL IN ANCIENT SCRIPTS

GIFT SIROMONEY
S. GOVINDARAJU
M. CHANDRASEKARAN

DEPARTMENT OF STATISTICS, MADRAS CHRISTIAN COLLEGE
TAMBARAM 600 059



1

2

3

4

5


6

7

8

9

10



11

12

13

14

15

16

17

18

19

20

சுவடி எண் :	UVSLMS000578	**த.இ.க. அட்டவணை எண் :**	TVA_PLM_0002749
தலைப்பு :	திருக்குறள் (மூலம்) உரை	**மொழி :**	தமிழ்
சுவடி இருப்பிடம் :	டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை	**சுவடி அளவு :**	15½" × 1¼"
ஆசிரியர் :	திருவள்ளுவர்	**ஏடுகளின் எண்ணிக்கை :**	222


















அய்யன் திருவள்ளுவர் சிலை







அரசாணை நிலை எண். 257 நாள்: 11.12.2024
திருவள்ளுவராண்டு 2055
குரோதி வருடம் கார்த்திகை 26 ஆம் நாள்

படிக்கப்பட்டது

இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழக அரசகம்
சென்னை வடிதம் நகரண்ணம் 1904, இ.ஆ.ப., 2024.
நாள் 18.11.2024

ஆணை


மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரைகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்புகள், அரசுத்துத் துறைகளின் சார்பில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள், அரசுத்துறை சார்ந்த அறிவிப்புகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விவரங்கள் மற்றும் முழுவதிலும் அரசு நலத் திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் தேர்வுகளைக் அடங்கிய வெற்றிக்கதைகள் ஆகியவை அனைத்துத் தரப்பினரும் படித்துப் பயனடைந்திடும் வகையில் தமிழக இதழில் வெளியிடப்படுகின்றன.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தின் வாயிலாக இணை இயக்குநர் (வெளியீடுகள்) தமிழக அரசகம் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு வெள்ளிவிழா கொண்டாடும் விழாவில் சிறப்புமலர் வெளியிட மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் குழு ஒன்றினை அமைக்க கோரியுள்ளார்கள்.

-2

வெள்ளி விழா மலர்க் குழு





2

3. அரசின் கவனமான பரிசீலனைக்குப்பின் அய்யன் திருவள்ளுவர் சிலை திறவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு வெள்ளிவிழா கொண்டாடும் விழாவில் சிறப்புமலர் வெளியிட மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்த்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட பின்வரும் குழுவினை அமைத்து அரசு ஆணையிடுகிறது.

தலைவர்	மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்
உறுப்பினர் செயலர்	இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலகம் அரசு துணைச் செயலாளர்
உறுப்பினர்கள்	1. முனைவர் ந.அருள், இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை. 2. யோகிசிவி சுபலீலாண்டியன், மூத்த பத்திரிகையாளர், 3. திரு.பதிருமாவேலன், மூத்த பத்திரிகையாளர், 4. பேராசிரியர் இனமாறன், எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழகம், 5. பேராசிரியை கு.ஞானசெல்வி, பெண்ணை திறந்திருவக்கல்லூரி, 6. புலவர் முத்து வாணசி, எழுத்தாளர் 7. திரு.சித்தாரண்ணா, தமிழ்நாடு இசைப்பள்ளி வழிக்கல்வி, கழகம், 8. திரு.கொ.தங்கப்பாண்டியன், மூத்த பத்திரிகையாளர்,
ஒருங்கிணைப்பாளர்கள்	1. திரு.ஆர்.கோமகன், இணை இயக்குநர், தமிழ்நாடு இசைப்பள்ளி வழிக்கல்வி, கழகம், 2. திரு.இரா.அண்ணா, இணை இயக்குநர், (வெ.) தமிழக அரசு, சென்னை 113.

3

4. மேற்காணும் குழு சிறப்பு மலருக்கு தேவையான கட்டுரைகள் நவீன வடிவமைப்பு மற்றும் ஓவியம் ஆகியவற்றிலை பல்வேறு அறிஞர்களிடமிருந்து பெற்று தொகுத்து அய்யன் திருவள்ளுவர் சிலை திறவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு வெள்ளிவிழா கொண்டாடும் விழாவில் சிறப்புமலர் தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ளும்.

"ஆருயிர்நீன் ஆணைப்படி"

கே.ராஜாராமன்
அரசுச் செயலாளர்

பெறுநர்
சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள்
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9.
இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழக அரசகம், சென்னை 113.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9
மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்திக்துறை அமைச்சர் அவர்களின் தேர்முக உதவியாளர், சென்னை 9.
செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்திக்துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை 9
கூடுதல் இயக்குநர், மக்கள் தொடர்பு அவர்களின் தேர்முக உதவியாளர், சென்னை 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

"ஆணைப்படி அனுப்பப்படுகிறது"

திரிவு அனுவலர்



வள்ளுவம் என்பது
வாழ்வியல் நெறியாக
மாற வேண்டும்.

சமுதாயம்
குறள் சமுதாயமாக
மலர வேண்டும்.

வாழிய குறளும்,
வள்ளுவர் புகழும்,
வாழிய வாழியவே!

மு.க. ஸ்டாலின்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழரசு

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு